www.Padasalai.Net www.CBSEtips.in

SURYA
POWER TO SCORE

இளமைத் தமிழே

ஒன்பதாம் வகுப்பு

திருத்திய பாடத்திட்டத்தின்படி

- ஆசிரியர் குறிப்பு
- பாடலின் பொருள்
- கற்பவை கற்றபின்
- எளிமையான விளக்கங்கள்
- உயர்சிந்தனை வினா-விடை
- போட்டித்தேர்வை மையமிட்ட வினா-விடை
- தகவல் தொழில்நுட்ப தமிழ்ச்சொற்கள்
- இலக்கணக்குறிப்பு கண்டறிய எளிய வழிகள்
- கூடுதல் வினாக்கள்
- தொகுத்தறி மதிப்பீட்டு வினாத்தாள்

- மனப்பாடப் பகுதிகள்

இலவசம்

வினாத் தொகுப்பு கையேடு

உரையாசிரியர்கள்:

கோ. பாக்கியநாதன், எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்.,
தமிழாசிரியர், தூய சவேரியார் மேல்நிலைப்பள்ளி, பாளையங்கோட்டை.

சி. ஜான் @ மாடசாமி, எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்.,
ரோஸ்மேரி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,
பாளையங்கோட்டை.

வீ. அபிஷேகா கேத்தரின், எம்.ஏ., பி.எட்.,
ரோஸ்மேரி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,
பாளையங்கோட்டை.

SURYA PUBLICATIONS
(A UNIT OF SHYAMALA GROUP)
Tirunelveli - Chennai

Price ₹ 220/-

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net

படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில் பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!

Zoom Touch Below Links Download!

12th Standard	Syllabus	Books	Study Materials – EM	Study Materials - TM	Practical	Online Test (EM & TM)
	Monthly Q&A	Mid Term Q&A	Revision Q&A	PTA Book Q&A	Centum Questions	Creative Questions
	Quarterly Exam	Half Yearly Exam	Public Exam	NEET		

11th Standard	Syllabus	Books	Study Materials – EM	Study Materials - TM	Practical	Online Test (EM & TM)
	Monthly Q&A	Mid Term Q&A	Revision Q&A	Centum Questions	Creative Questions	
	Quarterly Exam	Half Yearly Exam	Public Exam	NEET		

10th Standard	Syllabus	Books	Study Materials - EM	Study Materials - TM	Practical	Online Test (EM & TM)
	Monthly Q&A	Mid Term Q&A	Revision Q&A	PTA Book Q&A	Centum Questions	Creative Questions
	Quarterly Exam	Half Yearly Exam	Public Exam	NTSE	SLAS	

9th Standard	Syllabus	Books	Study Materials	1st Mid Term	2nd Mid Term	3rd Mid Term
	Quarterly Exam	Half Yearly Exam	Annual Exam	RTE		

8th Standard	Syllabus	Books	Study Materials	1st Mid Term	2nd Mid Term	3rd Mid Term
	Term 1	Term 2	Term 3	Public Model Q&A	NMMS	Periodical Test

7th Standard	Syllabus	Books	Study Materials	1st Mid Term	2nd Mid Term	3rd Mid Term
	Term 1	Term 2	Term 3	Periodical Test	SLAS	

6th Standard	Syllabus	Books	Study Materials	1st Mid Term	2nd Mid Term	3rd Mid Term
	Term 1	Term 2	Term 3	Periodical Test	SLAS	

1st to 5th Standard	Syllabus	Books	Study Materials	Periodical Test	SLAS	
	Term 1	Term 2	Term 3	Public Model Q&A		

Exams	TET	TNPSC	PGTRB	Polytechnic	Police	Computer Instructor
	DEO	BEO	LAB Asst	NMMS	RTE	NTSE

Portal	Matrimony	Mutual Transfer	Job Portal

Volunteers	Centum Team	Creative Team	Key Answer Team

Downloads	LESSON PLAN	Department Exam	Income Tax	Forms & Proposals	Fonts	Downloads
	Proceedings	GO's	Regulation Orders	Pay Orders	Panel	

Padasalai – Official Android App – Download Here

Kindly Send Your Study Materials, Q&A to our Email ID – Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

Published By
B. ARUMUGAM
SURYA PUBLICATIONS
*(A unit of **Shyamala** Group)*

BANK DETAILS

TIRUNELVELI ACCOUNT

Account Name : **Surya Publications**
Account Number: **446971431**
Bank Name : **Indian Bank**
IFSC Code : **IDIB000T034**
Branch Name : **Tirunelveli Junction**

Account Name : **Surya Publications**
Account Number: **510909010051752**
Bank Name : **City Union Bank**
IFSC Code : **CIUB0000230**
Branch Name : **Palayamkottai**

CHENNAI ACCOUNT

Account Name : **Sri Ganga Publication**
Account Number : **928507483**
Bank Name : **Indian Bank**
IFSC Code : **IDIB000A031**
Branch Name : **Ashok Nagar**

Account Name : **Sri Ganga Publication**
Account Number : **512020010022514**
Bank Name : **City Union Bank**
IFSC Code : **CIUB0000230**
Branch Name : **Palayamkottai**

SURYA PUBLICATIONS®
(A UNIT OF **SHYAMALA** GROUP)

Corporate Office :
No. 1, Sugar Mill Colony,
Salai Kumaran illam,
Madurai Road,
Tirunelveli - 627001.
Phone : 0462 - 233 8899 / 233 8484
Mobile : 94431 58484 / 95978 39822
Email : suryaguides@yahoo.com

Registered Office :
New No. 59, 4th Avenue,
Opp. to Govt. Boys Hr. Sec. School,
Ashok Nagar,
Chennai - 600 083.
Phone : 044 - 2474 4484
Mobile : 94421 58484 / 94425 58484
Email : srigangapublications5@gmail.com

Website : www.suryapublications.in

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

முகவுரை ....

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!

அன்பு மாணவச் செல்வங்களே!

தாய்மொழியான தமிழ்ப் பாடத்தில் மாணவர்கள் மிக உயர்ந்த மதிப்பெண்கள் பெற்றிட வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த இளமைத் தமிழே உருவாக்கப்பட்டுள்ளது. மாணவர்களிடம் பொதிந்து கிடக்கும் திறன்களை வெளிக்கொணர்ந்து மேம்படுத்திட உதவும் வகையில் இத்துணைவன் தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்துணைவனில் தரப்பட்டுள்ள விடைகளும், பயிற்சிகளும் மாணவ மாணவியர் எளிதாகப் படித்துப் புரிந்து கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் தங்கள் மொழியாற்றல் திறனை மேம்படுத்திட இத்துணைவன் உறுதுணை புரியும்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் போட்டித் தேர்வுகளுக்கு ஏற்ற வகையிலும் இத்துணைவன் வடிவமைக்கப்பட்டுள்ளது. செய்யுள், உரைநடை, துணைப்பாடம், இலக்கணம், மொழிப்பயிற்சிகளில் கூடுதல் வினாக்களும் பயிற்சிகளும் தரப்பட்டுள்ளன.

மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்திட தமிழாசிரியர்கள் இணைந்து உருவாக்கிய இத்துணைவனை வாங்கிப் பயன்படுத்தும் நீங்கள் அரிய சாதனைகள் படைத்திட வாழ்த்துகிறோம்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ் உணர்வு!

அன்புடன்,

ஆசிரியர் குழுமம்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பொருளடக்கம்

எண்	இயல்	பாடத்தலைப்புகள்	பக்கம்
ஒன்று	மொழி	**திராவிட மொழிக்குடும்பம்**	1
		தமிழோவியம்	6
		தமிழ்விடு தூது★	11
		வளரும் செல்வம்	18
		தொடர் இலக்கணம்	20
இரண்டு	இயற்கை, சுற்றுச்சூழல்	**நீரின்றி அமையாது உலகு**	38
		பட்டமரம்	44
		பெரியபுராணம்★	49
		புறநானூறு★	58
		தண்ணீர்	64
		துணைவினைகள்	68
மூன்று	பண்பாடு	**ஏறுதழுவுதல்**	79
		மணிமேகலை	85
		அகழாய்வுகள்	91
		வல்லினம் மிகும் இடங்கள்	97
		திருக்குறள்★	106
நான்கு	அறிவியல், தொழில்நுட்பம்	**இயந்திரங்களும் இணையவழிப் பயன்பாடும்**	116
		ஓ, என் சமகாலத் தோழர்களே!★	122
		உயிர்வகை★	126
		விண்ணையும் சாடுவோம்	130
		வல்லினம் மிகா இடங்கள்	136
ஐந்து	கல்வி	**கல்வியிற் சிறந்த பெண்கள்**	148
		குடும்ப விளக்கு	156
		சிறுபஞ்சமூலம்★	166
		வீட்டிற்கோர் புத்தகசாலை	172
		இடைச்சொல் - உரிச்சொல்	177
ஆறு	கலை, அழகியல், புதுமைகள்	**சிற்பக்கலை**	189
		இராவண காவியம்★	196
		நாச்சியார் திருமொழி	210
		செய்தி	217
		புணர்ச்சி	221
		திருக்குறள்	230

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

எண்	இயல்	பாடத்தலைப்புகள்	பக்கம்
ஏழு	நாகரிகம், தொழில், வணிகம், நாடு, சமூகம், அரசு, நிருவாகம்	**இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர் பங்கு**	236
		சீவக சிந்தாமணி*	242
		முத்தொள்ளாயிரம்*	252
		மதுரைக்காஞ்சி	260
		சந்தை	267
		ஆகுபெயர்	273
எட்டு	அறம், தத்துவம், சிந்தனை	**பெரியாரின் சிந்தனைகள்**	284
		ஒளியின் அழைப்பு	291
		தாவோ தே ஜிங்	298
		யசோதர காவியம்*	303
		மகனுக்கு எழுதிய கடிதம்	307
		யாப்பிலக்கணம்	310
ஒன்பது	மனிதம், ஆளுமை	**விரிவாகும் ஆளுமை**	320
		அக்கறை*	327
		குறுந்தொகை	332
		தாய்மைக்கு வறட்சி இல்லை	338
		அணியிலக்கணம்	341
		பொதுக் கட்டுரைகள்	350
		தொகுத்தறி மதிப்பீடு - தமிழ் முதல் தாள்	355
		தொகுத்தறி மதிப்பீடு - தமிழ் இரண்டாம் தாள்	358

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

மனப்பாடப் பகுதி

தமிழ்விடு தூது: சீர்பெற்ற செல்வம்

தித்திக்கும் தெள்அமுதாய்த் தெள்அழுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே - புத்திக்குள்
உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்து உரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள் - மண்ணில்
குறம்என்றும் பள்ளுஎன்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு
உறவுஎன்று மூன்று இனத்தும் உண்டோ - திறம்எல்லாம்
வந்துஎன்றும் சிந்தா மணியாய் இருந்தஉனைச்
சிந்து என்று சொல்லிய நாச்சிந்துமே

பெரியபுராணம்

காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை
கோடெல்லாம் மடஅன்னம் குளமெல்லாம் கடல்அன்ன
நாடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலமெல்லாம். ***- சேக்கிழார்***

புறநானூறு

நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!
உண்டி முதற்றே உணவின் பிண்டம்;
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே;
நீரும் நிலமும் புணரியோர், ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசினோரே!

- குடபுலவியனார்

திருக்குறள்

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.
எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.
ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர்.

- திருவள்ளுவர்

ஓ, என் சமகாலத் தோழர்களே!

அறிவியல் என்னும் வாகனம் மீதில்
ஆளும் தமிழை நிறுத்துங்கள்
கரிகா லன்தன் பெருமை எல்லாம்
கணிப்பொறி யுள்ளே பொருத்துங்கள்

ஏவும் திசையில் அம்பைப் போல
இருந்த இனத்தை மாற்றுங்கள்
ஏவு கணையிலும் தமிழை எழுதி
எல்லாக் கோளிலும் ஏற்றுங்கள்.

- வைரமுத்து

உயிர் வகை

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனமே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே.

- தொல்காப்பியர்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

சிறுபஞ்சமூலம்

பூவாது காய்க்கும் மரம் உள; நன்று அறிவார்,
மூவாது மூத்தவர், நூல் வல்லார்; தாவா,
விதையாமை நாறுவ வித்துஉள; மேதைக்கு
உரையாமை செல்லும் உணர்வு.

- காரியாசான்

திருக்குறள்

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ(டு)
ஐந்துசால்பு ஊன்றிய தூண்.

பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்
அறம்நாணத் தக்கது உடைத்து.

சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

- திருவள்ளுவர்

இராவண காவியம்

கல்லிடைப் பிறந்த ஆறும்
கரைபொரு குளனும் தோயும்
முல்லைஅம் புறவில் தோன்று
முருகுகான் யாறு பாயும்
நெல்லினைக் கரும்பு காக்கும்
நீரினைக் கால்வாய் தேக்கும்
மல்லல்அம் செறுவில் காஞ்சி
வஞ்சியும் மருதம் பூக்கும்.

- புலவர் குழந்தை

சீவகசிந்தாமணி

சொல்அரும் சூல்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருஇருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே

- திருத்தக்கதேவர்

www.Padasalai.Net www.CBSEtips.in

முத்தொள்ளாயிரம்

அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ
வெள்ளம்தீப் பட்ட(கு) எனவெரீஇப்பு ள்ளினம்தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு

யசோதர காவியம்

ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக
போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக
நோக்குவது ஏதெனில் ஞானம் நோக்குக
காக்குவது ஏதெனில் விரதம் காக்கவே

அக்கறை

சைக்கிளில் வந்த
தக்காளிக் கூடை சரிந்து
முக்கால் சிவப்பில் உருண்டது
அனைத்துத் திசைகளிலும் பழங்கள்
தலைக்கு மேலே
வேலை இருப்பதாய்க்
கடந்தும் நடந்தும்
அனைவரும் போயினர்
பழங்களை விடவும்
நசுங்கிப் போனது
அடுத்த மனிதர்கள்
மீதான அக்கறை

- கல்யாண்ஜி

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

உரைநடை உலகம்

இயல் ஒன்று

திராவிடமொழிக் குடும்பம்

பாடநூல் வினாக்கள்

குறுவினா

1. நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?

நான் பேசும் மொழியான தமிழ், தென் திராவிட மொழிகளுள் ஒன்றாக இருக்கிறது.

சிறுவினா

1. திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.

- திராவிட மொழிக்குடும்பம், மொழிகள் பரவிய நில அடிப்படையில் தென்திராவிட மொழிகள், நடுத் திராவிட மொழிகள், வடதிராவிட மொழிகள் என மூன்று பிரிவுகளை உடையது.
- மலையாள மொழியில் திணை, பால், எண் ஆகியவற்றைக் காட்டும் பாலறி கிளவிகள் இல்லை. தனிச் சொற்களாலேயே ஆண், பெண் பகுப்பை அறிந்து கொள்ள முடியும்.
- தமிழ்மொழி, திராவிட மொழிகள் சிலவற்றின் தாய்மொழியாகக் கருதப்படுகிறது. இந்தியாவின் தொன்மையான கல்வெட்டுகளில் பெரும்பாலானவை தமிழிலேயே அமைந்துள்ளன.

2. மூன்று என்னும் எண்ணுப் பெயர் பிறதிராவிட மொழிகளில் எவ்வாறு இடம் பெற்றுள்ளது?

திராவிட மொழிகளில் எண்ணுப் பெயர்கள் ஒன்றுபோலவே அமைந்துள்ளன. மூன்று என்னும் தமிழ் எண்ணுப் பெயர் பிற திராவிட மொழிகளில் பின்வருமாறு அமையும்.

திராவிட மொழிகள்	தமிழ்	மலையாளம்	தெலுங்கு	கன்னடம்	துளு
மாற்றம்	மூன்று	மூணு	மூடு	மூரு	மூஜி

நெடுவினா

1. திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

முன்னுரை :

திராவிட மொழிகளுள் முதன்மையாக விளங்குவது தமிழ். எத்தகைய காலமாற்றத்திலும் மாறிவரும் புதுமைகளுக்கும் ஈடு கொடுத்து இயங்கும் ஆற்றல் தமிழுக்கு உண்டு. தமிழாய்ந்த அயல்நாட்டவரும் செம்மொழித் தன்மையைத் தரணியெங்கும் எடுத்துரைத்து வருகின்றனர். திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பது பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

www.Padasalai.Net www.CBSEtips.in

திராவிட மொழிகளின் பொதுப்பண்புகள் :

சொற்களின் இன்றியமையாப் பகுதி வேர்ச்சொல் ஆகும். இதற்கு அடிச்சொல் என்றும் பெயர். திராவிட மொழிகளின் சொற்களை ஆராய்ந்தால், அவை பொதுவான அடிச்சொற்களைக் காணமுடிகிறது.

சான்று :

அடிச்சொல்	திராவிட மொழிகள்
கண்	தமிழ்
கண்ணு	மலையாளம், கன்னடம்
கன்னு	தெலுங்கு, குடகு

அடிச்சொல்	திராவிட மொழிகள்
ஃகன்	குரூக்
கெண்	பர்ஜி
கொண்	தோடா

திராவிட மொழிகளின் எண்ணுப் பெயர்களும் ஒன்று போலவே அமைந்துள்ளன.

சான்று :

திராவிட மொழிகள்	தமிழ்	மலையாளம்	தெலுங்கு	கன்னடம்	துளு
மாற்றம்	ஒன்று	ஒண்ணு	ஒகடி	ஒந்து	ஒஞ்சி

திராவிட மொழிகளுள் பிறமொழித் தாக்கம் மிகவும் குறைந்ததாகக் காணப்படும் மொழி தமிழே ஆகும். தமிழ் மொழி திராவிட மொழிகள் சிலவற்றின் தாய் மொழியாகக் கருதப்படுகிறது. தமிழின் பல அடிச் சொற்களின் ஒலியன்கள், ஒலி இடம் பெயர்தல் என்ற விதிப்படி பிற திராவிட மொழிகளின் வடிவம் மாறியிருக்கின்றன. சுட்டுப்பெயர்களும் மூவிடப் பெயர்களும் பெரும்பாலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களைப் பெற்றிருக்கின்றன.

நிறைவுரை :

திராவிட மொழிக் குடும்பத்தின் மூத்த மொழியாகத் திகழ்கின்ற தமிழ், பிற திராவிட மொழிகளை விட ஒப்பியல் ஆய்வுக்குத் துணையாக அமைந்துள்ளது.

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. இந்திய மொழிக் குடும்ப வகைகள் .....

அ) 8 ஆ) 18 இ) 6 ஈ) 4

விடை: ஈ) 4

2. பொருந்தாததைத் தேர்ந்தெடு.

அ) மூன்று - தமிழ்
ஆ) மூணு - மலையாளம்
இ) மூடு - தெலுங்கு
ஈ) மூரு - துளு

விடை: ஈ) மூரு - துளு

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

3. பொருத்துக.

அ) தெலுங்கு - i) பாரதம்
ஆ) மலையாளம் - ii) கவிராஜ மார்க்கம்
இ) தமிழ் - iii) சங்கஇலக்கியம்
ஈ) கன்னடம் - iv) இராமசரிதம்

1) அ. ii) ஆ. i) இ. iv) ஈ. iii) 2) அ. i) ஆ. iv) இ. iii) ஈ. ii)
3) அ. iv) ஆ. ii) இ. i) ஈ. iii) 4) அ. iii) ஆ. ii) இ. i) ஈ. iv)

விடை: 2) அ.i) ஆ.iv) இ.iii) ஈ.ii)

4. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளை ஒப்புமைப்படுத்தி ஆய்ந்த முதல் அறிஞர் .....

அ) மாக்சுமுல்லர் ஆ) எமினோ இ) கால்டுவெல் ஈ) பிரான்சிஸ் எல்லிஸ்

விடை: ஈ) பிரான்சிஸ் எல்லிஸ்

5. இந்தியாவில் பேசப்படும் மொழிகளின் எண்ணிக்கை .....க்கும் மேற்பட்டது.

அ) 1200 ஆ) 1300 இ) 800 ஈ) 1000

விடை: ஆ) 1300

6. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளோடு மால்தோ, தோடா, கோண்டி முதலான மொழிகள் பற்றிய ஆய்வை மேற்கொண்டவர் .....

அ) கமில்சுவலபில் ஆ) கால்டுவெல் இ) ஹோக்கன் ஈ) ஆந்திரனோவ்

விடை: இ) ஹோக்கன்

7. 'தமிழியன்' என்று தென்னக மொழிகளை பெயரிட்டு அழைத்தவர் .....

அ) கால்டுவெல் ஆ) மாக்ஸ்முல்லர் இ) ஸ்டென்கனோ ஈ) ஹோக்கன்

விடை: ஈ) ஹோக்கன்

நிரப்புக

8. மொழிக் குடும்பத்தின் வகைகள் எத்தனை ..... ? **விடை : நான்கு**

9. 'இந்திய நாடு மொழிகளின் காட்சிச் சாலை' யாகத் திகழ்கிறது என்றவர் .....

விடை : அகத்தியலிங்கம்

10. 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்னும் நூலின் ஆசிரியர் .....

விடை : கால்டுவெல்

11. 'திராவிடம்' என்ற சொல்லை முதலில் குறிப்பிட்டவர் ..... **விடை : குமரிலப்பட்டர்**

12. திராவிட மொழிகள் மொத்தம் ..... **விடை : 28**

13. தமிழ்மொழியின் பழமையான இலக்கண நூல் எது? **விடை : தொல்காப்பியம்**

14. 'லீலாதிலகம்' - எம்மொழியின் பழமையான இலக்கண நூல்? **விடை : மலையாளம்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

குறுவினா

1. மொழிக்குடும்பம் எவ்வாறு பிரிக்கப்படுகிறது?

உலகத்திலுள்ள மொழிகளின் பிறப்பு, தொடர்பு, அமைப்பு, உறவு ஆகியவற்றின் அடிப்படையில் மொழிக்குடும்பம் பிரிக்கப்படுகிறது.

2. திராவிட மொழிகள் பொதுவான அடிச்சொல் பெற்றிருப்பதை விளக்கு.

சொற்களின் இன்றியமையாப் பகுதி அடிச்சொல் அல்லது வேர்ச்சொல் எனப்படும். திராவிட மொழிகள் பொதுவான அடிச்சொல் பெற்றுள்ளன.

திராவிட மொழிகள்	தமிழ்	மலையாளம்	தெலுங்கு, குடகு	குருக்	பர்ஜி	தோடா
அடிச்சொல்	கண்	கண்ணு	கன்னு	ஃகன்	கெண்	கொண்

3. தென்திராவிட மொழிகள் யாவை?

தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, துளு, கோத்தா, தோடா, கொரகா, இருளா ஆகியவை தென் திராவிட மொழிகள்.

கூடுதல் வினாக்கள்

சிறுவினா

1. தமிழின் தனித்தன்மைகள் யாவை?

- தொன்மையும் இலக்கண இலக்கிய வளமும் உடையது தமிழ்மொழி.
- இலங்கை, மலேசியா, பர்மா, சிங்கப்பூர், இந்தோனேஷியா போன்ற பல நாடுகளில் பேசப்படும் பெருமையுடையது தமிழ்மொழி.
- தனக்கெனத் தனித்த இலக்கண வளத்தைப் பெற்றுத் தனித்தியங்கும் மொழி.
- திராவிட மொழிகளில் பிறமொழித் தாக்கம் குறைந்து காணப்படும் மொழி தமிழ்.
- திராவிட மொழிகள் சிலவற்றின் தாய்மொழியாகத் திகழ்கிறது தமிழ்.
- ஒரே பொருளைக் குறிக்கப் பல சொற்கள் அமைந்த சொல்வளமும் சொல்லாட்சியும் நிரம்பப் பெற்ற மொழி தமிழ்.
- இந்தியாவின் தொன்மையான கல்வெட்டுகளில் பெரும்பாலானவை தமிழிலேயே அமைந்துள்ளன.
- பிற திராவிட மொழிகளைவிட ஒப்பியல் ஆய்வுக்குப் பெருந்துணை செய்வது தமிழ்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கற்பவை கற்றபின்

பக்கம்: 7

1. உங்கள் பெயருக்கான விளக்கம் தெரியுமா? உங்கள் பெயரும் நண்பர் பெயரும் தனித்தமிழில் அமைந்துள்ளதா? கண்டறிக.

அன்பரசன்	-	அன்புக்கு அரசன்
புகழினியன்	-	புகழுக்கு இனியன்
அருள்செல்வி	-	அருள் நிறை செல்வி
மங்கையர்க்கரசி	-	மங்கையர்களில் அரசி
அருள்வளவன்	-	அருளுடை வளவன்

2. பயன்பாட்டில் எவ்வாறெல்லாம் தமிழ் மொழியின் வேர்ச்சொற்கள் வடிவமாற்றம் பெறுகின்றன என்பது குறித்துக் கலந்துரையாடுக.

- தமிழ் மொழியில் ஒரு சொல் விளைவதற்கு வேராக இருப்பது வேர்ச்சொல் எனப்படும்.
- ஒரு சொல், தோன்றுவதற்கு அடியாக இருப்பது அடிச்சொல் எனப்படும்.
- ஒரு சொல்லின் முதலாக அமைவது முதல் நிலை எனப்படும். அதனை இலக்கண நூலார் பகுதி என்று கூறுவர்.

எ.கா:

செய் - செய்தாள், செய்கிறாள், செய்வாள், செய்து, செய்த, செய்வீர், செய்கிறோம்.

வா - வந்தான், வருகிறான், வருவான், வந்து, வந்த, வருகிறோம், வருவோம்.

※※⁂⁂⁂※※

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in


கவிதைப் பேழை

இயல் ஒன்று

தமிழோவியம்

ஈரோடு தமிழன்பன்

ஆசிரியர் குறிப்பு



திரு. தமிழன்பன்

திரு. தமிழன்பன் என்றழைக்கப் பெற்ற செகதீசன் ஈரோடுமாவட்டத்தைச் சேர்ந்தவர். புதுக்கவிதை சிறுகதை முதலான பல வடிவங்களிலும் தமது படைப்புகளை வெளியிட்டுள்ளார். ஹைக்கூ, சென்ரியு, லிமரைக்கூ எனப் பன்னாட்டு கவிதை வடிவங்களைத் தமிழக்கு அறிமுகம் செய்தவர். இவரது 'வணக்கம் வள்ளுவ' என்னும் கவிதை நூலுக்கு 2004 ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது. தமிழன்பன் கவிதைகள் என்னும் தொகுப்பிற்கு தமிழக அரசின் பரிசு கிடைத்தது. இவரது கவிதைகள் இந்தி, உருது, மலையாளம், ஆங்கிலம் உள்ளிட்ட மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன.

தெளிவுரை :

தமிழ், காலம் தோன்றும் முன் பிறந்தது. எந்தக் காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே! அகமும் புறமும் அமைந்த இலக்கியங்களும் அவற்றை விளக்கிச் சொல்லும் இலக்கண நூல்களும் எம்மொழிக்கும் நிகரில்லாக் காப்பியங்களும் அமைந்திருக்கின்றன. அதை நினைத்து நெஞ்சம் மகிழ்ச்சியில் ஊர்வலம் நடத்தட்டும்.

இலக்கிய காலப்பகுதியில் ஏன் இவ்விருண்ட காலம் எனக்கேட்டு நீதியை ஏந்திய தீபமாய் பாட்டுக்கள் இடம் பெறும். இன்னும் மானிட மேன்மையைச் சாதித்துக் காட்டத் திருக்குறள் மட்டுமே போதும். அதைப் படித்து அதற்குத்தக நிற்க வேண்டும்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் தமிழ்ச் சமயங்களை வளர்த்து வந்தது. சமயங்களும் தமிழை வளர்க்கத் தவறியதில்லை. தாயும் சேயும் போல தமிழும் சமயமும் இருந்தன.

சித்தர் வழித்தோன்றியவர்கள் பகுத்தறிவு ஒளியை நிலத்தில் பாய்ச்சினர்.

விரலை மடக்கிக் கொண்டவன் எழில் வீணையில் இசை தோன்றவில்லை எனச் சொல்வது போல் குறைகளைக் களைந்து விட்டுப் புதுக்கோலம் தழுவட்டும் தமிழ். நாளும் வளர்ப்போம் நற்றமிழை.

அருஞ்சொற்பொருள் :

அகமாய்	-	அக இலக்கியங்கள் (நற்றிணை, குறுந்தொகை, ஐங்குநூறு, அகநானூறு, கலித்தொகை)
புறமாய்	-	புற இலக்கியம் (பதிற்றுப்பத்து, புறநானூறு)
அகமாய் புறமாய்	-	பரிபாடல்
இருட்டு	-	அறியாமை

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

சித்தர் - ஞான சித்தி பெற்றவர்
நிகரிலா - ஈடு இணையில்லா
ஓதி - கற்று

இலக்கணக் குறிப்பு : பக்கம்: 9

எத்தனை எத்தனை - அடுக்குத் தொடர்
ஏந்தி - வினையெச்சம்
நிகரிலாக் காப்பியம் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
விட்டு விட்டு - அடுக்குத் தொடர்
காலமும் - முற்றும்மை

பகுபத உறுப்பிலக்கணம்

1. வளர்த்தது - வளர் + த் + த் + அ + து
   - வளர் - பகுதி,
   - த் - சந்தி,
   - த் - இறந்தகால இடைநிலை,
   - அ - சாரியை,
   - து - ஒன்றன்பால் வினைமுற்று விகுதி.

2. வளர்ப்பாய் - வளர் + ப் + ப் + ஆய்
   - வளர் - பகுதி
   - ப் - சந்தி,
   - ப் - எதிர்கால இடைநிலை,
   - ஆய் - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

3. பாய்ந்தன - பாய் + த்(ந்) + த் + அன் + அ
   - பாய் - பகுதி
   - த்(ந்) - ஆனது விகாரம்
   - த் - இறந்தகால இடைநிலை
   - அன் - சாரியை
   - அ - பெயரெச்சவிகுதி

4. புனைந்து - புனை + த்(ந்) + த் + உ
   - புனை - பகுதி,
   - த்(ந்) - ஆனது விகாரம்
   - த் - இறந்தகால இடைநிலை
   - உ - வினையெச்ச விகுதி

பாடநூல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழே!
   காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே! .....
   இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்

   அ) முரண், எதுகை, இரட்டைத் தொடை. ஆ) இயைபு, அளபெடை, செந்தொடை..
   இ) எதுகை, மோனை, இயைபு. ஈ) மோனை, முரண், அந்தாதி.

   விடை: இ) எதுகை, மோனை, இயைபு.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

குறுவினா

1. தமிழோவியம் கவிதையில் நும்மை மிகவும் ஈர்த்த அடிகள் குறித்து எழுதுக.

"மானிட மேன்மையைச் சாதித்திடக் குறள்
மட்டுமே போதுமே ஓதி நட"

மானிடத்தின் மேன்மையைச் சாதனை செய்ய குறள் மட்டுமே போதும் அதைப் படித்து நடக்க வேண்டும்.

2. "அகமாய் புறமாய் இலக்கியங்கள் - அவை அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள்"

இலக்கியங்களின் பாடு பொருளாக இவ்வரிகள் உணர்த்துவன யாவை?

பழந்தமிழ் இலக்கியங்கள், அகம் புறம் என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவ்வரிகள், தமிழர்களின் இல்லற வாழ்வைச் சொல்லும் அக இலக்கியங்களையும் போர் வாழ்வைச் சொல்லும் புற இலக்கியங்களையும் உணர்த்துகின்றன.

சிறுவினா

1. காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக் கொள்கிறது?

- தமிழ் மொழி தொன்மையும் இலக்கண இலக்கிய வளமும் உடையது.
- தமிழ் மொழி ஏனைய திராவிட மொழிகளைவிட தனக்கெனத் தனித்த இலக்கண வளத்தைப் பெற்றுத் தனித்தியங்கும் மொழியாகும்.
- பிற மொழித் தாக்கம் தமிழில் குறைவு.
- ஒரே பொருளைக் குறிக்கப் பல சொற்கள் அமைந்த சொல்வளம் பெற்ற மொழி.
- இந்தியாவில் தொன்மையான கல்வெட்டுகளில் பெரும்பாலானவை தமிழில் அமைந்துள்ளன.
- எண்ணற்ற வேர்ச்சொற்களைக் கொண்டு புதுப்புது சொற்களை உருவாக்கி அறிவியல், சமூகம், பண்பாட்டுத் துறைகளில் தன்னை புதுப்பித்துக் கொள்கிறது தமிழ்.

2. புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய் - உங்கள் பங்கினைக் குறிப்பிடுக.

முன்னுரை :

தமிழ்மொழி, இலக்கண இலக்கிய வளம் பெற்று செழித்தோங்கி இருக்கிறது. தமிழானது தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, திருக்குறள் முதலிய அறிவுக்கருவூலம் நிறைந்துள்ள தொன்மை சான்ற மொழியாகும். தமிழ்மொழியின் சீர் இளமைத் திறம் வியந்து போற்ற வேண்டும். சங்க காலம் முதல் இக்காலம் வரை தமிழ் புதுக்கோலம் பெற்றுப் புதுப்பொலிவுடன் திகழ்கிறது. அதன் வளர்ச்சிக்கான பங்கினை இக்கட்டுரையில் காண்போம்.

அறிவியல் தமிழ் :

தமிழ், தனித்து இயங்கும் ஆற்றல் பெற்ற மொழியாக இருந்து பிற துறைகளோடு இணைந்து வாழும் மொழியாகக் கருதப்படுகிறது. "தமிழன் அறிவியல் முன்னோடி" என்று கொண்டல் சு.மகாதேவன் நிலை நாட்டுகிறார். ந. சுப்புரெட்டியார், ஜி.ஆர் தாமோதரன், எழுத்தாளர் சுஜாதா போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். எதிர்வரும் காலங்களில் என்பங்களிப்பை இதைவிடச் சிறப்பாகச் செய்வேன்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

ஊடகத்துறை :

நம் நாட்டில் பாராளுமன்றம், நிர்வாகத்துறை, நீதித்துறையோடு பத்திரிகைத்துறையும் வளர்ந்து வந்திருக்கிறது. இதழியல் தமிழறிஞர்கள் பாரதியார், திரு.வி.க, சி.பா.ஆதித்தனார் வழி என் பங்கையும் அளிப்பேன். வானொலி, தொலைக்காட்சி, இணைய வலைத் தொலைபேசி ஆகியவற்றிற்கான இணையத் தமிழ் அகராதி கண்டுபிடிப்புக்கு முயற்சி செய்வேன்.

கணிப்பொறி :

இன்று வளர்ந்து நிற்கும் துறைகளுள் ஒன்று கணினித்துறை. ஆனால் இதில் இன்று வரை ஆங்கிலமே ஆட்சிசெய்து வருகிறது. மின்னணு அஞ்சல், பல்நோக்கு ஊடகம், மக்களை ஆட்சி செய்கிறது. வளர்ந்து வந்துள்ள உயிரோட்ட (Animation) வரைபடங்கள், ஒளிக்காட்சிப் படங்கள் (Vidio Pictures), வரைகலை (Graphies), எழுத்து (Text), ஒலி (Sound) ஆகியவற்றை எடுத்துச் சொல்ல தமிழ்ச் சொற்களைப் புதுப்பொலிவுடன் உருவாக்குவேன்.

நிறைவுரை :

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்; தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்" எனும் பாரதியாரின் எண்ணங்களுக்குப் புதுமை வடிவம் தருவேன்.

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. தமிழை ஆட்சி மொழியாகக் கொண்ட நாடுகள் .....

அ) இலங்கை, சிங்கப்பூர் ஆ) அமெரிக்கா, கனடா

இ) பிரான்சு, இங்கிலாந்து ஈ) நார்வே, சுவீடன்

விடை: அ) இலங்கை, சிங்கப்பூர்

2. 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்று பாடியவர் .....

அ) பாரதிதாசன் ஆ) நாமக்கல் கவிஞர் இ) கவிமணி ஈ) பாரதியார்

விடை: ஈ) பாரதியார்

3. 'சென்ரியு' என்பது தமிழிலக்கியத்தின் ..... வடிவம்

அ) கதை ஆ) சிறுகதை இ) கவிதை ஈ) உரைநடை

விடை: இ) கவிதை

நிரப்புக

4. 'நிகரிலாக் காப்பிய பூவனங்கள் உன் நெஞ்சம் நடத்தட்டும் ஊர்வலங்கள்' என்றவர் .....

விடை: ஈரோடு தமிழன்பன்

5. 2004 ம் ஆண்டு சாகித்ய அகாடமி விருது பெற்ற தமிழன்பன் நூல் .....

விடை : வணக்கம் வள்ளுவ

6. புதுக்கவிதை, சிறுகதை என பல படைப்புகளை வெளியிட்டவர் .....

விடை : தமிழன்பன்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

7. புதுப்புது வடிவங்களில் கவிதை நூல் இயற்றியவர் ..... **விடை : தமிழன்பன்**
8. 'இனிமையும் நீர்மையும் தமிழெனல் ஆகும்' என்று கூறும் நூல் **விடை : பிங்கல நிகண்டு**
9. உலகத் தாய்மொழி நாள் ..... **விடை : பிப்ரவரி 21**
10. 'ஒரு பூவின் மலர்ச்சி, ஒரு குழந்தையின் புன்னகை புரிந்து கொள்ள அகராதி தேவை இல்லை' என்றவர் ..... **விடை : தமிழன்பன்**

கற்பவை கற்றபின்

பக்கம்: 9

1 பிறமொழி கலப்பின்றித் தனித்தமிழில் இரண்டு மணித்துளிகள் வகுப்பறையில் பேசுக. பிறமொழிக் கலப்பின்றித் தனித்தமிழில் பேசுதல்:

அவையோர் அனைவருக்கும் வணக்கம்!

என் உரையைக் கேட்க ஆவலுடன் அமர்ந்திருக்கும் எங்கள் தமிழ் ஐயா! அவர்களே! என் உடன் பயிலும் அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே உங்கள் முன் தனித்தமிழில் உரையாடுவதில் பெருமகிழ்வெய்துகிறேன்.

நான் உரையாற்ற எடுத்துக்கொண்ட தலைப்பே, **"தனித்தமிழ்"** என்பதுதான்.

நாம், நம் அன்றாட வாழ்வில் தமிழ்மொழியைச் சிறிது சிறிதாக மறந்து கொண்டிருக்கிறோம். பிறமொழிச்சொற்களைத் தமிழ்மொழி போலவே பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். உண்பது, பள்ளிக்கு வருவது, கடைக்குச் செல்வது என அனைத்து நிலைகளிலும் நம்மை அறியாமலே பிறமொழிக்கு அடிமையாகிக் கொண்டிருக்கிறோம். **"மெல்லத் தமிழ் இனி சாகும்"** என்று கவிஞர் வருந்தியது போலவே எனக்கும் வருத்தமாக இருக்கிறது.

அன்பு நண்பர்களே! அனைத்துத் துறை சார்ந்த சொற்கள், கலைச்சொற்கள் மட்டும் அல்ல அனைத்துத் தரவுகளும் நம் அழுதத் தமிழில் வலம்வந்து கொண்டிருக்கிறது.

கணினியைப் பயன்படுத்தும் நாம்..... எப்படித் தமிழைப் பயன்படுத்துவது என தயங்காதீர். அனைத்து கணினி சார்ந்த ஆங்கில வார்த்தைக்கும் செயலி, விரலி, சுட்டி, உலவி..... என தமிழில் சொற்கள் உண்டு.

எனவே, தனித்தமிழ் பயன்படுத்துவோம்! நம் கன்னித்தமிழை வளர்ப்போம்!!

2. கவிதையைத் தொடர்க.

அன்னை சொன்ன மொழி
ஆதியில் பிறந்த மொழி
இணையத்தில் இயங்கும் மொழி
ஈடிலாத் தொன்மை மொழி
உலகம் போற்றும் மொழி
ஊர்கூடி வியக்கும் மொழி

எங்கும் நிறைந்த மொழி
ஏறுநடை பயின்ற மொழி
ஒற்றுமை வளர்க்கும் மொழி
ஓங்கி வளர்ந்த மொழி

※※⁂⁂⁂※※

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கவிதைப் பேழை

இயல் ஒன்று

தமிழ்விடு தூது

தூது 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று. தலைவன் ஒருவனைக் கண்டு, காதல் கொண்ட தலைவி ஒருத்தி, தன் காதலையும், பிரிவாற்றாமையையும், வெளிப்படுத்த தலைவனிடத்துத்தூது அனுப்புவதாக பாடப்படுவதே 'தூது' இலக்கியம் ஆகும்.

தூதின் இலக்கணம்:

'பயிறருங் கலிவெண் பாவினாலே
உயர்திணைப் பொருளையும் அஃறிணைப் பொருளையும்
சந்தியின் விடுத்தல் முந்துறு தூதெனப்
பாட்டியற் புலவர் நாட்டினர் தெளிந்தே'

என்கிறது இலக்கண விளக்கம்.

அன்னம், மயில், கிளி, குயில், வண்டு, நெஞ்சம், முகில், தென்றல், தமிழ், மான் ஆகிய பத்தினுள் யாதானும் ஒன்றைத் தூதாக அனுப்புவர். 'வாயில் இலக்கியம்', 'சந்து இலக்கியம்' என்னும் வேறு பெயர்களும் இதற்கு உண்டு. தூது இலக்கியம் 'கலிவெண்பா'வால் பாடப்படும்.

நூல் குறிப்பு :

தமிழ்விடு தூது என்னும் இந்நூல், மதுரையில் கோயில் கொண்டிருக்கும் சொக்கநாதரைப் பாட்டுடைத்தலைவராய்க் கொண்ட நூல். சொக்கநாதர் மீது மையல் கொண்ட பெண் ஒருத்தி தமிழைத் தூதுவிடுவதாக பாடப்பட்டுள்ளது. இந்நூல் 268 கண்ணிகளை உடையது. இந்நூலை 1930 ல் தமிழ்த்தாத்தா உ.வே.சா அவர்கள் முதன் முதலில் பதிப்பித்தார். ஆசிரியர் யார் எனத் தெரியவில்லை.

இரண்டிரண்டு அடிகள் கொண்டு எதுகையால் தொடுக்கப்படுவது கண்ணி ஆகும்.

தெளிவுரை :

தமிழ், தெளிந்த அமுதாய் அமிழ்தினும் மேலான வீடுபேற்றைத் தரும் கனியாக இருக்கிறது. இயல், இசை, நாடகம் என முத்தமிழாய்ச் சிறந்து விளங்கும் என் தமிழே! உன்னிடம் மகிழ்ந்து கேட்கும் வேண்டுகோள் ஒன்றுள்ளது, நீ அதைக் கேட்பாயாக.

தமிழே! உன்னிடமிருந்து பள்ளு, குறவஞ்சி எனும் நூல்களைப் பாடிப் புலவர்கள் சிறப்படைந்தனர். நீயும் அவற்றை எல்லாம் படிக்கக் கொடுப்பாய் அதனால், தாழிசை, துறை, விருத்தம் என்னும் மூவினப் பாவினங்களிலும் உறவு உண்டோ?

பாவின் திறம் பொருந்தி நின்று, என்றுமே சிந்தாமணியாய் இருக்கும் உன்னை "சிந்து" என்றழைப்பது உன் பெருமைக்குத் தகுமோ? ஒருவேளை அவ்வாறு கூறிவிட்டால் 'நா' இற்று விழும். வானத்தில் வசிக்கும் தேவர்கள் கூட சத்துவம், இராசசம், தாமசம் ஆகிய முக்குணங்களைப் பெற்றிருக்கிறார்கள். நீயோ பத்துக்குற்றங்கள் இல்லாமல் பத்துக் குணங்களைப் பெற்றுள்ளாய்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

மனிதனின் கை வண்ணங்கள் ஐந்திற்கு மேல் இல்லை நீயோ, புலவர்கள் கண்டடைந்த குறில், அகவல், துங்கிசை வண்ணம் முதலாக இடை மெல்லிசை வண்ணம் ஈறாக நூறு வண்ணங்களைக் கொண்டிருக்கிறாய்.

நாவில் தோன்றும் சுவைகள் ஆறுக்கு மேல் இல்லை. நீயோ, செவிகளுக்கு விருந்தளிக்கும் ஒன்பது சுவைகளைப் பெற்றுள்ளாய். தமிழை அறியாதவர்க்கு அழகு ஒன்றே ஒன்று. நீயோ எண்வகை வனப்புகளைப் பெற்றுள்ளாய்.

சொற்பொருள் :

குறம், பள்ளு - 96 வகை சிற்றிலக்கியங்களுள் இரண்டு

மூன்றினம் - பாவகைகளின் பிரிவுகள் தாழிசை, துறை, விருத்தம்

சிந்தாமணி - 1. சீவகசிந்தாமணி, 2. சிதறாத மணி

சிந்து - ஒருவகை இசைப்பாடல். யாப்பு வகைகளுள் ஒன்று காவடிச்சிந்து, மூன்று சீர்களில் வரும் செந்தமிழ் நாடென்னும் போதினிலே - இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே - பாரதியார் 'சிந்துக்குத் தந்தை' என்பதைத் தெரிக.

முக்குணம் - மூன்று குணம் சத்துவம் (அமைதி, மேன்மை) இராசசம் (தீவிரமான செயல், போர்) தாமசம் (சோம்பல், தாழ்மை)

வண்ணங்கள் ஐந்து - வெள்ளை, சிவப்பு, கறுப்பு, மஞ்சள், பச்சை

வண்ணம் நூறு - குறில், அகவல், தூங்கிசை முதலான இடை மெல்லிசை வண்ணம் ஈறாக நூறு

ஊனரசம் - குறையுடைய சுவை.

நவரசம் - வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், கோபம் நகை, சமநிலை

வனப்பு - அழகு (அம்மை, தொன்மை, தோல், விருந்து இயைபு, புலன், இழைபு) என எட்டாகும்.

இலக்கணக் குறிப்பு :

முத்திக்கனி - உருவகம்

தெள்ளமுது - பண்புத்தொகை

குற்றமிலா - ஈறுகெட்ட எதிர் மறைப்பெயரெச்சம்

செவிகள் உணவான - நான்காம் வேற்றுமைத்தொகை

தெள்ளமுது - பண்புத்தொகை

நா - ஒரெழுத்து ஒருமொழி

சிந்தா மணி, அழியா வனப்பு, ஒழியா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பகுபத உறுப்பிலக்கணம் :

1. கொள்வார் - கொள் + வ் + ஆர்

கொள்	-	பகுதி,
வ்	-	எதிர்கால இடைநிலை,
ஆர்	-	பலர்பால் வினைமுற்று விகுதி

2. உணர்ந்த - உணர் + த்(ந்) + த் + அ

உணர்	-	பகுதி
த்(ந்)	-	சந்தி 'ந்' ஆனது விகாரம்,
த்	-	இறந்தகால இடைநிலை,
அ	-	பெயரெச்ச விகுதி

3. சொல்லிய - சொல் + இ(ன்) + ய் + அ

சொல்	-	பகுதி,
இன்	-	இறந்தகால இடைநிலை
ய்	-	உடம்படு மெய் சந்தி,
அ	-	பெயரெச்ச விகுதி

5. உடையாய் - உடை + ய் + ஆய்

உடை	-	பகுதி
ய்	-	உடன்படு மெய் சந்தி,
ஆய்	-	முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

4. பெற்றாய் - பெறு(பெற்று) + ஆய்

பெறு	-	பகுதி (பெற்று) என ஒற்று இரட்டித்து இறந்த காலம் காட்டியது
ஆய்	-	முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி.

பாடநூல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. தமிழ்விடு தூது _____ என்னும் இலக்கியத்தைச் சார்ந்தது.

அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

விடை: இ) சிற்றிலக்கியம்

2. விடுபட்ட இடத்திற்குப் பொருத்தமான விடை வரிசையைக் குறிப்பிடுக.

i) _____ இனம் ii) வண்ணம் _____
iii) _____ குணம் iv) வனப்பு _____

அ) மூன்று, நூறு, பத்து, எட்டு ஆ) எட்டு, நூறு, பத்து, மூன்று
இ) பத்து, நூறு, எட்டு, மூன்று ஈ) நூறு, பத்து, எட்டு, மூன்று

விடை: அ) மூன்று, நூறு, பத்து, எட்டு

3. அழியா வனப்பு, ஒழியா வனப்பு சிந்தா மணி - அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக் குறிப்பு

அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

விடை : ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

குறுவினா

1. கண்ணி என்பதன் விளக்கம் யாது?

இரண்டிரண்டு பூக்களை வைத்துத் தொடுக்கப்படும் மாலையைப் போல செய்யுளில் இரண்டிரண்டு அடிகள் கொண்ட எதுகையால் தொடுக்கப்படும் செய்யுளுக்கு கண்ணி என்று பெயர்.

நெடுவினா

1. 'தூது அனுப்பத் தமிழே சிறந்தது' - தமிழ்விடு தூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

முன்னுரை :

தொண்ணூற்று ஆறு சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று தூது ஆகும். வாயில் இலக்கியம், சந்து இலக்கியம் என்றும் இதனை அழைப்பர். தலைவர் தலைவியர்களுள் காதல் கொண்ட ஒருவர் மற்றொருவர் பால் அன்பு காட்டுவர். அதற்கு அடையாளமாக மாலை வாங்கி வருமாறு அன்னம் முதல் வண்டு ஈறாகப் பத்தையும் தூது விடுவதாகப் பாடுவது ஆகும். இது கலிவெண்பாவால் பாடப்படுவதாகும். தமிழ்விடு தூது, மதுரையில் கோயில் கொண்டிருக்கும் சொக்கநாதர் மீது காதல் கொண்ட பெண், தன் காதலைக் கூறிவருமாறு தமிழைத் தூது விடுவதாகப் பாடப்படுவதாகும். கலிவெண்பாவால் பாடப்படும். இந்நூல் 268 கண்ணிகளைக் கொண்டது.

விண்ணப்பம் உண்டு விளம்பக் கேள் :

தெளிந்த அமுதமாய் அந்த அமிழ்தினும் வீடுபேற்றைத் தரும் கனியே! இயல், இசை, நாடகம் என முத்தமிழாய் சிறந்து விளங்கும் தமிழே! அறிவால் உண்ணப்படும் தேனே! உன்னிடம் மகிழ்ந்து விடுக்கும் விண்ணப்பம் ஒன்றுள்ளது அதைக் கேட்பாயாக.

மூவகைப் பாவினங்களிலும் உறவு உண்டோ?

தமிழே, உன்னிடமிருந்து குறவஞ்சி, பள்ளு என்ற நூல்களைப் பாடிப் புலவர்கள் சிறப்புப் பெற்றனர். நீயும் படிக்கக் கொடுப்பாய். அதனால் தாழிசை, துறை, விருத்தம் என்னும் பாவினங்களிலும் உறவு உண்டோ?

'சிந்து' என்றழைப்பது தகுமோ?

தமிழ்ப்பாவகை அனைத்தும் பொருந்தி நின்று என்றுமே சிந்தாமணியாய் இருக்கும் உன்னை, சிந்து என்றழைப்பது உன் பெருமைக்குத் தகுமோ? அவ்வாறு கூறிய நா இற்று விழும்.

பத்துக் குணங்கள் பொருந்திய தமிழே!

வானத்தில் வசிக்கும் முற்றும் உணர்ந்த தேவர்கள் கூட சத்துவம் (அமைதி) இராசசம் (தீவிரமான குணம்) தாமசம் (சோம்பல்) மூன்று குணங்கள் பெற்றுள்ளார்கள். ஆனால் நீயோ பத்துக் குற்றங்கள் இல்லாமல் செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி எனும் பத்துக் குணங்களைப் பெற்றுள்ளாய்.

நூறு வண்ணங்கள் கொண்ட வண்டமிழே:

மனிதர்களால் உண்டாக்கப்பட்ட வண்ணங்கள் வெண்மை, செம்மை, கருமை, பொன்மை (பொன் நிறம்) பசுமை என ஐந்தே. நீயோ, புலவர்கள் தெளிந்த குறில், அகவல், தூங்கிசை, வண்ணம் முதலாக இடை மெல்லிசை வண்ணம் ஈறாக நூறு வண்ணங்களைக் கொண்டுள்ளாய்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

எட்டழகு பெற்ற கட்டழகுத் தமிழே :

நாவினால் அறியும் சுவைகள் ஆறு. நீயோ, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, சமனிலை பெற்றுள்ளாய். தமிழை அறியாதவர்களுக்கு அழகு ஒன்றே ஒன்று என்றில்லாமல் அதிகம் உண்டோ? நீயோ நீங்காத அம்மை முதலிய அழகு எட்டினைப் பெற்றுள்ளாய்.

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. மதுரை சொக்கநாதர் மீது காதல் கொண்ட பெண் ஒருத்தி பாடுவதாக அமைந்த நூல் .....

அ) தமிழ்விடு தூது ஆ) தமிழோவியம்
இ) திருக்குற்றால குறவஞ்சி ஈ) முக்கூடற்பள்ளு

விடை : அ) தமிழ்விடு தூது

2. தமிழின் வண்ணங்கள் .....

அ) 20 ஆ) 96 இ) 18 ஈ) 100

விடை : ஈ) 100

3. தமிழ்விடு தூது நூலைப் பதிப்பித்தவர் .....

அ) பெருஞ்சேரல் இரும்பொறை ஆ) உ.வே.சாமிநாதர்
இ) அடியார்க்கு நல்லார் ஈ) ஆறுமுகநாவலர்

விடை : ஆ) உ.வே.சாமிநாதர்

4. பொருந்தாததைத் தேர்ந்தெடு.

அ) சத்துவம் ஆ) புலம் இ) இராசசம் ஈ) தாமசம்

விடை : ஆ) புலம்

5. தமிழ்விடு தூது நூலின் ஆசிரியர் .....

அ) பலபட்டடைச் சொக்கநாதர் ஆ) என்னயினாப் புலவர்
இ) சத்திமுத்தப் புலவர் ஈ) எவருமில்லை

விடை : ஈ) எவருமில்லை

நிரப்புக

6. இரண்டிரண்டு பூக்களை வைத்துத் தொடுக்கப்படும் மாலை .....

விடை : கண்ணி

7. சிந்து என்பது ஒருவகை .....

விடை : இசைப்பாடல்

8. சிந்தாமணி என்பதன் பொருள் .....

விடை : சீவகசிந்தாமணி, சிதறாதமணி

9. செவிக்கு விருந்தளிக்கும் சுவைகள் .....

விடை : ஒன்பது

10. பாவினங்கள் .....

விடை : மூன்று

11. தாழிசை, துறை, விருத்தம் என்பவை .....

விடை : பாவினங்கள்

12. வாயில் இலக்கியம், சந்து இலக்கியம் என்னும் பெயர்களால் அழைக்கப்படுவது .....

விடை : தூது இலக்கியம்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

13. தூது இலக்கியம் பாடப்படும் பாவகை ..... விடை : கலி வெண்பா
14. தமிழ்விடு தூது நூலின் பாட்டுடைத் தலைவன் ..... விடை : மதுரை சொக்கநாதர்
15. தமிழ்விடு தூது நூலை முதன்முதலில் பதிப்பித்தவர் ..... விடை : உ.வே.சா
16. தமிழ்விடு தூது நூலைப் பதிப்பித்த ஆண்டு ..... விடை : 1930
17. தமிழ்விடு தூது நூலில் உள்ள கண்ணிகள் ..... விடை : 268
18. வனப்பின் வகைகள் ..... விடை : எட்டு
19. செறிவு, சமனிலை பத்தும் ..... விடை : குண அணிகள்
20. 'தாமசம்' என்பது ..... விடை : சோம்பல், தாழ்மை
21. முற்றும் உணர்ந்த தேவர்கள் பெற்றுள்ள குணம் ..... விடை : மூன்று

குறுவினா

1. எவையெல்லாம் தூதாக அனுப்பப்படும்?

அன்னம், மயில், கிளி, குயில், வண்டு, நெஞ்சம், முகில், தென்றல், தமிழ், மான் ஆகிய பத்தும் தூதாக அனுப்பப்படும்.

2. வனப்பு எத்தனை வகைப்படும்? அவை யாவை?

வனப்பு எட்டு வகைப்படும்.

அவை அம்மை அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு ஆகும்.

3. குற்றமிலா பத்துக் குணங்கள் யாவை?

பத்துக் குணங்களாவன: செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், பொருண்மை, காந்தம், வலி, சமாதி என்பவை.

கற்பவை கற்றபின்

பக்கம்: 12

1. நமது எண்ணங்களையும் கருத்துகளையும் எளிதாக எடுத்துரைக்க உதவுவது தமிழ் மொழி என்ற தலைப்பில் ஒரு பக்க அளவில் உரை ஒன்று எழுதுக.

"நண்ணு மிளவைப் பருவத்தி லேமுதல்
நாவை யசைத்த மொழி - எங்கள்
கண்ணைத் திறந்துல கத்தை விளக்கிக்
கருத்தோ டிசைத்த மொழி"

என்று வரத நஞ்சைய பிள்ளை தமிழின் பெருமையை எடுத்துக் காட்டுகிறார். "இனிமையும் நீர்மையும் தமிழ் எனல்"ஆகும் என்பது புகழ்மொழியாகும். "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாரதியார் பாடினார். தமிழ் நம் எண்ணங்களையும் கருத்துகளையும் எளிதில் எடுத்துரைக்கத் தக்கதாகும்.

தமிழ் மொழியிலுள்ள சொற்கட்டமைப்பும் வாக்கியக் கட்டுக் கோப்பும் எளிமையாகவும் திறமாகவும் அமைந்துள்ளன. இலக்கணக் கட்டுப்பாடு மொழிக்கு வேலி போன்றது ஆகும். சொற்கள் இலக்கியத்திற்கு என்றும் இலக்கணத்திற்கு என்றும் தனித்தனியே அமைந்துள்ளன.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

இலக்கியத்திற்கு இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என நான்கு சொற்களையும் பயன்படுத்துகிறோம். இலக்கணத்திற்குப் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்னும் தனியமைப்புப் பயன்பாட்டுக்குரியது.

தமிழ் மொழியின் இனிமையும் எளிமையும் சமயம் பரப்ப தமிழகத்துக்கு வந்த மேனாட்டுக் கிறித்துவ சமயச் சான்றோர்களைக் கவர்ந்தது. அவர்கள் எண்ணங்களையும் கருத்துகளையும் இனிய எளிய தமிழில் எடுத்துரைக்கச் செய்தது.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழ் தேசியத்தை வளர்த்தது. தேசியம் தமிழை எடுத்துக் கொண்டது. கருத்துகளையும் எண்ணங்களையும் எடுத்துச் சொல்ல முடிந்தது. அறிவியல் நுட்பங்களை எடுத்துச் சொல்ல புதுப்புதுச் சொற்களைப் படைத்து அளித்ததனால் சொல்வளம் பெருகியது. தமிழ் கணினிப் பயன்பாட்டிற்கு வந்தவுடன் கணினித் தமிழ் என்ற துறை முகிழ்த்தது.

நமது எண்ணங்களுக்கு வடிவம் கொடுக்க மொழி பயன்பட்டது. அம்மொழி வழியே கருத்துகளைப் பிறருக்குப் பகிர்ந்து கொள்ள முடிகிறது.

2. படித்துத் திரட்டுக.

“காதொளிரும் குண்டலமும் கைக்கு வளையாபதியும் கருணை மார்பின்
மீதொளிர் சிந்தாமணியும் மெல்லிடையில் மேகலையும் சிலம்பார் இன்பப்
போதொளிரும் திருவடியும் பொன்முடி சூளாமணியும் பொலியச் சூடி
நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத் தாங்குதமிழ் நீடுவாழ்க”

– கவியோகி சுத்தானந்த பாரதியார்.

இப்பாடல் காட்டும் இலக்கியங்களின் பெயர்களை வரிசைப்படுத்துக.

இப்பாடல் காட்டும் இலக்கியங்கள்

குண்டலமும் – குண்டலகேசி
கைக்கு வளையாபதி – வளையாபதி
சிந்தாமணி – சீவக சிந்தாமணி
பொன்முடி சூளாமணி – சூளாமணி
செங்கோலாய்த் திருக்குறள் – திருக்குறள்

நூல்	குறள் /காப்பியம்	சமயம்	ஆசிரியர்
குண்டலகேசி	ஐம்பெருங்காப்பியம்	பௌத்தம்	நாதகுத்தனார்
வளையாபதி	ஐம்பெருங்காப்பியம்	சமணம்	பெயர் தெரிந்திலது
சீவக சிந்தாமணி	ஐம்பெருங்காப்பியம்	சமணம்	திருத்தக்க தேவர்
சூளாமணி	ஐஞ்சிறு காப்பியம்	சமணம்	தோலாமொழித் தேவர்
திருக்குறள்	குறள்	உலகப்பொதுமறை	திருவள்ளுவர்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

விரிவானம்

இயல் ஒன்று

வளரும் செல்வம்

பாடநூல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. குழுவில் விடுபட்ட வரிசையைத் தேர்ந்தெடுக்க.

குழு 1	குழு 2	குழு 3	குழு 4
நாவாய்	மரம்	துறை	தன்வினை
-----	-----	-----	-----
தோணி	மர	விருத்தம்	காரணவினை

அ) வங்கம், மானு, தாழிசை, பிறவினை ஆ) தாழிசை, மானு, பிறவினை, வங்கம்
இ) பிறவினை, தாழிசை, மானு, வங்கம் ஈ) மானு, பிறவினை, வங்கம், தாழிசை

விடை: அ) வங்கம், மானு, தாழிசை, பிறவினை

குறுவினா

1. கணினி சார்ந்து நீங்கள் அறிந்த எவையேனும் ஐந்து தமிழ்ச் சொற்களை தருக.

i) Moniter - திரை
ii) Mouse - நகர்த்தி (அல்லது) சுட்டி
iii) Keyboard - விசைப்பலகை
iv) CD - குறுந்தட்டு
v) Download - பதிவிறக்கம்
vi) File - கோப்பு
vii) E-Mail - மின்னஞ்சல்

சிறுவினா

1. சங்க இலக்கியத்தில் காணப்படும் கடற்கலனுக்குரிய சொல் கிரேக்க மொழியில் எவ்வாறு மாற்றம் பெற்றுள்ளது?

சங்க இலக்கியத்தில் காணப்படும் கடற்கலனுக்குரிய சொற்கள் கிரேக்க மொழியிலும் மாற்றம் பெற்றுள்ளன.

தமிழ்	எறிதிரை	கலன்	நீர்	நாவாய்	தோணி
கிரேக்கம்	எறுதிரான்	கலயுகோய்	நீரியோஸ் /நீரிய	நாயு	தோணீஸ்

2. வளரும் செல்வம் - உரையாடலில் குறிப்பிடப்படும் பிறமொழிச் சொற்களைத் தொகுத்து அதற்கு இணையான தமிழ்ச் சொற்களைப் பட்டியலிடுக.

பிறமொழிச் சொற்கள்	சாப்ட்வேர்	லேப்டாப்	ப்ரௌசர்	சைபர்ஸ்பேஸ்	சர்வர்
தமிழ்ச் சொற்கள்	மென் பொருள்	மடிக்கணினி	உலவி	இணையவெளி	வையக விரிவு வலை

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கூடுதல் வினாக்கள்

குறுவினா

1. கடற்கலன்களுக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?

நாவாய், வங்கம், தோணி, கலம்.

சிறுவினா

1. தமிழில் கணினி தொடர்பான சொற்களைப் பட்டியலிடுக.

- சாப்ட்வேர் - மென்பொருள்
- க்ராப் - செதுக்கி
- கர்சர் - ஏவி அல்லது சுட்டி
- போல்டர் - உறை

தமிழ் எண்கள் அறிவோம்.

1	2	3	4	5	6	7	8	9	10
க	உ	ஙூ	சு	ரு	சூ	எ	அ	கூ	க0/ω

தமிழ் எண்களில் எழுதுக.

பன்னிரண்டு – கஉ	பதின்மூன்று – கஙூ
நாற்பத்து மூன்று – சஙூ	எழுபத்தெட்டு – எஅ
தொண்ணூறு – கூ0	

கற்பவை கற்றபின்

பக்கம்: 17

1. நீங்கள் நாள்தோறும் வகுப்பறையில் மிகுதியாகப் பயன்படுத்தும் சொற்களைப் பட்டியலிட்டு, அவற்றில் இடம் பெற்றுள்ள பிறமொழிச் சொற்களுக்கு நிகரான தமிழ் சொற்களை அறிந்து எழுதுக.

சொற்பட்டியல்	பிறமொழிச் சொற்கள்	நிகரான தமிழ்ச் சொற்கள்
வகுப்பு, புத்தகம், பிளாக் போர்டு, பேனா, பென்சில், நோட்டு.	பிளாக் போர்டு (Blackboard)	கரும்பலகை
வகுப்பு	கிளாஸ்ரூம் (Classroom)	வகுப்பறை
புத்தகம்	புக் (Book)	பாடநூல்
பேனா	பென் (Pen)	தூவல்
பென்சில்	ப்பென்சில் (Pencil)	கரிக்கோல்
நோட்டு	நோட் (Note)	குறிப்பேடு
ரப்பர்	எரேஸர் (Eraser)	மென்மம்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

2. உரையாடலை நிறைவு செய்க. அவற்றுள் இடம்பெறும் பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.

அருண் : ஹலோ! நண்பா!

நளன் : வணக்கம் நண்பா..

அருண் : உன்னைப் பார்த்துப் பத்தாண்டுகள் ஆகிவிட்டன. இல்லையா?

நளன் : ஆமாம்! பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன நீ என்ன செய்கிறாய். இப்போது நான் பன்னாட்டு நிறுவனம் ஒன்றில் மேலாளராக பணி புரிகிறேன், நீ.....

அருண் : நான் நந்தனம் அரசுக் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிகிறேன்.

நளன் : அந்தக் கல்லூரியில் தான் என் தம்பி வணிகவியல் முதலாமாண்டு படிக்கிறான்.

அருண் : மிக்க நன்றி, மீண்டும் சந்திப்போம்.

நளன் : மீண்டும் பார்க்கலாம்.

※※⁂⁂⁂※※

கற்கண்டு

இயல் ஒன்று

தொடர் இலக்கணம்

பாடநூல் வினாக்கள்

குறுவினா

1. செய்வினையை, செயப்பாட்டுவினையாக மாற்றும் துணை வினைகள் இரண்டினை சான்றுடன் எழுதுக.

செய்வினையை, செயப்பாட்டு வினையாக மாற்ற பயன்படும் துணை வினைகள் படு, பெறு ஆகும்.

2. வீணையோடு வந்தாள், கிளியே பேசு தொடர் வகையைச் சுட்டுக.

வீணையோடு வந்தாள் - செய்தித் தொடர்; கிளியே பேசு - கட்டளைத் தொடர்

சிறுவினா

1. தன்வினை, பிறவினை, காரணவினைகளை எடுத்துக்காட்டுடன் வேறுபடுத்திக் காட்டுக.

தன்வினை :

வினையின் பயன் எழுவாயைச் சேருமாயின் அது தன்வினை எனப்படும்.

எ.கா: பந்து உருண்டது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பிறவினை :

வினையின் பயன் எழுவாயை இல்லாமல் அடையாக வருவது பிறவினை எனப்படும்.

எ.கா. பந்தை உருட்டினான்

காரணவினை :

எழுவாய் தானே வினையை நிகழ்த்தாமல் வினை நிகழ்வதற்குக் காரணமாக இருப்பது காரணவினை

எ.கா. பந்தை உருட்ட வைத்தான்.

தன்வினை	பிறவினை	காரணவினை
நட	நடத்து	நடத்தச் செய்தார்
அடங்கு திருந்தினான்	அடக்கு திருத்தினான்	அடக்கச் செய்தார் திருந்தச் செய்தான்
ஆடினான்	ஆட்டினான்	ஆட்டுவித்தான் / ஆட வைத்தான்
மாறுவார்	மாற்றுவார்	மாற்றுவித்தார் / மாறச்செய்தார்
செய்தான்	செய்வித்தான்	செய்ய வைத்தான்
வா	வருவித்தார்	வரவைத்தார்
காண்	காட்டு	காட்டுவி
ஆடு	ஆட்டு	ஆட்டுவி

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. **'நான் வந்தேன்' இதில் வரும் பயனிலை .....**

அ) பெயர்ப் பயனிலை ஆ) வினைப் பயனிலை

இ) உரிப் பயனிலை ஈ) வினா பயனிலை **விடை: ஆ) வினைப் பயனிலை**

2. **'சொன்னவள் கலா' இதில் வரும் பயனிலை .....**

அ) வினைப் பயனிலை ஆ) வினாப் பயனிலை

இ) இடைப் பயனிலை ஈ) பெயர்ப் பயனிலை **விடை: ஈ) பெயர்ப் பயனிலை**

3. **'அவன் திருந்தினான்' எவ்வகைத் தொடர்?**

அ) செவினைத் தொடர் ஆ) வினாத்தொடர்

இ) தன்வினைத் தொடர் ஈ) பிறவினைத் தொடர்

விடை: இ) தன்வினைத் தொடர்

4. ஒரு சொற்றொடரில் அமையும் வினைச்சொல் ..... ஆகும். **விடை: பயனிலை**

5. எழுவாய் ஒரு வினையைச் செய்ய அடிப்படையாய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருளே ..... ஆகும். **விடை: செயப்படுபொருள்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பகுபத உறுப்பிலக்கணம்

- பதம் (சொல்) இரு வகைப்படும். அவை பகுபதம், பகாப்பதம் ஆகும்.
- பிரிக்கக்கூடியதும், பிரித்தால் பொருள் தருவதுமான சொல் பகுபதம் எனப்படும்.
- இது பெயர்ப் பகுபதம், வினைப் பகுபதம் என இரண்டு வகைப்படும்.

பகுபத உறுப்புகள் ஆறு வகைப்படும்.

பகுதி (முதனிலை)	சொல்லின் முதலில் நிற்கும்; பகாப்பதமாக அமையும்; வினைச்சொல்லில் ஏவலாகவும், பெயர்ச்சொல்லில் அறுவகைப் பெயராகவும் அமையும்.
விகுதி (இறுதிநிலை)	சொல்லின் இறுதியில் நின்று திணை, பால், எண், இடம் காட்டுவதாகவும் அமையும்.
இடைநிலை	பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நின்று காலம் காட்டும்.
சந்தி	பகுதியையும் பிறஉறுப்புகளையும் இணைக்கும்; பெரும்பாலும் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும்.
சாரியை	பகுதி, விகுதி இடைநிலைகளைச் சார்ந்து வரும்; பெரும்பாலும் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும்.
விகாரம்	தனி உறுப்பு அன்று; மேற்கண்ட பகுபத உறுப்புகளில் ஏற்படும் மாற்றம்.

பகுதி		
ஊரன் - ஊர்	பார்த்தான் - பார்	மடித்தார் - மடி
நடிகன் - நடி	வரைந்தான் - வரை	மகிழ்ந்தான் - மகிழ்

விகுதி		
படித்தான்	ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி	அன், ஆன்
பாடுகிறாள்	ஆள் - பெண்பால் வினைமுற்று விகுதி	அள், ஆள்
பெற்றார்	ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி	அர், ஆர்
நீந்தியது	து - ஒன்றன்பால் வினைமுற்று விகுதி	து, று
ஓடின	அ - பலவின்பால் வினைமுற்று விகுதி	அ, ஆ
சிரிக்கிறேன்	ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி	என், ஏன்
உண்டோம்	ஓம் - தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி	அம், ஆம், எம், ஏம், ஓம்
செய்தாய்	ஆய் - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி	ஐ, ஆய், இ
பாரீர்	ஈர் - முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி	இர், ஈர்
அழகிய, பேசும்	அ, உம் - பெயரெச்ச விகுதிகள்	அ, உம்
வந்து, தேடி	உ, இ - வினையெச்ச விகுதிகள்	உ, இ
வளர்க	க - வியங்கோள் வினைமுற்று விகுதி	க, இய, இயர்
முளைத்தல்	தல் - தொழிற்பெயர் விகுதி	தல், அல், ஐ, கை, சி, பு...

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

இடைநிலை		
வென்றார்	ற் - இறந்தகால இடைநிலை	த், ட், ற், இன்
உயர்கிறான்	கிறு - நிகழ்கால இடைநிலை	கிறு, கின்று, ஆநின்று
புகுவான், செய்தேன்	வ், க் - எதிர்கால இடைநிலை	ப், வ், க்
பறிக்காதீர்	ஆ - எதிர்மறை இடைநிலை	இல், அல், ஆ
மகிழ்ச்சி, அறிஞன்	ச், ஞ் - பெயர் இடைநிலைகள்	ஞ், ந், வ், ச், த்

சந்தி		
உறுத்தும்	த் - சந்தி	த், ப், க்
பொருந்திய	ய் - உடம்படுமெய் சந்தி	ய், வ்

சாரியை		
நடந்தனன்	அன் - சாரியை	அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன்

எழுத்துப்பேறு

- பகுபத உறுப்புகளுள் அடங்காமல் பகுதி, விகுதிக்கு நடுவில் காலத்தை உணர்த்தாமல் வரும் மெய்யெழுத்து எழுத்துப்பேறு ஆகும்.
- பெரும்பாலும் 'த்' மட்டுமே வரும்.
- சாரியை வரும் இடத்தில் 'த்' வந்தால் அது எழுத்துப்பேறு.

எ.கா:

1. வந்தனன் - வா(வ)+த்(ந்)+த்+அன்+அன்

வா	-	பகுதி ('வ' ஆனது விகாரம்)
த்(ந்)	-	சந்தி ('ந்' ஆனது விகாரம்)
த்	-	இறந்தகால இடைநிலை
அன்	-	சாரியை
அன்	-	ஆண்பால் வினைமுற்று விகுதி

2. செய்யாதே - செய்+ய்+ஆ+த்+ஏ

செய்	-	பகுதி
ய்	-	சந்தி
ஆ	-	எதிர்மறை இடைநிலை
த்	-	எழுத்துப்பேறு
ஏ	-	முன்னிலை ஒருமை ஏவல் வினைமுற்று விகுதி

இன்றியமையாத இலக்கணக் குறிப்புகள்

1. பெயரெச்சம் :

வினை முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் எச்சம் பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிவது. பெயரெச்சம்

(எ.கா) படித்த மாணவன், படித்த ..... (அ) நடந்த (த் + அ) அ என்ற விகுதியுடன் முடியும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

2. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் :

ஓர் எதிர்மறைப் பெயரெச்சத்தின் கடைசியில் 'த' கெட்டு விடுவது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். இது 'ஆ' என்ற ஒசையுடன் முடியும்.

(அணையாத விளக்கு) (அணையா விளக்கு) அணையா ..... (ஆ) (யா = யா + ஆ)

3. வினையெச்சம் :

வினை முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் ஒரு எச்சம் வினைச்சொல்லக் கொண்டு முடிவது. வினையெச்சம். இது "உ" "இ" விகுதிகளுடன் முடியும்.

படித்து முடித்தான் படித்து ..... (ஊ) நடந்து ..... கூறி (த் + உ)

4. வியங்கோள் வினைமுற்று :

வாழ்த்துதல், வைதல், வேண்டல் பொருளில் வருவது. காலம் காட்டாது. இது க, இய, இயர் - என்ற விகுதிகளுடன் முடியும்

(எ.கா) செல்க, வாழ்க, வாழி, வாழிய, வாழியர்.

5. வினையாலணையும் பெயர் :

ஒரு வினைமுற்று வினையைக் குறிக்காமல் வினையைச் செய்த கருத்தாவைக் குறிக்கும் பெயராய் வருவது வினையாலணையும் பெயர். எழுதினான் - எழுதியவன் என வரும். அது அன், ஆன், அர், ஆர், ஓர், நர் ஆகிய ஓசைகளுடன் முடியும்

(எ.கா) இழந்தவன், சென்றனர், அனுப்புநர்.

6. சொல்லிசை அளபெடை :

மூன்று மாத்திரை அளவில் வினையெச்சப் பொருளில் வரும் அளபெடை இது 'இ' என்று எழுத்துடன் முடியும்.

(எ.கா) ஓஒதீஇ, நம்பெழீஇ, உரனசை இ.

7. இன்னிசை அளபெடை :

மூன்று மாத்திரை அளவில் மூன்று அசைச் சொற்களில் அமைவது இன்னிசை அளபெடை

(எ.கா) உண்பதூம் (உண்/பதூ/உம்) உடுப்பதூஉம்.

8. செய்யுளிசை அளபெடை :

மூன்று மாத்திரை அளவில் இரண்டு அசை சொற்களில் அமைவது செய்யுளிசை அளபெடை

(எ.கா) ஆஅதும், கழுஉமணி, படாஅபறை, தொழா அர்.

9. அடுக்குத் தொடர் :

அர்த்தமுள்ள சொற்கள் பலமுறை அடுக்கி வருவது

(எ.கா) எண்ண எண்ண, பலப்பல, தீ தீ தீ

10. இரட்டைக் கிளவி :

அர்த்தமுள்ள சொற்கள் வினையைச் சிறப்பிக்க இரட்டையாக மட்டும் அமைவது.

(எ.கா) மடமட, சலசல.

11. ஒரு பொருட் பன்மொழி :

ஒரே பொருள் தரும் இரண்டு சொற்களுடன் அமைவது ஒரு பொருட் பன்மொழி.

(எ.கா) தீயழல், நடுமையம், ஒரு தனி.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

12. பண்புத் தொகை :

இணைந்த தொகைச் சொல்லை விரித்தால் இடையில் மை மறைந்திருப்பது.

(எ.கா) சிற்றில் (சிறுமை + இல்) பைந்தமிழ் = (பழமை + தமிழ்), செங்கோல் = (செம்மை + கோல்).

13. வினைத் தொகை :

இணைந்த தொகைச் சொல்லை விரித்தால் இடையில் காலம் காட்டும் இடைநிலை கின்ற மறைந்திருப்பது.

(எ.கா) தொடுகடல் (தொடுகின்ற கடல்)

14. உவமைத் தொகை :

இணைந்த தொகைச் சொல்லை விரித்தால் இடையில் 'போன்ற' அல்லது 'போல' உவமஉருபு மறைந்திருப்பது.

(எ.கா) பவளவாய் (பவளம் போன்ற வாய்)

15. வேற்றுமைத் தொகை :

இணைந்த தொகைச் சொல்லை விரித்தால் இடையில் வேற்றுமை உருபுகளில் (ஐ, ஆல், இன், கு, அது, கண்) ஏதேனும் ஒன்று மறைந்திருப்பது.

(எ.கா) கூலி வேலை (கூலிக்கு வேலை).

16. உம்மைத் தொகை :

இணைந்த தொகைச் சொல்லை விரித்தால் இடையில் "உம்" மறைந்திருப்பது

(எ.கா) செடி கொடிகள் (செடிகளும், கொடிகளும் என்பதில் உம் மறைந்தது).

17. எண்ணும்மை :

உம்மைத் தொகையைப் போல் உம் மறையாமல் எண்ணிக்கை காண்பதற்காக வெளிப்படையாக இருப்பது எண்ணும்மை

(எ.கா) கற்பும் காதலும் (உம் - வெளிப்படை)

18. அன்மொழித் தொகை :

ஆகுபெயர் போல் ஒரு தொகைச் சொல் வேறு அல்லாத ஒன்றைக் குறிப்பது அன்மொழித் தொகை

(எ.கா) செந்தாமரை (பண்புத் தொகை) செந்தாமரை வந்தாள் (அன்மொழித் தொகை)

19. உருவகம் :

உம்மைத் தொகையை முன் பின்னாக மாற்றுவது உருவகம். இது, உவமையைப் பொருள் மேல் ஏற்று இடையில் ஆகிய என்ற சொல் மறைந்து வரும்.

(எ.கா) மதிமுகம் (மதி போன்ற முகம் - உவமைத் தொகை) முகமதி (முகமாகிய மதி உருவகம்)

20. தன்மை பன்மை வினைமுற்று :

அம் ஓம் என்ற விகுதிகளுடன் முடிவது

(எ.கா) போற்றுதும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

21. செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்று :

செய்யும் என்ற சொல்லைப் போன்றே தொனிப்பது

(எ.கா) படும்.

22. செயின் என்னும் வாய்ப்பாடு வினைமுற்று :

செயின் என்ற சொல்லைப் போன்றே தொளிப்பது.

(எ.கா) பெறின்.

23. ஆகுபெயர் :

ஒன்றின் இயற்பெயர் மற்றொன்றுக்கு ஆகி வருவது.

(எ.கா) உலகு (உலக மக்களைக் குறிக்கும்) ஊர் சிரித்தது.

24. தொழிற்பெயர் :

ஒரு தொழிலைக் குறிக்கும் பெயர், காலம் காட்டாது. இது தல், அல், கை, மை, ஐ, சி, பு என்ற விகுதிகளுடன் அமையும்.

(எ.கா) பாடுதல், பாடல், ஆட்டம், வீற்றிருக்கை, கொல்லாமை, எஞ்சாமை.

25. முதல் நிலை திரிந்த தொழிற்பெயர் :

ஒரு தொழிற்பெயரின் விகுதி கெட்டு, முதல் எழுத்தும் மாறி ஒலிப்பது

(எ.கா) கெடுதல்.

கெடுதல் → கெடு → கேடு

பெறுதல் → பெறு → பேறு

26. இலக்கணப் போலி :

ஓர் இலக்கண அமைப்புடைய சொல்லுக்கு போலியாக அமைவது

(எ.கா) தசை (சதை)

27. எழுத்துப் போலி :

ஒரு சொல்லில் எழுத்து மாறினாலும் பொருள் மாறாது. இது முதல், இடை, கடைசியில் அமையும். முற்றிலும் மாறுபட்டு அமையும்.

(எ.கா) நலன் (நலம்) கடைப்போலி, அஞ்சு (ஐந்து) முற்றுப்போலி

28. உரிச் சொல் தொடர் :

தனித்து இயங்கும் ஆற்றல் இல்லாத, சால, உறு, தவ, நனி, கூர், கழி, வான், மா, தட, வை, மழ, கடி போன்ற சொற்கள் வேறு ஒரு சொல்லுடன் உரிமை பெற்றுத் தொடர்ந்து வருவது இது அதன் பண்பை விளக்கும்.

(எ.கா) மாநாடு, உறுபசி, சாலப் பேசினான்.

29. மருஉச் சொல் :

காலப்போக்கில் மருவி மாறி வருபவை

(எ.கா) எந்தை (என் தந்தை) பேர் (பெயர்)

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

30. இடைக்குறை விகாரம் :

ஒரு சொல்லின் இடையில் ஓர் எழுத்து குறைந்து மாறுபட்டாலும் அதே பொருளைத் தருவது

(எ.கா) உளம் (உள்ளம்) கணீர் (கண்ணீர்),

31. இரு பெயரொட்டுப் பண்புத் தொகை :

இரு சொற்களில் முதல் சொல் சிறப்புப் பெயராகவும் அடுத்துள்ள சொல் பொதுப் பெயராகவும் இருப்பது.

(எ.கா) தமிழ்மொழி, இமயமலை.

32. தன்மை ஒருமை வினைமுற்று :

என், ஏன் என்ற விகுதிகளுடன் முடிவது.

(எ.கா) கொள்வேன்.

33. முற்றெச்சம் :

ஒரு வினைமுற்றுச் சொல் வினையெச்சப் பொருளில் வந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடியும்.

(எ.கா) படித்தனன் தேறினான்.

கற்பவை கற்றபின் பக்கம்: 23

1. தொடர்களை மாற்றி உருவாக்குக.

அ) பதவியை விட்டு நீக்கினான். *(இத்தொடரைப் பிறவினைத் தொடராக மாற்றுக)*

பதவியை விட்டு நீக்குவித்தான்.

ஆ) மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளை ஆய்வு செய்தனர். *(இத்தொடரைப் பிறவினைத் தொடராக மாற்றுக)*

மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளை ஆய்வு செய்வித்தனர்.

இ) உண்ணப்படும் தமிழ்த்தேனே. *(இத்தொடரைச் செய்வினைத் தொடராக மாற்றுக)*

உண்ணும் தமிழ்த்தேனே.

ஈ) திராவிட மொழிகளை மூன்று மொழிக் குடும்பங்களாக பகுத்துள்ளனர். *(இத்தொடரை செயப்பாட்டு வினைத் தொடராக மாற்றுக)*

திராவிட மொழிகள் மூன்று மொழிக் குடும்பங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன.

உ) நிலவன் சிறந்த பள்ளியில் படித்தார். *(இத்தொடரைப் பிறவினைத் தொடராக மாற்றுக)*

நிலவன் சிறந்த பள்ளியில் படிப்பித்தான்.

2. சொற்களைத் தொடர்களாக மாற்றுக :

அ) மொழிபெயர் *(தன்வினை, பிறவினை தொடர்களாக மாற்றுக)*

மொழி பெயர்த்தாள் - தன்வினை மொழி பெயர்ப்பித்தாள் - பிறவினை

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

ஆ) பதிவுசெய் *(செய்வினை, செயப்பாட்டுவினைத் தொடர்களாக மாற்றுக)*

பதிவு செய்தான் - செய்வினை பதிவு செய்யப்பட்டது - செயப்பாட்டுவினை

இ) பயன்படுத்து *(தன்வினை, பிறவினைத் தொடர்களாக மாற்றுக)*

பயன்படுத்துவித்தான் -பிறவினை பயன்படுத்தினான் - தன்வினை

ஈ) இயங்கு *(செய்வினை, செயப்பாட்டு வினை தொடர்களாக மாற்றுக)*

இயங்கினாள் - செய்வினை இயக்கப்பட்டாள் - செயப்பாட்டுவினை

3. பொருத்தமான செயப்படுபொருள் சொற்களை எழுதுக.

(தமிழிலக்கிய நூல்களை, செவ்விலக்கியங்களைக், நம்மை, வாழ்வியல் அறிவை)

அ) தமிழ் செவ்விலக்கியங்களைக் கொண்டுள்ளது.

ஆ) நாம் தமிழிலக்கிய நூல்களை வாங்க வேண்டும்

இ) புத்தகங்கள் வாழ்வியல் அறிவைக் கொடுக்கின்றன.

ஈ) நல்ல நூல்கள் நம்மை நல்வழிப்படுத்துகின்றன.

4. பொருத்தமான பெயரடைகளை எழுதுக.

(நல்ல, பெரிய, இனிய, கொடிய)

அ) எல்லோருக்கும் இனிய வணக்கம்.

ஆ) அவன் நல்ல நண்பனாக இருக்கிறான்.

இ) பெரிய ஓவியமாக வரைந்து வா.

ஈ) கொடிய விலங்கிடம் பழகாதே.

5. பொருத்தமான வினையடைகளைத் தேர்வுசெய்க.

(அழகாக, பொதுவாக, வேகமாக, மெதுவாக)

அ) ஊர்தி மெதுவாகச் சென்றது.

ஆ) காலம் வேகமாக ஓடுகிறது.

இ) சங்க இலக்கியம் வாழ்க்கையை அழகாகக் காட்டுகிறது.

ஈ) இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டதை அனைவருக்கும் பொதுவாகக் காட்டு.

6. அடைப்புக் குறிக்குள் கேட்டுள்ளவாறு தொடர்களை மாற்றி எழுதுக.

அ) நம் முன்னோர் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினர். *(வினாத்தொடராக எழுதுக)*

நம் முன்னோர் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினரா? (அல்லது)

இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தியவர் யார்?

ஆ) இசையின்றி அமையாது பாடல். *(உடன்பாட்டுத் தொடராக அமைக்க)*

இசையோடு அமையும் பாடல்

இ) நீ இதைச் செய் எனக் கூறினேன் அல்லவா? *(கட்டளைத் தொடராக மாற்றுக)*

நீ இதைச் செய்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

7. வேர்ச்சொல்லை வைத்துச் சொற்றொடர்களை உருவாக்குக.

அ) தா *(உடன்பாட்டு வினைத்தொடர், பிறவினைத் தொடர் ஆக்குக)*

தந்தேன் - உடன்பாட்டு வினைத்தொடர்

தருவித்தேன் - பிறவினைத் தொடர்

ஆ) கேள் *(வினாத்தொடர் ஆக்குக)*

கேட்டாயா? - வினாத் தொடர்

இ) கொடு *(செய்தித் தொடர், கட்டளைத் தொடர் ஆக்குக)*

நீ அதைக் கொடு - செய்தித் தொடர்

நீ கொடு - கட்டளைத் தொடர்

ஈ) பார் *(செய்வினைத் தொடர், செயப்பாட்டு வினைத் தொடர், பிறவினைத் தொடர் ஆக்குக)*

பார்த்தான் - செய்வினைத் தொடர்

பார்க்கப்பட்டான் - செயப்பாட்டு வினைத் தொடர்

பார்க்கச் செய்தான் - பிறவினைத் தொடர்

8. சிந்தனை வினா

கீழ்க்காணும் சொற்றொடர்கள் சரியானவையா? விளக்கம் தருக.

அ) அவை யாவும் இருக்கின்றன - தவறு (அவை - பன்மை; யாவும் - ஒருமை)

அவை யாவையும் இருக்கின்றன. - சரி (அவை - பன்மை; யாவையும் - பன்மை)

அவை யாவும் எடுங்கள் - தவறு (அவை யாவும் எடு என்பதே சரி)
அவை - பன்மை, யாவும் - ஒருமை, எடு - ஒருமை

அவை யாவையும் எடுங்கள் - தவறு (அவை யாவையும் எடு என்பதே சரி)
அவை - பன்மை, யாவையும் - பன்மை, எடு - ஒருமை

அவை யாவற்றையும் எடுங்கள் - சரி (அவை - பன்மை, யாவற்றையும் - பன்மை)

ஆ) நீங்கள் ஒரு நாளிதழில் பணிபுரிகிறீர்கள். அங்குப் புதிய வார இதழ் ஒன்று தொடங்க விருக்கிறார்கள். அதற்காக அந்நாளிதழில் விளம்பரம் தருவதற்குப் பொருத்தமான சொற்றொடர்களை வடிவமைத்து எழுதுக.

"தென்றல்" புதிய வார இதழ் வெளியீடு - நாளிதழ் விளம்பரம்

தென்றல் - வார இதழ்

தமிழக இதழியல் வரலாற்றில் புதுத் திருப்பம்

தமிழ் இலக்கிய முன்னோடிகளின்

கட்டுரைகள், கவிதைகள், பேட்டி, விளையாட்டுச் செய்திகள், விளம்பரங்கள்.

முகவர்கள் அணுகவும்: 94434 19040
சென்னை, மதுரை, கோவை, திருச்சி.

பதிப்புகள், படைப்புகள், துணுக்குகள் அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர், தென்றல் வார இதழ், 10, வாலாஜா பேட்டை, சென்னை 1.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

இ) சொற்றொடர் வகைகளை அறிந்து, அவை எவ்வாறு பேசுவதற்கும் எழுதுவதற்கும் பயன்படுகின்றன என்பதைப் பதிவு செய்க.

சொற்றொடர் வகைகளை சரிவர அறிந்தால் தால் தான் பிழையின்றிப் பேசவும் மரபு மாறாமல் எழுதுவதற்கும் பயன்படுகின்றன.

வகைகள்	பயன்பாடு
வா - ஒரு சொல் தொடர்	வா - கட்டளைத் தொடராக
வந்தான் - வினைமுற்றுத் தொடர்	வந்த - பள்ளிக்கு வந்த மாணவன்
வரச்சொன்னான் - வினையெச்சத் தொடர்	வந்து - பள்ளிக்கு வந்து சென்ற மாணவன்
வாவா - அடுக்குத் தொடர்	வரச்சொன்னான் - அவன் தான் வரச்சொன்னான்
வந்த மாணவன் - பெயரெச்சத் தொடர்	வருக வருக என வரவேற்றான்

ஈ) வந்திருப்பவர்கள் அனைவரும் இருக்கையில் அமருமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். இத்தொடர் ஆங்கிலத்திலிருந்து நேரடியான தமிழ் மொழிபெயர்ப்பாக இருந்தாலும் மொழி மரபை இத்தொடரில் பேணுகிறோமா?

வந்திருப்பவர் அனைவரும் இருக்கையில் அமருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இத்தொடரில் "கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்" என்பது ஆங்கிலத்தின் நேரடி மொழி பெயர்ப்பு.

இதைக் கேட்டுக்கொள்கிறோம் – என்ற தொடரில் எழுதுவதுதான் சிறந்தது. இதேபோன்று, வருகையைத் தரமுடியாது. ஆனாலும் அழைப்பிதழ்களிலும் மேடை நாகரிகம் கருதி "வருகை தர வேண்டுகிறோம்" என்று எழுதுகிறார்கள், பேசுகிறார்கள். நம்மொழி மரபைப் பேணவில்லை. மொழி நடை முறையைப் பின்பற்றுகிறோம்.

மொழியை ஆள்வோம் பக்கம்: 27

1. படித்துச் சுவைக்க :

விறகுநான்; வண்டமிழே! உன்னருள் வாய்த்த
பிறகுநான் வீணையாய்ப் போனேன்; - சிறகுநான்
சின்னதாய்க் கொண்டதொரு சிற்றீசல்; செந்தமிழே!
நின்னால் விமானமானேன் நான்!
தருவாய் நிழல்தான் தருவாய்; நிதம்என்
வருவாய் எனநீ வருவாய்; - ஒருவாய்
உணவாய் உளதமிழே! ஒர்ந்தேன்; நீ பாட்டுக்
கணவாய் வழிவரும் காற்று! - கவிஞர் வாலி

2. மொழி பெயர்க்க :

1. Linguistics - மொழியியல்
2. Literature - இலக்கியம்
3. Philologist - மொழி ஆய்வறிஞர்
4. Polyglot - பன்மொழி அறிஞர்
5. Phonologist - ஒலியியல் ஆய்வறிஞர்
6. Phonetics - ஒலியியல்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

3. அடைப்புக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றி, கோடிட்ட இடங்களில் எழுதுக.

1. இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் திகழ்கின்றது. (திகழ்)
2. வைதேகி நாளை நடைபெறும் கவியரங்கில் கலந்து கொள்வாள். (கலந்துகொள்)
3. உலகில் மூவாயிரம் மொழிகள் பேசப்படுகின்றன. (பேசு)
4. குழந்தைகள் அனைவரும் சுற்றுலா சென்றார்கள். (செல்)
5. தவறுகளைத் திருத்தினான். (திருத்து)

4. வடிவம் மாற்றுக.

பின்வரும் பத்தியைப் படித்துப் பார்த்து, அச்செய்தியை உங்கள் பள்ளி அறிவிப்புப் பலகையில் இடம் பெறும் அறிவிப்பாக மாற்றுக.

மருதூர் அரசு மேனிலைப் பள்ளி இருபத்தைந்து ஆண்டுகளாகச் சிறந்த கல்விப்பணியை வழங்கி வருகிறது. இப்பள்ளி, சிறந்த கவிஞராகத் திகழும் இன்சுவை முதலான பன்முகப் படைப்பாளிகளை உருவாக்கிய பெருமை கொண்டது. ஒரு சோற்றுப் பதமாய் மருதூர்ப் பள்ளி மாணவி பூங்குழலி படைத்த 'உள்ளங்கை உலகம்' என்ற நூலின் வெளியீட்டு விழா 21 ஜூன் திங்கள், பிற்பகல் 3:00 மணியளவில் நடைபெற உள்ளது. அவ்விழாவில் (கின்னஸ் சாதனை படைத்த) முன்னாள் மாணவர் இன்சுவை நூலை வெளியிட்டு, சிறப்புரை ஆற்றுவார். மருதூர்ப் பள்ளி விழா அரங்கத்தில் நிகழும் இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொள்ள, அனைவரையும் அழைக்கின்றோம்.

அறிவிப்பு

நூல் வெளியீட்டு விழா

இடம் : வெள்ளி விழா அரங்கம், அரசு மேனிலைப் பள்ளி, மருதூர்.

நாள் :திருவள்ளுவர் ஆண்டு 2049 ஆனிமாதம் 7 ஆம் நாள் (21.06.2018)

முன்னிலை : பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர், திருமிகு. மலரவன் அவர்கள்

தலைமை : பள்ளித் தலைமை ஆசிரியர் திருமிகு. முஸ்தபா, M.A., M.Ed., அவர்கள்,

வரவேற்புரை : இலக்கிய மன்றச் செயலர்

சிறப்புரை : கின்னஸ் சாதனை படைத்த முன்னாள் மாணவர் கவிஞர். இன்சுவை

நூல் வெளியீடு : பூங்குழலி படைத்த "உள்ளங்கை உலகம்"

நன்றியுரை : ரா. அன்பரசன், பள்ளி மாணவர் தலைவர்.

அனைவரும் வருக! அமுதச் சுவை பருக!!

5. தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க. **பக்கம்: 28**

1. இளமையில் கல்வி முதுமையில் இன்பம்
2. சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
3. கல்லாடம் படித்தவரோடு சொல்லாடாதே
4. கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

6. கடிதம் எழுதுக.

உங்கள் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராம கிருஷ்ணனின், 'கால் முளைத்த கதைகள்' என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

விருதுநகர்,
28.03.2018

அன்புள்ள நண்பன் எழிலனுக்கு,

பாலன் எழுதிக் கொள்வது. இங்கு நான், என் குடும்பத்தினர் அனைவரும் நலம், அதுபோல நீயும் உன் குடும்பத்தினர் அனைவரும் இறையருளால் நலமுடன் இருப்பீர்கள்.

உன் பள்ளியில் திருப்புதல் தேர்வு, தேர்வுகளுக்கான பயிற்சி எல்லாம் நிறைவு பெற்றுவிட்டதா?

எழிலன்..... இந்த கடிதத்தின் நோக்கம் என்ன தெரியுமா? என் பிறந்தநாளை கடந்த மாதம் 7.2.18 அன்று கொண்டாடும்போது நீ எனக்கு ஒரு பரிசுப்பொருள் தந்தாய் அல்லவா? சென்ற வாரம் ஞாயிற்றுக்கிழமை ஓய்வாக இருந்தபோது பரிசுப்பொருளைப் பிரித்து வியந்துபோனேன்.

எஸ்.இராமகிருஷ்ணன் அவர்கள், எழுதிய "கால்முளைத்த கதைகள்" புத்தகம் பார்த்தவுடன் மிக்க மகிழ்ச்சியடைந்தேன்.

இந்நூலை கற்று நான் அறிந்துகொண்ட கருத்துகள், உலகம் எப்படித் தோன்றியது என்ற கேள்விக்கு இக்கதைகள் வியப்பான பதில்களைத் தருகின்றன. இந்தக் கதைகளைச் சொன்ன மனிதர்கள் குகைகளில் வசித்தார்கள். இருட்டைக் கண்டு பயந்துபோய் அதையொரு கதையாக்கினார்கள். கதைகள் பாறைகள் உருவத்தினுள் ஒளிந்திருப்பதாக நம்பினார்கள். பலநூறு வருடங்கள் கடந்துவிட்டபோதும் இந்தக் கதைகள் கூழாங்கற்களைப்போல வசீகரமாகியிருக்கின்றன.

சிறுவர்களுக்கான கதைகள், உலகமெங்கும் உள்ள முப்பது பழங்குடியினர்கள் சொன்ன கதைகளிலிருந்து தேர்வு செய்து இத்தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கதையும் ஒரு நீதியை எடுத்துக் கூறுவதாய் அமைந்துள்ளது. படித்துப் பேணிப் பாதுகாக்க வேண்டிய அரிய பொக்கிஷமாய் திகழ்கிறது அந்நூல். நன்றி நண்பா! நன்கு படி. சிறப்பாக தேர்வுகள் எழுத வாழ்த்துகள்.

அன்புடன்,
பாலன்.

முகவரி:
அ. எழிலன், த/பெ மதியரசன்,
1/3, கூலமாட வீதி, கோவை.

7. நயம் பாராட்டுக :

விரிகின்ற நெடுவானில், கடற்பரப்பில்
விண்ணோங்கு பெருமலையில், பள்ளத் தாக்கில்
பொழிகின்ற புனலருவிப் பொழிலில், காட்டில்
புல்வெளியில், நல்வயலில், விலங்கில் புள்ளில்
தெரிகின்ற பொருளிலெல்லாம் திகழ்ந்து நெஞ்சில்
தெவிட்டாத நுண்பாட்டே, தூய்மை ஊற்றே,

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

அழகு என்னும் பேரொழுங்கே, மெய்யே, மக்கள்
அகத்திலும் நீ குடியிருக்க வேண்டுவேனே! - ம.இலெ. தங்கப்பா

இலக்கிய நயம் பாராட்டுதல்

ஆசிரியர் முன்னுரை :

ம.இலெ.தங்கப்பா ஓர் இயற்கைக் கவிஞர் பாரதியாரின் 'குயில்பாட்டு' போல பாடியிருக்கிறார்.பாட்டு என்பது இசையுடன் தொடர்பு கொண்டது. அப்போது தான் பாட்டு உயிர் பெறுகிறது. அத்தகைய உயிர்ப்பை இப்பாடலில் காண முடிகிறது.

திரண்ட கருத்து :

நெடுவானம், கடற்பரப்பு, பெருமலை, பள்ளத்தாக்கு, பொழிகின்ற, புனலருவி அழகில், காட்டில், புல்வெளியில், நல் வயலில், விலங்கில், பறவைகளில் இன்னும் தெரிகின்ற பொருள்களில். எல்லாம் பயின்று எம் நெஞ்சில் தெவிட்டாத நுண்பாட்டே! மக்கள் மனத்திலும் நீ குடியிருக்க வேண்டும். தூய்மை ஊற்றே, அழகு என்னும் பெருமை கொண்ட ஒழுங்கே மக்கள் மனத்தில் நீ குடியிருக்க வேண்டுவேன்.

எதுகை நயம் :

இப்பாடலில் எதுகை நயம் அழகுற அமைந்து விளங்குகிறது எனலாம். அடிதோறும், சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகை நயம் ஆகும்.

சீர் எதுகை :

பொழிகின்ற பொழிலில்
புல்வெளியில் நல்வயலில்

மோனை நயம் :

அடிதோறும், சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனை நயம் ஆகும்.

விரிகின்ற - **வி**ண்ணோங்கு
பொழிகின்ற - **பு**னலருவி பொழிலில்
தெரிகின்ற - **தி**கழ்ந்து
தெவிட்டாத - **தூ**ய்மை
அழகு - **அ**கத்திலும்

சொல் நயம் :

கவிஞர், நுண்பாட்டு என்ற சொல்லில் 'நுட்பமான பாட்டு' என்றே குறிப்பிடுகிறார். பாட்டுக்கு, 'அழகு என்னும் பேரொழுங்கு' என்ற அடை கொடுத்துப் பாடுகிறார்.

பொருள் நயம் :

விண்ணோங்கு, புனலருவிப் பொழில், தெவிட்டாத நுண்பாட்டே என்று பொருள் நயம் புலப்படப் பாடுகிறார்.

நிறைவுரை :

இயற்கையை வருணிப்பதில் தலை சிறந்து விளங்கும் ம.இலெ.தங்கப்பாவை 'அழகியல் கவிஞர்' என்று கூறினால் அது மிகையாது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

8. நிகழ்ச்சி நிரல் வடிவமைக்க :

உங்கள் பள்ளி இலக்கிய மன்ற விழா சார்பில் நடைபெறவிருக்கும் உலகத் தாய்மொழி நாள் (பிப்ரவரி 21) விழாவிற்கான நிகழ்ச்சி நிரல் ஒன்றினை வடிவமைக்க.

தமிழ் இலக்கிய மன்றம்
அரசு மேனிலைப் பள்ளி, திருவாரூர் - 5

உலகத் தாய்மொழி நாள் விழா

நிகழ்ச்சி நிரல்

நாள்	:	திருவள்ளுவர் ஆண்டு, ஹேவிளம்பி வருடம், மாசி மாதம் 9ம் தேதி **(பிப்ரவரி 21)**
தமிழ்த்தாய் வாழ்த்து :		
வரவேற்புரை	:	ச.பூங்குன்றன், இலக்கிய மன்றச் செயலர்
தலைமை	:	திரு. ப. எழில்முதல்வன், தலைமை ஆசிரியர்.
முன்னிலை	:	திரு. அன்பரசன், தலைவர், முன்னாள் மாணவர் கழகம்.
சிறப்புரை	:	முனைவர். சுப. அண்ணாமலை, தமிழ்ப் பேராசிரியர், தியாகராசர் கல்லூரி, மதுரை-7.
நன்றியுரை	:	செ. பூவிழி, 9ஆம் வகுப்பு மாணவி.
நாட்டுப்பண்		

அனைவரும் வருக! தமிழமுது பருக!!

மொழியோடு விளையாடு

பக்கம்: 28

1. அந்தாதிச் சொற்களை உருவாக்குக.

அத்தி, குருவி, விருது, இனிப்பு, வரிசையாக

எ.கா: அ) குருவி ஆ) விருது இ) இனிப்பு ஈ) வரிசையாக

அத்தி வியர்வை துவர்ப்பு புகழ்ச்சி கல்வி
திகைப்பு வைகாசி புனுகு சிகப்பு விருந்து
புகழ்ச்சி சிறப்பு குருவி புதுமை துடுக்கு
சிரிப்பு புலமை வியப்பு மைந்தா குரங்கு
புன்னகை மைசூரு புகுந்து தாவி குத்து
கைபேசி ரூபாவதி துயில்... விருப்பு துதி
சிறப்பு திங்கள் ... புகழ்... தித்திப்பு...
புதுமை
மைனா...

2. அகராதியில் காண்க.

நயவாமை - விரும்பாமை
கேழ்பு - நன்மை
செம்மல் - அரசன், அருகன், தலைமகன், பழம்பூ, புதல்வன், பெருமையிற் சிறந்தோம், உள்ளநிறைவு, நீர், தருக்கு.
கிளத்தல் - எழுப்பல், சொல்லுதல், பேசுதல்
புரிசை - மதில்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

3. கொடுக்கப்பட்ட வேர்ச்சொற்களைப் பயன்படுத்தி விடுபட்ட கட்டங்களில் காலத்திற்கேற்ற வினைமுற்றுகளை நிறைவு செய்க.

வா			
	இறந்த காலம்	நிகழ் காலம்	எதிர் காலம்
நான்	வந்தேன்	வருகின்றேன்	வருவேன்
நாங்கள்	வந்தோம்	வருகின்றோம்	வருவோம்
நீ	வந்தாய்	வருகிறாய்	வருவாய்
நீங்கள்	வந்தீர்கள்	வருகிறீர்கள்	வருவார்கள்
அவன்	வந்தான்	வருகிறான்	வருவான்
அவள்	வந்தாள்	வருகிறாள்	வருவாள்
அது	வந்தது	வருகிறது	வரும்
அவர்	வந்தார்	வருகிறார்	வருவார்
அவர்கள்	வந்தார்கள்	வருகிறார்கள்	வருவார்கள்
அவை	வந்தவை	வருகின்றன	வருபவை

4. தா, காண், பெறு, நீந்து, பாடு, கொடு போன்ற வேர்ச்சொற்களைப் பயன்படுத்தி மேற்கண்ட கட்டத்தினைப் போன்று காலத்திற்கேற்ற வினைமுற்றுகளை அமைத்து எழுதுக.

வேர்ச்சொல்	இறந்த காலம்	நிகழ் காலம்	எதிர் காலம்
தா	தந்தேன்	தருகிறேன்	தருவேன்
காண்	கண்டேன்	காண்கிறேன்	காண்பேன்
பெறு	பெற்றேன்	பெறுகிறேன்	பெறுவேன்
நீந்து	நீந்தினேன்	நீந்துகிறேன்	நீந்துவேன்
பாடு	பாடினேன்	பாடுகிறேன்	பாடுவேன்
கொடு	கொடுத்தேன்	கொடுக்கிறேன்	கொடுப்பேன்

5. அடைப்புக்குள் உள்ள சொற்களைக் கொண்டு எழுவாய், வினை அடி, வினைக்குப் பொருத்தமான தொடர் அமைக்க. (திடலில், போட்டியில், மழையில், வேகமாக, மண்ணை)

எ.கா: நான் திடலில் ஓடினேன். **(தன்வினை)**
நான் திடலில் மிதிவண்டியை ஓட்டினேன். **(பிறவினை)**

எழுவாய்/பெயர்	வினைஅடி	தன் வினை	பிறவினை
காவியா	வரை		
கவிதை	நனை		
இலை	அசை		
மழை	சேர்		

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

காவியா - வரை

காவியா போட்டியில் வரைந்தாள். (தன்வினை)

காவியா போட்டியில் ஓவியத்தை வரைவித்தாள். (பிறவினை)

கவிதை - நனை

கவிதை மழையில் நனைந்தேன். (தன்வினை)

இரகு கவிதை மழையில் நனைவித்தான். (பிறவினை)

இலை - அசை

இலை வேகமாக அசைந்தது. (தன்வினை)


காற்று இலையை வேகமாக அசைவித்தது. (பிறவினை)

மழை - சேர்

மழை மண்ணை சேர்ந்தது. (தன்வினை)

மழைநீரை மண்ணில் சேர்த்தான். (பிறவினை)


காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



மனிதர்களே,
பத்தோடு பதினொன்றாக வாழாதீர்.....
இக்கரைக்கு அக்கரை பச்சை யென்று
வேதாந்தம் பேசி மூச்சு முட்டி வாழாதீர்.....
சவாலை சந்தியுங்கள் சுதந்திரக் காற்றை சுவாசியுங்கள்
"வாய்ப்புகளை நழுவ விடாதீர்"

செயல்திட்டம்

நீங்கள் வாழும் பகுதியில் மக்கள் பேசும் மொழிகளைப் பட்டியலிட்டு அம்மொழி பேசப்படுகின்ற இடங்களை நிலப்படத்தில் வண்ணமிட்டுக் காட்டுக.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

உங்களுடைய நாட்குறிப்பில் இடம் பெற்ற ஒருவாரத்திற்குரிய மகிழ்ச்சியான செய்திகளைக் தொகுத்து அட்டவணைப்படுத்துக.

திங்கள்	வருத்தம் தெரிவிக்கிறேன். பொறுத்துக் கொள்ளவும் ஆகிய சொற்றொடர்களை இன்று இரண்டு முறை வகுப்பில் பயன்படுத்தினேன். இதனால் புதிய நண்பர் கிடைத்தார்.
செவ்வாய்	நீ தேர்வில் வெற்றிபெற்றதற்கு வாழ்த்து - நண்பன் என்னைப் பாராட்டினான்.
புதன்	வகுப்பில் கேட்பாரற்றுக் கிடந்த ரூ 500ஐ எடுத்து உரியவரிடம் கொடுத்தேன் - தலைமை ஆசிரியர் பாராட்டினார்
வியாழன்	தெருவில் கிடந்த பணப்பையைக் காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன் - உரியவர் என்னையும் குடும்பத்தையும் பாராட்டினார்.
வெள்ளி	வீட்டிற்குத் தேவையான பொருள்களை நானாக முன்வந்து வாங்கிக் கொடுத்தேன் - அம்மா பாராட்டினார்.
சனி	மாற்றுத் திறனாளி சாலையைக் கடக்க உதவினேன் - பொதுமக்கள் பாராட்டினர்.
ஞாயிறு	நூலகத்தில் படியில் தள்ளாடிய பெரியவரை கைப்பிடித்து வழி நடத்தினேன் - பெரியவர் பாராட்டினார்.

கலைச்சொல் அறிவோம்

உருபன் - Morpheme
ஒலியன் - Phoneme
ஒப்பிலக்கணம் - Comparative Grammar
பேரகராதி - Lexicon

※※⁂⁂⁂※※

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

உரைநடை உலகம்

இயல் இரண்டு

நீரின்றி அமையாது உலகு

பாடநூல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?

அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி

விடை : ஈ) புலரி

2. பொருத்தமான விடையைத் தேர்க.

அ) நீரின்று அமையாது உலகு - திருவள்ளுவர்
ஆ) நீரின்று அமையாது யாக்கை - ஔவையார்
இ) மாமழை போற்றுதும் - இளங்கோவடிகள்

i) அ, இ, ஆ ii) ஆ, இ, அ iii) ஆ, அ , இ iv) அ, ஆ, இ

விடை : iv) அ, ஆ, இ

குறுவினா

1. "கூவல்" என்று அழைக்கப்படுவது எது?

உவர்மண் (களர்மண்) நிலத்தில் தோண்டப்படும் நீர்நிலைக்கு கூவல் என்று பெயர்.

2. உங்களது பள்ளியைச் சுற்றியுள்ள நீர்நிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

ஆழிக் கிணறு - கடலருகே தோண்டிக் கட்டிய கிணறு
இலஞ்சி - பலவகைக்கும் பயன்படும் நீர்த்தேக்கம்
ஊருணி - மக்கள் பருகு நீர் உள்ள நீர்நிலை
கேணி - அகலமும் ஆழமும் உள்ள பெருங்கிணறு
பூட்டைக் கிணறு - கமலை நீர்பாய்ச்சும் அமைப்புள்ள கிணறு

3. மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண்

-இக்குறள் கூறும் நாட்டின் அரண்கள் யாவை?

மணிபோல் தெளிவான நீரும், வெட்ட வெளியான நிலமும், ஓங்கி உயர்ந்த மலையும் நிழல் தருகிற காடும் ஆகிய நான்கும் அமைந்து இருப்பதே ஒரு நாட்டின் அரண் ஆகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

சிறுவினா

1. அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை - அதற்கு நாம் செய்ய வேண்டியவற்றை எழுதுக.

- ஐம்பூங்களுள் ஒன்று நீர். அது நிலம், காற்று, நெருப்பு வானம் ஆகிய நான்குடன் தொடர்பு கொண்டு இயங்கவல்லது. நம் முன்னோர் கிடைத்த நீரை அளவோடு பயன்படுத்தினர்.
- அதனால் நாமும், நீரை அளவோடு பயன்படுத்தி வரும் தலைமுறைக்கு பாதுகாத்து வைக்க வேண்டும்.
- 'குளம் தொட்டு வளம் பெருக்கி' வாழ்ந்தவர்கள் தமிழர். இன்றும் நீர்நிலைகளைப் பாதுகாத்துப் பராமரிக்க வேண்டும்.
- மழைநீரைப் பயன்படுத்தும் முறை அறியவேண்டும். இளம் தலைமுறையினர்க்கு நீர் மேலாண்மை பயிற்சி வழங்க வேண்டும்.

2. சோழர்காலக் குமிழித்தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?

- குமிழித்தூம்பு என்பது ஏரியில் உள்ள நீரையும் சேறையும் வெறியேற்றுவதற்காகப் பயன்படுத்தப் பட்டன.
- சோழர்காலத்தில் நீர்நிரம்பி நிற்கும் ஏரிக்குள் நீந்தி கழிமுகத்தை (ஏரி நீர்க்கழிவு) அடைந்து குமிழித் தூம்பைத் தூக்கி விடுவார்கள்.
- குமிழித்தூம்பில் இரண்டு துளைகள் இருக்கும். மேலே இருக்கும் நீரோடித் துளையிலிருந்து நீர் வெளியேறும். கீழே இருக்கும் சேறோடித் துளையிலிருந்து நீர் சுழன்று சேற்றுடன் வெளியேறும். இதனால் தூர் வாரத் தேவையில்லை.

நெடுவினா

1. நீரின்று அமையாது உலகு - என்னும் வள்ளுவரின் அடி உணர்த்தும் பொருள் ஆழத்தை எடுத்துக் காட்டுடன் விவரி.

முன்னுரை :

'நீர்இன்று அமையாது உலகு எனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு'

ஒழுக்கம் உயிரினும் சிறந்தது. எத்தகைய சிறப்புகளை உடையவர்களுக்கும் நீர் இல்லையேல் ஒழுக்கங்கள் அமையா. எனவே மழையின்றி ஒழுக்கம் நிலை பெறாது என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார். நம்முன்னோர்கள் பல்வேறு நீர்நிலை வடிவங்களை அமைத்து நீரைப் பாதுகாத்தனர். நாமும் இனிவரும் தலைமுறையினர்க்கு நீரைப் பாதுகாத்து வைக்க வேண்டும்.

மழை உழவுக்கு உதவுகிறது :

மழை உழவுத் தொழிலுக்கு உதவுகிறது. விதைத்து வாழ வேண்டும் என்னும் நோக்கில் வளர்கின்றன. " நிலமும் மரமும் உயிர்களும் நோயின்றி வாழ வேண்டும் என்ற புலவர்களுள் ஒருவரான மாங்குடி மருதனார் கூறியதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஒவ்வொரு வட்டாரத்தின் நில அமைப்பு, மண்வளம், வடிவமைக்கப்பட்டிருந்தது, இதில் ஏரிகளும் குளங்களும் பாசனத்திற்கான எளிய வடிவங்களாகப் பயன்பட்டன.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

உணவெனப் படுவது நிலத்தொடு நீரே:

உணவெனப்படுவது நிலத்தோடு நீரே என்னும் சங்கப்பாடல், நீரின் இன்றியமையாத் தேவையை எடுத்துரைக்கிறது.

'மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண்'

என்னும் குறளில் நாட்டின் சிறந்த அரண்களுள் நீருக்கே முதலிடம் தருகிறார்.

உலகச் சுகாதார நிறுவனம், "உலகம் விரைவில் குடிநீருக்கான கடும் சிக்கலை எதிர்கொள்ளும்" என எச்சரிக்கிறது. குடிநீரை விலை கொடுத்து வாங்கும் அவலம் தொடரும் நிலையை மாற்றியமைக்கத் திட்டமிட வேண்டியது உடனடித் தேவையாகும். ஆண்டுதோறும், பெறுகின்ற மழைப்பொழிவை ஆக்கநிலையில் பயன்படுத்தும் செயல் திட்டத்தை உருவாக்க வேண்டும்.

பல்லுயிர்ப் பாதுகாப்பு :

உலகின் பல்லுயிர்ப் பாதுகாப்பிற்கு அடிப்படை தண்ணீர் நமது முன்னோர்கள் கண்டுணர்ந்த வாழ்வியல் அணுகுமுறைகளைப் பின்பற்ற வேண்டும். குளம், ஏரி, கால்வாய், கிணறு போன்ற நீர்நிலைகளின் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை மக்களிடம் உருவாக்க வேண்டும். இதை ஒரு மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும்.

நிறைவுரை :

உணவு உற்பத்திக்கு அடிப்படை நீரே. அந்த நீரே உணவாகவும் இருக்கிறது. இதை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவர்,

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை"

என்று கூறியுள்ளதைக் கருத்தில் கொண்டு செயல்படுவோம்.

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. பாண்டி மண்டலத்தில் ஏரியை ..... என்று அழைப்பர்.

அ) ஊருணி ஆ) கண்மாய் இ) குளம் ஈ) அகழி

விடை: ஆ) கண்மாய்

2. உலகச் சுற்றுச்சூழல் தினம் கொண்டாடப்படும் நாள் .....

அ) ஜூன் 5 ஆ) மார்ச் 20 இ) அக்டோபர் 5 ஈ) பிப்ரவரி 2

விடை: அ) ஜூன் 5

3. 'நிலமும் மரமும் உயிர்கள் நோயின்றி வாழ வேண்டும் எனும் நோக்கில் வளர்கின்றன' என்று கூறியவர் .....

அ) மிளைகிழான் நல்வேட்டனார் ஆ) கணிமேதாவியார்

இ) மாங்குடி மருதனார் ஈ) நல்லந்துவனார் விடை: இ) மாங்குடி மருதனார்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

4. 'இந்திய நீர்ப்பாசனத்தின் தந்தை' என்று போற்றப்படுபவர் .....

அ) பென்னி குயிக் ஆ) விஸ்வேஸ்வரய்யா
இ) சர்.பக்கிள் ஈ) சர். ஆர்தர் காட்டன் **விடை: ஈ) சர். ஆர்தர் காட்டன்**

5. 'கிராண்ட் அணைக்கட்' என்று அழைக்கப்படுவது .....

அ) பக்ரா நங்கல் ஆ) ஹிராகுட் இ) சர்தார் சரோவர் ஈ) கல்லணை
விடை: ஈ) கல்லணை

6. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடு.

அ) குண்டு - குளிப்பதற்கேற்ற சிறுகுளம்
ஆ) அருவி - மலைமுகட்டுத் தேக்க நீர்
இ) அகழி - கோட்டைப்புறத்து நீர் அரண்
ஈ) கூவல் - மக்கள் பருகுநீர்நிலை **விடை: ஈ) கூவல் - மக்கள் பருகுநீர்நிலை**

7. திருமணம் முடிந்த பின் தொடர் நிகழ்வை ..... என்பர்.

அ) சனி நீராடு ஆ) மஞ்சள் நீராட்டு
இ) கடலாடுதல் ஈ) பூப்புனித நீராட்டு **விடை : இ) கடலாடுதல்**

8. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடு.

அ) குண்டம் - குளிக்கும் நீர்நிலை
ஆ) கூவல் - உவர்மண் நிலத்தில் தோண்டப்படும் நீர்நிலை
இ) ஊருணி - மக்கள் பருகும் நீர்நிலை
ஈ) கண்மாய் - உவர் நீர்நிலை **விடை: ஈ) கண்மாய் - உவர் நீர்நிலை**

நிரப்புக

9. மழை பற்றிய பத்துக் குறட்பாக்கள் அடங்கிய அதிகாரம் ..... **விடை : வான்சிறப்பு**
10. மாமழை போற்றுதும் என்று போற்றியவர் ..... **விடை : இளங்கோவடிகள்**
11. கல்லணையின் கட்டுமான உத்தியைக் கொண்டு கட்டப்பட்ட அணை **விடை : தெளலீஸ்வரம்**
12. நாம் வாழும் தமிழ்நாடு ..... பகுதியில் உள்ளது. **விடை : வெப்ப மண்டலப்**
13. சனிநீராடு என்றவர் ..... **விடை : ஔவையார்**
14. அகலமும், ஆழமும் உள்ள பெருங்கிணறு ..... **விடை : கேணி**
15. தேக்கப்பட்ட பெரிய நீர்நிலை ..... **விடை : சிறை**
16. பலவகைக்கும் பயன்படும் நீர்த்தேக்கம் ..... எனப்படும். **விடை : இலஞ்சி**
17. முல்லைப் பெரியாறு அணை கட்டியவர் ..... **விடை : ஜான் பென்னிகுயிக்**
18. ஒரு நாட்டின் சிறந்த அரண்களுள் முதன்மையாகத் திகழ்வது ..... **விடை : நீர் அரண்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

குறுவினா

1. நன்னீர் நிலைகள் யாவை?

மழைநீர், ஆற்றுநீர், ஊற்றுநீர் மூலம் கிடைக்கும் நீர்நிலைகள்.

2. நீ அறிந்த தமிழகத்தின் மூன்று நீர்நிலைப் பெயர்களுக்கு விளக்கம் தருக.

- ஆழிக்கிணறு : கடலருகே தோண்டிக் கட்டிய கிணறு.
- ஊருணி : மக்கள் பருகு நீர் உள்ள நீர்நிலை.
- உறைக்கிணறு : மணற்பாங்கான இடத்தில் தோண்டிச் சுடுமண் வளையமிட்ட கிணறு.

3. ஜான் பென்னி குயிக் - குறிப்பு வரைக.

தமிழகத்தில் மதுரை தேனி, திண்டுக்கல், சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுக்குக் குடிநீருக்கும், விவசாயத்திற்கும் பயன்படும் முல்லைப் பெரியாறு அணையைக் கட்டியவர். ஆங்கில அரசாங்கம் கூடுதல் நிதி ஒதுக்க மறுத்த போது தனது சொத்துக்களை விற்று அணையைக் கட்டிமுடித்தார்.

4. நிலத்தடி நீர்வளம் குறைந்து வரும் நாடுகள் யாவை?

அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், சீனா.

5. கல்லணை பற்றிக் குறிப்பு தருக.

- பல நூற்றாண்டுகளுக்கு முன் கரிகால் சோழன் காலத்தில் கட்டப்பட்டது.
- நீளம் - 1080 அடி, அகலம் - 40 முதல் 60 அடி, உயரம் - 15 முதல் 18 அடி.
- கல்லணை நம் முன்னோரின் திட்ப நுட்பத்திற்கும், தொழில் நுட்பத்திற்கும் சான்றாகத் திகழ்கிறது.

6. 'குளித்தல்' என்பதன் பொருள் யாது?

சூரிய வெப்பத்தாலும் உடல் உழைப்பாலும் வெப்பமடைந்த உடலைக் குளிர வைத்தலாகும். குளிர்த்தல் என்பதே குளித்தல் என்று ஆனது.

சிறுவினா

1. கல்லணையைக் கட்ட பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்தை விவரி.

- காவிரி ஆற்றின் மீது பெரிய பாறைகளைக் கொண்டு வந்து போட்டனர். அந்தப் பாறைகளும் நீர் அரிப்பின் காரணமாகக் கொஞ்சம் கொஞ்சமாக மண்ணுக்குள் சென்றன.
- அவற்றின்மேல் வேறொரு பாறையை வைத்து நடுவே தண்ணீரில் கரையாத ஒருவித ஒட்டும் களிமண்ணைப் புதிய பாறைகளில் பூசி, இரண்டையும் ஒட்டிக்கொள்ளும் விதமாகச் செய்தனர்.
- இதுவே, கல்லணையைக் கட்டப் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பமாகக் கருதப்படுகிறது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கற்பவை கற்றபின்

பக்கம்: 37

1. நீரின்று அமையாது உலகு, நீரின்று அமையாது யாக்கை இவ்விரண்டு தொடர்களையும் ஒப்புமைப்படுத்தி வகுப்பில் கலந்துரையாடுக.

நீரின்று அமையாது உலகு	நீரின்று அமையாது யாக்கை
இஃது திருக்குறளில் இடம் பெற்றுள்ளது.	இஃது புறநானூறில் இடம் பெற்றுள்ளது.
இஃது திருவள்ளுவர் கூறிய கூற்று.	இஃது குடபுலவியனார் பாண்டியன் நெடுஞ் செழியனுக்குக் கூறியது.
மழையே பயிர்க்கூட்டமும், உயிர்க்கூட்டமும் மகிழ்ச்சியாக வாழப் பெருந்துணை புரிவதால் "நீரின்று அமையாது உலகம்" என்றார்.	உடல் உணவால் அமைவது உணவு நீர் இன்றி அமையாது - அதனால்தான் "நீரின்று அமையாது யாக்கை" என்றார்.

2. வீடுகளில் பயன்படுத்தப்படும் தண்ணீர் எங்கிருந்து கிடைக்கிறது? இதற்கான நீர் எங்கிருந்து வருகிறது? இன்னும் எவ்வளவு காலத்திற்குத் தண்ணீர் போதுமானதாக இருக்கும்? என்பவற்றுக்கான தகவல்களைத் திரட்டி ஒப்புடைவு உருவாக்குக.

- நம் வீடுகளில் நாம் பயன்படுத்தும் தண்ணீருக்கு ஆதாரமாக இருப்பது நிலத்தடி நீர், அணைகளில் தேக்கி வைக்கப்பட்டிருக்கும் நீர், கிணற்றுநீர் ஆகியவை ஆகும். ஆழ்குழாயில் வரும் நீரின் வேகத்தைப் பொறுத்து அஃது எவ்வளவு நாள் வரும் என கணக்கிடப்படும்.
- அணைகளின் கொள்ளளவை அடிப்படையாகக் கொண்டு எவ்வளவு காலம் பயன்படுத்தலாம் என்று கூறுவர். அணைகளில் வெளியேறும் நீர்வரத்து நீரை அடிப்படையாகக் கொண்டும், வானிலை அறிக்கை தெரிவிக்கும் மழையின் போக்கைக் கொண்டும், ஒரு மாதத்திற்கு போதுமானது..... எத்தனை நாட்களுக்கு பிரச்சனையின்றி நீர் வழங்கலாம் போன்றவை முடிவு செய்யப்படும்.
- அதன் அடிப்படையில் மக்களின் குடிநீர், பயன்படுத்தும் நீரின் தேவை பூர்த்தி செய்யப்படும்.

※※⁂⁂⁂※※

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

இயல் இரண்டு

கவிதைப் பேழை

பட்டமரம்

கவிஞர் தமிழ் ஒளி

ஆசிரியர் குறிப்பு

பக்கம்: 39



தமிழ் ஒளி

கவிஞர் தமிழ் ஒளி தென்னாற்காடு மாவட்டம் குறிஞ்சிப்பாடியைச் சொந்த ஊராகக் கொண்டவர். இயற்பெயர் "விஜயரங்கம்". இவர் புதுவையில் செப்டம்பர் 21, 1924 ல் பிறந்தார். 1965 மார்ச் 24 வரை வாழ்ந்தார். பாரதியாரின் வழித்தோன்றலாகவும், பாரதிதாசனின் மாணவராகவும் இருந்தவர். திராவிடர் கழக மாணவர் மாநாட்டில் "பாரதிதாசனின் கவிதை"யைப் படித்த பெருமைக்குரியவர்.

பொதுவுடைமைக் கொள்கையில் ஈடுபாடு உடையவர். 1949ல் "புதுவைத் தொழிலாளிக்கு - கோவைத் தொழிலாளியின் கடிதம்" என்னும் இவரது கவிதை புகழுக்குரியதாய்த் திகழ்ந்தது.

நூல்கள் :

"கவிஞனின் காதல், கண்ணப்பன் கிளிகள், நிலை பெற்ற சிலை, மே தின ரோசா, மே தினமே வருக, வீராயி, புத்தர் பிறந்தார், மாதவி காவியம்."

ஆய்வு நூல்கள் :

சிலப்பதிகாரம் காவியமா - நாடகமா, திருக்குறளும் கடவுளும், தமிழர் சமுதாயம் போன்றவை ஆகும். பட்டமரம் கவிதை "தமிழ் ஒளியின் கவிதைகள்" நூலில் இடம் பெற்றுள்ளது.

நம் முன்னோரின் வாழ்வு, இயற்கையோடு இயைந்திருந்தது. மரங்களையும், செடி, கொடிகளையும் நேசித்தனர். மரம் மனித வாழ்விற்கு இன்றியமையாதது என்பதை நமக்கும் கற்றுத் தந்து சென்றிருக்கிறார்கள். மரங்கள் இல்லையென்றால் உயிர்வளி (மூச்சுக்காற்று) இல்லை. பட்டுப்போன மரம் ஒன்று கவிஞர் ஒருவரின் உள்ளத்தில் ஏற்படுத்திய தாக்கமே "பட்டமரம்" என்னும் கவிதையாகும்.

பாடலின் பொருள் :

இலைகள், துளிர்கள் எதுவும் இன்றி வறண்ட மொட்டைக் கிளைகளோடு நின்று. தினம் தினம் தன் நிலையை எண்ணி பெருமூச்சு விட்டுக் கொண்டு ஏக்கத்துடன் திகழும் பட்ட மரமே, உன்னையும் ஒருவன் வெட்டும் நாள் விரைவில் வரும் என்று எண்ணி மனக்குமுறல் அடைந்தாயோ?

அமர்வதற்கு நிழல் தந்து, வாசனை பொருந்திய மலர்களை மலரச் செய்து, இலைகளால் கூரை விரித்திருந்த மரமே. வெப்பத்தால் வெந்து, கருகி இந்த நிறம் வந்ததே என்று வருந்துகிறாயோ!

மரம் என்னும் பெயர் மாறி, கட்டை என்னும் பெயர் உற்று கொடுந்துயர் கொண்டனையோ! உன் மரப்பட்டை என்னும் உடல் வெப்பமுற்று, கிழிந்துவிட முற்றும் இழந்த நிலை அடைந்தாயோ!

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

காலம் என்னும் புயல் சீறிவர, கலங்கும் மனிதன் உதவி கேட்டு, ஓலமிட்டு கரம் நீட்டி தவிப்பது போல நீயும் துன்பத்தில் உழல்கிறாயோ!

பாடும் பறவைகள் உன்னில் கூடி வாழ்ந்து, உனக்கு ஒரு பாடல் புனைந்ததும் மூடு பனித்திரை உனக்கு மோகம் கொடுத்ததும், ஆடும் கிளைகளில் சிறுவர்கள் ஏறிநின்று குதிரை ஓட்டி விளையாடியதும் ஏட்டில் நின்ற பெருங்கதையாய் ஒரு கதையாய் முடிந்தனவே.

அவையாவும் வெறுங்கனவாய் ஆனதே என்று, பட்ட மரம் ஒன்று தன் நிலையை எண்ணி குமைவதாக எழுதியுள்ளார் கவிஞர் தமிழ் ஒளி அவர்கள்.

சொல்லும்-பொருளும்

விசனம் - துன்பம், கவலை
கந்தம் - வாசனை
எழில் - அழகு
ஓலம் - அலறல்
குந்த - உட்கார
இற்று - அழிந்து (இத்துப் போச்சு கொச்சை வழக்கு)
மிசை - மேல்

இலக்கணக் குறிப்பு :

வெந்து, வெம்பி, எய்தி - வினையெச்சங்கள்
மூடுபனி - வினைத்தொகைகள்
ஆடுங்கிளை - பெயரெச்சத் தொடர்
வெறுங்கனவு - பண்புத்தொகை

பகுபத உறுப்பிலக்கணம் :

1. விரித்த - விரி + த் + த் + அ

விரி	-	பகுதி
த்	-	சந்தி
த்	-	இறந்தகால இடைநிலை
அ	-	பெயரெச்ச விகுதி

2. குமைந்தனை - குமை + த்(ந்) + த் + அன் + ஐ

குமை	-	பகுதி
த்(ந்)	-	த் 'ந்' ஆனது விகாரம்
த்	-	இறந்தகால இடைநிலை
அன்	-	சாரியை
ஐ	-	முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

3. அடைந்தனை - அடை + த்(ந்) + த் + அன் + ஐ

அடை	-	பகுதி,
த்(ந்)	-	த்'ந்' ஆனாது விகாரம்
த்	-	இறந்தகால இடைநிலை
அன்	-	சாரியை
ஐ	-	முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

4. கருகினை - கருகு + இன் + ஐ

கருகு	-	பகுதி,
இன்	-	இறந்தகால இடைநிலை
ஐ	-	முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

5. இழந்தனை - இழ + த்(ந்) + த் + அன் + ஐ

இழ	-	பகுதி,
த்(ந்)	-	த்'ந்' ஆனாது விகாரம்
த்	-	இறந்தகால இடைநிலை
அன்	-	சாரியை
ஐ	-	முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

6. உழன்றனை - உழ + ல்(ன்) + ற் + அன் + ஐ

உழல்	-	பகுதி,
ல்(ன்)	-	ல் 'ன்' ஆனாது விகாரம்
ற்	-	இறந்தகால இடைநிலை
அன்	-	சாரியை
ஐ	-	முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

7. புனைந்தது - புனை + த்(ந்) + த் + அ + து

புனை	-	பகுதி,
த்(ந்)	-	த்'ந்' ஆனாது விகாரம்
த்	-	இறந்தகால இடைநிலை
அ	-	சாரியை
து	-	ஒன்றன்பால் வினைமுற்று விகுதி

8. கொடுத்தது - கொடு + த் + த் + அ + து

கொடு	-	பகுதி,
த்	-	சந்தி
த்	-	இறந்தகால இடைநிலை
அ	-	சாரியை
து	-	ஒன்றன்பால் வினைமுற்று விகுதி

9. விடுத்தது - விடு + த் + த் + அ + து

விடு	-	பகுதி,
த்	-	சந்தி
த்	-	இறந்தகால இடைநிலை
அ	-	சாரியை
து	-	ஒன்றன்பால் வினைமுற்று விகுதி

பாடநூல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. 'மிசை' - என்பதன் எதிர்ச்சொல் என்ன?

அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை

விடை : அ) கீழே

சிறுவினா

1. பட்டமரத்தின் வருத்தங்கள் யாவை?

கவிஞர் தமிழ் ஒளியின் கருத்துகள்:

"தினந்தோறும் மொட்டைக்கிளையோடு நின்று பெருமூச்சு விடும் மரமே!
நம்மை வெட்டும் நாள் ஒன்றுவரும் என்று துன்பப்பட்டாயோ?
நிழலில் அமர. வாசனை தரும் மலர்களையும் இலைகளையும் கூரையாக விரித்த மரமே!
வெம்பிக் கருகிட இந்த நிறம் வர வாடிக் குமைந்தனவோ?
கொடுந்துயர் உற்று கட்டை என்னும் பெயர் பெற்று கொடுந்துயர் பட்டுக் கருகினையோ?
உன் உடையாகிய பட்டை இற்றுப்போய்க் கிழிந்து உன் அழகு முழுதும் இழந்தனையோ?
சீறிவரும் காலப் புயலில் எதிர்க்கக் கலங்கும் ஒரு மனிதன்
ஓலமிட்டுக் கரம் நீட்டியதுபோல துன்பப்பட்டு வருந்தி நிற்கிறாய்".

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. 'விசனம்' சொல் தரும் பொருள் .....

அ) வேதனை ஆ மகிழ்ச்சி இ) ஏக்கம் ஈ) கவலை

விடை: ஈ) கவலை

2. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடுக்க.

அ) மிசை - மேல்
ஆ) கந்தம் - மணம்
இ) வெம்பல் - வாடல்
ஈ) குந்த - வருந்த

விடை: குந்த - வருந்த

நிரப்புக

3. கவிஞர் தமிழ் ஒளி வாழ்ந்த காலம் ..... விடை : 1924 - 1965
4. 'பட்டமரம்' கவிதை இடம் பெற்ற நூல் ..... விடை : தமிழ் ஒளியின் கவிதைகள்
5. பாரதியார் வழித்தோன்றல் - பாரதிதாசனின் மாணவர் ..... விடை : கவிஞர் தமிழ்ஒளி

குறுவினா

1. கவிஞர் தமிழ் ஒளியின் படைப்புகள் யாவை?

நிலைபெற்ற சிலை, வீராயி கவிஞனின் காதல், மே தினமே வருக, கண்ணப்பன் கிளிகள், குருவிப்பட்டி, தமிழர் சமுதாயம், மாதவி காவியம் முதலியன ஆகும்.

கற்பவை கற்றபின்

பக்கம்: 39

1. விளைநிலங்கள் கட்டடங்களாகின்றன என்னும் தலைப்பில் ஒட்டியும் வெட்டியும் பேசுக.

ஏழை விவசாயி : எங்க அப்பா காலத்திலிருந்து நெல் கரும்பு போட்டோம். அப்ப வந்தது. இப்ப..... வெண்டை, புடலை கூட வரமாட்டேங்குது.

அழகு (மனை விற்பனையாளர்) : என்ன போட்டு என்ன ஆச்சு? மழையில்லானா என்ன பண்ண முடியும்?

ஏழை விவசாயி : அழகு... பக்கத்திலிருக்கிற வயலெல்லாம் பிளாட் போட்டுட்டாங்க. எனக்கு என்ன செய்றதுன்னே தெரியல்லே! மழையும் இல்ல, கிணத்துல தண்ணியில்லே!

அழகு : நான் சொல்ற வழிக்கு வரமாட்டங்கிற... வித்து பணத்த பேங்க்ல போட்டுட்டு நிம்மதியா சாப்பிட்டுட்டு தூங்கு.

ஏழை விவசாயி : பூமித்தாய விக்கச் சொல்ற... வித்தா அப்பார்ட் மெண்ட் கட்றங்கிறீங்க.. என்ன ஆகப் போதுன்னு எனக்குத் தெரியல!

அழகு : மழையில்ல தண்ணியில வீடு கட்டி நூறு ஜனங்க பொழக்கட்டுமே! வயல் வரப்ப வச்சிருந்து என்ன பண்ணப் போறீங்க? வித்தா மகளுக்கு கல்யாணம்; மகனைப் படிக்க வைக்க... எல்லாம் உன் நன்மைக்கே சொல்றேன்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

ஏழை விவசாயி : பால் தர்ற பசுமாட்ட மடிஅறுத்துப் பால் குடிக்கிறதா? விளை நிலத்தைப் பூரா விலை நிலமா ஆக்கிட்டீங்க அழகு.

அழகு : இனி வரப்போற நாளில வீடுதான் முக்கியம். குடியிருக்க வேண்டாமா?

ஏழை விவசாயி : உங்க மாதிரி ஆளுகளால தான் கொசு தொந்தரவு நிறைய ஆகிருச்சு. குளங்குட்டையெல்லா பிரிச்சுப் போட்டு வித்தாச்சு தவளை இருந்தா கொசுவப் பிடிக்கும் இப்ப அதுக்கும் வழியில்ல

அழகு : ஒன்னும் வேணாங்க உங்க புள்ளங்க இந்தக் குடிசையில இருக்குமா? கேட்டுச் சொல்லுங்க....

ஏழை விவசாயி : உனக்குப் பணம் முக்கியம் எனக்குப் பயிர் முக்கியம். நிலத்தால் சோறு போடுறவன் ஏழையாகிறான். நிலத்தைக் கூறுபோடுறவன் பணக்காரனாகிறான்.

2. பட்டமரம், புதிதாக முளைவிட்ட குருத்து ஆகிய இரண்டும் பேசிக்கொள்வதாய்க் கற்பனை உரையாடல் நிகழ்த்துக.

£mh©µ® : பேரனே ! நலமா? தேடாதே ! நான் தான் உன் தாத்தா பட்டமரம்.

¦vuõP • ø Í Âmh

S¸zx : ஐயோ , நீங்களா இப்படி ஆகிவிட்டீர்கள்

£mh©µ® : ஆமாம் , பேராண்டி மனிதர்கள் செயற்கை உரம், நெகிழியைப் பயன்படுத்தி என்னை இப்படி ஆக்கிவிட்டார்கள். நம்ம வம்சமே பட்டுப்போய் விட்டது. உன்னை மட்டும் தான் காப்பாற்ற முடிந்தது. நீ எப்படியோ பிழைத்துக் கொள்!

¦vuõP • ø Í Âmh

S¸zx : தாத்தா கவலைப்படாதீர்கள். நம் வம்சத்தைக் காப்பாற்ற மனிதர்களிடம் புரிய வைக்கிறேன்.

£mh©µ® : சரிப்பா, நான் ஓய்வெடுக்கின்றேன்.மனிதர்களுக்கு நன்குபுரியவை!

¦vuõP • ø Í Âmh

S¸zx : இதோ, செல்கிறேன் தாத்தா.

3. பட்டணத்துப் பறவைகளும் ஊர்ப் பறவைகளும் என்ற தலைப்பில் பறவைகள் கூறுவன போலச் சிறு சிறு கவிதைகள் படைக்க.

பட்டணத்துக் காக்கை	கிராமத்துக் கிளி
ஊரைத் தூய்மை செய்கின்றோம் உறவைக் கூட்டிப் பகிர்கின்றோம் கரைந்து தாகம் எடுக்கிறதே! விரைந்து நீரை வைப்பீரே!	தத்திப் பறக்கும் உறவுகளே கொத்தித் தின்ன வாருங்கள் பழுத்துத் தொங்கும் பழக்கூட்டம் கழுத்து வரைக்கும் உண்பீரே!
பட்டணத்துச் சிட்டுக் குருவி	**கிராமத்துக் குயில்**
சிட்டுக் குருவிகளின் தினம் கொண்டாடும் மனிதர்களே! எங்களை எப்போது போற்றிக் காத்துக் கொள்வீர்கள். நீங்கள் வைத்திருக்கும் அலைபேசிக் கோபுரம் எங்கள் பரம்பரையை அழித்து ஒழிக்கும் ஆபரணம்!	பூஞ்சோலைகளும் மாஞ்சோலைகளும் பூத்துக்குலுங்கும் மரங்களும் நிரம்பியிருக்கும் என நினைத்து தனிமையில் கூவினேன். என்னை விட சோகமாக இருந்தது..... அந்தக் கிராமம்!

※※⁂⁂⁂※※

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கவிதைப் பேழை

இயல் இரண்டு

பெரியபுராணம்

சேக்கிழார்

ஆசிரியர் குறிப்பு

பக்கம்: 43

சேக்கிழார் தற்போதைய காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள குன்றத்தூரில் பிறந்தவர். இவரது இயற்பெயர் அருண்மொழித் தேவர். சோழ அரசன் 'இரண்டாம் குலோத்துங்கன்' அவையில் முதலமைச்சராக இருந்தவர். இவரது காலம் கி.பி. 12 ம் நூற்றாண்டு. உத்தமச் சோழ பல்லவர் என்னும் பட்டம் பெற்றவர். இவரைத் தெய்வச் சேக்கிழார் என்றும், தொண்டர் சீர் பரவுவார் என்றும் போற்றுவர்.

"வரப்புயர நீர் உயரும், நீருயர நெல் உயரும், நெல் உயரக் குடி உயரும்"

இவ்வாறு உயர்ந்த குடியாக, நீர் நாடாக சோழநாடு திகழ்கிறது அச்சோழநாட்டில் காவிரி பாய்ந்தோடும் பாதையெல்லாம் பூவிரியும், கோலத்தை விவரித்துரைக்கும் இப்பகுதி, வளங்கெழு திருநாடாம் சோழ நாட்டின் சிறப்பை, இயற்கை எழிலை நயம்பட படரச் செய்யும் பகுதியே நம் பாடப் பகுதி.

நூல் குறிப்பு :

தனியடியார் அறுபத்து மூவர் தொகையடியார் ஒன்பது பேர் என எழுபத்து இரண்டு சிவனடியார்களின் வரலாற்றைக் கூறும் நூல். பெருமை பெற்ற புராணம் என்னும் பொருளில் 'பெரியபுராணம்' என்னும் பெயர் பெற்றது.

'சுந்தரர்' இயற்றிய **'திருத்தொண்டத் தொகை'** அடியவர் பெருமையை ஓர் அடியில் கூறுகிறது. 'நம்பியாண்டார் நம்பி' எழுதிய **'திருத்தொண்டர் திருவந்தாதி'** ஒவ்வொரு பாடலிலும் அடியார்களின் சிறப்பைக் கூறுகிறது. இவ்விரண்டு நூல்களையும் அடிப்படையாகக் கொண்டு. சேக்கிழார் ஒவ்வொரு புராணத்திலும், ஒவ்வோர் அடியாராக, அறுபத்து மூவரின் சிறப்புகளையும், விளக்கிப் பாடியதே பெரிய புராணம் ஆகும். **'திருத்தொண்டர் புராணம்'** என்பதே பெருமை காரணமாக **'பெரியபுராணம்'** எனப் போற்றப்படுகிறது.

இந்நூல் வந்த வரலாறு :

- சுந்தரர் : திருத்தொண்டர் தொகை (11 பாடல்) முதல் நூல்
- நம்பியாண்டார் : திருத்தொண்டர் திருவந்தாதி (வழி நூல்) (89 பாடல்கள்)
- சேக்கிழார் : பெரியபுராணம் (சார்பு நூல்)

நூல் அமைப்பு :

இந்நூல் இரண்டு காண்டங்களையும் 13 சருக்கங்களையும் 4,286 பாடல்களையும் கொண்டுள்ளன.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

நூலின் சிறப்பு :

தில்லை நடராசப் பெருமான் 'உலகெலாம்' என அடியெடுத்துக் கொடுக்க பாடப்பெற்ற நூல், மகாவித்வான் மீனாட்சி சுந்தரனார், **'பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ'** என சேக்கிழாரையும், இந்நூலையும் பாராட்டியுள்ளார்.

திருநாட்டுச் சிறப்பு

பாடல் 1 - காவிரியில் புது வெள்ளம்

காவிரியின் புது வெள்ளத்தில், மலைப் பகுதியில் உள்ள புதிய மலர்கள் (பூக்கள்) அடித்து வரப்படுகின்றன. அப்பூக்களில் தேன் நிறைந்து இருப்பதால் அதனை உண்ண வண்டுகள் சூழ்ந்து ஆரவாரம் செய்கின்றன. நீர் நிலைகள் நிறைந்த நாட்டுக்கு வளத்தைத் தரும் பொருட்டுக் காவிரி நீர் கால்வாய்களில் பரந்து பாய்கிறது.

சொல்லும் பொருளும் :

மா	- வண்டு	மது	- தேன்	பொலி	- நிறைந்த
புனல்	- நீர்	வாவி	- பொய்கை	கால்	- கால்வாய்
ஆர்ப்ப	- ஆரவாரம்				

பாடல் 2 - வயல் வளம்

கால்வாய்களில், நீர் பரந்து பாய, வயலில் நாற்று நட்டனர். வளர்ந்த நாற்றின் முதல் இலை சுருள் விரிந்தது. அப்பருவத்தைக் கண்ட உழவர். இதுதான் களையெடுக்கும் பருவம் என்றனர். அவ்வாறே களைகளைக் களைந்து வயலை விட்டுச் செல்லும் உழத்தியரின் கால்களில் குளிர்ந்த முத்துக்களை ஈனும் சங்குகள் இடறின. அதனால் இடை தளர்ந்து, வண்டுகள் மொய்க்கும் மலரணிந்த கூந்தல் அசைய மென்மையாக நடந்து அருகில் உள்ள வரப்பினை அடைவர்.

முத்துக்களையும் ஈனும் வளம் கொண்டதாக வயல்வளம் காணப்பட்டது.

சொல்லும் பொருளும் :

வளர் முதல்	- வளர்ந்த (நாற்று பயிர்)	பணிலம்	- சங்கு
மடநடை	- மென்னடை	வண்டலையும்	- வண்டுகள் மொய்க்கும்
தரளம்	- முத்து	வரம்பு	- வரப்பு
கடைசியர்	- உழத்தியர்	குழல்	- கூந்தல்

பாடல் 3 - நீர்நாடு

காடுகளில் கழையாகிய கரும்புகள் உள்ளன. சோலைகளில் உள்ள செடிகளில் புதிய கிளைகள், புதிய துளிர்கள், புதிய அரும்புகள் தோன்றியுள்ளன.

கரிய குவளை மலர்கள் மலர்ந்து உள்ளன. வயல்கள் எங்கும் சங்குகள் கிடக்கின்றன. நீர்நிலைகளில், கரையோரங்களில் இள அன்னங்கள் நீந்துகின்றன. குளங்கள் எல்லாம் கடலைப் போல காட்சியளிக்கின்றன. அதனால் நாடு முழுவதம் 'நீர் நாடு' என்ற போற்றத் தக்கதாய் உள்ளது.

இத்தகு சிறப்புகளால் சோழநாடு பிறநாடுகளைவிட வளமும், சிறப்பும் பெற்றதாயிற்று.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

சொல்லும் பொருளும் :

கழை - கரும்பு
கா - சோலை
குழை - கிளை
அரும்பு - மொட்டு
நெருங்குவளை - நெருங்குகின்ற சங்கு
கோடு - குளக்கரை
ஒவ்வா - ஈடாகா
குவளை - குவளை மலர், சங்குப்பூ

பாடல் 4 - தோன்றி மறையும் வானவில்

அன்னங்கள் விளையாடும் அகலமான துறைகளைக் கொண்ட நீர் நிலைகளை உடையது சோழநாடு. அந் நீர்நிலைகளில் எருமைகள் வீழ்ந்து மூழ்கும். அதனால் அந்நீர் நிலையில் உள்ள வாளை மீன்கள் துள்ளி எழும். துள்ளி எழுந்த அம்மீன்கள் அருகில் உள்ள பாக்கு மரங்களின் மீது பாயும். மீன் வளைந்து நீர்த் திவலைகளுடன் பாக்கு மரத்தில் பாயும் இக் காட்சியானது.

'நிலையான வானத்தில் தோன்றி மறையும் வானவில்லைப் போன்று' விளங்குகின்றது.

சொல்லும் பொருளும் :

ஆடும் - நீராடும்
மேதி - எருமை
துதைத்து எழும் - கலக்கி எழும்
கன்னி வாளை - இளமையான வாளைமீன்
துன்னும் - மூழ்கும்
கமுகு - பாக்கு மரம்
வான்மிசை - வானத்தில்
மன் - நிலைத்த
பொய்கை - நீர்நிலை

பாடல் 5 - மலைபோல் குவிந்தவை

அறுவடை செய்யப்பட்ட செந்நெல்லின் சூடுகளை (நெல் அரிக்கட்டுகள்) அடுக்கிப் பெரிய போராகக் குவிப்பர் (வைக்கோற் போர்) நீர் நிலைகளில் மிகுதியாகப் பிடிக்கப்பட்ட பல வகை மீன்களையும் குன்றைப் போல் குவித்து வைத்திருப்பர். வளைந்த சங்குகள் ஈன்ற வெண் முத்துக்களையும் குன்றைப் போல் உயரமாய்க் கூட்டுவர். தேன் வடியும் மலர்ந்த மலர்த் தொகுதியையும் மலைபோல் குவித்து வைப்பர்.

இவ்வாறு செந்நெல், மீன்கள், சங்குகள் ஈனும் முத்துக்கள், மலர்கள் போன்றவை மலையெனக் குவிந்தன.

சொல்லும் பொருளும் :

சூடு - நெல் அரிக்கட்டு
வேரி - தேன்
பன்மீன் - பலவகை மீன்கள்
பொருப்பு - மலை
சுரிவளை - சங்கு
வெற்பு - குன்று
மலர்க்கற்றை - மலர்த் தொகுதி

பாடல் 6 - கருமேகம் சுழல்தல்

அரியப்பட்ட செந்நெல் கற்றைகளை குவித்து வைப்பர். குவித்த பெரிய மலை போன்ற போரை, மேலேயிருந்து சாய்ப்பர். பெரிய வண்டிகளைச் செலுத்தும் கருமையான எருமைக் கூட்டங்கள்,

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

வலமாகக் சுற்றிச் சுற்றி மிதிக்கும். இக்காட்சியானது, கரிய மேகங்கள் பொன்மலைச் சாரல் (உயர்ந்த மலை) மீது வலமாகச் சுற்றுகின்ற காட்சி போல உள்ளது. இத்தகு காட்சிகள் சோழநாட்டில் மிகுதியாகத் தோன்றும்.

இப்பாடலில் அமைந்துள்ள உவமை.

கருமையான எருமை – மேகம்

நெற்கட்டுப் போர் – பொன் மாலைச்சாரல்

சொல்லும் பொருளும் :

தடவரை – பெரிய மலை
பகடு – எருமைக்கடா
பாண்டில் – வட்டில் (வட்டம்)
சிமயம் – மலையுச்சி
முகில் – மேகம்
சாலிக்கற்றை – நெற்கற்றை
ஆலி – மழைநீர்
சூழும் – சுற்றும்

பாடல் 7 – மரங்களும் மலர்களும்

சோழ நாட்டில், காவிரி பாய்ந்து ஓடும் பாதையெல்லாம், தென்னை, செருந்தி, நறுமணமுடைய நரந்தம் போன்றவை உள்ளன. ஆச்சா மரம், அரசமரம், கடம்பமரம், பச்சிலை மரம், குளிர்ந்த மலரையுடைய குராமரம் போன்றவை எங்கும் வளர்ந்துள்ளன.

பெரிய அடிப்பாகத்தைக் கொண்ட பனையும், சந்தனம், குளிர்ந்த தன்மையுடைய நாகமரமும் செழித்து வளர்ந்துள்ளன.

நீண்ட இலைகளையுடைய, வஞ்சி, காஞ்சி மலர்கள் நிறைந்த கோங்கு முதலியவையும் எங்கெங்கும் செழித்து வளர்ந்துள்ளன.

இவ்வாறு சோழ மண்டலம் முழுவதும் சீர்மை பெற்றுக் காணப்படுகிறது.

சொல்லும் பொருளும் :

நாளிகேரம் – தென்னை
நரந்தம் – நாரத்தை
கோளி – அரசமரம்
சாலம் – ஆச்சாமரம்
தமாலம் – பச்சிலைமரம்
இரும்போந்து – பருத்த பனைமரம்
சந்து – சந்தனமரம்
நாகம் – நாகமரம்
காஞ்சி – ஆற்றுப்பூவரசு

இலக்கணக்குறிப்பு :

கருங்குவளை, செந்நெல் – பண்புத்தொகை
விரிமலர் – வினைத்தொகை
கடல் அன்ன – உவம உருபு
செய்வார் – வினையாலணையும் பெயர்
சொரிந்த முத்து – பெயரெச்சம்
நிறைமலர் – வினைத்தொகை
தடவரை – உரிச்சொல் தொடர்
வஞ்சி காஞ்சி – உம்மைத்தொகை
கா – ஓரெழுத்து ஒருமொழி
தண்மலர் – பண்புத்தொகை

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பகுபத உறுப்பிலக்கணம் :

1. பாய்வன - பாய் + வ் + அன் + அ

பாய்	-	பகுதி
வ்	-	எதிர்கால இடைநிலை
அன்	-	சாரியை
அ	-	பலவின்பால் வினைமுற்று விகுதி

2. வைப்பார் - வை + ப் + ப் + ஆர்

வை	-	பகுதி
ப்	-	சந்தி
ப்	-	எதிர்கால இடைநிலை
ஆர்	-	பலவின்பால் வினைமுற்று விகுதி

3. துதைந்து - துதை + த்(ந்) + த் + உ

துதை	-	பகுதி
த்(ந்)	-	சந்தி 'ந்' ஆனது விகாரம்
த்	-	இறந்தகால இடைநிலை
உ	-	வினையெச்ச விகுதி

4. கொண்டு - கொள்(ண்) + ட் + உ

கொள்	-	பகுதி
ள்	-	'ள்' ஆனது விகாரம்
ட்	-	இறந்தகால இடைநிலை
உ	-	வினையெச்ச விகுதி

5. சொரிந்த - சொரி + த்(ந்) + த் + அ

சொரி	-	பகுதி
த்(ந்)	-	சந்தி 'ந்' ஆனது விகாரம்
த்	-	இறந்தகால இடைநிலை
அ	-	பெயரெச்ச விகுதி

6. அசைவார் - அசை + வ் + ஆர்

அசை	-	பகுதி
வ்	-	எதிர்கால இடைநிலை
ஆர்	-	பலர்பால் வினைமுற்று விகுதி

7. இடறி - இடறு + இ

இடறு	-	பகுதி
இ	-	வினையெச்ச விகுதி

பாடநூல் வினாக்கள்

குறுவினா

1. நிலையான வானத்தில் தோன்றி மறையும் காட்சிக்குப் பெரியபுராணம் எதனை ஒப்பிடுகிறது?

பெரியபுராணத்தில் அழகாக திருநாட்டின் சிறப்பு வருணிக்கப்படுகிறது. அந்நாட்டின் நீர் நிலைகள் அன்னங்கள் விளையாடும் அகலமான படித்துறைகளைக் கொண்டன. அதில் எருமைகள் வீழ்ந்து முழ்கும். அதனால் நீர் நிலைகளிலுள்ள வாளைமீன்கள் துள்ளி எழுந்து அருகில் உள்ள பாக்குமரங்களின் மீது பாயும். இக்காட்சியானது வானத்தில் தோன்றிமறையும் வானவில்லைப் போன்று விளங்கும்.

நெடுவினா

1. பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

முன்னுரை :

சைவ சமயப் பெரியவர்களான சுந்தரரும் நம்பியாண்டார் நம்பியும் பாடிய சைவ அடியார்களின் வரலாற்றுக் குறிப்புகளின் விரிவான நூலே **பெரியபுராணம்** ஆகும். இதைப் பாடியவர் **சேக்கிழார்**. ஒவ்வொரு புராணத்திலும் ஒவ்வோர் அடியவராக அறுபத்து மூவர்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

சிறப்புகளைப் பாடியிருக்கிறார் "பக்திச்சுவை நுனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ" என்று இவரை மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாராட்டுவார். திருநாட்டுச் சிறப்பை இயற்கை வளத்துடன் விளக்கியிருக்கிறார் சேக்கிழார். அதை உற்று நோக்குவோம்.

காவிரிக் கால்வாய்கள் :

காவிரி நீர் மலையிலிருந்து தேன் நிரம்பிய பூக்களை அடித்துக்கொண்டு வருகிறது. அதை வண்டுகள் சூழ்ந்து ஆரவாரம் செய்கின்றன. நீர்நிலைகள் நிறைந்த நாட்டுக்கு வளம் தரும் பொருட்டுக் காவிரிநீர் கால்வாய்களில் எங்கும் பரந்து ஓடுகிறது.

உழத்தியரின் கால்களை இடறும் சங்குகள் :

நாற்றுகள் செழித்து வளர்ந்து செடிகள் ஆயின. முதல் இலை சுருள் விழுந்ததால் களை பறிக்கும் பருவம் வந்தது. களைகளைந்து செல்லும் உழத்தியர்களின் நூல்களில் முத்துக்களை ஈனும் சங்குகள் இடறின. அதனால் இடைதளர்ந்து வண்டுகள் மொய்க்கும் மலர்களையுடைய கூந்தல் அசையுமாறு வரப்பினைச் சென்று அடைந்தனர்.

சோழநாட்டுச் சிறப்பு :

காடுகளில் கரும்புகளும் சோலைகள் எங்கும் மலர் அரும்புகளும் உள்ளன. வயலின் ஓரங்களில் கரியகுவளை மலர்கள் மலர்ந்துள்ளன. வயல்களில் சங்குகள் கிடக்கின்றன. நீர்நிலைகளில் அன்னங்கள் உலவுகின்றன. குளங்கள் நிறைந்து கடலைப் போல் காட்சியளிக்கின்றன. நாடு முழுவதும் நீர் நாடு என்று சொல்லத்தக்க அளவில் வளமுடையது திருநாடு.

வாளை மீனும் வானவில்லும் :

அன்னங்கள் நீந்தி விளையாடும் நீர்நிலைகளில் எருமைகள் விழுந்து மூழ்கின. அதனால் அங்குள்ள வாளை மீன்கள் துள்ளி எழுந்து அருகிலுள்ள பாக்கு மரங்களின் மீது தாவிப் பாயும். இக்காட்சி வானத்தில் தோன்றி மறையும் வானவில்லைப் போன்றதாகும். அரிந்த செந்நெல்லின் சூடுகளைப் (நெற்கற்றை) பெரிய போராகக் குவிப்பர். பிடித்த மீன்களையும் குன்றைப் போல் குவித்து வைப்பர். பக்கத்திலேயே தேன் வழியும் மலர்த் தொகுதியை மலைபோல் குவித்து வைப்பர்.

மேகங்கள் தவழும் பொன்மலை :

மேலேயிருந்து நெற்கற்றைகளைச் சாயச் செய்து எருமைகள் பூட்டப்பட்ட வண்டிகளில் ஏற்றுவர் வலமாக சுற்றிச் சுற்றி மிதக்கும் இத்தோற்றமானது கரிய மேகங்கள் பொன்மலையின் மீது வலமாகச் சுற்றுகின்ற காட்சி போல் உள்ளது.

மரங்கள் அணிவகுப்பு:

நீர்வளம் நிரம்பிய அந்நாட்டின் தென்னை, செருந்தி, நரந்தம் ஒரு பக்கம், அரசமரம், கடம்பமரம், பச்சிலைமரம், குராமரம் வேறு ஒரு பக்கம், பெரிய அடிப்பாகம் உடைய பனை, சந்தனம், நாகம் வஞ்சி, காஞ்சி, கோங்கு முதலிய மரங்கள் அடர்ந்து செழிந்து வளர்ந்துள்ளன.

நீர்வளமும், நிலவளமுடைய திருநாடு காவிரிநீர் பாய்வதால் இயற்கைச் சூழல் நிறைந்த நாடாக விளங்குகிறது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடு.

அ) மாணிக்கவாசகர் - திருவாசகம்
ஆ) திருமூலர் - திருமந்திரம்
இ) சுந்தரர் - தேவாரம்
ஈ) சேக்கிழார் - திருவிளையாடற்புராணம்

விடை: ஈ) சேக்கிழார் - திருவிளையாடற்புராணம்

2. 'திருத்தொண்டர் திருவந்தாதி' பாடியவர் .....

அ) அபிராமி பட்டர் ஆ) சுந்தரர் இ) நம்பியாண்டார் நம்பி ஈ) சேக்கிழார்

விடை: இ) நம்பியாண்டார் நம்பி

3. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடுக்க.

அ) தரளம் - முத்து
ஆ) பணிலம் - சங்கு
இ) வேரி - தேன்
ஈ) சந்து - நெல்

விடை: ஈ) சந்து - நெல்

4. பொருத்துக.

1. நாளிகேரம் - i) அரச மரம்
2. கோளி - ii) நெல் அரிக்கட்டு
3. சூடு - iii) தென்னை
4. கழை - iv) கரும்பு

அ) 1. ii 2. iv 3. i 4. iii ஆ) 1. iii 2. iv 3. i 4. ii
இ) 1. iii 2. i 3. ii 4. iv ஈ) 1. iv 2. iii 3. i 4. ii

விடை: இ) 1. iii 2. i 3. ii 4. iv

5. வரிசைப்படுத்துக.

1. காவிரி நீர் கால்வாய்களில் பரந்து ஓடுகிறது.
2. காவிரி நீர் மலையிலிருந்து புதிய பூக்களை அடித்துக்கொண்டு வருகிறது.
3. வண்டுகள் சூழ்ந்து ஆரவாரம் செய்கின்றன.
4. பூக்களில் தேன் நிறைந்துள்ளது.

அ) 1, 2, 3, 4 ஆ) 4, 2, 1, 3 இ) 2, 1, 4, 3 ஈ) 2, 4, 3, 1

விடை: ஈ) 2, 4, 3, 1

6. பொருந்தாத கவிஞரைத் தேர்ந்தெடு.

அ) ஆண்டாள் ஆ) காரைக்காலம்மையார்
இ) திருஞானசம்பந்தர் ஈ) சேக்கிழார்

விடை: ஆ) காரைக்காலம்மையார்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

நிரப்புக

7. பெரிய புராணத்தில் 'திருநாடு' எனக் குறிப்பிடப்படுவது .....விடை : சோழ நாடு

8. திருத்தொண்டத் தொகை பாடியவர் ..... விடை : சுந்தரர்

9. திருத்தொண்டர் திருவந்தாதி இயற்றியவர் ..... விடை : நம்பியாண்டார் நம்பி

10. சேக்கிழார் வாழ்ந்த காலம் ..... விடை : கி.பி. 12ம் நூற்றாண்டு

11. 'பக்திச்சுவை நனி சொட்டச்சொட்டப் பாடிய கவி வலவ' என யார் யாரைப் போற்றியது?
விடை : மீனாட்சி சுந்தரம்பிள்ளை, சேக்கிழாரை

12. மகாவித்வான் எனப் போற்றப்படுபவர் ..... விடை : மீனாட்சி சுந்தரம்பிள்ளை

13. **பொருத்துக :**

சொல்		மரத்தின் பெயர்
1. நாளிகேரம்	- அ)	ஆற்றுப்பூவரசு
2. சந்து	- ஆ)	தென்னை
3. காஞ்சி	- இ)	அரசமரம்
4. கோளி	- ஈ)	பருத்த பனைமரம்
5. சாலம்	- உ)	சந்தனமரம்
6. இரும்போந்து	- ஊ)	ஆச்சாமரம்

விடை : 1.ஆ 2.உ 3.அ 4.இ 5.ஊ 6.ஈ

14. நீர்நாடு எனப் போற்றப்படும் நாடு ..... விடை : சோழநாடு

15. குலோத்துங்க சோழன் அவையில் தலைமை அமைச்சராக இருந்தவர் .....
விடை : சேக்கிழார்

16. சங்கு, முத்து - எனும் பொருள் தரும் சொற்கள் முறையே ..... விடை : பணிலம், தரளம்

குறுவினா

1. காவிரிக் கால்வாய்களின் சிறப்பாக பெரிய புராணம் கூறும் கருத்துகளைக் கூறுக.

காவிரி நீர் மலையிலிருந்து தேன் நிரம்பிய பூக்களை அடித்துக்கொண்டு வருகிறது. அதை வண்டுகள் சூழ்ந்து ஆரவாரம் செய்கின்றன. நீர்நிலைகள் நிறைந்த நாட்டுக்கு வளம் தரும் பொருட்டுக் காவிரிநீர் கால்வாய்களில் எங்கும் பரந்து ஓடுகிறது.

2. சோழ நாட்டின் சிறப்புகளாக பெரிய புராணம் கூறுவன யாவை?

காடுகளில் கரும்புகளும் சோலைகள் எங்கும் மலர் அரும்புகளும் உள்ளன. வயலின் ஓரங்களில் கரியகுவளை மலர்கள் மலர்ந்துள்ளன. வயல்களில் சங்குகள் கிடக்கின்றன. நீர்நிலைகளில் அன்னங்கள் உலவுகின்றன. குளங்கள் நிறைந்து கடலைப் போல் காட்சியளிக்கின்றன. நாடு முழுவதும் நீர் நாடு என்று சொல்லத்தக்க அளவில் வளமுடையது திருநாடு.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கற்பவை கற்றபின்

பக்கம்: 43

1. மூச்சு விடும் மரம், புரட்டிப் போட்ட புயல், இசை பாடும் பறவைகள், பனித்துளியில் தெரியும் பனை, என் இனிய கனவு போன்ற தலைப்புகளில் பள்ளி இலக்கிய மன்றத்தில் கவிதை படிக்க.

பள்ளி இலக்கிய மன்றத்தில் கவிதை படித்தல்

மூச்சு விடும் மரம்	புரட்டிப் போட்ட புயல்
கார்பன் டை ஆக்சைடை உட்கொண்டு ஆக்சிஜனை வெளியேற்றும் எனக்கே மூச்சுத் திணறல்..... சுற்றுச்சூழலை சமனிலைப்படுத்தும் எனக்கே திணறினால் மக்கள்..... ஐயோ ..... விழித்துக் கொள்ளுங்கள் மானிடரே.....!	அட்லாண்டிக் கடலின் மிகப் பெரும் சூறாவளி 'வில்மா' அமெரிக்கப் புயல் 'கத்ரினா' நியூ ஆர்லியன்சைப் புரட்டிப் போட்ட 'ரீடா', 'ஆல்பா' தமிழகத்தை கலக்கிய கஜா புயலின் சீற்றம் கனமழை ..... இயற்கையைச் சீண்டாதீர்கள்! அது திருப்பி அடித்தால் தாங்க முடியாது ஒரு செடியாவது நடுங்கள்!!
இசைபாடும் பறவைகள்	**பனித் துளியில் தெரியும் பனை**
பழமுதிர்ச் சோலை பசுமை நிறைந்த மரங்கள் மரங்கள் தோறும் பறவைகள் பறவைகள் பலவிதம்! ஒவ்வொன்றும் தனிரகம்!! பேசும் பறவைகள் பாடும் ராகங்கள் பறவைகளின் மொழிகளை மொழிபெயர்க்க முடியுமா?	தமிழனின் அறிவியல் சிந்தனை கலிலியோ சிந்தனையுடன் கலந்து போகிறது. கபிலரும் கலிலியோவும் இணைந்தனர். ஒளியைக் கோட்டமடையச் செய்து தொலைவில் உள்ள பொருளின் உருவத்தை அண்மையில் காட்டலாம் என்றார் கலிலி தினையளவு போதாச் சிறுபுல் நீர் நீண்ட பனையளவு காட்டும் என்றார் கபிலர்.
என் இனிய கனவு	
அன்றிரவு ஆழ்ந்த நித்திரையில் விரிந்த கனவுகள் போதுமான மழை அகன்ற ஆறு குளங்களில் நீர் வரத்து எங்குப் பார்த்தாலும் வானத்தைத் தவிர அனைத்தும் பச்சை பூமியைக் கழுவிவிட்டது போல் பளிச் சென்ற பார்வை எல்லோரும் இன்புற்றிருக்க கனவு ஒன்று கண்டேன்.	

2. கவிதையின் விவரிப்பை உரைநடையில் எழுதுக.

வானகமே, இளவெயிலே, மரச்செறிவே, நீங்களெல்லாம்
கானலின் நீரோ? - வெறுங்காட்சிப் பிழைதானோ?
போன தெல்லாம் கனவினைப்போல் புதைந்தழிந்தே
போனதனால் நானும் ஓர் கனவோ? - இந்த
ஞாலமும் பொய்தானோ? - பாரதியார்

பாடல் கருத்து:

வானகமே, வானில் தோன்றும் சூரியன் வெளிப்படுத்தும் இளவெளிலே, மரக்கூட்டங்களே, நீங்கள் கானல் நீர் அல்ல ..... கடவுளின் படைப்புகள். நீங்கள் வெறும் காட்சிப் பிழைகள் இல்லை. உண்மை வடிவம். ஆனால் வாழ்வின் கனவுகள் கனவைப் போலவே ..... அழிந்து போனதால் நானும் அழிந்துபோகும் கனவா ..... இந்த நிலவுலகமும் பொய்யாகுமோ?

※※⁂⁂⁂※※

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கவிதைப் பேழை

இயல் இரண்டு

புறநானூறு

2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம் சங்ககாலம் எனப்படும். சங்ககாலத்தில் எழுந்த நூல்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகும். இந்த பதினெட்டு நூல்களும் பதினெண் மேற்கணக்கு நூல்கள் எனவும் அழைக்கப்படும்.

எட்டுத் தொகை நூல்களாவன:

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பவை ஆகும்.

இவற்றுள் புறம், சார்ந்த நூல்கள் இரண்டு. அவை பதிற்றுப்பத்து, புறநானூறு.

நூல் குறிப்பு :

புறம் என்றும், புறப்பாட்டு என்றும் அழைக்கப்பெறுவது புறநானூறு. இதனை புறம் + நான்கு + நூறு எனப் பிரிக்கலாம். இந்நூலுக்கு கடவுள் வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். இந்நூலைத் தொகுத்தவர், தொகுப்பித்தவர் அறியப்படவில்லை. இந்நூலின் கண் 11 புறத்திணைகளும், 65 துறைகளும் கையாளப்பட்டுள்ளன.

நூல் உணர்த்தும் செய்தி :

புறநானூறு, பண்டைய வேந்தர்களின் வீரம், வெற்றி, கொடை, ஆட்சிச் சிறப்பு, செங்கோன்மை குறித்தும், குறுநில மன்னர்கள், புலவர்கள், சான்றோர்கள், கடையெழு வள்ளல்கள், சேனைத் தலைவர்கள் உள்ளிட்டோர் பெருமைகளைப் பற்றியும், அன்றைய மக்களின் நாகரிகம், பண்பாடு, வாழ்வியல் நெறிகள் போன்ற புறவாழ்வைப் பற்றியும் கூறுகிறது.

இந்நூல் பண்டைத் தமிழரின் வாழ்வியல் சிந்தனைக் கருவூலமாகவும் அரிய வரலாற்றுச் செய்திகள் அடங்கிய பண்பாட்டுக் கருவூலமாகவும் திகழ்கிறது.

நூலின் சிறப்பு :

ஜி.யு.போப் அவர்களுக்குத் தமிழ்ப்பற்று ஏற்பட காரணமாய் இருந்த நூல்களுள் ஒன்று இது. இந்நூலின் உள்ள சில பாடல்களை அவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

ஆசிரியர் குறிப்பு :

நம் பாடப்பகுதியில் உள்ள 'வான் உட்கும்' பாடலை இயற்றியவர் குடபுலவியனார். 'புலவியன்' என்பது இவரது இயற்பெயர் 'குடபுலம்' எனும் நாட்டுப் பகுதியில் இருந்து வந்தவர். 'இயனார்' என்னும் இசைக்கருவி முழக்கும் மரபில் வந்தவர் எனவே, 'குடபுலவியனார்' என அழைக்கப் பெற்றார்.

திணை – பொதுவியல் திணை :

விளக்கம் : வெட்சி முதல் பாடாண் திணை முடிய உள்ள புறத்திணைகளுக்கெல்லாம் பொதுவான செய்திகளையும், அத்திணைகளுக்குள் முன்னர் விளக்கப்படாத செய்திகளையும் எடுத்துக் கூறுவது பொதுவியல் திணை எனப்படும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

துறை : பொருண்மொழிக் காஞ்சித் துறை

விளக்கம் : எரிந்திலங்கு சடைமுடி முனிவர் புரிந்து கண்ட பொருள் மொழிந்தன்று என்பது பொருண்மொழிக் காஞ்சித் துறையை விளக்கும் நூற்பா ஆகும். மெய் உணர்ந்த சான்றோர்களும், முனிவர்களும் தங்கள் மெய்யறிவால் ஆராய்ந்து. தெளிந்த வாழ்வியல் உண்மைப் பொருளையும், நிலையாமைத் தத்துவத்தையும் பிறர்க்குப் பயன்படுமாறும், புரிந்து கொள்ளுமாறும் எடுத்துரைப்பது பொருண்மொழிக் காஞ்சித்துறை ஆகும்.

இம்மை, மறுமைக்கான உறுதிப் பொருளைக் கூறுவதும் இத்துறையின் நோக்கம் ஆகும்.

நுழையும் முன் :

நிலம், நீர், காற்று என்பவை மனிதனின் அடிப்படைத் தேவைகள் ஆகும். இயற்கை நமக்குக் கொடையாக தந்திருக்கும் இவற்றை உரிய முறையில் பேணிக் காக்க வேண்டும் என்றும். நம் முன்னோர்கள் நீர்நிலைகளை உருவாக்குபவர்களை 'உயிரை உருவாக்குபவர்கள்' என்றும் போற்றினர்.

இக்கருத்தை உணர்ந்து, நாட்டை ஆளும் மன்னன் செயல்பட வேண்டும் என்பதை உணர்த்த விரும்பிய புலவர் குடபுலவியனார் 'பாண்டிய நெடுஞ்செழியனைப்' பாடும் பாடலில் நீர்நிலைகளை உருவாக்கி, உயிரைப் பேணி இம்மை, மறுமைப் பயன்களைப் பெற்று நீடு வாழ்க எனக் கூறும் பாடல் இது.

பாடலின் பொருள் :

விண்ணை முட்டும் திண்ணென்ற உறுதியுடைய உயர்ந்த மதிலைக் கொண்ட வளம் பொருந்திய பழமையான ஊரின் தலைவனே! வலிமை மிக கொண்ட வேந்தனே! நீ இம்மையில் மட்டுமல்ல, மறுமை இன்பத்தை அடையவும், உலகம் வெல்லும் விருப்பம் நிறைவேறவும், நிலையான புகழைப் பெறவும் ஆகிய மூவகை இன்பங்களையும் பெறவிரும்பினால், என்னவெல்லாம் நீ செயலாற்ற வேண்டும் என கூறுகிறேன் கேட்பாயாக.

உலகில் உள்ள அனைத்து ஆற்றல், செல்வம், நல்லாட்சி, புகழ் என யாவற்றையும் மிகுதியாகக் கொண்டு விளங்கும் பாண்டியன் நெடுஞ்செழியனே! நீர் இன்றி அமையாத உடல் உணவால் அமைவது ஆகும். உணவையே முதன்மையாகவும் உடையது. எனவே உணவு தந்தவர் உயிரைத் தந்தவர் ஆவார்.

உணவு எனப்படுவது நிலத்துடன் நீரும் ஆகும். நிலத்தையும், நீரையும் ஒன்று சேர்த்தவர். இவ்வுலகில் உடலையும், உயிரையும் ஒன்று சேர்த்தவர் ஆவார்.

நெல் முதலிய தானியங்களை விதைத்து விட்டு, அத்தானியங்களை விளையச் செய்ய வான் இறங்கி மழை தரவில்லையென்றால் அந்நில உலகை ஆளும் அரசனின் முயற்சியும், செயலும் சிறிதும் உதவாது. யார் ஆண்டாலும் பேரும், புகழும், மக்கள் இன்பமும் பெறல் ஆகாது. அதனால் நான் கூறும் மொழிகளை இகழாது கடைபிடிப்பாயாக. நிலம் குழிந்த இடங்கள் தோறும் நீர் நிலைகளைப் பெருகச் செய்வாயாக. அவ்வாறு நிலத்துடன் நீரை நீ கூட்டினால்,

- மறுமை இன்பத்தை அடைதல்.
- உலகு முழுவதையும் வென்று தனி ஆட்சி அமைத்தல்.
- வாடாத நிலையான புகழ் மாலை பெறுதல்.

ஆகிய மூவகை இன்பங்களையும் பெற்று இவ்வையத்தில் வாழ்வாங்கு வாழலாம் என்ற தத்துவத்தை பாண்டியன் நெடுஞ்செழியனுக்குப் குடபுலவியனார் கூறுகிறார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

சொல்லும் - பொருளும் :

யாக்கை - உடம்பு
புணரியோர் - தந்தவர்
புன்புலம் - புல்லியநிலம்
தாட்கு - தாள் - முயற்சி ஆளுமை
(தாள் ஆற்றித் தந்த பொருள், குறள் ஒப்புநோக்கு)
'தள்ளாதோர் இவண் தள்ளா தோரே' தள்ளாதோர் - குறைவில்லாது நீர்நிலை அமைப்பவர்கள் குறைவில்லாத புகழுடையவர்களாக விளங்குவார்கள்

இலக்கணக் குறிப்பு :

மூதூர், நல்லிசை, புன்புலம் - பண்புத்தொகைகள்
நிறுத்தல் - தொழிற்பெயர்
அமையா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
நீரும் நிலமும், உடம்பும் உயிரும் - எண்ணும்மைகள்
அடுபோர் - வினைத்தொகை
கொடுத்தோர் - வினையாலணையும் பெயர்

பகுபத உறுப்பிலக்கணம் அறிக :

1. நிறுத்தல் = நிறு + த் + தல்
   - நிறு - பகுதி
   - த் - இறந்தகால இடைநிலை
   - தல் - தொழிற்பெயர் விகுதி

2. கொடுத்தோர் = கொடு + த் + த் + ஓர்
   - கொடு - பகுதி
   - த் - சந்தி
   - த் - இறந்தகால இடைநிலை
   - ஓர் - பலர்பால் வினைமுற்று விகுதி

பாடநூல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. மல்லல் மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
   அ) மறுமை ஆ) பூவரசுமரம் இ) வளம் ஈ) பெரிய
   விடை : இ) வளம்

குறுவினா

1. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே - குறிப்பு தருக.

நீர் இன்றி அமையாத உடல் உணவால் அமைவது; உணவையே முதன்மையாவும் உடையது. எனவே உணவு தந்தவர் உயிரைத் தந்தவர் ஆவர். இதைக் குடபுலவியனார், பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாடும் புறநானூற்றுப் பாடலில் இதைத் தெரிவிக்கிறார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

சிறுவினா

1. நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?

நிலம் குழியான இடங்கள் தோறும் நீர்நிலையைப் பெருகச் செய்தல் வேண்டும். அவ்வாறு நிலத்துடன் நீரைச் சேர்த்துப் பயன்பாட்டுக்குக் கொண்டுவந்தோர் மூவகை இன்பத்தையும் நிலைத்த புகழையும் பெறுவர்.

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. பொருந்தாததைத் தேர்ந்தெடு.

அ) உண்பது நாழி உடுப்பவை இரண்டே ஆ) உணவெனப் படுவது நிலத்தொடு நீரே

இ) உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே

ஈ) உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே

விடை: ஈ) உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே

2. பொருத்துக.

அ) யாக்கை - i) பழைமை

ஆ) தாட்கு - ii) உடம்பு

இ) வளமை - iii) முயற்சி

விடை: அ) ii ஆ) iii இ) i

3. பண்டையத் தமிழர்களின் வரலாறு அடங்கிய பண்பாட்டுக் கருவூலம் .....

அ) நற்றிணை ஆ) ஐங்குறுநூறு இ) கலித்தொகை ஈ) புறநானூறு

விடை: ஈ) புறநானூறு

நிரப்புக

4. நீர் இன்றி அமையாதது ..... **விடை: உடல்**

5. உணவு எனப்படுவது நிலத்துடன் ..... ஆகும். **விடை: நீரும்**

6. உணவைத் தந்தவர் ..... தந்தவர் ஆவர். **விடை: உயிர்**

7. பண்டைத் தமிழர்களின் அரிய வரலாற்றுச் செய்திகளடங்கிய பண்பாட்டு கருவூலமாகத் திகழும் நூல் ..... **விடை: புறநானூறு**

8. தாட்கு என்ற சொல்லின் பொருள் **விடை: முயற்சி**

குறுவினா

1. 'புறநானூறு' குறிப்புத் தருக.

- எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று.
- பண்டைய வேந்தர்களின் வெற்றி, வீரம், கொடை, குறித்தும் குறுநில மன்னர்கள், புலவர்கள், சான்றோர்கள் பெருமைகளைக் கூறும் நூல்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

- பண்டைய கால மக்களின் புறவாழ்க்கையைப் பற்றிக் கூறும் நூல்.
- பண்டைய தமிழரின் வரலாற்றுப் பண்பாட்டுக் கருவூலம்
- மன்னர்கள், பெண்பாற் புலவர்கள் போன்றவர்களாலும் பாடப்பெற்றது.

2. 'பொதுவியல் திணை' - விளக்குக.

வெட்சி முதலான புறத்திணைகளுக்கெல்லாம் பொதுவான செய்திகளையும் முன்னர் விளக்கப்படாத செய்திகளையும் கூறுவது பொதுவியல் திணையாகும்.

3. முதுமொழிக் காஞ்சித் துறையை விளக்குக.

அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருளினது உறுதி தரும் தன்மையைக் கூறுதல் முதுமொழிக் காஞ்சித் துறையாகும்.

5. மூவகை இன்பங்களாக குடபுலவியனார் கூறுவன யாவை?

- இம்மைக்கு மட்டு மின்றி மறுமை இன்பம்
- உலகையே வெல்லும் ஒரு தனி ஆட்சி
- வாடாத புகழ்மாலை இவையே மூவகை இன்பங்கள் ஆகும்.

கற்பவை கற்றபின்

பக்கம்: 46

1. பின்வரும் புறநானூற்றுத் தொடர்களுக்கான பொருளைப் பள்ளி நூலகத்திற்குச் சென்று அறிந்து எழுதுக.

அ) உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே! (புறம் - 18)

பாடியவர்	:	குடபுலவியனார்
பாடப்பட்ட அரசன்	:	பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்
திணை	:	பொதுவியல்
துறை	:	முதுமொழிக்காஞ்சி
பொருள்	:	உணவைக் கொடுத்தவர் உயிரைக் கொடுத்தவர் ஆவர்.

ஆ) உண்பது நாழி, உடுப்பது இரண்டே! (புறம் - 189)

பாடியவர்	:	மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்
திணை	:	பொதுவியல்
துறை	:	பொருண்மொழிக்காஞ்சி
பொருள்	:	உண்ணப்படும் பொருள் நாழி (உழக்கு) அளவாகும். உடுக்கப்படும் உடை மேலே ஒன்றும் இடையிலே ஒன்றுமாக இரண்டேயாகும்.

இ) யாதும் ஊரே யாவரும் கேளிர்! (புறம் - 192)

பாடியவர்	:	கனியன் பூங்குன்றனார்
திணை	:	பொதுவியல்
துறை	:	பொருண்மொழிக் காஞ்சி
பொருள்	:	எங்களுக்குஎல்லாஊர்களும்எம்ஊர்களாகும்.எல்லாரும்உறவினர்களேஆவர்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

ஈ) சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே! (புறம் - 312)
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே!

பாடியவர்	:	பொன் முடியார்
திணை	:	வாகை
துறை	:	மூதின்முல்லை
பொருள்	:	பெற்ற வளர்த்த மகனை நற்பண்புகள் நிறைந்தவனாக ஆக்குவது தந்தையின் கடமை. நல்லொழுக்கத்தைக் கற்பிப்பது நாடாளும் வேந்தனின் கடமை

உ) உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும், (புறம் - 183)
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே!

பாடியவர்	:	பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்
திணை	:	பொதுவியல்
துறை	:	பொருண்மொழிக் காஞ்சி
பொருள்	:	ஒருவன் தன் ஆசிரியர்க்குத் துன்பம் நேர்ந்த விடத்து அவர்க்கு உதவி செய்தும், மிக்க பொருளைத் தந்தும் அவர்க்கு வழிபாடு செய்யும் தன்மையை வெறுக்காமலும் கற்பது நலம்.

2. "உணவாகும் மழை" என்னும் தலைப்பில் விளக்கக் குறிப்புகளுடன் கூடிய படத்தொகுப்பை உருவாக்குக.

<table>
<tr>
<td> 
மழையால் காடுகள் மற்றும் மலைப்பகுதிகள் செழிக்கின்றன. காய்கள், கனிகள் அவற்றால் பெருகுகின்றன.</td>
<td> 
ஊட்டச்சத்து மிக்க கீரைகள், பயிறு மற்றும் பருப்பு வகைகள் மழையால் நன்கு வளர்ந்து, நீண்டநாள் நலத்துடன் வாழ நல்லுணவைத் தருகின்றன.</td>
</tr>
<tr>
<td>  </td>
<td>நோயற்ற வாழ்வு வாழ
அறுசுவை உணவு அவசியம்.
அதனை அளிப்பது மழையே!</td>
</tr>
</table>

※※⁂⁂⁂※※

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

விரிவானம்

இயல் இரண்டு

தண்ணீர்

கந்தர்வன்

பாடநூல் வினாக்கள்

நெடுவினா

1. 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

தண்ணீர் - கந்தர்வன்

முன்னுரை :

"நாகலிங்கம்" என்னும் இயற்பெயரைக் கொண்ட கந்தர்வன் அவர்கள் சமூக அவலங்கள், மானுட பிரச்சனைகளை மையமாகக் கொண்டு கதை புனைவதில் வல்லவர். "சாசனம்", "ஒவ்வொருகல்லாய்", "கொம்பன்" முதலிய வரிசையில் "தண்ணீர்" சிறுகதையும் சமூக நிலையை எடுத்துக் காட்டும் கதையாக உள்ளது.

குடிநீரற்ற ஊரின் நிலை :

தனிமனிதனின் அடிப்படைத் தேவையான குடிநீருக்கே அல்லாடும் ஒரு சிற்றூர் அது. அவ்ஊருக்கும் இயற்கைக்கும் நிரந்தரப்பகை, புயல் வந்தால் 3 நாட்கள் வெள்ளக்காடாய் இருக்கும் நான்காவது நாள் தண்ணீரற்ற நிலமாய் மாறி விடும். பெண்கள் தலையிலும், இடுப்பிலுமாகக் குடங்களைக் கொண்டு பிலாப்பட்டி வரை சென்று ஊற, ஊற நீர் எடுத்து வரும் அவலநிலைதான் இருந்தது.

பல்லாண்டுகளுக்குமுன் உலகம்மன் கோயில் கிணறு மட்டும் கொஞ்சம் தண்ணீர் தந்து கொண்டிருந்தது. இப்போது அதுவும் தூர்ந்து பாழுங்கிணறாய் மாறி விட்டது. எல்லாமே பூண்டற்று போய் விட்டன.

எங்காவது கிணறு தோண்டினாலும் கடல் தண்ணீரைவிட ஒரு மடங்கு கூடுதலாக உப்பு, கிணற்று நீரிலே உப்பளம் போடலாம்; குடலை வாய்க்குக் கொண்டு வரும் உவர்ப்பாகவே இருந்தது. இதுவே 'தண்ணீர்' கதையில் இடம் பெற்றுள்ள ஊரின் நிலை.

இரயிலின் வருகையும் மக்கள் ஓட்டமும் :

இப்படிப்பட்ட வறண்ட ஊருக்கு வரப்பிரசாதமாய், தினமும் வரும் பாசஞ்சர் இரயில் அமைந்தது. இரயில் 3 கி.மீட்டருக்கு முன்பே அருவமாய் எழுப்பும் ஊதல் ஒலி கேட்டு, மக்கள் ஓட்டமும் நடையுமாய் இரயில் நிலையம் செல்வர்.

அந்த இரயிலில் வரும் நீருக்காக ஓடுவர். ஒருவரையொருவர் இடித்தும், பிடித்தும் முறைத்தும் முந்திக் கொண்டு இடம் பிடிக்க ஓடுவார்கள். இடம் பிடிக்க இயலாத பெண்கள் சுவரில் சாய்ந்து நின்று கொண்டு எகத்தாளம் பேசுவர். ஸ்டேஷன் மாஸ்டர் மிரட்டியும் கூட்டம் அடங்காது. இந்த இரயிலை விட்டால் பிலாப்பட்டிக்குத்தான் ஓட வேண்டும் என்பதால் முண்டியடித்து இரயில் பெட்டிக்குள் ஏறினர்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

இந்திராவின் கனவு :

அந்த ஊரில் இருந்த இளம்பெண் இந்திராவும், இக்கூட்டத்தில் ஒருத்தியாக நின்று, தன்னை வேறு ஓர் ஊரில் உள்ளவருக்குத்தான் திருமணம் பேசப் போவது போலவும், இந்த தண்ணியில்லா ஊரில் உள்ள எவனுக்கும் தலை நீட்டக் கூடாது என்றும் கனவு கண்டு கொண்டே இரயில் பெட்டிக்குள் நுழைந்தாள்.

இந்திரா தண்ணீர் பிடித்தல் :

பயணிகள் இறங்குவதற்கு முன்பாகவே இந்திரா பெட்டிக்குள் பாய்ந்து, முகம் கழுவும் பேசின் குழாயை அழுத்தி வேக, வேகமாக அரைச் செம்பும், கால்செம்புமாக பிடித்துக் குடத்தில் ஊற்றினாள், சனியன், பீடை பிடித்த குடம் நிறைகிறதா என்று சலித்துக் கொண்டே குழாயை மேலும் அழுத்தினாள். இன்னும் குடம் நிறையவில்லை.

இன்ஜினின் ஊதல் ஒலி வந்தது அம்மா, சொட்டுத் தண்ணியில்லை என்று முனகியதே ஞாபகம் வந்தது. இன்னும் பிடித்துக் கொண்டே இருந்தாள் இரயில் நகர்ந்தது.

இந்திரா எங்கே :

சினை ஆட்டைப் பார்த்தபடி கணக்குப் போட்டுக் கொண்டிருந்த இந்திராவின் தந்தையிடம் இந்திரா வரவில்லை இரயில் போயிருச்சு என்று சொல்லப்பட்டது.

எல்லாம் பதற்றத்துடன் அண்ணான் வீடு, தம்பி வீடு, இராமநாதபுரம் பஸ்ஸில் ஏறி இரயில் நிலையம் சென்றபோது இராமநாதபுரம் இரயில் நிலையத்தில் ஈ, எறும்பு கூட இல்லை. குடத்துடன் ஒரு பெண் வந்தாளா என்று அறிந்த, தெரிந்த இடம் பூராவும் தேடியும் இந்திரா எங்கும் கிடைக்கவில்லை.

தாயின் துயரம் :

“எம் புள்ள தண்ணி புடிக்கப் போயி எந்த ஊரு தண்டவாளத்துல விழுந்து கிடக்கோ” என அடக்க முடியாமல் ஓடினாள் இந்திராவின் தாய். ஊர் ஜனமும் பின்னால் ஓடியது. தாய் தண்டவாளத்திலே ஓட ஆரம்பித்தாள்.

தூரத்தில் புள்ளியாய் ஓர் உருவம் அதோ இந்திரா! தந்தை கேட்டார். பயபுள்ள, இத்தன மைலு இந்த தண்ணியையுமா சொமந்துகிட்டு வந்த. இந்திரா சொன்னாள் பின்ன! நாளைக்கு வரைக்கும் குடிக்க என்ன செய்ய.

கதை உணர்த்தும் கருப்பொருள் :

இச்சிறுகதை “நீரின்றி அமையாது உலகு” என்னும் கருத்தை வலியுறுத்துகிறது. 21-ஆம் நூற்றாண்டை எட்டிப்பிடித்துள்ள இன்றைய நிலையில், குடிநீர் நெருக்கடி உச்சத்தில் இருப்பதையும், சிற்றூர்களின் மக்களின் வாழ்க்கை ஒரு வாய் தண்ணீருக்குக் கூட வழியற்றதாய், சிக்கல் நிறைந்ததாகவே இருக்கிறது என்பதை படிப்போர் நெஞ்சில் உணர்த்தும் வகையில் ‘கந்தர்வன்’ எழுதியுள்ளார்.

“சிற்றூரின் தேவைகள் இன்றளவும்
நிறைவு செய்யப்படுவதில்லை.”

முடிவுரை :

“உயிர் நீர்” எனப்படும் தண்ணீர் தேவையை, அது இல்லா ஊரின் அவலத்தை இச்சிறுகதை மூலம் உணர்ந்த நாம்,

“நீர் மேலாண்மையை கட்டமைப்போம்
மழைநீர் சேகரிப்போம்.”

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கற்பவை கற்றபின்

பக்கம்: 51

1. உலகில் நீர் இல்லை என்றால் என்னவெல்லாம் நடக்கும் என்பதைக் கற்பனை செய்து உங்கள் கருத்துகளை வகுப்பறையில் பகிர்ந்து கொள்க.

கற்பனைக் கதை

முன்னுரை :

'நீர் இன்று அமையாது உலகு' என்று அறுதியிட்டுக் கூறினார் திருவள்ளுவர். நம்முன்னோரின் வாழ்க்கைக் களஞ்சியமாம் இலக்கியங்களும் இதையே வலியுறுத்தி வந்தன. இன்று நீர் நெருக்கடி உச்சத்தைத் தொட்டிருக்கிறது. நீர் இல்லை என்றால் என்ன நடக்கும் என்பதை இங்கு சிந்திக்கலாம்.

உலகிலும்உடலிலும்மூன்றுபகுதிநீர்உள்ளது.ஆனால்வாழும்மக்களுக்குப்போதியளவு நீர் கிடைக்காமல் போராடும் நிலையுள்ளது. மழையே உணவாகும் உணவுப்பொருட்களை விளைவித்துத் தருவதற்கும் பயன்படுகிறது என்று வள்ளுவப் பெருந்தகை கூறுகிறார். ஒரு கிலோ அரிசி பெற 2700 லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. விளை நிலங்கள் வீட்டு மனைகள் பயன்பாடுகள் பெருகப் பெருக வானம் வறண்டு கொண்டே இருக்கிறது. பருவ மழை பெய்யாமல் பொய்த்துப் போகிறது. ஓசோன் படலத்தில் ஓட்டை விழுகிறது. வெப்பம் அதிகரித்துக் கொண்டே போகிறது. நிலத்தடி நீர் வற்றிக் கொண்டு இருக்கிறது.

தண்ணீர் விற்பனைக்கே :

"தாகத்திற்குத் தண்ணீர் விலை கொடுத்து வாங்கும் நிலை வந்தபோதே தண்ணீர் மக்களின் தேவைக்கல்ல" என்ற நிலை வந்துவிட்டது, இந்தியாவில் உள்ள மாநிலங்களில் தண்ணீர்ப் பற்றாக்குறை அதிகம் உள்ள மாநிலம் தமிழ்நாடுதான். தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய பிற மாநிலங்களை எதிர்பார்க்கும் நிலை உள்ளது. நாடுகளை நதிகள் இணைக்கின்றன. ஆனால் தண்ணீரால் மாநிலங்களை இணைக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது.

தண்ணீர்ப் போர் :

உலகின் பெரும்பாலான மோதல்கள் தண்ணீர்ப் பற்றாக்குறையால் நிகழ்கின்றன. "இனி அடுத்த உலகப்போர் தண்ணீருக்காகத்தான்" என்றாகிவிட்டது. இயற்கையின் பாதகமான சூழ்நிலை மட்டும் இதற்குக் காரணமல்ல. நீர் மேலாண்மையில் நாம் செய்துள்ள பெருந் தவறுகளே இன்றைய நீர் நெருக்கடிக்குக் காரணம் என்று ஐ.நா வின் வளர்ச்சித்திட்ட அமைப்பின் ஆய்வு கூறுகிறது. ஆழ்குழாய்க் கிணறுகளின் சாதனை நிலத்தடி நீர் ஆதாரங்களை அழித்துவிட்டது.

நிறைவுரை:

நீர் மேலாண்மையில் நீ புதிய முன் முயற்சிகளின் வாயிலாகவே நீர் நெருக்கடிக்குத் தீர்வுகளைக் கண்டறிய முடியும். நிர் ஆதாரங்கள் அனைத்தும் மக்களுக்கானதாக அவர்களின் கட்டுப்பாட்டிலேயே இருக்க வேண்டும். இது பொது நியதி.

" கடைசி மரம்
வெட்டப்படும் போதும்
கடைசிச் சொட்டுதண்ணீர்
காலியாகும் போது தான்
தெரியும் இந்த மனித சமூகத்திற்குப்
பணத்தைத் திங்கமுடியாது என்று"

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

2. பீங் ...பீங்.... என்ற சத்தத்துடன் தண்ணீர் வாகனம் ஒன்று வேகமாக வந்து நின்றது. அம்மா குடங்களுடன் ஓடிச்சென்று வரிசையில் நின்றாள். அப்போது கருமேகங்கள் திரண்டன... கதையைத் தொடர்ந்து எழுதி நிறைவு செய்க.

தண்ணீர் வாகனம் தூசியைக் கிளப்பிக் கொண்டு வேகமாக வந்து நின்றது. கண்ணம்மா, கையில் ரெண்டும் கக்கத்தில் ரெண்டும் கொண்டு வந்து வரிசையில் போட்டாங்க. தெருவில் உள்ள வயசுப் பொண்ணிலிருந்து பாட்டிவரையிலும் வந்தாச்சு.

வானம் மேகம் மூட்டத்துடன் கருத்து நின்றது. ஈரக் காற்றுடன் புயல் அடிப்பதுபோல சுழன்று அடித்தது. வாகனத் தண்ணியும் மழைத்தண்ணியும் சேர்த்துப் பிடித்தார்கள். சூரப்பட்டி இதுவரையிலும் இப்படிப்பட்ட மழையைக் கண்டதில்லை. காற்று நின்றதனால் பேய்மழையாகப் பெய்தது.

எல்லோரும் காளியம்மன் கோவிலுக்கள் நின்று பேசிய பேச்செல்லாம் சத்தியம் செய்தது போல இருந்தது. "ஆற்றில் மணல் அள்ளியதால் எவ்வளவு மழைபெய்தாலும் தண்ணீ தேங்குவதில்லை" இது ஆப்பக்கடை அன்னம் ஊருக்கு வர்ற வழியிலே இருந்த மரங்களை எல்லாம் ரோட்டுக்காக வெட்டியாச்சு.

மணியகாரர் கருப்பணன் ஆற்றுப்படுகையில் என்னென்னமோ மீத்தேன், ஹைட்ரோ கார்பன் ..... என்ன சனியனோ ஊரத் தொடச்சிட்டாங்க.

அரசு மேனிலைப்பள்ளியில் ஆறாம் வகுப்புப் படிக்கும் மாணவி மாலதி மரங்களை நிறைய நடணும். என்ன மரங்கன்னு கேளுங்க.... பூவரசு, மகிழம், ஆலம், அரசு, மாமரம், வேம்பு இது பூரா பூமியின் வெப்பத்தைப் பெரிதும் குறைக்குமாம்... எங்க சயின்ஸ் டீச்சர் சொன்னாங்க...

இந்த மரம் நடுற நல்ல காரியத்தை உடனடியா தொடங்குங்க பூஜை போட்டுறலாம்.

※※⁂⁂⁂※※

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கற்கண்டு

இயல் இரண்டு

துணைவினைகள்

பாடநூல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. பொருத்தமான விடையை எடுத்து எழுதுக.

கதிர் அலுவலகத்திலிருந்து விரைவாக .....

அவன் பையன் பள்ளியிலிருந்து இன்னும் .....

அ) வந்தான், வருகிறான் ஆ) வந்துவிட்டான், வரவில்லை

இ) வந்தான், வருவான் ஈ) வருவான், வரமாட்டான்

விடை : ஆ) வந்துவிட்டான், வரவில்லை

கற்பவை கற்றபின்

பக்கம்: 55

1. பொருத்தமான துணைவினைகளைப் பயன்படுத்துக.

அ) மனிதனையும் விலங்குகளையும் (வேறு) **வேறுபடுத்துவது** மொழியாகும்.

ஆ) திராவிட மொழிகள் சில, பொதுப்பண்புகளை (பெறு) **பெற்றிருக்கின்றன**.

இ) காலந்தோறும் தன்னைப் (புதுப்பித்து) **புதுப்பித்துக்கொள்ளும்** மொழி தமிழ்.

ஈ) என் ஐயத்தைக் கேட்பதற்கு எவரேனும் கிடைக்கமாட்டார்களா என்று (தேடு) **தேடிக் கொண்டிருக்கிறேன்.**

2. கீழ்க்காணும் துணைவினைகளைப் பயன்படுத்திப் புதிய தொடர்களை எழுதுக.

அ) **வேண்டும்** - ஆசிரியர் கூறும் அறிவுரையைக் கேட்க வேண்டும் .

ஆ) **பார்** - தந்தை சொன்னது சரியா தவறா எண்ணிப்பார் .

இ) **உள்** - மனதில் உள்ளதைச் சொல்க.

ஈ) **வா** - நேரில் வா_பேசிக்கொள்வோம்.

உ) **விடு** - தீய பழக்கங்களை விட்டு விடு.

3. பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்துகையில் துணை வினைகளைச் சேர்க்கிறோம். பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச் சொற்களாக மாற்றி, ஏற்ற துணை வினைகளை இட்டு எழுதுக.



மார்னிங் எழுந்து, பிரஷ் பண்ணி, யூனிஃபார்ம் போட்டு ஸ்கூலுக்குப் போனாள்.

- காலையில் எழுந்துவிட்டாள்.
- பல் துலக்கி முடித்தாள்.
- சீருடை அணிந்து கொண்டாள்.
- பள்ளிக்குப் புறப்பட்டுப் போனாள்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

4. சிந்தனை வினா.

அ) வேற்றுமொழிச் சொற்களைப் பயன்படுத்துகையில் துணைவினைகளின் பங்கு குறித்துச் சிந்தித்து எழுதுக.

வேற்று மொழிச் சொற்கள்	துணைவினை
பேனாவை யூஸ் பண்ணு.	பேனாவைப் பயன்படுத்து.
காம்படிசனில் பாயின்ட்ஸை மிஸ் பண்ணாமல் பேசு.	போட்டியில் பேச்சுக்கான குறிப்புகளைத் தவறவிடாமல் பேசு.
கிளாஸ் மிஸ்கிட்ட டிஸ்கஸ் பண்ணி முடிவு சொல்கிறேன்.	வகுப்பு ஆசிரியரிடம் கலந்துபேசி முடிவுவைச் சொல்கிறேன்.
காம்படிசனுக்கான பிப்பிக்கை அப்பாவிடம் கன்ஸ்ல்ட் பண்ணி கட்டுரை எழுதி வருகிறேன்.	போட்டிக்கான தலைப்பை அப்பாவிடம் கலந்து ஆலோசனை செய்து விட்டுக் கட்டுரை எழுதி வருகிறேன்.
வாட்டரை வேஸ்ட் பண்ணாதே.	குடிநீரைச் சிக்கனமாகப் பயன்படுத்து.

ஆ) சந்தையில் காய்கறிகளை வாங்கும்போது உங்களுக்கும் கடைக்காரருக்கும் நடக்கும் உரையாடலைத் துணைவினைகளைப் பயன்படுத்தி எழுதுக.

கடைக்காரர் : வாங்க ..... நாலுநாளா வரல.
நான் : திருச்சி போயிருந்தேன்.
கடைக்காரர் : போனவாரம் அம்மா வந்திருந்தாங்க.
நான் : வெங்காயம் என்ன விலை?
கடைக்காரர் : 50 ரூபா.
நான் : வேணாம். நேற்று சந்தைக்குப் போய் 5 கிலோ வாங்கிப் போட்டேன். அடுத்தவாரம் வாங்கிக்கிறேன்.
கடைக்காரர் : நீங்க 280 ரூபாய்க்கு வாங்கியிருக்கீங்க. (பணம் பெற்றுக் கொண்டவுடன்) (2000ரூபாய் நோட்டை வாங்கிக்கொண்டு)
நான் : பக்கத்துக் கடையிலே வாங்கிக் கொடுங்க.
கடைக்காரர் : இருங்க, வாங்கி வரச்சொல்கிறேன்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

மொழியை ஆள்வோம்

பக்கம்: 57

படித்துச் சுவைக்க.

பூ மொழி

வீட்டின பக்கத்தில் நிற்கிறது ஒரு மரம்
கூடத்துச் சன்னலையும்
சமையலறைச் சன்னலையும்
விரிந்த கிளைகளால்
பார்த்துக் கொண்டிருக்கிறது.
கைகளசைத்துக் கால்களுதைத்துக்
கூடத்தில் கிடக்கும் சிசு
மிழற்றுகிறது ஒரு சொல்லை
சமையலறையில்
பணி முனைந்திருக்கிற அம்மா
அச்சொல்லையே நீள வாக்கியங்களாக்கிப்
பதில் அனுப்புகிறாள்
விரல் நீட்டிச் சிசு பேசுகிறது மீண்டும்
அத்தொனியிலேயே அம்மா குழறுகிறாள்
கடவுளுக்கும் புரியாத அவ்வுரையாடலைக் கிரகிக்கக்
கூடத்துச் சன்னலுக்கும
சமையலறைச் சன்னலுக்குமாய்க்
கிளைகளின் வழியே ஓடி ஓடிக்
கவனிக்கிறது அணில்.
பெருகும் சொற்களும்
அபூர்வ எதிர்வினைகளும்
அதீதக் குழப்பத்திலாழ்த்த
அணில் ஓடிக் களைக்கிறது சன்னல்களுக்கிடையே
அர்த்தங்களை மரம் பூக்களாக மொழிபெயர்த்து
அதன்மீது உதிர்த்திக்கொண்டிருப்பது தெரியாமல்.

– யூமா வாசுகி

அறிஞர்களின் பொன்மொழிகளைத் தமிழில் மொழி பெயர்த்து எழுதுக.

1. Every flower is a Soul blossoming in nature - Gerard De Nerval

மொழி பெயர்க்க : எல்லாப் பூக்களும் இயற்கையில் உயிருடன் இருக்கிறது.
பழமொழி : மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு.

2. Sunset is still my favourite colour, and rainbow is second - Mattie Stepanek

மொழி பெயர்க்க : சூரிய அஸ்தமனமே முதலில் எனக்குப் பிடித்த வண்ணம், வானவில்லின் வண்ணம் அடுத்த நிலை தான்.
பழமொழி : தோல்வியே வெற்றிக்கு அடிப்படை (அ) ஒன்றன் மறைவில் இருந்தே புதியன தோன்றும்.

3. An early morning walk is a blessing for the whole day - Henry David Thoreau

மொழி பெயர்க்க : அதிகாலை நடைப்பயிற்சி அந்நாளுக்கே ஒரு வரமாகும்.
பழமொழி : நன்றாய்த் தொடங்கும் செயல் நன்றாகவே முடியும். (அ) சிறந்த தொடக்கமே வெற்றிக்கு அடிப்படை.

4. Just living is not enough .... one must have sunshine, freedom and a little flower - Hans Christian Anderson

மொழி பெயர்க்க : வெறுமையான வாழ்வு மட்டும் போதாது ஒவ்வொருவருக்குள்ளும் ஒளி, ஆற்றல், விடுதலை மலர் என இருத்தல் வேண்டும்.
பழமொழி : இலட்சியமுள்ள வாழ்வே சிறந்த வாழ்வாகும், வெறும் வாழ்வு வீணே.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பிழை நீக்கி எழுதுக :

1. **சர் ஆர்தர் காட்டன் கல்லணையின் கட்டுமான உத்திகொண்டுதான் தெளலீஸ்வரம் அணையைக் கட்டியது.**

   சர் ஆர்தர் காட்டன் கல்லணையின் கட்டுமான உத்திகொண்டுதான் தெளலீஸ்வரம் அணையைக் **கட்டினார்.**

2. **மதியழகன் தீக்காயம் ஏற்பட்ட இடத்தில் உடனடியாகத் தண்ணீர் கொண்டு குளிர வைத்தாள்.**

   மதியழகன் தீக்காயம் ஏற்பட்ட இடத்தில் உடனடியாகத் தண்ணீர் கொண்டு குளிர **வைத்தான்**.

3. **மழையே பயிர்க்கூட்டமும் உயிர்க்கூட்டமும் வாழப் பெருந்துணை புரிகின்றன:**

   மழையே பயிர்க்கூட்டமும் உயிர்க்கூட்டமும் வாழப் பெருந்துணை **புரிகின்றது.**

4. **நீலனும் மாலனும் அவசர காலத் தொடர்புக்கான தொலைபேசி எண்களின் பட்டியலை வைத்திருக்கிறோம்.**

   நீலனும் மாலனும் அவசரகாலத் தொடர்புக்கான தொலைபேசி எண்களின் பட்டியலை **வைத்திருக்கிறார்கள்.**

5. **சூறாவளியின் போது மேல்மாடியில் தங்காமல் தரைத் தளத்திலேயே தங்கியதால் தப்பிப்பான்.**

   சூறாவளியின் போது மேல் மாடியில் தங்காமல் தரைத் தளத்திலேயே தங்கியதால் **தப்பித்தனர்.**

பழமொழிகளைப் பயன்படுத்திச் சொற்றொடர் அமைக்க.

1. **நெல்லுக்குப் பாய்கிற தண்ணீர் புல்லுக்குப் பாய்வது போல.**

   நெல்லுக்குப் பாய்கிற தண்ணீர் புல்லுக்குப் பாய்வது போல நல்லார் சொன்ன அறிவுரை தீயவர்க்கும் போய்ச் சேர்ந்தது.

2. **தண்ணீர் வெந்நீர் ஆனாலும் நெருப்பை அணைக்கும்.**

   நெடுஞ்சாலையில் அடிபட்டுக்கிடந்தவரை வயலில் வேலை பார்த்துக் கொண்டிருந்தவர் காப்பாற்றியது தண்ணீர் வெந்நீர் ஆனாலும் நெருப்பை அணைக்கும் எனத் தெரிந்து கொண்டேன்.

3. **மெல்லப் பாயும் தண்ணீர் கல்லையும் கரைக்கும்.**


   அப்பா கூறிய அறிவுரை மூர்க்கத்தனமாகச் செயல்பட்ட என் அண்ணனையும் மெல்லப் பாயும் தண்ணீர் கல்லையும் கரைக்கும் எனத் திருத்தியது.

4. **கிணற்றுத் தண்ணீரை வெள்ளம் கொண்டு போகாது.**

   தேர்வை முடித்துவிட்டு கிரிக்கெட் போட்டிக்குச் செல்லலாம் என்று அப்பா சொன்னதைக் கேட்டு கிணற்றுத் தண்ணீரை வெள்ளம் கொண்டு போகாது எனப் புரிந்து கொண்டேன்.

வடிவ மாற்றம் செய்க.

நீர்ச்சுழற்சி குறித்த கருத்து விளக்கப்படத்தின் உட்பொருளைப் புரிந்துணர்ந்து பத்தியாக மாற்றி அமைக்க.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

நீர்ச்சுழற்சி

மேற்காணும் படத்தில் உள்ளது போல, வாயு மண்டலத்தில் உள்ள நீர், பனி மற்றும் உறை பனியில் உள்ள நீர் சூரிய வெப்பத்தால் ஆவியாகி, பின் குளிர்ந்த காற்றால் மேகமாகி மழைபொழிந்து நிலத்தை அடைந்து. கடல், ஆறு, நிலத்தடி நீர் இவற்றைப் பெருக்குகிறது. பின்னர் மீண்டும் கடல், ஆறு, தரையில் உள்ள நீர் நிலைகள், நிலத்தடி நீர் ஆகியவை சூரிய ஒளியால் ஆவியாக்கப் படுகிறது. ஆவியான நீர்த்திவலைகள் மேகமாகி, குளிர்ந்து மீண்டும் மழையாகி நிலத்தைக் குளிரச் செய்து வளமுடைய தாக்குகிறது. மீண்டும் ..... இதுவே இப்படம் விளக்குடம் நீர்ச் சுழற்சி ஆகும்.

வரவேற்பு மடல் எழுதுக:

சுற்றுச் சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்து கொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.

வரவேற்பு மடல்

இடம் : அரசு மேனிலைப் பள்ளி, கொட்டாம்பட்டி.
நாள் : திருவள்ளுவர் ஆண்டு ஹேவிளம்பி வைகாசி 22 ஆம் நாள்
05.06.2018 - செவ்வாய்க்கிழமை
நேரம் : பிற்பகல் 3.00 மணி

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் பள்ளிகளின் வரிசையில் முதலிடம் பெற்ற கொட்டாம்பட்டி அரசு மேனிலைப் பள்ளியைப் பாராட்டும் விழாவிற்கு வருகை தரும் மாவட்டக் கல்வி அலுவலர் அவர்களே!

பள்ளியை வழி நடத்தி நிர்வாக மேலாண்மை செய்ததோடு பள்ளிக்குள் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மரங்களைப் பராமரித்துப் பள்ளியின் சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் வழிகாட்டிய பள்ளித் தலைமை ஆசிரியர் அவர்களே! ஆசிரியப் பெருமக்களே! பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் அவர்களே! மாணவச் செல்வங்களே! உங்கள் அனைவரையும் பள்ளிக்குழு மாணவர் தலைவர் என்ற முறையில் வரவேற்கிறேன். இன்று சூன் திங்கள் 5ஆம் நாள் சுற்றுச் சூழல் தினம். இவற்றிற்கெல்லாம் மேலாக மாவட்டத்திலேயே நம் பள்ளி கிடைத்தற்கரிய விருதினைப் பெற்ற நாளாகும்.

நம் மாவட்டக் கல்வி அலுவலர் மூன்றாண்டுகளுக்கு முன்பே சுட்டிக் காட்டினார். இவ் அரசுப்பள்ளி அகன்ற வளாகம்: குடிநீரும் கிடைக்கிறது. நிலத்தடி நீரும் நன்றாக இருக்கிறது. இருக்கின்ற மரங்களுக்கு தண்ணீர் விட்டுப் பசுமை ஆக்குங்கள் பலன் கிடைக்கும் என்றீர்கள்! உங்கள் வாக்கு நிறைவேறியது. எங்கள் கனவு நிகழ்ந்தேறியது. இந்நேரத்தில் பள்ளி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து பொருள் உதவி செய்தளித்த பெற்றோர் ஆசிரியர் கழகப் பொறுப்பாளர்களுக்கு நன்றி.

எங்கள் பள்ளி வேளாண்மைப் பிரிவு மாணவர்களின் உதவியும் மாணவர்களின் ஒத்துழைப்பும் அளப்பரியது. மாவட்டக் கல்வி அலுவலர்களின் அரசு நிதியுதவி கிடைத்திட மிகுந்த ஒத்துழைப்பு நல்கியதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அனைவருக்கும் நன்றி!

இவண்,
க. அன்பரசன்,
பள்ளிக்குழு மாணவர் தலைவர்,
அரசு மேனிலைப் பள்ளி, கொட்டாம்பட்டி.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

நயம் பாராட்டுக.

கல்லும் மலையும் குதித்துவந்தேன் - பெருங்
காடும் செடியும் கடந்துவந்தேன்;
எல்லை விரிந்த சமவெளி - எங்கும்நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன்.
ஏறாத மேடுகள் ஏறிவந்தேன் - பல
ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்;
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன். -கவிமணி

இலக்கிய நயம் பாராட்டுதல்

ஆசிரியர் குறிப்பு :

கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை, 1876 ஆம் ஆண்டு நாகர்கோவிலுக்கு அருகில் உள்ள தேரூரில் பிறந்தார். 1901 ஆம் ஆண்டு தொடக்கப் பள்ளி ஆசிரியர் ஆனார். அதன்பின் திருவனந்தபுரம் மகாராஜா பெண்கள் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார். 1917 ஆம் ஆண்டிலேயே "மருமக்கள் வழி மான்மியம்" எனும் நகைச்சுவை நூலினை எழுதி வெளியிட்டார். மலரும் மாலையும், ஆசிய ஜோதி, நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம், பாரசீகக் கவிஞர் உமர் கய்யாம் பாடல்களை தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டார்.

திரண்ட கருத்து :

இப்பாடலில், கவிமணி ஆறு ஒன்று தன் வரலாறு கூறுவது போல் பாடியிருக்கிறார். கற்களிலும் மலைகளின் உச்சியிலிருந்து குதித்து வந்தேன் காடுகளிலும் செடிகளிலும் கடந்து வந்தேன். சமவெளிகளில் இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன். மேட்டுப் பகுதிகளிலும் ஏறி வந்தேன். பல ஏரி, குளங்களை நிரப்பி மக்கள் பயன்பாட்டிற்காக வந்தேன். ஊற்று வராத நிலப்பகுதிகளிலும் உள்ளே புகுந்து வந்தேன். ஓடை மணல்களில் எல்லாம் ஓடிப் பாய்ந்து வந்தேன் என்று குறிப்பிடுகிறார்.

மையக்கருத்து :

ஆறு மலை உச்சிகளில் இருந்து புறப்பட்டு ஓடைகளில் பொங்கிட ஓடிவந்தேன் என்று ஆற்றின் வரலாற்றை வரிசையாகப் புலப்படுத்துகிறார்.

எதுகை நயம் :

சீர்தோறும் அடிதோறும் இரண்டாம் எழுத்துகள் ஒன்றிவரத் தொகுப்பது எதுகையாகும். எதுகை நயத்தை இனிமையாகப் பாடுகிறார் கவிமணி.

சான்று :

கல்லும் .... **எல்**லை
ஏறாத ..... **ஊறா**த

மோனை நயம் :

சீர்தோறும் அடிதோறும் முதல் எழுத்துகள் ஒன்றி வரத் தொடுப்பது மோனை ஆகும். மோனை நயத்தை ஓசையுடன் பாடுவதில் சிறந்து விளங்குகிறார் கவிமணி.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

சான்று :

ஏறாத - **ஏ**றி
ஊறாத - **ஊ**ற்றிலும் உட்புகுந்தேன்
ஓடைகள் - **ஓ**டி வந்தேன்.

சொல் நயம் :

'விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்' என்றாற் போல விருத்தப்பா சந்தத்தில் எழுதும் ஆற்றல் பெற்றவர் கவிமணி. ஆறு கடந்து வந்த பாதையை அற்புதமாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

ஆற்றின் போக்கிற்கேற்ப யாப்பு வடிவங்களைக் கையாண்டிருக்கிறார்

குதித்து வந்தேன்
கடந்து வந்தேன்
தவழ்ந்து வந்தேன்
ஏறி வந்தேன்
நிரப்பி வந்தேன்
உட்புகுந்தேன்
ஓடி வந்தேன்.

ஆற்றின் நீரோட்டத்திற்கேற்ப சொற்களை நடனமாடச் செய்திருக்கும் கவிஞனின் கவியுள்ளத்தைக் காண முடிகிறது.

இயைபு :

இச்செய்யுளின் ஈற்றடிகளில் 'தேன் தேன்' என்று முடிந்திருப்பதால் அழகான இயைபு நயம் அமைந்து விளங்குகின்றது.

நிறைவுரை :

கரைபுரண்டு ஓடிவரும் ஆற்றின் வெள்ளப் பெருக்கை அழகிய கவியுள்ளத்தோடு நம் கண் முன்னே விரியச் செய்துவிடுகிறார், கவிமணி.

மொழியோடு விளையாடு

பக்கம்: 59

சொல்லுக்குள் சொல் தேடுக.

எ.கா : ஆற்றங்கரையோரம் - ஆறு / கரை / ஓரம்

அ) கடையெழுவள்ளல்கள் - கடை / எழு / வள்ளல்
ஆ) எடுப்பார் கைப்பிள்ளை - எடுப்பார் / கை / பிள்ளை
இ) தமிழ்விடு தூது - தமிழ் / விடு / தூது
ஈ). பாய்மரக்கப்பல் - பாய் / மரம் / கப்பல்
உ) எட்டுக்கால்பூச்சி - எட்டு / கால் / பூச்சி

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

அகராதியில் காண்க.

சொல்		பொருள்
கந்தி	-	கந்தகம், கழுகு, தவப்பெண், வாசம்
நெடில்	-	நெட்டெழுத்து, மூங்கில்
பாலி	-	அணை, ஆலமரம், எல்லை, ஒரு பாஷை, பாற்பசு, செம்பருத்தி, கறை
மகி	-	பூமி, பசு
கம்புள்	-	கம்பங்கோழி, சங்கு, வானம்பாடி
கைச்சாத்து	-	கையெழுத்து, பொருள்பட்டி

சொற்களை இணைத்துத் தொடர்களை விரிவுபடுத்துக.

எ.கா : அரிசி போடுகிறேன்.

விடை : புறாவுக்கு அரிசி போடுகிறேன்.
காலையில் புறாவுக்கு அரிசி போடுகிறேன்.
நாள்தோறும் காலையில் புறாவுக்கு அரிசி போடுகிறேன்.
நான் நாள்தோறும் காலையில் புறாவுக்கு அரிசி போடுகிறேன்.
நான் நாள்தோறும் காலையில் மறக்காமல் புறாவுக்கு அரிசி போடுகிறேன்.
நான் நாள்தோறும் காலையில் ஒருபோதும் மறக்காமல் புறாவுக்கு அரிசி போடுகிறேன்.

1. மழை பெய்தது.

மாலையில் மழை பெய்தது.
நேற்றுக் மாலையில் மழை பெய்தது.
நாள்தோறும் மாலையில் மழை பெய்தது.
நாள்தோறும் மாலையில் விடாமல் மழை பெய்தது.
நாள்தோறும் மாலையில் விடாமல் தொடர்ந்து மழை பெய்தது.
நாள்தோறும் மாலையில் தவறாமல் மழை பெய்தது.

2. வானவில்லைப் பார்த்தேன்.

மாலையில் வானவில்லைப் பார்த்தேன்.
மாலையில் மழைபெய்யும் போது வானவில்லைப் பார்த்தேன்.
நான் மாலையில் மழைபெய்யும் போது வானவில்லைப் பார்த்தேன்.
நான் மாலையில் மழைபெய்யும் போது கிழக்குப் பக்கம் வானவில் பார்த்தேன்.
நான் நாள்தோறும் மாலையில் மழைபெய்யும் போது கிழக்குப் பக்கம் வானவில் பார்த்தேன்.
நான் நாள்தோறும் மாலையில் மறக்காமல் மழைபெய்யும் போது கிழக்குப் பக்கம் வானவில் பார்த்தேன்.

3. குழந்தை சிரித்தது.

தொட்டிலில் குழந்தை சிரித்தது.
தொட்டியில் அழுத குழந்தை சிரித்தது.
அம்மாவைப் பார்த்தது அழுத குழந்தை சிரித்தது.
அழுத குழந்தை அம்மாவைப் பார்த்து பார்த்து சிரித்தது.
அழுத குழந்தை அம்மாவைப் பார்த்து மேலும் பொக்கைவாய் திறந்து சிரித்தது.
அழுத குழந்தை தொட்டிலை நீக்கிப் பார்த்துச் சிரித்தது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

4. எறும்புகள் போகின்றன.

எறும்புகள் போகின்றன.
எறும்புகள் வரிசையாகப் போகின்றன.
எறும்புகள் வரிசையாகக் கல்லில் போகின்றன.
எறும்புகள் வரிசையாகப் புற்றுக்குள் போகின்றன.
சர்க்கரையை நோக்கி வரிசையாகப் போகின்றன.
அடுக்கில் உள்ள சர்க்கரையை நோக்கி எறும்புகள் போகின்றன.

5. படம் வரைந்தான்.

படம் வரைந்தான்.
அவன் அழகாக வரைந்தான்.
விலங்குகளின் படங்களை வரைந்தான்.
இயற்கையைப் படம் வரைந்தான்.
இயற்கை மரங்களைப் படமாக வரைந்தான்.
படிக்கும் பறவைகளைப் படமாக வரைந்தான்.

வேறுபட்ட வினையெச்சங்களைப் பயன்படுத்தி, முதல்வினைகளைத் துணைவினைகளாக மாற்றுக :

முதல்வினைகள் - பார்த்தேன், கொடுத்தார், நடந்தான், சேர்ந்தார், அமைத்தோம்.

எ.கா : பார்த்தேன்



1. எழுதிப் பார்த்தேன்
2. தடுக்கப் பார்த்தேன்
3. கொடுத்துப் பார்த்தேன்
4. ஓடப் பார்த்தேன்

அ) கொடுத்தார்



1. எழுதிக் கொடுத்தார்
2. படிக்கக் கொடுத்தார்
3. வாங்கிக் கொடுத்தார்
4. பார்த்துக் கொடுத்தார்

ஆ) நடந்தான்



1. பார்த்து நடந்தான்
2. கேட்டு நடந்தான்
3. வாங்கி நடந்தான்
4. சிரித்து நடந்தான்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

இ) சேர்ந்தார்



1. வந்து சேர்ந்தார்
2. போய்ச் சேர்ந்தார்
3. நடந்து சேர்ந்தார்
4. ஓய்ந்து சேர்ந்தார்

ஈ) அமைத்தோம்



1. பார்த்து அமைத்தோம்
2. கண்டு அமைத்தோம்
3. கேட்டு அமைத்தோம்
4. சேர்த்து அமைத்தோம்

வினையடிகளை முதல்வினையாகவும் துணைவினையாகவும் அமைந்த தொடர்களாக உருவாக்குக.

வினையடி - வா, போ, செய், மாற்று, இரு, கொடு, கொள், எழுது, விடு, போடு.

எ.கா : வினையடி - வை


முதல்வினை	துணைவினை
மூட்டையைத் தலையில் **வைத்தான்**,	அம்மா குழந்தையைத் தூங்க **வைத்தார்.**
இலையில் இனிப்பை **வைத்தனர்**.	நான் உனக்கு ஒரு நூல் வாங்கி **வைத்தேன்**.

எண்	வினையடி	முதல்வினை	துணைவினை
1.	வா	நீ நாளைக்கு வீட்டுக்கு **வா.**	ஆங்கிலேயர் நம்மை ஆண்டு **வந்தனர்**.
2.	போ	நான் நூலகத்துக்குப் **போனேன்**.	நான் பயந்து **போனேன்.**
3.	செய்	அவன் அதைச் **செய்தான்.**	அவன் அதைச் **செய்ய வைத்தான்.**
4.	மாற்று	அவன் கடையை **மாற்றினான்.**	அவன் கடையை **மாற்றச் செய்தான்.**
5.	இரு	நான் தனியாக **இருந்தேன்.**	அவனைத் தனியாக **இருக்கச் செய்தேன்.**
6.	கொடு	அவள் **கொடுத்தாள்.**	அவளுக்குக் **கொடுக்கச் செய்தான்.**
7.	கொள்	நீ அதைக் **கொள்.**	அவன் அதை ஏற்றுக் **கொள்ளட்டும்**.
8.	எழுது	மாறன் **எழுதினான்.**	நான் அவனை **எழுதச் செய்தேன்.**
9.	விடு	யாரையும் உள்ளே **விடாதே.**	அப்பா இனி **வந்துவிடுவார்.**
10.	போடு	தொப்பியைக் கீழே **போடு.**	சாப்பிட்டவுடன் இலையைச் சுருட்டிப் **போட வேண்டும்.**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



மூவறிவுடைய எறும்பே
ஆறு அறிவுடையவனுக்கு
அறிவு புகட்டுகிறாய்!
உன் எடையைக் காட்டிலும்
எட்டு மடங்கு எடையைத் தூக்கிச் செல்கிறாயே!
நீ ஊர்ந்து செல்லச் செல்ல
கல் கூடத் தேயுமாமே?
மனிதப் பண்புகளின் மகத்துவத்தை
உன்னிடத்தில் இருந்து தெரிந்து கொண்டோம்.

செயல்திட்டம்

கொடுக்கப்பட்ட இணையத்தள இணைப்பில் உள்ள காணொலியைக் கண்டு அது குறித்த உங்கள் கருத்துகளை இருபக்க அளவில் எழுதி வகுப்பறையில் கலந்துரையாடுக.
https:// www.youtube.com/watch?v=0ReVrONNvoQ

நிற்க அதற்குத்தக...

என் பொறுப்புகள் ...

அ) தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவேன்.

ஆ) வகுப்பறையில் நண்பர்கள் வைத்திருக்கும் பொருள்கள் மீது நாட்டம் இருந்தும் அவற்றைத் தொரியாமல் எடுக்கும் ஒழுங்கற்ற செயலைச் செய்யமாட்டேன்.

இ) அறையை விட்டு வெளியே செல்லும்போது மின்விசிறி, மின்விளக்குகளை நிறுத்திவிட்டுச் செல்வேன்.

ஈ) வெற்றுக் காகிதங்களைச் சுருட்டி வகுப்பறைக்குள்ளும் பள்ளி வளாகத்திலும் போடமாட்டேன்.

உ) பள்ளி வளாகத்துக்குள்ளிருக்கும் மரங்களுக்கு ஊறு விளைவிக்க மாட்டேன்.

ஊ) ஆசிரியர்களிடத்தும் பெற்றோர்களிடத்தும் மதிப்புடன் நடந்து கொள்வேன்.

கலைச்சொல் அறிவோம்

- குமிழிக் கல் - Conical Stone
- நீர் மேலாண்மை - Water Management
- பாசனத் தொழில்நுட்பம் - Irrigation Technology
- வெப்ப மண்டலம் - Tropical Zone

※※⁂⁂⁂※※

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

உரைநடை உலகம்

இயல் மூன்று

ஏறு தழுவுதல்

பாடநூல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. பொருந்தாத இணை எது?

அ) ஏறுகோள் - எருதுகட்டி ஆ) திருவாரூர்- கரிக்கையூர்

இ) ஆதிச்சநல்லூர் - அரிக்கமேடு ஈ) பட்டிமன்றம் - பட்டிமண்டபம்

விடை: ஆ) திருவாரூர் - கரிக்கையூர்

2. முறையான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக.

அ) தமிழர்களின் வீரவிளையாட்டு தொன்மையான ஏறுதழுவுதல்.

ஆ) தமிழர்களின் வீரவிளையாட்டு ஏறுதழுவுதல் தொன்மையான.

இ) தொன்மையான வீரவிளையாட்டு தமிழர்களின் ஏறுதழுவுதல்.

ஈ) தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறுதழுவுதல்.

விடை: ஈ) தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறுதழுவுதல்

3. சொற்றொடர்களை முறைப்படுத்துக.

அ) ஏறுதழுவுதல் என்பதை

ஆ) தமிழ் அகராதி

இ) தழுவிப் பிடித்தல் என்கிறது

i) ஆ, அ, இ ii) ஆ, இ, அ iii) இ, ஆ, அ iv) இ, அ, ஆ

விடை: i) ஆ, அ, இ

குறுவினா

1. நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?

ஜ(ச)ல்லிக்கட்டு, மஞ்சு விரட்டு, ஏறுதழுவுதல், காளை விரட்டு, மாடுபிடித்தல், எருதுகட்டி, ஏறுவிடுதல் எனப் பல்வேறு வடிவங்களில் ஏறுதழுவுதல் அழைக்கப்படுகிறது.

2. ஏறுதழுவுதல் நிகழ்விற்கு இலக்கியங்கள் காட்டும் வேறுபெயர்களைக் குறிப்பிடுக.

முல்லைக் கலியில், ஏறுதழுவுதல் என்றும் சிலப்பதிகாரம், புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய நூல்களில் 'ஏறுகோள்' என்றும் கண்ணுடையம்மன் பள்ளு என்ற சிற்றிலக்கியத்தில் 'எருதுகட்டி' என ஏறுதழுவுதல் பற்றி குறிக்கப் பெற்றுள்ளன.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

3. ஏறுதழுவுதல் குறித்துத் தொல்லியல் சான்றுகள் கிடைத்த இடங்களைப் பட்டியலிடுக.

ஏறுதழுவுதல் குறித்த பல நடுகற்கள், புடைப்புச் சிற்பங்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கண்டறியப்பட்டுள்ளன.

இடங்கள்:

1. சேலம் மாவட்டத்தில் எருது விளையாடி மரணமுற்றவன் பெயரால் எடுக்கப்பட்ட "எருது பொருதார் கல்" ஒன்று உள்ளது.
2. கோவுரிச் சங்கன் கருவந்துறை எனும் ஊரில் எருதோடு போராடி இறந்து பட்டான். சங்கன் மகன் பெரிய பயல் எடுத்த நடுகல் ஒன்றுள்ளது.
3. நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகிலுள்ள கரிக்கையூரில் மூன்று எருதுகளைப் பலர் கூடி விரட்டுவது போன்ற ஓவியம் காணப்படுகிறது.
4. திமிலுடன் கூடிய காளை ஒன்றை அடக்க முயல்வது போன்ற ஓவியம் மதுரை உசிலம்பட்டி அருகே கல்லூத்து மேட்டுப்பட்டியில் கண்டறியப்பட்டுள்ளது.

சிறுவினா

1. வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையாள நீட்சியை விளக்குக.

ஏறுதழுவுதல், முல்லை நிலத்து மக்களின் அடையாளத்தோடும், மருதநிலத்து வேளாண் குடிகளின் தொழில் உற்பத்தியோடும், பாலை நிலத்து மக்களின் தேவைக்கான போக்குவரத்துத் தொழிலோடும் பிணைந்தது. இதுவே வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையாளமாக நீட்சி அடைந்தது.

2. ஏறுதழுவுதல், திணைநிலை வாழ்வுடன் எவ்விதம் பிணைந்திருந்தது?

தமிழக உழவர்கள், தங்களின் உழவு சார்ந்த கருவிகளோடு அறுவடைக்குப் பெரிதும் துணைநின்ற மாடுகளைப் போற்றி மகிழ்விக்க ஏற்படுத்திய விழாவே மாட்டுப் பொங்கல். அவ்விழாவின்போது, மாடுகளைக் குளிப்பாட்டி, பல வண்ணங்களில் பொட்டிட்டு மூக்கணாங்கயிறு, கழுத்துக்கயிறு, பிடிகயிறு அனைத்தையும் புதிதாக அணிவிப்பர். கொம்புகளைப் பிசிறு சீவி, எண்ணெய் தடவி, கழுத்து மணியாரம் கட்டி, வெள்ளை வேட்டியோ துண்டோ கழுத்தில் கட்டுவர். பின்னர் பூமாலை அணிவித்துப் பொங்கலிட்டுத் தம்மோடு உழைப்பில் ஈடுபட்ட மாடுகளுக்கு நன்றி தெரிவிக்கும் விதத்தில் தளிகைப் பொங்கலை ஊட்டிவிடுவர். இதன் தொடர்ச்சியாக வேளாண குடிகளின் வாழ்வோடும் உழைப்போடும் பிணைந்து கிடந்த மாடுகளுடன் அவர்கள் விளையாடி மகிழும் மரபாக உருக்கொண்டதே ஏறுதழுவுதலாகும்.

நெடுவினா

1. ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

இளைஞர்களின் வீரம்:

வீரத்திற்கும் விளைச்சலுக்கும் செழிப்பிற்கும் செல்வத்திற்கும் தமிழர்களால் அடையாளப் படுத்தப்படுபவை மாடுகள். முல்லை மற்றும் மருத நிலங்களில் கால் கொண்டு தமிழர் தம் வாழவோடு பின்னிப் பிணைந்து பண்பாடாகியுள்ளது ஏறுதழுவுதல். ஏறுதழுவுதல் தமிழரின் நாகரிகத்தை உணர்த்தும் விளையாட்டு; இளைஞர்களின் வீரத்தைப் பெருமிதப்படுத்தும் பண்பாட்டு நிகழ்வு. இவ்விளையாட்டில் காளையை அரவணைத்து அடக்குபவரே வீரராகப் போற்றப்படுவர்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

வன்மமும், போர்வெறியும்:

மேலை நாடுகளுள் ஒன்றான ஸ்பெயினில், காளைச் சண்டை தேசிய விளையாட்டாகக் கொண்டாடப்படுகிறது. அதில் காளையை அடக்கிக் கொல்பவனே வீரனாகக் கருதப்படுவான். அவ்விளையாட்டில் ஆயுதங்களைப் பயன்படுத்துவர். காளையை அடக்கும் வீரன் வென்றாலும் தோற்றாலும் ஆட்டத்தின் முடிவில் காளை கொல்லப்படுவதும் உண்டு. மேலை நாடுகளில் ஆண்டு முழுவதும் நடத்தப்படும் காளை விளையாட்டு, மனிதனுள் ஒளிந்திருக்கும் வன்மத்தையும் போர் வெறியையுமே வெளிப்படுத்துவது போல் இருக்கிறது.

அன்பும் வீரமும்:

தமிழகத்தில் நடைபெறும் ஏறுதழுவுதலில் காளையை அடக்குபவர்கள் எந்த ஆயுதத்தையும் பயன்படுத்தக்கூடாது. நிகழ்ச்சியின் தொடக்கத்திலும் முடிவிலும் காளைகளுக்கு வழிபாடு செய்வர். அடக்க முடியாத காளைகளும் உண்டு. எனவே, காளைகளும் வெற்றி பெற்றதாகக் கருதப்படும். அன்பையும் வீரத்தையும் ஒருசேர வளர்த்தெடுக்கும் இவ்விளையாட்டில் காளையை அரவணைத்து அடக்குபவரே வீரராகப் போற்றப்படுவர்.

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. திமிலுடன் கூடிய காளையொன்றை ஒருவர் அடக்க முயல்வது போன்ற ஓவியம் ..... ல் உள்ளது.

அ) கோத்தகிரி ஆ) கரிகையூர் இ) ஆதிச்சநல்லூர் ஈ) கல்லாத்து மேட்டுப்பட்டி

விடை: ஈ) கல்லாத்து மேட்டுப்பட்டி

2. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடுக்க.

அ) ஏறுதழுவுதல் - தமிழகம்
ஆ) காளைச்சண்டை - ஸ்பெயின்
இ) கம்பளா - கர்நாடகம்
ஈ) எருதுகட்டி - மலையாளம்

விடை: ஈ) எருதுகட்டி - மலையாளம்

3. பொருந்தாததைத் தேர்ந்தெடு.

அ) ஜல்லிக்கட்டு ஆ) மாடுவிடுதல் இ) மஞ்சுவிரட்டு ஈ) சேவல் சண்டை

விடை: ஈ) சேவல் சண்டை

4. எழுந்தது துகள், ஏற்றனர் மார்பு
கவிழ்ந்தன மருப்பு கலங்கினர் பலர்

இவ் அடிகள் இடம் பெற்ற நூல் எது? எதனைப் பற்றிக் கூறுகிறது?

விடை: கலித்தொகை, ஏறுதழுவுதல்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

நிரப்புக

5. ஏறுதழுவுதல் பற்றிக் கூறும் இலக்கண நூல் ..... **விடை: புறப்பொருள் வெண்பாமாலை**
6. காளைப்போர் குறித்த சான்றுகள் கிடைத்துள்ள பிறநாடுகள் ..... **விடை: எகிப்து, கிரீட் தீவு**
7. காளைச் சண்டையை தேசிய விளையாட்டாகக் கொண்ட நாடு ..... **விடை: ஸ்பெயின்**

குறுவினா

1. 'மாட்டுப் பொங்கல்' - குறிப்பு எழுதுக.

மாடுகளைக் குளிப்பாட்டிப் பல வண்ணங்களில் பொட்டிட்டு, மூக்கணாங் கயிறு, கழுத்துக் கயிறு, பிடி கயிறு அனைத்தையும் புதிதாக அணிவிப்பர். கொம்புகளைப் பிசிறு சீவி, எண்ணெய் தடவி, கழுத்து மணியாரம் கட்டி, வெள்ளை வேட்டியோ, துண்டோ கழுத்தில் கட்டுவர். மாடுகளுக்குப் பூமாலை அணிவித்துப் பொங்கலிட்டுத் தம்மோடு உழைப்பில் ஈடுபட்ட மாடுகளுக்கு நன்றி தெரிவிக்கும் விதத்தில் தளிகைப் பொங்கலை ஊட்டுவர்.

2. ஏறு தழுவுதலில் நம் கடமை யாது?

பண்டைய வீரவுணர்வை நினைவூட்டும் ஏறுதழுவுதல் விலங்குகளை முன்னிலைப்படுத்தும் வழிபாட்டையும், இயற்கை வேளாண்மையையும் வலியுறுத்தும் பண்பாட்டுக் குறியீடு ஆகும். நம் முன்னோரின் இத்தகைய பண்பாட்டுக் கூறுகளைப் பேணிப் பாதுகாப்பது நம் கடமையாகும்.

கற்பவை கற்றபின்

பக்கம்: 67

1. இலக்கியங்கள் காட்டும் ஏறுதழுவுதல் காட்சிகளை உங்கள் பகுதியில் நடைபெற்ற எருது விடும் விளையாட்டு நிகழ்வுடன் ஒப்பிட்டு வகுப்பறையில் கலந்துரையாடுக.

உரையாடுபவர்கள் : ஆசிரியர், கபிலன், அமிழ்தன்.

ஆசிரியர் : கலித்தொகை, முல்லைக்கலியில் காளைகள் முட்டியும், மோதியும், எதிர்த்தும், மண்டியிட்டும் வீரர்களைப்போல் பாய்ந்தது என்பதை அறிந்தீர்கள் அல்லவா! அதைப் போல நீங்கள் கண்டனவற்றைக் கூறுங்கள்.

கபிலன் : நண்பா அமிழ்தா! எங்கள் ஊர் சல்லிக்கட்டில் எப்படி வாடிவாசலைத் திறந்தவுடன் நம் ஆசிரியர் கூறியதுபோல காளைகள் வேகமாக வந்தனவல்லவா!

அமிழ்தன் : ஆம் கபிலன்! எனக்கு பாதுகாப்பு தடுப்புக்குப் பின் இருந்து பார்க்கவே பயமாக இருந்தது. கலித்தொகை கூறிய காளைகள் போலவே திமில் பெருத்து இருந்தது அல்லவா!

கபிலன் : ஆம் அமிழ்தா! எப்படி மண்மேடுகளை எல்லாம் தாவி வந்தது பார்த்தாயா!

அமிழ்தன் : ஆம் கபிலன்! சரி! அதன் கொம்பில் சுற்றிய பணம் யாருக்கு!

கபிலன் : இது தெரியாதா அமிழ்தா! அக்காளையை அரவணைத்து அடக்குபவருக்குத்தான்.

அமிழ்தன் : ஆம் கபிலா! நம் இலக்கியத்தில் கூறியதைப் போலவே ஆயுதமே இல்லாமல் அடக்கி, வென்றுவிட்டனரே! மிக்க மகிழ்ச்சியாய் இருக்கிறதடா!

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

2. உங்கள் ஊரில் பொங்கல் விழா நடைபெறுகிறது. அவ்விழாவில் சாக்கு ஓட்டம், தவளை ஓட்டம், புட்டியில் தண்ணீர் நிரப்புதல், இசை நாற்காலி, உருளைக் கிழங்கு பொறுக்குதல், ஊசியில் நூல் கோத்தல், கோலம் போடுதல், கயிறு இழுத்தல், மெதுவாக மிதிவண்டி ஓட்டுதல், பானை உடைத்தல் ஆகிய போட்டிகள் நடைபெறுகின்றன. அப்போட்டிகள் குறித்து நேரடி வருணனை செய்க.

பொங்கல் விழா 2018

ஊராட்சி ஒன்றியம் வள்ளியூர், திருநெல்வேலி மாவட்டம்.

இடம் : விளையாட்டரங்கம் நாள் : 15.1.2018 நேரம் : காலை 8 மணி	தலைமை : முன்னிலை :	ஊராட்சி மன்றத் தலைவர் தலைமையாசிரியர், ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி. வள்ளியூர்.

நிகழ்ச்சிநிரல்

1. சாக்கு ஓட்டம்:

சிறுவர்களே! சிறுமியர்களே! முதலாவது நிகழ்ச்சியாக பன்னிரெண்டு வயதுக்குட் பட்டவர்களுக்கு இப்போட்டி. சாக்குக்குள்ள காலை நுழைத்துக் கொண்டு ஓடி வர வேண்டும். சாக்கு இல்லேன்னு சாக்குச் சொல்லாதீங்க. வாங்க... போட்டிக்கு வாங்க!

2. தவளை ஓட்டம்:

தண்ணியில்லா நேரத்தில் தவளை எங்கிருந்து வரும்? அப்படினு நினைக்காதீங்க! குட்டிக் குட்டித் தவளைகள் எட்டி எட்டிப் பாக்குது... தவளைகளே தவ்வித் தவ்விதான் போகனும் எந்திருச்சி ஓடக் கூடாது! வரிசையில் உக்காருங்க... போட்டி தொடங்குது.

3. புட்டியில் தண்ணீர் நிரப்புதல்:

மகளிர் வாங்க... உங்க சிக்கனத்தை நான் கண்டுபிடித்துச் சொல்றேன். கையில் தண்ணீர் எடுத்து புட்டியில் நிரப்ப வேண்டும். தண்ணீர் சிக்கனம் இக்கனம் தேவை.

4. இசை நாற்காலி:

சிறுவர்களுக்கு என்று ஒருபோட்டி சிறுமியர்களுக்கென ஒரு போட்டி பாட்டு கேட்டுகிட்டே கவனத்தோடு நாற்காலியில் இடம் பிடிக்கவும். கவனமாக நீங்க இருக்கிறீங்களா... ஒரு தேர்வு.

5. உருளைக்கிழங்கு பொறுக்குதல்:

இவ்விளையாட்டில் இரண்டிற்கு மேற்பட்ட எத்தனை நபர்களும் விளையாடலாம்.

சில மீட்டர் இடைவெளியில் இரு பக்கமும் வரிசையாக எத்தனை நபர் விளையாடுகிறார்களோ அத்தனை கட்டங்கள் போட வேண்டும். ஒரு பக்கத்தில் உள்ள கட்டத்திற்குள் தேவைக்கேற்ப உருளைக்கிழங்குகள் வைத்திருக்க வேண்டும். எதிர்பக்கத்தில் உள்ள கட்டம் காலியாக இருக்கவேண்டும். மணி ஒலித்தவுடன் உருளைக்கிழங்கு இருக்கும் கட்டத்திற்கு முன் நிற்பவர்கள் அதிலிருந்து ஒன்று எடுத்து தனக்கு நேர்எதிரே இருக்கும் கட்டத்திற்குள் கொண்டுபோய் வைக்க வேண்டும். இப்படியாக ஒவ்வொன்றாக ஓடி வந்து எடுத்து முதலில் நிரப்புகிறவர்கள் வெற்றியாளர்களாக அறிவிக்கப்படுவர்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

6. ஊசியில் நூல் கோத்தல்:

அறுபது வயதுக்கு மேற்பட்ட தாத்தா பாட்டிக்குத்தான் இந்தப்போட்டி. எடுக்கவோ? கோக்கவோ? எடுத்துக் கோக்க வேண்டும். சிறுவராக இருக்கும். போதே காய்கறிகள், கீரை வகைகள் சாப்பிட்டால் தான் இப்ப கோக்க முடியும்.

7. கோலம் போடுதல்:

பெண்களுக்கான போட்டி. வாசலில் போடும் வண்ணக் கோலங்கள்! உங்கள் மன எழுச்சிகளை அந்த கோலத்தில் காணலாம். இளங்காலைப் பொழுதில் ஓசோனிலிருந்து வரும் தூய காற்று உங்களுக்கு இயற்கை தந்த இன்பப் பரிசு.

8. கயிறு இழுத்தல்:

நம்ம ஊர் இளைஞர்களை இரண்டு அணியாகப் பிரித்து அங்கே கிடக்கிற வடக்கயிறு ஆளுக்கொரு பக்கம் பிடித்து இழுக்கனும். இழுக்கும் போது கயிறு அறுந்தா நாங்க பொறுப்பில்லை!

9. மெதுவாக மிதிவண்டி ஓட்டுதல்:

வேகம்... சைக்கிள், வண்டி, வாகனங்கள் எதிலுமே வேகம்...வேகம்... ஆனா இங்கே மெதுவாக ஓட்டவேண்டும். காலை கீழே ஊன்றினால் போட்டியிலிருந்து நீக்கப்படுவீர்கள், வேகமாகப் போனாலும் நடுவர்கள் போட்டியிலிருந்து நீக்கிடுவார்கள். கவனமாகப் போய் பரிசைப் பெறுங்கள்.

10. பானை உடைத்தல்:

மேலே பானை தொங்கும். நீளகம்பு தருவோம். ஆனா துண்டுல உங்க கண்ணை இறுக்கமாகக் கட்டிவிடுவோம். பார்வையாளர்கள் கவனமாக இருக்கவேண்டும். இளைஞர்கள் வேகத்தில் வந்து உங்கள் தலையைப் பதம் பார்த்து விடக் கூடாது!

எல்லோரும் பார்த்து மகிழ்ச்சியாக இருங்கள்!

※※⁂⁂⁂※※

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com


www.Padasalai.Net www.CBSEtips.in

கவிதைப் பேழை

இயல் மூன்று

மணிமேகலை

தெரிந்து கொள்வோம்



சொல்லும் – பொருளும் :

சமயக்கணக்கர்	–	சமயத் தத்துவவாதிகள்	பாடைமாக்கள்	–	பலமொழி பேசும் மக்கள்
குழீஇ	–	ஒன்றுகூடி, குழுமி	தோம்	–	குற்றம்
கோட்டி	–	மன்றம்	வேதிகை	–	திண்ணை
தூணம்	–	தூண்	தாமம்	–	மாலை
விலோதம்	–	துணியாலான கொடி	செற்றம்	–	சினம்
வசி	–	மழை	கலாம்	–	போர், கலகம்
துறை	–	நீர்நிலையின் ஓரங்கள்	மதலை மாடம்	–	பெரிய மாடம்
விழவுமலி	–	விழாக்கள் மிகுந்த			
கதலிகைக் கொடி	–	சிறு, சிறு கொடி (சிறிது சிறிதாக பல கொடிகள்)			
காழூன்று கொடி	–	கொம்புகளில் கட்டும் கொடி			
துருத்தி	–	ஆற்றிடைக்குறை (ஆற்றின் நடுவில் உள்ள மணல்திட்டுகள்)			

இலக்கணக் குறிப்பு:

தோரணவீதியும்	–	எண்ணும்மை	தோமறு கோட்டியும்	–	எண்ணும்மை
மாற்றுமின்	–	ஏவல் வினைமுற்று	பரப்புமின்	–	ஏவல் வினைமுற்று
உறுபொருள்	–	உரிச்சொல் தொடர்	தாழ்பூந்துறை	–	வினைத்தொகை
நன்பொருள்	–	பண்புத்தொகை	தண்மணல்	–	பண்புத்தொகை

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

நல்லுரை - பண்புத்தொகை
பாங்கறிந்து - இரண்டாம் வேற்றுமைத்தொகை
காய்க்குலைக் கமுகு - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை
பூக்கொடி வல்லி - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை
முத்துத்தாமம - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை

பகுபத உறுப்பிலக்கணம் :

1. பரப்புமின் - பரப்பு + மின்

பரப்பு - பகுதி,
மின் - முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி.

2. அறைந்தனன் - அறை + த்(ந்) + த் + அன் + அன்

அறை - பகுதி,
த்(ந்) - ஆனது விகாரம்,
த் - இறந்தகால இடைநிலை,
அன் - சாரியை,
அன் - ஆண்பால் வினைமுற்று விகுதி.

பாடநூல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்

அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள் இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச்சொற்கள்

விடை: ஈ) தொகைச்சொற்கள்

குறுவினா

1. பழமணல் மாற்றுமின்; புதுமணல் பரப்புமின் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

இடம் : கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் இயற்றிய மணிமேகலைக் காப்பியத்தில் இடம்பெற்றிருக்கிறது இத்தொடர்.

பொருள் : விழாக்கள் நிறைந்த இம்மூதூரின் தெருக்களிலும் மன்றங்களிலும் பழைய மணலை மாற்றிப் புது மணலைப் பரப்புங்கள் என்று குறிப்பிடப்படுகிறது.

விளக்கம் : மணிமேகலைக் காப்பியத்தில் முப்பது காதைகளுள் முதல் காதையாக விளங்குவது விழாவறை காதை ஆகும். புகார் நகரில் இருபத்தெட்டு நாள் நடைபெறக்கூடிய இந்திரவிழா தொடங்க உள்ளது. இந்த அறிவிப்பை யானை மீது அமர்ந்து முரசறைவோன் அறிவித்தான். விழாக்கள் நிறைந்த இம்மூதூரின் தெருக்களிலும் மன்றங்களிலும் பழையமணலை மாற்றிப் புதிய மணலைப் பரப்புங்கள் என்று அறிவிக்கிறான்.

2. பட்டிமண்டபம், பட்டிமன்றம் - இரண்டும் ஒன்றா? விளக்கம் எழுதுக.

பட்டிமண்டபம் என்பது இலக்கிய வழக்கு. ஆனால் இன்று நடைமுறையில் பலரும் பட்டிமன்றம் என்றே குறிப்பிடுகிறார்கள். பேச்சு வழக்கும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

"மகத நன்நாட்டு வாள்வாய் வேந்தன்"
பகைப் புறத்துக் கொடுத்த பட்டிமண்டபம் எனச் சிலப்பதிகாரத்திலும்,
"பட்டிமண்டபத்துப் பாங்கு அறிந்து ஏறுமின்" என மணிமேகலையிலும்
"பட்டிமண்டபம் ஏற்றினை, ஏற்றினை;
எட்டினோடு இரண்டும் அறியனையே" என்று திருவாசகத்திலும்
"பன்னரும் கலை தெரி பட்டிமண்டபம்" எனக் கம்பராமாயணத்திலும்

இச்சொல் பயின்றுவருதலை அறியலாம்.

சிறுவினா

1. உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.

	உள்ளூர் விழா	இந்திரவிழா
1.	ஊர் நாட்டாண்மை,மணியம் ஊர்ப் பெரியோர், கோயில் குருக்கள், முதியோர், இளைஞர்கள் எல்லோரும் ஒருங்கே கூடி கோயில் முன்பாக அமர்ந்தனர்.	புகார் நகரில் இந்திரவிழா நடைபெறுவது குறித்து முரசறைவோன் நான்கு வகைப் படைகளும் சூழ அகன்ற முரசறைந்து "பசியும் பிணியும் பகையும் நீங்கி வசியும் வளனும் சுரக்க" அறிவித்தான். அயல்நாட்டினரும் அரசர், அமைச்சர் ஐம்பெருங்குழு, எண்பேராயம் அவையில் திரண்டிருந்தனர்.
2.	ஊர்த் திருவிழாவிற்கு நாள் குறித்தவுடன் ஊர் சாட்டல், ஊர் நுழைவாயிலிலே வேப்பிலை, மாவிலைத்தோரணங்கள்கட்டுதல்,வீடுகளுக்குச் சுண்ணாம்பு பூசுதல் கோயில்களுக்கு வண்ணம் பூசுதல் ஆகிய முன்னேற்பாடான ஆயத்தப் பணிகள் செய்தனர்.	தோரணம் கட்டிய தெருக்கள், மன்றங்களில் பூரண கும்பம், பொற்பாலிகை, பாவை விளக்கு மங்கலப் பொருள்கள் அழகுபடுத்தி வைக்கப்பட்டன. பாக்கு மரம், வாழைமரம் வஞ்சிக் கொடி, கரும்புகளையும் நட்டு வைத்தனர். தங்கத் தூண்களில் முத்துமாலைகள் தொங்கவிட்டனர்.
3.	ஊரவர் வேறுபாடின்றி ஒற்றுமையாக பட்டிமன்ற நிகழ்ச்சி வழியாக சமூகப் பிரச்சனைகளை விவாதித்து தீர்வு கண்டனர். தமிழகத்தின் பாரம்பரியக் கலைகளான தெருக்கூத்து, கரகாட்டம், பொய்க்கால் நிகழ்ச்சிகள் நடத்தினர்.	<u>பட்டிமண்டபம் ஏறுமின்</u> ஊர் மன்றங்களில் அவரவர் சமயத்திற்கு உரிய பொருளை வாதிட்டுத் தீர்வு கண்டனர்.
4.	உறவினர்களையும் விருந்தினர்களையும் அழைத்து திருவிழா நிகழ்ச்சிகளிலும் பங்குகொள்ளச் செய்தனர்.	கருத்துமாறுபாடு கொண்ட பகைவர்களிடம் கோபமும் பூசலும் கொள்ளாது தேவரும் மக்களும் ஒன்றுபட்டு இருபத்தெட்டு நாள்களிலும் உலவி வந்தனர்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. பெண்மையை முதன்மைப்படுத்தும் புரட்சிக் காப்பியம் .....

அ) சீவகசிந்தாமணி ஆ) சிலப்பதிகாரம் இ) மணிமேகலை ஈ) வளையாபதி

விடை: இ) மணிமேகலை

2. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடு.

அ) வசி - மழை ஆ) கோட்டி - மன்றம்

இ) தாமம் - மாலை ஈ) செற்றம் - இன்பம்

விடை: ஈ) செற்றம் - இன்பம்

3. பொருந்தாதனைத் தேர்ந்தெடு.

அ) தூதர் ஆ) சாரணர் இ) படைத்தலைவர் ஈ) புலவர்

விடை : ஈ) புலவர்

4. பின்வரும் கருத்துகளில் மணிமேகலை நூல் கூறும் கருத்து .....

அ) அன்பே சிவம் ஆ) உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே

இ) பசியும் நோயும் பகையும் நீங்குக ஈ) யாதும் ஊரே யாவரும் கேளிர்

விடை: இ) பசியும் நோயும் பகையும் நீங்குக

நிரப்புக

5. இந்திரவிழாவைக் குறிப்பிடும் காதை ..... **விடை: விழாவறைகாதை**
6. மணிமேகலையின் காதைகள் ..... **விடை: 30**
7. கூலம் என்பதன் பொருள் ..... **விடை: தானியம்**
8. இளங்கோவடிகள் சாத்தனாரை எவ்வாறு புகழ்ந்துள்ளார்?


விடை: தண்டமிழ் ஆசான் சாத்தன் நன்னூற் புலவன்

சிறுவினா

1. 'மணிமேகலை' - நூல் குறிப்புத் தருக.

கோவலனுக்கும் மாதவிக்கும் மகளாகப் பிறந்த மணிமேகலையின் துறவு வாழ்க்கையைக் கூறுவதால் மணிமேகலைத் துறவு என்ற பெயரும் மணிமேகலை நூலுக்கு உண்டு. பௌத்த சமயச் சார்புடையது. கதை அடிப்படையில் மணிமேகலையைச் சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியெனக் கூறுவர். முப்பது காதைகளைக் கொண்ட நூல்.

2. 'சீத்தலைச் சாத்தனார்' - குறிப்புத் தருக.


சீத்தலை சாத்தனார்

- மணிமேகலைக் காப்பியத்தை இயற்றியவர் சீத்தலைச் சாத்தனார்.
- சாத்தன் என்ற இயற்பெயர் கொண்ட இவர் திருச்சியைச் சேர்ந்த சீத்தலை என்ற ஊரில் பிறந்தவர் என்பர்.
- கூலம் எனப்படும் தானிய வணிகம் செய்தவர்.
- தண்டமிழ் ஆசான், சாத்தன், நன்னூற் புலவன் என்ற பெயர்களும் உண்டு.
- சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகளும், சாத்தனாரும் சமகாலத்தவர்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

3. ஐம்பெருங்குழு, எண்பேராயத்தை விவரி.

ஐம்பெருங்குழு

- அமைச்சர்
- சடங்கு செய்விப்போர்
- படைத்தலைவர்
- தூதர்
- சாரணர் (ஒற்றர்)

எண்பேராயம்

- கரணத்தியலவர்
- கரும விதிகள்
- கனகச்சுற்றம்
- கடைக்காப்பாளர்
- நகரமாந்தர்
- படைத்தலைவர்
- யானை வீரர்
- இவுளி மறவர்

நெடுவினா

1. மணிமேகலை நூலின் விழாவறை காதையில் சொல்லப்படும் கருத்துகளைக் கூறுக.

இந்திர விழாவைக் காண வந்தோர்:

- புகார் நகரில் உலகியல், தத்துவம், வீடுபேறு ஆகிய பொருள்களை விளக்குபவராகிய சமயவாதிகள் கூடி உள்ளனர்.
- காலக்கணிதர், கடவுளர், பல மொழி பேசும் அயர்நாட்டினர், ஐம்பெருங்குழு மற்றும் எண்பேராயத்தைச் சேர்ந்தவர்களும் அரசவையில் ஒன்று திரண்டு உள்ளனர்.

விழா முன்னேற்பாடுகள்:

- தோரணம் கட்டிய தெருக்களிலும், மன்றங்களிலும் பூரண கும்பம், பொற்பாலிகை, பாவை விளக்கு போன்ற மங்கலப் பொருள்களை அழகுபடுத்தி வையுங்கள்.
- குலை முற்றிய பாக்கு மரத்தையும், வாழை மரத்தையும், வஞ்சிக் கொடியையும், பூங்கொடிகளையும், கரும்பையும் நட்டு வையுங்கள். வீடுகளின் முன் தெருத் திண்ணையின் தங்கத் தூண்களில் முத்து மாலைகளைத் தொங்க விடுங்கள்.
- தெருக்களிலும், மன்றங்களிலும் பழைய மணலை மாற்றிப் புதிய மணலைப் பரப்புங்கள். துகில் கொடிகளை மாடங்களின் வாயில்களில் சேர்த்துக் கட்டுங்கள்.

பட்டிமண்டபம் ஏறுக:

பந்தல்களிலும், ஊர்மன்றங்களிலும் நல்லவை பற்றிச் சொற்பொழிவாற்றுங்கள். சமயத்திற்கு உரிய உட்பொருள் அறிந்து வாதிடுவோர் பட்டிமண்டப முறைகளைத் தெரிந்து வாதிட்டுத் தீர்வு காணுங்கள்.

சினமும் பூசலும் கைவிடுக:

- பகைவரிடம் கோபமும், பூசலும் கொள்ளாது விலகி நில்லுங்கள்.
- மணல் குன்று, பூஞ்சோலை, ஆற்றிடைக் குறை, நிழல் தரும் தண்ணீர்த் துறைகளில் நடைபெறும் இருபத்தெட்டு நாள் விழா நிகழ்வுகளில் தேவரும் மக்களும் ஒன்றுபட்டு மகிழ்வுடன் உலாவி வருவர் என்பதனை நன்கு அறியுங்கள்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

வாழ்த்து:

காலாட் படையினரும், தேர்ப் படையினரும், குதிரைப் படையினரும், யானைப் படையினரும் சூழ்ந்து வர அகன்ற முரசினை முரசறைவோன் அறைந்தான்.

"பசியும் நோயும் பகையும் நீங்கி மழையும் வளமும் எங்கும் பெருகுவதாக" என்று வாழ்த்தி முரசறைந்தான்.

கற்பவை கற்றபின்

பக்கம்: 71

1. உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவிற்கான அழைப்பிதழ் ஒன்றினை வடிவமைக்க.

ஸ்ரீ அருள்மிகு கோட்டை மாரியம்மன் மாசிப் பெருவிழா

திண்டுக்கல்

திருவிழா அழைப்பிதழ்

அன்பார்ந்த கோட்டை மாரியம்மன் பக்தகோடிகளே!

இந்தாண்டு ஸ்ரீஹேவிளம்பி வருடம் மாசி மாதம் 11ஆம் நாள் திண்டுக்கல் அருள்மிகு ஸ்ரீ கோட்டை மாரியம்மன் மாசிப் பெருவிழா நடைபெறும். அப்பொழுது கீழ்க்குறித்த நாள்களில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறும். பக்தகோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவண்,
நிர்வாகக் குழுவினர்,
ஸ்ரீ அ/மி கோட்டை மாரியம்மன்
மாசிப் பெருவிழாக் குழுவினர்
திண்டுக்கல்.

நிகழ்ச்சி நிரல்

நாள்	நிகழ்ச்சி	சிறப்புச் செய்பவர்கள்
12.3.18 வியாழன்	விழா கொடியேற்றல்	
13.3.18 வெள்ளி	பூத்தமலர் பூச்சொரிதல் விழா	வணிகர்கள் சங்கம்
15.3.18 ஞாயிறு	சாமி சாட்டுதல்	
புதன் - வெள்ளி	கொடிமரத்துக்கு மஞ்சள் நீர் ஊற்றுதல்	
வியாழன்	அங்குவிலாஸ் வணிகக் குழுமத்தின் மண்டகப்படி	அங்குவிலாஸ் புகையிலைக் கம்பெனி
வெள்ளி	பூக்குழி இறங்குதல்	பக்தர்கள்
சனி	தசாவதாரம்	அருள் நிகழ்ச்சிகள்
ஞாயிறு	நாடகம்(தெருக்கூத்து)	மருதப்பா குழுவினர்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

2. குறிப்புகளைக் கொண்டு ஓர் இயற்கைக் காட்சியை விரித்தெழுதுக.

பூஞ்சோலை - சிரிக்கும் மலர்கள் - பசுமையான புல்வெளி - கூவும் குயில் - வீசும் தென்றல் -விளையாடும் குழந்தைகள் - அழகிய காட்சிகள்.

அந்திவானம் செம்மை படர்ந்து செக்கச் செவேல் எனத் தோன்றியது. பச்சை மரங்களடர்ந்த சோலை, சோலைகளில் பூச்செடிகள், செடிகள் தோறும் மலர்கள், அம்மலர்கள் சிரிப்பை உதிர்க்கும். எங்கும் மணம் பரப்பும் மகரந்தங்கள்! வண்டினங்கள் வந்து அமரும்.

பச்சைப் போர்வை போர்த்தியது போல் பசும்புல் தரை, புல் நுனி முழுவதும் வரகரசி ஒட்டிக் கொண்டது போல் சிறுசிறு விதைகள், தனிமையில் அமர்ந்து கூவும் குயில், சோகத்தைக் கீதமாக இசைக்கும் மாங்குயில்கள்!

தெற்குப் பகுதியில் சில்லென்று வீசும் தென்றல் பொதிகைச் சந்தனத் தாது பொங்கும் வாசனை! பசும்புல் தரையில் எங்கும் சிரித்திடும் பூக்கள்! அழகிய குழந்தைகள் வண்ண உடையில்! இத்தகைய இயற்கைக் காட்சிகள்! "கைபுனைந்து இயற்றாக் கவின் பெறு வனப்பு இயற்கை" என்னே அழகு! வண்ணத் தியல்பு!

※※⁂⁂⁂※※

விரிவானம்

இயல் மூன்று — அகழாய்வுகள் — பட்டிமன்றம்

பாடநூல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. பின்வருவனவற்றுள் தவறான செய்தியைத் தரும் கூற்று.

அ) அரிக்கமேடு அகழாய்வில் ரோமானிய நாணயங்கள் கிடைத்தன.

ஆ) புறப்பொருள் வெண்பாமாலை என்னும் இலக்கண நூலிலும் ஏறுகோள் குறித்துக் கூறப்பட்டுள்ளது.

இ) எட்டு, பத்து ஆகிய எண்ணுப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது.

ஈ) பட்டிமண்டபம் பற்றிய குறிப்பு மணிமேகலையில் காணப்படுகிறது.

விடை: இ) எட்டு, பத்து ஆகிய எண்ணுப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது.

குறுவினா

1. தொல்லியல் ஆதாரங்கள் காணப்படும் இடங்களை அகழாய்வு செய்ய வேண்டும். ஏன்?

- தொல்லியல் அகழாய்வு செய்தல் என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட நிலப்பகுதியில் செதுக்கிச் செதுக்கி ஆராய்தல் ஆகும். அகழாய்வு வரலாறு முழுமைபெற உதவுகிறது.
- அகழாய்வில் கிடைத்த பொருள்கள் நாம் வாழ்ந்த காலத்தை மட்டுமின்றி நம் வரலாற்றையும் உணர்த்துகின்றன.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

சிறுவினா

1. வியத்தகு அறிவியல் விரவிக் கிடக்கும் நிலையில் அகழாய்வின் தேவை குறித்த உங்களது கருத்துகளைத் தொகுத்துரைக்க.

- அறிவியல் உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பழைய தலைமுறையைப் பற்றித் தெரிந்து என் செய்வது? செல்லிடப்பேசிக்குள்ளே உலகம் சுற்றும் வேளையில் அகழாய்வில் கிடைக்கும் செல்லாக் காசுகள் வந்தென்ன செய்ய முடியும்? மடிக்கணினி மலைக்க வைக்கிறது. அதையெல்லாம் விட்டுவிட்டு மண் ஓடுகள் இறந்தோரைச் சுமந்த மண்தாழிகள் கண்டறிந்து என்ன சாதிக்கமுடியும்? இவ்வாறு இருக்க, அகழாய்வு என்ன செய்ய இருக்கிறது?
- அரிக்கமேடு அகழாய்வில் ரோமானிய மட்பாண்டங்கள் கிடைத்தன. அதனால் ரோமானியர்களுக்கும் நமக்கும் இருந்த வணிகத் தொடர்பு உறுதிப்படுத்தப்பட்டது.
- ஆதிச்சநல்லூரில் நடத்தப்பட்ட அகழாய்வில் ஏராளமான முதுமக்கள் தாழிகள் கண்டு பிடிக்கப்பட்டன.
- நம் முன்னோர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அறிவியல் அடிப்படையிலான பண்பாட்டு வாழ்க்கையை வாழ்நதவர்கள். தமிழர்களின் உணவு, உடை, வாழிடம் முதலியன இயற்கையைச் சிதைக்காத இயல்புகளைக் கொண்டவை என்பதற்கு அகழாய்வில் கண்ட சான்றுகளே ஆவணங்களாகத் திகழ்கின்றன.

நெடுவினா

1. பண்பாட்டுக் கூறுகளைப் பேணிப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டிய செயல்களைத் தொகுத்து எழுதுக.

மனிதன் தோன்றிப் பல்லாயிரம் ஆண்டுகள் கடந்துவிட்டன. இன்றும் பண்பாட்டு அளவில் சிறந்த வாழ்வை வெளிப்படுத்திய தமிழர்களின் வரலாற்றை அறிந்து கொள்ள தமிழகத்தின் தொன்மையான பகுதிகளைக் கொண்டும் மக்கள் பயன்படுத்திய பழமையான கருவிகளைக் கொண்டும் இசைக் கருவிகளைக் கொண்டும் அறிய முடிகிறது. அவற்றைப் பேணிக் காக்க வேண்டும். இது நம் கடமையாகும்.

பண்பாட்டுக் கூறு - ஏறுதழுவுதல்:

வீரத்திற்கும் விளைச்சலுக்கும் செழிப்பிற்கும் செல்வத்திற்கும் தமிழர்களால் அடையாளப் படுத்தப்படுபவை மாடுகள். முல்லை மற்றும் மருத நிலங்களில் கால் கொண்டு தமிழர் தம் வாழ்வோடு பின்னிப் பிணைந்து பண்பாடாகி உள்ளது ஏறுதழுவுதல். இது தமிழர்களின் நாகரிகத்தை உணர்த்தும் விளையாட்டு. இளைஞர்களின் வீரத்தைப் பெருமிதப்படுத்தும் பண்பாட்டு நிகழ்வு. முன்னோர் வழிநின்று இளந்தலைமுறையினர் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்று; காதலும் வீரமும் பழந்தமிழரின் பண்பாட்டுத் தடயங்கள். வீரமும் அன்பும் ஏறுதழுவுதலின் விளைநிலங்களாக விளங்குகிறது என்பதை வளரும் தலைமுறையினர்க்கு எடுத்துக்காட்ட ஒரு வாய்ப்பு.

பண்பாட்டுக்கூறு - அகழாய்வு:

அகழாய்வு என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட நிலப்பகுதியில் செதுக்கிச் செதுக்கி ஆராய்தல் ஆகும். ஆய்வு என்பது அறிவின் வெளிப்பாடு. நமது முன்னோர்கள் வாழ்ந்து பெற்ற பட்டறிவை வகைப்படுத்தி தொகுத்துப் பார்ப்பதற்குத் தொல்லியல் ஆய்வே பெருங்கல்வியாக அமைகின்றது. பண்பாட்டு எச்சங்களாகத் திகழும் இவ்வகையான ஆய்வுகளைக் கண்டு பயனடையலாம்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பண்பாட்டுக்கூறு - திருவிழாக்கள்:

கி.பி. 2 ஆம் நூற்றாண்டோடு தொடர்புடைய புகார்நகரில் கொண்டாடப்பெற்ற இந்திரவிழா சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் விவரிக்கப்படுகிறது. கோயில் விழாக்களில் பண்பாட்டுக் கூறுகளாக உள்ள ஓயிலாட்டம், மயிலாட்டம், நாதசுரம், பரதம், பொய்க்கால் குதிரை ஆட்டம் எனப்பல கலைகள் நடந்தேறுகின்றன. விழா நிகழ்ச்சியில் பட்டிமன்றம், தெருக்கூத்து நாடகங்களும் நடைபெறுகின்றன.

இத்தகைய பண்பாட்டுக் கூறுகளையும், கலைநிகழ்வுகளையும் பேணிப் பாதுகாத்து இளந்தலைமுறையினருக்கும் இனி வரும் தலைமுறையினருக்கும் காட்டுவது நம் கடமையாகும்.

கூடுதல் வினாக்கள்

நிரப்புக.

1. அறிவின் வெளிப்பாடாய்த் திகழ்வது ..... **விடை: ஆய்வு**
2. பல்லாவரத்தில் ஆய்வு நடந்த ஆண்டு ..... **விடை: 1863**

நெடுவினா

1. 'அகழாய்வு' குறித்து பாடப்பகுதி கருத்துகளைக் கூறுக.

முன்னுரை:

அகழாய்வு என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட நிலப்பகுதியில் செதுக்கிச் செதுக்கி ஆராய்தல் ஆகும். ஆய்வு என்பது அறிவின் வெளிப்பாடு. நமது முன்னோர்கள் வாழ்ந்து பெற்ற பட்டறிவை வகைப்படுத்தி தொகுத்துப் பார்ப்பதற்குத் தொல்லியல் ஆய்வே பெருங்கல்வியாக அமைகின்றது. பண்பாட்டு எச்சங்களாகத் திகழும் இவ்வகையான ஆய்வுகளைக் கண்டு பயனடையலாம்.

கீழடி அகழாய்வு:

மதுரை நகருக்கு அருகே உள்ள கீழடி என்னுமிடத்தில் நடத்தப்பட்ட அகழாய்வில் சுடுமண் பொருள்கள், உலோகப் பொருள்கள், முத்துகள், கிளிஞ்சல் பொருள்கள், மான்கொம்புகள், சோழிகள், கிண்ணங்கள், துளையிடப்பட்ட பாத்திரங்கள், இரத்தினக்கல் வகைகள், பழுப்பு, கறுப்பு, சிவப்பு-கறுப்புப் பானைகள், சதுரங்கக் காய்கள், தானியங்களைச் சேகரிக்கும் கலன்கள், செம்பு, சங்கு வளையல்கள், எலும்பினால் ஆன கூர்முனைகள், தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், கற்கருவிகள், நீர் சேகரிக்கும் பெரிய மட்கலன்கள், சிறிய குடுவைகள், உறைக்கிணறுகள், சுடுமண் கூரை ஓடுகள் போன்ற பல்வேறு தொல்லியல் பொருள்கள் கிடைத்துள்ளன. மூன்று வெவ்வேறு காலகட்டங்களைச் சேர்ந்த இவற்றுள் தொன்மையானவை சுமார் 2300 ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனக் கருதப்படுகின்றன. இதுவரை அகழாய்வு செய்யப்பட்ட பெரும்பான்மையான இடங்கள், இறப்புத் தொடர்பான தடயங்களை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன. ஆனால், கீழடியில் கண்டறியப்பட்டுள்ள முழுமையான வாழ்விடப்பகுதியும், செங்கல் கட்டுமானங்களும், இதரப் பொருள்களும் தமிழரின் உயரிய நாகரிகத்தைக் கண்முன் காட்டும் சாட்சிகளாய் அமைந்துள்ளன.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பல்லாவரம் அகழாய்வு:

150 ஆண்டுகளுக்கு முன்னால் 1863ஆம் ஆண்டு இராபர்ட் புரூஸ்புட் என்னும் தொல்லியல் அறிஞர் சென்னைப் பல்லாவரம் செம்மண் மேட்டுப்பகுதியில் எலும்பையும் கற்கருவியையும் கண்டுபிடித்தார். இந்தக் கற்கருவிதான் இந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட முதல் கல்லாயுதம். இந்தக் கல்லாயுதம் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பே, ரோமானியர்களின் பழங்காசுகளைக் கோவையில் கண்டெடுத்தோம்.

அரிக்கமேடு:

அரிக்கமேடு அகழாய்வில் ரோமானிய மட்பாண்டங்கள் கிடைத்தன. அதனால், ரோமானியர்களுக்கும், நமக்கும் இருந்த வணிகத் தொடர்பு உறுதிப்படுத்தப்பட்டது.

ஆதிச்சநல்லூர்:

1914ஆம் ஆண்டு ஆதிச்சநல்லூரில் நடத்தப்பட்ட அகழாய்வில் ஏராளமான முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. உள்ளங்கையில் உலகம் இருக்கிறது. மடிக்கணினி மலைக்க வைக்கிறது. நம் முன்னோர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, அறிவியல் அடிப்படையிலான பண்பாட்டு வாழ்க்கையை வாழ்ந்தவர்கள். தமிழர்களின் உணவு, உடை, வாழிடம் முதலியன இயற்கையைச் சிதைக்காத இயல்புகளைக் கொண்டவை என்பதற்கு அகழாய்வில் கண்ட சான்றுகளே ஆவணங்களாகத் திகழ்கின்றன.

அகழாய்வின் பயனும் முடிவும்:

அகழாய்வில் கிடைத்த ஆவணங்களோ அடுத்த தலைமுறைக்கு நம் பண்பாட்டின் மேன்மையைப் பறைசாற்றும். எனவே, அகழாய்வு என்பது நமக்கு மிகமிகத் தேவையான செயல்பாடு. அகழாய்வு தரும் சான்றுகளின் மூலம் நமது வளமான வரலாற்றையும் பண்பாட்டையும் அறிந்துகொண்டு வலிமையான எதிர்காலத்தை உருவாக்க முடியும். இயற்கையோடு இணைந்த பண்பாட்டு வாழ்க்கை நம்முடையது. மக்கள் அறிவியல் என்கிற மகத்தான சிந்தனையைப் புரிந்துகொள்வதற்கும் நமது பண்பாட்டின் மேன்மைகளை இன்றைய தலைமுறை எடுத்துக்கொண்டு சிறப்பாக வாழ்வதற்கும் அகழாய்வு துணைநிற்கின்றது.

கற்பவை கற்றபின் பக்கம்: 77

1. இளைஞர்களிடையே பண்பாட்டினை வளர்ப்பதில் பெரும்பங்கு வகிப்பது குடும்பமா? சமூகமா? - என்னும் தலைப்பில் சொற்போர் நிகழ்த்துக.

சொற்போர்

கதாபாத்திரங்கள்
நடுவர் : கபிலன் - தமிழாசிரியர், குடும்பமே : அமுதா (மாணவி), சமூகமே : வாணன் (மாணவன்)

நடுவர் : அவையோருக்கு வணக்கம்!

இன்று நம் இலக்கிய மன்ற விழாவிற்கு வருகை தந்திருக்கும் அனைவருக்கும் இனிய மாலை வணக்கம்!

இன்றைய சூழலில் நம் இளைய சமுதாயத்துக்கு பல வாய்ப்புகள், வசதிகள் உலகைப்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பற்றி அறிய பல வாயில்கள் உள்ளன, எனினும் பண்பாட்டைக் கற்றுக் கொடுப்பது எது என ஆராயும் போது ஒரு சொற்போர் நடத்த வேண்டும். மாணவர்களின் சிந்தனைகளை அறிய வேண்டும் என்ற அவா எழுந்தது! அதனால் உருவானதே இத்தலைப்பு.

இப்போது குடும்பமே என சொற்போர் நிகழ்த்த வருகிறார் அமுதா.

அமுதா : அனைவருக்கும் இனிய வணக்கம்...

ஐயா! "நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்" என்பார்கள் "சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே" என்பார்கள். பெற்றோர்களே முதல் ஆசான் இவற்றையெல்லாம் கேள்விப்பட்டிருப்பீர்கள். இந்தக் கூற்றுகள் எல்லாம் அதனை உணர்த்துகிறது. ஒரு குழந்தை பிறந்து வளர்ந்து வரும் குடும்பச் சூழ்நிலைதான் பண்பாட்டினை வளர்ப்பதில் பெரும்பங்கு வகிக்கிறது அல்லவா!

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே. அவன் நல்லவன் ஆவதும் தீயவன் ஆவதும் அன்னை வளர்ப்பினிலே" என்ற கவிஞனின் அடிகளைச் சான்றாக்கி நற்பண்பாட்டினை வளர்ப்பது குடும்பமே.... குடும்பமே... என்று கூறி என் சொற்போரை நிறைவு செய்கிறேன். நன்றி வணக்கம்!

நடுவர் : ஆகா! அருமையான கருத்துகள் வாங்க வாணன்ஸ உங்கள் கருத்தை வலியுறுத்துங்கள் பார்க்கலாம்.

வாணன் : சமூகமே

ஐயா! அமுதா எந்த நூற்றாண்டில் இருக்கிறாள் என்றே தெரியவில்லை! நீங்களே சொல்லுங்கள்! ஒரு குழந்தை 3வயது வரைதான் இப்போதெல்லாம் குடும்ப பராமரிப்பில் இருக்குது! மூணு வயதிலே சமூகத்துக்கு வந்துடுது ஐயா...

தன் ஆசிரியரைப் பார்க்கிறது. தன் சக மாணவ, மாணவியரை பார்க்கிறார்கள். வண்டி ஓட்டும் ஓட்டுநர் முதல் ஆயா வரை அந்த குழந்தைக்குள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறார்கள்.

வளர்கிறான்... சமூகத்தின் பல செய்தி சாளரங்கள் திறக்கின்றன. தன்னையும் அறியாமல் அவற்றை ஆராய்கிறான்; நன்மை தீமை அறிகிறான்; அவன் மன வலிமையைப் பொறுத்து பண்பாட்டைக் காப்பவனாகவோ அல்லது மீறுபவனாகவோ மாறுகிறான். எனவே சமூகமே பெரும்பங்கு வகிக்கிறது. நன்றி வணக்கம்!

நடுவர் : இருவருடைய உரையைக் கேட்கும் போது, பண்பாட்டைக் கற்றுக் கொடுப்பது குடும்பமாக இருந்தாலும் அதனை வளர்த்தெடுக்கும் பங்கு சமூகத்தையே சார்ந்தது.... நன்றி வணக்கம்!

2. தொல்லியல் துறை சார்ந்த அலுவலர் ஒருவரிடம் நேர்காணல் நிகழ்த்துவதற்கான வினாப்பட்டியலை உருவாக்குக.

ஐயா, வணக்கம்!

- தமிழகத்தில் தொன்மையான பகுதிகள் என்று எப்படி வரையறைப்படுத்துவது?
- கீழடி ஆய்வு எந்த வரலாற்றை அல்லது பின்புலத்தை எடுத்துச் சொல்வதாக இருக்கிறது என்பது பற்றி விளக்கிச் சொல்லுங்களேன்.
- ஐயா! இந்த பிராமி எழுத்துகள் என்பது எந்த மொழிக்குரியது?

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

- ஆதிச்சநல்லூரில் நடத்தப்பட்ட அகழாய்வில் மட்டும் ஏராளமான முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன என்று ஆய்வறிக்கை குறிப்பிடுகின்றன. ஏன் அங்குமட்டும் இது போன்ற தடயங்கள் அதிகமாக உள்ளன என்பதற்குக் காரணங்கள் ஏதேனும் உண்டா?
- 'அறிவியல் மக்களுக்காகவே' என்ற கொள்கையை சற்று விளக்கிச் சொல்லுங்களேன்.
- மதுரைக்கு அருகில் உள்ள கீழடியில் இறப்புத் தடயங்கள் ஏதேனும் கிடைத்துள்ளதா?
- அகழாய்வு செய்யக் கூடிய இடங்களில் பெரும்பாலும் இறப்புப் பற்றிய தடயங்கள் அதிகமாகக் கிடைத்திருக்கின்றன என்று சொல்கிறார்கள் இதற்கான காரணத்தை விளக்கிச் சொல்ல முடியுமா?
- கடலுக்குள் ஆய்வுகள் இதுவரை செய்யப்பட்டிருக்கின்றனவா? பூம்புகார் நகர கடல் பகுதிகளில் செய்யப்பட்ட ஆய்வு போல் இன்றைய காலக்கட்டங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டனவா? அப்படியானால் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட போது என்னென்ன தடயங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன?

இதுவரையிலும் தாங்கள் கூறிய அகழாய்வு பற்றிய செய்திகள் பயனுறு வகையில் அமைந்திருந்தன.

மிக்க நன்றி!

3. உங்கள் ஊருக்கு அருகில் உள்ள தொன்மையான இடத்தைப் பார்வையிட்டுக் குறிப்பு எழுதுக.

எங்கள் ஊருக்கு அருகில் உள்ள தொன்மையான இடம் : வளவூர்

குறிப்புகள்:

எங்கள் ஊருக்கு அருகில் 150 ஆண்டுகளுக்கு முன் கடல் கோளால் கொள்ளப்பட்ட வளவூர் என்ற ஊரை அகழாய்வு செய்தனர். நான் அங்கு சென்று பார்த்த போது மிகவும் வியந்து போனேன்.

அக்கால மன்னன் கட்டிய அரண்மனைப் பகுதி தெரிந்தது. மக்கள் வழிபட்ட தெய்வத்திருமேனி வியப்பிற்குரியதாய் அரிதான உலோகத்தால் செய்யப்பட்டிருந்தது. அக்கால போர்வீரர்கள் பயன்படுத்திய ஆயுதம் சிதைந்துபோன நிலையில் கிடைத்தது மக்களின் உடை, வாழ்விடம், பயன்படுத்திய அணிமணிகள் ஆடம்பரமாய் இருந்ததற்கான சான்றுகள் கிடைத்திருந்தன. பிறநாடுகளுடன் கடல் வாணிகம் மேற்கொண்டதற்கான சான்றுகளும் இருந்தன. நம் முன்னோர்களின் கடந்த காலத்தை எண்ணி வியந்தேன்.

※※⁂⁂⁂※※

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கற்கண்டு

இயல் மூன்று

வல்லினம் மிகும் இடங்கள்

கற்பவை கற்றபின்

பக்கம்: 80

1. வல்லினம் மிகலமா?

அ) பெட்டிச் செய்தி
ஆ) விழாக் குழு
இ) கிளிப் பேச்சு
ஈ) தமிழ்த் தேன்
உ) தைப் பூசம்
ஊ) கூடக் கொடு
எ) கத்தியை விடக் கூர்மை
ஏ) கார்ப் பருவம்

2. தொடர் தரும் பொருளைக் கூறுக.

அ) சின்னக்கொடி - சின்னம் வரையப்பட்ட கொடி
சின்ன கொடி - சிறிய கொடி
ஆ) தோப்புக்கள் - தோப்பிலிருந்து இறக்கிவரப்பட்ட கள்
தோப்புகள் - தென்னந்தோப்புகள் பலவுண்டு
இ) கடைப்பிடி - கொள்கையைக் கடைப்பிடிப்பது
கடைபிடி - வாணிகம் தொடங்கக் கடை பிடித்தார்
ஈ) நடுக்கல் - அடையாளமாக நடுவது; நடுக்கல் ஊன்றினோம்.
நடுகல் - நினைவுச் சின்னம்
உ) கைம்மாறு - செய்த உதவி
கைமாறு - கையில் உள்ள மாறு(விளக்குமாறு)
ஊ) பொய்ச்சொல் - நீ சொன்னது பொய்ச்சொல்
பொய் சொல் - பொய் சொல்வது தவறு

3. சிந்தனை வினா:

நாளிதழ்கள் சிலவற்றில் வல்லினம் மிகவேண்டிய இடத்தில் மிகாமல் எழுதி வருவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவ்வாறு எழுதுவது மொழிக்கு வளம் சேர்க்குமா? வல்லினம் மிக வேண்டியதன் முக்கியத்துவத்தை எழுதுக.

அதற்க்கு - தவறு

அதற்கு = அது + அன் + கு
அது (சுட்டுப்பெயர்) + அன்(சாரியை) + கு(வேற்றுமை உருபு)
அதன் + கு = அதற்கு - என்பதே சரி
வல்லொற்றுக்கு அருகில் இன்னொரு வல்லினம் மிகாது.
அதற்கு என்றே எழுத வேண்டும்
எ.கா: இந்தப் பொருள் வேண்டாம். அதற்குப் பதிலாக இதை வைத்துக்கொள்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கடைபிடித்தல் - கடைப்பிடித்தல்

கடைபிடித்தல் - கடையைப் பிடித்தல்

கடைப்பிடித்தல் - பின்பற்றுதல்

இதில் கடைபிடி என்பது கடையைப்பிடி என்று பொருள், அதே சொல்லில் வல்லினம் மிகுந்து 'கடைப்பிடி' என வரும் போது பின்பற்றுதல் என்னும் பொருள் தரும்.

எ.கா: சேகர் புதிதாக வாணிகம் தொடங்கக் கடை பிடித்தார்.

நாங்கள் என்றும் தூய்மையைக் கடைப்பிடிப்போம்.

எனவே வல்லினம் இட்டு எழுதுவதில் கவனம் தேவை!

4. உரிய இடங்களில் வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

பழங்கால மக்களின் நாகரிகம், பண்பாடு தொடர்பான வரலாறுகளை அகழாய்வில் கிடைக்கின்றப் பொருள்களும் உறுதிபடுத்துகின்றன. பல்வேறு இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வகையில் ஆய்வு நடைபெறுகின்ற இடங்களில் கீழடியும் ஒன்று.

கீழடியில் வாழ்ந்த மக்களில் பலர்ச் செல்வந்தர்களாக இருந்துள்ளனர் என்பதை அகழாய்வில் கிடைத்தப் பொருள்கள் நமக்கு உணர்த்துகின்றன. இங்குக் குறைவான எண்ணிக்கையில்தான் தங்கத்தினாலானப் பொருள்கள் கிடைக்கின்றன.

மேலும் இரும்பைப் பயன்படுத்திச் செய்தக் கோடரி, குத்தீட்டிகள், முதலான கருவிகளும் யானைத்தந்தத்தினால் செய்தச் சீப்பு, மோதிரம், பகடை, காதணிகள். கண்ணாடிப் பொருள்களில் உருவாக்கிய மணிகள், வளையல், தோடுப் போன்றவையும் கிடைத்துள்ளன.

மொழியை ஆள்வோம்

பக்கம்: 82

படித்துச் சுவைக்க.

ஆராரோ ஆரிராரோ ஆராரோ ஆரிராரோ
தூங்காத கண்ணே உனைத் தூங்க வைப்பேன் ஆரிராரோ
மாம்பழத்தைக் கீறி வயலுக்கு உரம்போட்டுத்
தேன் பார்த்து நெல்விளையும் செல்வந்தனார் புத்திரனோ!
வெள்ளித்தேர் பூட்டி மேகம்போல் மாடுகட்டி
அள்ளிப் படியளக்கும் அதிர்ஷ்டமுள்ள புத்திரனோ
முத்துச் சிரிப்பழகா முல்லைப்பூப் பல்லழகா
தொட்டில் கட்டித் தாலாட்ட தூக்கம் வருமோடா
கதிரறுக்கும் நேரத்திலே கட்டியுன்னைத் தோளிலிட்டால்
மதியத்து வெயிலிலே மயக்கமும்தான் வாராதோ
வயலிலே வேலை செய்வேன் வரப்பினிலே போட்டிடுவேன்
வயலைவிட்டு ஏறுமுன்னம் வாய்விட்டு அழுவாயோ?

- நாட்டுப்புறப்பாட்டு, தகவலாளர்: வேலம்மாள்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பொன்மொழிகளை மொழி பெயர்க்க.

1. **A nation's culture resides in the hearts and in the soul of its people -Mahatma Gandhi**

   நம் நாட்டினுடைய பண்பாட்டினை மக்கள் அனைவரும் தம் இதயங்களிலும், ஆத்மாவிலும் நிலைத்திருக்கச் செய்ய வேண்டும்.

2. **The art of people is a true mirror to their minds - Jawaharlal Nehru**

   மக்களின் கலை உணர்வே அவர்களின் உள்ளத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி

3. **The biggest problem is the lack of love and charity - Mother Teresa**

   அன்பு செலுத்துதல், தர்மம் செய்தல் இவற்றின் குறைபாடே, மிகப்பெரிய பிரச்சனையாய் உள்ளது.

4. **You have to dream before your dreams can come true - A.P.J. Abdul Kalam**

   உங்கள் கனவு நனவாகும் வரை, கனவு காணுங்கள்.

5. **Winners don't do different things; they do things differently - Shiv Khera**

   வெற்றியாளர்கள் வித்தியாசமான செயல்களைச் செய்வதில்லை மாறாக ஒவ்வொரு செயலையும் வித்தியாசமாக செய்கிறார்கள்.

வடிவம் மாற்றுக

பின்வரும் கருத்துகளை உள்வாங்கிக் கொண்டு, வரிசைப்படுத்தி முறையான பத்தியாக்குக.

1. உலகின் மிகப்பெரிய கல்மரப் படிமமும் இங்கேதான் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
2. டைனோசர்கள் உலாவித் திரிந்த தமிழ்மண் என்று அரியலூர் பெரம்பலூர் மாவட்டங்கள் அறியப்படுகின்றன. பெரம்பலூர் மாவட்டத்தில் கடல்பகுதி இருந்துள்ளது என்பதை அங்குக் கிடைத்துள்ள ஆதாரங்கள் உறுதி செய்கின்றன.
3. இங்குக் கல்லாகிப் போன டைனோசர் முட்டைகள், பாறைப் படிமமாகக் கிடைத்த கடல் நத்தை, டைனோசரின் வால்பகுதி, கடல் கிளிஞ்சல்களின் பாறைப் படிமங்கள் போன்றவை கிடைத்துள்ளன.
4. தமிழ்மக்களின் தொன்மையை மீட்டெடுப்பதுடன் நாம் வாழ்கின்ற நிலப்பகுதியின் வரலாற்றையும் தெரிந்துகொள்ள அரியலூரும் பெரம்பலூரும் அரிய ஊர்களாய்த் திகழ்கின்றன.

விடை:

4 தமிழ் மக்களின் தொன்மையை மீட்டெடுப்பதுடன் நாம் வாழ்கின்ற நிலப்பகுதியின் வரலாற்றையும் தெரிந்துகொள்ள அரியலூரும் பெரம்பலூரும் அரிய ஊர்களாய்த் திகழ்கின்றன. **2** டைனோசர்கள் உலாவித் திரிந்த தமிழ் மண் என்று அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்கள் அறியப்படுகின்றன. பெரம்பலூர் மாவட்டத்தில் கடல்பகுதி இருந்துள்ளது என்பதை அங்குக் கிடைத்துள்ள ஆதாரங்கள் உறுதி செய்கின்றன. **3** இங்குக் கல்லாகிப் போன டைனோசர் முட்டைகள், பாறைப் படிமமாகக் கிடைத்த கடல் நத்தை, டைனோசரின் வால்பகுதி, கடல் கிளிஞ்சல்களின் பாறைப் படிமங்கள் போன்றவை கிடைத்துள்ளன. **1** உலகின் மிகப்பெரிய கல்மரப் படிமமும் இங்கேதான் கண்டெடுக்கப்பட்டுள்ளது

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

மரபு இணைச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

எ. கா : மேலும் கீழும்:

ஆரிப் சொன்னதில் நம்பிக்கை இல்லாமல் குமார் **மேலும் கீழும்** பார்த்தான்.

1. **மேடும் பள்ளமும்:**

சேரி மக்களின் வாழ்க்கை **மேடும் பள்ளமும்** கொண்டதாக இருக்கிறது.

2. **நகமும் சதையும்:**

மும்தாஜும் தமிழரசியும் **நகமும் சதையும்** போல இணைபிரியாத் தோழிகள்.

3. **முதலும் முடிவும்:**

இது போன்ற தவறுகள் **முதலும் முடிவும்** ஆக இருக்கட்டும் என்று ஆசிரியர் அவர்களிருவரையும் எச்சரித்தார்.

4. **கேளிக்கையும் வேடிக்கையும்:**

எங்கள் ஊர்த் திருவிழா **கேளிக்கையும் வேடிக்கையும்** நிறைந்ததாக இருந்தது.

5. **கண்ணும் கருத்தும்:**

அன்பழகன் **கண்ணும் கருத்துமாகப்** படித்துத் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்றான்.

தொகுப்புரை எழுதுக.

பள்ளியில் நடைபெற்ற இலக்கியமன்ற விழா நிகழ்ச்சிகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக.

தமிழ் இலக்கிய மன்ற விழா

இடம் : வித்யாபார்த்தி மேனிலைப் பள்ளி, சீலப்பாடி, திண்டுக்கல் -5.
நாள் : திருவள்ளுவராண்டு, ஸ்ரீவிளம்பி வருடம், வைகாசி 23.
06.06.2018 புதன்கிழமை

தொகுப்புரை:

திண்டுக்கல் மாவட்டம், சீலப்பாடி, வித்யாபார்த்தி மேனிலைப்பள்ளியில் தமிழ் இலக்கிய மன்றக் கூட்டம் பிற்பகல் 3.00 மணியளவில் தொடங்கி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு பள்ளித் தலைமை ஆசிரியர் ஜாக்குலின் மேரி தலைமை தாங்கினார். பள்ளித் தாளாளர் டாக்டர். ஆர். கிருஷ்ணமூர்த்தி முன்னிலை வகித்தார். மாவட்ட அளவில் தமிழ்ப் பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்ற 12ஆம் வகுப்பு மாணவர் இன்ப வண்ணன் வரவேற்புரை நிகழ்த்தினார். இலக்கியங்களில் எவ்வாறு இன்பச்சுவை அமைந்து இருக்கிறது என்பது பற்றிப் பேசினார். முன்னிலை வகித்துப் பேசிய பள்ளித் தாளாளர் கிருஷ்ணமூர்த்தி முக்கூடற்பள்ளு போன்ற சிற்றிலக்கியங்களில் இன்பச் சுவையோடு நகைச்சுவையும் இருக்கிறது என்பது பற்றிப் பேசினார்.

தலைமை ஆசிரியர் தலைமை உரையில் இலக்கியத்தில் பாடுபொருள் எவ்வாறெல்லாம் காலத்திற்கேற்றாற் போல் மாறி வந்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டிப் பேசினார்.

சிறப்புச் சொற்பொழிவாற்றிய திண்டுக்கல் ஐ. லியோனி அவர்கள், ஒன்பான் சுவைகளை விளக்கி நகைச்சுவை உணர்வோடு "**இலக்கியத்தில் இன்பச்சுவை**" எனும் தலைப்பில் இலக்கிய விருந்து படைத்தார்.

நிறைவாக, இலக்கியமன்றச் செயலர் 12ஆம் வகுப்பு மாணவி அன்புச் செல்வி நன்றியுரை ஆற்றினார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன. தமிழக மாட்டினங்களின் தாய் இனம் என்று 'காங்கேயம்' கருதப்படுகிறது. பிறக்கும்போது சிவப்பு நிறத்தில் இருக்கும் காங்கேயம் மாடுகள், ஆறு மாதம் வளர்ந்த பிறகு சாம்பல் நிறத்துக்கு மாறிவிடுகின்றன. பசுக்கள் சாம்பல் அல்லது வெள்ளை நிறத்தில் இருக்கின்றன. மிடுக்கான தோற்றத்துக்குப் பெயர்பெற்ற காங்கேயம் இனக் காளைகள் ஏறுதழுவுதல் நிகழ்விற்கும் பெயர் பெற்றுள்ளன. அத்துடன், ஏர் உழுவதற்கும் வண்டி இழுப்பதற்கும் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.

கடுமையாக உழைக்கக்கூடிய காங்கேயம் மாடுகள் கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலத்தவரால் விரும்பி வாங்கிச் செல்லப்படுகின்றன. இலங்கை, பிரேசில், பிலிப்பைன்ஸ், மலேசியா ஆகிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கரூர் அமராவதி ஆற்றுத் துறையில் காங்கேயம் மாடுகளின் உருவம் பொறித்த கி.மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த சேரர் கால நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

வினாக்கள்:

1. பின்வரும் நான்கு வினாக்களுக்கும் பொருந்தும் ஒரு விடையைத் தருக.

அ) மிடுக்குத் தோற்றத்திற்கும் ஏறுதழுவுதலுக்கும் பெயர் பெற்றவை எவை?

ஆ) தமிழக மாட்டினங்களின் தாய் இனம் என்று கருதப்படுவது யாது?

இ) பிற மாநிலத்தவர் விரும்பி வாங்கிச் செல்கின்ற காளை இனம் எது?

ஈ) மேற்கண்ட பத்தி எதைக் குறிப்பிடுகிறது?

விடை: காங்கேயம் இனக் காளைகள்

2. பொருந்தாத சொல்லைக் கண்டறிக.

அ) கர்நாடகம் ஆ) கேரளா இ) இலங்கை ஈ) ஆந்திரா

விடை: இ) இலங்கை

3. பிரித்து எழுதுக: கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அ) கண்டு + எடுக்கப்பட்டு + உள்ளன. ஆ) கண்டு + எடுக்கப் + பட்டுள்ளன.

இ) கண்டெடுக்க + பட்டு + உள்ளன. ஈ) கண் + டெடுக்க + பட்டு + உள்ளன.

விடை: அ) கண்டு + எடுக்கப்பட்டு + உள்ளன.

4. தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன - இது எவ்வகைத் தொடர்?

அ) வினாத் தொடர் ஆ) கட்டளைத்தொடர்

இ) செய்தித்தொடர் ஈ) உணர்ச்சித்தொடர்

விடை: இ) செய்தித்தொடர்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

மொழியோடு விளையாடு

பொருள் எழுதித் தொடரமைக்க.

கரை, கறை; குளவி, குழவி; வாளை, வாழை; பரவை, பறவை; மரை, மறை;

அலை	கடலலை	இன்று கடலலையின் வேகம் மிக அதிகமாவுள்ளது.
அழை	வரவழைத்தல்	என் நண்பர்களை வரவழைத்துள்ளேன்
கரை	ஆற்றின் ஓரம்	ஆற்றங்கரையில் தென்னை மரங்கள் செழித்து வளர்ந்து உள்ளன.
கறை	படிவது கறை	சட்டையில் கறை படிந்துள்ளது.
குளவி	பூச்சி வகைகளுள் ஒன்று	வாசல் நிலைப்படியில் குளவி கூடுகட்டியிருக்கிறது.
குழவி	குழந்தை	குழவி மருங்கினும் கிழவதாகும் (பிள்ளைத்தமிழ்)
வாளை	மீன்களில் ஒருவகை	நீர் நிலைகளில் வாளை மீன் துள்ளிக் குதித்தது.
வாழை	வாழை மரம்	திருமணப் பந்தலில் வாழை மரங்கள் கட்டினர்.
பரவை	பரந்துள்ள கடல்	மதுரைக்குப் பக்கத்திலுள்ள சிற்றூர் பரவை.
பறவை	பறப்பவை	காலைப் பொழுதில் பறவைகள் பாடும்.
மரை	மான், தாமரை	தாமரை நீர் நிலையில் மலரும்.
மறை	வேதம்	வேதபாட சாலையில் நான்மறை ஓதப்பட்டன.

அகராதியில் காண்க.

இயவை, சந்தப்பேழை, சிட்டம், தகழ்வு, பெளரி

இயவை : வழி, மூங்கில் அரிசி, துவரை, தோரை நெல், காடு
சந்தப்பேழை : சந்தனப் பெட்டி
சிட்டம் : நூல் சிட்டம், எரிந்து கருகியது, பெருமை அறிவு, நீதி, உயர்ந்து
தகழ்வு : அகழ், அறிவு, உண்கலம்
பெளரி : பெரும் பண்வகை.

பொருள்தரும் வகையில் சொற்றொடர் உருவாக்குக.

கொடுக்கப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு பொருள்தரும் வகையில் ஒரு சொல்லில் தொடரைத் தொடங்குக. அத்துடன் அடுத்தடுத்துச் சொற்களைச் சேர்த்து, புதிய புதிய சொற்றொடர்களை உருவாக்குக. இறுதித் தொடர் அனைத்துச் சொற்களையும் சேர்த்ததாக அமைய வேண்டும்.

காலங்களில் தெருவில் **வைக்காதீர்கள்** காப்புக் கம்பிகள் **கவனக்** குறைவுடன் **ஆகியவற்றின்** மீது காலை அறுந்த **மழைக்** மின்கம்பிகள்.

விடை:

1. வைக்காதீர்கள்
2. **மழைக் காலங்களில் அறுந்த மின்கம்பிகள் காப்புக் கம்பிகள் மீது காலை** வைக்காதீர்கள்
3. **மழைக் காலங்களில் தெருவில் அறுந்த மின்கம்பிகள் காப்புக் கம்பிகள் மீது காலை** வைக்காதீர்கள்
4. **மழைக் காலங்களில் தெருவில் அறுந்த மின்கம்பிகள் காப்புக் கம்பிகள் மீது கவனக் குறைவுடன் காலை** வைக்காதீர்கள்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

குறுக்கெழுத்துப் புதிர்

1 ஏ		2 இ	ந்	3 தி	4 ர	வி	ழா	
று	5 த	வ		ர				6 சா
7 த	வ	ளை	8 ஓ	ட்	ட	ம்		ல
ழு				9 சி		10 வி	தி	
வு	ய்	11 ஆ		ர்	னா	த	த்	12 சா
த				கா		13 மா	14 வ	டி
ல்		ர்	15 க	க்		16		க
	ய்	17 யா	னி	18 த			19 கோ	ள்

இடமிருந்து வலம்

2. விழாவறை காதை குறிப்பிடும் விழா (6)
5. சரி என்பதற்கான எதிர்ச்சொல் தரும் எழுத்துகள் இடம் மாறியுள்ளது (3)
7. பொங்கல் விழாவையொட்டி நடத்தப்படும் சிறுவர்களுக்கான போட்டிகளில் ஒன்று (7)
10. ஊழ் என்பதற்குத் தற்காலப் பயன்பாட்டில் உள்ள சொல் (2)
13. மா + அடி - இதன் புணர்ந்த வடிவம் (3)
19. கொள் என்பதன் முதல்நிலை திரிந்த தொழிற்பெயர் (2)

வலமிருந்து இடம்

9. தூய்மையற்ற குருதியை எடுத்துச் செல்லும் இரத்தக் குழாய் (2)
11. ஆராய்ச்சி என்பதன் சொற்சுருக்கம் (3)
12. மணிமேகலை காப்பியத்தின் ஆசிரியர் (5)
16. சல்லிக்கட்டு விளையாட்டுக்குரிய விலங்கு (2)
18. தனி + ஆள் - சேர்த்து எழுதுக. (4)

மேலிருந்து கீழ்

1. தமிழர்களின் வீர விளையாட்டு (7)
2. இவள் + ஐ - சேர்ந்தால் கிடைப்பது(3)
3. மரத்தில் காய்கள் ... . ஆகக் காய்த்திருந்தன (4)
5. உரிச்சொற்களுள் ஒன்று (2)
6. .. .. சிறந்தது(2)
8. நேர்தலைக் குறிப்பிடும் வானியல் சொல் (2)
12. அகழாய்வில் கிடைத்த கொள்கலன்களுள் ஒருவகை (4)
15. காய் பழுத்தால்... ... . (2)

கீழிருந்து மேல்

14. ஒருவர் பற்றி ஒருவர் பிறரிடம் இதை வைக்கக் கூடாது (3)
17. யா முதல் வரும் வினாப்பெயர் (2)
18. தகவிலர் என்பதற்கு எதிர்ச்சொல்லாகத் திருவள்ளுவர் குறிப்பிடுவது (4)

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

பக்கம்: 86



1. பரதம் பாரதத்தின் பண்பாட்டுக் கலையாகும்.
2. தமிழகத்தின் இசைக்கருவிகளுள் நாதசுரமும் ஒன்று. தவில் தோற் கருவிகளுள் ஒன்று.
3. தம்புரா சுருதி தவறாமல் இருப்பதற்கு இசைக்கப்படுவது.
4. பறை, தோல் கருவிகளுள் தொன்மையானது. நல்லதுக்கும் கெட்டதுக்கும் இசையில் நுண்ணிய வேறுபாடு உண்டு.
5. தமிழ்நாட்டுப் பெண்களில் எண்ணங்களை வாசல் முன் வெளிப்படுத்துவது. எரியும் குத்துவிளக்கு மங்கலம் சின்னங்களில் ஒன்று.
6. தமிழர்களின் காதலும் வீரமும் இருகண்கள், காளையை அடக்கி பெண்ணைத் திருமணம் செய்தனர். இஃது ஒரு பண்பாட்டு நிகழ்வு.

செயல்திட்டம்

தமிழ்நாட்டில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்ட இடங்கள் குறித்த செய்திகளை, நாளிதழ்களிலோ புத்தகங்களிலோ திரட்டிச் செய்திப் படத்தொகுப்பினை உருவாக்குக.

தொல்லியல் பற்றிய செய்திகள்:

தேனி மாவட்டம், போடி, சி.பி.ஏ., கல்லூரி வரலாற்றுத்துறை மற்றும் பாண்டியநாடு பண்பாட்டு மைய தொல்லியியல் துறை மூலம், இந்த ஆய்வு நடந்தது.

உதவி பேராசிரியர், மாணிக்கராஜ் கூறியதாவது:

தே.கல்லுப்பட்டி அருகே, கவசகோட்டை கிராமத்தில், பண்ணைமேடு எனப்படும், அக்ரஹாரமேடு பகுதியில் தமிழரின் தொன்மையை கண்டறியும் நோக்கில், ஆய்வு மேற்கொண்டோம். இதில், தமிழரின் தொன்மை எழுத்து வடிவமான, தமிழ், **'பிராமி'** எழுத்துக்கள் பொறித்த, கருப்பு, சிவப்பு வண்ணமுடைய பானை ஓடுகள், முதுமக்கள் தாழி, சுடுமண் பொம்மைகள், மண்பாண்டங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

பானை ஓடுகளில், கி.பி. 1 மற்றும் 2ம் நூற்றாண்டை சேர்ந்த, தமிழ் பிராமி எழுத்து வடிவம் இடம் பெற்றுள்ளது. தொடர் எழுத்துகள் கிடைக்காததால், முழுவதும் படித்து அறிய முடியவில்லை. இங்கு காணப்படும் செங்கல்கள், கீழடி அகழ்வாய்வு கட்டுமானத்தில் இருந்த

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

செங்கல்களின் அமைப்பை போன்றே காணப்படுகிறது. துவாரங்கள் உள்ளது இதன் சிறப்பு. மற்றொரு பானை ஓட்டில், மீன் உருவம் பொறித்துள்ளது.

முதுமக்கள் தாழிகளின் மேற்கு பகுதியில் வட்டவடிவமான அலங்காரங்கள் மூன்று மற்றும் நான்கு அடுக்கில் பொறிக்கப்பட்டுள்ளது.

தாழியின் விளிம்பு பகுதியில் கயிறு போன்ற அலங்கார குறியீடுகள் காணப்படுகின்றன. இவை மண்பாண்டங்கள் சுடுவதற்கு முன் வரையப்பட்டவை என தெரிகிறது.

விரிவான தொல்லியியல் ஆய்வு மேற்கொண்டால், பண்டைய தமிழர்களின் சிறப்புகளையும், வாழ்வியல் முறை, நாகரீகத்தையும் பண்பாட்டு அடையாளங்களையும் வெளிக்கொணர முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

நிற்க அதற்குத்தக...

நான் பாராட்டுப் பெற்ற சூழல்கள்

அ) கூடுதலாக மீதம் கொடுத்த கடைக்காரரிடம் அந்தப் பணத்தை மீண்டும் அளித்தபோது.

ஆ) கட்டுரை ஏடுகளைக் கீழே தவறவிட்ட என் ஆசிரியருக்கு அதை எடுத்துத் தந்தபோது.

இ) நகரப் பேருந்து நிலையத்தில் வழிகேட்ட பெரியவருக்கு வழிகாட்டிய போது.

ஈ) பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தபோது முதியவரின் பழுதாகி நின்ற இருசக்கர வாகனத்தைச் செய்த போது.

நிறைவுரை :

வித்யானந்தன் எழுதிய இந்நூல் பல கலைச் சொற்களையும் விளக்குகின்றது.

※※⁂⁂⁂※※


Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

வாழ்வியல்

இயல் மூன்று

திருக்குறள்



திருவள்ளுவர்

உலகப் பண்பாட்டிற்குத் தமிழினத்தின் பங்களிப்பாக அமைந்த நூல், திருக்குறள். இனம், சாதி, நாடு குறித்த எவ்வித அடையாளத்தையும் முன்னிலைப்படுத்தாத உலகப் பொதுமறை இந்நூல். இது முப்பால், பொதுமறை, பொய்யாமொழி, வாயுறைவாழ்த்து, தெய்வநூல், தமிழ்மறை, முதுமொழி, பொருளுறை போன்ற பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதி, பரிமேலழகர், திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காளிங்கர் ஆகிய பதின்மரால் திருக்குறளுக்கு முற்காலத்தில் உரை எழுதப்பட்டுள்ளது. இவ்வுரைகளுள் பரிமேலழகர் உரையே சிறந்தது என்பர். இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூலைப் போற்றும் பாடல்களின் தொகுப்பே திருவள்ளுவமாலை.

பிற அறநூல்களைப் போல் அல்லாமல் பொது அறம் பேணும் திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். இவருக்கு நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப்புலவர், நான்முகனார், மாதானபங்கி, செந்தாப்போதார், பெருநாவலர் போன்ற சிறப்புப் பெயர்கள் உண்டு.

பொறையுடைமை

குறள் 1 : **அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

விளக்கம் : தன்னைத் தோண்டுபவரைத் தாங்கும் நிலம்போலத் தன்னை இகழ்பவரைப் பொறுப்பது தலைசிறந்தது.

இலக்கணக் குறிப்பு அறிதல் :

அகழ்வார், இகழ்வார் - வினையாலணையும் பெயர்

பொறுத்தல் - தொழிற்பெயர்

பகுபத உறுப்பிலக்கணம் :

பொறுத்தல் – பொறு + த் + த் + அல்			அகழ்வார் – அகழ் + வ் + ஆர்,		
பொறு	–	பகுதி	அகழ்	–	பகுதி
த்	–	சந்தி	வ்	–	எதிர்கால இடைநிலை
த்	–	சாரியை	ஆர்	–	பலர்பால் வினைமுற்று விகுதி
அல்	–	தொழிற்பெயர் விகுதி			

இக்குறளில் **உவமையணி** பயின்றுவந்துள்ளது.

குறள் 2 : **திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து**
அறனல்ல செய்யாமை நன்று

விளக்கம் : பிறர் தனக்குத் தரக்கூடாத துன்பத்தைத் தந்தாலும் மனம் நொந்து அறம் அல்லாத செயல்களைச் செய்யாமை சிறப்புக்குரியது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

இலக்கணக் குறிப்பு அறிதல் :

திறம் - திறன் - மகரத்திற்கு னகரம் போலி, **அறம் - அறன்** - மகரத்திற்கு னகரம் போலி,
செய்யாமை - எதிர்மறைத் தொழிற்பெயர்
தம்பிறர் - (தமக்குப் பிறர்) கு – நான்காம் வேற்றுமைத் தொகை
நோ - நொ - முதனிலை திரிந்த தொழிற்பெயர் நொ - ஓரெழுத்து ஒருமொழி நாற்பத்திரண்டனுள் ஒன்று

குறள் 3 : **மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்**
தகுதியான் வென்று விடல்.

பக்கம்: 88

விளக்கம் : செருக்கினால் துன்பம் தந்தவரை நம்முடைய பொறுமையால் வெல்ல வேண்டும்.

இலக்கணக் குறிப்பு அறிதல் :

வென்றுவிடல் - 'அல்' ஈற்று வியங்கோள் வினைமுற்றுவிகுதி

பகுபத உறுப்பிலக்கணம் :

விடல் - விடு + **அல்**
விடு - பகுதி,
அல் - அல் ஈற்று வியங்கோள் வினைமுற்று விகுதி

தீவினை அச்சம்

குறள் 4 : **தீயவை தீய பயத்தலால் தீயவை**
தீயினும் அஞ்சப் படும்.

விளக்கம் : தீச்செயலை எவர் செய்தாரோ அவருக்கே அது துன்பத்தைச் செய்யும். தொட்டால் மட்டுமே சுட்டெரிக்கும் தீயைக் காட்டிலும் நினைத்த அளவிலே சுட்டெரிக்கும் ஆற்றல் உள்ளது தீச்செயல். அதற்காக அஞ்ச வேண்டும்.

பொருள் அறிதல் :

தீயவை	-	தீமையான செயல்
பயத்தலால்	-	தருவதால்
தீயினும்	-	நெருப்பை விட

குறள் 5 : **மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்**
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு.

விளக்கம் : மறந்தும் கூடப் பிறருக்குக் கெடுதல் செய்ய நினைக்கக் கூடாது. நினைத்தால், நினைத்தவருக்குக் கெடுதல் செய்ய அறம் நினைக்கும்.

இலக்கணக் குறிப்பு அறிதல் :

சூழற்க - வியங்கோள் வினைமுற்று,
சூழ்ந்தவன் - வினையாலணையும் பெயர்
கேடு - கெடு > கேடு முதனிலை திரிந்த தொழிற்பெயர்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பகுபத உறுப்பிலக்கணம் அறிதல் :

சூழற்க - **சூழல் (ற்) + க**

சூழல் - பகுதி ல் > ற் ஆனது விகாரம்

க - வியங்கோள் வினைமுற்று

வேள்வி

குறள் 6 : **செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்**
செல்வத்துள் எல்லாந் தலை.

விளக்கம் : செல்வத்தில் சிறந்தது செவியால் கேட்டறியும் கேள்விச்செல்வம். அது பிற வழிகளில் வரும் செல்வங்களைவிடத் தலைசிறந்தது.

அணி : இக்குறட்பாவில் பயின்றுவரும் அணி **சொற்பொருள் பின்வருநிலையணி** ஆகும்.

அணியிலக்கணம் :

குறளில் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளை உணர்த்தினால் அது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

அணிப்பொருத்தம் :

இக்குறட்பாவில் 'செல்வம்' என்னும் சொல் பலமுறை வந்து 'கேள்வி' என்னும் ஒரே பொருளைத் தருவதால் இது சொற்பொருள் பின்வருநிலையணி ஆயிற்று.

குறள் 7 : **எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்**
ஆன்ற பெருமை தரும்.

விளக்கம் : எவ்வளவு சிறிதானாலும் நல்வற்றைக் கேட்டால், கேட்ட அளவுக்குப் பெருமை உண்டாகும்.

குறள் 8 : **நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய**
வாயினர் ஆதல் அரிது.

விளக்கம் : சான்றோரின் நுட்பமான அறிவுரைகளைக் கேளாதவர்கள் பணிவுடையவராக இருக்க மாட்டார்கள். அத்தகையவரிடமிருந்து பணிவான சொற்களை எதிர்பார்க்க முடியாது

இலக்கணக் குறிப்பு அறிதல் :

கேள்வியர் - வினையாலணையும் பெயர்

வாயினர் - வினையாலணையும் பெயர்

பகுபத உறுப்பிலக்கணம் :

நுணங்கிய	= நுணுங்கு + இ(ன்) + ய் + அ	**வணங்கிய**	= வணங்கு + இ(ன்) + ய் + அ
நுணங்கு	– பகுதி,	**வணங்கு**	– பகுதி,
இ(ன்)	– இறந்தகால இடைநிலை னகரம் புணர்ந்து கெட்டது விகாரம்	**இ(ன்)**	– இறந்தகால இடைநிலை னகரம் புணர்ந்து கெட்டது விகாரம்
ய்	– உடன்படு மெய் சந்தி	**ய்**	– உடன்படு மெய் சந்தி
அ	– பெயரெச்ச விகுதி	**அ**	– பெயரெச்ச விகுதி

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

குறள் 9 : **செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்**
அவியினும் வாழினும் என்.

விளக்கம் : கேள்விச் சுவையை உணராமல் நாவின் சுவையை மட்டும் உணர்பவர் இறந்தால்தான் என்ன! இருந்தால்தான் என்ன!

இலக்கணக் குறிப்பு அறிதல் :

அவியினும் வாழினும் - எண்ணும்மை

தெரிந்து தெளிதல்

குறள் 10 : **குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்**
மிகைநாடி மிக்க கொளல்.

விளக்கம் : ஒருவரின் குணத்தையும் குற்றத்தையும் ஆராய்ந்து அறிந்து அவற்றுள், எது மிகுதியாகக் காணப்படுகிறதோ அதைக் கொண்டு அவர் இத்தகையவர் என்று முடிவு செய்தல் வேண்டும்.

அணி : இக்குறட்பாவில் பயின்றுவரும் அணி சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

அணியிலக்கணம் : குறளில் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளை உணர்த்தினால் அது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

அணிப்பொருத்தம் : இக்குறட்பாவில் 'நாடி' என்னும் சொல் பலமுறை வந்து 'ஆராய்ந்து' என்னும் ஒரே பொருளைத் தருவதால் இது சொற்பொருள் பின்வருநிலையணி ஆயிற்று.

குறள் 11 : **பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்**
கருமமே கட்டளைக் கல்.

விளக்கம் : ஒருவரின் பெருமைக்கும் சிறுமைக்கும் அவரவர் செயல்பாடுகளே ஆராய்ந்து அறியும் உரைகல் ஆகும்.

அணி : ஏகதேச உருவக அணி

குறள் 12 : **தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்**
தீரா இடும்பை தரும்.

விளக்கம் : ஆராயாமல் ஒருவரைத் தேர்வு செய்வதும் அவ்வாறு தேர்வு செய்தபின் அவரைப் பற்றி ஐயப்படுதலும் தீராத துன்பத்தைத் தரும்.

ஒற்றாடல்

(அரசன் ஒற்றர்களை நிர்விகித்தல்)

குறள் 13 : **ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்**
ஒற்றினால் ஒற்றிக் கொளல்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

விளக்கம் : ஒற்றன் ஒருவன் மறைந்திருந்து கேட்டுத் தெரிந்ததையும் மற்றோர் ஒற்றனை அனுப்பி அறிந்து வரச் செய்து, அவற்றை ஒப்பு நோக்கிய பின்பே, மன்னன் அவனை உண்மையென நம்ப வேண்டும்

அணி : இக்குறட்பாவில் பயின்றுவரும் அணி சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

வினைத்தூய்மை

குறள் 14 : **ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை**
ஆஅதும் என்னு மவர்.

விளக்கம் : மேலும் மேலும் மேம்பாடு அடைய விரும்புகிறவர்கள், தம் புகழ் கெடுவதற்குரிய செயல்களைச் செய்யக் கூடாது.

குறள் 15 : **ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க**
சான்றோர் பழிக்கும் வினை.

விளக்கம் : பெற்றெடுத்த தாயே பசியால் துன்பம் உறுவதைக் கண்டு வருந்த நேர்ந்தாலும், அறிவுடைய சான்றோர் பழிக்கும் இழிசெயல்களைச் செய்யக் கூடாது

இலக்கணக் குறிப்பு அறிதல் :

ஈன்றாள்	-	வினையாலணையும் பெயர்
சான்றோன்	-	வினையாலணையும் பெயர்

பகுபத உறுப்பிலக்கணம் அறிதல் :

செய்யற்க - செய் + அல் + க

செய்	-	பகுதி
அல்	-	ல் - ற் ஆனது விகாரம்
க	-	வியங்கோள் வினைமுற்று விகுதி

குறள் 16 : **சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்**
கலத்துநீர் பெய்திரீஇ யற்று.

விளக்கம் : தீய செயலால் பொருள் சேர்த்துப் பாதுகாத்தல் சுடாத மண்கலத்தில் நீரேற்றி வைப்பதைப் போன்றது. (சலம் - வஞ்சனை).

அணி : இக்குறட்பாவில் பயின்றுவரும் அணி **உவமையணி** ஆகும்.

அணியிலக்கணம் : ஒரு செய்யுளில் உவமை, உவமேயம், உவம உருபு ஆகிய மூன்றும் வெளிப்படையாய் அமைந்திருக்குமாயின் அஃது உவமையணி ஆகும்

உவமை : பசுமண் கலத்துநீர் பெய்திரீஇ

உவமேயம் : சலத்தால் பொருள் செய்தே மார்த்தல்

உவம உருபு : அற்று

அணிவிளக்கம் : வஞ்சகமான வழிகளில் பொருள் சேர்த்து அப்பொருளைப் பாதுகாப்பது உலராத பச்சை மண்பானையில் நீர் நிறைத்துப் பாதுகாக்க முயல்வதைப் போன்றது ஆகும்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பழுமை

குறள் 17 : **விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையாற்**
கேளாது நட்டார் செயின்.

விளக்கம் : நட்பின் உரிமையில் தம்மைக் கேட்காமலேயே ஒரு செயலைச் செய்தாலும் நட்பு பாராட்டுவோர், விருப்பத்தோடு அச்செயலுக்கு உடன்படுவர். (நட்டார் - நண்பர்கள்)

அணியிலக்கணம் : குறளில் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளை உணர்த்தினால் அது **சொற்பொருள் பின்வருநிலையணி** ஆகும்.

இலக்கணக் குறிப்பு அறிதல் :			பகுபத உறுப்பிலக்கணம் அறிதல் :		
விழைதகையான்	–	வினையாலணையும் பெயர்	கேளாது	–	கேள் + ஆ + த் + உ
கெழுதகையான்	–	வினையாலணையும் பெயர்	கேள்	–	பகுதி
			ஆ	–	எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது விகாரம்
			த்	–	இறந்தகால இடைநிலை
			உ	–	வினையெச்ச விகுதி

தீ நட்பு

குறள் 18 : **கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு**
சொல்வேறு பட்டார் தொடர்பு.

விளக்கம் : செய்யும் செயல் வேறாகவும் சொல்லும் சொல் வேறாகவும் இருப்பவர்களுடைய நட்பானது கனவில் கூட துன்பத்தினைத் தருவதாகும்.

அணியிலக்கணம் : குறளில் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளை உணர்த்தினால் அது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

பகுபத உறுப்பிலக்கணம் அறிதல் :

பட்டார் - **படு (பட்டு) + ஆர்**
படு - பகுதி,
படு - பட்டு என ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டியது
ஆர் - படர்க்கைப் பலர்பால் வினைமுற்று விகுதி

பேதைமை

(பேதைமையின் தொழில் யாவை?)

குறள் 19 : **நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்**
பேணாமை பேதை தொழில்.

விளக்கம் : நாணவேண்டுவனவற்றிற்கு நாணம் கொள்ளாமையும், நாடவேண்டுவனவற்றை நாடாமையும் யாவரிடத்தும் அன்பில்லாமையும் விரும்ப வேண்டுவனவற்றை விரும்பாமையும் பேதையின் தொழில்களாகும். (பேதைமை - அறிவிலிகளின் அறியாமைக் குணம்)

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

அணியிலக்கணம் : குறளில் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளை உணர்த்தினால் அது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

பகுபத உறுப்பிலக்கணம் அறிதல் :

நாணாமை - நாண் + ஆ + மை

நாண் - பகுதி,
ஆ - எதிர்மறை இடைநிலை,
மை - பண்புப் பெயர் விகுதி

நாடாமை - நாடு + ஆ + மை

நாண் - பகுதி,
ஆ - எதிர்மறை இடைநிலை,
மை - பண்புப் பெயர் விகுதி

பேணாமை - பேண் + ஆ + மை

பேண் - பகுதி, ஆ - எதிர்மறை இடைநிலை, மை - பண்புப் பெயர் விகுதி.

குறள் 20 : **ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்**
பேதையின் பேதையார் இல்.

விளக்கம் : படித்தும் படித்ததை உணர்ந்தும் உணர்ந்ததை மற்றவர்க்குக் கூறியும் தான் அதன்படி செயல்படாத பேதையைப் போல பேதை யாருமில்லை.

இலக்கணக் குறிப்பு அறிதல்:

தானடங்காப் பேதை - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
பேதையார் - வினையாலணையும் பெயர்

பகுபத உறுப்பிலக்கணம் அறிதல்:

உணர்ந்தும் உணர் + த்(ந்) + த் + ஓம்

உணர் – பகுதி,
த்(ந்) – சந்தி 'ந்' ஆனது விகாரம்
த் – இறந்தகால இடைநிலை
ஓம் – தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி

உரைத்தும் உரை + த் + த் + உம்

உரை – பகுதி,
த் – சந்தி
த் – இறந்தகால இடைநிலை
உம் – தெரிநிலை வினையெச்ச விகுதி

கற்பவை கற்றபின்

பக்கம்: 91

1. படத்திற்கேற்ற குறளைத் தேர்வு செய்க.



அ) நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

ஆ) விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின்

இ) செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாந் தலை.

விடை: இ)

2. பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.

பாடல்

ஆண்டில் இளையவனென்று அந்தோ அகந்தையினால்
ஈண்டிங்கு இகழ்ந்தென்னை ஏளனம்செய் - மாண்பற்ற
காரிருள்போல் உள்ளத்தான் காந்திமதி நாதனைப்
பாரதி சின்னப் பயல்.

(1893ல் பாரதியாரின் பதினோராவது வயதில் எட்டையபுரம் மன்னர் சமஸ்தானப் புலவர்கள் அவையில், அவரது கவித்திறனைப் புகழ்ந்து **'பாரதி'** என்ற பட்டத்தைச் சூட்டினார்.)

குறள்

அ) செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்.

ஆ) மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.

இ) குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

விடை: ஆ) மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.

குறளுக்குப் பொருள்:

நமக்கு நல்ல வசதியும் வாய்ப்பும் இருக்கிறது என்றெண்ணி "இவர்க்கு இத்தீங்கை செய்தால் எவர் நம்மை என்ன செய்ய முடியும்?" என்ற இறுமாப்புக் கொண்டு தீங்கிழைத்தவர்களையும் பொறுமைப் பண்பால் வெற்றி காண வேண்டும். (பொறையுடைமை : 8வது குறள்)

3. பொருளுக்கேற்ற அடியைக் கண்டுபிடித்துப் பொருத்துக.

1.	பசுமண் கலத்துநீர் பெய்திரீஇ யற்று	அ)	ஒருவனின்செயல்பாடுகளே உரசி அறியும்உரைகல்
2.	தத்தம் கருமமே கட்டளைக்கல்	ஆ)	அவ்வளவிற்குப் பெருமை உண்டாக்கும்
3.	அனைத்தானும் ஆன்ற பெருமை தரும்	இ)	சுடாத மண்கலத்தில் நீரூற்றி வைப்பதைப் போல

விடை: 1 - இ, 2 - அ, 3 - ஆ

4. தீரா இடும்பை தருவது எது?

அ) ஆராயாமை, ஐயப்படுதல் ஆ) குணம், குற்றம்

இ) பெருமை, சிறுமை ஈ) நாடாமை, பேணாமை

விடை: அ) ஆராயாமை, ஐயப்படுதல்

குறள்: தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

5. சொல்லுக்கான பொருளைத் தொடரில் அமைத்து எழுதுக.

அ) நுணங்கிய கேள்வியர் - நுட்பமான கேள்வியறிவு உடையவர்.

முகிலன் நுட்பமான கேள்வியறிவு உடையவனாக இருந்தான். அதனால் பெரியோரிடத்துப் பணிவான சொற்களில் பேசுகிறான்.

ஆ) பேணாமை - பாதுகாக்காமை.

அப்பாவின் நூலைப் பாதுகாக்காமையால் இனியன் பழைய பேப்பர் வியாபாரியிடம் போட்டுவிட்டான்.

இ) செவிச் செல்வம் - கேட்பதால் பெறும் அறிவு.

அறிஞர்களின் அறிவுரைகளைக் கேட்பதால் பெறும் அறிவு தக்க சமயத்தில் பேச்சுப் போட்டியில் பேசுவதற்கு பயன்பட்டது.

ஈ) அறனல்ல செய்யாமை - அறம் அல்லாத செயல்களைச் செய்யாதிருத்தல்.

மலரவன் இளமையிலிருந்தே அறம் அல்லாத செயல்களைச் செய்யாதிருந்ததனால் தான், அமைதிக்கான விருது கிடைத்தது.

குறுவினா

பக்கம்: 92

1. நிலம் போல யாரிடம் பொறுமை காக்கவேண்டும்?

தன்னைத் தோண்டுபவரைத் தாங்கும் நிலம்போலத் தன்னை இகழ்பவரிடத்தும் பொறுமை காக்க வேண்டும்.

2. தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும் - இக்குறட்பாவின் கருத்தை விளக்குக.

தான் இன்பம் அடையவேண்டுமென எண்ணி இன்னொருவருக்குச் செய்யும் தீய செயல்களே பின்னர் அந்த இன்பத்தை நீக்கும். தீச்செயலை எவர் செய்தாரோ அவருக்கே துன்பத்தைத் தரும். தீ தொட்டால் தான் சுடும். தீயசெயல்கள் நினைத்த அளவிலே சுட்டெரிக்கும் ஆற்றல் உள்ளன. அதனால் தான் '**தீயினும் அஞ்சப்படும்**' என்றார்.

3. ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல் - இக்குறட்பாவில் அமைந்துள்ள நயங்களை எழுதுக.

ஒற்றன் ஒருவன் மறைந்திருந்து கேட்டுத் தெரிந்த செய்தியை மற்றோர் ஒற்றனை அனுப்பி அறிந்து வரச் செய்ய வேண்டும் நம்ப வேண்டும் மன்னன், அவற்றை ஒப்புநோக்கிய பின்பே, அதனை உண்மையென நம்பவேண்டும். .

4. கனவிலும் இனிக்காதது எவர் நட்பு?

சொல் ஒன்று, செயல் வேறு என ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் நடந்து கொள்பவரின் நட்பு கனவிலும் துன்பம் தருவதாகும்.

கதைக்குப் பொருத்தமான குறளைத் தேர்வு செய்து காரணத்தை எழுதுக.

மௌனவிரதம் என்னும் தலைப்பில் நான்கு நண்பர்கள் ஒரு சொற்பொழிவைக் கேட்டனர். தாங்களும் ஒரு வாரத்துக்கு மௌனவிரதம் இருப்பதாகத் தீர்மானம் செய்தனர். மௌனவிரதம் ஆரம்பமாகி விட்டது! கொஞ்ச நேரம் போனதும் ஒருவன் சொன்னான். "எங்கள் வீட்டு அடுப்பை அணைத்துவிட்டேனா தெரியவில்லையே!"

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பக்கத்திலிருந்தவன் "அடப்பாவி! பேசிட்டியே!" என்றான். உடனே மூன்றாவது ஆள், "நீ மட்டும் என்ன? நீயும்தான் பேசிவிட்டாய்!" என்றான். நான்காவது ஆள், "நல்லவேளை! நான் மட்டும் பேசவில்லை!" என்றான். இப்படியாக அவர்களின் மௌனவிரதம் முடிந்துபோனது.

1. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
   அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு.
2. திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
   அறனல்ல செய்யாமை நன்று.
3. ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
   பேதையின் பேதையார் இல்.

கதைக்குப் பொருத்தமான குறள்

3. ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதையார் இல்.

விளக்கம்:

கற்க வேண்டிய அறநூல்களைக் கற்றறிந்தும் அதன் உண்மைகளை மற்றவர்களுக்கு எடுத்துக் கூறியும் வாழ்கின்ற ஒருவன், தான் கற்றறிந்த ஒழுக்க நெறியில் வாழத் தவறினால் அவனைப் போன்ற அறிவிலிகள் உலகில் இல்லை.

எனவே **"சொல்வதைப் போல செய்ய வேண்டும் செய்வதையே சொல்ல வேண்டும்"**.

திருக்குறள் பற்றிய சில ஆராய்ச்சி செய்திகள்

திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு - 1812
திருக்குறள் **அகரத்தில் தொடங்கி னகரத்தில்** முடிகிறது.
திருக்குறளில் இடம்பெறும் இருமலர்கள் - **அனிச்சம், குவளை**
திருக்குறளில் இடம்பெறும் ஒரே பழம் - **நெருஞ்சிப்பழம்**
திருக்குறளில் இடம்பெறும் ஒரே விதை - **குன்றிமணி**
திருக்குறளில் இருமுறை வரும் ஒரே அதிகாரம் - **குறிப்பறிதல்**
திருக்குறளில் இடம்பெற்ற இரண்டு மரங்கள் - **பனை, மூங்கில்**
திருக்குறள் மூலத்தை முதன் முதலில் அச்சிட்டவர் - **தஞ்சை ஞானப்பிரகாசர்**
திருக்குறளுக்கு முதன் முதலில் உரை எழுதியவர் - **மணக்குடவர்**
திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் - **ஜி.யு.போப்**
திருக்குறளில் **கோடி என்ற சொல் ஏழு இடங்களில்** இடம்பெற்றுள்ளது.
ஏழு என்ற சொல் எட்டுக் குறட்பாக்களில் எடுத்தாளப்பட்டுள்ளது.
திருக்குறள் இதுவரை **நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகளில்** வெளிவந்துள்ளது.

கலைச்சொல் அறிவோம்

அகழாய்வு	- Excavation	கல்வெட்டியல்	- Epigraphy
நடுகல்	- Hero Stone	பண்பாட்டுக் குறியீடு	- Cultural Symbol
புடைப்புச் சிற்பம்	- Embossed sculpture	பொறிப்பு	- Inscription

※※⁂⁂⁂※※

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

உரைநடை உலகம்

இயல் நான்கு

இயந்திரங்களும் இணையவழிப் பயன்பாடும்

பாடநூல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. கீழ்க்காணும் மூன்று தொடர்களுள்

அ) இருந்த இடத்திலிருந்தே பயணச்சீட்டு எடுப்பதை எளிதாக்கிய மிகப் பெரிய இந்திய நிறுவனம் இந்தியத் தொடர்வண்டி உணவு வழங்கல் மற்றும் சுற்றுலாக் கழகம் ஆகும்.

ஆ) வங்கி அட்டை இல்லை என்றால் அலைபேசி எண், வங்கிக் கணக்கு எண் ஆகியவற்றைக் கொண்டு பணம் செலுத்துதல் இயலாது.

இ) திறன் அட்டைகள் என்பவை குடும்ப அட்டைகளுக்கு மாற்றாக வழங்கப்பட்டவைகும்.

i) அ, ஆ ஆகியன சரி; இ தவறு ii) அ, இ ஆகியன சரி; ஆ தவறு

iii) அ தவறு; ஆ, இ ஆகியன சரி iv) மூன்றும் சரி

விடை: ii) அ, இ ஆகியன சரி; ஆ தவறு

2. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?

அ) தேசியத் திறனாய்வுத் தேர்வு ஆ) ஊரகத் திறனாய்வுத் தேர்வு

இ) தேசியத் திறனாய்வுத் தேர்வ ஈ) மூன்றும் சரி

விடை: ஆ) ஊரகத் திறனாய்வுத் தேர்வு

குறுவினா

1. இணைய வழியில் இயங்கும் மின்னணு இயந்திரங்கள் எவையேனும் ஐந்தினைக் குறிப்பிடுக.

இணையவழியில் இயங்கும் மின்னணு இயந்திரங்கள்

1. தொலைநகல் இயந்திரம் (Fax)
2. தானியக்கப் பண இயந்திரம் (Automated Teller Machine)
3. அட்டை பயன்படுத்துதல் இயந்திரம் (Swiping Machione)
4. தமிழக அரசின் நியாய விலைக் கடை திறனட்டைக் கருவி (TNePDS)
5. இந்தியத் தொடர்வண்டி உணவு வழங்கல் மற்றும் சுற்றுலாக் கழக இணைய வழி பதிவு (Indian Railway Catering and Tourism Corporation)

சிறுவினா

1. பள்ளி மாணவர்களுக்கான தமிழக அரசின் இணையவழிச் சேவைகளை எழுதுக.

- தமிழக அரசு ஆண்டு தோறும் பல கல்வி உதவி தொகை தேர்வுகளை நடத்துகின்றன.
- 8ம் வகுப்பு மாணவர்களுக்கு - தேசியத்திறனாய்வு மற்றும் கல்வி உதவித் தொகைத் தேர்வு (NMMS)

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

- 9ம் வகுப்பு கிராம பள்ளி மாணவர்களுக்கு - ஊரகத் திறனாய்வுத் தேர்வு (TRUST)
- 10ம் வகுப்பு மாணவர்களுக்கு - தேசியத்திறனாய்வு தேர்வு (NTSE) நடத்தப்படுகின்றது. அவற்றில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் தாங்கள் படிக்கும் பள்ளிகளிலேயே இணையத்தின் சேவையைப் பெறலாம் ஹ
- 10 மற்றும் 12 ம் வகுப்பு முடித்த மாணவர்களுக்கு, அரசின் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் செய்யப்பட வேண்டிய பதிவு, ஆண்டுதோறும் அவர்கள் படித்த பள்ளிகளிலேயே இணையத்தின் வழியாகச் செய்யப்பட்டு வருகிறது.
- அரசின் விலையில்லா மிதிவண்டி, மடிக்கணினி ஆகியவற்றைப் பெற மாணவர்களின் விவரங்கள் இணையத்தின் மூலம் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

நெடுவினா

1. அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணையவழிச் சேவைகள் பற்றி விரிவாகத் தொகுத்து எழுதுக.

தற்காலத்தில் பேருந்து முன்பதிவு, விமான முன்பதிவு தங்கும் விடுதிகள் முன்பதிவு ஆகியவற்றை இணையம் மூலமாக மேற்கொள்ளப் பலமுகமைகள் உள்ளன. இது பலருக்கு வேலைவாய்ப்பையும் தருகிறது. பெரு நகரங்களில் திரைப்படங்களுக்கு இருக்கைகள் முன்பதிவு செய்வதுகூட இணையம் மூலம் நடைபெறுகின்றது. அரசுக்குச் செலுத்த வேண்டிய சொத்துவரி, தண்ணீர் வரி, ஆகியன இணைய வழியில் செலுத்தப்படுகின்றன. இச்சேவைகளில் ஒன்று பயணச்சீட்டு வழங்குவதையும் சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்வதையும் பயனுள்ள வகையில் செய்து வருகிறது. இந்தியத் தொடர்வண்டி உணவு வழங்கல் மற்றும் சுற்றுலாக் கழகம். மற்றொன்று தானியக்கப் பண இயந்திரம்.

◆ **இந்தியத் தொடர்வண்டி உணவு வழங்கல் மற்றும் சுற்றுலாக் கழக இணைய வழிப் பதிவு** (IRCTC - INDIAN RAILWAY CATERING AND TOURISM CORPORATION)

மக்கள் தொகை மிகுந்த இந்தியா போன்ற நாடுகளில் வரிசையில் நிற்பது நேரவிரயம். இதனைக் குறைப்பதுடன் இருந்த இடத்திலிருந்தே பயணச் சீட்டு எடுப்பதை எளிதாக்கிய மிகப்பெரிய அமைப்பு இந்நிறுவனம் ஆகும். பயணம் செய்ய வேண்டிய நாளில் ஊர்களுக்குச் செல்லும் தொடர்வண்டிகளையும் அவற்றின் நேரங்களையும் பயணம் செய்ய விரும்பும் பெட்டி வகைகளையும் அதற்குரிய தொகையையும் காண்பிக்கிறது. வங்கி அட்டைகளின் உதவியுடன் தெகையைச் செலுத்தி முன்பதிவு செய்து கொள்ளலாம். மின்னஞ்சலில் பயணச்சீட்டு வந்து விடுகிறது. நமது அலைபேசிக்குக் குறுஞ்செய்தியும் வந்து விடுகிறது. 2002 ஆம் ஆண்டு இந்த வசதி அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது ஒரு நிமிடத்திற்கு 1500 பயணச் சீட்டுகள் பதிவு செய்யவும் ஒரே நேரத்தில் மூன்று இலட்சம் பயனர்கள் இணைய வழிச் சேவையைப் பயன்படுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

◆ **தானியக்கப் பண இயந்திரம்** (Automated Teller Machine)

இங்கிலாந்தைச் சேர்ந்த பொறியாளரான ஜான் ஷெப்பர்டு பாரன் (John Sheperd Barron) என்பவர் தலைமையிலான குழுவொன்று பார்க்லேஸ் வங்கிக்காக இலண்டனில் 1967 ஜூன் 27 இல் தானியக்கப் பண இயந்திரத்தை நிறுவியது.

வங்கியில் வழங்கப்பட்ட காசோலையைக் கொண்டு தான் அப்போது பணம் எடுக்கப்பட்டது. அந்தக் காசோலையில் உள்ள குறியீடுகளை இயந்திரம் படித்துப் புரிந்து கொண்டு

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பணத்தைத் தள்ளும். அதற்குப்பின் வாடிக்கையாளரின் ஆறிலக்கக் கடவுச்சொல் (Password) தருமாறு மேம்படுத்தப்பட்டது. வங்கிகளின் அட்டைகளில் தனிப்பட்ட அடையாள எண்ணை உருவாக்கித் தானியக்கப் பண இயந்திரத்தில் பயன்படுத்தத் தொடங்கினர்.

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. முதன்முதலில் ஒளிப்படியை எடுத்தவர் .....

அ) அலெக்சாண்டர் பெயின் ஆ) கிரகாம்பெல்
இ) செஸ்டர் கார்ல்சன் ஈ) சாமுவேல் மோர்சு

விடை: இ) செஸ்டர் கார்ல்சன்

2. கணினி மூலம் தொலைநகல் எடுக்கும் தொழில்நுட்பத்தைக் கண்டறிந்தவர் .....

அ) ஹாங்க் மாக்னஸ்கி ஆ) ஈஸ்ட்மன்
இ) தாமஸ் ஆல்வா எடிசன் ஈ) சென்கின்சு

விடை: அ) ஹாங்க் மாக்னஸ்கி

3. தானியக்கப் பண இயந்திரத்தை நிறுவியவர் .....

அ) செஸ்டர் கார்ல்சன் ஆ) ஸ்டீபன் ஹாக்கின்ஸ்
இ) ஸ்டீவ் ஜாப்ஸ் ஈ) ஜான் ஷெப்பர்டு பாரன்

விடை: ஈ) ஜான் ஷெப்பர்டு பாரன்

4. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடு.

அ) நியாய விலைக் கடை - திறனட்டைக் கருவி
ஆ) வருகைப் பதிவு - ஆளறி சோதனைக் கருவி
இ) பொருள் வாங்க - கட்டை தேய்ப்பி இயந்திரம்
ஈ) போக்குவரத்து முன்பதிவு - எழுதுபொருள்கள்

விடை: ஈ) போக்குவரத்து முன்பதிவு - எழுதுபொருள்கள்

5. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடு.

அ) டிம் பெர்னெர்ஸ் லீ - வையக விரிவு வலை
ஆ) ஆட்ரியன் ஆஷ்ஃபீல்டு - கடவுச்சொல் அட்டை
இ) மைக்கேல் ஆல்ட்ரிச் - இணைய வணிகம்
ஈ) ஜியோவான்னி காசில்லி - சீரோகிராபி

விடை: ஈ) ஜியோவான்னி காசில்லி - சீரோகிராபி

6. தொலைநகல் சேவை முதன்முதலில் எந்த இரு நகரங்களுக்கு இடையில் அறிமுகமானது?

அ) பெர்லின் - ஆம்ஸ்டர்டாம் ஆ) ஸ்டாக்ஹோம் - வியன்னா
இ) பாரிஸ் - லியான் ஈ) இலண்டன் - பாரிஸ்

விடை: இ) பாரிஸ் - லியான்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

நிரப்புக

1. குறுஞ்செய்தியின் வருகைக்குப் பின் தந்தி விடைபெற்றுக்கொண்டது. (சரியா, தவறா)
சரி

2. தானியக்கப் பண இயந்திரத்தை முதன்முதலில் நிறுவிய நாடு எது? எந்த ஆண்டு நிறுவியது?
இலண்டன் நகரில் (இங்கிலாந்து) 1967 ஜூன் 27ல்.

3. இணைய வணிகத்தை கண்டுபிடித்தவர் யார்? எந்த ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது?
மைக்கேல் ஆல்ட்ரிச், 1979.

குறுவினா

1. ஒளிப்படி இயந்திரம் - குறிப்பு எழுதுக.

- நியூயார்க்கைச் சேர்ந்த செஸ்டர் கார்ல்சன் கந்தகம் தடவிய துத்தநாகத் தட்டைக் கொண்டு 1938-ல் உலகின் முதல் ஒளிப்படியை எடுத்தார்.
- சீரோகிராஃபி என்னும் உலர் எழுத்து முறை இயந்திரம் இவரால் உலகிற்கு அறிமுகப்படுத்தப் பட்டது.
- இதுவே ஜெராக்ஸ் என்ற பெயரில் நிலைத்துவிட்டது.

சிறுவினா

1. தானியக்கப் பண இயந்திரம் - குறிப்புத் தருக.

- இங்கிலாந்தைச் சேர்ந்த பொறியாளரான ஜான் ஷெப்பர்டு பாரன் (John Sheperd Barron) என்பவர் தலைமையிலான குழுவொன்று பார்க்லேஸ் வங்கிக்காக இலண்டனில் 1967 ஜூன் 27 இல் தானியக்கப் பண இயந்திரத்தை நிறுவியது.
- வங்கியில் வழங்கப்பட்ட காசோலையைக் கொண்டு தான் அப்போது பணம் எடுக்கப்பட்டது. அந்தக் காசோலையில் உள்ள குறியீடுகளை இயந்திரம் படித்துப் புரிந்து கொண்டு பணத்தைத் தள்ளும். அதற்குப்பின் வாடிக்கையாளரின் ஆறிலக்கக் கடவுச்சொல் (Password) தருமாறு மேம்படுத்தப்பட்டது.
- வங்கிகளின் அட்டைகளில் தனிப்பட்ட அடையாள எண்ணை உருவாக்கித் தானியக்கப் பண இயந்திரத்தில் பயன்படுத்தத் தொடங்கினர்.

3. இந்தியத் தொடர் வண்டி இணைய வழிப் பதிவு - விளக்குக.

- மக்கள் தொகை மிகுந்த இந்தியா போன்ற நாடுகளில் வரிசையில் நிற்பது நேரவிரயம். இதனைக் குறைப்பதுடன் இருந்த இடத்திலிருந்தே பயணச் சீட்டு எடுப்பதை எளிதாக்கிய மிகப்பெரிய அமைப்பு இந்நிறுவனம் ஆகும்.
- பயணம் செய்ய வேண்டிய நாளில் ஊர்களுக்குச் செல்லும் தொடர்வண்டிகளையும் அவற்றின் நேரங்களையும் பயணம் செய்ய விரும்பும் பெட்டி வகைகளையும் அதற்குரிய தொகையையும் காண்பிக்கிறது.
- வங்கி அட்டைகளின் உதவியுடன் தொகையைச் செலுத்தி முன்பதிவு செய்து கொள்ளலாம்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

- மின்னஞ்சலில் பயணச்சீட்டு வந்து விடுகிறது. நமது அலைபேசிக்குக் குறுஞ்செய்தியும் வந்து விடுகிறது.
- 2002 ஆம் ஆண்டு இந்த வசதி அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது ஒரு நிமிடத்திற்கு 1500 பயணச் சீட்டுகள் பதிவு செய்யவும் ஒரே நேரத்தில் மூன்று இலட்சம் பயனர்கள் இணைய வழிச் சேவையைப் பயன்படுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கற்பவை கற்றபின்

பக்கம்: 102

1. வங்கியில் இணையவழிச் சேமிப்புக் கணக்குத் தொடங்கும் நடைமுறையை எழுதுக:

நாம் வங்கியில் சேமிப்புக் கணக்கு வைத்திருந்தால் வங்கிக்கு நேரில் சென்று தான் நம்முடைய பணப் பரிவர்த்தனைகளை மேற்கொள்ள இயலும். இணையவழி சேமிப்புக் கணக்கு இருந்தால் மற்ற பணிகளைச் செய்து கொண்டிருக்கும் போதே வங்கிப் பணிகளையும் செய்து கொள்ளலாம்.

இணையவழி சேமிப்புக் கணக்கு:

முதலில் நாம் எந்த வங்கியில் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கிறோமோ? அந்த வங்கிக்குரிய செயலியை (APP) முதலில் நம் கணினியிலோ அல்லது அலைபேசியிலோ பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும், பின்னர் மின் அஞ்சல் முகவரி (E-Mail ID) ஒன்றும், கடவு வார்த்தை (Password) ஒன்றும் உருவாக்குதல் வேண்டும்.

பெயர் :
வங்கிக் கணக்கு எண் :
வங்கிக் கிளை :
வங்கி குறியீட்டு எண் :

என மேற்கூறிய அனைத்தையும் குறிப்பிட்டு, இணையவழி (Net Banking) மூலம் வங்கி சேமிப்புக் கணக்கைத் தொடங்கிக் கொள்ளலாம்.

2. உங்கள் குடும்பத்தினருடன் வெளியூர் சென்ற தொடர்வண்டிப் பயணத்திற்கு இணையத்தில் எவ்வாறு முன்பதிவு செய்தீர்கள்? அதன் வழிமுறைகளை அனுபவத்தில் (அ) கேட்டறிந்து வகுப்பறையில் வழங்குக.

நாங்கள் கடந்தவாரத்தில் கோவையில் இருந்து சென்னைக்கு நீலகிரி விரைவு தொடர் வண்டியில் (வண்டி எண் 12672) இரவு 20.30 மணிக்கு முன்பதிவு செய்தோம். இரண்டாம் வகுப்பு (S - 6, 45, 46, 47, 48) தூங்கும் வசதி உள்ள பெட்டியில் இரண்டு நடுப்படுக்கை, இரண்டு கீழ்படுக்கை முன்பதிவு செய்து தானியக்கப் பண இயந்திர அட்டை மூலம் பணம் செலுத்தி கைபேசியில் வந்த குறுஞ்செய்தியை பயணச்சீட்டு பரிசோதகரிடம் காண்பித்து சுகமான பயணம் மேற்கொண்டோம்.

இணையத்தில் தொடர்வண்டிப் பயணத்திற்கு முன்பதிவு செய்தல்:

- மாணவர்களே! நாம் பயணம் செய்ய திட்டமிடும் பொழுதே, பயணத்திற்கான சீட்டை இணையவழியில் பதிவு செய்து கொள்ளலாம்.
- இன்றைய காலக்கட்டத்தில் இணையதளத்தில் பயணச் சீட்டை பதிவு செய்வது மிகவும் எளிது. நம் நேரமும், பெருமளவு மிச்சமாகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

- பயணம் மேற்கொள்ள வேண்டிய ஊருக்கு உங்கள் ஊரில் இருந்து செல்லும் தொடர் வண்டிகளை அறிந்து கொண்டு, அவற்றின் நேரங்களையும் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.
- பயணம் செய்ய விரும்பும் நாளில் எந்த தொடர்வண்டியில், எந்த பெட்டியில் இருக்கை வசதி மற்றும் படுக்கை வசதியுடன் இருக்கும் காலியிடங்களை அறிந்து கொள்ள வேண்டும். அவற்றை அறிய முனையும் போதே பயணச் சீட்டுக்கான தொகையும் அறிந்து கொள்ளலாம்.
- பின்னர் வங்கி அட்டைகளின் உதவியுடன், பயணச் சீட்டிற்கான தொகையைச் செலுத்தி முன்பதிவு செய்து கொண்டோம் எனில், சற்று நேரத்தில் நமது அலைபேசிக்கு குறுஞ்செய்தியும், அச்செய்தியில் நமக்கான இருக்கை எண், புறப்படும் நேரம் போன்றவை வந்துவிடும்.
- மின் அஞ்சலில் பயணச்சீட்டும் வந்துவிடுகிறது. நாம் பயணம் செய்யும் பொழுது, குறுஞ்செய்தியையும், நம்முடைய அடையாள அட்டை ஏதேனும் ஒன்றைக் காட்டி சுகமான பயணத்தை மேற்கொள்ளலாம்.
- களைப்பின்றி பயணம் செய்ய இணையவழி பதிவு முறையே சிறந்ததாகும்.

3. விரலியில் (Pendrive) உள்ள பாடல்களையும், எழுத்துக் கோப்புகளையும் (Document) கணினியில் நுழைந்து உறைகளில் (Folder) இட்டுச் சேமிப்பதைச் செய்து பார்த்துத் தெரிந்து கொள்க.

- 'விரலி' என்ற வார்த்தை Pendrive என்ற ஆங்கில வார்த்தையின் தமிழாக்கம் ஆகும்.

விரலியில் உள்ள பாடல்கள் எழுத்துக் கோப்புகளை கணினியில் சேமிக்கும் முறை:

- முதலில் விரலியை அதன் பகுதியில் நுழைத்தல் வேண்டும்.
- கணினித் திரையில் குறியீடு ஒன்று தோன்றும்.
- அந்தக் குறியீட்டை இயக்கும் போது, விரலியில் உள்ள செய்திகளை எந்தப் பகுதியில் சேமிக்க வேண்டும், தனி உறை வேண்டுமா என்று திரையில் தோன்றும்.
- கோப்புகள் உள்ள பகுதியில் சேமிக்க வேண்டுமென்றாலும் குறிப்பிட்ட கோப்புப் பகுதியை இயக்கி அதனுடன் சேமித்துக கொள்ளலாம்.
- தனியாக ஒரு உறையை உருவாக்கியும் சேமித்துக் கொள்ளலாம்.
- திரையின் முகப்புப் பகுதியில் உறையை உருவாக்கி வைத்துக் கொண்டோம் என்றால் விரலி மூலம் நாம் சேமித்த செய்திகள் பாடல்கள், எழுத்துக் கோப்புகளை உடனடியாக இயக்கி பயன்படுத்திக் கொள்ளலாம்.
- இதுவே விரலியில் உள்ளனவற்றை கணினியில் சேமிக்கும் முறையாகும்.

⁂⁂⁂⁂⁂⁂⁂

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கவிதைப்பேழை

இயல் நான்கு

ஓ, என் சமகாலத் தோழர்களே!

'வைரமுத்து'
பிறந்த ஊர் - தேனி மாவட்டம் மெட்டூர்
பெற்ற விருதுகள் - பத்மபூஷன்
★ 'கள்ளிக்காட்டு இதிகாசம்' புதினத்துக்கு சாகித்ய அகாதெமி விருது (2003)
★ சிறந்த திரைப்பட பாடலாசிரியருக்கான தேசிய விருது - ஏழு முறை


கவிஞர் வைரமுத்து

பாடநூல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. பின்வரும் தொடர்களைப் படித்து 'நான்' யார் என்று கண்டுபிடிக்க.

அறிவியல் வாகனத்தில் நிறுத்தப்படுவேன்.
எல்லாக் கோளிலும் ஏற்றப்படுவேன்.
இளையவர் கூட்டம் என்னை ஏந்தி நடப்பர்.

அ) இணையம் ஆ) தமிழ் இ) கணினி ஈ) ஏவுகணை

விடை: ஆ) தமிழ்

குறுவினா

1. கூட்டுப் புழுவை எடுத்துக்காட்டிக் கவிஞர் உணர்த்தும் கருத்துக்களை எழுதுக.

பொறுமை, அடக்கம் என்னும் கட்டுப்பாடுகளைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டும். கூட்டுப்புழுவாக இருந்து தான் பின்னாளில் பட்டுப்பூச்சியாய்க் கோலம் கொள்ளும் எனக் கவிஞர் குறிப்பிடுகிறார்.

சிறுவினா

1. 'என் சமகாலத் தோழர்களே'' கவிதையில் கவிஞர் விடுக்கும் வேண்டுகோள் யாது?

- அறிவியல் என்னும் வாகனத்தின் மீது நம்மை ஆளும் தமிழ்மொழியை நிறுத்துங்கள். பழங்கால மன்னர்களுள் ஒருவன் கரிகாலன். அவனது பெருமைகளையும் சிறப்புகளையும் கணிப்பொறிக்குள்ளே பதிவு செய்து வையுங்கள்.
- அடுத்தவர் ஏவுகின்ற திசையில் நோக்கமில்லாமல் செல்லும் அம்பைப்போல் இருந்த மக்கள் இனத்தை மாற்றுங்கள். ஏவுகணை செலுத்துவதிலும் தமிழை எழுதி எல்லாக் கோளிகளிலும் ஏற்றிச் செலுத்துங்கள் என்று கவிஞர் வைரமுத்து வேண்டுகோள் விடுக்கிறார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. பட்டுப் பூச்சியாய் உருப்பெறுவது
அ) தேனீ ஆ) வண்டு இ) கூட்டுப்புழு ஈ) ஈசல்
விடை: இ) கூட்டுப்புழு

2. அறிவை மறந்ததாக ..... இருக்கக் கூடாது.
அ) உணர்ச்சி ஆ) வேகம் இ) செயல் ஈ) பண்பாடு
விடை: அ) உணர்ச்சி

3. கழனிகள் சுமக்க வேண்டியது .....
அ) கதிர்கள் ஆ) வெம்பிய பழங்கள்
இ) வறண்ட தாவரம் ஈ) அழுகிய பொருள்கள்
விடை: அ) கதிர்கள்

4. காட்டும் பொறுமை அடக்கம் என்னும்
கட்டுப்பாட்டைக் கடவாதீர் -
இவ்வடியில் "பொறுமை அடக்கம்" என்பதன் இலக்கணக் குறிப்பு தருக.
விடை: உம்மைத் தொகை

5. 2003-ம் ஆண்டு சாகித்ய அகாடமி விருது பெற்ற வைரமுத்துவின் நூல் எது?
விடை : கள்ளிக்காட்டு இதிகாசம்

கற்பவை கற்றபின்

பக்கம்: 104

1. அறிவியல் செய்திகளை வெளிப்படுத்தும் கவிதைகளைத் தொகுத்து வகுப்பறையில் படித்துக் காட்டுக.

அ) நீர்நின் றிளகிற் றிதுவேண்டா
- சீவகசிந்தாமணி (காந்தருவதத்தை இலம்பகம்)

அறிவியல் செய்தி:

மரத்தில் செய்யப்படும் வீணையே இன்னிசை எழுப்ப ஏற்றது. மரத்தின் ஈரத்தன்மைக்கு ஏற்ப அதில் மோதும் ஒலி அலைகளின் அதிர்வெண்ணும் வேறுபடும். சீவகன், தத்தை கொடுத்த யாழினை ஆராயும் போது, நீரில் இருந்து ஊறிய மரத்தால் செய்யப்பட்ட யாழில், அதிர்வெண் வேறுபட்டு சமச்சீரற்று காணப்படும் என்பதால் "நீர்நின் றிளகிற் றிதுவேண்டா" என்றான்.

ஆ) "அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி" - ஔவையார்
"ஓர் அணுவினைச் சதகூறிட்ட கோணினும் உளன்" - கம்பர்

அறிவியல் செய்தி:

அணுவைப் பிளக்கவும், சேர்க்கவும் முடியும் என்ற இன்றைய அறிவியலை நம் கவிஞர்கள் அன்றே தம் கவிதைகளில் கூறியுள்ளனர். அணுசேர்ப்பும், அணுப்பிரிப்பும் பற்றிய கருத்துகள் அன்றே அரும்பியுள்ளன.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

இ) "அகல்வயல் பொழிந்தும்.....
உறுமிடத் துதவா உவர்நிலம்....." - புறநானூறு பரணர்

"பயவாக் களரணையர் கல்லாதவர்" - திருவள்ளுவர்

அறிவியல் செய்தி:

எவ்வளவு மழை பொழிந்தாலும் "களர்நிலம்" என அழைக்கப்படும் உவர்நிலம் எதற்கும் உதவாது என்ற மண்ணியல் அறிவியலைக் கூறுகிறது.

இவ்வாறு நம் தமிழ்ப் புலவர்கள் இயற்றிய கவிதைகள் பல, நமக்கு அறிவியல் செய்திகளைக் கூறுவதாக உள்ளன என்பதை மறுக்க இயலாது.

2. விமானமும் ஏவுகணையும் பேசிக்கொள்வது போல ஓர் உரையாடலைக் குழுவாகச் சேர்ந்து உருவாக்குக.

விமானமும் - ஏவுகணையும் பேசுவதுபோல உரையாடல்

விமானம் : வணக்கம்! ஏவுகணை அவர்களே!

ஏவுகணை : வணக்கம்! வணக்கம்!

விமானம் : ஐயா உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி

ஏவுகணை : எனக்கும் மகிழ்ச்சி

விமானம் : என் பெயர் விமானம். நான், மக்களை நாடுவிட்டு நாடு செல்ல உதவும் பொருட்டு வானில் பறப்பேன். அதனால் என்னை வானூர்தி என்றும் அழைப்பர்.

ஏவுகணை : அப்படியா! நான் அதற்கும் மேலே பல்லாயிரக்கணக்கான கிலோமீட்டர் தூரம் மேலே சென்று செயற்கைகோள்களை அதனதன் பாதையில் நிறுத்துவேன்.

விமானம் : அப்படியா கேட்கவே ஆச்சரியமாக இருக்கிறதே. என்னை இயக்க விமானி துணை விமானி எல்லாம் இருப்பார்கள். உங்களை இயக்க....

ஏவுகணை : ஆளெல்லாம் இருக்கமாட்டார்கள். ஏவு ஊர்தியில் என்னை நிறுத்தி, இரண்டு மூன்று நாள்களுக்கு முன்னதாகவே எண்நிலை (count down) தொடங்கி கண்காணித்து, குறிப்பிட்ட நேரம் வந்தவுடனே என்னை மிக வேகமாக ஏவி விடுவார்கள். நானே குறிப்பிட்ட இடத்திற்கு சென்று விடுவேன்.

விமானம் : என்னை பூமியில் இருந்து கண்காணிப்பது போல் உங்களையும் கண்காணிப்பார்களா!

ஏவுகணை : ஆம்! என்னையும் கண்காணித்துக் கொண்டேதான் இருப்பார்கள்.

விமானம் : நன்றி!!

ஏவுகணை : நன்றி!!

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

3. பாடலில் அமைந்துள்ள தொடைநயங்களை எழுதுக:

கிளிக்கு றெக்கை இருக்கும் வரைக்கும்
கிழக்கு வானம் தூரமில்லை
முளைக்கும் விதைகள் முளைக்கத் துடித்தால்
பூமி ஒன்றும் பாரமில்லை.

தொடைநயங்கள் :

1. கிளிக்கு, கிழக்கு - முதல் எழுத்து ஒன்றிவந்து " மோனை நயம்'' உள்ளது.
2. முளைக்கும் - முளைக்கத்

   இதில், முதல் எழுத்து ஒன்றிவந்து "சீர் மோனை'' நயமும்

   இரண்டாம் எழுத்து ஒன்றி வந்து "சீர் எதுகை'' நயமும் இடம் பெற்றுள்ளது.
3. தூரமில்லை - பாரமில்லை

   இதில் "மில்லை'' என்னும் இறுதி சீர் ஒன்றி வந்து "இயைபுத் தொடை'' நயம் அமைந்துள்ளது.

××⁂⁂⁂××

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கவிதைப்பேழை

இயல் நான்கு

உயிர்வகை

இலக்கணக் குறிப்பு அறிதல் :

உணர்ந்தோர் - வினையாலணையும் பெயர்

பகுபத உறுப்பிலக்கணம் அறிதல் :

நெறிப்படுத்தினர் - நெறிப்படுத்து + இன் + ஆர்

நெறிப்படுத்து - பகுதி

இன் - இறந்தகால இடைநிலை

ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

பாடநூல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
இரண்டறிவதுவே அதனொடு நாவே

இவ்வடிகளில் அதனோடு என்பது எதைக் குறிக்கிறது?

அ) நுகர்தல் ஆ) தொடு உணர்வு

இ) கேட்டல் ஈ) காணல்

விடை : ஆ) தொடு உணர்வு

குறுவினா

1. மூன்றறிவதுவே அவற்றோடு மூக்கே
நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறிவதுவே அவற்றொடு செவியே - **இவ்வடிகளில் தொல்காப்பியர் குறிப்பிடும், மூவறிவு, நான்கறிவு, ஐந்தறிவு உயிர்கள் யாவை?**

வ. எண்	அறிவும் ஆற்றல்	புலன்கள்	உயிர்கள்	அறிவு
1.	உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல்	மூக்கு	கரையான், எறும்பு	மூன்றறிவு
2.	உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் + காணல்	கண்	நண்டு, தும்பி (வண்டு)	நான்கறிவு

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

3.	உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் + காணல் + கேட்டல்	காது	பறவை, விலங்கு	ஐந்தறிவு

சிறுவினா

1. அறிவையும் உயிரினங்களையும் தொல்காப்பியர் எவ்வாறு தொடர்பு படுத்துகிறார்?

வ.எண்.	அறிவுநிலை	உணர்வு	உயிரினங்கள்
1	ஓர் அறிவு உயிர்	தொடுதல் உணர்வு மட்டும் உடையவை	புல், மரம்
2	ஈரறிவு	தொடுதல் உணர்வுடன் நாவினால் சுவைத்தறிதல் உடையவை	சிப்பி, நத்தை / சங்கு, கிளிஞ்சல்
3	மூவறி உயிர்	தொடுதல், நாச்சுவை, மூக்கால், முகர்தல் கண்ணாற் காண்டல்	கரையான், எறும்பு, செல், ஈசல், தும்பாப்பூச்சி, பட்டுப்பூச்சி
4	நான்கு அறிவு உயிர்கள்	தொடுதல், நாச்சுவை, மூக்கால் முகர்தல் கண்ணாற் காண்டல்	நண்டு, தும்பி, ஈ, குளவி
5	ஐயறிவுயிர்	தொடுதல், நாக்குச் சுவை, மூக்கால் முகர்தல் கண்ணாற் காண்டல், கேட்டல்	பறவை, விலங்கு.
6	ஆறறிவு	தொடுதல், நாக்குச்சுவை, மூக்கால் முகர்தல், கண்ணாற் காணல், செவியாற் கேட்டல் இவை ஐந்தும் ஐம்பொறிகளால் அறியும் ஐம்புல அறிவுகள். அவற்றுடன் ஆறாவதாகிய மனத்தால் அறியும் அறிவுடைய உயிர்கள்	மனிதன்

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடு.

அ) ஈரறிவு உயிர் - சிப்பி, நத்தை
ஆ) நான்கறிவு உயிர் - நண்டு, தும்பி
இ) ஐந்தறிவு உயிர் - புல், மரம்
ஈ) மூவறிவு உயிர் - கரையான், எறும்பு

விடை: இ) ஐந்தறிவு உயிர் - புல், மரம்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

2. பொருந்தாததனைத் தேர்ந்தெடு.

அ) சுவைத்தல் ஆ) உறங்குதல் இ) நுகர்தல் ஈ) கேட்டல்

விடை: ஆ) உறங்குதல்

3. சரியானதைத் தேர்ந்தெடு.

i) தமிழில் கிடைக்கப்பெற்ற முதல் நூல் தொல்காப்பியம்.

ii) தொல்காப்பியத்தில் எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்கள் உண்டு.

iii) தொல்காப்பியத்தில் அகம், புறம் சார்ந்த வாழ்வியல் நெறிகள் விளக்கப்பட்டுள்ளன.

iv) கடைச்சங்கக் காலத்தில் இயற்றப்பட்டது தொல்காப்பியம்.

அ) i, ii, iii, iv - நான்கும் சரி. ஆ) i, ii, iii-சரி, iv-தவறு.

இ) i, ii - சரி, iii, iv - தவறு. ஈ) i, ii-தவறு iii, iv-சரி.

விடை: ஆ) i, ii, iii-சரி, iv-தவறு.

4. தொல்காப்பியத்தில் உள்ள இயல்கள் .....

அ) 30 ஆ) 33 இ) 24 ஈ) 27

விடை : ஈ) 27

5. ஆறறிவு உடைய உயிரினம் .....

அ) நத்தை ஆ) மனிதன் இ) விலங்கு ஈ) தும்பி

விடை: ஆ) மனிதன்

6. தமிழ்மொழியில் கிடைத்த முதல் இலக்கண நூல் எது? **விடை: தொல்காப்பியம்**

7. தொல்காப்பியத்தின் அதிகாரங்கள் யாவை? **விடை : எழுத்து, சொல், பொருள்**

8. தொல்காப்பியத்தின் மொத்த இயல்கள் யாவை? **விடை: 27**

9. எழுத்துகள் பிறக்கும் இடங்களை உடற் கூற்றியல் அடிப்படையில் விளக்கும் நூல் எது?

விடை: தொல்காப்பியம்

10. ஈரறிவு உயிர்களுக்குச் சான்று. **விடை: சிப்பி, நத்தை**

கற்பவை கற்றபின் பக்கம்: 106

1. அ) தட்டான் பூச்சி தாழப்பறந்தால் தப்பாமல் மழை வரும்.

ஆ) வானில் பறக்குது குதிரை

பறக்கப் பறக்க வால் குறையும் குதிரை - அது என்ன? **விடை : விமானம்**

இவை போன்ற அறிவியல் செய்திகள் கொண்ட பழமொழிகள், விடுகதைகளைப் படித்தும் கேட்டும், அவற்றின் அறிவியல் அடிப்படையை வகுப்பறையில் கலந்துரையாடுக.

அறிவியல் சார்ந்த பழமொழிகள் விடுகதைகள்

விடுகதைகள்

1. செல்லும் இடமெல்லாம் நானும் வருவேன், கையிலும் வைக்கலாம், பையிலும் வைக்கலாம், நானின்றி இன்று மனித உயிர்கள் இல்லை. நான் யார்? **விடை : அலைபேசி**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

2. காற்றுப் புக முடியாத இடத்திலும் நான் புகுவேன். எங்கெங்கு சென்றாலும் அங்குள்ள தன்மையை செய்தியாகப் புகைப்படமாக அனுப்புவேன். ஆராய உகந்தவன். நான் யார்?

விடை: செயற்கைக்கோள்

பழமொழிகள்

1. அறிவை மேம்படுத்துவது அறிவியல்.
2. அறிவியல் இல்லாத ஆன்மீகம் முடமாகும்.
3. ஆறாவது அறிவே அறிவியல்.
4. அறிவியல் அறிவை மேம்படுத்தும்; அறிவு வாழ்வை மேம்படுத்தும்.
5. இன்றைய அறிவியலே நாளைய தொழில்நுட்ப வளர்ச்சி.

2. 'விமான நிலையத்தில் நான்' - கற்பனையாகக் கதை ஒன்றினை எழுதுக.

விமான நிலையத்தில் நான்

(கற்பனைக் கதை)

அன்று காலையில் இருந்தே எனக்குள் ஒரே பரபரப்பு... இனம் புரியாத குதூகலம் என மனதுக்குள் கொஞ்சம் மகிழ்ச்சி பதற்றம் என ஒரு மாதிரியான உணர்வுகள் வந்து போய்க் கொண்டிருந்தன.

ஏன் தெரியுமா. நான் முதன் முதலில் விமான நிலையம் சென்று விமானத்தில் ஏறி சுற்றுலா செல்லப் போகிறேன் குடும்பத்தில் எல்லோரும் என்னைப் போன்றே இருந்தனர்.

என் தந்தை, என் பெரிய சகோதரர் எல்லாரும் முன்பே விமானத்தில் பயணம் செய்து இருக்கிறார்கள். நான் மட்டும் தான் முதன்முதலில் விமானத்திலும் பயணம் செய்ய போகப் போகிறேன் விமான நிலையத்துக்குள்ளும் செல்லப் போகிறேன்.

புறப்படும் வேளை வந்தது ..... ஆர்வத்துடன் அவரவர் பயணச் சுமைகளுடன் வாகனத்தில் ஏறினோம். வாகனம் விரைந்து சென்றது விமான நிலையம் நோக்கி .....

குறிப்பிட்ட எல்லை வரைதான் வாகனத்தை அனுமதித்தார்கள் உள்ளே மெதுவாக படபடப்புடன் நுழைந்தேன்....

ஒலி பெருக்கியில் அறிவிப்பு ஒரு புறம். மின் எழுத்துகளில் அறிவிப்பு பலகைகள் ஒரு புறமாய் ஆரவாரமாய் இருந்தது.

நுழைவு வாயிலைக் கடந்தேன்... சோதனையிடுவதற்கு அழைத்தார்கள் அனுமதிக்கப்படாத பொருள்கள் நாம் வைத்திருந்தால் அவற்றை அப்புறப்படுத்தி விடுகிறார்கள்.

எங்கள் விமானம் வருவதற்கு இரண்டு மணிநேரத்திற்கு முன்பே சென்று விட்டோம். ஒவ்வொரு காட்சியும் ஒவ்வொரு நிகழ்வும் என்னை மிகவும் ஆச்சரியப் படுத்துவதாய் இருந்தது.

திடீரென்று விமானநிலையத்தில் பரபரப்பு ..... செய்தியாளர்கள் தடதடவென ஓடி வந்தனர். என்னவென்று விசாரித்தால் தற்பொழுது வந்து தரை இறங்கிய விமானத்தில் இருந்து பிரபல தமிழ் கவிஞர் ஒருவரும், அரசியல் தலைவர் ஒருவரும் வருகிறார்களாம்.... அவர்களுள் அரசியல் தலைவரை நேர் காணல் செய்வதற்காக செய்தியாளர்கள் ஓடிவந்தனர்.... அதனையும் கண்டு களித்தேன்....

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

நாங்கள் பயணம் செய்ய வேண்டிய விமானம் வருவதற்கான அறிவிப்பு வந்தது, ஓடு தளத்தில் நின்ற விமானத்தில் ஏறுவதற்கான ஆயத்தப் பணிகளாக முதலில் எங்கள் கூடுதல் சுமைகளை எடுத்தனர்.

பின்னர் வாகனத்தில் எங்களை ஏறச்செய்து, பிரம்மாண்டமான ஓடுதளத்தில் கம்பீரமாக நின்ற விமானத்தின் அருகில் கொண்டு நிறுத்தினார்கள்.

வாகனத்தில் இருந்து இறங்கி விமானத்தில் விமானப்பணிப் பெண்ணின் இனிய வரவேற்போடு விமானத்துக்குள் ஏறி அவரவர் இருக்கையில் அமர்ந்து.... மிகுந்த மகிழ்ச்சியுடன் பயணம் செய்தோம்.

※※⁂⁂⁂※※

விரிவானம்

இயல் நான்கு

விண்ணையும் சாடுவோம்

பாடநூல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. விடை வரிசையைத் தேர்க.

அ) இது செயற்கைக்கோள் ஏவு ஊர்தியின் செயல்பாட்டை முன்கூட்டியே கணிக்கும்.

ஆ) இது கடல் பயணத்துக்காக உருவாக்கப்பட்ட செயலி

i) நேவிக், சித்தாரா ii) நேவிக், வானூர்தி

iii) வானூர்தி, சித்தாரா iv) சித்தாரா, நேவிக்

விடை: iv) சித்தாரா, நேவிக்

குறுவினா

1. செயற்கைக் கோள் ஏவு ஊர்தியில் பொருந்தும் செயலியைப் பற்றி திரு. சிவன் கூறுவது யாது?

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் 1982 ஆம் ஆண்டுதான் வேலையில் சேர்ந்தார். திரு. சிவன் 1983 ஆம் ஆண்டு முதல் முதலில் பி.எஸ்.எல்.வி (Polar Satellite Launch Vehicle) திட்டத்தை தொடங்க மைய அரசு இசைவு தந்தது.
- அங்கு பணிபுரியும் அறிவியலாளர்கள் அனைவருக்குமே இத்திட்டப்பணி புதிதுதான். ஆனால் சிவன் அவர்கள் இரவு பகலாக முயற்சி செய்து ஒரு செயலியை உருவாக்கினார். அது சித்தாரா என்றழைக்கப்பட்டது. (SITARA - Software for Integrated Trafectory Analysis with Real Time Applications)

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

- இது செயற்கைக் கோள் ஏவு ஊர்தி பற்றிய முழுவிவரங்களையும் மின்னியக்க முறையில் (Digital) சேகரிக்கும்.

சிறுவினா

1. மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதில் செயற்கைக்கோளின் பங்கு யாது?

- மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதில் செயற்கைக்கோளின் பங்கு மகத்தானது ஆகும். ஒவ்வொரு ஆண்டும் விவசாயத்தின் மூலம் எவ்வளவு விளைச்சல் கிடைக்கும் என்பதைக் கணித்து அரசின் கவனத்துக்குத் தெரியப் படுத்தப்படுகிறது. இதைப் பயன்படுத்தி அரசால் அதற்கேற்ற திட்டங்களை வகுத்து மக்களுக்கு பயன்படுத்த முடிகிறது.
- நிலத்தில் எந்த இடத்தில் நீரின் அளவு எவ்வளவு இருக்கும் என்பதைச் செயற்கைக்கோள் மூலம் கண்டுபிடித்ததை மக்களுக்கு பயனுள்ள வழியில் செய்யமுடிகிறது.
- கடல்பகுதியில் எந்தெந்த இடங்களில் மீன்கள் அதிகமாகக் கிடைக்கும் என்று மீனவர்களுக்குச் சொல்ல பயன்படுத்தப்படுகிறது.
- மக்கள் பயன்படுத்தும் இணையவழிச் சேவைகளுக்கு செயற்கைக்கோள் இவ்வாறாகப் பயன்படுகிறது.

நெடுவினா

1. இந்திய விண்வெளித் துறை பற்றிய செய்திகளை விவரிக்க.

இது, இந்திய அரசின் முதன்மை தேசிய விண்வெளி முகமை ஆகும். இதன் தலைமையகம், இந்தியாவில், பெங்களூருவில் நீயூஸல் சாலையில் 'அன்தரீஷ் பவன்' என்ற பெயரில் உள்ளது. இதன் முதன்மை விண்வெளி நிலையம் சதீஸ் தவன் விண்வெளி மையம். இதன் தலைவராக திரு கே. சிவன், 14.1.2018 அன்று முதல் பொறுப்பேற்று செயலாற்றி வருகிறார். இவர், நாகர்கோவில், வல்லங் குமாரவிளை கிராமத்தில் பிறந்தவர். எம்.ஐ.டி யில் சேர்ந்து எம்.இ., பட்டம் பெற்று விக்ரம் சாராபாய் நிறுவனத்தில் இயக்குநராகப் பணியாற்றி வந்தார்.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் உலகின் மிகப் பெரும் விண்வெளி ஆய்வு மையங்களில் ஆறாவது இடத்தைப் பெற்றுள்ளது. இதன் முதன்மை நோக்கமாக விண்வெளி தொழில்நுட்பத்தில் மேம்பாடுகளை ஆராய்வதும் அவற்றை நாட்டு நலனுக்காகப் பயன்படுத்துவதும் ஆகும். இந்நிறுவனம், 1975 ஆம் ஆண்டில் இந்தியாவின் முதல் செயற்கைக்கோள் 'ஆரியப்பட்டா' அமைக்கப்பட்டு சோவியத் ஒன்றியத்தால் விண்ணேற்றப்பட்டது. இதற்குக் காரணமானவர் விக்ரம் சாராபாய் ஆவார். 1980 இல் இந்தியாவில் கட்டமைக்கப்பெற்ற ஏவுதளம் SLV3 மூலமாக முதல் செயற்கைக் கோள் 'ரோகினி' ஏவப்பட்டது. இந்நிறுவனத்தின் சாதனையாக 2008 ஆம் ஆண்டில் நிலவை நோக்கிய இந்தியாவின் முதற்பயணமாக "சந்திராயன்-I" ஏவப்பட்டது.

1957 ஆம் ஆண்டு முதலே ரஷ்யா உட்பட பல நாடுகள் செயற்கைக் கோள்களை ஏவியிருக்கின்றன. அவற்றை எல்லாம் இராணுவத்துக்கு மட்டுமே பயன்படுத்தினார்கள். வல்லரசு நாடுகள் அவற்றின் ஆற்றலைக் காண்பிக்கவே, இந்த தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தின. ஐம்பது ஆண்டுகளுக்கு முன் நம்நாட்டு அறிவியலாளர் டாக்டர் விக்ரம் சாராபாய் இந்தத் தொழில்நுட்பம் மக்களுக்கு எவ்வாறு பயன்படும் என்றே சிந்தித்தார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

இந்திய ஏவுகணை நாயகன் அப்துல் கலாம், இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் செயற்கைக்கோள் திட்ட இயக்குநர், வளர்மதி, மங்கள்யான் செயற்கைக்கோள் திட்ட இயக்குநர் அருணன் சுப்பையா போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் தற்போதைய தலைவர் .....
   அ) மாதவன் நாயர் ஆ) மயில்சாமி அண்ணாதுரை
   இ) சிவன் ஈ) வளர்மதி விடை: இ) சிவன்

2. 'ஆர்யபட்டா' என்ற இந்திய முதல் செயற்கைக்கோளை ஏவுவதற்கு காரணமானவர் .....
   அ) விக்ரம் சாராபாய் ஆ) விஸ்வேஸ்வரய்யா
   இ) கிரண்குமார் ஈ) ராதாகிருஷ்ணன் விடை: அ) விக்ரம் சாராபாய்

3. திருவனந்தபுரத்தில் செயல்பட்டு வரும் ஆய்வு மையம் .....
   அ) பாபா அணு ஆராய்ச்சி மையம் ஆ) இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையம்
   இ) சதீஷ் தவன் விண்வெளி ஏவுதள மையம்
   ஈ) விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் விடை: ஈ) விக்ரம் சாராபாய் விண்வெளி மையம்

4. இந்தியாவின் 11-வது குடியரசுத் தலைவர் யார்?
   அ) கே.ஆர். நாராயணன் ஆ) திருமதி. பிரதீபா பாட்டில்
   இ) ஆர். வெங்கட்ராமன் ஈ) ஏ.பி.ஜெ. அப்துல் கலாம்
   விடை: ஈ) ஏ.பி.ஜெ. அப்துல் கலாம்

5. 'மங்கள்யான்' திட்ட இயக்குநர் .....
   அ) சிவன் ஆ) இராதாகிருஷ்ணன்
   இ) அருணன் சுப்பையா ஈ) வளர்மதி விடை: இ) அருணன் சுப்பையா

6. இந்திய விண்வெளி திட்டத்தின் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
   விடை: விக்ரம் சாராபாய்

7. இந்திய ஏவுகணை நாயகன் என்று போற்றப்படுபவர் யார்? விடை: ஏ.பி.ஜே. அப்துல்கலாம்

8. 2015-ல் தமிழக அரசின் அப்துல்கலாம் விருதைப் பெற்ற முதல் அறிவியல் அறிஞர் யார்?
   விடை: வளர்மதி

9. சர்.சி.வி. இராமன் நினைவு அறிவியல் விருதைப் பெற்றவர் யார்?
   விடை: மயில்சாமி அண்ணாதுரை

10. சந்திராயன் -1 நிலவின் புறவெளியை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டது. (சரியா,தவறா)
    விடை: சரி

11. இஸ்ரோவின் ஒன்பதாவது தலைவராகப் பதவியேற்றவர் யார்? விடை: சிவன்

12. இதுவரை இந்தியாவுக்காக செலுத்தப் பட்டுள்ள செயற்கைக்கோள்கள் எத்தனை?
    விடை: 45

13. கடலில் மீன்கள் அதிகம் உள்ள பகுதியை மீனவர்களுக்கு தெரியப்படுத்தும் செயலி எது?
    விடை : நேவிக்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

குறுவினா

1. ஏவுகணை நாயகன் - அப்துல்கலாம் குறித்துக் கூறுக.

- இந்தியாவின் 11ஆவது குடியரசுத் தலைவராகப் பணியாற்றிய இந்திய அறிவியலாளர். தமிழ்நாட்டின் இராமேசுவரத்தைச் சேர்ந்தவர்.
- ஏவுகணை, ஏவுகணை ஏவு ஊர்தித் தொழில்நுட்ப வளர்ச்சியில் கலாம் காட்டிய ஈடுபாட்டினால் அவர் 'இந்திய ஏவுகணை நாயகன்' என்று போற்றப்படுகின்றார்.
- பாதுகாப்பு ஆராய்ச்சி, மேம்பாட்டு நிறுவனத்திலும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திலும் விண்வெளிப் பொறியாளராகப் பணியாற்றினார்.
- இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருது பெற்றவர். இவர் தம் பள்ளிக் கல்வியைத் தமிழ் வழியில் கற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

2. மயில்சாமி அண்ணாதுரை - குறித்து எழுதுக.

- 'இளைய கலாம்' என்று அன்புடன் அழைக்கப்படும் மயில்சாமி அண்ணாதுரை கோவை மாவட்டம் பொள்ளாச்சி வட்டம், கோதவாடி என்னும் சிற்றூரில் பிறந்தவர். மேல்நிலை வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் தமிழ்வழியில் படித்தவர். இதுவரை 5 முனைவர் பட்டங்கள் பெற்றுள்ளார்.
- 1982ஆம் ஆண்டு இந்திய விண்வெளி ஆய்வு மையத்தில் பணியில் சேர்ந்த இவர் தற்போது இயக்குநராகப் பணிபுரிகிறார்.
- நம் நாடு நிலவுக்கு முதன் முதலில் அனுப்பிய ஆய்வுக்கலம் சந்திரயான்-1 திட்டத்தின் திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர். சந்திரயான்-2 திட்டத்திலும் பணியாற்றி வருகிறார்.
- சர்.சி.வி.இராமன் நினைவு அறிவியல் விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றவர். தமது அறிவியல் அனுபவங்களை, கையருகே நிலா என்னும் நூலாக எழுதியுள்ளார்.

3. 'அருணன் சுப்பையா' குறித்துக் கூறுக.

- இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் அறிவியலாளரும், திட்ட இயக்குநரும் ஆவார்.
- திருநெல்வேலி மாவட்டத்தின் ஏர்வாடி அருகில் உள்ள கோதைசேரி என்னும் ஊரைச் சேர்ந்தவர்.
- இயந்திரப் பொறியியலில் பட்டம் பெற்று, 1984இல் திருவனந்தபுரத்திலுள்ள விக்ரம்சாராபாய் விண்வெளி மையத்தில் பணியில் சேர்ந்து, தற்போது பெங்களூரில் உள்ள இந்திய விண்வெளி ஆய்வு மையத்தில் பணிபுரிகிறார்.
- 2013இல் மங்கள்யான் செயற்கைக்கோளை உருவாக்கிய இந்தியாவின் செவ்வாய் சுற்றுகலன் திட்டத்தின் திட்ட இயக்குநராக இருக்கின்றார்.

கற்பவை கற்றபின்

பக்கம்: 112

1. பி.எஸ்.எல்.வி. (PSLV) பற்றியும் ஜி.எஸ்.எல்.வி. (GSLV) பற்றியும் செய்திகளைத் திரட்டி விளக்கப் படத்தொகுப்பு உருவாக்குக.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான, **'இஸ்ரோ'** சார்பில்,**பி.எஸ்.எல்.வி (PSLV).**, மற்றும் **ஜி.எஸ்.எல்.வி (GSLV).**, ரக ராக்கெட்டுகள் விண்ணில் செலுத்தப்பட்டு வருகின்றன.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com


www.Padasalai.Net www.CBSEtips.in

தகவல் தொடர்புக்கு பயன்படும், 'ஜிசாட் 6 ஏ' செயற்கைக்கோள், ஜி.எஸ்.எல்.வி., ராக்கெட் மூலம், நேற்று மாலை, வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப் பட்டது.

இந்த செயற்கைக்கோள், ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள, இரண்டாவது ஏவுதளத்தில் இருந்து, நேற்று மாலை, 4:56 மணிக்கு, ஜி.எஸ்.எல்.வி.,- எப் 8' என்ற, ராக்கெட் மூலமாக, வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. உள்நாட்டு தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்டுள்ள, ஆறாவது, 'கிரயோஜெனிக் இன்ஜின்' உதவியுடன், விண்ணில் செலுத்தப்பட்ட, 'ஜிசாட் 6 ஏ' செயற்கைக்கோள், ஏவப்பட்ட, 17:50 நிமிடங்களில், பூமியில் இருந்து, 170 கிலோ மீட்டர் உயரத்தில் நிலை நிறுத்தப்பட்டது. தற்போது செலுத்தப்பட்ட ராக்கெட், ஜி.எஸ்.எல்.வி., ரகத்தில், 12வது ராக்கெட். 'ஜிசாட் 6 ஏ' செயற்கைக்கோளின் ஆயுட்காலம், 10 ஆண்டுகள். இதில், மொபைல் போன் தகவல் தொடர்புக்கு பயன்படும் சக்தி வாய்ந்த, 'எஸ் மற்றும் சி பேண்ட் டிரான்ஸ்பாண்டர்கள்' பொருத்தப்பட்டுள்ளன.

இதுகுறித்து, இஸ்ரோ தலைவர் சிவன் கூறியதாவது:

'ஜிசாட் 6 ஏ' வெற்றிகரமாக ஏவப்பட்டது, மகிழ்ச்சி அளிக்கிறது. ஏற்கனவே ஏவப்பட்ட, 'ஜிசாட் 6' செயற்கைக்கோளுடன், இதுவும் இணைந்து செயல்பட்டு, தகவல் தொடர்புக்கு வழிவகுக்கும். தற்போது செலுத்தப்பட்ட ஜி.எஸ்.எல்.வி., ராக்கெட், இரண்டாம் நிலையில் செல்லும்போது, உந்து சக்தியை அதிகப்படுத்தவும், மின் காந்த அலைகளால் ராக்கெட்டை பாதுகாக்கவும் புதிய தொழில்நுட்பங்கள் புகுத்தப்பட்டு, சோதனையிடப்பட்டது. அந்த தொழில்நுட்பங்கள், வெற்றிகரமாக செயல்பட்டன.



இந்த ஆண்டில், 10 செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்த உள்ளோம். குறிப்பாக, 'சந்திராயன் 2' செயற்கைக்கோள் உட்பட, பூமி ஆய்வு, அறிவியல், நில அளவிடுதல், தகவல் தொடர்பு, மனிதர்களை விண்ணிற்கு அனுப்புவதற்கான சோதனை உள்ளிட்ட பிரிவுகளில் செயற்கைக்கோள்கள் விண்ணில் செலுத்தப்பட உள்ளன. இவ்வாறு, அவர் கூறினார்.

2. வகுப்புத் தோழர் ஒருவரை அறிவியல் அறிஞராக அமரச்செய்து வகுப்பறையில் கற்பனையாக நேர்காணல் ஒன்றை நிகழ்த்துக.

கற்பனை நேர்காணல்

வகுப்புத் தோழர் 'அருண்' என்பவரை அறிவியல் அறிஞராக அமரச்செய்து 'மாலா' காணும் நேர்காணல்.

மாணவர்களே, நம் வகுப்புத் தோழன் 'அருண்' தான் நம் முன் அமர்ந்திருக்கும் அறிவியல் அறிஞர். அவரை நம் சார்பில் "மாலா"வாகிய நான் காணும் இந்த நேர்காணலுக்கு உங்கள் அனைவரையும் வரவேற்கிறேன்

மாலா : வணக்கம்! திரு. அருண் அவர்களே.

அருண் : வணக்கம்! மாலா மற்றும் உங்களுடன் அமர்ந்திருக்கும் மாணவர்களுக்கும் வணக்கம்!

மாலா : ஐயா, அறிவியல் அறிஞராகிய உங்களுக்கு என் வாழ்த்துகள் உங்கள் இளமைக்காலம், கல்வி குறித்துக் கூறுங்களேன்.

அருண் : என் சொந்த ஊர் மதுரை மாவட்டத்தில் உள்ள சிற்றூராகிய மேலூர். என் பெற்றோர் தினக் கூலியாகத்தான் வேலை செய்தார்கள். நான் எங்கள் ஊருக்கு அருகில் உள்ள

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

அரசுப் பள்ளியில் தமிழ்வழியில் தான் படித்தேன். பிறகு எனக்கு விருப்பமான பொறியியல் படிப்பை தேர்ந்தெடுத்து புரிந்து பயின்று இந்த நிலைக்கு வந்துள்ளேன்.

மாலா : சிறிய வயதில் உங்கள் எதிர்கால நோக்கம் என்னவாக இருந்தது ஐயா!

அருண் : பெரிதாக ஒன்றும் இல்லை. நன்றாக படிக்க வேண்டும். பெற்றோர் கஷ்டத்தைத் தீர்க்க வேண்டும் என்பதே.

மாலா : உங்கள் பணியில் ஆரம்ப கால நிகழ்வுகள் பற்றிக் கூறுங்களேன்.

அருண் : பணிக்கு சேர்ந்த புதிதில் சற்று பயத்துடனேதான் ஒவ்வொரு பணியையும் செய்வேன். ஒரு பணி நிறைவு பெற்ற பின் என் மூத்த அறிவியல் அறிஞரிடம் பாராட்டு பெற்றால் தான் மகிழ்ச்சியாக இருக்கும்.

மாலா : அப்படிப்பட்ட மகிழ்ச்சியான தருணத்தை நினைவுகூர்ந்து எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்களேன்.

அருண் : ஒரு செயற்கைகோள் ஏவுதளத்தில் எப்படிப்பட்ட மென்பொருள் பயன்படுத்த வேண்டும் என்பது பற்றிய ஆய்வில் இரவு, பகலாக முயன்று ஒரு செயலியை உருவாக்கி அதனை பயன்படுத்தும் முறையும் உருவாக்கினேன். அப்போது அனைவரது பாராட்டையும் பெற்றதோடு பதவி உயர்வும் பெற்றேன். அது என் வாழ்வில் மகிழ்ச்சியான தருணமாய் அமைந்தது.

மாலா : செயற்கைக்கோள் தொழில் நுட்பத்தால் நாட்டுக்கு ஏற்படும் பயன்கள் யாவை?

அருண் : ஒவ்வொரு ஆண்டும் பயிர் உற்பத்தி பற்றி கணித்துக் கூறுகிறோம்.

நிலத்தில் எந்த இடத்தில் நீரின் அளவு எவ்வளவு என்பதை செயற்கைக்கோள் மூலம் அறிகிறோம். கடல்பகுதியில் எந்தெந்த இடங்களில் மீன்கள் உள்ளன என்பதை தெரிவிக்கிறோம்.

திறன்பேசி, தானியங்கி, பணஇயந்திரம் மற்றும் பிற இணையச் செயல்கள் அனைத்திற்கும் செயற்கைக்கோள் பயன்படுகின்றன.

மாலா : நீங்கள் மேன்மேலும் சாதனை புரிய வாழ்த்துகள் ஐயா! நன்றி! வணக்கம்!

※※⁂⁂⁂※※

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கற்கண்டு

இயல் நான்கு

வல்லினம் மிகா இடங்கள்

பாடநூல் வினாக்கள்

சிறுவினா

1. வல்லினம் இட்டும் நீக்கியும் எழுதுவதன் இன்றியமையாமையை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

- செடிகொடி என்பதற்கும்
  செடிக்கொடி என்பதற்கும் வேறுபாடு உண்டு.
  செடிகொடி என்னும் தொடருக்கு செடியும் கொடியும் என்பது பொருள்
  செடிக்கொடி என்னும் தொடரானது செடியில் ஏறியுள்ள கொடி என்றே பொருள்.
  செடி கொடி என்று எழுதும் போது செடி + உம் கொடி + உம் எனப் பிரித்து எழுதுவது 'உம்' என்ற சொல் தொக்கி வருவதால் உம்மைத்தொகை எனப்படும்.
  உம்மைத் தொகையில் வல்லினம் மிகாது.
- எழுத்துகள் - எழுத்துக்கள் - இவற்றில் எது சரி?
  இதே போல கருத்துக்கள், வாக்குக்கள், வாழ்த்துக்கள் விளக்குக்கள் இவற்றில் வரும் வல்லினம் மிகுமா?
  விகுதிப் புணர்ச்சியில், கருத்து + கள் (விகுதி) வல்லெழுத்துக்குப்பின் வரும் வலி மிகுவதற்கு இலக்கணத்தில் எந்த விதியும் இல்லை.
- வல்லெழுத்து (க், ச், த், ப்) ஏன் மிக வேண்டும்?
  பொருளைத் தெளிவாகவும் சரியாகவும் உணர்வதற்கும் தமிழ்மொழிக்கே உரிய இன்னோசையை வெளிப்படுத்துவதற்கும் இன்றியமையாது வேண்டப்படுகிறது.

கற்பவை கற்றபின்

பக்கம்: 115

1. வல்லினம் வருமா?:

அ	தோழி__கூற்று	நிலைமொழி உயர்திணையாய் இருந்தால் வல்லினம் மிகா.
ஆ	பெரிய__தம்பி	குறிப்புப் பெயரெச்சத்தில் வல்லினம் மிகாது.
இ	சிறிய__பறவை	குறிப்புப் பெயரெச்சத்தில் வல்லினம் மிகாது.
ஈ	பழகு__தமிழ்	வினைத்தொகையில் வல்லினம் மிகாது.
உ	இது__கேள்	இது என்னும் சுட்டுப் பெயர்களில் வல்லினம் மிகாது.
ஊ	எலி__கடிக்கும்	எழுவாய் தொடரில் வல்லினம் மிகாது.
எ	ஓடிய__குதிரை	பெயரெச்சத்தில் வல்லினம் மிகாது

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

ஏ	தரும்படி__ சொன்னார்	"படி" என முடியும் வினையெச்சத்தில் வல்லினம் மிகாது.
ஐ	வாழ்க__தலைவர்	வியங்கோள் வினைமுற்றுத் தொடரில் வல்லினம் மிகாது.
ஒ	கார்__காலம்	காலப் பெயர்ச்சொல் எனவே வல்லினம் மிகாது.

2. வல்லினம் இடலாமா?

1.	வாழ்த்து__கள்	'கள்' என்னும் பன்மை விகுதி சேரும் போது வல்லினம் இடக்கூடாது.
2.	எழுத்து__கள்	"கள்" என்னும் பன்மை விகுதி சேரும் போது வல்லினம் இடுதல் கூடாது.
3.	திருநிறை__செல்வன்	"திருநிறை" ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடரில் வல்லினம் இடுதல் வேண்டும்.
4.	திருவளர்__செல்வி	"வளர்செல்வி" - வினைத்தொகையில் வல்லினம் இடுதல் கூடாது.

3. எது சரி? எது தவறு? காரணம் கூறுக.

அ.	அண்ணாமலைப் பல்கலைக் கழகம் (தவறு) அண்ணாமலை பல்கலைக் கழகம் என்பது தான் (சரி)	"அண்ணாமலை" என்னும் பெயரை அடுத்து வல்லினம் இடுதல் கூடாது. இருபெயரொட்டுப் பண்புத் தொகையில் வல்லினம் மிகும் எனவே பல்கலைக்கழகம் என்பதில் வல்லினம் இட்டு எழுதுவது சரியே!
ஆ.	அத்தனைச் சிறிய (தவறு) அத்தனை சிறிய (சரி)	'அத்தனை' என்ற சொல்லின் பின் வல்லினம் இடுதல் கூடாது.
இ.	ஆத்திச்சூடி (சரி)	ஆத்தி - அகர ஈறு, இகர ஈறு புணரும்போது வல்லினம் மிகும்.
ஈ.	எடுத்துக்காட்டுகள் (சரி)	வன்தொடர் குற்றியலுகரத்தில் வல்லினம் இட்டு எழுத வேண்டும்.
உ.	கீழ்பக்கம் (தவறு) கீழ்ப்பக்கம் (சரி)	இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.
ஊ.	சான்றோர் பேரவை (சரி)	நிலைமொழியில் உயர்திணை வரும்போது வல்லினம் இடுதல் கூடாது.
எ.	சென்னைப் பல்கலைக்கழகம் (சரி)	இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் இடுதல் வேண்டும்.
ஏ.	தயிர்ச்சோறு (சரி)	இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் இடுதல் வேண்டும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

4. கீழ்க்காணும் தொடர்களில் வல்லினம் மிகும் , மிகா இடங்களைக் கண்டறிந்து அதற்கான இலக்கணம் அறிக.

அ.	வங்கிக்கடன் (வல்லினம் மிகும்)	இகர ஈற்றில் வல்லினம் மிகும் (வினையாக வந்தாலும் பெயராக வந்தாலும் வல்லினம் மிகும்)
ஆ.	பழங்களைப்பறிக்காதீர்கள் (வல்லினம் மிகும்)	'ஐ' என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர் அதனால் வல்லினம் மிகும்.
இ.	திட்ட குழு (வல்லினம் மிகாது)	பெயரெச்சத்தில் வல்லினம் மிகாது.
ஈ.	அரசு ஆணை பிறப்பித்தது (வல்லினம் மிகாது)	ஆணை பிறப்பித்தது என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகை - எனவே வல்லினம் மிகாது.
உ.	மருந்துக்கடை (வல்லினம் மிகும்)	1. மென் தொடர் குற்றியலுகரத்தின் பின்னும் வலிமிகும். 2. இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும். குறிப்பு: மென்தொடர் குற்றியலுகரம் எச்சப் பொருளில் வந்தால் வல்லினம் மிகாது. இச்சொல்லில் "மருந்து" பின் வல்லினம் மிகும்.
ஊ.	வேலையில்லாப் பட்டதாரி (வல்லினம் மிகும்)	ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தில் வல்லினம் மிகும்.
எ.	சிறப்புப் பரிசு (வல்லினம் மிகும்)	வன்தொடர் குற்றியலுகரத்தில் வல்லினம் மிகும்.

மொழியை ஆள்வோம்

பக்கம்: 117

படித்துச் சுவைக்க.

மயில்பொறியை வானத்தில் பறக்க வைத்தோம்
மணிபல்லவத் தீவிற்குப் பறந்து சென்றோம்
குயில்மொழியாம் கண்ணகியை அழைத்துச் செல்லக்
குன்றுக்கு வானவூர்தி வந்த தென்றே
உயில்போன்று நம்முன்னோர் எழுதி வைத்த
உண்மைகளான அறிவியலின் அற்பு தத்தைப்
பயில்கின்ற காப்பியத்தில் படித்த தெல்லாம்
பார்தன்னில் நனவாகக் காணுகின்றோம்!

- பாவலர் கருமலைத்தமிழாழன்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

மொழிபெயர்க்க:



Bottle xylophone, Make music with bottles.
You will need: 6 glass bottles, Wooden spoon, Wter, Food coloring.

- Fill one bottle with water, then fill each other bottle with slightly less than the bottle next to it.
- Add some food coloring to help you to see the different levels of water.
- Tap the bottles with the end of a wooden spoon. Can you play a tune?

Water music

Hitting the bottles with the spoon makes them vibrate and produce a sound. The more the bottle vibrates, the higher the note will be. The more water in a bottle, the less it vibrates, so less water means higher notes.

கண்ணாடிப் புட்டிகளாலான இசைக்கருவி.

கண்ணாடி புட்டிகள் மூலம் இசையை உருவாக்குதல்.

தேவையான உபகரணங்கள்:

- ஆறு கண்ணாடி புட்டிகள்
- மரத்தாலான கரண்டி ஒன்று
- தண்ணீர்
- உணவுப்பொருளுக்குப் பயன்படும் வண்ணப்பொடி.

செய்முறை:

- முதல் புட்டியில் முழுவதுமாக தண்ணீரை நிரப்பு. அடுத்தடுத்து வரும் புட்டிகளில் சற்று குறைவாக நிரப்பிக் கொள்.
- உணவுப் பொருளுக்குப் பயன்படுத்தப்படும் வண்ணப் பொடியை தண்ணீரில் கலந்து கொண்டு, ஒவ்வொரு புட்டியிலும் வேறுபட்ட அளவில் தண்ணீர் நிரப்பியிருப்பதை அறிந்துகொள் (பார்த்துக்கொள்)
- இப்போது மரத்தாலான கரண்டியின் அடிப்பாகத்தைக் கொண்டு புட்டிகளில் தட்டினால், இசையை உன்னால் உருவாக்க முடியும்.

தண்ணீர் இசையாகிறதா?

- மரக்கரண்டியின் அடிப்பாகத்தால் புட்டிகளைத் தட்டும் போது ஏற்படும் அதிர்வுகளால் ஒலி ஏற்படுகிறது.
- புட்டிகளில் நிறைய நீர் இருந்தால் குறைவான அதிர்வுகளும், குறைவான நீர் உள்ள புட்டிகளில் நிறைய அதிர்வுகளும் ஏற்படும். ஒலியின் அளவுகள் வேறுபட்டு வரும்பொழுது, அதற்கேற்ப இசையும் (Tune) மாறுபட்டு ஒலிக்கும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பின்வரும் பத்தியில் இடம்பெற்றுள்ள பிறமொழிச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களை எழுதுக.

நாக்குதான் ஐம்புலன்களிலேயே ரொம்ப வீக்கு! அதற்கு நான்கு ஆதார ருசிகள்தாம் தெரியும். எலுமிச்சையின் புளிப்பு, சர்க்கரையின் தித்திப்பு, காபியின் கசப்பு, உப்பு. இவை தவிர ஸேவரி என்று சொல்கிற டேஸ்ட் எல்லாம் இந்த நான்கு ஆதார ருசிகளின் கலப்புதான். இந்த ருசிகளைத் தொட்டு அறிய நாக்கில் வெவ்வேறு இடங்கள் உண்டு. தித்திப்பு - நுனி நாக்கு, உப்பு - பரவலாக, குறிப்பாக நுனியில். கசப்பு - உள்நாக்கு. புளிப்பு, ஸேவரி - நாக்கின் வலது - இடது புறங்கள்! ஒரு சராசரி மனிதனுடைய நாக்கில் 9,000 சுவை அரும்புகள் உண்டு. அலட்டல் வேண்டாம். குழந்தையின் நாக்குடன் ஒப்பிடும்போது இது ஒன்றுமே இல்லை. ஏதாவது மருந்தை நாக்கில் தொட்டால் குழந்தைகள் என்னமாக எக்ஸ்பிரஷன் காட்டுகின்றன! சுவைக்கு வாசனையும் சேரவேண்டும். இரண்டும் ஒத்துழைத்தால்தான் பாதாம் அல்வா, ஐஸ்க்ரீம போன்றவற்றை ரசிக்க முடியும். மூக்கைப் பிடித்துக் கொண்டு ஐஸ்க்ரீம் சாப்பிட்டுப் பாருங்கள். ஜில்லென்று இருக்கும். அவ்வளவே. கூடவே சூடும், உணவின் தோற்றமும் முக்கியம். மூக்குக்கு மொத்தம் ஏழு வாசனைகள். கற்பூர வாசனை, பெப்பர்மிண்ட் வாசனை, மலர்களின் வாசனை, மஸ்க் என்னும் அரபுசேக் செண்ட் வாசனை, ஈத்தர் அல்லது பெட்ரோல் வாசனை, அழுகிய முட்டை வாசனை, காட்டமான அமில வாசனை. இந்த ஏழு வாசனைகளின் கலப்புகளால் நம்மால் ஆயிரக்கணக்கான வாசனைகளை உணர முடிகிறது. (ஏன்? எதற்கு? எப்படி? - சுஜாதா)

	சொற்கள்	தமிழாக்கம்
1.	ரொம்ப வீக்கு	நிரம்ப சபலம்
2.	ஆதார ருசிகள்	அடிப்படைச் சுவைகள்
3.	காபி	குழம்பி, கோப்பி, கொட்டை வடிநீர்
4.	ஸேவரி	காரசுவையுண்டி
5.	டேஸ்ட்	சுவை
6.	ருசிகள்	சுவைகள்
7.	சராசரி	ஏறத்தாழ
8.	அலட்டல்	மிகைப்படுத்திச் சொல்லுதல்
9.	எக்ஸ்பிரஷன்	விளைவுகள்
10.	வாசனை	நறுமணம்
11.	அல்வா	இனிப்புக்களி
12.	ஐஸ்க்ரீம்	பனிக்குழைவு
13.	ரசிக்க	களிக்க
14.	ஜில்லென்று	குளிர்ச்சி என்று
15.	கற்பூர வாசனை	சூடம் நறுமணம்
16.	பெப்பர்மிண்ட் வாசனை	புதினாச்சுவையுள்ள மிட்டாய்கள்
17.	மஸ்க் அரபுசேக் செண்ட்	ஆண்மானிலிருந்து எடுக்கப்பெற்ற வாசனைத் திரவியம்
18.	ஈத்தர்	தீப்பற்றக் கூடிய பொருள்.
19.	பெட்ரோல் வாசனை	கல்நெய் (கன்னெய்)
20.	அமில வாசனை	காடிப் புளியம்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கதையைப் படித்து உரையாடலாக மாற்றுக. பக்கம்: 119

ஒரு சிப்பி, இன்னொரு சிப்பியிடம் சொன்னது - 'ஐயோ, என்னால் வலி தாங்க முடியவில்லையே'. 'ஏன்? என்னாச்சு?' என்று விசாரித்தது இரண்டாவது சிப்பி.

'எனக்குள் ஏதோ ஒரு கனமான உருண்டை, பந்து உருள்வதுபோல் இருக்கிறது. ரொம்ப வலி.'

இதைக் கேட்டதும் இரண்டாவது சிப்பிக்கு மிகுந்த மகிழ்ச்சி. பெருமையுடன் நெஞ்சு நிமிர்த்தி, 'ஆகா! நான் எந்த வலியும் இல்லாமல், நலமாக இருக்கிறேன்' என்றது உற்சாகமாக.

இவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்த ஒரு நண்டு, இரண்டாவது சிப்பியிடம் சொன்னது- 'உனக்கு எந்த வலியும் இல்லை என்பது உண்மையாக இருக்கலாம். வலியைத் தாங்க விரும்பாத நீ, எப்பொழுதும் இப்படியே வெறுமையாகக் கிடக்க வேண்டியதுதான். ஆனால், இப்போது சிரமப்படுத்தும் அந்த வலி, இன்னும் சில நாள்களில், ஓர் அழகான முத்தாக உருவெடுக்கும். அது பெருமை தேடித்தரும்.'

உரையாடல்

(கடற் கரையோரம் அலையிலிருந்து மீண்டு வந்தன இரண்டு சிப்பிகள்)

சிப்பி 1: வலி தாங்கமுடியவில்லையே? என்ன செய்வது என்று தெரியவில்லை.

சிப்பி 2: ஏன்? என்ன ஆச்சு; நேற்று நன்றாகத் தானே இருந்தாய்; இன்றைக்கு என்ன ஆனது?

சிப்பி 1: என் வயிற்றுக்குள் ஏதோ கனமான உருண்டை பந்து உருளுவது போல இருக்கிறது. அதனால் தாங்க முடியாத வலி....

சிப்பி 2: எனக்கு எந்த வலியும் இல்லை! நல்ல வேளை எனக்கு எந்தத் தொந்தரவும் இல்லை! நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்.

(அடுத்த அலையிலிருந்து கரையில் மீண்டு நின்றது ஒரு நண்டு)

நண்டு: (2வது சிப்பியிடம்) அந்த சிப்பி வலியால் துடிக்கிறது. உனக்கு எந்த வலியும் இல்லை; "நன்றாக இருக்கிறேன்" என்று சொல்கிறாய்? வலியைத் தாங்க விருப்பமில்லை என்கிறாய். வலியைத் தாங்கத் தயராக இல்லை என்கிறாய்? அப்படி என்றால் நீ வெறுமையாகக் கிடக்க வேண்டியது தான்.

சிப்பி 2: ஏன் வலி வந்தால் என்ன வாகும்? எனக்குக் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்களேன.

நண்டு: அந்த நண்டுக்கு வலி சிரமப்படுத்தும். ஆனால் சில நாள்களில் அதன் வயிற்றிலிருந்து ஒரு அழகான முத்தாக வெளிவரும். அந்த முத்து எல்லோருக்கும் பெருமை தேடித்தரும்.

செய்து கற்க.

1. செய்தித்தாள்களில் இடம்பெற்றுள்ள ஒரு வாரத்திற்குரிய அறிவியல் செய்திகளைப் படித்துக் குறிப்பெடுக்க.

நாள்: 14.4.18

சனிக்கிழமை **தினமணி**

சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள் குறித்து புதிய செயலி உருவாக்கிய திண்டுக்கல் மாணவர்களுக்கு முதல்பரிசு.

சமூகப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களைப் பொதுமக்களிடம் எளிதாகக் கொண்டு செல்வதற்கான புதிய செயலி மற்றும் இணைய முகவரி உருவாக்கி இருக்கின்றனர் மாணவர்கள்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

நாள்: 14.4.18
சனிக்கிழமை தி இந்து

மம்மி பூனை

எகிப்தில் பூனை கடவுளின் ஒரு வடிவம். அரசர் குடும்பத்தைப் போலவே பூனைகளையும் பாடம் பண்ணிக் காத்துவந்தனர். பிரமிடுகளிலுள்ள சுவற்றில் புனிதப் பூனைகள் சித்தரிக்கப்பட்டுள்ளன. இதுபற்றி பிரபல சூழலியல் எழுத்தாளர். சு. தியோடர் பாஸ்கரன் கட்டுரையில் தெரிவித்திருக்கிறார்.

நாள்: 13.4.18
வெள்ளிக்கிழமை தினமணி

ஐ.ஆர்.என்.எஸ்.எஸ். I ஐ செயற்கைக்கோள் விண்ணில் வெற்றிகரமாக நிலைநிறுத்தம். செயற்கைக்கோளுடன் பி.எஸ்.எல்.வி. சி.41. ராக்கெட் ஸ்ரீஹரிகோட்டா ஆராய்ச்சி மைய ஏவுதளத்திலிருந்து ஏவப்பட்டது. செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதில் அளித்து அதன் தலைவர் சிவன் கூறினார்.

(இதுபோன்று, அன்றாடச் செய்தித்தாள்களில் வெளியாகும் அறிவியல் செய்திகளைத் தொடர்ந்து படித்துக் குறிப்பெடுத்துக் கொள்க)

2. அங்காடியில் வாங்கிய உணவுப் பொருளின் உருவாக்க நாள், முடிவு நாள், உறையில் அச்சடிக்கப்பட்ட உணவுப்பொருளின் ஆற்றல், குறியீட்டுப் பட்டை (Barcode) ஆகியவற்றின் விவரங்களைக் கொண்டு உணவுப் பொருளின் உண்மைத்தன்மையை எப்படி அறிவது?

நாம் அங்காடிக்குச் சென்று, உணவுப்பொருள், குளிர்பானங்கள், அழகுசாதனப் பொருள்கள் போன்றவற்றை வாங்கும்போது, அதன் உறைகளிலோ அல்லது மேல் அட்டைப் பெட்டியிலோ குறியீட்டு பட்டை (Barcode) அமைந்திருக்கும், அதன் உண்மைத் தன்மையை ஆராயும் முறை. குறியீட்டுப் பட்டை இடம் பெற்றிருக்கும் பகுதியை கணினியுடன் கூடிய ஒளிக் கதிர் மூலம் வருடும் போது (Scanning) அப்பொருளின்

- எடை ◆ விலை ◆ உற்பத்தி செய்த இடம் ◆ நாள்
- எந்த நாள் வரை பயன்படுத்தலாம் (முடிவு நாள்)
- அப்பொருளில் அடங்கியிருக்கும் பிறபொருள்களின் அளவு, தன்மை, உற்பத்தி உரிமம் போன்ற அனைத்து விபரங்களும் திரையில் தெரியவரும். இம்முறையில் தான் ஒரு பொருளை வாங்கும்பொழுது ஆராய்ந்து வாங்குதல் வேண்டும்.

நயம் பாராட்டுக.

பொங்கியும் பொலிந்தும் நீண்ட புதுப்பிடர் மயிர்சி லிர்க்கும்
சிங்கமே! வான வீதி திகுதிகு எனஎ ரிக்கும்
மங்காத தணற்பி ழம்பே! மாணிக்கக் குன்றே! தீர்ந்த
தங்கத்தின் தட்டே! வானத் தகளியிற் பெருவி ளக்கே!
கடலிலே கோடி கோடிக் கதிர்க்கைகள் ஊன்றுகின்றாய்
நெடுவானில் கோடி கோடி நிறைசுடர்க் கைகள் நீட்டி
இடைப்படு மலையோ காடோ இல்லமோ பொய்கை ஆறோ
அடங்கநின் ஒளிஅ ளாவ அமைந்தனை! பரிதி வாழி!

- பாரதிதாசன்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பாரதிதாசனார் 29.4.1891 இல் புதுவையில் பிறந்தார். இவர் பெற்றோர் கனகசபை; இலக்குமி அம்மாள். இவருடைய இயற்பெயர் கனகசுப்புரத்தினம். பாரதியார் புதுவையில் வாழ்ந்த போது, அவருடன் நட்புக் கொண்டு, அவர் மீது கொண்ட அன்பு காரணமாகத் தம் பெயரைப் பாரதிதாசன் எனப் புனைந்து கொண்டார்.

இவர் குடும்பவிளக்கு, இருண்ட வீடு, தமிழியக்கம், பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, கண்ணகி புரட்சிக் காப்பியம் முதலான தொண்ணூற்றுக்கும் மேலான நூல்களை இயற்றியுள்ளார்.

பாடலின் மையக்கருத்து:

இயற்கையை வருணித்துப் பாடுவதில் வல்லவர். இப்பாடலில், சூரியனை பல்வேறு வடிவங்களில் வருணித்துப்பாடுகிறார். உலகெங்கும் இருளைப் போக்கி தன் ஒளி அளாவ சுடர்க்கைகள் நீட்டி ஊன்றுகின்றது.

பாடலின் திரண்டகருத்து:

கடலுக்குள்ளிருந்து பொங்கிப் பொழிந்து பிடரிமயிர் சிலிர்க்க வரும் சிங்கம் போல வருகிறாய் நீ! வானத்தில் திகுதிகு என எரிக்கும் தணற்பிழம்பே! மாணிக்கக் குன்றே! தங்கத் தட்டே! வானத் தகளியற் பெரு விளக்கே!

கடலில் உன் கோடிக் கைகளை ஊன்றுகின்றாய் நெடுவானில் சுடர்க்கைகளை நீட்டுகிறாய். இடையில் தென்படுகின்ற மலை, காடு, இல்லம், பொய்கை, ஆறு அத்துணையிலும் உன் ஒளி அளாவுகின்றது. கதிரவனே! நீ வாழ்க.

நயம்:

பாடவந்த பொருள் பற்றி மட்டும் பாடாமல் செய்யுளுக்கேயுரிய பல்வேறு நயங்களையும் உடன் அமைத்துப் பாடியிருக்கிறார்.

எதுகை நயம்:

அடிதோறும் சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வரப் பாடுவது எதுகை நயம் ஆகும்.

எடுத்துக்காட்டு:

பொ**ங்**கி	க**டலி**லே
சி**ங்**கமே	நெ**டு**வானிலே
ம**ங்**காத	இ**டை**படு
த**ங்**கத்தின்	அ**ட**ங்கநின்

கவிஞர் அடிதோறும் எதுகை நயம் அமைத்துச் செய்யுளுக்குச் சொல்லழகு ஊட்டியிருக்கிறார்.

மோனை நயம்:

அடிதோறும் சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனை ஆகும்.

காட்டுக்கு அழகு யானை

பாட்டுக்கு அழகு மோனை என்பது போல மோனைத் தொடர்களை அமைத்துப் பாடியிருக்கிறார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

எடுத்துக்காட்டு:

பொங்கி	பொலிந்து	புதுப்பிடர்
மங்காத	மாணிக்கக்	குன்றே
தங்கத்தின்	தட்டு	
தடலிலே	தோடி தோடிக்	கதிர்க்கைகள்
இடைப்படு	இல்லமோ	
அடங்க நின்	அமைந்தனை	

அணி நயம்:

வனிதைக்கு மணி அழகு

செய்யுளுக்கு அணி அழகு - என்றாற் போல கவிஞர்கள் தாம் சொல்ல வந்த பொருளைச் சுவைஞர்களின் இன்பத்திற்கேற்பப் பயன்படுத்துவார்கள்.

பாரதிதாசன் பரிதியைப்(சூரியனை) பல்வேறு உருவகங்களாகக் காட்சிப் படுத்துகிறார். எனவே இச்செய்யுளில் உருவக அணி பயின்றுவந்துள்ளது.

எடுத்துக்காட்டு:

மயிர்சிலிர்க்கும்	சிங்கம்
மங்காத	தணற்பிழம்பு
மாணிக்கக் குன்று	
தங்கத் தட்டு	
வானத்தகளி,	கதிர்க்கைகள்

இயைபு நயம்:

பாட்டுக்கு ஓசையின்பம் தருவது இயைபுநயம். இப்பாடலில் கவிஞர், அடிதோறும் இறுதிச் சீர் ஒன்றிணைய இயைபு நயம் அமைய இயைத்துப் பாடியிருக்கிறார்.

எடுத்துக்காட்டு:

மயிர்சிலிர்க்கும், என எரிக்கும், குன்றே, பெருவிளக்கே

இவ்வாறாகப் பல்வேறு நயங்களை அமைத்துப் பரிதியின் சுடரை விளக்கிக் காட்டுகிறார். பாரதியின் பாஞ்சாலி சபதத்தில் மாலைக் கால வருணணை போன்று இப்பாடல் அமைந்து விளங்குகிறது.

மொழியோடு விளையாடு

பக்கம்: 119

குழுவில் விளையாடுக.

- நான்கு மாணவர்கள் கொண்ட குழுக்களாக எண்ணிக்கைக்கு ஏற்பப் பிரிந்து கொள்க.
- முதல் மாணவர் ஒரு சொல்லைத் தொடங்குக.
- அதனோடு தொடர்புடைய ஒரு சொல்லை இரண்டாம் மாணவர் கூறுக.
- இப்படியே நான்கு மாணவர்களும் கூறிய சொற்களைக் கொண்டு ஒரு தொடர் அமைக்க.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

எ.கா.

மாணவர் 1 : கணினி **மாணவர் 2 : அறிவியல்**

மாணவர் 3 : தமிழ் **மாணவர் 4 : மொழி**

சொல்லப்பட்ட சொற்கள்: கணினி, அறிவியல், தமிழ், மொழி

தொடர்: அறிவியல், கணினித் தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றுக்கு ஈடுகொடுத்துத் தமிழ் மொழி வளர்ந்து வருகிறது.

1. மாணவர் 1 : ஏவு ஊர்தி மாணவர் 2 : பாயும் மாணவர் 3 : விண்வெளி மாணவர் 4 : ஏவுகணை **தொடர்:** விண்வெளி மையத்தில் ஏவு ஊர்தியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஏவுகணை விண்ணில் பாயும்.	2. மாணவர் 1 : அடக்கம் மாணவர் 2 : இரு கண்கள் மாணவர் 3 : நமக்கு மாணவர் 4 : பொறுமை **தொடர்:** அடக்கமும், பொறுமையும் நமக்கு இரு கண்களாகத் திகழ்கிறது.
3. மாணவர் 1 : தொழில்நுட்பம் மாணவர் 2 : நம் நாடு மாணவர் 3 : வருகிறது மாணவர் 4 : நாளுக்குநாள் **தொடர் :** நம் நாட்டில் தொழில் நுட்பங்கள் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது.	4. மாணவர் 1 : சுவைத்தல் மாணவர் 2 : காணல் மாணவர் 3 : நுகர்தல் மாணவர் 4 : தொடுதல் **தொடர்:** தொடுதல், சுவைத்தல், நுகர்தல், காணல் ஆகிய நான்கு புலன்களால் அறியும் ஆற்றல் கொண்டவை நான்கறிவு உயிர்கள் எனப்படும்

மாணவர்களே இவ்வாறாக உங்கள் நண்பர்களுடன் விளையாடும்போது உங்கள் மொழி அறிவு வளரும்.

அகராதியில் காண்க. **பக்கம்: 120**

இமிழ்தல், இசைவு, துவனம், சபலை, துகலம்

விடை:

இமிழ்தல் - இனிதாதல், ஒலித்தல், கக்குதல்

இசைவு - இணக்கம், சம்மதி, பொருத்து தகுதி, ஏற்றது, உடன்பாடு, ஓட்டம்

துவனம் - அக்கினி, நெருப்பு

சபலை - இலக்குமி, திப்பிலி, நா, மின்னல், வேசி

துகலம் - பங்கு

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

ஒரு சொல்லால் தொடரின் இரு இடங்களை நிரப்புக. (விலங்கு, எழுதி, அகல், கால், அலை)

அ) எண்ணெய் ஊற்றி அகல் விளக்கு ஏற்றியவுடன், இடத்தைவிட்டு அகல்

ஆ) எனக்கு கால் பங்கு பிரித்துக் கொடுக்க வா! கீழே ஈரம்: பார்த்து உன் கால் ஐ வை.

இ) கைப்பொருளைக் கடல் அலை யில் தொலைத்துவிட்டு, கரையில் தேடி அலைந்தால் கிடைக்குமா?

ஈ) வீட்டு விலங்கு ஆன நாயுடன் விளையாடுவது மகிழ்ச்சி தரும்; வெளியில் அதனைக் கழுத்து விலங்கு உடன் மட்டுமே பிடித்துச் செல்ல வேண்டும்.

உ) எழுத்தாணி கொண்டு எழுதிய தமிழை, ஏவுகணையில் எழுதி எல்லாக் கோளிலும் ஏற்றுங்கள்.

ஒரு தொடரில் இருவினைகளை அமைத்து எழுதுக.

குவிந்து - குவித்து; சேர்ந்து - சேர்த்து; பணிந்து - பணித்து; பொருந்து - பொருத்து; மாறு - மாற்று.
(எ.கா) விரிந்தது - விரித்தது.

அ) மழைக்காற்று வீசியதால், பூவின் இதழ்கள் விரிந்தன; மயில் தோகையை விரித்தது.

ஆ) ஆற்றில் அடித்து வந்த மணல் குவிந்தது; வாங்கிய மணலை வீட்டுக்கு முன்பு குவித்து வைத்தோம்.


இ) கையில் காசு சேர்ந்தது; சேர்ந்த காசுகளைச் சிறுசேமிப்பில் சேர்த்து வைத்தோம்.

ஈ) ஆசிரியர் சொல்லுக்கு மாணவர்கள் பணிந்து நடந்தனர். விடுமுறையில் இன்னின்ன பாடங்களைப் படித்து வருமாறு பணித்திருக்கிறார்.

உ) பின்வரும் சொற்களைப் பின்குறித்த பிறசொற்களோடு பொருந்துமாறு பொருத்திக் காட்டுக.

ஊ) பிறருடைய தீயவழியில் இருந்து நீ மாறு; அவர்களை உன் வழிக்கு மாற்று.

காட்சியைக் கண்டு கவினுற கருத்தளிக்க.



மனிதன் வேட்டையாடி
விலங்களை அடிமைப்படுத்தினான்
அடிமைகளிடம் முதலாளி ஆகிக் கொண்டான்
அறிவியல் கண்டுபிடிப்புகளைப்
பயன்படுத்திக் கொண்டான்
அறிவைக் கருவிக்கு அடிமையாக்கினான்
கருவிகள் மனிதனை அடிமையாக்கியது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

செயல்திட்டம்

மின்சார சேமிப்பு பற்றிய விழிப்புணர்வு முழக்கத்தொடர்களை எழுதி வகுப்பறையிலும் பள்ளியிலும் காட்சிப்படுத்துக.

பக்கம்: 121

மின்சார சேமிப்புப் பற்றிய முழக்கத் தொடர்கள்:

1. மின் இயந்திரங்களைத் தவிர்ப்போம்
   மின்சாரம் சேமிப்போம் - நம்
   ஆரோக்கியத்தையும் காப்போம்.
2. மின்சார சேமிப்பு மின்சார உற்பத்திக்குச் சமமாகும்.
3. நீராதாரம் பெருக்குவோம் மின்
   உற்பத்தியையும் பெருக்குவோம்.
4. ஆள் இல்லா அறைகளில்
   மின் விசிறி இயக்காதீர்.
5. மின்சார சிக்கனம்
   தேவை இக்கணம்.
6. குழல் விளக்கையும்
   குண்டு விளக்கையும்
   தவிர்ப்போம்.
   மின்சாரம் சேமிப்போம்.

நிற்க அதற்குத்தக...

எனன் பெற்றோர் மகிழுமாறு நான் செய்ய வேண்டியது

1. என் வீட்டின் நிலையறிந்து, தேவையறிந்து பொருள்கள் வாங்குவது.
2. அலைபேசிப் பயன்பாட்டினைப் பத்து நிமிடங்களுக்கு மேல் நீட்டிக்காமல் இருப்பது.
3. தொலைக்காட்சி பார்ப்பதைக் குறிப்பிட்ட நேரமாகக் குறைத்துக் கொள்வது.
4. **முயற்சி செய்தால் முடியும், என் வேலையை நானே செய்து தருவேன்.**
5. **என் தங்கையோடு போட்டிபோடாமல் ஆண், பெண் வேறுபாடின்றி உரிமையைச் சமமாகப் பெற செய்வேன்.**
6. **நான் குடியிருக்கும் தெருவில் குப்பைக் கூளங்கள் தேங்காதவாறு பார்த்துக் கொண்டு பிறர்க்கு முன்மாதிரியாக நடந்து கொள்வேன்.**

கலைச்சொல் அறிவோம்

ஏவு ஊர்தி	-	Launch Vehicle
பதிவிறக்கம்	-	Download
ஏவுகணை	-	Missile
பயணியர் பெயர்ப் பதிவு	-	PNR (Passenger Name Record)
கடல்மைல்	-	Nautical Mile
மின்னணு இயந்திரங்கள்	-	Electronic devices
காணொலிக் கூட்டம்	-	Video Conference

※※⁂⁂⁂※※

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

உரைநடை உலகம்

இயல் ஐந்து

கல்வியில் சிறந்த பெண்கள்

பாடநூல் வினாக்கள்

குறுவினா

1. சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?

- பெண் முன்னேற்றத்திற்குத் தடைக்கல்லாய் இருப்பது குழந்தைத்திருமணம்.
- அதனைத் தடுக்கும் நோக்கத்தில் 1929ம் ஆண்டு சாரதா சட்டம் கொண்டு வரப்பட்டது.

சிறுவினா

1. சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை எழுதுக.

பெண்பாற் புலவர்கள் :

- ஔவையார்
- ஒக்கூர் மாசாத்தியார்
- ஆதிமந்தியார்
- வெண்ணிக்குயத்தியார்
- பொன்முடியார்
- அள்ளூர் நன்முல்லையார்
- நக்கண்ணையார்
- காக்கைப்பாடினியார்
- வெள்ளிவீதியார்
- நப்பசலையார்
- காவற்பெண்டு

ஆகியோர் ஆவார்.

2. இன்றைய பெண்கல்வி என்னும் தலைப்பில் வில்லுப்பாட்டு வடிவில் பாடல் எழுதுக?

இன்றைய பெண்கல்வி

குழுத்தலைவர் : ஊதாங்குழலை எடுக்கும் பெண்ணே
நீ எழுதுகோலை எடுக்கவேணும், கையிலே...

மற்றோர் : ஆமா கையிலே....

குழுத்தலைவர் : ஓடு, செங்கல் செய்யும் பெண்ணே, ஏடெடுத்து நீ போகணும்....

மற்றோர் : ஆமா ... போகணும்.

குழுத்தலைவர் : சிந்திக்கும் மூளை உனக்கு வேண்டும். அம்மா.... நீ நிந்தையைப் பொறுத்துக்கோ
அம்மா... நீ உன் திறமையைக் காட்டு அம்மா...

மற்றோர் : ஆமா... திறமையைக் காட்டு அம்மா...

குழுத்தலைவர் : முடியாது பெண்ணாலே என்ற கேலியினை விரட்டி அடித்து முடித்துக் காட்டு அம்மா நீ ... முடித்துக் காட்டு அம்மா ...

மற்றோர் : ஆமா... முடித்துக் காட்டு...

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

குழுத்தலைவர் : செல்லம்மா நீ செல் அம்மா பள்ளிக்கு... பட்டம் பெறு அம்மா சட்டம் செய் அம்மா... நாடே உன்னை வணங்கட்டும் அம்மா...

மற்றோர் : ஆமா... நாடே உன்னை வணங்கட்டும் அம்மா...

3. மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனைகளைக் குறிப்பிடுக.

மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனைகள்:

- 1886-ல் பிறந்த முத்துலெட்சுமி அவர்கள் பல சாதனைகளுக்கும், போற்றுதலுக்கும் உரியவர்.
- தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர்.
- இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவராகவும், சென்னை மாநகராட்சியின் முதல் துணை மேயராகவும், சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணியும் ஆவார்.
- அடையாற்றில் 1930-ல் அவ்வை இல்லம், 1952ல் புற்றுநோய் மருத்துவமனை ஆகியவற்றை நிறுவியவர்.
- தேவதாசிமுறை ஒழிப்புச் சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம், இருதாரத்தடைச்சட்டம், குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் ஆகியவை நிறைவேற காரணமாக இருந்துள்ளார்.

4. நீலாம்பிகை அம்மையாரின் தமிழ்ப்பணியின் சிறப்பைக் குறித்து எழுதுக.

தமிழ்ப்பணியின் சிறப்பு:

- நீலாம்பிகை அம்மையார் மறைமலையடிகளின் மகள் ஆவார். தந்தையைப் போலவே தனித்தமிழ்ப் பற்றுடையவர்.
- இவரது தனித்தமிழ் கட்டுரை, வடசொல்-தமிழ் அகரவரிசை, முப்பெண்மணிகள் வரலாறு, பட்டினத்தடிகள் பாராட்டிய மூவர் ஆகிய நூல்களை எழுதி தமிழ்ப் பணியாற்றியுள்ளார்.
- மேலும், இவருடைய நூல்கள் தனித்தமிழில் எழுத விரும்புவோர்க்கு மிகவும் பயனுள்ளனவாக விளங்குகின்றன.

நெடுவினா

1. நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க.

முன்னுரை:

நிலைத்த புகழுடைய கல்வியாலும் சாதனைகளாலும், பல தடைகளைத் தாண்டிப் பல பெண்மணிகள் சாதனை புரிந்து அழியாப் புகழ் பெற்றுள்ளனர். அவர்களுள் சிலரைப் பற்றி அறிந்து கொள்வோம்.

பண்டித ரமாபாய்:

1858 -ஆம் ஆண்டு முதல் 1922 - ஆம் ஆண்டு வரை வாழ்ந்த இவர் சமூகத் தன்னார்வலர். பல தடைகளை மீறிக் கல்வி கற்றுப் பண்டிதராகியவர். பெண்களின் உயர்வுக்குத் துணை நின்றவர், "பெண்மை என்றால் உயர்வு" என்பதற்குச் சான்றாவார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

ஐடாஸ் சோபியா:

1870 முதல் 1960 வரை வாழ்ந்தவர். பெண்கள் மருத்துவராவதை மருத்துவ உலகமே விரும்பாத காலத்தில் மருத்துவம் கற்றதோடு, தமிழகத்திற்கு வந்து மருத்துவராகி வேலூர் கிறிஸ்தவ மிஷன் மருத்துவமனையை நிறுவியவர்.

மூவலூர் இராமாமிர்தம் :

1883 முதல் 1962 வரை வாழ்ந்த இவர், தமிழகத்தின் சமூகச் சீர்திருத்தவாதி, எழுத்தாளர், அரசியல் செயல்பாட்டாளர், தேவதாசி ஒழிப்புச்சட்டம் நிறைவேற துணைநின்றவர். இவரைச் சிறப்பிக்கும் வகையில் தமிழக அரசு மகளிர் திருமண உதவித் தொகையை இவரின் பெயரில் வழங்கி வருகிறது.

சாவித்திரிபாய் பூலே :

1831 முதல் 1897 வாழ்ந்தவர். 1848 ம் ஆண்டு பெண்களுக்கென தொடங்கப்பட்ட பள்ளியில், ஆசிரியராகப் பணியாற்றியவர். இவரே நாட்டின் முதல் பெண் ஆசிரியர் ஆவார்.

மலாலா :

பாகிஸ்தானில் ஒடுக்கப்பட்டிருக்கும் பெண்களுக்கு, பெண் கல்வி வேண்டுமெனப் பன்னிரண்டு வயதிலே போராட்டக்களத்தில் இறங்கிய வீரமங்கை ஆவார்.

முடிவுரை :

இன்று பல்துறைகளிலும் சிறப்புற்று விளங்க, முன்பே வழிகாட்டிய இவர்கள் அனைவருமே சாதனைப் பெண்மணிகளே.

"புவி வளம் பெறவே
புதிய உலகம் நலம்பெறவே
வாழியவே பெண்மை வாழியவே"

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. அடையாற்றில் புற்றுநோய் மருத்துவமனை நிறுவப்பட்ட ஆண்டு ..... நிறுவியவர் .....

அ) 1982, ரமாபாய் ஆ) 1952, முத்துலெட்சுமி
இ) 1960, ஐடாஸ் சோபியா ஸ்கட்டர் ஈ) 1970, சிவகாமி

விடை: ஆ) 1952, முத்துலெட்சுமி

2. "முடியாது பெண்ணாலே" என்ற மாயையினை முடக்க எழுந்தவர் .....

அ) அறிஞர் அண்ணா ஆ) அம்பேத்கர்
இ) தந்தை பெரியார் ஈ) காமராஜர் விடை: இ) தந்தைபெரியார்

3. "பெண்ணடிமை தீரும் வரை மண்ணடிமை தீருமோ" என இடி முழக்கம் செய்தவர் யார்?

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) கவிமணி ஈ) நாமக்கல் கவிஞர்

விடை: ஆ) பாரதிதாசன்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

4. ஹண்டர்குழு அமைக்கப்பட்ட ஆண்டு .....

அ) 1972 ஆ) 1952 இ) 1872 ஈ) 1882

விடை: ஈ) 1882

5. 80 ஆயிரம் குழந்தைகள் கல்வி பெற உதவியாய் இருந்தவர்

அ) ரமாபாய் ஆ) முத்துலெட்சுமி

இ) சாவித்திரிபாய் பூலே ஈ)கைலாஷ் சத்யார்த்தி

விடை: ஈ) கைலாஷ் சத்யார்த்தி

6. ''பட்டினத்தார் பாராட்டிய மூவர்'' என்ற நூலை இயற்றியவர்

அ) இராஜேஸ்வரி அம்மையார் ஆ) காரைக்கால் அம்மையார்

இ) நீலாம்பிகை அம்மையார் ஈ) சிவகாமி அம்மையார்

விடை: இ) நீலாம்பிகை அம்மையார்

7. ஈ.வெ.ரா - நாகம்மை இலவசக்கல்வி உதவித்திட்டம் ..... உரியது.

அ) பட்டமேற்படிப்பிற்கு ஆ) பட்டய மேற்படிப்பிற்கு

இ) பொறியியல் படிப்பிற்கு ஈ) மருத்துவ படிப்பிற்கு

விடை: அ) பட்டமேற்படிப்பிற்கு

8. கோத்தாரி கல்விக்குழு அமைக்கப்பட்ட ஆண்டு ..... ஆகும்.

அ) 1972 ஆ) 1951 இ) 1964 ஈ) 1965

விடை: இ) 1964

குறுவினா

1. தமிழின் பொற்காலம் எனப் புகழப்படும் காலம் எது?

- பாட்டாகிய பத்துப்பாட்டும், தொகையாகிய எட்டுத் தொகையும் உருவான காலம்.
- தமிழுணர்வு வளர்ந்து, உயர்ந்திருந்த காலமாகிய சங்க காலமே பொற்காலம் எனப் புகழப்படும் காலம் ஆகும்.

"பாட்டும் தொகையும் உருவான காலம்
ஊட்டும் தமிழுணர்வு உயர்ந்திருந்த காலம்"

2. பெண்கல்வி மேம்பாட்டிற்கு ஆங்கில அரசு செய்தது என்ன?

- பெண் கல்வி மேம்பாட்டிற்காக ஆங்கில அரசு, 1882 ல் ஹண்டர் குழுவை அமைத்து, முதன்முதலில் பெண் கல்விக்குப் பரிந்துரை செய்து சட்டம் இயற்றியது. அறிக்கையும் வெளியிட்டது.
- அந்த அறிக்கையின் படி, மராட்டிய மாநிலத்தில் ஜோதிராவ்பூலே, சாவித்ரிபாய் பூலே இணையர் முதன் முதலில் பெண்களுக்கான பள்ளியைத் தொடங்கினார்கள்

3. எவற்றையெல்லாம் தாயாகக் கருதுகிறோம்?

நாடு, நதி, மொழி, புவி முதலியவற்றைத் தாயாகக் கருதுகிறோம்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

4. சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் சிறப்பினை எடுத்தியம்புக.

- பெண்ணுணர்வினைப் பாடலில் தந்தனர்.
- தூது சென்றனர்.
- துயரைத் தீர்த்தனர்
- ஓதும் தமிழால் உயர்வைப் பெற்றனர்.

5. பக்தி இயக்கம் வளர்ந்த காலத்தில் இறைவனுக்குப் பாமாலை சூட்டியவர்கள் யார்?

- காரைக்கால் அம்மையார்
- ஆண்டாள்

6. ஐடாஸ் சோபியா ஸ்கட்டர் - குறிப்பு வரைக.

பெண்கள் மருத்துவராவதை மருத்துவ உலகமே விரும்பாத காலத்தில், தமிழகத்திற்கு வந்து, மருத்துவராகி வேலூரில் இலவச மருத்துவம் அளித்தவர்தான் ஐடாஸ் சோபியா ஸ்கட்டர் ஆவார்.

7. மராட்டிய மாநிலத்தில் முதன் முதலாகப் பெண்களுக்கான பள்ளியைத் தொடங்கியவர்கள் யார்?

- ஜோதிராவ் பூலே
- சாவித்திரிபாய் பூலே

சிறுவினா

1. முற்காலத்தில் பெருமை பெற்ற பெண்கள் பற்றிக் குறிப்பிடுக.

- சமண மதம், புத்தமதம் வளர்ந்த காலத்தில் மணிமேகலை கற்றறிந்த பெண்ணாகவே இருந்தாள்.
- பக்தி இயக்கம் வளர்ந்த காலத்தில் காரைக்காலம்மையார், ஆண்டாள் முதலிய பெண்கள் இறைவனுக்குப் பாமாலை சூடும் ஆற்றல் பெற்றிருந்தார்கள்.

2. ஈ.த இராஜேஸ்வரி அம்மையார் குறிப்பு வரைக?

- இராஜேஸ்வரி அம்மையார் 1906 முதல் 1955 வரை வாழ்ந்தவர்.
- தமிழ், இலக்கியம், அறிவியல் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கினார்.
- திருமந்திரம், தொல்காப்பியம், கைவல்யம் போன்ற நூல்களில் உள்ள அறிவியல் உண்மைகள் குறித்துப் பல சொற்பொழிவுகள் ஆற்றினார்.
- சூரியன், பரமாணுப்புராணம் போன்ற அறிவியல் நூல்களை எழுதியுள்ளார்.

கற்பவை கற்றபின்

பக்கம்: 129

1. இன்றைய சாதனைப் பெண்மணிகள் என்னும் தலைப்பில் தொகுப்பேடு உருவாக்குக.

சாதனைப் பெண்மணிகள்:

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற பெண்மணிகள், பலசோதனைகளைக் கடந்து சாதனை செய்து பத்திரிகைகளில் தலைப்புச் செய்தி ஆனவர்கள்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

இந்திரா காந்தி:

இந்திரா பிரியதர்ஷினி, இந்தியாவின் இரும்புப் பெண்மணி. நாட்டின் பிரதமராக, எதிர்க்கட்சி தலைவராக இருந்த பொழுது பல விமர்சனங்கள், பல தடைகள் வந்தாலும், தயங்காது துணிச்சலான பல முடிவுகளை எடுத்து பாரத நாட்டை உயரச் செய்தவர்.

அன்னை தெரசா:

கருணையின் மறு உருவம் இவர். அமைதிக்கான "நோபல்" பரிசினையும், இந்திய நாட்டின் மிக உயரிய விருதான "பாரத ரத்னா" விருதையும் பெற்றவர். அநாதைகள், ஆதரவற்றவர்கள், நோயாளிகள் என அனைவருக்காகவும் தம் வாழ்வை அர்ப்பணித்த அன்பின் திரு உருவம். அகிலமே "அன்னை" எனக் கொண்டாடிய பெருமைக்குரியவர்.

எம். எஸ். சுப்புலெட்சுமி:

இசைத் துறையில் உலகப்புகழ் பெற்றவர். ஐ.நா மன்றத்தில் இசைக்கச்சேரி நடத்திய முதல் இந்தியப் பெண்மணி. பக்திப் பாடல்கள், கீர்த்தனைகள், திரை இசைப் பாடல்கள் என அனைத்து இசைவடிவிலும் முத்திரைபதித்த கலைமாமணி இவர்.

இந்திரா நூயி:

உலகின் முன்னணி உணவு மற்றும் குளிர்பான நிறுவனமான, "பெப்சிகோ"வின் தலைமைச் செயல் அதிகாரி. அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் உருவாக்கியுள்ள ஆலோசனைக் குழுவில் இடம் பெற்றுள்ள இந்திய வம்சாவளி சார்ந்த தமிழ்ப் பெண்.

ப்ரித்தி பட்டேல்:

குஜராத்தைப் பூர்வீகமாகக் கொண்ட 44 வயதான இவர் இங்கிலாந்து அமைச்சரவையில் சர்வதேச வளர்ச்சித் துறை மந்திரியாகப் பொறுப்பேற்றுள்ளார்.

கியாரா நர்கின்:

தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த இந்திய வம்சாவளி சிறுமி. 16 வயதே ஆனவர். ஆரஞ்சுப் பழத்தோலை உறிஞ்சு பொருளாகப் பயன்படுத்துவது மூலம் நிலத்தில் நீரைத் தக்க வைத்து, வறட்சிக் காலத்திலும் விளைச்சலைப் பெறலாம் எனக் கண்டறிந்தார். இவர் சமர்ப்பித்த "தண்ணீர் இல்லாப் பயிர்கள் இனி இல்லை" என்ற ஆய்வுக்கு 50,000 டாலர் பரிசாகப் பெற்றார்.

ஸ்டெஃபி கிராஃப்:

டென்னிஸ் வீராங்கனை, உலகெங்கும் உள்ள பத்திரிகைகளில் தலைப்புச் செய்தி ஆனவர், 22 கிராண்ட்ஸ்லாம், ஒரு ஒலிம்பிக் தங்கப் பதக்கம், கிராண்ட் பிரீ பட்டங்கள் பல பெற்றவர். தற்போது போர்களால் பாதிக்கப்படும் நாடுகளில் உள்ள குழந்தைகளுக்கு ஆதரவு அளித்து காத்து வருகிறார்.

செரீனா வில்லியம்ஸ் :

அதிரடியாக ஆடும் டென்னிஸ் வீராங்கனை. நான்கு ஒலிம்பிக்கில் தங்கம் வென்று ஸ்டெஃபிகிராஃபின் சாதனையை முறியடித்தவர்.

ஜே. கே. ரவுலிங் :

வறுமைச்சூழல், சமூகத்தின் நிராகரிப்புகள் இவைகளையெல்லாம் தாண்டி, "ஹாரி பாட்டர்" கதை எழுதி வெற்றி பெற்றவர். உலகப் புகழ் பெற்ற பெண்மணி.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

மாணவர்களே, இச்சாதனைப் பெண்மணிகளின் புகைப் படங்களையும் திரட்டி, இத்தகவல்களுடன் தொகுப்பேடு தயாரித்துக் கொள்ளுங்கள்.

மேலும், கல்பனா சாவ்லா, மேரிகோம், சானியா மிர்சா, ஸ்குவாஷ் தீபிகா, டாக்டர் சாந்தா என பல சாதனையாளர்கள் பற்றியும் தெரிந்து கொள்ளுங்கள்.

2. கல்வி குறித்த சிறப்புத் தொடர்கள், பொன் மொழிகளைத் திரட்டிக் கட்டுரை வரைக.

தொடர்கள்

- கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு
- கைப்பொருள் தன்னின் மெய்பொருள் கல்வி
- கல்வி கரையில கற்பவர் நாள் சில
- கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு
- கல்வியழகே அழகு

பொன்மொழிகள்

- கற்ற கல்வியும் பெற்ற செல்வமும் கடைசி மூச்சு வரை பிறருக்குக் கொடுக்கத்தான்.
- எடுத்தால் குறைவது செல்வம், கொடுத்தால் வளர்வது கல்வி.
- கல்வி ஓர் அணிகலன், அணிந்தால் அழகு தரும், அணிவித்தால் சிறப்பினைத் தரும்.

கல்வியின் சிறப்பு

முன்னுரை:

"வெள்ளத்தல் அழியாது
வெந்தழலால் வேகாது''
எதனாலும் அழிக்க முடியாத விழுச்செல்வமாம் கல்வியின் சிறப்புகளாவன.

சென்ற இடமெல்லாம் சிறப்பு:

கல்வியெனும் கேடில்லாத செல்வத்தைப் பெற்றவன் எங்கு, எவ்விடம் சென்றாலும் சமூகத்தால் மதிக்கப்படுகிறான். கற்றவனுக்கு எல்லா ஊரும் சொந்த ஊரே, எல்லா நாடும் சொந்த நாடேயாகும். இதனையே பொய்யாப் புலவனும்,

"யாதானும் நாடாமால் ஊராமல் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு'' என்றார்.

மெய்ப்பொருள் கல்வி:

உலகப் பொருள்களாகிய வீடு, செல்வம், பொன், நிலம் இவையாவும் பருப்பொருள்கள். கள்வனால் களவாடப்படும், வெள்ளத்தால் நெருப்பால் அழியும். ஆனால் கல்வி நுண் பொருளாம் மெய்ப்பொருள் ஆகும். கள்வனால், பகைவனால் கொள்ளப்படாது. கொடுக்க கொடுக்க வளருமேயன்றி குறைவுபடாது. எனவே கல்வி மெய்ப் பொருளாகும்.

நிற்க அதற்குத் தக:

ஒருவன் தான் எவ்வளவு கல்வி கற்றாலும் அதனைச் செயல் வடிவில் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். அப்போது தான் அவன் கற்ற கல்வியின் பயன் கிடைக்கும். கற்ற கல்வியின் வழி நடக்கவில்லையெனில் பயன் இல்லை என்பதை.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

"கற்க கசடற கற்பவை கற்ற பின்
நிற்க அதற்குத் தக" என்ற வள்ளுவன் வழி விளங்கிக் கொள்ளலாம்.

கண்ணுடையோர் கற்றோர்:

முகத்தின் கண்ணானது கற்றவருக்குரிய அடையாளமாகக் கூறப்படுகிறது. கல்வியறிவைப் பெற்றவனே கண்ணுடையவன். அதனைப் பெறாதவனின் கண்கள் கண் எனப்படுவதில்லை. அவை முகத்தின் புண்களே ஆகும்.

"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

கற்பவனே வாழ்பவன்:

மனிதன் ஆயுள் முழுவதும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும். "**கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன் ஆகிறான்**". கல்விக்காக உயிர் கொடுத்தோர் மரணிப்பதிலலை. அதாவது கற்பவர் நாள் சிலவாக இருந்து அவர்கள் உடல் அழியலாம். ஆனால் அவர் கற்ற, கற்றுக் கொடுத்த கல்வி உலகம் அழியும்வரை நிலைத்திருக்கும். எனவே கற்பவன், கல்விக்காக உயிர் கொடுப்பவன் என்றும் வாழ்கிறான்.

முடிவுரை:

ஒருவன் ஒரு பிறவியில் கற்ற கல்வியானது அப்பிறவிக்கு மட்டுமின்றி ஏழேழு பிறவிக்கும் உடன் இருந்து வாழ வைக்கும்.

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி யொருவர்க்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து".

※※⁂⁂⁂※※

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கவிதைப் பேழை

இயல் ஐந்து

குடும்ப விளக்கு

பாரதிதாசன்

நூல் குறிப்பு :

"**குடும்ப விளக்கு**" என்னும் இந்நூல் குடும்ப உறவுகள் அன்பு என்னும் நூலால் பிணைந்துள்ளது என்பதை உணர்த்துகிறது.

கல்விகற்ற பெண்களைக் கொண்ட குடும்பம் ஒரு "பல்கலைக் கழகமாக" மிளிரும் என்பதை இந்நூல் கூறுகிறது.

இந்நூல் ஐந்து பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவையாவன ஒருநாள் நிகழ்ச்சி, விருந்தோம்பல், திருமணம், மக்கட்பேறு, முதியோர் காதல் என்பவை ஆகும்.

குடும்பம் முதல், உலகினைப் பேணுதல் வரை தன் பணிகளைச் சிறப்பாகச் செம்மையாகச் செய்யும் பெண்களுக்குக் கல்வி முதன்மையானதும் இன்றியமையாததாகும் என்பதையே இந்நூல் மையக் கருத்தாகக் கொண்டுள்ளது.

இரண்டாம் பகுதியாகிய விருந்தோம்பல் என்னும் பகுதியில், தலைவியின் பேச்சில் இடம் பெற்றுள்ள கவிதைகளே நம் பாடப் பகுதியாக அமைந்துள்ளன.

ஆசிரியர் குறிப்பு :

பாவேந்தர் பாரதிதாசன் 1891 - ம் ஆண்டு ஏப்ரல் 29ம் நாள் புதுச்சேரியில் பிறந்தார். இவரது இயற்பெயர் கனக சுப்புரத்தினம் ஆகும். இவர் தம் பெற்றோர் கனகசபை இலட்சுமி (இலக்குமி) ஆவார். தமிழ்மொழி, தமிழர் உயர்வுக்காக கவிதை பாடியவர். செந்தமிழை செழுந்தமிழாகக் காண விரும்பியவர். பாரதியார் மீது கொண்ட ஈர்ப்பினால், பாரதிதாசன் என்று தம் பெயரை மாற்றிக் கொண்டார்.

இயற்றிய நூல்கள் :

பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, இருண்ட வீடு, சேரதாண்டவம், தமிழியக்கம், இளைஞர் இலக்கியம், கண்ணகி புரட்சிக் காப்பியம், தமிழச்சியின் கத்தி போன்ற 96 க்கும் மேற்பட்ட நூல்களை இயற்றிப் புகழ் பெற்றவர்.

இவரது பிசிராந்தையார் என்னும் நாடகநூல் 1970 ம் ஆண்டுக்கான சாகித்ய அகாதமி பரிசினைப் பெற்றது. இவர் இயற்றிய கவிதைகள் அனைத்தும் "பாவேந்தர் பாரதிதாசன் கவிதைகள்" என்னும் பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன.

பாடலின் பொருள்

பாடல் - 1

களர்நிலமும், கழனியும்

கல்வியறிவு இல்லாத பெண்கள் பண்படாத களர் நிலத்தைப் போன்றவர்கள். அந்நிலத்தில் புல் முதலாக களைச் செடிகளே வளரும். நல்ல பயிர்கள் வளராது, விளைந்து பயன்தராது. கல்வியறிவில்லா பெண்களிடம் அறிவுடைய நன்மக்கள் தோன்றமாட்டார்கள்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கல்வியைக் கற்றறிந்த அறிவுடைய பெண்கள் பண்பட்ட நன் செய் நிலம் போன்றவர்கள். நன்செய் நிலத்தில் நற்பயிர் விளைந்து பயன் தருவது போல, அறிவுடைய பெண்ணிடம் சிறந்த அறிவுடைய நன்மக்கள் உருவாகுகின்றனர் என்பதை நவிலவும் வேண்டுமோ?

சொல்லும் பொருளும் :

களர்நிலம்	–	உவர் நிலம் [பண்படாநிலம்]	புதல்வர்கள்	–	மக்கள்
விளைதல்	–	உருவாகுதல்	கழனி	–	நன்செய்நிலம்
நவிலல்	–	சொல்லல்			

பாடல் - 2

இருபாலருக்கும் பொதுவே!

வானூர்தியாகிய ஆகாய விமானம் செலுத்துதல் (இயக்குதல்), மிகப் பெரிய உலகையும், கடலையும் அளத்தல் போன்ற எச்செயல் ஆயினும் ஆண், பெண் ஆகிய இருபாலருக்கும் பொதுவானவை. ஆனால் இதனை உணராது, இன்று உலகமானது ஆண்களின் கட்டுப்பாட்டில் நலிந்து போனதால் தான் பெண்களுக்கு விடுதலையும் பறிபோனது அன்றோ!

சொல்லும் பொருளும் :

வானூர்தி செலுத்துதல்	–	ஆகாய விமானம் இயக்குதல்
வையம், நானிலம்	–	உலகம்
ஆணை	–	கட்டளையிடுதல் (கட்டுப்படுத்துதல்)
மாக்கடல்	–	பெருங்கடல்

பாடல் - 3

கல்வி இல்லாள் மின்னாள்

இன்று பெண்கள் தங்களுக்கென உள்ள வேலைகளைப் பொன்னைப் போல் தன் கையாலேயே பேணிச் செய்தல் வேண்டும். அவர்களின் விடுதலைக்கான செயல்களையும் தன் மலர்போலும் மற்றொரு கரத்தால் பெண்களே செய்தல் வேண்டும். இவ்விரண்டையும் செம்மையாய்ச் செய்வதற்குப் பெண்ணுக்குக் கல்வி வேண்டும். மின்னல் போல ஒளிரும் இயல்புடையவர்கள் பெண்கள். அத்தகு பெண்ணுக்குக் கல்வியறிவு இல்லையெனில் அவள் தன் வாழ்வில் என்றும் ஒளிரமாட்டாள் என்றே நான் சொல்வேன்.

சொல்லும் பொருளும் :

இயற்றுக	–	செய்க	மின்னாளை	–	மின்னல் போல ஒளிர்பவளை
மின்னாள்	–	ஒளிரமாட்டாள்	பணி	–	வேலை

பாடல் - 4

நன்னாளைக் காண்போம்

உணவினைச் சமைப்பது, வீட்டு வேலைகளைச் சலிப்பில்லாமல் செய்வது போன்றவை பெண்களுக்கே உரியவை என்று கூறுவது பொருத்தமற்றது. அவை நமக்கும் உரியவை என்று ஆண்கள் ஏற்றுக் கொள்ளும் எண்ணம் வரவேண்டும். அந்த நன்னாளைக் காண்போம். சமைப்பது தாழ்வென எண்ணலாமா? சமைப்பவர் உணவை மட்டும் சமைப்பது இல்லை. சமைத்து அன்பாக பரிமாறி உண்ணச் செய்வது மூலம் அதற்கும் மேலாக இன்பத்தையும் படைக்கின்றனர்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

சொல்லும் பொருளும் :

சலிப்பின்றி – அயர்வு, வெறுப்பின்றி
இன்பம் சமைக்கின்றார் – மகிழ்ச்சியைப் படைத்தல்
நன்னாள் – ஆண்கள் சமையலைத் தன் பணி என ஏற்கும் நாள்

பாடல் - 5

வாழ்வு நலம் பெறுதல்

தம் மக்கட்கு உணவைச் சமைத்துத் தருவது என்பது வெறும் வேலையன்று. அஃது உயிரை உருவாக்குவது போன்றது ஆகும். வாழ்க்கை என்பது பொருட்செல்வத்தாலோ, வில், வாள் போன்ற கருவிகளால் வெளிப்படுத்தும் வீரத்தாலோ அமைவது அன்று. அடுப்பிலே நெருப்பு இட்டு, சமைக்கும் கலத்தில் சுவையை இட்டு, அருகிலே அமர்ந்து, உள்ளத்து அன்பால் பரிமாறுவதில்தான் வாழ்வு நலம் பெறுகிறது.

சொல்லும் பொருளும் :

உயிர் ஆக்கல் – உயிரை உருவாக்குவது
தாழி – சமைக்கும் கலன்
தணல் – நெருப்பு
அணிந்திருந்து – அருகில் அமர்ந்து
உள்ளத்து அன்பிட்ட உணவு – உள்ளத்தில் தோன்றும் அன்பால் பரிமாறுதல்

பாடல் - 6

பெண் கல்வி வேண்டும்

சமைக்கும் பணி மட்டுமே பெண்களுக்குத் தவிர்க்க முடியாத பணியாகும். அதுவே அவர்களுக்கு உரிய கடமை. சமையல் என்னும் பணி நல்ல தாய்மார்களுக்கே உரியதாகும். தமிழ்த்திரு நாட்டில் இருக்கும் இவ்வழக்கத்தினை, எண்ணத்தினைக் கண் இமைக்கும் நேரத்தில் நீக்க வேண்டுமாயின் பெண்களுக்கு எப்போதும் கல்வி வேண்டும்.

சொல்லும் பொருளும் :

தவிர்க்க முடியா – நீக்க முடியாத
யாண்டும் – எப்பொழுதும்
இமைப்போதில் – நொடிப் பொழுதில்

இலக்கணக் குறிப்புகள் :

மாக்கடல் – உரிச்சொல் தொடர்
பொன்னே போல் – உவம உருபு
வில்வாள் – உம்மைத் தொகை
இயற்றுக – வியங்கோள் வினைமுற்று
வாழ்வோம் – தன்மைப் பன்மை வினைமுற்று
தவிர்க்க ஒணா – ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
ஆக்கல் – தொழிற் பெயர்
மலர்க்கை – உவமைத் தொகை
நல்லறிவு – பண்புத் தொகை
உரைப்பேன் – தன்மை ஒருமை வினைமுற்று

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பகுபத உறுப்பிலக்கணம் :

விளைவது - விளை + வ் + அ + து	**சமைக்கின்றார்** - சமை + க் + கின்று + ஆர்
விளை - பகுதி,	**சமை** - பகுதி,
வ் - எதிர்கால இடைநிலை	**க்** - சந்தி
அ - சாரியை	**கின்று** - நிகழ்கால இடைநிலை
து - படர்க்கை ஒன்றன் பால் வினைமுற்று விகுதி	**ஆர்** - பலர்பால் வினைமுற்று விகுதி
விளைதல் - விளை + தல்	**திருந்திய** - திருந்து + இ(ன்) + ய் + அ
விளை - பகுதி,	**திருந்து** - பகுதி,
தல் - தொழிற் பெயர் விகுதி	**இ(ன்)** - இறந்த கால இடைநிலை
	ய் - உடம்படு மெய் சந்தி
	அ - பெயரெச்ச விகுதி
காண்போம் - காண் + ப் + ஓம்	**ஆக்கல்** - ஆக்கு + அல்
காண் - பகுதி,	**ஆக்கு** - பகுதி,
ப் - எதிர்கால இடைநிலை	**அல்** - தொழிற் பெயர் விகுதி
ஓம் - தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி	

பாடநூல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. பொருத்தமான விடையைத் தேர்க.

அ) சிறுபஞ்ச மூலம் - 1. காப்பிய இலக்கியம்
ஆ) குடும்ப விளக்கு - 2. சங்க இலக்கியம்
இ) சீவக சிந்தாமணி - 3. அற இலக்கியம்
ஈ) குறுந்தொகை - 4. தற்கால இலக்கியம்

க) அ - 3, ஆ - 4, இ - 1, ஈ - 2
உ) அ - 2, ஆ - 3, இ - 1, ஈ - 4
ங) அ - 3, ஆ - 1, இ - 4, ஈ - 2
ச) அ - 4, ஆ - 1, இ - 2, ஈ - 3

விடை : க) அ - 3, ஆ - 4, இ - 1, ஈ - 2

குறுவினா

1. தலைவியின் பேச்சில் வெளிப்படுகின்ற பாடுபொருள் யாது?

- குடும்ப விளக்கின் தலைவியின் பேச்சில்,
- பெண்ணுக்கு விடுதலை வேண்டுமெனில் கல்வி வேண்டும்;
- பெண் ஒளிர வேண்டுமெனில் கல்வி வேண்டும்;

நாட்டின் வழக்கத்தை மாற்ற வேண்டுமெனில் கல்வி வேண்டும் என்று "பெண்கல்வி வேண்டும்" என்பதையே பாடுபொருளாகக் கொண்டு தலைவி பேசி, தன் கருத்தை வெளிப்படுத்துகிறாள்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

சிறுவினா

1. சமைப்பது தாழ்வா? இன்பம் சமைக்கின்றார் சமையல் செய்வார்.

அ) இன்பம் சமைப்பவர் யார்? ஆ) பாவேந்தர் கூற்றுப்படி சமைப்பது தாழ்வா?

அ) இன்பம் சமைப்பவர்

உணவைச் சமைப்பவரே, அதனை அன்புடன் படைப்பது மூலம் (பரிமாறுவது மூலம்) இன்பத்தையும் சமைப்பவர் ஆவார்.

ஆ) சமைப்பது தாழ்வா :

உணவைச் சமைத்துத் தருவது உயிரை உருவாக்குவது போன்றதாகும்.

எனவே பாவேந்தர் கூற்றுப்படி சமையல் தாழ்வாகாது.

நெடுவினா

1. குடும்ப விளக்கு நூலில் தலைவி பேச்சில் வெளிப்படும் பெண்கல்விக்கான கருத்துகளை இன்றைய சூழலுடன் ஒப்பிட்டு எழுதுக.

முன்னுரை:

பாரதிதாசன் இயற்றிய குடும்ப விளக்கு என்னும் நூலில், குடும்பத்தலைவி தன் உள்ளக்கருத்துகளை வெளிப்படுத்தும் போது, பெண்கல்வி குறித்த கருத்துகளையும் வெளிப்படுத்துகிறார். அவ்வாறு தலைவி கூறும், கருத்துகளும், இன்றைய சூழலையும் பார்ப்போம்.

தலைவியின் பேச்சு:

கல்வி இல்லாத பெண்கள் பண்படாத உவர்நிலம் போன்றவர்கள்; அங்கு பயனற்ற புல் விளைந்திடலாம். அறிவார்ந்த புதல்வர்கள் உருவாவதில்லை. கல்வியறிவு பெற்ற பெண்கள், பண்பட்ட நன்செய் நிலம் போன்றவர்கள். அவர்கள் மூலமே சிறந்த அறிவார்ந்த மக்கள் உருவாகின்றனர்.

பெண்கல்வி இல்லாததினால், இன்று உலகம் ஆண்களின் கட்டுப்பாட்டில் நலிந்து போனதால், பெண்களுக்கு விடுதலை பறிபோனது.

கல்வியறிவு இல்லாத பெண், மின்னல்போல் ஒளிரும் அழகு பெற்றவளாயினும், அவள் வாழ்வு ஒளிர்வதில்லை.

“கல்வி இல்லா மின்னாள்

வாழ்வில் என்றும் மின்னாள்”

சமைக்கும் பணி, தாய்மார்களுக்கே உரியது எனும் வழக்கத்தினைக் கண் இமைக்கும் நேரத்தில் நீக்க வேண்டுமாயின் பெண்களுக்கு எப்போதும் கல்வி வேண்டும்.

இன்றைய சூழல் :

கல்வி கற்ற பெண் குடும்பத்தலைவியாய் இருப்பதால், பட்டங்களும், பதவிகளும் பெறும் மக்கட்பேறு இல்லந்தோறும் காணப்படுகிறது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

துறைதோறும்:

வானூர்தியைச் செலுத்துதல் விண்கலத்தில் செல்லுதல், மருத்துவர், எனப் பல்வேறு துறைகளிலும், உலகை அளத்தல், மாக்கடலை அளத்தல் என அனைத்துத் துறைகளிலும் ஆணுக்கு நிகராக பெண்ணும் இடம்பெறுகிறாள், செயலாற்றும் திறன் உடையவளாய் இருக்கிறாள் என்பதை மறுக்க இயலாது.

"வானூர்தி செலுத்தல் வைய
மாக்கடல் முழுது மளத்தல்
ஆனஎச் செயலும் ஆண்பெண்
அனைவர்க்கும் பொதுவே" ஆகிவிட்டது.

சமையல்பணி :

சமைப்பதும், வீட்டு வேலைகளைச் சலிப்பில்லாமல் செய்வதும் பெண்களுக்கு உரியது என்ற நிலை மாறிவருகிறது. ஆண்களும் அதனைத் தாழ்வாக எண்ணாது ஏற்று நடத்தும் காலம் வந்து கொண்டிருக்கிறது எனில் மிகையாகாது.

குடும்ப விளக்கு தலைவிபேசும், கால கட்டத்தை விட 'பெண்கல்வி' இன்று பல மடங்கு வளர்ந்திருக்கிறது.

முடிவுரை:

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்"

என்ற பாரதியின் கனவு வரிகள் நனவாகிக் கொண்டு தான் இருக்கின்றது.

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. உணவினை ஆக்கல் மக்கட்கு ..... அன்றோ

அ) உயிர் ஆக்கல் ஆ) உயிர் அழித்தல் இ) உணவாக்கல் ஈ) உணவழித்தல்

விடை: அ) உயிர் ஆக்கல்

2. கல்வியை உடைய பெண்கள் ..... ஆவார்.

அ) உவர் நிலம் ஆ) பண்படாத நிலம் இ) திருந்திய கழனி ஈ) கிணற்றுத் தவளை

விடை: இ) திருந்திய கழனி

3. மலர்க்கை என்பதன் இலக்கணக்குறிப்பு யாது?

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
இ) உருவகம் ஈ) உவமைத்தொகை விடை: ஈ) உவமைத்தொகை

4. உணவினை ஆக்கல் மக்கட்கு
உயிர் ஆக்கல் அன்றோ - இவ்வடியில் உள்ள நயம் யாது?

அ) அடி மோனை ஆ) அடி எதுகை இ) சீர் இயைபு ஈ) அடி இயைபு
1) அ - சரி 2) இ, ஈ - சரி 3) நான்கும் சரி 4) நான்கும் தவறு

விடை: 1) அ - சரி

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

5. பொருத்துக:

அ) தணல் - 1 சமைக்கும் கலன்
ஆ) தாழி - 2 செய்க
இ) இயற்றுக - 3 சொல்லல்
ஈ) நவிலல் - 4. நெருப்பு

விடை: அ4 ஆ1, இ2, ஈ3

6. ''உம்மைத்தொகை'' அமைந்துள்ள சொல்லைத் தேர்ந்தெடு.

அ) வில்வாள் ஆ) பணமும் படையும் இ) மலரும் ஈ) ஆண்களும்

விடை : வில்வாள்

7. சாகித்திய அகாதெமி விருது பெற்ற பாரதிதாசனின் நூல் எது?

அ) குடும்ப விளக்கு ஆ) இருண்ட வீடு
இ) அழகின் சிரிப்பு ஈ) பிசிராந்தையார் நாடகம்

விடை: ஈ) பிசிராந்தையார் நாடகம்

8. குடும்ப உறவுகள் ..... என்னும் நூலால் பிணைந்துள்ளது.

அ) கோபம் ஆ) அன்பு இ) அடக்கம் ஈ) கவலை

விடை: ஆ) அன்பு

9. குடும்ப விளக்கு ..... பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது.

அ) 4 ஆ) 6 இ) 5 ஈ) 7

விடை: இ) 5

10. பாரதிதாசன் படைப்புகளில் பொருந்தாததைக் கண்டறி.

அ) பாண்டியன் பரிசு ஆ) பொன்னியின் செல்வன்
இ) அழகின் சிரிப்பு ஈ) இருண்ட வீடு

விடை: ஆ) பொன்னியின் செல்வன்

குறுவினா

1. குடும்ப விளக்கின் பாடுபொருளாக அமைவன யாவை?

- குடும்ப விளக்கு, குடும்ப உறவுகள் அன்பு என்னும் நூலால் பிணைந்துள்ளதை உணர்த்துகிறது.
- கற்ற பெண்ணின் குடும்பமே பல்கலைக்கழகமாக மிளிரும் என்பதைக் காட்டுகிறது.

2. பாரதிதாசனின் படைப்புகள் யாவை?

- பாண்டியன் பரிசு
- அழகின் சிரிப்பு
- இருண்ட வீடு
- குடும்ப விளக்கு

3. எச்செயல்கள் இருபாலர்க்கும் பொதுவானது என்கிறது குடும்ப விளக்கு.

வானூர்தியைச் செலுத்துதல், உலகையும் கடலையும் அளத்தல் போன்ற எந்தச் செயலும் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானது என்கிறது குடும்ப விளக்கு.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

4. தலைவி எவற்றைப் பொருத்தமற்றவை என்கிறாள்?

சமைப்பது, வீட்டு வேலைகளைச் சலிப்பில்லாமல் செய்வது போன்றவை பெண்களுக்கே உரியவை என்று கூறுவது பொருத்தமற்றது என்கிறாள் தலைவி.

சிறுவினா

1. பாரதிதாசன் குறிப்பு வரைக.

- பாரதிதாசனின் இயற்பெயர் கனக சுப்புரத்தினம்.
- இவர் பாரதியின் கவிதை மீதுகொண்ட ஈர்ப்பினால் பாரதிதாசன் என்று தம்பெயரை மாற்றிக் கொண்டார்.
- பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, இருண்ட வீடு, குடும்ப விளக்கு, தமிழியக்கம் உள்ளிட்டவை இவரது படைப்புகள்.
- இவர் இயற்றிய கவிதைகள் அனைத்தும் 'பாவேந்தர் பாரதிதாசன் கவிதைகள்' என்னும் பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன.
- இவரது பிசிராந்தையார் நாடக நூலுக்குச் சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டுள்ளது.

2. குடும்ப விளக்கு நூலின் ஐந்து பகுதிகள் யாவை?

• ஒருநாள் நிகழ்ச்சி • விருந்தோம்பல் • திருமணம் • மக்கட்பேறு • முதியோர் காதல் முதலிய ஐந்து பகுதிகளைக் கொண்டது குடும்ப விளக்கு.

கற்பவை கற்றபின்

பக்கம்: 132

1. பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் - **பாரதி**

மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம்
செய்திடல் வேண்டுமம்மா.... - **கவிமணி**

பெண்எனில் பேதை என்ற எண்ணம்
இந்த நாட்டில் இருக்கும் வரைக்கும்
உருப்படல் என்பது சரிப்படாது - **பாவேந்தர்**

இவை போன்ற பெண்மையைப் போற்றும் கவிதை அடிகளைத் திரட்டுக.

1.	அன்பென்னும் ஊஞ்சலில் அழகாக அசைந்திடும் ஆனந்தப் பெண்மை	2.	நீராக நிலமாக விண்ணாக காற்றாக யாதுமாக உயிராக உறவாக ஒளிர்கின்ற சக்தி நீயே!
3.	காந்தம் நீ கருணை நீ எளிமலை நீ நெருப்பும் நீ பனி உருவச் சிற்பமும் நீயே.	4.	பெண்மையே மனிதனை ஆக்கும் தெய்வம் பெண்மையே மானுடரில் வாழும் தெய்வம் பெண்மையே மனிதனை ஆளும் தெய்வம்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

5.	பெண்மை உயர்வு மனிதர் நலமெல்லாம் பெண்மையினால் உண்டு	6.	எல்லாம் கடவுள் செயல் என்று தொடை நடுங்கும் பொல்லாங்கு தீர்த்துப் புதுமை செய்ய வந்தவளே பெண்
7.	நாய்என்று நவில்வார்க்கும் -இப்புவிக்கு தாய் என்று காட்டத்தமிழர்க்கு வாய்த்தவள்	8.	பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டின் மண்ணடிமை நீங்குதல் முயற்கொம்பே...

2. ஆணுக்கும் சமையல் செய்யத் தெரிந்திருப்பதன் பயன் குறித்து வகுப்பறையில் கலந்துரையாடி அதன் கருத்துகளைத் தொகுக்க.

மாணவர்களே!

நம் பாடப்பகுதியான குடும்ப விளக்கில், தலைவி பேசும் பொழுது, ஆண்களும் சமையல் பணியை ஏற்றுக் கொள்ளும் நாள் நன்னாள் என்றாள் அல்லவா...

அதன் அடிப்படையில் ஆண்களுக்குச் சமையல் செய்யத் தெரிந்தால் என்னென்ன பயன் என்பது குறித்துக் கலந்துரையாடுங்கள். நாங்கள் கேட்டு மகிழ்கிறோம்.

கலந்துரையாடுபவர்கள்

(நாதன், அமுதா, இனியா, முகிலன்)

அமுதா : நாதா; இப்போது தான் பள்ளிக்கு வருகிறாயா? ஏன் தாமதம்...

நாதன் : அவசர வேலையின் நிமித்தமாக என் அம்மா ஊருக்குச் சென்று விட்டார்கள். கடையில் உணவு வாங்கி வரத் தாமதமாகி விட்டது.

இனியா : என்ன? உன் அம்மா ஊருக்குச் சென்று விட்டார்களா? கடையிலா உணவு வாங்கினாய்.

நாதன் : ஆமாம் இனியா! நான், என் தந்தை, என் அண்ணன் மூவருமே ஆண்கள் அல்லவா! அதனால் வீட்டில் சமையல் இல்லை.

முகிலன் : என்னடா இது! மூவருக்கும் ஒன்றுமே தெரியாதா?

நாதன் : தெரியாது முகிலா; தேநீர் முதல் உணவு வரை கடையில் தான்!

முகிலன் : இதோ! பார் என் அம்மாவுக்கும் இன்று உடல் நிலை சரியில்லை. காலையிலே மருத்துவமனை சென்று விட்டார். நானும் என் தந்தையும் தான் சமையல் செய்தோம்.

இனியா : அப்படியா! முகிலா

முகிலன் : ஆமாம் இனியா! வேலை செய்தே என் அம்மா மிகவும் சோர்ந்து உடல் நலம் குன்றிவிட்டார்கள். அதனால் என் தந்தை, முகிலா! நீயும் நானும் அம்மாவுக்கு சற்று ஓய்வு கொடுப்போம். அவர்கள் நிதானமாக மருத்துவரிடம் சென்று ஆலோசனை பெற்று வரட்டும் என்றார்.

அமுதா : எப்படி சமைத்தீர்கள்?

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

முகிலன் : காலையிலே அப்பா கடைக்குச் சென்று கீரை வாங்கி வந்தார். அவர் சோறு சமைக்கும் முன் நான் கீரையைச் சுத்தம் செய்து, அதனைச் சமைப்பதற்குத் தேவையான வெங்காயம் போன்றவற்றை உரித்துக் கொடுத்து நான் பள்ளிக்குப் புறப்படச் சென்றேன். அப்பா அம்மாவைவிட வேகமாகச் சமைத்து விட்டார். சத்துள்ள உணவும் கிடைத்தது. கடைக்குச் செல்லும் அலைச்சல், பணம், நேரம் எல்லாம் மிச்சம்.

நாதன் : நானும் ஒரு காணொளியில் பார்த்தேன். சமையல் தெரியும் ஆண்களுக்குக் கலையுணர்வும், தன்னம்பிக்கையும் அதிகம் என்றும்; ஆண்கள் சமையல் கற்றுக் கொள்வதால் வீட்டில் சமத்துவம் வளரும்; எல்லோருக்கும் ஒருவர் மேல் ஒருவர்க்கு அக்கறை கூடும்; வீணான செலவுகள் தவிர்க்கப்படும்; கடையில் உணவை வாங்கி உண்பதால் ஏற்படும் உடல் நலக் கேடுகளைத் தவிர்க்கலாம் என்றும் அந்தக் காணொளி விளக்கியது. முகிலா...

முகிலன் : நாதன் ; இனி நம் வீட்டில் நம் அன்னை உடல் நலக் குறைவுற்றாலோ, ஊருக்குச் சென்றாலோ நம் தேவைக்கு நம் தந்தை, நம் சகோதரர்கள் இணைந்து சமைக்க முயற்சிப்போம்...

அமுதா, இனியா... : நல்ல முடிவு நண்பர்களே வீடும், நாடும் நலம் பெற சமையல் உட்பட எல்லாப் பணிகளையும் இரு பாலரும் இணைந்தே செய்வோம்...

※※⁂⁂⁂※※

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கவிதைப் பேழை

இயல் ஐந்து

சிறுபஞ்சமூலம்

காரியாசான்

நூல் குறிப்பு :

மனித வாழ்வை செழுமையாக்கும் அறப் பண்புகளைக் கூறும் இலக்கியங்கள் அற இலக்கியங்கள். அற இலக்கியங்களில் ஒன்று தான் சிறுபஞ்சமூலம். இந்நூலில் 102 பாடல்கள் உள்ளன.

ஐந்து எளிய வேர் மூலங்களைக் கொண்டது சிறுபஞ்சமூலம்.

சிறுபஞ்சமூலம் என்பதற்கு ஐந்து சிறிய வேர்கள் என்று பொருள்

ஐந்து வேர்களாவன : கண்டங்கத்தரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகியனவாகும்.

இவ்வேர்களால் ஆன மருந்து உடற்பிணியைப் போக்குவது போல, சிறுபஞ்சமூலம் பாடல்களில் உள்ள சிறு சிறு ஐந்து கருத்துகள் அறியாமையை அகற்றி மனப்பிணியைப் போக்கி நல்வழிப்படுத்துவனவாய் அமைந்துள்ளன. இப்பாடல்கள், நன்மை தருவன, தீமை தருவன, நகைப்புக்கு உரியன என்னும் வகையில் வாழ்வியல் உண்மைகளை எடுத்துக்காட்டுகின்றன.

ஆசிரியர் குறிப்பு :

சிறுபஞ்சமூலம் இயற்றியவர் காரியாசான் ஆவார். கி.பி 470 ல் மதுரையில் அமைந்திருந்த சங்கத்தில் மாக்காயனாரிடம் தமிழ் பயின்றார். மாக்காயனாரின் மாணாக்கராகிய இவரது இயற்பெயர் "காரி" ஆசான் என்பது தொழிலின் அடிப்படையில் அமைந்த பெயர்.

இந்நூலின் பாயிரச் செய்யுள் "மாக்காரியாசன்" என்று இவரைச் சிறப்பிக்கிறது. நம் பாடப்பகுதியில் அமைந்துள்ள பாடல், வயதுக்கும் அறிவுக்கும் சில நேரங்களில் தொடர்பு இருப்பதில்லை. சாதனைக்கு வயது ஒரு தடையில்லை என்ற உண்மையைக் கூறுகிறது.

பாடலின் பொருள்

அறிவுடையார் தாமே உணர்வார்

பூக்காமலே சில மரங்கள் காய்ப்பதுண்டு. அவற்றைப் போல இளையவரான போதும், நன்மை தீமைகளை நன்குணர்ந்து செய்யும் இயல்புடையவர்கள் மூத்தவரோடு வைத்து எண்ணத்தக்கவர் ஆவார்.

பாத்தி அமைத்து, விதை விதைக்காமலே, தானே முளைத்து வளரும் விதைகளும் உள்ளன. அதைப் போலவே அறிவிற் சிறந்த மேதையரும் பிறர் உணர்த்தாமலே, எச்செயலையும் தாமே உணர்ந்து செய்து கொள்ளும் செயல்வல்லோராய் இருப்பர்.

"பூவாது காய்க்கும் மரம் போல
விதையாது முளைக்கும் வித்து போல"

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

வயதில் இளையோராயினும், அறிவும், மேதைமையையும் உடையவர்க்கு எதையும் நாம் உணர்த்தாமலே சாதிப்பவர்களாகவும், நன்மை செய்கிறவர்களாகவும் இருப்பர்.

"அறிவுக்கும், சாதனைக்கும் வயது ஒரு தடையில்லை"

சொல்லும் பொருளும் :

மூவாது	–	முதுமை அடையாமல்	மூத்தவர்	–	செயல்களால் பெரியோராய்த் திகழ்பவர்
நூல் வல்லார்	–	நன்று, தீது உணர்ந்தவர்	விதையாமை	–	விதைக்காமலேயே
நாறுவ	–	முளைப்ப	வித்துஉள	–	விதைகள் உள
உரையாமை	–	உணர்த்தாது			

இலக்கணக் குறிப்புகள் :

அறிவார்	–	வினையாலணையும் பெயர்
வல்லார்	–	வினையாலணையும் பெயர்
விதையாமை	–	எதிர்மறைத் தொழிற் பெயர்
உரையாமை	–	எதிர்மறைத் தொழிற் பெயர்
தாவா	–	ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
பூவாது	–	எதிர்மறைவினையெச்சம்
காய்க்கும் மரம்	–	செய்யும் என்னும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சம்

பகுபத உறுப்பிலக்கணம் :

உரையாமை	**- உரை + ய் + ஆ + மை**		**காய்க்கும்**	**- காய் + க் + க் + உம்**	
உரை	-	பகுதி,	**காய்**	-	பகுதி,
ய்	-	உடம்படுமெய் சந்தி,	**க்**	-	சந்தி
ஆ	-	எதிர்மறை இடைநிலை	**க்**	-	எதிர்கால இடைநிலை
மை	-	தொழிற் பெயர் விகுதி	**உம்**	-	பெயரெச்ச விகுதி
அறிவார்	**- அறி + வ் + ஆர்**				
அறி	-	பகுதி,			
வ்	-	எதிர்கால இடைநிலை			
ஆர்	-	பலர்பால் வினைமுற்று விகுதி			

தெரியுமா?

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் மூன்று கருத்துகள் கூறும் நூல் **"திரிகடுகம்".**

ஆறு கருத்துகளைக் கூறும் நூல் **"ஏலாதி"**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பாடநூல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. கீழ்க்காண்பவற்றுள் உணர்ச்சித் தொடர் எது?

அ) சிறுபஞ்சமூலத்தில் உள்ள பாடல்கள் பெரும்பாலும் மகடூஉ முன்னிலையில் அமைந்துள்ளன.

ஆ) இந்திய நூலகவியலின் தந்தையென அறியப்படுபவர் யார்?

இ) என்னண்ணே! நீங்கள் சொல்வதை நம்பவே முடியவில்லை!

ஈ) வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடத்தைப் புத்தகசாலைக்குத் தருக.

விடை : இ) என்னண்ணே! நீங்கள் சொல்வதை நம்பவே முடியவில்லை!

2. பூவாது காய்க்கும், மலர்க்கை அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?

அ) பெயரெச்சம், உவமைத்தொகை ஆ) எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்

இ) வினையெச்சம், உவமை ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை

விடை : ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை.

குறுவினா

1. மூவாது மூத்தவர் - நூல் வல்லார் - இத்தொடர் உணர்த்தும் பொருளைக் குறிப்பிடுக.

இத்தொடரின் பொருளாவது, நன்மை, தீமை உணர்ந்த நூல்வல்லோர், வயதில் இளையோராக இருப்பினும் மூத்தவரோடு வைத்து எண்ணத்தக்கவர் ஆவார்.

சிறுவினா

1. விதைக்காமலே முளைக்கும் விதைகள்- இத்தொடரின் வழிச் சிறுபஞ்சமூலம் தெரிவிக்கும் கருத்துகளை விளக்குக.

விதைக்காமலே முளைக்கும் விதை:

- கழனியிலே பாத்தி அமைத்து, விதை விதைக்காமலே தானே முளைத்து வரும் விதைகளும் உள்ளன.
- தானே முளைப்பதுடன் உயிர்களுக்குப் பயனும் நல்குவன.
- அதைப்போலவே, அறிவுடைய மேதையரும் பிறர் உணர்த்தாமலே, எதையும் தாமே உணர்ந்து உயரிய செயலாற்றுவதோடு, பிறருக்கும் பயன் நல்கி பெருமையுறுவர்.

"விதையாமை நாறுவ வித்துஉள; மேதைக்கு
உரையாமை செல்லும் உணர்வு."

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. "விதையாமை நாறுவ" நாறுவ என்பதன் பொருள் யாது?
   அ) கெடாதிருத்தல் ஆ) முதுமையடையாது இருத்தல்
   இ) முளைப்ப ஈ) இளைப்ப **விடை : இ) முளைப்ப**

2. உரையாமை என்பதன் இலக்கணக் குறிப்பு யாது?
   அ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஆ) வினையாலணையும் பெயர்
   இ) பெயரெச்சம் ஈ) எதிர்மறைத் தொழிற்பெயர்
   விடை : ஈ) எதிர்மறைத் தொழிற்பெயர்

3. சிறுபஞ்சமூலம் இயற்றியவர் .....
   அ) பூதஞ்சேதனார் ஆ) கணிமேதாவியார்
   இ) கபிலர் ஈ) காரியாசான் **விடை : ஈ) காரியாசான்**

4. காரியாசானின் ஆசிரியர் .....
   அ) மாங்குடி மருதனார் ஆ) மாக்காயனார்
   இ) கணிமேதாவியார் ஈ) பூதஞ்சேதனார் **விடை : ஆ) மாக்காயனார்**

5. சிறுபஞ்சமூலம் பாடல்கள் ஒவ்வொன்றிலும் இடம் பெறும் கருத்துகள் ..... ஆகும்.
   அ) இரண்டு ஆ) மூன்று இ) ஐந்து ஈ) ஆறு
   விடை : இ) ஐந்து

6. சிறுபஞ்சமூலம் ..... நூல்களுள் ஒன்று.
   அ) எட்டுத்தொகை ஆ) பத்துப்பாட்டு
   இ) பதினெண்கீழ்க்கணக்கு ஈ) பதினெண்மேற்கணக்கு
   விடை : இ) பதினெண்கீழ்க்கணக்கு

7. தமிழில் சங்க இலக்கியங்களைத் தொடர்ந்து தோன்றியவை ..... ஆகும்.
   அ) காப்பியங்கள் ஆ) சிற்றிலக்கியங்கள்
   இ) மறுமலர்ச்சி இலக்கியங்கள் ஈ) நீதிநூல்கள் **விடை : ஈ) நீதிநூல்கள்**

8. சரியான கூற்றினைத் தேர்க
   1) காரி என்பது இயற்பெயர் ஆகும்.
   2) ஆசான் என்பது மரபின் அடிப்படையில் அமைந்த பெயர்.
   அ) 1 சரி, 2 தவறு ஆ) 2 சரி, 1 தவறு
   இ) இரண்டும் சரி ஈ) இரண்டும் தவறு **விடை : அ) 1 சரி, 2 தவறு**

9. பாரதியார் ..... வயதிலேயே அரசவையில் கவிதை எழுதினார்.
   அ) 10 ஆ) 12 இ) 11 ஈ) 14
   விடை : இ) 11

10. 16 வயதிலே படைத்தளபதி ஆனவர் யார் .....
    அ) அலெக்சாண்டர் ஆ) நெப்போலியன்
    இ) அகஸ்டஸ் ஈ) அக்பர் **விடை : அ) அலெக்சாண்டர்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

11. பொருத்தமான விடையைத் தேர்க.

1. வள்ளலார் - 16 வயதில் தந்தையின் போர்ப்படை தளபதி
2. பாரதி - 15 வயதில் பிரெஞ்சு இலக்கியக்கழகத்துக்குத் தமது கவிதைகளை அனுப்பியவர்.
3. விக்டர்ஹியூகோ - 11 வயதில் அரசவையில் கவிதை எழுதி பட்டம் பெற்றவர்
4. அலெக்சாண்டர் - 10 வயதிற்குள்ளாகவே சொற்பொழிவாளர்.

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 2, 1, 4 இ) 4, 3, 1, 2 ஈ) 2, 3, 1, 4

விடை : அ) 4, 3, 2, 1

12. பைசா நகர கோபுரத்தின் விளக்கைக் குறித்து ஆராய்ந்தவர்

அ) நியூட்டன் ஆ) தாமஸ் ஆல்வா எடிசன்
இ) கலீலியோ ஈ) விக்டர் ஹியூகோ **விடை : இ) கலீலியோ**

குறுவினா

1. சிறுபஞ்சமூலத்தின் பாடல்கள் எவ்வகையில் வாழ்வியல் உண்மைகளை எடுத்துக்காட்டுகின்றன?

- நன்மை தருவன
- தீமை தருவன
- நகைப்புக்கு உரியன

என்னும் வகையில் வாழ்வியல் உண்மைகளைச் சிறுபஞ்சமூலத்தின் பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன.

2. ''சிறுபஞ்சமூலம்'' என்பதன் பொருள் யாது? அது எவற்றைக் குறிக்கும்?

- சிறுபஞ்சமூலம் என்பதற்கு "**ஐந்து சிறிய வேர்கள்**'' என்பது பொருள் ஆகும்.
- கண்டங்கத்தரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகியவற்றின் வேர்களைக் குறிக்கும்.

3. மூத்தவரோடு வைத்து எண்ணத்தக்கவர் யார்?

நன்மை, தீமைகளை நன்குணர்ந்தவர்; வயதில் இளையவராக இருந்தாலும், அவர் மூத்தவரோடு வைத்து எண்ணத் தக்கவரே ஆவார்.

4. பிறர் உணர்த்தாமல் எதையும் தாமே உணர்ந்து கொள்பவரைப் பற்றி சிறுபஞ்சமூலம் குறிப்பிடுவது யாது?

பாத்தி அமைத்து விதை விதைக்காமலே, தாமே முளைத்து வளரும் விதைகளும் உள்ளன. அதைப் போலவே மேதையரும் பிறர் உணர்த்தாமல் எதையும் தாமே உணர்ந்து கொள்வர்.

சிறுவினா

1. சிறுபஞ்சமூலம் குறிப்பு வரைக.

- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று சிறுபஞ்சமூலம்.
- சிறுபஞ்சமூலம் என்பதற்கு ஐந்து சிறிய வேர்கள் என்பது பொருள்.
- அவை கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகியன
- இவ்வேர்களால் ஆன மருந்து உடலின் நோயைப் போக்குகின்றன.
- அதுபோலச் சிறுபஞ்சமூலம் பாடல்களில் உள்ள ஐந்தைந்து கருத்துகள் மக்களின் அறியாமையைப் போக்கி நல்வழிப்படுத்துவனவாய் அமைந்துள்ளன.
- இந்நூலின் ஆசிரியர் காரியாசான்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

2. காரியாசான் - குறிப்பு வரைக.

- சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் காரியாசான்,
- மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணாக்கர்.
- காரி என்பது இயற்பெயர்.
- ஆசான் என்பது தொழிலின் அடிப்படையில் அமைந்தபெயர்.
- மாக்காரியாசான் என்று பாயிரச் செய்யுள் இவரைச் சிறப்பிக்கிறது.

3. எடுத்துக்காட்டு உவமையணி - விளக்குக.

அணிவிளக்கம் : ஒரு செய்யுளில் உவமைத் தொடரும், உவமேயத் தொடரும் அமைந்து, உவம உருபு மறைந்து வருமாயின் அஃது எடுத்துக்காட்டு உவமை அணி ஆகும்.

சான்று : **"விதையாமை நாறுவ வித்துஉள; மேதைக்கு உரையாமை செல்லும் உணர்வு"**

உவமைத்தொடர் : விதையாமை நாறுவ வித்து உள.

உவமேயத்தொடர் : மேதைக்கு உரையாமை செல்லும் உணர்வு

உவம உருபு : **(அது போல)** மறைந்து வருதல்

பொருத்தம் : விதை விதைக்காமல் தானே முளைத்து வரும் விதைகள் உள்ளன. அது போல மேதையரும் பிறர் உணர்த்தாமல் தாமே உணர்ந்து செயலாற்றுவர்.

இப்பாடலில் "உவமஉருபு" மறைந்து வந்துள்ளதால் எடுத்துக்காட்டு உவமையணிக்குச் சான்றாகிறது.

கற்பவை கற்றபின்

பக்கம்: 134

1. பூக்காமலே காய்க்கும் மரங்கள், விதைக்காமலே முளைக்கும் விதைகள் எவையெனக் கேட்டறிந்து வகுப்பறையில் கூறுக.

பூக்காமலே காய்க்கும் மரங்கள்	விதைக்காமலே முளைக்கும் விதைகள்
ஆலமரம் அத்திமரம் அரசமரம் பலாமரம் அசோக மரம் போன்றவையாகும	வேப்ப விதை (வேம்பு) அரசன் புங்கன் ஆல் - போன்றவை விதைக்காமலே தாமாய் எங்கெல்லாம் விழுகின்றனவோ அங்கெல்லாம் முளைப்பன.

2. மூவாது மூத்தவர், காணாது கண்டவர்
இவை போல நயம் அமைந்த தொடர்களை உருவாக்குக.

மூவாது மூத்தவர் காணாது கண்டவர்
வாராது வந்தவர் பெறாஅது பெற்றவர்
தேடாது கிடைத்தவர் சூடாது சூடியவள்

※※⁂⁂⁂※※

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

விரிவானம்

இயல் ஐந்து

வீட்டிற்கோர் புத்தகசாலை

பாடநூல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. சரியான கூற்றினைத் தெரிவு செய்க.

அ) 'ஆ' என்பது எதிர்மறை இடைநிலை.

ஆ) வீட்டிற்கோர் புத்தகசாலை என்பது அண்ணாவின் மேடைப்பேச்சு.

இ) வில்லுப்பாட்டு ஓர் இலக்கிய வடிவம்.

1. ஆ, இ சரி; அ தவறு
2. அ, இ, சரி; ஆ தவறு
3. மூன்றும் சரி
4. மூன்றும் தவறு

விடை : 3) மூன்றும் சரி

குறுவினா

1. நீங்கள் மிகவும் விரும்பிப் படித்த நூல்கள் யாவை?

- உலக அறிவைத் தரக்கூடிய பொது அறிவு நூல்கள்.
- அறநூலாம் திருக்குறள்.
- விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைக் கூறும் அறிவியல் நூல்கள்.
- வீரர்கள், தியாகிகள், கவிஞர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்கள்.

நெடுவினா

1. நூலகம், நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?

முன்னுரை:

மனிதனின் சிந்தனையைத் தூண்டுவது நூல்களே. இசையைப் போல மனதைப் பண்படுத்துவதும் நூல்களே எனில் மிகையாகாது. "வீட்டிற்கோர் புத்தகசாலை" என்னும் அண்ணாவின் வானொலி உரை மூலம், நூலகம், நூல்கள் குறித்து வெளிப்படும் கருத்துகள் குறித்து பார்ப்போம்.

நூலகம்:

ஒரு நாட்டின் நிலை, உலக நிலைக்கேற்ப வளரவேண்டும் எனில் வீட்டு நிலை மாற வேண்டும். வீட்டிற்கோர் புத்தகசாலை [நூலகம்] வேண்டும். ஒரு நாட்டை உலகம் மதிப்பது அந்நாட்டு மக்களின் மனவளத்தைக் கண்டே ஆகும். நல்ல மனவளம் தருவது நூலகமே.

"வீட்டிற்கோர் புத்தகசாலை" என்ற இலக்கினை நடைமுறைப்படுத்தினால் நமது சந்ததி நல்ல மனவளம் பெறுவர். நாடும் நலமும் வளமும் பெறும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

வீட்டில் அலங்காரப் பொருட்களுக்கு போகப் பொருள்களுக்கு முக்கியத்துவம் தரும் நிலை மாறவேண்டும். ஒவ்வொரு வீடுகளிலும் புத்தகசாலைக்கு இடம் தரப்பட வேண்டும். உணவும் உடையும் எவ்வாறு அடிப்படைத் தேவையோ அதைப் போலவே, நூலகமும் அடிப்படைத் தேவையாகும்.

நூல்கள் :

நாட்டை அறிய, உலகை அறிய, ஏன் ஒருவன் தன்னை அறிய ஏடுகள் (நூல்) வேண்டும். நிபுணத்துவம் தரும் ஏடுகள்தான் என்பதன்று, அடிப்படை அறிவை, உண்மையை உணர்த்தும் நூல்களையாவது கற்க முனையுங்கள்.

பூகோள, சரித ஏடுகள் இருத்தல் வேண்டும். வீட்டிற்கோர் "திருக்குறள்" கட்டாயம் வேண்டும்.

சங்க இலக்கியங்களின் சாரத்தைத் தீட்டித்தரும் நூல்களும் இருக்க வேண்டும். கற்க வேண்டும்.

விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைப் பற்றிய முக்கியமான தரவுகளைத் தரும் நூல்கள் படித்திடல் வேண்டும்.

- நாட்டு விடுதலைக்கு உழைத்தவர்கள்
- மக்களின் மனமாசு துடைத்தவர்கள்
- தொலைதேசங்களைக் கண்டவர்கள்
- வீரர்கள், விவேகிகள் வாழ்க்கை

ஆகிய நூல்கள் இருத்தல் வேண்டும் என்கிறார் பேரறிஞர் அண்ணா.

முடிவுரை :

கேட்டினை நீக்கிட வீட்டிலே புத்தகசாலை அமைப்போம்.

"புனிதமுற்று மக்கள் புதுவாழ்வு வேண்டில்
புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்"

என்ற பாவேந்தர் கூற்றுப்படி புத்தகசாலை அமைப்போம், புத்தகம் வாசித்துப் புதுவாழ்வு பெறுவோம்.

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னைச் சந்திப்பவனே என் தலைசிறந்த நண்பன் என்றவர் .....

அ) அறிஞர் அண்ணா ஆ) காந்தியடிகள்

இ) ஆபிரகாம் லிங்கன் ஈ)வின்சென்ட் சர்ச்சில்

விடை : இ) ஆபிரகாம் லிங்கன்

2. அண்ணா நூற்றாண்டை நினைவுபடுத்தும் வகையில் தமிழக அரசு உருவாக்கியது .....

அ) நூலகம் ஆ) அருங்காட்சியகம் இ) நினைவில்லம் ஈ) பூங்கா

விடை : அ) நூலகம்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

3. வீட்டிற்கோர் புத்தக சாலை என்பது அண்ணாவின் ..... ஆகும்.

அ) தொலைக்காட்சி உரை ஆ) இலக்கியச் சொற்பொழிவு
இ) வானொலி உரை ஈ) அரசியல் மேடைப் பேச்சு

விடை : இ) வானொலி உரை

4. தென்னகத்துப் பெர்னாட்ஷா என்றழைக்கப்பட்டவர் ..... .

அ) காமராஜர் ஆ) தந்தை பெரியார் இ) அறிஞர் அண்ணா ஈ) திரு.வி.க

விடை : இ) அறிஞர் அண்ணா

5. அண்ணா நூற்றாண்டு நூலகம் உருவாக்கப்பட்ட ஆண்டு

அ) 2010 ஆ) 2012 இ) 2014 ஈ) 2013

விடை : அ) 2010

6. நடுவண் அரசு அண்ணா நினைவாக அவர் உருவம் பொறிக்கப்பட்ட ஐந்து ரூபாய் நாணயத்தை வெளியிட்ட ஆண்டு

அ) 2006 ஆ) 2008 இ) 2009 ஈ) 2010

விடை : இ) 2009

7. இருமொழிச்சட்டத்தை உருவாக்கியவர் யார்?

அ) காமராஜர் ஆ) மு.கருணாநிதி இ) அறிஞர் அண்ணா ஈ) எம்.ஜி.ஆர்

விடை : இ) அறிஞர் அண்ணா

8. பொருத்தமான விடையைத் தேர்க.

அ) உலகின் மிகப் பெரிய நூலகம் - 1. சரசுவதி மகால் நூலகம்
ஆ) இந்தியாவின் மிகப் பெரிய நூலகம் - 2. கன்னிமரா நூலகம்
இ) தமிழ் நூல்கள் அதிகமாக உள்ள நூலகம்- 3. தேசிய நூலகம், கொல்கத்தா
ஈ) ஓலைச்சுவடிகளைப் பாதுகாக்கும் நூலகம்- 4. லைப்ரரி ஆப் காங்கிரஸ், அமெரிக்கா

அ) 1, 4, 3, 2 ஆ) 4, 3, 2, 1 இ) 4, 2, 3, 1 ஈ) 3, 2, 4, 1

விடை : ஆ) 4, 3, 2, 1

9. இந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் பொது நூலகம் .....

அ) சரசுவதி மகால். ஆ) கன்னிமரா.
இ) தேசிய நூலகம், கொல்கத்தா. ஈ) நடுவண் நூலகம், திருவனந்தபுரம்.

விடை : ஈ) நடுவண் நூலகம், திருவனந்தபுரம்

குறுவினா

1. அறிஞர் அண்ணாவின் படைப்புகளில் இரண்டினைக் கூறுக.

- சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்
- இன்ப ஒளி

2. அறிஞர் அண்ணா இதழாசிரியராகப் பணியாற்றிய இதழ்களின் பெயரினைக் குறிப்பிடுக.

- ஹோம்ரூல்
- ஹோம்லேண்ட்
- நம்நாடு
- திராவிட நாடு
- மாலை மணி
- காஞ்சி

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

3. அறிஞர் அண்ணா துணையாசிரியராகப் பணியாற்றிய இதழ்களின் பெயரினைக் குறிப்பிடுக.

• குடியரசு • விடுதலை

சிறுவினா

1. அண்ணாவின் புகழ்பெற்ற மொழிகள் சிலவற்றைக் குறிப்பிடுக?

- மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு
- கத்தியைத் தீட்டாதே, உன்றன் புத்தியைத் தீட்டு
- இளைஞர்கள் உரிமைப் போர்ப்படையின் ஈட்டி முனைகள்
- நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்; இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும்.
- சட்டம் ஒரு இருட்டறை - அதில் வழக்கறிஞரின் வாதம் ஒரு விளக்கு.
- பெயர்ப்பகுபதம், வினைப்பகுபதம் என்று இருவகைப்படும்.

கற்பவை கற்றபின்

பக்கம்: 138

1. வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடம் புத்தக சாலைக்குத் தரப்பட வேண்டும் - **அறிஞர் அண்ணா**

   உலகில் சாகாவரம் பெற்ற பொருள்கள் புத்தகங்களே ! - **கதே**

   இவை போன்ற பொன்மொழிகள் எழுதி வகுப்பறையில் படித்துக் காட்டுக.

   புத்தகம் பற்றிய பொன் மொழிகள்

   1. தொட்டுப் பார்த்தால் காகிதம்

      படித்துப் பார்த்தால் ஆயுதம்

   2. புத்தகமே நம்மைச் சீர்திருத்தும் நண்பன்.
   3. உலகின் மூலை முடுக்குகளுக்கெல்லாம்

      போக விரும்பினால் ஒரு நூலகத்துக்குச் செல் - **டெஸ்கார்ட்ஸ்**
   4. கைத்துப்பாக்கிகளை விடப் பெரிய ஆயுதம் புத்தகமே - **லெனின்**
   5. உடலுக்கு உடற்பயிற்சி போல் மனதுக்குப் பயிற்சி புத்தக வாசிப்பு - **சிக்மண்ட் ஃபிராய்ட்**
   6. புது வாழ்வைத் தேடுகிறீர்களா? ஒரு புதிய புத்தகத்தை வாசிக்கத் தொடங்குங்கள் - **இங்கர்சால்**
   7. நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னைச் சந்திப்பவனே என் தலை சிறந்த நண்பன். - **ஆபிரகாம் லிங்கன்**
   8. எந்தப் புத்தகத்தையும் படிக்காத புத்தகம் என்று சொல்லாதீர்கள்; படிக்க வேண்டிய புத்தகம் என்று சொல்லுங்கள் - **விவேகானந்தர்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

2. சீர்காழி இரா.அரங்கநாதன் அவர்களின் பிறந்த நாளான ஆகஸ்ட் 9-ஆம் நாள் தேசிய நூலக நாளாகக் கொண்டாடப்படுவதன் காரணத்தை அறிக.

தேசிய நூலக நாள் - காரணங்கள்

- இந்தியாவைச் சேர்ந்த கணிதவியலாளரும் நூலகவியலாளருமான சீர்காழி இராமாமிர்தம் ரங்கநாதன் [சீர்காழி. இரா.அரங்கநாதன்] 09.08.1892 - ல் பிறந்தார். இவரது பிறந்த தினம் **"தேசிய நூலக நாள்"** ஆகும்.
- இந்திய நூலகவியலின் தந்தை என அறியப்படும் இவர், நூலகவியலின் ஐந்து விதிகளை அறிமுகம் செய்தவர். கோலன் என்னும் நூற்பகுப்பாக்க முறையை உருவாக்கியவர்.
- நூலகவியலின் சிந்தனைகளுக்காக உலக அளவில் பல பரிசுகளைப் பெற்ற பெருந்தகையாளர். இந்திய அரசு இவருக்குப் பத்ம ஸ்ரீ விருது வழங்கிக் கௌரவித்துள்ளது.
- இந்தியாவின் பல்வேறு பல்கலைக்கழகங்களில் நூலகத்துறை பேராசிரியராகப் பணியாற்றிய பெருமைக்குரியவர்.
- நூலகவியலின் உயர்பட்டங்களை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட "இந்திய நூலகவியல் பள்ளியில்" பணியாற்றினார்.
- வெளிநாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்கள், உயர்தர நூலகங்களில் உறுப்பினராகவும், உயர்பதவிகளையும் பெற்றிருந்தார்.
- ஐதராபாத்தில் உள்ள "நகர நடுவ நூலகத்தில்" இவரது உருவப் படம் வைக்கப்பட்டுள்ளது.
- 27.09.1972ல் பெங்களூரில் இறுதிநிலை அடைந்த, சீர்காழி இரா. அரங்கநாதனின் மேற்கூறிய பெருமைகளே, அவரது பிறந்தநாளை "தேசிய நூலக தினமாக" கொண்டாடு வதற்கான காரணங்கள் ஆகும்.

3. நூலகத்தில் கவிதை, கதை முதலிய நூல்களை நூலாசிரியர் வரிசையிலும் நூலின் அடையாளக் குறியீட்டு எண் அடிப்படையிலும் எவ்வாறு தேடுவது என்பதைத் தெரிந்துகொள்க.

- அகரவரிசையில் நூலாசிரியர் பெயர் அறிந்து கொள்ள வேண்டும்.
- நூல்களின் அடையாளக் குறியீட்டு எண்களையும் தெரிந்து கொண்டு தேடுதல் வேண்டும்.

※※⁂⁂⁂※※

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கற்கண்டு

இயல் ஐந்து

இடைச்சொல் - உரிச்சொல்

பாடநூல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. மாறுபட்டுள்ள குழுவினைக் கண்டறிக.
   அ) கலைக்கூடம், திரையரங்கம், ஆடுகளம், அருங்காட்சியகம்
   ஆ) கடி, உறு, கூர், கழி
   இ) வினவினான், செப்பினான், உரைத்தான், பகன்றான்
   ஈ) இன், கூட, கிறு, அம்பு

விடை : ஈ) இன், கூட, கிறு, அம்பு

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. மொழிப் பயன்பாட்டை முழுமையாக்குவது ..... ஆகும்.
   அ) உரிச்சொற்கள் ஆ) பெயர்ச்சொற்கள்
   இ) வினைச்சொற்கள் ஈ) இடைச்சொற்கள்

விடை : ஈ) இடைச்சொற்கள்

2. சொற்றொடரின் இறுதியில் வந்து இசைவுப் பொருளில் வரும் இடைச்சொல் .....
   அ) இல்லை ஆ) அம் இ) ஆம் ஈ) இல்

விடை : இ) ஆம்

3. உரிச்சொல் எப்பொருள்களுக்கு உரியதாய் வரும்.
   1) குறிப்பு 2) பண்பு
   அ) 1 சரி ஆ) 2 சரி இ) இரண்டும் சரி ஈ) இரண்டும் தவறு

விடை : இ) இரண்டும் சரி

4. உரிச்சொற்கள் செய்யுளுக்கே உரியன என்று கூறியவர் யார்?
   அ) நன்னூலார் ஆ) தொல்காப்பியர்
   இ) இறையனார் ஈ) வீரமா முனிவர் விடை : அ) நன்னூலார்

5. ஒழியிசை முதலா அசைநிலை ஈறாக எட்டுப்பொருளில் வரும் இடைச்சொல் எது?
   அ) ஆ ஆ) ஏ இ) ஓ ஈ) இ

விடை : இ) ஓ

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

6. சரியான கூற்றினைத் தேர்க.

1. அன்று என்பது ஒருமைக்கு உரியது.
2. அல்ல என்பது பன்மைக்கு உரியது
3. அன்று என்பது பன்மைக்கு உரியது
4. அல்ல என்பது ஒருமைக்கு உரியது

அ) 1, 2 - சரி, 3, 4 - தவறு
ஆ) 1, 2 - தவறு 3, 4 - சரி
இ) 1, 3 - சரி, 2, 4 - தவறு
ஈ) 1, 3 - தவறு, 2, 4 - சரி

விடை : அ) 1, 2 - சரி, 3, 4 - தவறு

7. 'கடிநகர்' என்னும் சொல்லில் 'கடி' என்பதன் பொருள் .....

அ) மணம் ஆ) காவல் இ) விரைவு ஈ) கூர்மை

விடை : ஆ) காவல்

8. உறு, தவ, நனி என்ற மூன்று உரிச்சொற்களும் ..... என்னும் பொருளில் வருகின்றன.

அ) மிகுதி ஆ) குறைவு இ) விரைவு ஈ) கூர்மை

விடை : அ) மிகுதி

9. தொழிற்பெயர் விகுதிகளில் பொருந்தாததைக் கண்டறி.

அ) தல் ஆ) அம் இ) மை ஈ) இய

விடை : ஈ) இய

10. எதிர்மறை இடைநிலைகளில் பொருந்தாததைக் கண்டறி.

அ) தல் ஆ) அல் இ) இல் ஈ) ஆ

விடை : அ) தல்

குறுவினா

1. இடைச்சொற்களின் இயல்புகள் யாவை?

இடைச்சொற்கள் பெயரையும், வினையையும் சார்ந்து இயங்கும் இயல்பை உடையன.

தாமாகத் தனித்து இயங்கும் இயல்பை உடையன அல்ல.

2. பகுபதம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

- பிரிக்கக் கூடியதும், பிரித்தால் பொருள் தருவதுமான சொல் 'பகுபதம்' எனப்படும்.
- பெயர்ப்பகுபதம், வினைப்பகுபதம் என்று இருவகைப்படும்

3. 'உம்' என்னும் இடைச்சொல் எவ்வெப்பொருள்களில் வரும்? சான்று தருக.

- 'உம்' என்னும் இடைச்சொல் எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, அளவை, தெரிநிலை, ஆக்கம் என்னும் பொருள்களில் வரும்.
- **எ.கா :** மழை பெய்தும் புழுக்கம் குறையவில்லை. (எதிர்மறை உம்மை)
  பாடகர்களும் போற்றும் பாடகர். (உயர்வு சிறப்பு)

4. ஏகார இடைச்சொல் எத்தனை பொருள்களில் வரும் என்று நன்னூல் குறிப்பிடுகின்றது?

பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம், இசைநிறை ஆகிய ஆறு பொருள்களில் ஏகார இடைச்சொல் வரும் என்று நன்னூல் குறிப்பிடுகின்றது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

5. தற்காலத்தில் ஏகாரம் எப்பொருளில் மட்டுமே வருகிறது? சான்று தருக.

- தற்காலத்தில் ஏகாரம் தேற்றப் பொருளில் (அழுத்தம்) மட்டுமே வருகிறது.
- **எ.கா :** அண்ணல் காந்தி அன்றே சொன்னார். நடந்தே வந்தான்.

6. மட்டும் என்னும் இடைச்சொல் எப்பொருளில் வருகிறது?

- மட்டும் என்னும் இடைச்சொல் 'வரையறைப்பொருள்' தருகிறது.
- முடிந்தவரை, குறிப்பிட்ட நேரம் வரை என்னும் பொருள்களிலும் வருகிறது.
- **எ.கா :** படிப்பு மட்டும் இருந்தால் போதும். (வரையறைப் பொருள்)

7. எழுத்துப்பேறு என்பது யாது?

பகுபத உறுப்புகளுள் அடங்காமல் பகுதி, விகுதிக்கு நடுவில் காலத்தை உணர்த்தாமல் வரும் மெய்யெழுத்து எழுத்துப்பேறு ஆகும். பெரும்பாலும் 'த்' மட்டுமே வரும். சாரியை இடத்தில் 'த்' வந்தால் அது எழுத்துப்பேறு.

8. சொல்லின் இறுதியில் வரும் விகுதி எவற்றைக் காட்டும்?

சொல்லின் இறுதிநிலையாக வரும் விகுதியானது, பால், எண், இடம் காட்டும்.

கற்பவை கற்றபின்

பக்கம்: 142

1. பத்திகளில் இடம்பெற்றுள்ள இடைச்சொற்களைக் கண்டறிந்து எழுதுக.

அ) பெண்ணடிமை போகவேண்டும்; பெண், கல்வி பெற வேண்டும். பெண்கள் படித்தால் தான் தம் சொந்தக் காலில் நிற்கலாம். பெண், கல்வி கற்றால் வீடும் நாடும் முன்னேறும். சமுதாயத்தின் சரிபாதியான பெண்களுக்கும் எல்லா உரிமைகளும் உண்டு.

ஆ) நமது முன்சந்ததியார்களுக்கு இருந்ததைவிட, அதிகமான வசதிகள் நமக்கு உள்ளன. அவர்களின் காலம், அடவியில் ஆற்றோரத்தில் பர்ணசாலைக்குப் பக்கத்தில் ஆலமரத்தடியில் சிறுவர்கள் அமர்ந்திருக்க, குரு காலைக்கடன்களை முடித்துக் கொண்டு வந்து, பாடங்களைச் சொல்லித்தரும் முறை இருந்த காலம், ஏடும் எழுத்தாணியும் இருந்த காலம். இப்போதுள்ளது உலகை நமது வீட்டுக்கு அழைத்து வந்து காட்டக்கூடிய காலம். பாமர மக்கள் பாராளும் காலம். மனவளத்தை அதிகப்படுத்தும் வழிகள் முன்பு இருந்ததைவிட அதிகம் உள்ள காலம்.

இடைச்சொற்கள் :

அ)	படித்தால் தான்	[தான்]	ஆ)	இருந்ததைவிட	[விட]
	வீடும் நாடும்	[உம்]		வசதிகள்	[கள்]
	சமுதாயத்தின்	[இன்]		அவர்களின்	[இன்]
	பெண்களுக்கும்	[உம்]		பர்ணசாலைக்கு	[கு]
	உரிமைகளும்	[உம்]		வீட்டுக்கு	[கு]
				அடவியில், ஆற்றோரத்தில்	[இல்]

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

2. உம், ஓ, ஏ, தான் மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம் ஆகிய இடைச் சொற்களைப் பயன்படுத்தி சொற்றொடர்களை உருவாக்குக.

1. உம் : வீரர்களும் போற்றும் வீரன்.
2. ஓ : பூங்கொடியோ மலர்க்கொடியோ இப்படத்தை வரையுங்கள்.
3. ஏ : தேவி நடந்தே வீட்டுக்கு வந்தாள்.
4. தான் : இனியா நான்தான் ஆடுவேன் என்றாள்
5. மட்டும் : உங்களில் ஒருவர் மட்டும் முன்னால் வாருங்கள்.
6. ஆவது : இன்றாவது மழை வருமா?
7. கூட : தெருவில் ஒருவர் கூட நடமாடவில்லை.
8. ஆ : புகழேந்தி பாடினானா?
9. ஆம் : தலைமை ஆசிரியர் உள்ளே வரலாம் என்றார்.
10. ஆகிய : "ஆகிய" என்னும் இடைச்சொல் தற்காலத்தில் அதிகமாகப் பயன்படுத்தப் படுகிறது.

3. பொருத்தமான இடைச்சொற்களைப் பயன்படுத்துக.

அ) மணற்கேணி**யைப்** போல் விளங்கும். நூல்**கள்** உறுதுணை**யாக** இருக்கிறது.

ஆ) பெண்க**ளைப்** படிக்க வைக்காத காலத்தில்**தான்** பெண் இன**த்திற்குப்** பெருமை சேர்க்கும் படி**க்கு** நம் முத்துலட்சுமி அம்மையார் முதல் பெண் மருத்துவ**ராக** வந்தார்கள்.

இ) மக்க**ளின்** மனங்க**ளில்** உலக அறிவு புக வழி செய்ய வேண்டும்.

4. இணைத்து எழுதிப் பாருங்கள் :

அவன்	தான் உம் ஏ ஆ	மனிதன்
இயற்கை		அழகு

உனக்கு	மட்டும் கூட ஆவது	தெரியுமா?
		தெரியும்

வீடு, நாடு	உம் ஓ	நமதே
காற்று, வெளிச்சம்		தேவை
அன்பு, அமைதி		வேண்டும்
வான்மதி, பானு		வாருங்கள்

1. அவன் தான் மனிதன்
   அவனும் மனிதன்
   அவனே மனிதன்
   அவனா மனிதன்

2. இயற்கை தான் அழகு
   இயற்கையும் அழகு
   இயற்கையே அழகு
   இயற்கையா அழகு

3. உனக்கு மட்டும் தெரியுமா?
   உனக்குக் கூட தெரியுமா?
   உனக்காவது தெரியுமா?

4. உனக்கு மட்டும் தெரியும்.
   உனக்குக் கூட தெரியும்.
   உனக்காவது தெரியும்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

5. வீடும் நாடும் நமதே. வீடோ நாடோ நமதே. காற்றும் வெளிச்சமும் தேவை. காற்றோ வெளிச்சமோ தேவை.	6. அன்பும் அமைதியும் வேண்டும். அன்போ அமைதியோ வேண்டும். வான்மதியும் பானுவும் வாருங்கள் வான்மதியோ பானுவோ வாருங்கள்

5. பொருத்தமான உரிச்சொற்களை எழுதுக.

அ) **மா** பெரும் பொதுக்கூட்டம் [கடி / மா]
ஆ) **கடி** விடுதும் [உறு / கடி]
இ) **வாள்** நுதல் [வாள் / தவ]
ஈ) **சால** சிறந்தது [சால / மழ]
உ) **கடி** மனை [கடி / தட]

சிந்தனை வினா

1. தான் என்னும் இடைச் சொல்லை எப்படியெல்லாம் பயன்படுத்தலாம்?

- தான் என்னும் இடைச்சொல்லை அழுத்தப் பொருளில் பயன்படுத்தலாம்.
- எந்தச் சொல்லுடன் வருகின்றதோ, அச்சொல்லை முதன்மைப்படுத்தும் வகையில் ஒரு முறை மட்டும் பயன்படுத்தலாம்.
- **சான்று:** நிர்மலாதான் பாடினாள்.

2. அவர்களுக்குப் பரிசு தருவேன் - இத்தொடரில் 'ஆ' என்னும் இடைச் சொல்லைச் சேர்த்து வினாக்களை அமைக்க.

- அவர்களுக்கா பரிசு தருவேன்?
- அவர்களுக்குப் பரிசு தருவேனா?

3. செய்யுளில் உரிச்சொற்கள் எத்தகைய பொருள்களில் இடம் பெறுகின்றன?

- உரிச்சொற்கள் செய்யுளுக்கே உரியன என்றும் அவை,
- ஒரு சொல் பல பொருளுக்கு உரியது.
- பல சொல் ஒரு பொருளுக்கு உரியது என இடம் பெறும்.

4. தற்காலத் தமிழ்ப் பயன்பாட்டில் காணப்படுகின்ற உரிச் சொற்களை எழுதுக.

- மா, உறு, தவ, நனி, கடி, கூர், கழி - முதலியவை தற்காலத் தமிழ்ப் பயன்பாட்டில் காணப்படுகின்ற உரிச் சொற்கள்.
- மேலும் மழ, குழ, விழுமுதல், என்பனவும் பயன்பாட்டில் உள்ளன.

5. 'ஆ' என்னும் இடைச்சொல் எதிர்மறைப் பொருளில் எப்படி வரும் என்பதை எழுதுக.

- 'ஆ' என்னும் இடைச்சொல் எதிர்மறைப் பொருளில் "ஐயம்" தோன்ற வரும்.
- **சான்று :** அவனா பேசினான்

6. இடைச்சொற்களைப் பயன்படுத்திக் கீழ்க்காணும் சொற்றொடர்களை மாற்றியமைத்துக் காண்க.

அ) வீட்டுக்குச் செல்லத்தான் இவ்வளவு பீடிகையா?

விடை : வீட்டிற்குச் செல்வதற்குத்தான் இவ்வளவு பீடிகையாம்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

ஆ) இந்தச் சூழ்நிலை மாறியாக வேண்டும்.

விடை : இந்தச் சூழ்நிலையை மாற்றித்தான் ஆக வேண்டும்.

இ) வானூர்தியைச் செலுத்துதல், உலகையும் கடலையும் அளத்தல் போன்ற எந்தச் செயலும் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானவை.

விடை : வானூர்தியைச் செலுத்துதல், உலகையும் கடலையும் அளத்தல் ஆகிய செயல்கள் கூட ஆண் பெண் இருபாலருக்கும் பொதுவாம்.

ஈ) சமைப்பது தாழ்வென எண்ணலாமா?

விடை : சமைப்பது மட்டும் தாழ்வென எண்ணலாமா?

உ) பூக்காமலே சில மரங்களில் காய்ப்பதுண்டு.

விடை : பூக்காமலும் சில மரங்கள் காய்க்கும்.

ஊ) வாளால் வெட்டினான்.

விடை : வாளால்தான் வெட்டினான்.

மொழியை ஆள்வோம்

பக்கம்: 146

ஒப்பிட்டுச் சுவைப்போம் :

பாப்பா பாட்டு	Child's Song
ஓடி விளையாடு பாப்பா, - நீ ஓய்ந்திருக்க லாகாது பாப்பா, கூடி விளையாடு பாப்பா, - ஒரு குழந்தையை வையாதே பாப்பா.	Run about and play my sweet little Child And idle not sweet little child; In game and sport have many mates And revile not any one child.
காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு மாலை முழுதும் விளையாட்டு - என்று வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா.	Rise at dawn to learn your lesson, Then sing such airs that are soothing, To games devote the whole evening, Get habituated thus, oh child!

மொழிபெயர்க்க.

Akbar said, "How many crows are there in this city?"

Without even a moment's thought, Birbal replied "There are fifty thousand five hundred and eighty nine crows, my lord".

"How can you be so sure?" asked Akbar.

Birbal said, "Make your men count, My lord. If you find more crows it means some have come to visit their relatives here. If you find less number of crows it means some have gone to visit their relatives elsewhere".

Akbar was placed very much by Birbal's wit.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பீர்பாலின் நகைச்சுவையுணர்வு

இந்த நகரத்தில் எத்தனை காகங்கள் இருக்கின்றன? என்று அக்பர் கேட்டார்.

பீர்பால் ஒரு கணம் கூட யோசிக்காமல் ஐம்பதாயிரத்து ஐநூற்று எண்பத்தொன்பது காகங்கள் இருக்கின்றன அரசே என்று பதிலளித்தார்.

எப்படி உன்னால் உறுதியாகச் சொல்ல முடிகிறது என்றார் அக்பர்.

உங்களது ஆட்களை வைத்து எண்ணுங்கள் அரசே என்றார். இதை விட அதிகமான காகங்கள் இருந்தால் சில இங்குள்ள தங்களுடைய உறவினர்களைப் பார்க்க வந்திருக்கும். நான் கூறியதைவிடக் குறைவாக இருந்தால், வேறு இடங்களில் உள்ள தங்கள் உறவினர்களைக் காணச் சென்றிருக்கும் என்று அர்த்தம் என்றார் பீர்பால்.

பீர்பாலுடைய நகைச்சுவையையும், நகைச்சுவை உணர்வையும் எண்ணி அக்பர், திருப்தியும், மன மகிழ்வும் அடைந்தார்.

பிழை நீக்கி எழுதுக :

1. மதீனா சிறந்த இசைவல்லுநர் வேண்டும்
   விடை : மதீனா சிறந்த இசைவல்லுநராக வேண்டும்

2. நல்ல தமிழுக்கு எழுதுவோம்
   விடை : நல்ல **தமிழில்** எழுதுவோம்

3. பவள விழிதான் பரிசு உரியவள்.
   விடை : பவளவிழிதான் **பரிசுக்கு** உரியவள்.

4. துன்பத்தால் பொறுத்துக் கொள்பவனே வெற்றி பெறுவான்
   விடை : துன்பத்**தைப்** பொறுத்துக் கொள்பவன் **தான்** வெற்றி**யைப்** பெறுவான்.

5. குழலியும் பாடத் தெரியும்
   விடை : குழலி**க்கும்** பாடத் தெரியும்

இடைச் சொற்களைக் கொண்டு தொடர்களை இணைக்க.

(எ.கா) பெரும் மழை பெய்தது. வெள்ளம் கரை புரண்டு ஓடியது.

பெரும் மழை பெய்ததால் வெள்ளம் கரை புரண்டு ஓடியது.

1. அலுவலர் வந்தார் அனைவரும் பதற்றம் அடைந்தனர்.
   விடை : அலுவலர் வந்த**வுடன்** அனைவரும் பதற்றம் அடைந்தனர்.

   (அல்லது)

   அலுவலர் வந்த**தால்** அனைவரும் பதற்றம் அடைந்தனர்

2. சுடர்க்கொடி பாடினாள்; மாலன் பாடினான்.
   விடை : சுடர்க்கொடியும் மாலனும் பாடினார்கள்.

3, பழனிமலை பெரியது; இமயமலை மிகப் பெரியது.
   விடை : பழனிமலையைவிட இமயமலைதான் மிகவும் பெரியது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

4. கவலையற்ற எதிர்காலம்; கல்வியே நிகழ்காலம்.

விடை : கவலையற்ற எதிர்காலம் அமைய வேண்டுமெனில் கல்வியே நிகழ்காலமாக வேண்டும்.

விளம்பரத்தைச் செய்தித்தாள் செய்தியாக மாற்றியமைக்க :

புத்தகம் படிப்போம்! புதியன அறிவோம்!

புத்தகத் திருவிழா

நாள் : செப்டம்பர் 19 முதல் 28 வரை

இடம் : சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்

நேரம் : காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை

(முதல் நாள் காலை 9 மணிக்குத் தமிழகக் கல்வி அமைச்சர் தொடங்கி வைக்கிறார்)

(நாள்தோறும் மாலை 6 மணிக்குப் புதிய புத்தகங்கள் வெளியீடும் சிறப்புப் பேச்சாளர்களின் உரையும் இடம்பெறும்)

அனைவரும் வாரீர்! அறிவுத்திறம் பெறுவீர்!

செய்தி

புத்தகத் திருவிழா

செப் - 18. தஞ்சாவூர்.

தஞ்சாவூரில் உள்ள சரசுவதி மகால் நூலக வளாகத்தில் செப்டம்பர் 19 முதல் 28 வரை புத்தகத் திருவிழா நடைபெற உள்ளது.

நாள்தோறும் காலை 8 மணி தொடங்கி மாலை 6 மணி முடிய புத்தகங்கள் விற்பனைக்கும், படிப்பதற்கும் வைக்கப்படுகின்றன. இப்புத்தகத் திருவிழாவினை முதல் நாள் காலை 9 மணிக்குத் தமிழகக் கல்வி அமைச்சர் தொடங்கி வைக்கிறார். நாள்தோறும் மாலை 6 மணிக்கு புதிய புத்தகங்கள் வெளியீடும் புகழ்பெற்ற பேச்சாளர்களின் சொற்பொழிவுகளும் இடம் பெறுகின்றன. அனைவரும் வருகை தந்து அறிவுத்திறம் பெற்றுச் செல்லுமாறு விழாக்குழவினரால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

6. நிகழ்வினைப் படித்து வினாக்களுக்கு விடையளி.

அண்ணாவின் வாழ்க்கையில்...

தமிழக முதலமைச்சராக அண்ணா பொறுப்பேற்ற காலகட்டத்தில், அரிசி வெளி மாநிலங்களுக்குச் செல்லக்கூடாது என்ற கட்டுப்பாடு இருந்தது. ஒரு நாள் அண்ணா விருத்தாசலம் கூட்டத்தை முடித்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார். வழியில் சோதனைச் சாவடியில் அவரது வண்டி நிறுத்தப்பட்டது. அங்கிருந்த வருவாய் அலுவலர், முதலமைச்சரின் மகிழுந்து என்ற அறியாமலே திறந்துகாட்டச் செய்தார். மகிழுந்தின் பின்பக்கம் முழுவதும் மாலைகள், கைத்தறி ஆடைகள், வாழ்த்துமடல்கள் இருந்தன. அவற்றைப் பார்த்த பிறகு தான் அந்த அலுவலருக்கு வந்திருப்பது யார் என்பது புரிந்தது. உடனே அவர் அண்ணாவின் அருகில் சென்று, "தெரியாமல் நடந்துவிட்டது பொறுத்துக் கொள்ளுங்கள்" என்றார். ஆனால், அண்ணா அவர் உதவியாளரிடம்,

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

"இந்த அலுவலரின் பெயரைக் குறித்துக் கொள்ளுங்கள்" என்றார். அந்த அலுவலர் தனக்கு ஏதோ நடந்து விடப்போகிறது என அச்சப்பட்டு அழாத குறையாகக் கெஞ்சினார். உடனே, அண்ணா, "நாங்கள் போடும் சட்டங்களைச் சரியான முறையில் நிறைவேற்றும் பொறுப்பு உங்களைப் போன்ற அலுவலரின் கையில்தான் இருக்கிறது. இன்று நேரில் உங்கள் செயலைப் பார்த்தேன். உங்களைப் போன்றவர்கள்தாம் உயர்பதவிக்கு வர வேண்டும். அதற்காகத்தான் உங்கள் பெயரைக் கேட்டேன்" என்றார்.

1. மகிழுந்தில் வந்திருப்பது அண்ணா என்பதை வருவாய்அலுவலர் எப்படி அறிந்தார்?

மகிழுந்தின் பின்பக்கம் முழுவதும் மாலைகள், கைத்தறி ஆடைகள் வாழ்த்து மடல்கள் இருந்தன. அவற்றைப் பார்த்த பிறகுதான் வந்திருப்பது அண்ணா என வருவாய் அலுவலர் அறிந்து கொண்டார்.

2. அண்ணாவிடம் ஏன் வருவாய் அலுவலர் பொறுத்துக் கொள்ளச் சொன்னார்?

முதலமைச்சர் என்று தெரியாமல் சோதனைச்சாவடியில் மகிழுந்தை திறந்து காட்டச் சொன்னதால், என்ன நடக்குமோ என்று அச்சப்பட்டு, தெரியாமல் நடந்துவிட்டது பொறுத்துக் கொள்ளுங்கள் என்றார்.

3. அண்ணா வருவாய் அலுவலரின் செயலை எவ்வாறு பாராட்டினார்?

சட்டங்களைச் சரியான முறையில் நிறைவேற்றும் பொறுப்பு உங்களைப் போன்றவர்கள் கையில்தான் இருக்கிறது. உங்களைப் போன்றவர்களே உயர்பதவிக்கு வரவேண்டும் என்று பாராட்டினார்.

4. பத்தியில் இடம்பெறும் இடைச் சொற்களைக் கொண்டு இரு புதிய சொற்றொடர்களை உருவாக்குக?

தான் : பதவி உயர்வு வழங்கத்தான் உம் பெயரைக் கேட்டேன்.
இன் : சட்டத்தைக் காக்கும் பொறுப்பு அலுவலரின் கையில்தான் உள்ளது
கள் : பொறுப்புணர்வுடன் செயல்படும் அலுவலர்கள் நாட்டிற்குத் தேவை.

5. நிகழ்வுக்குப் பொருத்தமான தலைப்பிடுக:

" பொறுப்புணர்வு" (அல்லது) "கடமையுணர்வு"

மொழியோடு விளையாடு

பக்கம்: 148

சொற்களைப் பயன்படுத்தி தொடர்களை உருவாக்குக.

மாணவர்கள்	ஆசிரியர்	பாடவேளை	கரும்பலகை
புத்தகம்	எழுதுகோல்	அழிப்பான்	வழிபாட்டுக் கூட்டம்
அறை	கல்லூரி	உயர்நிலை	சீருடை
மடிக்கணினி			

எ.கா. வழிபாட்டுக் கூட்டத்தில் மாணவர்கள் சீருடையுடன் நின்றனர்.

1. மாணவர்கள் உயர்நிலை அடைய வேண்டும் என்றார் ஆசிரியர்.
2. மாணவர்களே! எழுதுகோலும் அழிப்பானும் கொண்டு வாருங்கள் என்றார் ஆசிரியர்.
3. பாடவேளையின் பொழுது ஆசிரியர் கரும்பலகையில் எழுதினார்.
4. மாணவர்கள் பாடவேளைக்குரிய புத்தகங்களைக் கொண்டுவரவில்லை.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

5. வழிபாட்டுக் கூட்டத்தில் மடிக்கணினி வழங்கப்பட்டது.
6. ஆசிரியர் அறையிலிருந்து புத்தகம் எடுத்து வா.
7. கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி தேவை.
8. சீருடை அணிந்தே வழிபாட்டுக்கூட்டத்திற்கு வரவேண்டும்.
9. கரும்பலகையை அழிப்பானால் சுத்தம் செய்தான்.
10. சீருடையும், மடிக்கணினியும் அரசு விலையின்றிக் கொடுக்கிறது.

அகராதியில் காண்க.


(அரங்கு, ஒட்பம், கான், நசை, பொருநர்)

அரங்கு - அரங்கம், உள்வீடு
ஒட்பம் - அறிவு, அழகு, நன்மை, மேன்மை
கான் - காடு, மணம், வாய்க்கால், இசை
நசை - ஆசை, குற்றம், எள்ளல், ஈரம்
பொருநர் - படைவீரன், தலைவன், போர்க்களத்து சென்று பாடும் கூத்தன்.

படங்களை இணைத்தால் கிடைக்கும் நூல்களின் பெயர்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.


(ஒரு கிராமத்து நதி, கிழவனும் கடலும், கருப்பு மலர்கள், சாக்ரட்டீஸின் சிவப்பு நூலகம், தண்ணீர் தண்ணீர்)

1. **நா. காமராசனின் கவிதை நூல்:**



கருப்பு மலர்கள்

2. **திரைப்படமாக வெளிவந்த கோமல் சுவாமிநாதனின் நாடக நூல்:**



தண்ணீர் தண்ணீர்

3. **நோபல் பரிசு பெற்ற எர்னஸ்ட ஹெமிங்வேவின் குறு நாவல்:**



கிழவனும் கடலும்

4. **சாகித்ய அகாதெமி பரிசு பெற்ற சிற்பியின் கவிதை நூல்**




ஒரு கிராமத்து நதி


Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

5. எஸ்இராமகிருஷ்ணனின் சிறார் நாவல்

	**சாக்ரட்டீஸின் சிவப்பு நூலகம்**

10. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



‘வாழ்க்கையின் கீழ்படியில் நின்றேன்
அண்ணாந்து பார்த்தேன்
உயரச் செல்ல ஏங்கினேன்
பள்ளியின் படியில் கால் வைத்தேன்
கசடற கற்றேன் உயர்ந்தேன்
பட்டங்களும் பதவிகளும் தேடி வந்தன
கல்வியே நம்மை உயர்த்தும்
படிக்கட்டு என உணர்ந்தேன்.....

11. கடிதம் எழுதுக:

உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் - தமிழ் - ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதிகள் பத்துப்படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

அனுப்புநர்

மா.இனியன்,
அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,
நாவலூர்.

பெறுநர்

மேலாளர் அவர்கள்,
நெய்தல் பதிப்பகம்,
மதுரை - 16.

ஐயா,

பொருள் : நூலகத்திற்கு அகராதி அனுப்புதல் தொடர்பாக

வணக்கம். எங்கள் பள்ளி நாவலூரில் அமைந்துள்ளது. சுமார் 500 மாணவர்கள் பயில்கின்றோம். எங்கள் பள்ளி நூலகத்திற்கு, தங்கள் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டுள்ள, தமிழ் - தமிழ் - ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதிகள் பத்துப்படிகளைப் பின்வரும் முகவரிக்குப் பதிவு அஞ்சலில் அனுப்பும்படி வேண்டிக்கொள்கிறேன்.

நாள் : 06.08.18
இடம் : நாவலூர்

இப்படிக்கு,
மா. இனியன்.

அகராதிகள் அனுப்ப வேண்டிய முகவரி
மா. இனியன்,
அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,
நாவலூர், வேலூர் மாவட்டம்.

நன்றி !

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

செயல்திட்டம்

பெண்கல்வி வளர்ச்சிக்கு உழைத்தவர்கள் பற்றிய செய்திப் படத்தொகுப்பினை உருவாக்குக.

மாணவர்களே!

பெண்கல்வி வளர்ச்சிக்கு உழைத்தவர்கள்

மகாத்மா காந்தி, ஈ.வெ.ரா. பெரியார், பாரதியார், பாரதிதாசன், கைலாஷ் சத்யார்த்தி

இவர்களின் புகைப்படங்களைச் சேகரித்து ஒரு படத் தொகுப்பினை உருவாக்குங்கள். இவர்கள் மட்டுமல்ல. இன்னும் கல்விக்காக தொண்டு புரிந்த, உனக்குத் தெரிந்த தலைவர்களின் படங்களையும் சேகரித்துக் கொள்ளுங்கள்.

நிற்க அதற்குத்தக...

எனக்குப் பிடித்தவை / என் பொறுப்புகள்

1. என்னை உயர்வாகப் பேசுவது எனக்குப் பிடிக்கும்.
   எவரையும் காயப்படுத்தாமல் நடந்து கொள்வதும், குறை கூறாமல் பேசுவதும் என் பொறுப்பு
2. எனக்குப் படம் வரைவது பிடிக்கும்.
   பள்ளிச்சுவர், வீட்டுச்சுவர், பொதுச்சுவர் ஆகியவற்றில் வரையாமல் எழுதாமல் இருப்பதோடு பிறரையும் அவ்வாறு செய்யவிடாமல் தடுப்பது என் பொறுப்பு

	எனக்குப் பிடித்தவை	என் பொறுப்புகள்
1.	என்னை உயர்வாகப் பேசுவது எனக்குப் பிடிக்கும்	பிறரைக் காயப்படுத்தாமல் நடந்து கொள்வதும், குறை கூறாமல் இருப்பதும் என் பொறுப்பு
2.	எனக்குப் படம் வரைவது பிடிக்கும்	பள்ளி, வீடு, பொதுச்சுவர்களில் வரையாமல், எழுதாமல் இருப்பதும், பிறரையும் எழுத, வரைய விடாமல் தடுப்பதும் என் பொறுப்பு
3.	நகைச்சுவை எனக்கு மிகவும் பிடிக்கும்	நகைச்சுவைக்காகப் பிறரை புண்படுத்தாது, இகழாது இருப்பது என் பொறுப்பு

இவ்வாறு, நமக்குப் பிடித்தமான செயல்களைச் செய்கின்ற பொழுது, எந்நிலையிலும் பிறரைப் பாதிக்கும் வகையில் நடந்து கொள்ளாது இருப்பது நம் பொறுப்பாகும்.

கலைச்சொல் அறிவோம்

சமூக சீர்திருத்தவாதி : (Social reformer)

தன் கொள்கைகளாலும், செயல்களாலும் சமூக நிலையை மாற்ற முயற்சிப்பவர்.

தன்னார்வலர் (volunteer)

தானாகவே முன் வந்து சக மனிதர்க்கும், சமூகத்துக்கும் நற்செயல் செய்பவர்.

களர் நிலம் (Saline soil)

நற்பயிர்கள் வளர இயலாத பண்படாத உவர் நிலம்

சொற்றொடர் (Sentence)

ஒன்றுக்கும் மேற்பட்ட சொற்கள் அமைந்து பொருள் தரும் வகையில் அமைவது

⁂⁂⁂⁂⁂⁂

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

உரைநடை உலகம்

இயல் ஆறு

சிற்பக்கலை

பாடநூல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. பல்லவர் காலச் சிற்பங்களுக்குச் சிறந்த சான்று .....

அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார் பட்டி
இ) திரிபுவனவீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு

விடை : அ) மாமல்லபுரம்

2. திருநாதர்குன்றில் ஒரு பாறையில் புடைப்புச் சிற்பங்களாக உள்ளவை .....

அ) விலங்கு உருவங்கள் ஆ) தீர்த்தங்கரர் உருவங்கள்
இ) தெய்வ உருவங்கள் ஈ) நாட்டியம் ஆடும் பாவை உருவங்கள்

விடை : ஆ) தீர்த்தங்கரர் உருவங்கள்

குறுவினா

1. செப்புத் திருமேனிகள் பற்றிக் குறிப்பு வரைக.

- செப்புத் திருமேனிகள் சோழர் கால சிற்பக்கலை நுட்பத்திற்குச் சிறந்த சான்றாகும்.
- சோழர் காலத்தில்தான் மிகுதியான செப்புத்திருமேனிகள் உருவமைக்கப்பட்டன.
- கடவுளின் உருவங்களும், மனித உருவங்களும் மிகுந்த கலை நுட்பத்தோடு வடிவமைக்கப் பட்டன.
- சோழர் காலம் "செப்புத் திருமேனிகளின் பொற்காலம்" என்று அழைக்கப்படும் அளவிற்கு அவை அழகுற அமைந்துள்ளன.

2. நடுகல் என்றால் என்ன?

- நடுகல் பற்றியக் குறிப்பு தொல்காப்பியத்தில் காணப்படுகிறது.
- போரில் விழுப்புண்பட்டு இறந்த வீரருக்கு நடுகல் நடப்படும்.
- அக்கல்லில் அவ்வீரரின் உருவம் பொறிக்கப் பெறும். அவரது வீரத்தின் சிறப்பும் கூறப்பெறும்.
- தமிழரின் தொடக்ககாலச் சிற்பக் கலைக்குச் சான்றாக இதனைக் குறிப்பிடுவர்.

3. இசைத்தூண்கள் யார் காலத்தில் அமைக்கப்பட்டவை?

பல்வேறு ஓசைகளை எழுப்பும் இசைக் கற்றூண்கள் விஜய நகர மன்னர்கள் காலத்தில் அமைக்கப்பட்டன.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

சிறுவினா

1. முழு உருவச் சிற்பங்கள் - புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?

முழு உருவச் சிற்பம்:

உருவத்தின் முன் பகுதியும், பின் பகுதியும் தெளிவாகத் தெரியும் வகையில் முழு உருவத்துடன் அமைந்து இருக்கும்.

புடைப்புச் சிற்பம்:

புடைப்புச் சிற்பத்தில் முன்பகுதி மட்டுமே தெரியும் படி அமைந்து இருக்கும்.

2. நாயக்கர் காலச் சிற்பங்களின் நுட்பங்கள் யாவை?

- நாயக்கர் காலச் சிற்பங்களில் ஆடை ஆபரணங்கள் கலை நயத்துடன் காணப்படும்.
- நாயக்கர் காலச் சிற்பங்களை, கலை நுட்பத்தின் உச்சநிலை படைப்பு என்று கூறலாம்.
- விழியோட்டம், புருவ நெளிவு, நக அமைப்பு என மிக மிக நுட்பமாகக் கலை நயத்துடன் அவை படைக்கப்பட்டுள்ளன.

நெடுவினா

1. தமிழ்நாட்டு சிற்பங்கள் கலைநயம் மிக்கனவாகவும், வரலாற்றுப் பதிவுகளாகவும் இருப்பதை நிறுவுக.

முன்னுரை:

கல்லிலும், உலோகத்திலும் கருவிகள் செய்த மனிதன்; சிற்பம் என்னும் நுண்கலையை வடிக்கத் தொடங்கினான். உணர்வுகளையும், நிகழ்வுகளையும் வெளிப்படுத்தும் சிற்பங்கள் வரலாற்றின் வாயில்களாகவும், கலைநயம் மிக்கனவாகவும் காணப்படுகின்றன.

சிற்பங்களின் கலை நயம்:

"கற்கவிஞர்கள்" என்று சிறப்பிக்கப்படும் சிற்பிகள் வடித்த சிற்பங்கள் ஒவ்வொன்றும் கலைநயம் மிக்கவையாய் மிளிர்கின்றன.

சிற்பங்களை கோவில்களின் கட்டடங்கள், கற்றூண்கள், சுற்றுச்சுவர்கள் நுழைவு வாயில்கள் என அனைத்து இடங்களிலும் கலைநயம் மிளிர செதுக்கினர்.

புதுக்கோட்டை மாவட்டம் நார்த்தாமலையில் உள்ள சிற்பம் நடனக்கலையின் முத்திரைகளுடன் அமைக்கப்பட்டிருக்கும் பாங்கு கலை நயத்துக்கோர் சான்றாகும். கடவுளின் உருவங்களும், மனித உருவங்களும் மிகுந்த கலை நுட்பத்தோடு வடிவமைக்கப்பட்டுள்ளன. திருவரங்கக் கோவிலினுள் அமைக்கப்பட்டுள்ள சிற்பங்களில் வெளிப்படும் முக பாவனைகள் சிற்பக்கலை நுட்பத்திற்கு தனி சான்றாய்த் திகழ்கிறது.

கோவில் கோபுரங்களில் சுதைகளாலான சிற்பங்கள் மிகுதியாக உள்ளன. அவற்றுள் ஆடை, அணிகலன்கள் அணிந்த நிலையில் உள்ள உருவங்கள் சிற்பங்களாயின. அவையும் சிற்பக் கலைநுட்பம் வாய்ந்தவை. உருவங்கள் விழியோட்டம், புருவ நெளிவு. நகஅமைப்பு என மிக மிக நுட்பமாக கலை நயத்துடன் படைக்கப்பட்டுள்ளன.

கிருஷ்ணாபுரம் வேங்கடாசலபதி கோவிலில் உள்ள குறவன், குறத்தி, இரதிதேவி சிலைகள் காண்போரை ஈர்க்கும் கலைநயம் வாய்ந்தவை.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

சிற்பங்கள் வரலாற்றுப் பதிவுகள்:

சிற்பக் கலையைப் பற்றிக் கூற முற்படுகின்ற பொழுது,

- பல்லவர் காலச் சிற்பங்கள்
- பாண்டியர் காலச் சிற்பங்கள்
- சோழர் காலச் சிற்பங்கள்
- விஜய நகர மன்னர் காலச் சிற்பங்கள்
- நாயக்கர் காலச் சிற்பங்கள்

என்றே வகைப்படுத்துகிறோம். எனவே சிற்பக்கலை வரலாற்றுப் பதிவாகவும் திகழ்கிறது என்பதை மறுக்க இயலாது.

மாமல்லபுரம், காஞ்சிபுரம், திருச்சி மலைக்கோட்டை போன்ற இடங்களில் உள்ள சிற்பங்கள் மூலம் பல்லவர் கால வரலாற்றை உணரலாம்.

திருமயம், பிள்ளையார்பட்டி, குன்றக்குடி, திருப்பரங்குன்றம், கழுகுமலை வெட்டுவான் கோவில் சிற்பங்கள் பாண்டியர் காலச் சிற்பக்கலைக்குச் சான்றுகளாகும்.

கங்கை கொண்ட சோழபுரம், தாராசுரம், திரிபுவனம், தஞ்சை பெருவுடையார் கோவில்களில் உள்ள சிற்பங்கள் மூலம், இராசஇராசசோழன், குலோத்துங்க சோழன், இராசேந்திர சோழன், இரண்டாம் இராசராசன் போன்ற மன்னர்களின் வரலாறுகளையும், அவர்கள் கலை வளர்த்தப் பாங்கினையும் அறியலாம்.

விஜயநகர மன்னர்கள் கோவில்களில் மிக உயர்ந்த கோபுரங்கள் அமைக்கும் பணியைச் செவ்வனே செய்தது, அவற்றில் சுதைகளாலான சிற்பங்களை அமைக்கச் செய்தனர்.

சோழர் காலத்தை செப்புத் திருமேனிகளின் பொற்காலம் என்று சிறப்பிக்கின்றனர்.

நாயக்க மன்னர்களின் காலத்தில் ஆயிரங்கால் மண்டபம் அமைக்கப்பட்ட வரலாற்றை அறிவிக்கிறது இக்கலை.

மதுரை மீனாட்சியம்மன் கோயில் தூண்களில் உள்ள சிற்பங்கள் கண்ணப்பர், சந்திரமதி, அரிச்சந்திரன் வரலாற்றை எடுத்துக் கூறுகிறது.

முடிவுரை:

சிற்பங்கள் என்பன தெய்வங்களாகப் போற்றி வணங்குவதற்கும், ஏனைய உருவங்களைக் கண்டு களிப்பதற்கும் மட்டுமல்ல, அவை கலைநயத்தின் சான்றாகவும், வரலாற்றுப் பதிவுகளாகவும், அறிவின் முதிர்ச்சிக்கு ஓர் அடையாளமாகவும் இருப்பதால் சிற்பக்கலையைப் போற்றி பேணுவது நம் கடமையாகும்.

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. விழுப்புண்பட்டு இறந்த வீரருக்கு நடப்படுவது எது .....

அ) மைல்கல் ஆ) சுடுகல் இ) நடுகல் ஈ) கருங்கல்

விடை : இ) நடுகல்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

2. சிற்பிகள் ..... என சிறப்பிக்கப்பட்டனர்.

அ) கல்லோவியர்கள் ஆ) கற்கவிஞர்கள்
இ) கற்சொல்லோவியர்கள் ஈ) சுவரோவியர்கள் **விடை : ஆ) கற்கவிஞர்கள்**

3. கழுகுமலை கோவில் சிற்பங்கள் ..... காலத்தவையாகும்.

அ) நாயக்கர் ஆ) பல்லவர் இ) பாண்டியர் ஈ) சோழர்
விடை : இ) பாண்டியர்

4. தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் வெளியிட்ட நூல் .....

அ) சிற்பக்கலை ஆ) தமிழக சிற்பங்கள்
இ) சிற்பமும் சிந்தனையும் ஈ) சிற்பச்செந்நூல் **விடை : ஈ) சிற்பச்செந்நூல்**

5. உலோகப்படிமங்கள் செய்யும் பயிற்சி நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள்

அ) சுவாமிமலை ஆ) கும்பகோணம் இ) மதுரை

i) அ-சரி, ஆ, இ - தவறு ii) முதல் இரண்டு சரி
iii) மூன்றும் சரி iv) மூன்றும் தவறு **விடை : iii) மூன்றும் சரி**

6. தமிழகச் சிற்பக்கலையில் இடம் பெறும் கலைக் கூறுகள்

அ) யோகக்கலை ஆ) நாட்டியக்கலை இ) இசைக்கலை ஈ) பேச்சுக்கலை

i) அ, ஆ-சரி ii) அ,ஆ - தவறு
iii) நான்கும் சரி iv) நான்கும் தவறு **விடை : யோகக்கலை, நாட்டியக்கலை**

7. கொடும்பாளூர் மூவர் கோவில் கட்டிய மன்னன்

அ) முதலாம் பராந்தகச் சோழன் ஆ) இரண்டாம் பராந்தகச் சோழன்
இ) முதலாம் குலோத்துங்கச் சோழன் ஈ) இரண்டாம் குலோத்துங்கச் சோழன்
விடை : ஆ) இரண்டாம் பராந்தகச் சோழன்.

8. நடுகல் பற்றிக் குறிப்பிடும் இலக்கணநூல்

அ) தொல்காப்பியம் ஆ) நன்னூல்
இ) புறப்பொருள் வெண்பாமாலை ஈ) இலக்கண விளக்கம் **விடை : அ) தொல்காப்பியம்**

9. மாளிகைகளில் சுதைச் சிற்பங்கள் இருந்ததைக் குறிப்பிடும் காப்பியம் எது?

அ) சீவகசிந்தாமணி ஆ) மணிமேகலை
இ) நளவெண்பா ஈ) சிலப்பதிகாரம் **விடை : ஆ) மணிமேகலை**

10. நாயக்கர்கால சிற்பக்கலை நுட்பத்துக்குச் சான்றாகும் கோவில் எது?

அ) மூதூர் பெருமாள் கோவில் ஆ) பேரூர் சிவன் கோவில்
இ) காஞ்சி கயிலாயநாதர் கோவில் ஈ) சீனிவாசநல்லூர் இரங்கநாதர் கோவில்
விடை : ஆ) பேரூர் சிவன்கோவில்

11. திருவரங்கக்கோவில் யாருடைய காலத்துக் கட்டடக் கலைக்குச் சான்றாகிறது.

அ) பாண்டியர் ஆ) சோழர் இ) பல்லவர் ஈ) சேரர்
விடை : ஆ) சோழர்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

குறுவினா

1. சிற்பங்களை உருவாக்க எவற்றையெல்லாம் பயன்படுத்தலாம் என திவாகர நிகண்டு குறிப்பிடுகிறது.

கல், உலோகம், செங்கல், மரம், மண், சுதை (சுண்ணாம்பு) தந்தம், கண்ட சருகக்கரை, மெழுகு போன்றவற்றைப் பயன்படுத்தலாம் என்று திவாகர நிகண்டு குறிப்பிடுகிறது.

2. சிற்பங்கள் அமைக்கப்படும் நான்கு நிலைகள் யாவை?

- தெய்வ உருவங்கள்
- இயற்கை உருவங்கள்
- கற்பனை உருவங்கள்
- முழுவடிவ (பிரதிமை) உருவங்கள் என நான்கு நிலைகளில் கல்லினாலும், உலோகத்தினாலும் சிற்பங்கள் அமைக்கப்படுகின்றன.

3. பாண்டியர் கால சிற்பவேலைப்பாடுகளுக்கு சான்றாகும் இடங்கள் யாவை?

பாண்டியர் காலத்தில் குகைக் கோயில்களில் சிற்பவேலைப்பாடுகள் நிறைந்திருந்தன. அவற்றுக்கு சான்றாக. திருமயம், பிள்ளையார்பட்டி, குன்றக்குடி, திருப்பரங்குன்றம் முதலிய இடங்களைக் கூறலாம்.

4. சிற்பங்களை அவற்றின் உருவ அமைப்பு அடிப்படையில் எத்தனை வகையாகப் பிரிக்கலாம்? அவை யாவை?

- இரண்டு வகையாகப் பிரிக்கலாம்
- முழு உருவச் சிற்பங்கள், புடைப்புச் சிற்பங்கள் என்பனவாகும்.

5. புடைப்புச் சிற்பங்களை எங்கு காணலாம்?

அரண்மனைகள், கோவில்கள்.

6. கற்கவிஞர்கள் - குறிப்பு வரைக.

சிற்ப இலக்கண மரபைப் பின்பற்றிக் கலை நயத்துடனும் மிகுந்த தேர்ச்சியுடனும் சிற்பிகள் சிற்பங்களை வடிவமைக்கின்றனர். அதனால், அவர்களைக் "கற்கவிஞர்கள்" என்று சிறப்பிக்கின்றனர்.

7. சோழர் காலச் சிற்பங்களின் கருவூலங்களாகத் திகழ்பவை யாவை?

- முதலாம் இராசராசன் கட்டிய தஞ்சைப் பெரியகோவில்
- முதலாம் இராசேந்திர சோழன் எழுப்பிய கங்கை கொண்ட சோழபுரம்
- இரண்டாம் இராசராசன் எழுப்பிய தாராசுரம் ஐராவதீசுவரர் கோவில்
- இரண்டாம் குலோத்துங்கச் சோழன் அமைத்த திரிபுவன வீரேசுவரம் கோவில்

8. சோழர் காலச் சிற்பத்திறனுக்குச் சான்றுகளாக விளங்குபவை?

தஞ்சைப் பெரியகோவிலில் காணப்படுகின்ற பதினான்கு அடி உயரமுள்ள வாயிற்காவலர் உருவங்களும் மிகப்பெரிய நந்தியும் வியப்பூட்டும் வேலைப்பாடுகள் கொண்ட தூண்களும் சோழர்காலச் சிற்பத்திறனுக்குச் சான்றுகளாக விளங்குகின்றன.

9. நாயக்கர் காலச் சிற்பங்கள் காணப்படும் இடங்களுக்குச் சான்று தருக.

- மதுரை மீனாட்சி அம்மன் கோவில்
- இராமேசுவரம் பெருங்கோவில்
- திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

10. நாயக்கர் காலச் சிற்பக் கலை நுட்பத்தின் உச்சநிலைப் படைப்பு என்று குறிப்பிடப்படுவது எது?

கோயம்புத்தூருக்கு அண்மையிலுள்ள பேரூர் சிவன் கோவிலில் உள்ள சிற்பங்கள்

சிறுவினா

1. பௌத்த - சமண சிற்பங்கள் - குறிப்பு வரைக.

- பௌத்த சமயத்தினர் புத்தரின் உருவத்தை அமர்ந்த, நின்ற, படுத்த நிலைகளில் சிற்பங்களாக படைத்து வழிபட்டனர்.
- சமண மதத்தினர் அருகக் கடவுளின் உருவத்தையும், இருபத்து நான்கு தீர்த்தங்கரர் உருவங்களையும் சிற்பங்களாக்கியுள்ளனர். இருபத்து நான்கு தீர்த்தங்கரர் உருவங்களும் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன.

2. இன்றைய சிற்பக்கலை குறித்து எழுதுக?

- இன்று சுதை சிற்பங்களும், கல்சிற்பங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.
- செங்கல், பைஞ்சுதை (சிமெண்ட்) ஆகியவற்றைக் கொண்டும் கலைநயமிக்க சிற்பங்களை வடிக்கின்றனர்.
- வெண்கலம் மற்றும் செயற்கை இழைகள் மூலமாகவும் உருவங்கள் உருவாக்கப் படுகின்றன.
- இன்றைய சிற்பக்கலை கோவில்களைக் கடந்து, பலதுறைகளில் தன் இடத்தை நிறைவு செய்கிறது.

3. மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பங்கள் பற்றி எழுதுக.

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் ஆயிரங்கால் மண்டபத் தூண்களில் கண்ணப்பர், குறவன் குறத்தி போன்ற சிற்பங்கள் உள்ளன. அரிச்சந்திரன், சந்திரமதி சிற்பங்களில் ஆடை, ஆபரணங்கள் கலைநயத்துடன் காணப்படுகின்றன. இறந்த மைந்தனைக் கையில் ஏந்தியபடி நிற்கும் சந்திரமதி சிலையும் அமைந்துள்ளது.

4. சிற்பக்கலை வளர்ச்சியில் தமிழக அரசின் பங்கினை எடுத்தியம்புக.

- தமிழக அரசு, சிற்பக் கலைஞர்களைப் பரிசளித்துப் பாராட்டிச் சிற்பக்கலையை வளர்த்து வருகிறது. மாமல்லபுரத்தில் தமிழ்நாடு அரசு சிற்பக்கல்லூரியை நடத்தி வருகிறது. அக்கல்லூரியில் இருந்து ஆண்டுதோறும் சிற்பக் கலைஞர்கள் பலர் உருவாகின்றனர்.
- சுவாமிமலை, கும்பகோணம், மதுரை ஆகிய இடங்களில் உலோகப் படிமங்கள் செய்யும் பயிற்சி நிலையங்கள் அமைந்துள்ளன. சென்னையிலும் கும்பகோணத்திலும் உள்ள அரசு கவின்கலைக் கல்லூரிகளில் சிற்பக்கலையைப் பயிலலாம்.
- இக்கலைத்துறையில் மிகுதியான வேலைவாய்ப்புகள் உள்ளன. சிற்பக்கலை குறித்த செய்திகளை அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் தமிழ்நாடு தொழில்நுட்பக்கல்வி இயக்ககம் "சிற்பச்செந்நூல்" என்ற நூலை வெளியிட்டுள்ளது.

கற்பவை கற்றபின்

பக்கம்: 156

1. உங்கள் பகுதியில் உள்ள பழமையான சிற்பம் ஒன்றைப் பற்றிய செய்திக்குறிப்பை உருவாக்குக.

திருநெல்வேலியில் இருந்து 12 கி.மீ தொலைவில், திருச்செந்தூர் சாலையில் 16 ம் நூற்றாண்டில் நாயக்க மன்னர்களால் கட்டப்பட்ட கிருஷ்ணாபுரம் வெங்கடாசலபதி கோயில் அமைந்துள்ளது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

இக்கோயிலின் தனிச்சிறப்பு அங்குள்ள சிற்பங்களே. இரு மண்டபங்களிலும் ஆறு அடிக்கு குறையாமல், 30க்கும் மேற்பட்ட சிற்பங்கள் உள்ளன. இந்தச் சிற்பங்கள் அனைத்தும் ஒரே கல்லில் உருவாக்கப்பட்ட பிரமாண்டமான தூண்களில்தான் உள்ளன.

இங்குள்ள பீமன், வியாக்ரபாலகன் சிற்பம் பற்றிய ஒரு செய்தி உண்டு.

பீமனும், வியாக்ரபாலகனும் சண்டையிடுகின்றனர். தர்மராஜா நடுநிலை வகிப்பதாகவும், நடுவராக இருந்த தர்மராஜா வியாக்ரபாலகன் வென்றதாகவும் தீர்ப்பளித்தாராம்.

இந்தச் செய்தியைக் குறிக்கும் வகையில், அதிசயச் சிற்பத் தொகுப்பாக அமைந்துள்ளது. பீமனும், வியாக்ரபாலகனும், தர்மராஜாவும் இருக்கும் சிற்பம் உள்ளது.

இச்சிற்பத்தில், பீமன் வீரமும், திமிரும் வெளிப்படுத்தும் முகபாவத்துடனும், வியாக்ரபாலகன் பராக்கிரமத்துடனும், தர்மராஜா அமைதியான முகபாவத்துடனும் இருப்பதாக சிற்பம் உருவாக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலில் உள்ள சிற்பங்கள் அனைத்தும் தலைசிறந்த கலைப்படைப்புகளாகவும், உணர்ச்சி ததும்பும் உயிரோவியங்களாகவும் காட்சியளிக்கின்றன.

இக்கோயிலின், இராஜகோபுரமும் கருங்கல்லிலான திருச்சுற்று மதில்களும், 16-ஆம் நூற்றாண்டின் கட்டிடக்கலைப் பணிக்குச் சான்றாக உள்ளது.

2. ஓவியர்/சிற்பி/இசைக் கலைஞர் ஒருவரைச் சந்தித்து அவர் கூறும் கலை நுட்பங்களையும், அனுபவங்களையும் தொகுத்து வகுப்பறையில் படித்துக் காட்டுக.

சிற்பியின் கலை நுட்பங்களும், அனுபவங்களும்

எங்கள் ஊருக்கு அருகில் உள்ள சிற்பி ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவரிடம் சிற்பங்களை [செதுக்குதல், வடித்தல், உருவாக்கல்] ஒவ்வொரு பொருளைக் கொண்டு செய்யும் போது மேற்கூறிய மூன்று பெயர்களாலும் அழைக்கப்படுமாம். உருவாக்கும் நுட்பங்களைக் கூறமுடியுமா என்று வினவிய போது, பல வியப்புக்குரிய செய்திகளைக் கூறினார். இதோ அவர் கூறிய கருத்துகள்.

சிற்பம் என்பது ஒரு முப்பரிமாணக் கலைப்பொருள் ஆகும். இது கடினமான அல்லது நெகிழ்வுத்தன்மைகொண்டபொருள்களில்இருந்துஉருவம்கொடுப்பதுமூலம்உருவாக்கப்படுகிறது.

கற்கள், உலோகம் (செம்பு) மரம், மண், தந்தம் போன்ற பொருட்கள் சிற்பங்கள் உருவாக்கப் பயன்படுபவையாம்.

கல், மரம் போன்றவற்றில் சிற்பம் உருவாக்கும் போது, சிற்பமாக உருவாக்க வேண்டியவற்றைச் செதுக்குவார்களாம்.

உலோகம் போன்ற பொருள்களைக் கொண்டு செய்யும் போது உருக்கி வார்ப்பார்களாம்,

ஒட்டுதல்

அச்சுகளில் அழுத்துதல் போன்ற உத்திகளையும் தொழில் நுட்பங்களையும் பயன்படுத்துவோம் என்றார். மண்ணால் செய்யும் போது உருவத்தைச் செய்தபின் சூளையில் சுடுவதாகக் குறிப்பிட்டார்.

சிற்பங்கள் மனித நாகரிகத்தையும், அதன் வளர்ச்சிக் கூறுகளையும் வெளிப்படுத்தும் சான்றுகள் என்று பெருமிதப்பட்டார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

மேலும், கல், உலோகம், செங்கல், மரம், சுதை (சுண்ணாம்பு) மெழுகு, தந்தம் வண்ணம். கண்ட சருக்கரையும் சிற்பம் வடிக்க ஏற்றவையாம்.

ஒரு உருவத்தின் முன்புறம், பின்புறம் இரண்டையும் காட்டும் சிற்பங்களை முழு வடிவச் சிற்பங்கள் என்றும். ஒரு புறத்தை மட்டும் காட்டும் சிற்பங்களைப் புடைப்புச் சிற்பம் என்றும் கூறுவார்கள் என்று தெளிவுபடுத்தினார். சிற்பங்கள் சமய வெளிப்பாடாகவும் அரசாட்சி பற்றிய வெளிப்பாடாகவுமே இருந்தன என்றார்.

முன்பெல்லாம் சிற்பங்களை உருவாக்கிய மேதைகள் சிற்பக்கலை மூலம் உருவங்களுக்கு உயிரூட்டினர். இன்றோ பண்டைய மரபு முறைகள் முற்றிலும் மாறுபட்டு வருவதோடு உடலமைப்பை வெளிப்படுத்துவதாக மாறி விட்டதே என்று வருந்தினார்.

நானும் விடை பெற்றுக்கொண்டு வந்தேன்.

※※⁂⁂⁂※※

கவிதைப் பேழை

இயல் ஆறு

இராவண காவியம்

தமிழ் இலக்கியத்திரையில் மிகுதியான எழிலோவியங்களைச் சொல்லோவியங்களாகப் புலவர்கள் தீட்டி வைத்துள்ளனர். அவற்றுள் சில சொல்லோவியங்கள் இராவண காவியத்திலும் இடம் பெற்றுள்ளன. அதனைப் படித்துச் சுவைப்போம்.

நூல்வெளி

இராமாயணத்தில் எதிர்நிலை மாந்தராகப் படைக்கப்பட்ட இராவணனை முதன்மை நாயகனாகக் கொண்டு அமைக்கப்பட்டது இராவணகாவியம். இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய தனித்தமிழ்ப் பெருங்காப்பியம் இராவண காவியம். இந்நூல் 1946 -ஆம் ஆண்டு இயற்றி வெளியிடப்பட்டது.

இந்நூல், தமிழகக் காண்டம், இலங்கைக் காண்டம், விந்தக்காண்டம், பழிபுரி காண்டம், போர்க்காண்டம் என்னும் ஐந்து காண்டங்களை உடையது. இந்நூலில் 57 படலங்கள் உள்ளன. 3100 பாடல்கள் உள்ளன.

இந்நூல் தமிழ்த் தேசிய உணர்வுக் காப்பியம் என்றும் அழைக்கப்பட்டது.

இந்நூலில், தமிழ் உயர்வும், தமிழர் உயர்வும் காட்டப்படுகிறது.

ஆசிரியர் குறிப்பு:

- இராவண காவியம் இயற்றியவர் புலவர் குழந்தை ஆவார். ஜூலை 1-ஆம் நாள் 1906 ஆம் ஆண்டு ஈரோடு அருகே "ஓலவலசு" என்னும் சிற்றூரில் பிறந்தார்.
- பெற்றோர்: முத்துசாமிக் கவுண்டர், சின்னம்மை.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

- தந்தை பெரியார் மீது மரியாதையும் பற்றும் கொண்டவர். பெரியாரின் வேண்டுகோளுக்கு இணங்க 25 நாளில் திருக்குறளுக்கு உரை எழுதினார்.
- யாப்பதிகாரம், தொடையதிகாரம் - உள்ளிட்ட முப்பதுக்கும் மேற்பட்ட இலக்கண, இலக்கிய நூல்களைப் படைத்துள்ளார்.
- குழந்தை அவர்கள் "வேளாண்" என்ற மாத இதழை நடத்தினார். இவர் செப்டம்பர் 22 ம் நாள் 1972ல் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

பாடப்பகுதி பகுதி :

தமிழகக் காண்டத்திலுள்ள ஐவகை நிலங்களின் காட்சிகளைக் கூறும் பத்துப் பாடல்கள் நம் பாடப் பகுதியாக இடம் பெற்றுள்ளன.

குறிஞ்சி

மலையும் மலைசார்ந்த பகுதியும்

அருவிய முருகிய ஆர்ப்பப் பைங்கிளி
பருகிய தமிழிசை பாடப் பொன்மயில்
அருகிய சிறைவிரித் தாடப் பூஞ்சினை
மருவிய குரக்கினம் மருண்டு நோக்குமால்

அடுப்பிடு சாந்தமோடு அகிலின் நாற்றமும்
துடுப்பிடு மைவனச் சோற்றின் நாற்றமும்
மடுப்படு காந்தளின் மணமுந் தோய்தலாற்
கடைப்படு பொருளெலாம் கமழும் குன்றமே

விளக்கம் :

மலையில் இருந்து ஆர்ப்பரித்து விழும் அருவியானது குறிஞ்சிப்பறை முழங்குவது போல் ஒலிக்கும். பைங்கிளிகள் தான் அறிந்த தமிழிசையைப் பாடும். பொன் போன்ற அழகிய மயில்கள் தன் அகன்ற சிறகினை விரித்து ஆடும். இக்காட்சியினால் பூக்கள் நிறைந்த மரக்கிளைகளில் அமர்ந்திருக்கும் குரங்கினங்கள், மிரட்சியுடன் பார்க்கும்.

உணவைச் சமைப்பதற்காக அடுப்பில் இடும் சந்தன மரக் குச்சிகளின் நறுமணமும், அகிலின் நறுமணமும், கொதிக்கின்ற உலையில் இட்ட மலை நெல் அரிசிச் சோற்றின் மணமும் வெளிப்படும். இவற்றுடன் எங்கும் மலர்ந்து கிடக்கும் காந்தள் மலரின் மணமும், பரவித் தோய்ந்து கிடந்ததனால் குறிஞ்சி நிலப்பகுதி முழுவதும் உள்ள பொருட்கள் மணம் கமழ்ந்து காணப்பட்டன.

சொல்லும் - பொருளும் :

முருகியம்	–	குறிஞ்சிப் பறை	துடுப்பிடு	–	உலையில் இட்ட
அருகிய	–	அருமையான	மைவனம்	–	மலை நெல்
சிறை	–	சிறகினை	சாந்தம்	–	சந்தனம்
பூஞ்சினை	–	பூக்களை உடைய கிளை	கமழும்	–	மணம் வீசும்
மடுப்படு	–	வெளிப்படும்			

முல்லை நிலம்

காடும், காடு சார்ந்ததும்

பூவையும் குயில்களும் பொலங்கை வண்டரும்
பாஇசை பாடமுப் பழமும் தேனும் தந்
தேஇசை பெறும் கடறு இடையர் முக்குழல்
ஆவினம் ஒருங்குற அருகுஅ ணைக்குமால்

முதிரையும் சாமையும் வரகும் பொய்மணிக்
குதிரைவா லியும்களம் குவித்துக் குன்று எனப்
பொதுவர்கள் பொலிஉறப் போர்அ டித்திடும்
அதிர்குரல் கேட்டுஉழை அஞ்சி ஓடுமே!

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

விளக்கம்:

நாகணவாய்ப் பறவைகளும், குயில்களும், அழகு மிகப் பொருந்திய வண்டுகளும், பாஇசைத்துப் பாடின. புகழ்பெற்ற முல்லை நில மக்களான ஆயர்கள், மா, பலா, வாழை என்னும் முக்கனிகளையும், தேனையும் சேகரித்துக் கொண்டு, முக்குழல் இசையால் (கொன்றை, ஆம்பல், மூங்கில் ஆகிய மூன்றினாலும் ஆன குழல்கள்) மேயும், பசுக்கூட்டங்களை ஒன்று சேர்த்தனர்.

குதிரை, சாமை, கேழ்வரகு, மணி போன்ற குதிரைவாலி நெல் ஆகிய தானியங்களை முல்லை நில மக்கள் அறுத்துக் கதிரடித்து களத்தில் குன்று போல் குவித்து வைத்திருப்பர். அவர்கள் கதிரடிக்கும் ஓசை அதிர்வு தரும். அவ்வதிர்வின் ஓசை கேட்டு(உழை - பெண்மான்) மான்கள் அஞ்சி ஓடும் தன்மை வாய்ந்தது முல்லை நிலம்.

சொல்லும் - பொருளும் :

பூவை	–	நாகணவாய்ப் பறவை	முக்குழல்	–	கொன்றை, ஆம்பல் மூங்கில் ஆகியவற்றால் ஆன குழல்
பொலம்	–	அழகு			
பொலங்கை	–	அழகு பொருந்திய	பொதுவர்கள்	–	முல்லை நில மக்கள்
இசை பெறும்	–	புகழ் பெற்ற	பொலி	–	தானியக் குவியல்
கடறு	–	காடு	உழை	–	ஒரு வகை மான் (பெண் மான்)

பாலை நிலம்

(சுரமும், சுரம் சார்ந்த இடமும்)

மன்னிய முதுவெயில் வளைப்ப வாய்வெரீஇ
இன்னிளம் குருளைமிக்கு இனைந்து வெம்பிடத்
தன்னிழல் தங்கவே தாய்மை மீதுற
நன்னரில் வலிய செந் நாய்உய ங்குமே

கடிக்கமழ் மராமலர்க் கண்ணி அம்சிறார்
படிக்குற எருத்துக்கோடு அன்ன பாலைக்காய்
வெடிக்கவிட்டு ஆடிட விரும்பிக் கோலினால்
அடிக்கும் ஓசையின்பருந்து அஞ்சி ஓடுமே

விளக்கம்:

பாலை நிலம் கொடிய வெம்மையை உடையது. கொடிய வெயிலின் வெப்பத்தைத் தாங்க இயலாத செந்நாய்க்குட்டியின் வாய் மிகவும் உலர்ந்து குழறியது. இதனைக் கண்ட தாய் செந்நாய் மிகவும் வருந்தியது. குட்டி இளைப்பாறி ஓய்வெடுக்க எங்கும் நிழல் இல்லை. எனவே கடும் வெயிலின் வெம்மையைத் தான் ஏற்று துன்புற்று நின்று தனது நிழலில் குட்டியை இளைப்பாறச் செய்தது.

சிறுவர்கள் நன்கு மணம் வீசும், மராமலர்களை மாலையாக அணிந்திருந்தனர். எருதின் கொம்புகளைப் போன்ற பாலைக் காய்கள், மரத்தில் இருந்து நிலத்தில் வீழ்ந்து வெடிக்குமாறு, அவர்கள் கோலினால் அடித்து விளையாடினர். அவ்வோசையைக் கேட்ட பருந்துகள் அச்சத்துடன் பறந்து ஓடின.

சொல்லும் பொருளும்:

மன்னிய	–	கொடிய	கடிகமழ்	–	சிறந்த மணம் வீசும்
முதுவெயில்	–	வெப்பம் தரும் வெயில்	மராமலர் கண்ணி	–	மராமலர் மாலை
வாய்வெரீஇ	–	சோர்வால் வாய் குழறுதல்	எருத்து	–	எருது

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

குருளை – குட்டி
இனைந்து – துன்புறுதல்
உயங்குமே – வருந்துமே
கோடு – கொம்பு
படிக்குஉற – நிலத்தில் விழ

மருதம்

வயலும் வயல் சார்ந்த பகுதியும்

கல்லிடைப் பிறந்த ஆறும்
கரைபொரு குளனும் தோயும்
முல்லைஅம் புறவில் தோன்று
முருகுகான் யாறு பாயும்

நெல்லினைக் கரும்பு காக்கும்
நீரினைக் கால்வாய் தேக்கும்
மல்லல்அம் செறுவில் காஞ்சி
வஞ்சியும் மருதம் பூக்கும்

மரைமலர்க் குளத்தில் ஆடும்
மயிர்த்தலைச் சிறுவர் நீண்ட
பொருகரிக் குருத்து அளந்து
பொம்மெனக் களிப்பர் ஓர்பால்

குரைகழல் சிறுவர் போரில்
குலுங்கியே தெங்கின் காயைப்
புரைதபப் பறித்துக் காஞ்சிப்
புனைநிழல்அருந்து வாரே

விளக்கம்:

மலையிடைத் தோன்றும் ஆறும் கரையை மோதித் ததும்பி நிற்கும் குளத்து நீரும், முல்லை நிலத்துக் காட்டாறும் மருத நிலத்திலே பாய்ந்தோடும். அங்கு நெற்பயிரினைக் காத்து நிற்பது போல் கரும்பு வளர்ந்து நிற்கும் வயல்கள் காணப்பட்டன. பெருகி வரும் நீரினைக் கால்வாய் வழி வயலில் தேக்கி வளம் பெருக்கும். இத்தகு வளம் மிகுந்த மருத நில வயலில் காஞ்சி, வஞ்சி மலர்கள் பூத்து நிற்கும் அழகுடையது மருதம்.

தாமரை மலர்கள் பூத்திருந்த குளத்தில் சிறுவர்கள் நீராடினர். அக்குளத்திலே யானைகளும் நீந்தின. நீராடியதால் கலைந்த தலை மயிரினை உடைய சிறுவர்கள் யானையின் தந்தங்களை அளந்து பார்த்து அதன் வடிவழகு கண்டு மகிழ்ந்தனர். சிறு கழல் அணிந்த சிறுவர்கள் வைக்கோற்போர்கள் குலுங்கும்படி அவற்றின் மீது ஏறி நின்று, தென்னை மரத்திலே இளநீர்க் காய்களைப் பறித்தனர். பின்னர் காஞ்சி மர நிழலில் அமர்ந்து இளநீரை அருந்தினர்.

சொல்லும் பொருளும்:

கல் – மலை
கல்லிடை – மலையிடை
முருகு – தேன், மணம், அழகு
கான்யாறு – காட்டாறு
மல்லல் – வளம் பொருந்திய
கரி – யானை
கரிக்குருத்து – யானையின் தந்தம்
போர் – வைக்கோற்போர்
புரைதப – குற்றமின்றி
செறு – வயல்

குரை கழல் சிறுவர் – ஒலிக்கின்ற கழல் அணிந்த பாதமுடைய சிறுவர்கள்
தெங்கின்காய் – தென்னை மரத்தின் இளங்காய் (இளநீர்)

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

நெய்தல்

கடலும் கடல் சார்ந்தது

பசிபட ஒருவன் வாடப்
பாத்துஇனி இருக்கும் கீழ்மை
முசிபட ஒழுகும் தூய
முறையினை அறிவார் போல
வசிபட முதுநீர் புக்கு
மலையெனத் துவரை நன்னீர்
கசிபட ஒளிமுத் தோடு
கரையினில் குவிப்பார் அம்மா

வருமலை அளவிக் கானல்
மணலிடை உலவிக் காற்றில்
சுரிகுழல் உலர்த்தும் தும்பி
தொடர்மரை முகத்தர் தோற்றம்
இருபெரு விசும்பிற் செல்லும்
இளமைதீர் மதியம் தன்னைக்
கருமுகில் தொடர்ந்து செல்லுங்
காட்சி போல்தோன்று மாதோ

விளக்கம்:

தூய ஒழுக்க முறையைப் பின்பற்றுபவர்கள் பசித்துயரால் துன்புறுவோரைக் கண்டு வருந்துவார்கள் (அதற்காக வருத்தப்பட்டு உழைக்காமலோ சோம்பியோ இருப்பதில்லை)

அதுபோல தான் வாழும் இடம் முழுவதும் மூழ்குமாறு பெரும் கடலலை புகுந்து விட்டாலும், மலையளவு பவளங்களையும் நல் இயல்பு தோன்றும் ஒளிமுத்துகளையும் நெய்தல் நிலத்தவர் கடற்கரையில் வந்து குவிப்பர்.

நெய்தல் நிலத்திலே பறக்கும் ஒருவகை வண்டானது. கரையை நெருங்கி வருகின்ற மலை போன்ற அலையினைத் தடவி, சுடுகின்ற கடற்கரை மணலிடை உலவி தன் நீண்ட சிறகினை உலர்த்தும்.

பின்னர்த் தாமரை மலரை ஒத்த பெண்களின் முகத்தை நோக்கித் தொடர்ந்து பறந்து செல்லும். இக்காட்சியானது வானிலே முழுநிலவினைத் தொடர்ந்து செல்லும் கருமேகத்தின் காட்சி போல் உள்ளது. [முழுநிலவு பெண்ணின் முகத்துக்கும், கருமேகம் - வண்டுக்கும் உவமையாயிற்று]

சொல்லும் பொருளும்:

தூயமுறை	–	தூய்மையான ஒழுக்க நெறி	கானல் மணலிடை	–	சுடுகின்ற கடற்கரை மணல்
வசிபட	–	வாழும் இடம்	சுரிகுழல்	–	நீண்ட சிறகு
முதுநீர்	–	கடல்	மரை	–	தாமரை மலர்
துவரை	–	பவளம்	விசும்பு	–	வானம்
அளவி	–	தடவி	கருமுகில்	–	கருமேகம்
மதியம்	–	நிலவு			

இலக்கணக் குறிப்பு :

இடிகுரல்	–	உவமைத் தொகை	மன்னிய	–	பெயரெச்சம்
இன்னுயிர்	–	பண்புத் தொகை	வெரீஇ	–	சொல்லிசை அளபெடை
பிடி பசி	–	வேற்றுமைத் தொகை	கடிகமழ்	–	உரிச்சொல் தொடர்
பைங்கிளி	–	பண்புத் தொகை	மரைமுகம்	–	உவமைத் தொகை

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பெருங்கடல்	– பண்புத் தொகை	கருமுகில்	– பண்புத் தொகை
முதுவெயில்	– பண்புத்தொகை	அதிர்குரல்	– வினைத்தொகை
வருமலை	– வினைத் தொகை	இன்னிளங்குருளை	– பண்புத்தொகை

பூவையும் குயில்களும் – எண்ணும்மை

முதிரையும் சாமையும் வரகும் – எண்ணும்மை

எருத்துக்கோடு – ஆறாம் வேற்றுமைத் தொகை

கரைபொரு – இரண்டாம் வேற்றுமைத் தொகை

மலர்க்கண்ணி – மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை

பகுபத உறுப்பிலக்கணம்:

பருகிய - பருகு + இன் + ய் + அ	**பூக்கும்** - பூ + க் + க் + உம்
பருகு – பகுதி	பூ – பகுதி
இன் – இறந்தகால இடைநிலை (‘ன்’ கெட்டது விகாரம்)	க் – சந்தி
ய் – உடன்படுமெய் சந்தி	க் – எதிர்கால இடைநிலை
அ – பெயரெச்ச விகுதி	உம் – வினைமுற்று விகுதி
பறித்து - பறி + த் + த் + உ	**குவிப்பார்** - குவி + ப் + ப் + ஆர்
பறி – பகுதி	குவி – பகுதி
த் – சந்தி	ப் – சந்தி
த் – இறந்தகால இடைநிலை	ப் – எதிர்கால இடைநிலை
உ – வினைமுற்று விகுதி	ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி
மருண்டு - மருள் (ண்) + ட் + உ	**புக்கு** - புகு + உ
மருள் – பகுதி ‘ள்’ ‘ண்’ ஆனது விகாரம்	புகு – பகுதி (க் ஒற்று இரட்டித்து இறந்த காலம் காட்டியது)
ட் – இறந்தகால இடைநிலை	உ – வினைமுற்று விகுதி
உ – வினைமுற்று விகுதி	
அஞ்சி - அஞ்சு + இ	
அஞ்சு – பகுதி	
இ – வினையெச்ச விகுதி	

பாடநூல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. **‘பொதுவர்கள் பொலி உறப் போர் அடித்திடும்’ நிலப்பகுதி .....**

அ) குறிஞ்சி ஆ) நெய்தல் இ) முல்லை ஈ) கெடுதல்

விடை : இ) முல்லை

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

குறுவினா

1. இடிகுரல், பெருங்கடல் – இலக்கணக் குறிப்புத் தருக.

இடிகுரல் - உவமைத் தொகை
பெருங்கடல் - பண்புத் தொகை

2. பாலை நிலத்தில் பருந்துகள் பறந்ததன் காரணம் என்ன?

மராமலர்களை மாலையாக அணிந்த சிறுவர்கள், எருதின் கொம்புகளைப் போல் இருந்த பாலைக்காயை நிலத்தில் விழுந்து வெடிக்குமாறு கோலினால் அடித்தனர். அவ்வோசையைக் கேட்ட பருந்துகள் அச்சத்துடன் பறந்து ஓடின.

"வெடிக்கவிட்டு ஆடிட விரும்பிக் கோலினால்
அடிக்கும் ஓசையின் பருந்து அஞ்சி ஓடுமே"

சிறுவினா

1. இராவண காவியத்தில் இடம் பெற்றுள்ள இரண்டு உவமைகளை எடுத்துக் காட்டுக.

குன்று போல:

முல்லை நிலத்தவர்கள், முதிரை. சாமை, கேழ்வரகு மணி போன்ற குதிரை வாலி ஆகியவற்றை கதிர் அடித்து களத்தில் குவித்து வைத்திருக்கும் காட்சியானது குன்று போல இருந்தது என்று தானியக் குவியலுக்கு குன்றினை உவமைப்படுத்தியுள்ளார்.

மதியம் தொடரும் மேகம் போல:

கடற்கரை மணலிடை உலவி தன் நீண்ட சிறகினை உலர்த்திய வண்டானது, தாமரை மலரை ஒத்த பெண்களின் முகத்தினை நோக்கி தொடர்ந்து செல்லும். அக்காட்சியானது வானில் முழுநிலவைத் தொடர்ந்து செல்லும் ஒரு மேகத்தின் காட்சி போல் உள்ளது என்று உவமைப்படுத்தியுள்ளார் புலவர் குழந்தை.

2. குறிஞ்சி மணப்பதற்கான நிகழ்வுகளைக் குறிப்பிடுக.

தீயில் இட்ட சந்தன மரக் குச்சிகளின் மணமும், அகில் போன்ற வாசனைப் பொருட்களின் நறுமணமும், உலையில் இட்ட மலை நெல் அரிசி சோற்றின் மணமும், குறிஞ்சி நிலம் முழுவதும் பரவிக் கிடந்த காந்தள் மலரின் மணமும், எங்கும் பரவித் தோய்ந்து கிடந்ததனால் குறிஞ்சி நிலப்பகுதி முழுவதும் மணந்தது.

நெடுவினா

1. இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரிக்க.

முன்னுரை:

பூத்துக்குலுங்கும் பூஞ்சோலை, அடர்ந்து வளர்ந்த பசுமையான மரங்கள் நீர் நிறைந்த நதி, குளக்கரைகள், மயில்கள், குயில்கள், கிளிகள் எனப் பறந்து திரியும் பறவைகள் இத்தகு அழகு சூழலை இராவண காவியத்தில் ஐவகை நிலங்கள் பற்றிக் குறிப்பிடும் பாடல்களில் புலவர் குழந்தை குறிப்பிடுகிறார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பொன் மயில் ஆடும்:

அருவிகள் பறையைப் போல் ஆரவாரமாய் ஒலித்து விழும். பைங்கிளிகள் தாம் அறிந்த இசையினைப் பாடும். பொன் போன்ற அழகிய மயில் தன் அருமையான அகன்ற சிறகினை விரித்து ஆடும். பூக்கள் நிறைந்த மரக்கிளையில் அமர்ந்திருக்கும் குரங்கினமோ இவற்றையெல்லாம் மிரட்சியுடன் பார்த்துக் கொண்டிருக்கும்.

"..... பொன் மயில்
அருகிய சிறைவிரித் தாடப் பூஞ்சினை
மருவிய குரக்கினம் மருண்டு நோக்குமால்".

குயிலும், வண்டும் இசைக்கும்:

அழகிய நாகணவாய்ப் பறவைகளும், குயில்களும் அழகுமிக்க சிறகினையுடைய வண்டு இனங்களும், பாவிசைத்துப் பாடின. புகழ்பெற்ற முல்லை நில ஆயர்கள் கொன்றை, ஆம்பல், மூங்கில் ஆகியவற்றால் ஆன முக்குழலை இசைத்து, மேயும் பசுக்கூட்டங்களை அருகருகே ஒன்றிணைக்கும் காட்சியும் இன்பம் தருவன.

"தேஇசை பெறும்கடறு இடையர் முக்குழல்
ஆவினம் ஒருங்குற அருகுஅ ணைக்குமால்"

பூத்துக்குலுங்கும் காஞ்சி, வஞ்சி:

மலையிடைத் தோன்றும் ஆறும், கரையை மோதித் ததும்பி நிற்கும் குளமும் மனதைக் கொள்ளை கொள்ளும். முல்லை நிலத்தின் காட்டாறு வெள்ளம் மருத நிலத்தில் பாய்ந்தோடும். நெற் பயிரினைக் காக்கும் பொருட்டு கரும்பு வளர்ந்து நிற்கும். பெருகி வரும் கால்வாய் வழி ஓடி வயலில் தேங்கி வளம் சேர்க்கும். இத்தகு வளம் நிறைந்த நிலத்திலே காஞ்சி மலர்களும் வஞ்சி மலர்களும் பூத்துக் குலுங்கி மனதைப் பரவசப்படுத்தும்.

"மல்லல்அம் செறுவில் காஞ்சி
வஞ்சியும் மருதம் பூக்கும்"

இளைப்பாற்றும் தாய் :

வெப்பத்தைத் தாங்க இயலாத தன் குட்டியின் களைப்பை இளைப்பாற்ற எண்ணிய தாய், எங்கும் நிழல் இன்றி தன் நிழலையே அதற்குத் தந்து குட்டியை இளைப்பாற்றும் தாயின் அன்பையும் இயற்கை மூலம் அறியலாம்.

"தன்னிழல் தங்கவே தாய்மை மீதுர "

முடிவுரை:

மேற்கூறிய தன்மையில், இராவண காவியம் என்னும் இலக்கியமானது, எழிலோவியங்களை, தன் சொல் ஓவியங்களால் தீட்டி வைத்திருக்கிறது. இவற்றைக் கற்க கற்க இன்பமேயன்றி வேறில்லை யன்றோ!

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. இருபதாம் நூற்றாண்டின் தனித்தமிழ் பெருங்காப்பியம்.

அ) கம்பராமாயணம் ஆ) இராவணகாவியம்
இ) தண்ணீர்த்தேசம் ஈ) பொன்னியின் செல்வன்

விடை : ஆ) இராவணகாவியம்

2. இராவண காவியத்தின் பாடல்கள்

அ) 2100 ஆ) 2500 இ) 3100 ஈ) 3500

விடை : ஈ) 3100

3. இருபத்தைந்து நாளில் திருக்குறளுக்கு உரை எழுதியவர்.

அ) புலவர் குழந்தை ஆ) மு. வரதராசனார்
இ) சாலமன் பாப்பையா ஈ) பரிமேலழகர் விடை : அ) புலவர் குழந்தை

4. யாப்பதிகாரம், தொடையதிகாரம் எழுதியவர்

அ) பெருந்தேவனார் ஆ) வாணிதாசன்
இ) வரந்தருவார் ஈ) புலவர் குழந்தை விடை : ஈ) புலவர் குழந்தை

5. ''மன்னிய'' - என்பதன் இலக்கணக்குறிப்பு.

அ) பெயரெச்சம் ஆ) வினையெச்சம்
இ) தொழிற்பெயர் ஈ) வியங்கோள் வினைமுற்று

விடை : பெயரெச்சம்

6. பொருத்துக.

அ.	கடறு	i)	கொம்பு
ஆ.	கோடு	ii)	காடு
இ.	துவரை	iii)	வயல்
ஈ.	செறு	iv)	பவளம்

விடை : அ. ii) ஆ. i) இ. iv) ஈ. iii)

7. ''பூவை'' - என்பது எப்பறவையைக் குறிக்கும்.

அ) காகம் ஆ) ஆறுமணிக்குருவி
இ) நாகணவாய்ப்பறவை ஈ) நாரை விடை : இ) நாகணவாய்ப்பறவை.

8. எருதின் கொம்பினைப்போல் இருந்த காய் எது?

அ) பாலைக்காய் ஆ) பாகற்காய் இ) ஏலக்காய் ஈ) வாழைக்காய்

விடை : அ) பாலைக்காய்

9. காஞ்சியும், வஞ்சியும் பூக்கும் நிலம்

அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) நெய்தல்

விடை : இ) மருதம்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

10. கொன்றை, ஆம்பல், மூங்கில் ஆகியவற்றால் ஆனது .....

அ) முக்கூடை ஆ) முக்குழல் இ) முத்தளிர் ஈ) முக்கொம்பு

விடை : ஆ) முக்குழல்

11. இராமாயணத்தில் எதிர்நிலை மாந்தராகப் படைக்கப்பட்டவன் .....

அ) இராமன் ஆ) அனுமன் இ) இராவணன் ஈ) குகன்

விடை : இ) இராவணன்

12. ''மரை முகம்'' - என்பதன் இலக்கணக் குறிப்பு

அ) உம்மைத்தொகை ஆ) உவமைத்தொகை

இ) உருவகம் ஈ) உரிச்சொற்றொடர்

விடை : அ) உவமைத்தொகை

13. புரைதபப் பறித்துக் காஞ்சிப்
புனை நிழல் அருந்துவாரே - இதில் அமைந்துள்ள நயம்

அ) அடிமோனை ஆ) சீர்மோனை இ) அடிஎதுகை ஈ) சீர்எதுகை

விடை : அ) அடிமோனை

14. ''வருமலை அளவி'' - வருமலை என புலவர் எதனைக் குறிப்பிடுகிறார்.

அ) கடற்காகம் ஆ) கடற்காளான் இ) கடலாமை ஈ) கடல்அலை

விடை : ஈ) கடல்அலை

15. கரிக்குருத்து என்பதன் பொருள் யாது?

அ) சேவற்கொண்டை ஆ) யானைத்தந்தம்

இ) மான்கொம்பு ஈ) மயிற்தோகை விடை : ஆ) யானைத்தந்தம்

16. 'போ' அடிக்கும் குரலைக் கேட்டு அஞ்சி ஓடுவது எது?

அ) உழைமான் ஆ) கவரிமான் இ) கலைமான் ஈ) செந்நாய்

விடை : அ) உழைமான்

17. குருளைக்குத் தன் நிழல் தந்த விலங்கு எது?

அ) உழைமான் ஆ) செந்நாய் இ) மந்தி ஈ) வானரம்

விடை : ஆ) செந்நாய்

குறுவினா

1. இராவண காவியம் குறித்து அண்ணாவின் கருத்து யாது?

- இராவண காவியம் காலத்தின் விளைவு
- ஆராய்ச்சியின் அறிகுறி
- புரட்சிப் பொறி

உண்மையை உணரவைக்கும் உன்னத நூல் என்பது பேரறிஞர் அண்ணாவின் கருத்தாகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

2. புலவர் குழந்தை - குறிப்பு வரைக.

- இராவணக் காவியத்தை இயற்றியவர் புலவர் குழந்தை ஆவார்.
- தந்தை பெரியாரின் வேண்டுகோளுக்கிணங்க 25 நாள்களில் இவர் திருக்குறளுக்கு உரை எழுதியுள்ளார்.

3. புலவர் குழந்தையின் படைப்புகளில் ஏதேனும் இரண்டினைக் கூறுக.

- யாப்பதிகாரம்
- தொடையதிகாரம்

4. குரக்கினம் மருண்டு நோக்குமால் - ஏன்?

- பறையின் ஓசையைப் போல் ஆரவாரமாய் விழும் அருவியோசை.
- பாடுகின்ற பைங்கிளிகள்
- பொன் போன்ற அழகிய சிறகினை விரித்து ஆடும் மயில் இவற்றைக் கண்டு மரத்தில் அமர்ந்திருக்கும் குரங்கு மிரட்சியுடன் நோக்கியது என்று புலவர் குழந்தை குறிப்பிடுகிறார்.

5. குன்று போல் குவித்து வைக்கப்பட்டிருந்த தானியங்கள் யாவை? எந்நிலத்தில் வைக்கப்பட்டிருந்தது?

- முதிரை, சாமை, கேழ்வரகு, மணி போன்ற குதிரைவாலி நெல் ஆகியவை குன்று போல் குவித்து வைக்கப்பட்டிருந்தது.
- முல்லை நிலத்தில்.

6. கோர்வை / கோவை பற்றிய சொற்பொருள் விளக்கம் தருக.

- கோ என்பது வேர்ச்சொல்.
- கோப்பு, கோவை, கோத்தல், கோத்தான், கோத்தாள் என்பதே சரி.
- எ.கா : ஆசாரக்கோவை, ஊசியில் நூலைக் கோத்தான்.

7. மைவனம், முருகியம் - என்ற சொற்கள் உணர்த்தும் பொருள் யாவை?

மலைநெல், குறிஞ்சிப்பறை.

சிறுவினா

1. இராவண காவியத்தின் காண்டங்கள் எத்தனை? அவை யாவை?

இராவண காவியத்தில் ஐந்து காண்டங்கள் உள்ளன. அவையாவன.

1. தமிழகக் காண்டம்,
2. இலங்கைக் காண்டம்
3. விந்தக் காண்டம்
4. பழிபுரிகாண்டம்
5. போர்க்காண்டம் என்பவையாகும்.

2. மருதநில சிறுவர்களின் மனமகிழ் செயல்பாடுகளை எடுத்தியம்புக.

தாமரை மலர்கள் பூத்திருந்த குளத்தில் சிறுவர்கள் நீராடினர். அக்குளத்தில் நீந்தும் யானையின் தந்தங்களை அளந்து பார்த்து, அதன் வடிவழகு கண்டு மகிழ்ந்தனர். சிறுகழல் அணிந்த சிறார்கள் வைக்கோற்போர் குலுங்கிடும்படி ஏறி, தென்னை இளநீர்க் காய்களைப் பறித்தனர். பின்னர்க் காஞ்சி மர நிழலில் அமர்ந்து அருந்தினர்.

3. நெய்தல் நில வண்டுகள் பற்றி எழுதுக.

தும்பியானது கரையை நெருங்கி வருகின்ற மலை போன்ற அலையினைத் தடவி, கடற்கரை மணலிடை உலவி, காற்றிலே தன் நீண்ட சிறகினை உலர்த்தும். பின்னர்த் தாமரை மலரையொத்த

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பெண்களின் முகத்தினை நோக்கித் தொடர்ந்து செல்லும். அது வானில் முழு நிலவைத் தொடர்ந்து செல்லும் கருமேகத்தின் காட்சி போல் உள்ளது.

கற்பவை கற்றபின்

பக்கம்: 160

1. ஐவகை நிலங்களில் உங்கள் மாவட்டம்/ஊர் அமைந்த நிலவகை பற்றியும் அதன் கவின்மிகு காட்சியையும் படக் கட்டுரையாக்குக.

என்னுடைய மாவட்டம் கன்னியாகுமரி. ஐவகை நிலங்களில் கடலும் கடல் சார்ந்த நிலமாக இருப்பது என் மாவட்டத்தின் பெருமை.

கன்னியாகுமரியின் கவின்மிகு காட்சிகள்

தமிழகத்திற்குத் தென் எல்லையாகத் திகழும் எம் மாவட்டம் இயற்கை அழகுக்குப் பெயர் பெற்றது. சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கம்.



அரபிக்கடல், வங்காளவிரிகுடா. இந்தியப் பெருங்கடல் ஆகிய முக்கடலும் சங்கமிக்கும் இடம் இது.

இங்கு காணக் கிடைக்கும் சூரிய உதயமும், அஸ்தமனமும் வண்ணத் திருவிழாவாகவும், வானத்தில் பல வர்ணஜாலம் வாரியிறைக்கும் நிகழ்வுகளாகவும் அமைகின்றன. பல வண்ண மணல் நிரம்பிய குமரி கடற்கரை காணக் காண இன்பமே.





தமிழினம் செழிக்க இரண்டடி தந்த வள்ளுவரைப் பெருமைப்படுத்தும் மாவட்டம்.

‘எழுமின் விழுமின்’’ என்று இளைய மனங்களில் எழுச்சித்தீபம் ஏற்றிய விவேகானந்தரைப் பெருமைப்படுத்தியுள்ளதும் எம் மாவட்டமே.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



காமராசர் நினைவாலயம், காந்தி மண்டபமும் இங்கு உண்டு.

கடலில் நீராடும் துறை அருகே ஓர் அழகிய சித்திரம் போல் அமையப் பெற்றிருக்கும் குமரியம்மன் கோயில். பழமை வாய்ந்த தேவாலயங்களும் இங்கு இறையாசி வழங்கிக் கொண்டு இருக்கின்றன.





இங்கு புலியை முறத்தால் கொன்ற வீரப் பெண்ணுக்கும், முல்லைக்குத் தேர் தந்த பாரி மன்னனுக்கும் வைக்கப்பட்டுள்ள சிலைகள் கண்ணைக் கவரும் வண்ணம் செதுக்கப்பட்டுள்ளது.


திற்பரப்பில் இருந்து, திருவட்டார் வந்த பின் மாத்தூர் என்ற சிற்றூருக்குச் செல்லும் சாலையில் தொட்டிப் பாலம் உள்ளது. ஆற்றுக்கு மேல் அமைந்துள்ள இப்பாலத்தில் விவசாயத்துக்குத் தண்ணீர் கொண்டு செல்லும் கால்வாய் அமைந்துள்ளது தனிச்சிறப்பு.



செல்லும் வழியெங்கும் பசி தீர்க்க பழவகைகள் பலவும் கிடைக்கும். கன்னியாகுமரியை இப்படிச் சொல்லி, சொல்லி வர்ணனை செய்து கொண்டே போகலாம்.

எம் மாவட்டத்திற்கு நீங்களும் ஒருமுறை வாருங்கள். இயற்கை இன்பத்தை அனுபவியுங்கள்.

2. இப்பாடப் பகுதியில் உங்களை ஈர்த்த கவிதைக் காட்சியினை ஓவியமாகத் தீட்டுக.



கல்லிடைப் பிறந்த ஆறும்
கரைபொரு குளனும் தோயும்
முல்லைஅம் புறவில் தோன்று
முருகுகான் யாறு பாயும்
நெல்லினைக் கரும்பு காக்கும்
நீரினைக் கால்வாய் தேக்கும்
மல்லல்அம் செறுவில் காஞ்சி
வஞ்சியும் மருதம் பூக்கும்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

3. வைக்கோற் போர், நெற்கதிர், போரடிக்கும் களம் போன்ற உழவுத் தொழிலோடு தொடர்புடையவற்றின் விளக்கங்களைத் தொகுத்து வகுப்பில் கலந்துரையாடுக.

மாணவர்களே! இராவண காவியத்தில் ஐவகை நில வளங்களைப் பற்றிக் கற்கும் போது,

வைக்கோற் போர், நெற்கதிர் போரடிக்கும் களம் போன்ற வார்த்தைகளைக் கற்றீர்கள் அல்லவா! அதன் விளக்கங்கள் தெரிந்து கொள்ள ஒரு கலந்துரையாடல்

கலந்துரையாடுபவர்கள்: ஆசிரியர், புகழேந்தி, சுதா.

ஐயா : நெற்குதிர் பற்றிச் சொல்லுங்கள் ஐயா!

ஆசிரியர் : கூறுகிறேன் புகழேந்தி.

நெல் முதலிய தானியங்களைச் சேகரிக்கும் கூடு. பெரிய அளவில் இருக்கும் குதிரில் தானியத்தைச் சேமிப்பர். சிறிய அளவில் உள்ளவை விதை தானியங்களைச் சேகரித்து வைக்கவும் உதவும்.

புகழேந்தி : ஐயா! குதிர் பற்றி என் தாத்தா ஏதோ பழமொழி சொல்வாரே .....

ஆசிரியர் : ஆமாடா ....."எங்கப்பன் குதிருக்குள் இல்லை". "ஐயா!" கதிர் போல அம்மா குதிர் போல " போன்ற பழமொழிகள் உள்ளன.

சுதா :ஐயா போர் அடித்தல் என்றால் என்ன ஐயா!

ஆசிரியர் : அறுவடை செய்த நெல்லையும், வைக்கோலையும் பிரிக்கும் செயல். அகன்ற களத்திற்கு கொண்டு வந்து அடிப்பர். முதலில் அடிப்பதை தலையடி என்பர். பின் வைக்கோலைப் பரப்பி, மாட்டைச் சுற்றி வரச் செய்தும் நெல்லையும், வைக்கோலையும் தனித்தனியே பிரித்தெடுத்தலே போரடித்தல் ஆகும்.

சுதா : ஐயா வைக்கோற்போர் பற்றிச் சொல்லுங்களேன்.

ஆசிரியர் : நெல்லைப் பிரித்து எடுத்த பின் அதன் தாளை உலர்த்தி சேகரிப்பது வைக்கோல். அது கால்நடைகளுக்குக் குறிப்பாக மாடுகளுக்கு உணவாகும். வைக்கோலை ஈரம்படாமல் உலரவைத்து. அதனை அழகாக அடுக்கி குவித்து, காற்றில் பறக்காமல் இருக்க, வைக்கோலாலே பின்னப்பட்ட வைக்கோல் பிறியைக் கொண்டு சுற்றி வைத்துப் பாதுகாப்பதே வைக்கோற் போர் ஆகும்.

புகழேந்தி

சுதா : நன்றி ஐயா எங்கள் தலைமுறைக்குத் தெரியாத செய்திகள் இவை. விளக்கமாக புரிய வைத்து விட்டீர்கள் ஐயா!

⁂⁂⁂

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கவிதைப் பேழை

இயல் ஆறு

நாச்சியார் திருமொழி

பக்தி இலக்கியம் உணர்ச்சி நிறைந்த பாடல்களை உள்ளடக்கியது. இறையோடு ஒன்ற செய்வதும், சரணடையச் செய்வதும் பக்தி இலக்கியத்தின் பணிகள்.

இறைவனை நாயகனாக எண்ணி ஆண்டாள் பாடிய பாடல் அழகியலுக்கும், பக்திக்கும் சான்றாகிறது.

நூல் குறிப்பு:

- ஆழ்வார்கள் பன்னிருவரால் பாடப்பட்ட நூல் "நாலாயிர திவ்ய பிரபந்தம்" இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள, திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்னும் இரு தொகுதிகள் ஆண்டாள் அருளியவையாகும். நாச்சியார் திருமொழி மொத்தம் 140 பாடல்களைக் கொண்ட நூல்
- நம் பாடப்பகுதியின் இருபாடல்களும் ஆறாம் திருமொழியில் இடம் பெற்றுள்ளன.ஆண்டாள், இறைவன் மீது கொண்ட காதல் மனத்தைக் கூறும் நூல் இது என்பர்.

ஆண்டாள் பற்றிய குறிப்புகள்:

- பன்னிரு ஆழ்வார்களில் ஆண்டாள் மட்டுமே பெண் ஆவார்.
- இறைவனுக்குப் பாமாலை சூட்டியதோடு, தான் அணிந்து மகிழ்ந்த பூ மாலையையும் சூட்டியதால் "சூடிக் கொடுத்த சுடர்க்கொடி" எனப் புகழப்பட்டார். இறைவனே அவர் சூடிய மாலையைச் சூட விரும்புவாராம்.
- இவ்வாறு ஆண்டவனையே ஆண்டதால் ஆண்டாள் எனப்பட்டாள். இவர் பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள் ஆவார்.

பாடலின் பொருள்

நடனம் ஆடும் இளம்பெண்கள், கைகளில் கதிரவன் போன்ற ஒளியை உடைய விளக்கையும் கலசத்தையும் ஏந்தியவாறு வந்து எதிர்கொண்டு அழைக்கிறார்கள்.

வடமதுரையை (மதுராபுரி) ஆளும், மன்னன் கண்ணன் பாதுகைகளை அணிந்து கொண்டு, புவி அதிர மகிழ்ச்சியுடன் நடந்து வருகிறான்.

இவ்வாறு கண்ணன் வரும் காட்சியைத் தன் கனவில் கண்டதாக ஆண்டாள் கூறுகிறார்.

மத்தளம் முதலான இசைக் கருவிகள் முழங்குகின்றன. வரிகளையுடைய சங்குகளை நின்று ஊதுகின்றனர்.

அத்தை மகனும், மது என்ற அரக்கனை அழித்தவனுமான கண்ணன், முத்துகளையுடைய மாலைகள் தொங்கவிடப்பட்ட பந்தலின் கீழ் என்னைத் திருமணம் செய்து கொள்கிறான். இக்காட்சியைத் தன் கனவில் கண்டதாக ஆண்டாள் கூறுகிறார்.

சொல்லும் பொருளும் :

கதிரொளி	–	சூரியனின் ஒளி	தீபம்	–	விளக்கு
சதிரிள மங்கை	–	நடனமாடும் மங்கையர்	சங்கம்	–	சங்கு

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

சதிர் – நடனம் | தாமம் – மாலை

மதுரையார் மன்னன் – மதுராபுரியை ஆளும் கண்ணன்

இலக்கணக் குறிப்புகள் :

கொட்ட – வினையெச்சம்

முத்துடைத் தாமம் – இரண்டாம் வேற்றுமைத் தொகை

கைத்தலம் – இருபெயரொட்டுப் பண்புத்தொகை

வரிசங்கம் – இரண்டாம் வேற்றுமைத் தொகை

பகுபத உறுப்பிலக்கணம் :

தொட்டு - தொடு (தொட்டு) + உ

தொடு – பகுதி 'ட்' ஒற்று இரட்டித்து இறந்த காலம் காட்டியது,

உ – வினையெச்ச விகுதி

ஏந்தி - ஏந்து + இ

ஏந்து – பகுதி,

இ – வினையெச்ச விகுதி

கண்டேன் - காண் (கண்) + ட் + ஏன்

காண் – பகுதி 'கண்' எனக் குறுகியது விகாரம்

ட் – இறந்தகால இடைநிலை

ஏன் தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

நின்று - நில் (ன்) + ற் + உ

நில் – பகுதி 'ல்' 'ன்' ஆனாது விகாரம்

ற் இறந்தகால இடைநிலை

உ – வினையெச்ச விகுதி

வந்து - வா (வ) + த் (ந்) + த் + உ

வா – பகுதி 'வ்' எனக் குறுகியது விகாரம்

த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

உ – வினையெச்ச விகுதி

பாடநூல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. **'அதிரப் புகுதக் கனாக் கண்டேன்' - யார் கனவில் யார் அதிரப் புகுந்தார்.**

அ) கண்ணனின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்

ஆ) தோழியின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்

இ) ஆண்டாளின் கனவில் தோழி புகுந்தாள்

ஈ) ஆண்டாளின் கனவில் கண்ணன் புகுந்தான்

விடை : ஈ) ஆண்டாளின் கனவில் கண்ணன் புகுந்தான்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

குறுவினா

1. கண்ணன் புகுந்த பந்தல் எவ்வாறு இருந்தது?

- கண்ணன் புகுந்த பந்தலானது முத்துக்களையுடைய மாலைகள் தொங்கவிடப்பட்டதாக இருந்தது.
- மத்தளம் முழங்கியதாகவும், வரிகளை உடைய சங்குகளை ஊதுபவர்கள் நின்று கொண்டிருந்தனர் என்று, கண்ணன் புகுந்த பந்தல் இருந்த நிலையை ஆண்டாள் கூறுகிறாள்.

"மத்தளம் கொட்ட வரி சங்கம் நின்றூத
முத்துடை தாமம் நிரை தாழ்ந்த பந்தற்"

சிறுவினா

1. ஆண்டாளின் கனவுக் காட்சிகளை எழுதுக.

- சதிராடும் இளம்பெண்கள், தம் கைகளில் கதிரவன் போன்ற ஒளியையுடைய விளக்கையும் கலசத்தையும் ஏந்தியவாறு வந்து எதிர் கொண்டு அழைக்கிறார்கள்.
- மதுராபுரியை ஆளும் மன்னனாம் கண்ணன், பாதங்களில் பாதுகை அணிந்து கொண்டு புவி அதிர மகிழ்ச்சியுடன் நடந்து வருகிறான்.
- மத்தளம் முழங்க, வரி சங்கம் ஊத, முத்துக்களையுடைய மாலைகள் தொங்கவிடப்பட்ட பந்தலின் கீழ் என்னைத் திருமணம் செய்து கொள்கிறான் என்று ஆண்டாள் கனவு கண்டதாகக் கூறுகிறாள்.

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. அடுப்பிடு சாந்த மோடு அகிலின் நாற்றமும்
துடுப்பிடு மைவனச் சோற்றின் நாற்றமும் ..... இவ் அடிகளில் உள்ள நயங்கள்.

அ) அடியெதுகை, அடிஇயைபு ஆ) சீர்மோனை, சீர்எதுகை
இ) அடிமோனை, அடிஇயைபு ஈ) சீர்மோனை, சீர்இயைபு

விடை : அ) அடியெதுகை, அடிஇயைபு

2. திருமாலை வழிபட்டு சிறப்புநிலை எய்தியவர்கள் .....

அ) நாயன்மார்கள் ஆ) ஆழ்வார்கள் இ) சமணர்கள் ஈ) தேவர்கள்

விடை : ஆ) ஆழ்வார்கள்

3. ஆண்டாள் யாருடைய வளர்ப்பு மகள்?

அ) நம்மாழ்வார் ஆ) பேயாழ்வார் இ) பெரியாழ்வார் ஈ) பூதத்தாழ்வார்

விடை : இ) பெரியாழ்வார்

4. நாச்சியார் திருமொழியில் உள்ள பாடல்கள்

அ) 110 ஆ) 140 இ) 120 ஈ) 150

விடை : ஆ) 140

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

5. ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு ..... ஆகும்.

அ) பெரியபுராணம் ஆ) நாலாயிரதிவ்ய பிரபந்தம்
இ) நளவெண்பா ஈ) பூதத்தாழ்வார்

விடை : ஆ) நாலாயிர திவ்ய பிரபந்தம்

6. நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தில் ஆண்டாள் பாடியவை யாவை?

அ) திருப்பாவை ஆ) நாச்சியார் திருமொழி

i) அ - சரி ii) ஆ - சரி iii) இரண்டும் சரி iv) இரண்டும் தவறு

விடை : iii) இரண்டும் சரி

7. ''மதுரையார் மன்னன் அடிநிலை'' - மதுரையார் மன்னன் யார்?

அ) கண்ணன் ஆ) கன்னன் இ) கோவலன் ஈ) நெடுஞ்செழியன்

விடை : அ) கண்ணன்.

8. கைத்தலம் இலக்கணக்குறிப்பு யாது?

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
இ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஈ) உவமைத்தொகை

விடை : இ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை

9. பொருத்துக.

அ. தாமர் i) நடனம்
ஆ. சதிர் ii) நிலவு
இ. மதியம் iii) சந்தனம்
ஈ. சாந்தம் iv) மாலை

விடை : அ. iv) ஆ. i) இ. ii) ஈ. iii)

குறுவினா

1. ஆண்டாள் - குறிப்பு வரைக.

- திருமாலை வழிபட்டுச் சிறப்புநிலை எய்திய ஆழ்வார்களுள் ஆண்டாள் மட்டுமே பெண் ஆவார்.
- இறைவனுக்குப் பாமாலை சூட்டியதோடு தான் அணிந்து மகிழ்ந்த பூமாலையையும் சூட்டியதால், "சூடிக் கொடுத்த சுடர்கொடி" என அழைக்கப் பெற்றார்.
- இவரைப் பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள் என்பர்.

2. ஆண்டாள் பாடியதாகக் குறிப்பிடப்படும் இரு தொகுதிகள் யாவை?

- திருப்பாவை
- நாச்சியார் திருமொழி

நெடுவினா

1. கண்ணனைக் கனவில் கண்டதாக ஆண்டாள் கூறுவனவற்றை விளக்குக.

முன்னுரை:

பக்தி இலக்கியம் உணர்ச்சி நிறைந்த பாடல்களை உள்ளடக்கியது. இறையோடு ஒன்றுதலும் அதன்பால் அனைவரையும் சரணடையச் செய்வதும் பக்தி இலக்கியத்தின் பணியாக இருந்தது. திருமாலை நாயகனாக எண்ணி ஆண்டாள் பாடுவதாக அமைந்தது நாச்சியார் திருமொழி ஆகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

ஆண்டாளின் கனவும், கண்ணனும்

'ஆடும் இளம் பெண்கள், கைகளில் கதிரவன் போன்ற ஒளியை உடைய விளக்கையும் கலசத்தையும் ஏந்தியவாறு வந்து எதிர்கொண்டு அழைக்கிறார்கள். வடமதுரையை ஆளும் மன்னன் கண்ணன் பாதுகைகளை அணிந்துகொண்டு புவி அதிர மகிழ்ச்சியுடன் நடந்து வருகிறான்'. இக்காட்சியைக் கனவில் கண்டதாக ஆண்டாள் கூறுகிறார்.

'மத்தளம் முதலான இசைக்கருவிகள் முழங்குகின்றன. வரிகளையுடைய சங்குகளை நின்று ஊதுகின்றனர். அத்தை மகனும், மது என்ற அரக்கனை அழித்தவனுமான கண்ணன், முத்துகளையுடைய மாலைகள் தொங்கவிடப்பட்ட பந்தலின் கீழ், என்னைத் திருமணம் செய்து கொள்கிறான்' எனக் கனவில் கண்டதாக ஆண்டாள் கூறுகிறார்.

முடிவுரை :

கண்ணன் மீது ஆண்டாள் கொண்ட காதலின் வெளிப்பாடே கனவாக மலர்ந்திருக்கிறது என்பதை அறியமுடிகிறது.

கற்பவை கற்றபின்

பக்கம்: 162

1. திருப்பாவையில் இடம் பெற்றுள்ள தொடை நயம் மிக்க பாடல்களுள் எவையேனும், இரண்டினை இணையத்திலோ நூலகத்திலோ திரட்டி வகுப்பறையில் பாடுக.

திருப்பாவைப்பாடல் (24)

அன்று இவ்வுலகம் அளந்தாய் அடி போற்றி
சென்றங்கு தென்னிலங்கை செற்றாய் திறல் போற்றி
பொன்றச் சகடம் உதைத்தாய்ப் புகழ் போற்றி
கன்று குணிலா எறிந்தாய் கழல் போற்றி
குன்று குடையாய் எடுத்தாய் குணம் போற்றி

வென்று பகை கெடுக்கும் நின் கையில் வேல் போற்றி
என்றென்றும் சேவகமே ஏத்திப் பறை கொள்வான்
இன்று யாம் வந்தோம் இரங்கேலோர் எம்பாவாய்

பாடல் - 15 (திருப்பாவை)

எல்லே இளங்கிளியே இன்னம் உறக்குதியோ
சில்லென்று அழையேன் மின் நங்கை மீர்போதருகின்றேன்
வல்லை உன் கட்டுரைகள் பண்டே உன் வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானேதான் ஆயிடுக
ஒல்லை நீ போதாய் உனக்கென்ன வேறுடையை
எல்லாரும் போந்தாரோ போந்தார் போந்தெண்ணிக் கொள்
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோர் எம்பாவாய்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

2. கண்ணனைப் பல்வேறு உறவு நிலைகளில் வைத்துப் பாடிய பாரதியார் பாடல்களும் உங்களைக் கவர்ந்த பாடல்களைக் குறித்துக் கலந்துரையாடுக.

மாணவர்களே, ஆண்டாள் கண்ணனைத் தன் நாயகனாக எண்ணியது போல்.

பாரதியாரும் கண்ணனை தோழனாக (கண்ணன் என் தோழன்)

தாயாக (கண்ணன் என் தாய்) தந்தையாக (கண்ணன் என் தந்தை)

சேவகனாக (கண்ணன் என் சேவகன்), விளையாட்டுப் பிள்ளை

(கண்ணன்-என் விளையாட்டுப் பிள்ளை), காதலனாக (கண்ணன் என் காதலன்)
என்று பல நிலைகளில் வைத்துப் பாடியுள்ளார்.

சான்று :

விளையாட்டுப்பிள்ளை

தீராத விளையாட்டுப் பிள்ளை - கண்ணன்
தெருவிலே பெண்களுக்கு ஓயாத தொல்லை தீராத .....
புல்லாங்குழல் கொண்டு வருவான் - அமுது
பொங்கித் ததும்பும் நற் கீதம் படிப்பான்
கள்ளால் மயங்குவது போல - அதைக்
கண்மூடி வாய் திறந்தே கேட்டிருப்போமே .....

இப்பாடலில் குழலிசைத்து அனைவரையும் மயக்கும் குழந்தையாக எண்ணிப்பாடியுள்ளார் அல்லவா .....

மாணவர் :

ஐயா ..... தோழனாக என்று சொன்னீர்கள் அதற்கு ஒரு சான்று சொல்லுங்கள் ஐயா!

" பிழைக்கும் வழிசொல்ல வேண்டுமென்றால்" ஒரு
பேச்சினிலே சொல்லுவான்
உழைக்கும்வழிவினைஆளும் வழி - பயன்
உண்ணும் வழியுரைப் பான்
அழைக்கும் பொழுதினில் போக்குச் சொல்லாமல்
அரைநொடிக்குள் வருவான்
மழைக்குக் குடை பசி நேரத்துணவு என்றன்
வாழ்வினுக் கெங்கள் கண்ணன்.

தோழனாக கண்ணன் வாழ வழி சொல்வானாம். கூப்பிடும் போது அரை நொடிக்குள் வருவானாம். மழைக்குக் குடையாவான்; பசிக்கு உணவாவான்; என்றன் வாழ்வே என் கண்ணன் என்கிறார்.

மாணவர்களே இதன் மூலம் பாரதி கண்ணனைத் தோழனாய்க் கொண்டார் என்பதையும், நண்பன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும் கூறுகிறார்.

நல்ல நண்பன் வாழ வழிகாட்டவேண்டும், துன்பம் வரும் போது நம்மைத் தாங்குகிறவனாகவும் இருக்க வேண்டும் என்கிறார்.

மாணவர்கள் : நன்றி ஐயா! .....

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

3. சங்க காலத்திலிருந்து தற்காலம் வரையுள்ள பெண்புலவர்களின் சில கவிதைகளைக் கொண்டு ஒரு கவிதைத் தொகுப்பு உருவாக்குக.

ஔவையார் பாடல்

முட்டு வேன்கொல் தாக்குவேன் கொல்
ஓரேன் யானும் ஓர் பெற்ற மேலிட்டு
ஆஅஒல் எனக் கூவுவேன் கொல்
அலமரல் அசைவலி அலைப்பஎன்
உயவு நோய் அறியது துஞ்சும் ஊர்க்கே (குறுந்தொகை - 28)

ஒக்கூர் மாசாத்தியார்

கெடுக சிந்தை கடிது இவள் துணிவே
மூதின் - மகளிர் ஆதல் தகுமே
மேல்நாள் உற்ற செருவிற்கு இவள் தன்னை
யானை எறிந்து களத்து ஒழிந் தன்னே
நெருநல் உற்ற செருவிற்கு இவள் கொழு நன்
பெரு நிரை விலக்கி ஆண்டுப்பட் டனனே
இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது விரித்து உடீகிப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுக நோக்கிச் செல்க என விடுமே (புறநானூறு)

சல்மாவின் கவிதை

தன் வழி தவறி
அறைக்குள் சிக்கிய
பட்டாம் பூச்சி துவக்கிற்று
தன் தேடலை .....
என்றேனும் .....
கதவு திறந்து வழி
கிடைக்குமெனில் அது
பறந்து தான் போகும்
வர்ணங்கள் இல்லையென்றாலும் .....

உமா மகேஸ்வரி

வெளிவாசல் வழியே
சலித்த மதியம்
சாக்கடை நீரருந்தும் குருவி
உதிர்கிற மென்மையும்
உடைபடாக் கடினமுமாய்
விசித்திரமாய் உடைந்த
மௌனம் .....

※※⁂⁂⁂※※

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

விரிவானம்

இயல் ஆறு

செய்தி

தி. ஜானகிராமன்

பாடநூல் வினாக்கள்

நெடுவினா

1. இசைக்கு நாடு, மொழி, இனம் தேவையில்லை என்பதைச் "செய்தி" கதையின் மூலமாக விளக்குக.

முன்னுரை:

இசை மொழியைக் கடந்தது. அமைதியின் நாக்காகப் பேசுவது, மனங்களைக் கரைத்து அந்தரவெளியில் உலவச் செய்வது. இசையின் செவ்வியைத் தலைப்படும் மனமானது, இனம், நாடு என்ற எல்லைக் கோடுகளைத் தாண்டி அகிலத்தையும் ஆளும் இயல்புடையது.

இசைக்கு நாடு, மொழி, இனம் தேவையில்லை என்பதைச் செய்தி என்னும் கதை உணர்த்துகிறது.

வித்வானின் வருகையும், அறிமுகமும்:

நாதசுர வித்வான் மாட்டு வண்டியிலிருந்து இருந்து தன் மகன் தங்கவேலுவும், ஒத்துக்காரரும் வாத்தியங்களைத் தூக்கிக் கொண்டு பின்னாக வர, வக்கீல் வீட்டிற்குள் நுழைந்தார் நாதசுர வித்வான்.

வக்கீல் வீட்டில் "பிலிப் போல்ஸ்கா" என்பவர் தலைமையில் மேற்கத்திய சங்கீதகுழுவினர் அமர்ந்திருந்தனர். வக்கீல் வித்வானிடம் இவர் தான் பிலிப்போல்ஸ்கா. இக்குழுவின் தலைவர் என்று அறிமுகப்படுத்தி, பின் ஒவ்வொருவரையும் அறிமுகம் செய்து வைத்தார்.

கீர்த்தனம் தொடங்கினார்:

வித்வான் கம்பீரமாக ஓர் ஆலாபனம் செய்து கீர்த்தனம் தொடங்கினார். டையும், கால் சட்டையுமாக சப்பணம் கட்டி அமர்ந்திருந்த கூட்டம் அசையாது பார்த்துக் கொண்டிருந்தது.

போல்ஸ்காவின் முகத்தில் புன்முறுவல் தவழ்ந்தது. அமிர்த தாரையாகப் பெருக்கெடுத்த நாதப்பொழிவில் அவன் தன்னை இழந்தான். நாதம் அவனுடைய ஆன்மாவைக் காணாத லோகத்துக்கும், அனுபவத்துக்கும் இட்டுச் சென்றது.

இந்த அனுபவத்தினை அடைவதற்குப் போல்ஸ்காவுக்கு நாடோ, மொழியோ, இனமோ தடையாய் இல்லை.

சாமாராகம் :

தஸரிமா..... மா" என்று ஆரம்பித்த ராகம் கொஞ்சம் - கொஞ்சமாய் மலர்ந்து, அமைதியான மணம் வீசும் பவழமல்லி போல் உள்ளத்தில் தோய்ந்தது வக்கீலுக்கு .... மொழி தெரியாத போல்ஸ்காவைத் திரும்பிப் பார்த்தார் வக்கீல்.....

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

அவன்உடல்ராகத்தோடுஇசைந்துஅசைந்துகொண்டிருந்தது.திடீரென்றுஉட்கார்ந்திருந்தவன் எழுந்து விட்டான். மெல்லிய காற்றில் அசையும் சம்பங்கி மரம் மாதிரி ஆடினான். மேடைக்கருகில் வந்து முழந்தாளிட்டு உட்கார்ந்து கையை மேடையோரத்தில் வைத்து முகத்தைப் புதைத்து தவத்தில் ஆழ்ந்தவன் போல் ஆனான்.

சாமா ராகத்தை ..... அனுபவிக்க அவனுக்கு மொழியோ, இனமோ இடையூறு செய்யவில்லை.

சாந்தமுலேகா.....

சாந்தமுலேகா ..... குழந்தையைக் கொஞ்சுவது போல், அந்த அடி கொஞ்சியது. போல்ஸ்காவின் மெய் சிலிர்த்தது. அவனது தலையும், உள்ளமும் ஆன்மாவும் அசைந்து ஊசலிட்டுக் கொண்டிருந்தன .....

அந்த இசை எனக்காக அனுப்பிய செய்தி ..... உலகத்துக்கே ஒரு செய்தி ..... உங்கள் சங்கீதத்தின் செய்தி உணர்வை வெளிப்படுத்த, நினைத்ததைச் சொல்லத் தெரியாமல் போல்ஸ்கா தடுமாறினான் .....

என்ன என்றார் வித்வான் .....

வக்கீல் மொழி பெயர்த்தல்:

தன் உணர்வை போல்ஸ்கா கூற ஆரம்பித்தான். இரைச்சல், கூச்சல், அடிதடி, புயல், அலை, இடி என ..... ஒரே இரைச்சல்..... அத்தகு போர்க்களத்தினுள் நான் மட்டும் அமைதியைக் காண்பது போல் உணர்கிறேன்; காண்கிறேன். இனி இரைச்சலும், சத்தமும், யுத்தமும் என்னைத் தொடாது .... இந்த அமைதி எனக்குப் போதும் என்று அவன் உணர்ந்து கூறிய செய்தியை மொழி பெயர்த்தார் வக்கீல்.

வித்வானின் திகைப்பு:

அமைதியா ..... அப்படியா தோணித்து அவருக்கு .... நான் வார்த்தையைக் கூடச் சொல்லவில்லையே .....

மிஸ்டர் போல்ஸ்கா நீங்கள் உணர்ந்தது போல், புயல், இடி என்று சொல்லாவிட்டாலும், இப்பாடல் அமைதி அமைதி என்று அமைதியையே கடைசி இலட்சியமாக இறைஞ்சுகிறது ..... என்று திகைத்துக் கூறினார்.

போல்ஸ்கோ ..... பாராட்டல்:

இசையை வாசித்த இந்தக் கையைக் கொடுங்கள். கடவுள் நர்த்தனமாடுகிற இந்த விரல்களைக் கொடுங்கள். நான் கடவுளை முகர்ந்து முத்தமிடுகிறேன் என்று வித்வானின் விரலைப் பிடித்து உதட்டில் வைத்துக் கொண்டார் போல்ஸ்கா .....

முடிவுரை:

நாடு, மொழி, இனம் கடந்து வார்த்தைகள் அறிய மொழி தெரியவில்லையெனினும் இசை உணர்த்தும் மெய்ப்பொருளை, அமைதியைப் போல்ஸ்கா உணர்ந்து விட்டான். இசை சொற்களைப் புறக்கணித்துத் தனக்குள் இருக்கும் செய்தியை எந்த மொழி பேசும் மனித மனங்களுக்குள்ளும் செலுத்தி விடும்.

இசையை உணர, அனுபவிக்க அதன் மெய்ப்பொருள் அறிய நாடு, மொழி, இனம் தேவையில்லை.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. செய்தி கதையின் தலைமை மாந்தர் யார்?

அ) தங்கவேலு ஆ) மணி இ) பிலிப் போலஸ்கா ஈ) ஜானகிராமன்

விடை : இ) பிலிப் போல்ஸ்கா

2. சாகித்ய அகாதெமி விருது பெற்ற ஜானகிராமனின் நூல் எது?

அ) சக்தி வைத்தியம் ஆ) கருங்கடலும் கலைக்கடலும்

இ) நடந்தாய் வாழி காவேரி ஈ) அடுத்த வீடு ஐம்பது மைல்

விடை : அ) சக்தி வைத்தியம்

3. அப்பாவின் சிநேகிதர் நூலின் ஆசிரியர்

அ) அகிலன் ஆ) அசோகமித்திரன் இ) ஆதவன் ஈ) நாஞ்சில் நாடன்

விடை : ஆ) அசோகமித்திரன்

4. தி.ஜானகிராமன் சாகித்யஅகாதெமி விருது பெற்ற ஆண்டு

அ) 1969 ஆ) 1979 இ) 1989 ஈ) 1999

விடை : ஆ) 1979

5. செய்தி என்னும் சிறுகதை இடம் பெற்ற நூல் எது

அ) சிவப்பு ரிக்ஷா ஆ) மின்சாரப்பூ

இ) ஒரு சிறு இசை ஈ) முதலில் இரவு வரும்

விடை : அ) சிவப்புரிக்ஷா

குறுவினா

1. தி. ஜானகிராமன் - குறிப்பு வரைக.

- தஞ்சை மண்வாசனையுடன் கதைகளைப் படைத்தவர்
- உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியவர்.
- வானொலியில் கல்வி ஒலிபரப்பு அமைப்பாளராக இருந்தவர்.

2. செய்தி என்னும் சிறுகதை உணர்த்தும் பொருள் யாது?

செய்தி என்னும் சிறுகதை சிவப்பு ரிக்ஷா என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. மிகவும் உயர்ந்த இசை சிறந்த கலைஞனால் கையாளப்படும் போது சொற்களின் எல்லையைத் தாண்டி இசையின் மூலமாகவே பொருள் கொடுக்கிறது என்பதை இக்கதை உணர்த்துகிறது.

3. தஞ்சாவூர் தமிழக்கு அளித்த கொடையாக விளங்குபவர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

- உ.வே.சாமிநாதர்
- தி.ஜானகிராமன்
- தஞ்சை இராமையா தாஸ்
- மௌனி
- தஞ்சை பிரகாஷ்
- தஞ்சாவூர்க் கவிராயர்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

சிறுவினா

1. சாகித்திய அகாதெமி விருது பெற்ற தமிழ்ச்சிறுகதையாளர்கள் ஐந்துபேரைக் குறிப்பிடுக.

- கு. அழகிரிசாமி
- அசோகமித்திரன்
- வண்ணதாசன்
- தி. ஜானகிராமன்
- நாஞ்சில் நாடன்

2. இந்திய இசையின் அழகான நுட்பங்களைத் தெளிவாகக் காட்டுவது நாகசுரம். ஆய்ந்தறிக!

- இந்திய இசையின் அழகான நுட்பங்களைத் தெளிவாக வாசித்துக் காட்டக்கூடிய இசைக் கருவிகளில் நாதசுரமும் ஒன்று. மங்கலமான பல நிகழ்வுகளில் இக்கருவி இசைக்கப்படுகிறது.
- இந்தச் சிறப்பான கருவி 600 ஆண்டுகளுக்கு முன்புதான் தமிழகத்தில் வாசிக்கப்பட்டது. 13 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சங்கீத இரத்னாகரம் என்னும் நூலில் இந்தக் கருவி கூறப்படவில்லை. 13 ஆம் நூற்றாண்டு வரையிலுள்ள எந்தப் பதிவுகளிலும் இந்தக் கருவி பற்றிக் குறிப்பிடப்படவில்லை.
- தமிழகப் பழைமை வாய்ந்த கோவில் சிற்பங்களிலும் இந்தக் கருவி காணப்படவில்லை. ஆகவே இந்தக் கருவி 13 ஆம் நூற்றாண்டிற்குப் பின் ஏற்பட்டிருக்கலாம் என்று அறியமுடிகிறது.
- நாகசுரம் என்ற பெயரே சரியானது. நாகசுரக் கருவி ஆச்சா மரத்தில் செய்யப்படுகிறது. வெட்டப்பட்ட ஆச்சா மரத்துண்டுகளை நீண்ட நாள்கள் வைத்திருந்த பிறகே இக்கருவி உருவாக்கப்படுகிறது.
- எனவே பழைய வீடுகளிலிருந்து பிரிக்கப்பட்ட ஆச்சா மரக்கட்டைகளைக் கொண்டே நாகசுரம் செய்யப்படுகிறது. நாகசுரத்தின் மேல்பகுதியில் சீவாளி என்ற கருவி பொருத்தப்படுகிறது. சீவாளி, நாணல் என்ற புல் வகையைக் கொண்டு செய்யப்படுகிறது.

கற்பவை கற்றபின்

பக்கம்: 167

1. உலகில் அமைதியை நிலவச் செய்வதில் இசைக்கு நிகர் வேறெதுவும் இல்லை - இத்தொடர் குறித்துச் சொற்போர் நிகழ்த்துக.

சொற்போர்

"நாளெல்லாம் நன்றொலிக்கும். பாட்டினிலே, நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்" என்றார் பாட்டுக்கொரு புலவன் பாரதி.

"இசையால் வசமாகா இதயம் எது" என்றார் மற்றொரு கவிஞர். இசை வாடிய பயிரை வளரச் செய்யும்; மழையைப் பொழியச்செய்யும்; எல்லா வல்ல இறைவனையும் தன் வசப்படுத்திக் கொள்ளும் பேராற்றல் வாய்ந்த இசை, உலகில் அமைதியையும் ஏற்படுத்தும் எனில் மிகையாகாது.

"அழகான இசை அது மனித குலத்தின்

உண்மையான நம்பிக்கை". அன்பையும், அமைதியையும், மன உருக்கத்தையும் இசையால் ஏற்படுத்த முடியும்

உலக அமைதிக்காக ஒவ்வொரு ஆண்டும், ஆஸ்திரேலியாவில் சிட்னி நகரில் இசை விழா நடத்தப்படுகிறது. ஆம் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் இவ்விழா நடைபெற்று வருகிறது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

நம் நாட்டிலும் சிதம்பரம் போன்ற கோவில்களில் உலக அமைதிக்காக, பல மணி நேரங்கள் தொடர் இசை (சான்றாக 12 மணி நேரம், 28 மணி நேரம்) நடத்தப்படுகிறது. அவ்விழாவில் பல மொழி பேசுபவர்கள், பல நாட்டவர்கள் கலந்து கொள்கின்றனர். அங்கு, இசை மட்டுமே ஆளுகை செய்கிறது. நாடோ, மொழியோ, பணமோ, பதவியோ, உயர்வோ, தாழ்வோ அல்ல என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

இசை என்றால் "ஒழுங்கு" என்றும் "இசையவைப்பது" என்றும் பொருள் உண்டு. இயற்கையைத் தன் வசப்படுத்தி, இறைவனையே தன் வசப்படுத்தி, இறைவனையே ஆட்கொள்ளும் இசை மனித மனங்களில் உள்ள வேறுபாடுகளைக் களைந்து அனைவரையும் இசைந்து போகச்செய்யும் ஆற்றல் உடையது. எனவே உலகில் அமைதியை நிலவச் செய்வதில் இசைக்கு நிகர் வேறொன்றும் இல்லை.

2. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள உங்களுக்குப் பிடித்த செய்யுள் பகுதிகளை வகுப்பில் இசையுடன் பாடி மகிழ்க.

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்துஎன்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீநான்.

※※⁂⁂⁂※※

கற்கண்டு

இயல் ஆறு

புணர்ச்சி

பாடநூல் வினாக்கள்

பலவுள் தெரிக

1.மரவேர் என்பது ..... புணர்ச்சி

அ) இயல்பு ஆ) திரிதல் இ) தோன்றல் ஈ) கெடுதல்

விடை : ஈ) கெடுதல்

சிறுவினா

1. கைபிடி, கைப்பிடி - சொற்களின் பொருள் வேறுபாடுகளையும் அவற்றின் புணர்ச்சி வகைகளையும் எழுதுக.

"கை பிடி" – கையைப் பிடித்துக் கொள் என்று பொருள்.
"கைப்பிடி" – கைப்பிடி அளவைக் குறிப்பது. (ஒரு கைப்பிடி பருப்பு கொடு)
கை + பிடி → கைபிடி – இயல்புப் புணர்ச்சி ஆகும்.
கை + பிடி → கைப்பிடி (தோன்றல்) – விகாரப்புணர்ச்சி ஆகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. எழுத்து வகையால் சொற்கள் ..... வகைப்படும்.

அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5

விடை : இ) 4

2. நிலை மொழி ஈற்றில் இ, ஈ, ஐ வரும் போது இடம்பெறும் உடம்படுமெய் .....

அ) யகர உடம்படுமெய் ஆ)வகர உடம்படுமெய்

இ) இரண்டும் வரும் ஈ) இரண்டும் வராது

விடை : யகர உடம்படுமெய்

3. வட்டு + ஆடினான் = எவ்வகை புணர்ச்சியில் வரும்?

அ) பண்புப்பெயர்ப் புணர்ச்சி ஆ) குற்றியலுகரப்புணர்ச்சி

இ) இயல்பு புணர்ச்சி ஈ) திசைப்பெயர் புணர்ச்சி

விடை : ஆ) குற்றியலுகரப்புணர்ச்சி

4. விகாரப் புணர்ச்சியில் ஏற்படும் மாற்றங்களில் இடம்பெறுபவை

அ) தோன்றல் ஆ) திரிதல் இ) கெடுதல் ஈ) விரிதல்

i) முதல் மூன்றும் சரி ii) முதல் இரண்டும் சரி

iii) இறுதி மூன்றும் சரி iv) அனைத்தும் சரி

விடை : i) முதல் மூன்றும் சரி

5. காது, பேசு - இது எவ்வகைக் குற்றியலுகரம்.

அ) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் ஆ) நெடில் தொடர்க் குற்றியலுகரம்

இ) வன்தொடர்க் குற்றியலுகரம் ஈ) மென்தொடர்க் குற்றியலுகரம்

விடை : ஆ) நெடில் தொடர்க் குற்றியலுகரம்

6. பொருத்தமானதைத் தேர்க.

1. நாக்கு - உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்
2. நெஞ்சு - இடைத்தொடர்க் குற்றியலுகரம்
3. மார்பு - மென்தொடர்க் குற்றியலுகரம்
4. முதுகு - வன்தொடர்க் குற்றியலுகரம்

அ) 4, 3, 2, 1 ஆ) 4, 2, 3, 1 இ) 3, 2, 1, 4 ஈ) 1, 2, 3, 4

விடை : அ) 4, 3, 2, 1

குறுவினா

1. உடம்படு மெய் என்றால் என்ன? அவை யாவை?

- உயிர் எழுத்தை இறுதியில் கொண்ட சொல்லும், உயிர்எழுத்தை முதலாக உடைய சொற்களும் வரும்போது, அவற்றை ஒன்று சேர்க்க ஒரு மெய் தோன்றும் அதுவே உடம்படுமெய் ஆகும்.
- அவை: யகர உடம்படுமெய், வகர உடம்படுமெய் ஆகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

சிறுவினா

1. இயல்புப் புணர்ச்சி, விகாரப்புணர்ச்சி - விளக்குக.

இயல்புப் புணர்ச்சி

- புணர்ச்சியின் போது மாற்றங்கள் எதுவுமின்றி இயல்பாகப் புணர்வது இயல்புப்புணர்ச்சி எனப்படும்.
- **சான்று :** மண் + மலை = மண்மலை

விகாரப் புணர்ச்சி

- புணர்ச்சியின் போது மாற்றங்கள் நிகழ்ந்தால் அது விகாரப்புணர்ச்சி எனப்படும். மாற்றம் மூன்று நிலைகளில் வரும். [தோன்றல், திரிதல், கெடுதல்]
- **சான்று :** கல்லூரி + சாலை = கல்லூரிச்சாலை

2. குற்றியலுகரப் புணர்ச்சியைச் சான்று தந்து விளக்குக.

- வட்டு + ஆடினான் = வட்(ட்+உ) + ஆடினான் = வட்ட் + ஆடினான் = வட்டாடினான்
- நிலைமொழியாக வரும் குற்றியலுகரத்தின் முன் உயிரெழுத்துகள் வந்தால், நிலைமொழியிலுள்ள உகரம் கெடும். வருமொழியிலுள்ள உயிரெழுத்து நின்ற மெய்யுடன் இணையும்.
- குற்றியலுகரத்தைப் போலவே சில முற்றியலுகரத்துக்கும் இவ்விரு விதிகளும் பொருந்தும். உறவு + அழகு = உற(வ்+உ) + அழகு = உறவ் + அழகு = உறவழகு

கற்பவை கற்றபின் பக்கம்: 170

1. எழுத்து வகை அறிந்து பொருத்துக.

1. இயல் – அ) உயிர் முதல் உயிரீறு
2. புதிது – ஆ) உயிர் முதல் மெய்யீறு
3. ஆணி – இ) மெய்ம்முதல் மெய்யீறு
4. வரம் – ஈ) மெய்ம்முதல் உயிரீறு

விடை: 1) ஆ, 2) ஈ, 3) அ, 4) இ

2. புணர்ச்சிகளை "முதல், ஈற்றுச்" சொல் வகையால் பொருத்துக.

1. செல்வி + ஆடினாள் – அ) மெய்யீறு + மெய்ம்முதல்
2. பாலை + திணை – ஆ) மெய்யீறு + உயிர் முதல்
3. கோல் + ஆட்டம் – இ) உயிரீறு + உயிர் முதல்
4. மண் + சரிந்தது – ஈ) உயிரீறு + மெய்ம்முதல்

விடை: 1) இ, 2) ஈ, 3) ஆ, 4) அ

3. சேர்த்து எழுதுக:

அ) தமிழ் + பேசு – தமிழ் பேசு
ஆ) தமிழ் + பேச்சு – தமிழ்ப்பேச்சு
இ) கை + கள் – கைகள்
ஈ) பூ + கள் – பூக்கள்

4. பொருத்தமான உடம்படு மெய்யுடன் இணைக்க.

அ) பூ + இனம் – பூவினம் (வகர உடம்படு மெய்)
ஆ) இசை + இனிக்கிறது – இசையினிக்கிறது (யகர உடம்படுமெய்)
இ) திரு + அருட்பா – திருவருட்பா (வகர உடம்படு மெய்)
ஈ) சே + அடி – சேவடி (வகர உடம்படுமெய்)

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

சிந்தனை கிளர் வினாக்கள்:

அ) குற்றியலுகரம், முற்றியலுகரம் இவற்றின் வேறுபாட்டை எழுதுக.

- குற்றியலுகரத்தில் வரும் "உ" கரமானது தனக்குரிய ஒரு மாத்திரையில் இருந்து அரை மாத்திரையாக குறுகி ஒலிக்கும்.
- முற்றியலுகரத்தில் வரும் "உ" கரமானது தன் ஒரு மாத்திரை அளவில் குறையாது ஒலிக்கும்.

ஆ) புணர்ச்சி இலக்கணம் கற்பது உரைநடை எழுதுவதற்கு உதவும் - இக்கூற்றை ஆய்க.

ஒரு சொல்லைப் பிரித்தால் வரும் நிலைமொழி + வருமொழி - எவ்வாறு புணரும் என்பதை அறியும் பொழுதுதான் உரைநடை எழுதும் போது ஏற்படும் ஒலி நிலை மாற்றங்களை உணர்ந்து எழுத இயலும். வல்லினம், மிகும் மற்றும் மிகாவிடங்கள், சொற்சேர்க்கை ஆகியன உரைநடைக்கு இன்றியமையாதாகும். அவற்றைத் தெறிவாகத் தருவது புணர்ச்சி இலக்கணம் எனவே புணர்ச்சி இலக்கணம் கற்பது உரைநடை எழுத உதவும்.

இ) கீழ்க்காணும் பத்தியில் உள்ள சொற்களைச் சேர்த்து எழுதுக.

தமிழின் 'தொன்மை + ஆன' இலக்கண 'நூல் + ஆகிய' 'தொல்காப்பியம் + இல்' 'சிற்பம் + கலை' பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. போரில் விழுப்புண் பட்டு இறந்த வீரருக்கு நடுகல் நடப்படும். 'அ + கல்லில் அவ்வீரரின் உருவம் பொறிக்கப்பெறும். 'தமிழக + சிற்பம் + கலை' யின் தோற்றத்திற்கான சான்றாக 'இதனை + கொள்ளலாம்'. சிலப்பதிகாரத்தில் 'கண்ணகிக்கு + சிலை' வடித்த செய்தி இடம் பெற்றுள்ளது. மாளிகைகளில் பல 'சுதை + சிற்பங்கள்' இருந்ததை மணிமேகலை மூலம் 'அறிய + முடிகிறது'.

1.	தொன்மை +ஆன	=	தொன்மையான
2.	நூல் + ஆகிய	=	நூலாகிய
3.	தொல்காப்பியம் + இல்	=	தொல்காப்பியத்தில்
4.	சிற்பம் + கலை	=	சிற்பக்கலை
5.	அ + கல்லில்	=	அக்கல்லில்
6.	தமிழக + சிற்பம் + கலை	=	தமிழகச் சிற்பக்கலை
7.	இதனை + கொள்ளலாம்	=	இதனைக் கொள்ளலாம்
8.	கண்ணகிக்கு + சிலை	=	கண்ணகிக்குச் சிலை
9.	சுதை + சிற்பங்கள்	=	சுதை சிற்பங்கள்
10.	அறிய + முடிகிறது	=	அறிய முடிகிறது

ஈ) படக்காட்சியிலிருந்து இரு சொல் தொடர்களை அமைத்து, அவற்றின் புணர்ச்சி வகையினைக் கண்டறிக.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

(எ.கா) மரக்கிளை	= மரம் + கிளை	மரக்கிளை	– திரிதல் விகாரப்புணர்ச்சி,
மூன்று பெண்கள்	= மூன்று + பெண்கள்	மூன்றுபெண்கள்	– இயல்புப் புணர்ச்சி
அ) நிறைகுடம்	= நிறை + குடம்	நிறைகுடம்	– இயல்புப் புணர்ச்சி
ஆ) உழவுத் தொழில்	= உழவு + தொழில்	உழவுத் தொழில்	– தோன்றல் விகாரப் புணர்ச்சி

மொழியை ஆள்வோம்

பக்கம்: 173

படித்துச் சுவைக்க.

வான் தந்த பாடம்
எத்தனை பெரிய வானம்!
எண்ணிப்பார் உனையும் நீயே;
இத்தரை, கொய்யாப் பிஞ்சு,
நீ அதில் சிற்றெறும்பே,
அத்தனை பேரும் மெய்யாய்
அப்படித்தானே மானே?
பித்தேறி மேல்கீழ் என்று
மக்கள் தாம் பேசல் என்னே!
-பாவேந்தர் பாரதிதாசன்

The Lesson the sky Teaches
How Vast is the sky!
Think you of yourself;
The earth is a tiny
Guava fruit; you. like all
Others are a tiny ant
In it? is that not so?
Why talk madly of
The high and the low?
Pavendar Bharatidasan
(translated by P. Parameswaran)

மொழி பெயர்க்க:

1. Strengthen the body. : **உடலினை உறுதி செய்**
2. Love your food : **ஊண் மிக விரும்பு**
3. Thinking is great : **எண்ணுவது உயர்வு**
4. Walk like a bull. : **ஏறு போல் நட**
5. Union is strength : **ஒற்றுமை வலிமையாம்**
6. Practice what you have learnt : **கற்றது ஒழுகு**

இவை அனைத்தும் "பாரதியாரின் புதிய ஆத்திச்சூடி"

மரபுத் தொடர்களைக் கொண்டு தொடர் அமைக்க:

எட்டாக்கனி, உடும்புப்பிடி, கிணற்றுத்தவளை, ஆகாயத்தாமரை, எடுப்பார் கைப்பிள்ளை, மேளதாளத்துடன்.

எ.கா: எட்டாக்கனி :

முயன்றால் எந்தச் செயலிலும் வெற்றி என்பது எட்டாக்கனி இல்லை.

உடும்புப்பிடி :

என் தம்பிக்கு பிடிவாத குணமாததால் பிடித்தால் உடும்புப்பிடிதான்.

கிணற்றுத் தவளை :

கிணற்றுத் தவளை போல் உன் வாழ்வை ஒரு குறுகிய எல்லைக்குள் சுருக்கிக் கொள்ளாதே!
(அல்லது) கிணற்றுத் தவளை போல் எதுவும் தெரியாமல் இருக்காதே.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

ஆகாயத்தாமரை :

ஆகாயத் தாமரையைப் பறிக்க விரும்புவது போல் இல்லாத ஒன்றை விரும்பி ஏற்காதே.

எடுப்பார் கைப்பிள்ளை :

என் நண்பன் எடுப்பார் கைப்பிள்ளை போல் யார் எதனைச் சொன்னாலும் ஏற்றுக்கொள்வான்; நம்பி விடுவான்.

மேளதாளத்துடன் :

எம் பள்ளிக்கு வருகை தந்த அமைச்சரை மேளதாளத்துடன் வரவேற்றோம்.

பத்தியில் இடம் பெற்றுள்ள இயல்புப் புணர்ச்சிகளையும், விகாரப் புணர்ச்சிகளையும் எடுத்து எழுதுக:

காஞ்சி கயிலாசநாதர் கோவில் சுற்றுச்சுவர் முழுவதும் சிற்பங்களின் கலைக்கூடமாகத் திகழ்கிறது. அதே போன்று காஞ்சி வைகுந்த பெருமாள் கோவிலிலும் பல்லவர் காலச் சிற்பங்கள் மிகுதியாக உள்ளன. இங்குத் தெய்வச்சிற்பங்கள் மட்டுமல்லாது பிற சிற்பங்களும் கோவில் உட்புறச் சுவரில் செதுக்கப்பட்டுள்ளன. பல்லவர் காலக் குடைவரைக் கோவில்களின் நுழைவு வாயிலின் இருபுறங்களிலும் காவலர்கள் நிற்பது போன்று சிற்பங்கள் படைக்கப்பட்டுள்ளன.

இயல்புப் புணர்ச்சி சொற்கள்:

நுழைவு வாயிலின் – நுழைவு + வாயிலின்

நிற்பது போன்று – நிற்பது + போன்று

விகாரப்புணர்ச்சிச் சொற்கள்

1. **தோன்றல் விகாரப் புணர்ச்சி**

சுற்று + சுவர் → சுற்றுச்சுவர்

கலை + கூடம் → கலைக்கூடம்

தெய்வம் + சிற்பங்கள் → தெய்வச்சிற்பங்கள்

குடைவரை + கோயில் → குடைவரைக்கோயில்

2. **கெடுதல் விகாரப் புணர்ச்சி**

வைகுந்தம் + பெருமாள் → வைகுந்த பெருமாள்

3. **திரிதல் விகாரப் புணர்ச்சி**

பல்லவர் காலம் + குடைவரைக் கோவில் → பல்லவர் காலக் குடைவரைக் கோவில்

மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

1. **இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை போட்டனர்.**

இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை வேய்ந்தனர்.

2. **கயல்பானை செய்யக் கற்றுக் கொண்டாள்.**

கயல் பானை வனையக் கற்றுக் கொண்டாள்.

3. **நேற்று தென்றல் காற்று அடித்தது.**

நேற்று தென்றல் வீசியது

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

4. தென்னை மட்டையிலிருந்து நார் எடுத்தார்.

தென்னங்கீற்றில் இருந்து நார் கிழித்தனர் (கிழித்தார்)

5. அணில் பழம் சாப்பிட்டது

அணில் பழம் தின்றது

6. கொடியிலுள்ள மலரை எடுத்து வா.

கொடியில் உள்ள மலரைக் கொய்து வா. (அல்லது) கொடியில் உள்ள பூக்களைப் பறித்து வா?

கவிதை படைக்க.

மூடநம்பிக்கை, புவியைப் போற்று, அன்பினவழி

எ.கா:

மூட நம்பிக்கை

பூனை குறுக்கே போனதற்குக்
கவலைப்படுகிறாயே!
அந்தப் பூனைக்கு என்ன ஆனதோ?

புவியைப் போற்று

புத்துலகமாய் மாற்று
சுற்றுச்சூழல் காத்திடு
சுகமாய் வாழ்ந்திடு
சுகமாய் வாழ்ந்திடு
உயிரனைத்தும் பேணிடு
உலகையழிக்க நாணிடு


அன்பின் வழி

அன்பு எனும் ஒற்றை வழியே
இவ்வுலகினை ஆள்கிறது
அன்பு வழியும் தெய்வீக வழியும் ஒன்றே
எங்கே அன்பின் வழி உளதோ
அங்கே தெய்வம் குடி கொள்ளும்!

மொழியோடு விளையாடு

பக்கம்: 174

விடையைத் தமிழ் எண்களில் எழுதுக.



கண்டுபிடிக்க.

1. **எண்ணும் எழுத்தும் கண் - இத்தொடரை ஒருவர் 1, 2, 3, 4, 1, 5, 6, 7, 4, 8, 2 என்று குறிப்பிடுகிறார். இதே முறையைப் பின்பற்றி கீழ்க்காணும் சொற்களை எப்படிக் குறிப்பிடுவார்.**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

விடைகள்:

அ) எழுது → 1, 5, 7 ஆ) கண்ணும் → 8, 2, 3, 4 இ) கழுத்து → 8, 5, 6, 7 ஈ) கத்து → 8, 6, 7

2. என் வகுப்பில் படிக்கும் அனைவரும் புதிய புத்தகம் வைத்திருந்தனர். இராமனும் புதிய புத்தகம் வைத்திருந்தான். எனவே, இராமன் என் வகுப்பு மாணவன் - இக் கூற்று.

அ) உண்மை ஆ) பொய் இ) உறுதியாகக் கூறமுடியாது

விடை: இ) உறுதியாகக் கூறமுடியாது

காரணம் : அனைவரும் என்று கூறிய பின் இராமன் வேறு வகுப்பு மாணவனாகக் கூட இருக்கலாம்.

அகராதியில் காண்க.

ஏங்கல், கிடுகு, தாமம், பான்மை, பொறி

அ) ஏங்கல் - ஓசை, மயிற்குரல், அழுதல், குழந்தைகளுக்கு வரும் ஒருவகை நோய்

ஆ) கிடுகு - கேடகம், முடைந்த ஓலைக் கீற்று, சட்டப்பலகை

இ) தாமம் - பூமாலை, வடம், புகழ், ஒளி, பரமபதம்

ஈ) பான்மை - குணம், தகுதி, முறைமை, சிறப்பு

உ) பொறி - புள்ளி, தழும்பு, எந்திரம், ஒளி, ஐம்பொறி

உவமைத் தொடர்களை உருவகத் தொடர்களாக மாற்றுக.

1. மலர்விழி வீணை வாசித்தாள்: கேட்டவர் வெள்ளம் போன்ற இன்பத்தில் நீந்தினர்.
மலர்விழி வீணை வாசித்தாள். கேட்டவர் இன்ப வெள்ளத்தில் நீந்தினர்.
2. குழலியின் இசையைச் சுவைத்தவர், கடல் போன்ற கவலையிலிருந்து நீங்கினர்.
குழலியின் இசையைச் சுவைத்தவர் கவலைக்கடலில் இருந்து நீங்கினர்.
3. தேன் போன்ற மொழியைப் பவள வாய் திறந்து படித்தாள்
பவளவாய் திறந்து மொழித்தேனைப் படித்தாள்.
4. முத்துநகை தன் வில் போன்ற புருவத்தில் மை தீட்டினாள்.
முத்துநகை தன் புருவவில்லில் மை தீட்டினாள்.

காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



என்னை நானே
செதுக்கும் சிற்பியாவேன் - ஆம்
கல்வி எனும் உளி கொண்டு
உயரிய சிந்தனை செயல் எனும்
நுட்பங்களுடன் என்னை நானே
வடித்து கொள்கிறேன் சிற்பமாக .....

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

செயல்திட்டம்

உங்கள் மாவட்டத்தின் கலைநயம் மிக்க இடங்களின் சிறப்புகளைப் படங்களுடன் திரட்டிப் பள்ளியில் காட்சிப்படுத்துக.

அந்தந்த மாவட்டத்தின் சிறப்புகளைக் குறிக்கும் தொகுப்பேட்டை, மாணவர்களே உருவாக்குங்கள்.

நிற்க அதற்குத்தக...

என்னை மகிழச் செய்த பணிகள்

(எ.கா)

1. இக்கட்டான நேரத்தில் தம்பிக்கு உதவியதற்காக அப்பாவிடம் பாராட்டுப் பெற்றேன்.
2. எனது வகுப்பறையில் கரும்பலகையின் கீழ் சிதறிக் கிடந்த சுண்ணக் கட்டித்துண்டுகளைத் திரட்டி எடுத்துக் குப்பைத் தொட்டியில் போட்டதற்கு ஆசிரியர் மற்றும் வகுப்புத் தோழர்களிடம் கைதட்டல் பெற்றேன்.
3. **வயதான என் பாட்டியின் விருப்பத்தை நிறைவேற்ற அவர்களைப் பாதுகாப்பாகக் கோவிலுக்கு அழைத்துச் சென்றேன். அம்மா பாராட்டினாள் - மகிழ்ந்தேன்.**
4. **செஞ்சிலுவைச் சங்கத்தில் இணைந்து மாணவப் பருவத்திலே சேவை செய்து அனைவரது பாராட்டையும் பெற்றேன்; மகிழ்ச்சியடைந்தேன்.**

கலைச்சொல் அறிவோம்

குடைவரைக்கோயில் - (Cave temple)

பெரிய மலை (வரை) களைக் குடைந்து அமைக்கப்பட்ட கோயில்களைக் குறிப்பது

கருவூலம் - (Treasury)

அரசின் செல்வம் மற்றும் நிதி சார்ந்த அனைத்தும் பாதுகாக்கப்படும் இடம்.

மதிப்புறு முனைவர் - (Honorary Doctorate)

தொழில்துறை, கலை, அரசியல், இலக்கியம் ஆகிய துறைகளில் சிறப்பாக பங்காற்றி வாழ்நாள் சாதனை புரிபவர்களுக்கு வழங்கப்படும் கௌரவ பட்டம்.

மெல்லிசை - (melody)

இனிமையான இசையை மென்மையாக வெளிப்படுத்துதல்

ஆவணக் குறும்படம் - (Document short film)

ஒரு சமூகப் பிரச்சனை, அதன் தீவிரம் அதற்கான தீர்வுகள் ஆகியவற்றை குறைந்த நேரத்தில் மக்கள் மனதில் பதியும் வண்ணம் எடுத்துச் சொல்லும் படம்.

புணர்ச்சி - (combination)

தமிழ் இலக்கணத்தில் இடம் பெறுவது. ஒரு சொல்லைப் பிரித்து நிலைமொழியும் வருமொழியும் எவ்வாறு இணைகின்றன என்பதைக் கூறும் இலக்கணம்.

※※⁂⁂⁂※※

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

வாழ்வியல்

இயல் ஆறு

திருக்குறள்

புல்லறிவாண்மை

அதிகார விளக்கம் : அறிவு இல்லாமையும், தானாகச் செயலைச் செய்யும் தெளிவு இல்லாமையும் உடையாரின் இழிவு கூறப்படுகிறது.

1. **ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்**
போஒம் அளவும்ஓர் நோய்

விளக்கம் : தனக்கான செயலை (நன்மையை) பிறர் எடுத்துச் சொன்னாலும் செய்யாதவனாய் தானாகவும் சிந்தித்துச் செய்யாதவனாய் உள்ளவன், வாழும் காலம் முதல் உயிர் போகும் காலம் வரை தீராத நோயாளி ஆவான்.

2. **காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்**
கண்டானாம் தான்கண்ட வாறு.

விளக்கம் : அறிவில்லாதவனுக்குத்தனதுஅறிவைக்காட்டநினைப்பவன்,தானேஅறிவில்லாதவனாய் நிற்பான். அறிவு இல்லாதவனோ தான் அறிந்த வரையில் தன்னை அறிவுள்ளவனாக எண்ணித் தோன்றுவான். (கொள்வான்)

சொல்லும் பொருளும்:

ஏவலும் - எடுத்துச் சொல்லுதல் **செய்கலான்** - செய்யாதவன்

தான் தேறான் - தானாகத் தெளிந்து செய்யாதவன் **காணாதான்** - அறிவில்லாதவன்

இகல்

அதிகார விளக்கம் : மற்றவர்களோடு கூடி வாழா தீய பண்பே இகல் எனப்படும்.

3. **இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்**
துன்பத்துள் துன்பங் கெடின்

விளக்கம் : துன்பங்களில் மிகக் கொடிதான மனக்கசப்பு என்னும் பகையாகிய துன்பம் அழிந்து விட்டால், இன்பங்களில் பெரிய இன்பம் உண்டாகும்.

சொல்லும் பொருளும்

இகல் - மனக்கசப்பால் வரும் பகை

குடிமை

அதிகார விளக்கம் : உயர்குடிப்பிறப்பின் சிறப்பை உணர்த்தும் அதிகாரம்

4. **அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்**
குன்றுவ செய்தல் இலர்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

விளக்கம் : கோடி கோடியாய்ப் பொருளை அடுக்கிக் கொடுத்தாலும், அத்தகுப் பொருளைப் பெறுவதாக இருந்தாலும் உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர்கள் ஒழுக்கக் குறைவான செயல்களைச் செய்யமாட்டார்கள்.

சொல்லும் பொருளும்:

கோடி - கோடிக்கணக்கான பொருள்

குடிப்பிறந்தார் - உயர்குடிப்பிறந்தவர்

குன்றுவ செய்தல் இலர் - ஒழுக்கக் கேடான செயல்களைச் செய்யமாட்டார்.

சான்றாண்மை

அதிகார விளக்கம் : உயர்குணம் பொருந்திய சான்றோர்களின் பண்புகளையும் சிறப்புகளையும் கூறும் அதிகாரம்

5. அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ(டு)
ஐந்துசால்பு ஊன்றிய தூண்.

விளக்கம் : அன்பு, பழிக்கு நாணுதல், வெட்கப்படல், கொடுத்து உதவும் பண்பு இரக்கம், உண்மை, ஆகிய ஐந்தும் சான்றாண்மை என்னும் விதானத்தை (கூரையை) தாங்கும் தூண்களாகும்.

6. ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை.

விளக்கம் : செயல் செய்யும் ஆற்றல் உடையவரின் பெரிய ஆற்றலே, பணிவுடன் நடத்தல் ஆகும். அதுவே, பகைவர்களையும் நண்பர்களாக்கும் சான்றோர் தம் ஆயுதமாகும்.

7. ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்(கு)
ஆழி எனப்படு வார்,

விளக்கம் : சான்றாண்மைக்குக் கடல் என்று, மதிக்கப்படுகின்றவர்கள் சான்றோர். உலகமே அழியும் ஊழிக்காலம் வந்தாலும், தம் நிலையில் இருந்து வேறுபடாமல் இருப்பர்.

சொல்லும் பொருளும்:

நாண் - பழிக்கு நாணுதல்
மாற்றாரை - பகைவரை
ஆழி - கடல்
ஒப்புரவு - அனைவரிடமும் இணக்கம்
பெயரார் - தன் நிலையில் மாறாதவர்

நாணுடைமை

அதிகார விளக்கம் : தகாத செயல்களைச் செய்வதற்கு வெட்கப்படுதல்

8. பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்
அறம்நாணத் தக்கது உடைத்து.

விளக்கம் : பிறர் நாணத்தகுந்த பழிச் செயல்களுக்கு அஞ்சாமல், நாணம் இன்றி ஒருவன் இருப்பானாகில், அறக்கடவுள் நாணி அவனைக் கைவிட்டு விடும்.

சொல்லும் பொருளும்:

நாணம் - அஞ்சுதல், வெட்கப்படுதல்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

உழவு

அதிகார விளக்கம் : உழவுத் தொழிலின் மேன்மையையும், சிறப்பையும் கூறுவது

9. சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

விளக்கம் : உலகம் பல தொழில்களைச் செய்து இயங்கினாலும் (சுழன்று வந்தாலும்), உலகமானது ஏர்த்தொழிலாகிய உழவுத்தொழிலை நம்பியே அதன் பின் நிற்கிறது. அதனால் எவ்வளவு துன்பத்திற்கு உள்ளானாலும் உழவுத்தொழிலே முதன்மையான சிறந்த தொழிலாகும்.

10. உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃதாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து.

விளக்கம் : பிற தொழில்கள் செய்யும் அனைவரையும் உழுபவரே தாங்கி நிற்பவர் ஆவார். எனவே உழவர்களே உலகத்துக்கு அச்சாணி போன்றவர் ஆவார்.


சொல்லும் பொருளும்:

சுழன்று	- இயங்கி	**உழந்தும்**	- துன்பத்திற்கு உள்ளாகுதல்
தலை	- முதன்மையான	**எழுவாரை**	- பிற தொழில் செய்து வாழ்வோரை
பொறுத்து	- தாங்கும்	**ஆணி**	- அச்சாணி

கற்பவை கற்றபின்

பக்கம்: 179

1. படத்திற்கு ஏற்ற குறளைத் தேர்வு செய்க.



அ) இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்
துன்பத்துள் துன்பங் கெடின்.

ஆ) ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவும் ஓர் நோய்.

இ) சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

விடை: இ) சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

2. பொருளுக்கேற்ற அடியைக் கண்டுபிடித்து பொருத்துக. (விடையுடன்)

கண்டானாம் தான் கண்டவாறு	தெரிந்த அளவில் அறிவுடையவனாய்த் தோன்றுவான்
அறம் நாணத்தக்கது உடைத்து	அறம் வெட்கப்பட்டு அவனை விட்டு விலகிப் போகும்
மாற்றாரை மாற்றும் படை	பகைவரையும் நட்பாக்கும் கருவி

3. ஐந்து சால்புகளில் இரண்டு

அ) வானமும் நாணமும் ஆ) நாணமும் இணக்கமும்
இ) இணக்கமும் சுணக்கமும் ஈ) இணக்கமும் பிணக்கமும்

விடை : ஆ) நாணமும் இணக்கமும்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

4. கோடிட்ட இடங்களுக்கான விடையைக் கட்டத்துள் கண்டறிந்து வட்டமிடுக.

ஒ	ப்	பு	று
க	ப	ர	வ
ட	டை	வு	த
ல்	உ	ழ	வ
ம்	ற	அ	ர்

அ)அனைவரிடமும் இணக்கம் என்பதன் பொருள் - **ஒப்புரவு**

ஆ)உலகத்துக்கு அச்சாணி போன்றவர்- **உழவர்**

இ)தான் நாணான் ஆயின் ---------- நாணத்தக்கது - **அறம்**

ஈ) ஆழி என்பதன் பொருள் ---------- **கடல்**

உ)மாற்றாரை மாற்றும் ---------- - **படை**

ஊ) ஒழுக்கமான குடியில் பிறந்தவர் ---------- செய்வதில்லை - **தவறு**

5. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்
இக்குறளின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு பக்கக் கதை எழுதுக.

நான் வசிக்கும் ஊருக்கு அருகில் ஒரு சிறிய கிராமம் (சிற்றூர்) உள்ளது. 100 குடும்பங்களே உடைய அச்சிற்றூரில் உழவே பிரதானமான தொழில். அங்குள்ள மக்களுக்கு கல்வியறிவு கிடையாது. அவ்வூருக்கு நன்கு படித்த பணி புரிந்து ஓய்வு பெற்ற ஒருவர் குடி வந்தார். அவர் பெயர் சாமிநாதன்.

அண்டை ஊரில் இருந்து ஒரு செல்வந்தன் இச்சிற்றூர் மக்களின் விளைபொருட்களை அநியாயமாக அடித்துப் பிடித்து அரைகுறை விலையில் வாங்கிக் கொண்டிருந்தான்.

சாமிநாதன் அந்த ஊருக்கு வந்தவுடன் இதனைத் தெரிந்து கொண்டார். மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மக்கள் நியாயவிலையாய் இருந்தால் வாங்கிக்கொள் இல்லையென்றால் சென்று விடு என்று மக்கள் குரல் கொடுக்கத் தொடங்கினர். செல்வந்தன் காரணம் அறிந்து கொண்டு சாமிநாதனைச் சந்தித்து வழக்கமாக நான் செய்வதைத் தடையின்றி செய்ய உதவினால், உமக்குச் சரிபாதி பணத்தையும், உனக்குத் தேவையான தானியவகைகள் அனைத்தையும் விலையில்லாமல் உமக்கும் தருகிறேன் என்றார்.

ஆனால் சாமிநாதனோ ..... நீ கோடி கோடியாய்க் கொடுத்தாலும், நீதி தவறி நடக்க மாட்டேன், இந்த அப்பாவி மக்களின் வயிற்றில் உன்னை அடிக்கவிட மாட்டேன் என்று ஓடிப்போ ..... என்று விரட்டி விட்டார்..... தன் நிலையில் இருந்து மாறவில்லை அவர்.

ஆம்.

“அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்

குன்றுவ செய்தல் இலர்” அன்றோ.

பாடநூல் வினாக்கள்

சிறுவினா

1. இறக்கும் வரை உள்ள நோய் எது?

தன் செயலைப் பிறர் எடுத்துச் சொல்லியும் செய்யாதவனாய், தானும் சிந்தித்து செயல்படத் தெரியாதவனாய் உள்ளவனின் வாழ்வு, உயிர் போகும் வரை உள்ள நோய் ஆகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

"ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஓம் அளவும்ஓர் நோய்".

2. அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ(டு)
ஐந்துசால்பு ஊன்றிய தூண் -
இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்கி எழுதுக.

இக்குறட்பாவில் அமைந்துள்ள அணி ஏகதேச உருவக அணி ஆகும்.

அணி விளக்கம் : ஒரு செய்யுளில் தொடர்புடைய இரு பொருட்களுள், ஒன்றை மட்டும் உருவகம் செய்து, மற்றொன்றை உருவகம் செய்யாமல் விட்டு விடுவது ஏகதேச உருவக அணி எனப்படும்.

பொருத்தம் : மேற்கூறிய இக்குறட்பாவில் சான்றோர் வாழ்விற்குத் தேவையான ஐந்து நற்குணங்களை தூண் என உருவகித்து விட்டு, சான்றாண்மையை (விதானம் - கூரை) என உருவகிக்காமல் விட்டு விட்டதால் ஏகதேச அணிக்குப் பொருந்தி வருகிறது.

3. உலகிற்கு அச்சாணி எனப்படுபவர் யார்? ஏன்?
உலகிற்கு அச்சாணியாக விளங்குபவர் உழுபவரே ஆவார். மற்ற தொழில் செய்பவரையும் உழுபவரே தாங்கி நிற்பதால் அவ்வாறு அழைக்கப்படுகிறார்.

4. காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான் கண்டவாறு
இக்குறட்பாவில் பயின்று வரும் தொடைநயத்தை எழுதுக.

காணாதான் காணான்
கண்டானாம் கண்டவாறு

இதில் உள்ள நயம்: சீர் மோனை, சீர் எதுகை

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. அடுக்கிய கோடி பெறினும் குன்றுவ செய்யாதவர்
அ) குடிஇழிந்தார் ஆ) குடி இறந்தார்
இ) குடிப்பிறந்தார் ஈ) குடிமகிழந்தார் **விடை : இ) குடிப்பிறந்தார்**

2. ஊழி பெயரினும் தான் பெயராதவர்
அ) பொய்மையுடையவர் ஆ) இழித்தன்மையுடையவர்
இ) சான்றாண்மையுடையவர் ஈ) கொடுங்கோலர்
விடை : இ) சான்றாண்மையுடையவர்

3. "சாகும் வரை உள்ள நோய்" - என்று வள்ளுவர் யாரைக் கூறுகிறார்?
அ) அறிவுடையாரை ஆ) புல்லறிவுடையாரை
இ) அன்புடையாரை ஈ) பண்புடையாரை **விடை : ஆ) புல்லறிவுடையாரை**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

4. காணாதான் காட்டுவான் - காணாதான் யார்?

அ) அறிவுடையான் ஆ) அறிவில்லாதவன்

இ) அன்புடையான் ஈ) பண்புடையான் **விடை : ஆ) அறிவில்லாதவன்**

குறுவினா

1. அறம் யாரை விட்டு விலகிப்போகும்?

பிறர் வெட்கப்படும் பழிக்குக் காரணமாய் இருந்தும் தான் வெட்கப்படவில்லை என்றால், அறம் வெட்கப்பட்டு அவனை விட்டு விலகிப் போகும்.

2. சிறந்த இன்பம் எப்போது பெறலாம்?

துன்பங்களில் மிகக் கொடிதான மனக்கசப்பு என்னும் பகையாகிய துன்பம் அழிந்து விட்டால் இன்பங்களில் சிறந்த இன்பத்தைப் பெறலாம்.

"இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்
துன்பத்துள் துன்பங் கெடின்"

3. உழவே தலை - ஏன்?

உலகம் பல தொழில்களால் இயங்குகிறது. எனினும் உலகமானது ஏர்த்தொழிலாகிய உழவுத்தொழிலுக்குப் பின்னாலேயே போகும். அதனால் வருந்தி உழைத்தாலும் உழவே சிறந்தது.

சிறுவினா

1. சான்றாண்மை குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகள் யாவை?

- பிறரிடம் அன்பும் பழிக்கு நாணுதலும் அனைவரிடமும் இணக்கமும் இரக்கமும் உண்மையும் சான்றாண்மையைத் தாங்கும் தூண்கள்! அணி - ஏகதேச உருவக அணி
- செயல் செய்பவரின் ஆற்றல், பணிவுடன் நடத்தல். அதுவே சான்றோர்க்குப் பகைவரையும் நட்பாக்கும் கருவி.
- ஊழிக்காலம் வந்தாலும் சான்றாண்மை என்னும் கடலுக்குக் கரை போன்றவர் நற்பண்புகளிலிருந்து மாறமாட்டார்!

2. உழவுத் தொழிலை வள்ளுவர் எவ்வாறு போற்றுகிறார்?

- உலகம் பல தொழில்களைச் செய்து இயங்கினாலும் (சுழன்று வந்தாலும்), உலகமானது ஏர்த்தொழிலாகிய உழவுத்தொழிலை நம்பியே அதன் பின் நிற்கிறது. அதனால் எவ்வளவு துன்பத்திற்கு உள்ளானாலும் உழவுத்தொழிலே முதன்மையான சிறந்த தொழிலாகும்.
- பிற தொழில்கள் செய்யும் அனைவரையும் உழுபவரே தாங்கி நிற்பவர் ஆவார். எனவே உழவர்களே உலகத்துக்கு அச்சாணி போன்றவர் ஆவார்.

3. சான்றாண்மையைத் தாங்கும் தூண்கள் யாவை?

- அன்பு
- பழிக்கு அஞ்சுதல் (நாண்)
- ஒப்புரவு (இணக்கம்)
- கண்ணோட்டம்
- வாய்மை - இவையே சான்றாண்மையைத் தாங்கும் தூண்கள் ஆகும்.

⁂

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

உரைநடை உலகம்

இயல் ஏழு

இந்திய தேசிய ராணுவத்தில் தமிழர் பங்கு

பாடநூல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. இந்திய தேசிய இராணுவம் ..... இன் தலைமையில் ..... உருவாக்கினர்.

அ) சுபாஷ் சந்திரபோஸ், இந்தியர். ஆ) சுபாஷ் சந்திரபோஸ், ஜப்பானியர்.

இ) மோகன்சிங், ஜப்பானியர். ஈ) மோகன்சிங், இந்தியர்.

விடை: இ) மோகன்சிங், ஜப்பானியர்.

2. கூற்று : இந்திய தேசிய இராணுவப் படைத்தலைவராக இருந்த தில்லான், 'இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும் ஆத்மாவும் தமிழர்கள்தான் என்றார்.

காரணம் : இந்திய தேசிய இராணுவத்திற்கு வலுச்சேர்த்த பெருமைக்கு உரியவர்கள் தமிழர்கள்.

அ) கூற்று சரி, காரணம் சரி. ஆ) கூற்று சரி, காரணம் தவறு.

இ) கூற்று தவறு, காரணம் சரி. ஈ) கூற்று தவறு, காரணம் தவறு.

விடை: அ) கூற்று சரி, காரணம் சரி.

குறுவினா

1. இந்திய தேசிய இராணுவத்தில் குறிப்பிடத் தகுந்த தமிழக வீரர்கள் யாவர்?

- கேப்டன் தாசன்
- அப்துல் காதர்
- சிதம்பரம்
- லோகநாதன்
- ஜானகி
- இராஜாமணி
- கேப்டன் லட்சுமி
- இராமு

2. தாய்நாட்டுக்காக உழைக்க விரும்பினால் எப்பணியைத் தேர்ந்தெடுப்பீர்கள்? ஏன்?

நான் இராணுவப் பணியை தாய்நாட்டுக்காக உழைக்க தேர்ந்தெடுப்பேன். ஏனெனில், தாய்நாட்டைப் பாதுகாக்கவும், இந்திய ஒருமைப்பாட்டையும் இறையாண்மையைப் பேணவும் கிடைத்த வாய்ப்பாக இராணுவப் பணியைக் கருதுகிறேன்.

3. 'டெல்லி நோக்கிச் செல்லுங்கள்' என்ற முழக்கம் யாரால் எப்போது செய்யப்பட்டது?

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் இந்திய தேசிய இராணுவத்தின் பொறுப்பை ஏற்க, ஜெர்மனியில் இருந்து சிங்கப்பூர் வந்தார். 1943-ஆம் ஆண்டு சூலை மாதம் 9ஆம் நாள் பொறுப்பை ஏற்கும்போது 'டெல்லி நோக்கிச் செல்லுங்கள்' (டெல்லி சலோ) எனப் போர் முழக்கம் செய்தார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

சிறுவினா

1. குறிப்பு வரைக: டோக்கியோ கேடட்ஸ்.

- இந்திய தேசிய இராணுவத்தில் இருந்து 45 வீரர்கள் நேதாஜியால் தேர்வு செய்யப்பட்டு வான்படைத் தாக்குதலுக்கான சிறப்புப் பயிற்சி பெறுவதற்காக, ஜப்பானில் உள்ள இம்பீரியல் மிலிட்டரி அகடமிக்கு அனுப்பப்பட்ட பயிற்சிப் பிரிவின் பெயர்தான் டோக்கியோ கேடட்ஸ்.
- இரண்டாம் உலகப் போர்ச்சூழலில் இந்திய தேசிய இராணுவ வீரர்கள் பர்மாவில் இருந்து காட்டு வழியாகப் பயணம் செய்து சயாம் மரண ரயில் பாதையைக் கடந்து, படகு வழியாகத் தப்பி, கப்பல் ஒன்றில் ஏறி, சீறும் அலைகளில் சிக்கித் தவித்து 45 பேரும் ஜப்பானின் கியூசு தீவை அடைந்து பயிற்சி பெற்றனர்.
- பனிபடர்ந்த மைதானத்தில் காலை 5 மணிக்கு குளிர் ஜீரோ (சுழியம்) டிகிரிக்கும் கீழ் இருக்கும் நிலையில் சிறப்புப் பயிற்சிகள் பெற்றனர். இவர்களே டோக்கியோ கேடட்ஸ் என்று அழைக்கப்பட்டனர்.

2. பனியிலும், மலையிலும் எல்லையைக் காக்கும் இந்திய வீரர்களின் பணியைப் பாராட்டி உங்கள் பள்ளிக் கையெழுத்து இதழுக்கு ஒரு துணுக்குச் செய்தி எழுதுக.

இந்தியா - பாகிஸ்தான் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு இருக்கும் ஜம்மு-காஷ்மீரில் உள்ள ஒரு பகுதி கார்கில். ஸ்ரீநகரையும் லே நகரையும் இணைக்கும் தேசிய நெடுஞ்சாலை அருகில் உள்ள பகுதி. பனிபடர்ந்த இமயமலைப் பகுதி எப்பொழுதும் குளிர் சுழியத்திற்கு (−) கீழ்தான் இருக்கும்.

1999ஆம் ஆண்டு குளிர்காலத்தில் −20° குளிர்நிலவிய நிலையில் இந்திய இராணுவம் படைகளை மலை உச்சியில் இருந்து கீழே இறக்கியது. இந்தச் சூழலில் பாகிஸ்தான் இராணுவத்தினர் கார்கிலில் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டைத் தாண்டி ஊடுருவினர். மாடு மேய்ப்போர் பாகிஸ்தான் இராணுவத்தினரைப் பார்த்து அதிர்ச்சி அடைந்து இந்திய ராணுவ கேப்டன் சவுரப் காலியாவிடம் தெரிவித்தனர். இந்திய தரைப்படை, கப்பல் படை, விமானப்படை அசுரவேக தாக்குதலைத் தொடுத்தது. பாகிஸ்தானின் கராச்சி துறைமுகத்திற்கு சரக்கு கப்பல்கள் செல்ல முடியாதபடி நடுக்கடலில் தடுத்து இந்திய கடற்படை.

போர் விமானங்களும் குண்டுகளை வீசின. மிக் 27, மிக் 21, எம்.ஐ. 17 ஆகிய 3 விமானங்களை இந்தியா இழந்தது. பாகிஸ்தான் ராணுவ வீரர்களில் 4000 பேரும் இந்திய தரப்பில் 527 பேரும் பலியானார்கள். போர் முடிவில் கார்கில் பகுதியில் இருந்து பாகிஸ்தான் ராணுவம் பின்வாங்கியது. போர் முடிவுக்கு வந்த ஜூலை 26 கார்கில் போர் வெற்றி தினமாக கடைபிடிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட சி.ஆர்.பி.எப் வீரர்களால் தான் நாம் நிம்மதியாக உறங்க முடிகிறது. பேரிடர் காலங்களில் நிலைமையைச் சமாளிக்க முடிகிறது.

நெடுவினா

1. இந்திய தேசிய இராணுவத்தின் தூண்களாகத் திகழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பதைக் கட்டுரை வழி நிறுவுக.

முன்னுரை:

இந்திய தேசிய இராணுவம் இந்திய விடுதலைக்காக உருவாக்கப்பட்ட அமைப்பு ஆகும். இந்த அமைப்பின் தூண்களாகத் திகழ்ந்தவர்கள் நம் தமிழர்கள் எனில் மிகையாகாது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

நேதாஜி அவர்களுடன் இணைந்து இந்திய தேசிய இராணுவப் படையில் போராடிய தமிழர்களின் பங்கு வியந்து போற்றத்தக்கது.

தூண்கள்:

1943ம் ஆண்டு, நேதாஜி "டெல்லி சலோ" என்ற முழக்கத்தை முன் வைத்தார். இவரின் முழக்கம் அனைவரின் மனதிலும் பசுமரத்தாணி போல பதிந்தது. இந்திய தேசிய இராணுவப்படை, பிரித்தானிய அரசை எதிர்த்த போது தமிழகத்தில் இருந்து பெரும்படையைத் திரட்டி, இந்திய தேசிய இராணுவத்திற்கு வலுசேர்த்த பெருமைக்குரிய தமிழர் 'பசும்பொன் முத்துராமலிங்கதேவர்' ஆவார்.

பசும்பொன் அவர்களின் தலைமையில் இருந்த தமிழர்களின் பணியைக்கண்டு வியந்த தில்லான் என்பவர், "இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும், ஆத்மாவும் தமிழர்கள் தான்" என்றார். அனைவரும் பாராட்டும் விதத்தில் இந்திய தேசிய இராணுவத்தைத் தாங்கும் தூண்களாகத் தமிழர்கள் திகழ்ந்தனர்.

இராணுவத்தில் தமிழ்ப் பெண்கள்:

இந்திய தேசிய இராணுவத்தில் ஜான்சி ராணி பெயரில் பெண்கள் படை உருவாக்கப்பட்டது. இதன் தலைவர் டாக்டர் லட்சுமி என்ற தமிழ்ப்பெண் ஆவார். இப்படையில் தமிழ் பெண்கள் பெருமளவில் பங்கேற்றார்கள். இதில் தலைசிறந்த பெண்தலைவர்களான ஜானகி, இராஜாமணி போன்றோர் வீரமிக்க தமிழ் பெண்களே ஆவர். நேதாஜி அமைத்த தற்காலிக அரசிலும் கேப்டன் லட்சுமி இன்றியமையாப் பொறுப்பு வகித்து பணியாற்றி இந்திய தேசிய இராணுவத்தின் தூணாக இருந்தார் எனில் மிகையாகாது.

இரண்டாம் உலகப்போரில் தமிழர்:

இரண்டாம் உலகப்போரின் போது தமிழ் மக்களை வைத்துப்போராடிய நேதாஜியைக் கண்டு ஆங்கிலப் பிரதமர் சர்ச்சில் கோபம் கொண்டார்.

"தமிழர்களின் இரத்தம் நேதாஜி மூளையில் கட்டியாக உள்ளது" என்றார் சர்ச்சில், அதற்கு பதில் அளித்த நேதாஜி, "இந்தத் தமிழினம் தான் ஆங்கிலேயரை அழிக்கும் என்றார்.

மரணம் பெரிதன்று:

1943–45 ஆம் ஆண்டுகளில் பதினெட்டு தமிழ் இளைஞர்கள் ஆங்கிலேயரால் தூக்கிலிடப்பட்டனர். தூக்கில் உயிரை விடும்பொழுது கூட தமிழ் இளைஞர்கள், "வாழ்வின் பொருள் தெரிந்தால்தான் மனிதன் மேல்நிலை அடைவான். நாட்டிற்காக உயிர் நீத்த முழுநிலவினைப்போன்ற தியாகிகள் முன்பு நாங்கள் மெழுகுவர்த்திதான்" என்று கூறி இன்முகத்துடன் உயிர் நீத்தனர்.

நேதாஜியின் பாராட்டு:

இராணுவத்தில் தமிழர்கள் ஆற்றிய பணியையும் செய்த தியாகங்களையும் கண்டு வியந்த நேதாஜி, "நான் மறுபடியும் பிறந்தால் ஒரு தென்னிந்திய தமிழனாகப் பிறக்க வேண்டும்" என்றாராம். நேதாஜியே வியந்து பாராட்டும் வண்ணம் நம் தமிழரின் இராணுவப்பணி அமைந்திருந்தது.

முடிவுரை:

தாயக நலனுக்காக தம் இன்னுயிரை ஈந்த நம் தமிழர்களின் வீரம் போற்றுதலுக்குரியது. தம் இன்னுயிரைத் தியாகம் செய்த முகம் தெரியாத வீரத்தமிழர்களின் அர்ப்பணிப்பு உணர்வையும், அஞ்சாத வீரத்தையும், நாட்டுப்பற்றையும், என்றென்றும் போற்றுவதோடு, இராணுவ வீரர்களையும் அவர்தம் குடும்பத்தினரையும் மதித்துக்காப்பதும், பெற்ற சுதந்திரத்தைப் பேணுவதும், பயங்கரவாத சக்திகளைத் தடுப்பதும் நம் கடமைகளாகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. **இரண்டாம் உலகப்போர் நடைபெற்ற ஆண்டு .....**

அ) 1948 ஆ) 1932 இ) 1942 ஈ) 1952

விடை : இ) 1942

2. **இந்திய தேசிய இராணுவத்தில் ..... பெயரில் பெண்கள் படை உருவாக்கப்பட்டது.**

அ) முத்துலட்சுமி ஆ) நீலாம்பிகை இ) வள்ளியம்மை ஈ) ஜான்சிராணி

விடை : ஆ) ஜான்சிராணி

3. **தமிழ் மக்கள் துணையுடன் போராடிய நேதாஜியைக் கண்டு கோபம் கொண்ட ஆங்கிலப் பிரதமர் .....**

அ) சர்ச்சில் ஆ) கிளமண்ட் அட்லி

இ) ஸ்டான்லி பால்குவின் ஈ) மெக்டொனால்டு

விடை : அ) சர்ச்சில்

4. **இந்திய தேசிய இராணுவம் மணிப்பூர் பகுதியில் கொடியேற்றிய இடம் .....**

அ) இம்பால் ஆ) நம்போல் இ) மொய்ராங் ஈ) அன்ரோ

விடை : இ) மொய்ராங்

குறுவினா

1. **இந்திய தேசிய இராணுவத்தில் மகளிர் படை குறித்து எழுதுக.**

இந்திய தேசிய இராணுவத்தில் ஜான்சி ராணி பெயரில் பெண்கள் படை உருவாக்கப்பட்டது. இதன் தலைவர் டாக்டர் லட்சுமி என்ற தமிழ்ப்பெண் ஆவார். இப்படையில் தமிழ்ப் பெண்கள் பெருமளவில் பங்கேற்றார்கள். இதில் தலைசிறந்த பெண்தலைவர்களான ஜானகி, இராஜாமணி போன்றோர் வீரமிக்க தமிழ்ப் பெண்களே ஆவர். நேதாஜி அமைத்த தற்காலிக அரசிலும் கேப்டன் லட்சுமி இன்றியமையாப் பொறுப்பு வகித்து பணியாற்றி இந்திய தேசிய இராணுவத்தின் தூணாக இருந்தார் எனில் மிகையாகாது.

2. **மரண தண்டனை பெற்ற அப்துல் காதரின் கருத்து யாது?**

1943-45 ஆம் ஆண்டுகளில் பதினெட்டு தமிழ் இளைஞர்கள் ஆங்கில அரசை எதிர்த்த இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியதால் தூக்கிலிடப்பட்டனர். தூக்கில் உயிரை விடும்பொழுது கூட தமிழ் இளைஞர்கள், 'வாழ்வின் பொருள் தெரிந்தால்தான் மனிதன் மேல்நிலை அடைவான். நாட்டிற்காக உயிர் நீத்த முழுநிலவினைப்போன்ற தியாகிகள் முன்பு நாங்கள் மெழுகுவர்த்திதான்' என்று கூறி இன்முகத்துடன் உயிர் நீத்தனர்.

3. **நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் பொன்மொழிகள் யாவை?**

அநீதிகளுக்கும் தவறான செயல்களுக்கும் மனம் ஒப்ப இடம் தருதல் மிகப்பெரிய குற்றமாகும். நீங்கள் நல்வாழ்வைத் தந்தே ஆக வேண்டும் என்பதுதான் காலத்தால் மறையாத சட்டமாகும். எந்த விலை கொடுத்தாவது சமத்துவத்திற்குப் போராடுவதே மிகச்சிறந்த நற்குணமாகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

4. மனதை மலர வைக்கும் இளங்கதிரவனின் வைகறைப் பொழுது வேண்டுமா?

விடுதலையினால் உண்டாகும் மகிழ்ச்சியும், சுதந்திரத்தினால் உண்டாகும் மனநிறைவும் வேண்டுமா? அப்படியானால் அதற்கு விலையுண்டு. அவற்றுக்கான விலை துன்பமும் தியாகமும்தான்.

கற்பவை கற்றபின்

பக்கம்: 185

1. நீங்கள் நாட்டிற்கு உங்கள் பங்கினை அளிக்க விரும்புகிறீர்களா? இந்திய இராணுவத்தில் சேருவதற்கான தகுதி அவர்களுக்கான பணிகள் குறித்த கருத்துகளைத் திரட்டி வகுப்பில் கலந்துரையாடுக.

கலந்துரையாடல்

கலந்துரையாடுபவர்கள் : ஆசிரியர், மணிமாறன், மதிமாறன், எழில் ஆகியோர்.

மணிமாறன் : ஐயா! இந்திய தேசிய ராணுவத்தில் தமிழர் பங்கு என்ற இக்கட்டுரையைப் படித்தவுடன், எனக்கும் இராணுவத்தில் சேர ஆசையாக உள்ளது.

மதிமாறன் : எனக்கும் தான் ஐயா!

எழில் : ஐயா! எனக்கும்தான்! பெண்களும் சேரலாம் தானே ஐயா!

ஆசிரியர் : எல்லோருமே சேரலாம் எழில்..

மணி : ஐயா! அதற்கான வழிமுறைகள் தகுதிகள் என்ன ஐயா...

ஆசிரியர் : பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
(இது குறைந்தபட்ச கல்வித்தகுதி) கல்வித் தகுதிக்கு ஏற்ப பணிகள் உண்டு.

மதிமாறன் : ஐயா... உடல் தகுதிகள் பற்றி

மணிமாறன் : நன்கு உயரமாக வேண்டுமா?ஐயா!

ஆசிரியர் : 157.5 செ மீ உயரம் இருக்க வேண்டும். எந்த வகையான உடற்கோளாறும் இருக்கக்கூடாது.

எழில் : ஐயா பெண்களுக்கு...

ஆசிரியர் : பெண்கள் இராணுவத்தில் சேர 'வுமன் என்ட்ரி' உள்ளது. அதன் மூலம் சேரலாம்.

மதிமாறன் : ஏதாவது தேர்வு எழுத வேண்டுமா?

ஆசிரியர் : ஆமாம் மாறா! என். டி. ஒ. எனப்படும் தேர்வு எழுத வேண்டும்.

மணிமாறன் : எப்போது தேர்வு நடக்கும் ஐயா!

ஆசிரியர் : ஏப்ரல் செப்டம்பர் ஆகிய மாதங்களில் ஆண்டுக்கு இரண்டு முறை நடைபெறும்.

எழில் : ஐயா! தேர்வில் தேர்ச்சியடைந்தால் உடனே சேர்ந்து விடலாமா?ஐயா.

ஆசிரியர் : தேர்ச்சி பெற்றபின், ஓராண்டு இராணுவப் பயிற்சி தொழில்நுட்ப பயிற்சி 3 ஆண்டுகள் பணி வழங்கப்பட்ட பின் ஓர் ஆண்டு பயிற்சி என ஐந்து ஆண்டுகள் பயிற்சியளிக்கப்பட்டு முறைப்படி இராணுவப் பணியில் சேர்க்கப்படுவர்.

மதிமாறன் : இராணுவ வீரர்களின் பணிகள் என்னென்ன ஐயா!

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

ஆசிரியர் : நாட்டையும், மக்களையும் காப்பது, எல்லைக் கண்காணிப்பு பயங்கரவாத எதிர்ப்புப்பணி, அரசு விழாக்களுக்கு பாதுகாப்பு, அவசர காலங்களில் சட்டம் ஒழுங்கு நிலை நாட்ட உதவுதல், இயற்கை சீற்றங்களின் போது மீட்புப் பணி மற்றும் நிர்மாணிப்புப் பணிகள் மலைப்பகுதி, காடுகளில் கட்டுமான பணிகள். இவ்வாறு ராணுவ வீரர்கள் செய்யும் பணிகள் பலவாகும்.

மணிமாறன் : ஐயா! கேட்க கேட்க எனக்கும் அதில் இணைய வேண்டும் என்ற ஆவல் மிக்கெழுகிறது ஐயா!

எழில் : வணக்கத்துக்கும், பாராட்டுக்கும் உரிய தியாகப்பணியாம் ராணுவப் பணியில் நானும் என்னை அதில் இணைத்துக் கொள்வேன் ஐயா.


மதிமாறன் : ஐயா! உங்கள் விளக்கம் எங்கள் ஐயங்களைப் போக்கியதோடு எங்கள் மனதில் நாட்டுப்பற்றையும் ஊட்டி விட்டது.

மூவரும் : நன்றி ஐயா!

2. எனக்குப் பிடித்த விடுதலை போராட்ட வீரர் என்ற தலைப்பில் அவர் தம் வாழ்க்கை நிகழ்வுகளைக் காலக்கோட்டில் உருவாக்குக

எனக்குப் பிடித்த விடுதலைப் போராட்ட வீரர் "சுப்பிரமணிய சிவா" அவரது வாழ்க்கை நிகழ்வுகளைக் குறிக்கும் காலக்கோடு.

சுப்பிரமணிய சிவா



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கவிதைப் பேழை

இயல் ஏழு

சீவக சிந்தாமணி

நுழையும் முன்

- சங்க இலக்கியங்கள் தன்னுணர்ச்சிப் பாடல்களாக அமைந்தவை.
- பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் அறக்கருத்துக்களைக் கூறுபவை.
- பின்னர்தான் ஒப்பிலா தலைவன் ஒருவனது வாழ்க்கையைப் பாடும் காவியங்கள் மலர்ந்தன.
- இவ்வகையில் சீவகனை ஒப்பிலாத் தலைவனாகக் கொண்டு தோன்றிய காப்பியமே "சீவக சிந்தாமணி" ஆகும்.
- இன்பங்களைத் துறந்து துறவு பூண வேண்டும் என்பதே இக் காப்பியத்தின் மையக்கருத்து.
- ஏமாங்கத நாட்டின் வளத்தைத் திருத்தக்கதேவர் வருணிக்கும் பகுதியே நம் பாடப் பகுதி.

நூல்குறிப்பு (நூல் வெளி)

- சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகியவை ஐம்பெருங் காப்பியங்கள் ஆகும்.
- ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றே சீவக சிந்தாமணி ஆகும்.
- இந்நூல் விருத்தப் பாக்களால் இயற்றப்பட்ட முதல் காப்பியம் ஆகும்.
- இந்நூல் 'சீவகன்' என்னும் அரசனின் வரலாற்றை விரித்துக் கூறுவதால் சீவக சிந்தாமணி எனப் பெயர் பெற்றது.
- சீவகன் எட்டுப் பெண்களை மணந்து இன்புற்று வாழ்ந்த மண நிகழ்ச்சியைக் சுவைபட விளக்குவதால் 'மணநூல்' என்றும் பெயர் பெற்றது.
- சீவக சிந்தாமணியில் 3,147 பாடல்கள் உள்ளன.
- காந்தருவதத்தை இலம்பகம் முதல் 'முக்தி இலம்பகம்' முடிய 13 இலம்பகங்கள் உள்ளன.
- இந்நூல் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு உறுதிப் பொருள்களையும், தெளிவாய் விளக்குகிறது.
- இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை, இன்பம் நிலையாமை முதலான நிலையாமைகளை நெஞ்சில் நிற்கும் வண்ணம் நயம்பட எடுத்துரைக்கிறது.
- நிலையான இன்பம் இறைவனின் பாதமாகிய வீடுபேறே என்பதை நிறைவாக இந்நூல் உணர்த்துகிறது.
- தமிழ் மொழிக்கு இலியட்டும் இதுவே, ஒடிசியும் இதுவே என ஜி.யு போப் அவர்கள் இந்நூலைப் பாராட்டுகிறார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

ஆசிரியர் குறிப்பு

- இந்நூலின் ஆசிரியர் திருத்தக்கதேவர் ஆவார்.
- திருத்தக்க தேவர் ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.
- சமண சமயத்தைச் சார்ந்தவர்.
- இவருக்குத் திருத்தகு முனிவர், திருத்தகு மகாமுனிவர், திருத்தக்க மகா முனிகள், தேவர் என வேறு பெயர்களும் உண்டு.
- துறவியர்க்கும் இன்பச்சுவை மிக்க இலக்கியம் இயற்ற முடியும் என்று நிறுவும் வகையில் இக்காப்பியத்தை (சீவகசிந்தாமணியை) இயற்றினார்.
- சீவகசிந்தாமணி பாடுவதற்கு முன்னோட்டமாக இவர் பாடிய நூல் "நரி விருத்தம்" ஆகும்.
- "நாமகள் இலம்பகத்தில்" நாட்டு வளம் பகுதியில் அமைந்துள்ள "ஏமாங்கத நாட்டின் வளம்" கூறுவதே நம் பாடப் பகுதியாகும்.

ஏமாங்கத நாட்டின் வளம்

1. பார் போற்றும் ஏமாங்கதம்

தென்னை மரத்திலிருந்து நன்கு முற்றிய தேங்காய் விழுகின்றது. அந்தத் தேங்காய் அருகில் உள்ள பாக்கு மரத்தின் உச்சியில் வேகமாய் விழ, அந்த வேகத்தில் பாக்கு மரத்தின் உச்சியில் உள்ள சுவைமிக்க தேனடையைக் கிழித்து, அருகில் இருக்கும் பலாமரத்தில் உள்ள பலாப்பழத்தைப் பிளந்து அதில் தேன் சிந்த வைத்து, பலாமரத்தின் பக்கத்தில் உள்ள மாமரத்தின் இனிமையான மாங்கனியைச் சிதற வைத்து தேங்காய், தேனடை, பலா, மாங்கனிகள் எல்லாம் அருகில் உள்ள வாழை மரத்தின் வாழைப்பழங்களை, உதிரச் செய்ததாம். இத்தகு வளம் நிறைந்த ஏமாங்கத நாட்டின் புகழானது உலகின் பல திசைகளிலும் பரவி இருந்தது.

சொல்லும் பொருளும்:

தெங்கு	–	தேங்காய்	கீறி	–	கிழித்து
கமுகின் நெற்றி	–	பாக்கு மரத்தின் உச்சி	வருக்கை	–	பலாப்பழம்
தீந்தேன் தொடை	–	இனிமையான தேனடை	இசையால்	–	புகழால்

2. வாரி வழங்கும் வள்ளல்

இல்லையென்று வருந்தி வந்து இரந்து கேட்பவர்க்கு இல்லை என்று சொல்லாது வாரிவழங்கும் செல்வர்களைப் போல (வள்ளல்களைப் போல) வள்ளல் தன்மை வாய்ந்தது ஏமாங்கத நாட்டில் பாயும் வெள்ளம்.

ஏமாங்கத நாட்டில் பாய்ந்தோடி வரும் வெள்ளமானது, உயர்ந்த மலைச் சிகரங்களில் உள்ள செல்வக் குவியல்களைத் தன்னகத்தே சேர்த்துக் கொண்டு வந்து ஊக்கமில்லாத மக்களுக்கும் வாரி வழங்கும் வள்ளல் போல,

உழைக்கும் உள்ளம் இலா ஊக்கமில்லா மக்களுக்கு ஊர்தோறும் தான் கொண்டுவந்த செல்வத்தை வழங்கும் வகையில் ஏமாங்கத நாட்டினுள் விரைந்து பாய்கிறது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

சொல்லும் பொருளும்:

வள்ளல் கைத்தல மாந்தரின் – வாரி வழங்கும் வள்ளல்களாம் செல்வர்கள்
மால்வரை – பெரிய மலை உச்சி
கொழு நிதி குப்பை – திரண்ட நிதி குவியல் (செல்வக்குவியல்)
உள்ளம் இல்லவர் – ஊக்கம் இல்லாதவர்
உய்த்து உராய் – வழங்கும் பொருட்டு
மடுத்து – பாய்ந்து

3. மணம் கமழும் கழனி

ஏமாங்கத நாட்டில் நீர்வளம் நிறைந்த வயல் பகுதிகள் நிறைந்து காணப்படுகின்றன. அவ்வயல் பகுதிகளில் நேரிய அழகான கொம்புகளையுடைய ஆண் எருமைகளும், நீண்ட நேரான கொம்புகளை உடைய வலிமை வாய்ந்த எருதுகளும் தண்ணீரில் நடப்பதும், உழுவதும், விடுவதுமான ஒலியானது சிலம்பப் பண் போல பேரொலியாகக் கேட்கின்றது.

அவ்வொலி கேட்டு, வயல்வெளிகளில் நீந்தி மகிழும் புள்ளிகளையும், வரிகளையும் உடைய வரால் மீன்கள் கலைந்து ஓடுகின்றன.

கழனியின் மணமும், எருதும் எருமையும் கலைப்பதால் எழும் சேற்றின் மணமும், துள்ளித்திரியும் வரால் மீனின் மணமும் வீசும், வயல்வெளிகளில் உழவர்கள் கூட்டம் வெள்ளம் போல் எங்கும் நிறைந்திருந்தன.

சொல்லும் பொருளும்:

நெறி மருப்பு – அழகான கொம்பு
செறி மருப்பு – சிறந்த நேரான கொம்பு
ஏற்றினம் – எருது இனம் (காளை)
சிலம்பப் பண் – சிலம்பின் ஒலி
வராலினம் – வரால் என்னும் மீன் வகை
இரிய – அஞ்சியோட
வெறி கமழ் – மணம் வீசுகின்ற
கழனி – வயல் வெளி
உழுநர் – உழவர்கள்

4. தலை வணங்கிய நெற்பயிர்

தனக்குள் கதிர்பிடித்து நிற்கும் நெற்பயிர்கள் கருக்கொண்ட பச்சைப் பாம்பு போல் தோற்றம் கொண்டுள்ளன.

நெற்பயிர்கள் கதிர் விட்டு நிமிர்ந்து நிற்கும் காட்சியானது, செல்வம் மிகுதியாகப் பெற்ற செல்வந்தர்கள், செல்வச் செருக்கால் பக்குவம் இல்லாதவர்களாய் ஆணவத்தில் தலை நிமிர்ந்து நிற்பது போல் காட்சியளிக்கிறது.

நாட்கள் சென்றன, நெற்பயிர்களில் உள்ள நெற்கதிர்கள் முற்றியவுடன், தலை சாய்ந்து நிற்கின்றன. தலை சாய்ந்து நிற்கும் நெற்பயிர்களானது, தெளிந்த நூல்களைக் கற்ற நல்லோர் தலை சாய்ந்து பணிந்து நிற்றலைப் போல காட்சியளிக்கிறது.

சொல்லும் பொருளும்:

சூல் பசும் பாம்பு – கருக்கொண்ட பச்சைப் பாம்பு
மேலலார் – மனப்பக்குவம் இல்லார்
தலைநிறுவி – தலை நிமிர்ந்து (செருக்கால்)
தேர்ந்த நூல் – அறிவைத் தெளிவு படுத்தும் நூல்
இறைஞ்சி – பணிந்து

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

5. ஆயிரம் ஆயிரமாய்

வளம் நிறைந்த ஏமாங்கத நாட்டிலுள்ள ஊர்களில், நாள்தோறும் ஆயிரம் வகையான சுவைமிக்க உணவுகள் கிடைக்கின்றன.

நாடி வருவோர்க்கும், பசியால் வாடுவோர்க்கும் உணவளிக்கும் அறச்சாலைகள் ஆயிரமாயிரமாய் இருக்கின்றன.

அழகுமிகு மகளிர், தங்கள் அழகினை மேலும் மெருகூட்ட, ஒப்பனை செய்து கொள்ள மணி மாடங்கள் ஆயிரமாயிரமாய் இருக்கின்றன.

ஊக்கத்துடன் உழைக்கும் செய்தொழிலில் சிறிதும் சோம்பல் இல்லாத தொழில் வல்லுநர் (கம்மியர்) ஆயிரமாயிரம் பேர் உள்ளனர்.

அதனால், விழாக்களும், திருமண நிகழ்வுகளும், மங்கல நிகழ்வுகளும் ஆயிரமாயிரமாய் நடக்கின்றன.

ஏமாங்கத நாட்டிலே இல்லாதனவே இல்லை என்னும் வகையில் ஆயிரக்கணக்கான நிகழ்வுகள் குறைவின்றி நிகழ்கின்றன. அதனால் மக்களும் குறைவிலா மகிழ்வுடனும், ஆரவாரத்துடனும் வாழ்கின்றனர்.

சொல்லும் பொருளும்:

அடிசில்	– உணவு (சோறு)	செய்கோலம்	– ஒப்பனை செய்தல்
வைகல்	– நாள்தோறும்	மடிவுஇல்	– சோம்பல் இல்லாத
அறப்புரம்	– அறச்சாலைகள்	ஒடிவு இலை	– இல்லாதன இல்லை
கொடியன்னார்	– கொடி போன்ற மெல்லிய மகளிர்	மங்கலம் ஆயிரம்	– திருமணம், விழா போன்ற மங்கல நிகழ்வுகள்

6. நாடுகள் சூழ்ந்த ஏமாங்கதம்

ஏமாங்கத நாடு, உண்மையான நேரிய தவம் புரிவோர்க்கும், முனிவர்க்கும் மட்டுமின்றி, நல்லறமாம் இல்லறம் நடத்துவோர்க்கும் இனிய இடமாகத் திகழ்கின்றது.

நிலையான மெய்ப் பொருளைத் தேடுவோர்க்கும், நிலையில்லாத பொருட்செல்வத்தைத் தேடுவோர்க்கும் உகந்த இடமாகும்.

வளம் மிகு நாடுகள் சூழ்ந்த எழிலும், வளமும் நிறைந்த சிறப்புப் பொருந்திய ஏமாங்கத நாடு வானுலகம் வழங்கும் இன்பமானது, வெற்றியை விரும்பும் உலகோர் ஏற்கும் வண்ணம் தானே தாழ்ந்து உவந்து இம் மண்ணுலகிற்கு வந்தது போல் அனைத்து இன்பங்களும் நிறைந்த நாடுகளை எல்லையாகக் கொண்டது ஏமாங்கத நாடு.

சொல்லும் பொருளும்:

நற்றவம்	– உண்மையான தவம்	வீழ்ந்தென	– தாழ்ந்து வருதல்
நற்பொருள்	– மெய்ப்பொருள்	வட்டம்	– எல்லை
வெற்ற	– வெற்றி	மற்றநாடு	– பிறநாடுகள்
உவந்து	– மகிழ்ந்து		

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

இலக்கணக் குறிப்புகள்:

செந்நெல்	– பண்புத்தொகை	தேர்ந்த	– பெயரெச்சம்
தண்கடல்	– பண்புத்தொகை	இறைஞ்சி	– வினையெச்சம்
நற்றவம்	– பண்புத்தொகை	உறீஇ	– சொல்லிசை அளபெடை
விளைக	– வியங்கோள் வினைமுற்று	செய்கோலம்	– வினைத்தொகை
தேமாங்கனி	- உவமைத் தொகை	கொடியனார்	- இடைக்குறை

பகுபத உறுப்பிலக்கணம்:

இறைஞ்சி – இறைஞ்சு + இ

இறைஞ்சு – பகுதி
இ – வினையெச்ச விகுதி

ஈன்று – ஈன் + ற் + உ

ஈன் – பகுதி
ற் – இறந்தகால இடைநிலை
உ – வினையெச்ச விகுதி

ஓம்புவார் – ஓம்பு + வ் +ஆர்

ஓம்பு – பகுதி
வ் – எதிர்கால இடைநிலை
ஆர் பலர்பால் வினைமுற்று விகுதி

விளைக – விளை + க

விளை – பகுதி
க – வியங்கோள் வினைமுற்று விகுதி

கீறி – கீறு + இ

கீறு – பகுதி
இ – வினையெச்ச விகுதி

பாடநூல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. வெறிகமழ் கழனியுள் உழுநர் வெள்ளமே – இவ்வடி உணர்த்தும் பொருள் யாது?

அ) மணம் கமழும் வயலில் உழவர் வெள்ளமாய் உழுதிருந்தனர்.
ஆ) வறண்ட வயலில் உழவர் வெள்ளமாய் அமர்ந்திருந்தனர்.
இ) செறிவான வயலில் உழவர் வெள்ளமாய்க் கூடியிருந்தனர்.
ஈ) பசுமையான வயலில் உழவர் வெள்ளமாய் நிறைந்திருந்தனர்.

விடை : அ) மணம் கமழும் வயலில் உழவர் வெள்ளமாய் உழுதிருந்தனர்.

குறுவினா

1. கருக்கொண்ட பச்சைப்பாம்பு, எதற்கு உவமையாக்கப்பட்டுள்ளது?

கருக்கொண்ட பச்சைப்பாம்பு நெற்பயிர்கள் தோற்றத்திற்கு உவமையாக்கப்பட்டுள்ளது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

சிறுவினா

1. ஏமாங்கத நாட்டில் எவையெல்லாம் ஆயிரக்கணக்கில் இருப்பதாகத் திருத்தக்கதேவர் பாடியுள்ளார்?

- வளம் நிறைந்த ஏமாங்கத நாட்டில் உள்ள ஊர்களில் நாள்தோறும் ஆயிரம் வகையான உணவுகள் இருக்கும்.
- பசி என்று வருவோருக்கும், நாடி வருவோருக்கும் அறச்சாலைகள் ஆயிரம் இருக்கின்றன.
- மகளிர் தம்மை ஒப்பனை செய்ய மணிமாடங்கள் ஆயிரம் இருக்கின்றன.
- செய்தொழிலில் சோம்பல் இல்லாத கம்மியர் ஆயிரமாயிரமாய் இருக்கின்றனர்.
- ஏமாங்கத நாட்டிலே இல்லாதவை இல்லை என்னும் வகையில் ஆயிரக்கணக்கான நிகழ்வுகள் குறைவின்றி நிகழ்கின்றன.

நெடுவினா

1. ஏமாங்கத நாட்டு வளம் குறித்த வருணனைகளை நும் ஊரின் வளங்களோடு ஒப்பிடுக.

முன்னுரை:

சீவகசிந்தாமணியில் "நாமகள் இலம்பகத்தில்" நாட்டு வளம் என்னும் பகுதியில் ஏமாங்கத நாட்டின் வளம், திருத்தக்கதேவரால் நயம்பட உரைக்கப்பட்டுள்ளது. ஏமாங்கதநாட்டு வளம் போலவே எம் ஊரின் வளங்களும் உள்ளன எனில் மிகையாகாது.

வளம் மிக்க நெருங்கிய தோப்புகள்:

ஏமாங்கத நாட்டில் நிகழ்ந்த வளமான நிகழ்வு போலவே எம் ஊரிலும் அடர்ந்த தோப்புகளில் நிகழ்ந்தது.

தென்னை மரத்திலிருந்து முற்றிய தேங்காய் விழுகின்றது. அத்தேங்காய் நிலத்தை வந்தடையும்முன் விழும்வேகத்தில் அருகிருந்த பாக்கு மரத்தின் உச்சியின் உள்ள தேனடையைக் கிழித்து, தேனடையோடு பலாமரத்தில் உள்ள பலாப்பழத்தினை பிளந்து, தேங்காய், தேனடை, பலாச்சுளைகளோடு, வாழைப்பழங்களையும் உதிரச்செய்கிறது. இவ்வாறு ஏமாங்கத நாட்டை போலவே எம் ஊரும் முக்கனி வளமும், தென்னை மரங்களும், பாக்கு மரங்களும் நிறைந்தனவாய்க் காணப்படுகின்றது.

மண்வீசும் வயல்வளம்:

ஏமாங்கத நாட்டைப்போலவே, நீர்நிலைகள் சூழ்ந்த வயல் பகுதிகள் உள்ளன. அந்நீர்நிலைகளில் அழகான கொம்புகளையுடைய ஆண் எருமைகளும், வலிமையான நேரிய கொம்புகளை உடைய எருதுகளும் பேரொலி எழுப்பி நீந்துகின்றன. அவ்வொலியால் அந்நீர்நிலையில் உள்ள பொறிகளையுடைய வரால் மீன் இனங்கள் கலைந்து ஓடுகின்றன. இவ்வாறு எருமைகளும், எருதுகளும், நீரைக் கலக்குவதாலும், சேறுமணமும், நீந்தும் மீன் மணமும் கலந்த வயல்பகுதிகளில் வெள்ளமென உழவர்கள் உழுதிருந்தனர்.

இறைஞ்சி வணங்கும் நெற்பயிர்கள்:

கருக்கொண்ட பச்சைப்பாம்பைப்போல நெற்பயிர்கள் திரட்சியான தோற்றம் கொண்டுள்ளன. செல்வம் பெற்று பக்குவம் இல்லாது செருக்குடன் இருக்கும் மேல் அல்லார் போல, கதிர்விட்டு நிமிர்ந்துநிற்கின்றன நெற்பயிர்கள்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

அப்பயிர்களில் உள்ள நெற்கதிர்கள் முற்றியவுடன், தெளிந்த நூல் பல கற்றோரின் பணிவைப்போல பணிந்து, இறைஞ்சி தலைசாய்ந்து நிற்கும் கவின் மிகு காட்சியையும் எம் ஊரில் காணலாம்.

ஆயிரம் விழாக்கள்:

வளம்மிக்க எம் ஊரில் ஆயிரம் வகையான உணவு உண்டு. பசியுடன் நாடி வருவோருக்கு உணவு வழங்கும் அறச்சாலைகள் ஆயிரம் உண்டு. மகளிர் ஒப்பனை செய்துகொள்ளும் மணிமாடங்கள் ஆயிரம் உண்டு. சோம்பல் இன்றி தொழில் புரியும் கம்மியர்களும் ஆயிரக்கணக்கானோர் உண்டு. அதனால் திருமணங்களும், விழாக்களும் ஆயிரமாயிரமாய் நடைபெறுகின்றன.

முடிவுரை:

இவ்வாறு ஏமாங்கத நாட்டின் வளம் போலவே, வளமும்;, சிறப்பும் கொண்டனவாய் எம் ஊரும் உள்ளது என்பதில் பெருமிதமும் மகிழ்வும் கொள்கிறேன்.

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. **இன்பங்களைத்துய்த்து துறவு பூண வேண்டும் என்னும் கருத்து அமைந்த காப்பியம் எது?**
   அ) சிலப்பதிகாரம் ஆ) வளையாபதி இ) குண்டலகேசி ஈ) சீவகசிந்தாமணி
   விடை : ஈ) சீவகசிந்தாமணி

2. **சீவகசிந்தாமணிக்குரிய மற்றொரு பெயர் யாது?**
   அ) மனநூல் ஆ) மணநூல் இ) மங்கல நூல் ஈ) சமண நூல்
   விடை : ஆ) மணநூல்

3. **சீவகசிந்தாமணியின் இலம்பகங்கள் எத்தனை?**
   அ) பதினான்கு ஆ) பதினைந்து இ) பதினாறு ஈ) பதின்மூன்று
   விடை : ஈ) பதின்மூன்று

4. **சீவகசிந்தாமணியை இயற்றியவர் யார்?**
   அ) இளங்கோவடிகள் ஆ) சீத்தலைசாத்தனார்
   இ) திருத்தக்கத்தேவர் ஈ) கணிமேதாவியர் விடை : இ) திருத்தக்கத்தேவர்

5. **சீவசிந்தாமணிக்கு முன்னோட்டமாக திருத்தக்கத்தேவர் பாடிய நூல் யாது?**
   அ) நரிவெண்பா ஆ) நரிவிருத்தம் இ) சிந்தாமணிமாலை ஈ) காவடிச்சிந்து
   விடை : ஆ) நரிவிருத்தம்

6. **“ஏமாங்கத நாட்டு வளம்” அமைந்த இலம்பகம் எது?**
   அ) விமலையார் ஆ) சுரமஞ்சரி இ) காந்தருவதத்தை ஈ) நாமகள்
   விடை : ஈ) நாமகள்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

7. திருத்தக்கத்தேவர் பின்பற்றிய சமயம் எது?

அ) பௌத்தம் ஆ) சமணம் இ) வைணவம் ஈ) சைவம்

விடை : ஆ) சமணம்

8. பொருத்துக.

சொல்		பொருள்
அ) தெங்கு	–	பலாப்பழம்
ஆ) வருக்கை	–	தேங்காய்
இ) கழனி	–	சோறு
ஈ) அடிசில்	–	வயல்

விடை:

சொல்		பொருள்
அ) தெங்கு	–	தேங்காய்
ஆ) வருக்கை	–	பலாப்பழம்
இ) கழனி	–	வயல்
ஈ) அடிசில்	–	சோறு

9. நெறி மருப்பு எருமை – வெறி கமழ் கழனி இத்தொடரின் கோடிட்ட சொற்களின் பொருள் யாது?

அ) கொம்பு, மணம் ஆ) வயல், மலை

இ) தேங்காய், புகழ் ஈ) சோறு, எல்லை

விடை: அ) கொம்பு, மணம்

10. வள்ளல் கைத்தல மாந்தரின் மால்வரைக் கொள்ளை கொண்ட கொழுநிதிக் குப்பையை என்னும் அடிகளில் இடம் பெற்றுள்ள நயம் _____.

அ) எதுகை ஆ) மோனை இ) இயைபு ஈ) அந்தாதி

விடை: அ) எதுகை

11. ஐம்பெருங்காப்பியத்தில் இடம் பெறாத நூல் _____.

அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை இ) சீவக சிந்தாமணி ஈ) நீலகேசி

விடை: ஈ) நீலகேசி

12 வளம் நிறைந்த ஏமாங்கத நாட்டிலுள்ள ஊர்களில் நாள்தோறும்_____ வகையான உணவுகள் கிடைக்கின்றன.

அ) பத்து ஆ) நூறு இ) பல ஈ) ஆயிரம்

விடை: ஈ) ஆயிரம்

13. ஏமராங்கத நாட்டிலுள்ள மணிமாடங்களின் எண்ணிக்கை _____.

அ) நூறு ஆ) ஆயிரம் இ) இரண்டாயிரம் ஈ) இருநூறு

விடை: ஆ) ஆயிரம்

14. சீவகசிந்தாமணியின் நாமகள் சிலம்பத்தில் _____ என்னும் பகுதி நம் பாடப்பகுதியாக அமைந்துள்ளது.

அ) நாட்டு வளம் ஆ) காட்டு வளம் இ) ஆற்று வளம் ஈ) இயற்கை வளம்

விடை: அ) நாட்டு வளம்

15. திருத்தக்கத்தேவரின் காலம் _____.

அ) எட்டாம் நூற்றாண்டு ஆ) ஒன்பதாம் நூற்றாண்டு

இ) ஆறாம் நூற்றாண்டு ஈ) ஏழாம் நூற்றாண்டு

விடை: ஆ) ஒன்பதாம் நூற்றாண்டு

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

16. விருத்தப்பாக்களால் இயற்றப்பட்ட முதல் காப்பியம் _____.

அ) சிலப்பதிகாரம் ஆ) கம்பராமாயணம் இ) சீவகசிந்தாமணி ஈ) வளையாபதி

விடை: இ) சீவகசிந்தாமணி

குறுவினா

1. வரால் மீன்கள் கலைந்து ஓடுவதற்கான காரணம் யாது?

அழகான கொம்புகளை உடைய ஆண் எருமைகளும் நேரான கொம்புகளையுடைய வலிமையான எருதுகளும் பேரொலி எழுப்புவதைக் கேட்டுப் புள்ளிகளும், வரிகளும் உடைய வரால் மீன்கள் கலைந்து ஓடுகின்றன.

2. நெற்பயிர்கள் கதிர்விட்டு நிமிர்ந்து நிற்பது எதனைப் போன்றது?

நெற்பயிர்கள் கதிர்விட்டு நிமிர்ந்து நிற்பது, செல்வம் பெற்ற பக்குவம் இல்லாதவர் தலை நிமிர்ந்து நிற்பது போன்றதாகும்.

3. பயிர்கள் முற்றியவுடன் நெற்கதிர்கள் சாய்ந்திருப்பது எதனைப் போன்றது?

தெளிந்த நூலைக் கற்ற நல்லவர்களின் பணிவைப் போன்றதாகும்.

4. ஏமாங்கத நாடு எவர்க்கெல்லாம் இனிய இடமாகத் திழக்கிறது?

ஏமாங்கத நாடு, உண்மையான தவம் புரிவோர்க்கும் இல்லறம் நடத்துவோர்க்கும் இனிய இடமாகத் திகழ்கிறது.

5. எவற்றைத் தேடுவோர்க்கு உகந்த இடமாக ஏமாங்கத நாடு விளங்குகிறது?

நிலையான பொருளைத் தேடுவோர்க்கும் நிலையில்லாத பொருட்செல்வத்தைத் தேடுவோர்க்கும் உகந்த இடமாக ஏமாங்கத நாடு விளங்குகிறது.

சிறுவினா

1. ஐம்பெருங்காப்பியங்கள் யாவை?

- சிலப்பதிகாரம்
- மணிமேகலை
- சீவகசிந்தாமணி
- வளையாபதி
- குண்டலகேசி

2. சீவகசிந்தாமணி குறிப்பு வரைக.

- சீவகசிந்தாமணி ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று.
- இது விருத்தப்பாக்களால் இயற்றப்பட்ட முதல் காப்பியம் ஆகும்
- இந்நூலில் இலம்பகம் என்னும் உட்பிரிவு காணப்படுகிறது.
- இந்நூல் மொத்தம் பதின்மூன்று இலம்பகங்களைக் கொண்டது.
- இதற்கு மணநூல் என்று மற்றொரு பெயரும் உண்டு.
- திருத்தக்கதேவரால் இயற்றப்பட்ட நூல்,

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கற்பவை கற்றபின்

பக்கம்: 188

1. அருகிலுள்ள இயற்கைக் காட்சிகளைக் குறிப்பெடுத்து ஓவியம் தீட்டுக.



- நான் வசிக்கும் இடத்தின் அருகில், ஒரு குளம் இருக்கின்றது.
- குளத்தைச் சுற்றிலும் வயல் வெளிகள் உள்ளன.
- குளத்தின் கரையில் ஓர் ஆலமரம் உள்ளது.
- பறவைகளும், கிளிகளும் அதில் வசித்து மகிழ்கின்றன. பறவைகள் தன் குஞ்சுகளுக்கு உணவளிக்கும் காட்சி மனதை மயக்கும்.
- வயல் வெளிகளில் கூட்டமாய் உழவர்கள் வேலை செய்யும் போது ஆரவாரம் காணப்படும்.
- மாலை நேரத்தில் மயிலும் தோகை விரித்து ஆடும்.

2. உங்கள் பள்ளி வேரூன்றிய நாள் தொடங்கி வளர்ந்த வரலாற்றையும், அதன் சிறப்புகளையும் கட்டுரையாக்குக.

எங்கள் பள்ளி

முன்னுரை : நான் பயிலும் பள்ளி. அரசு மேல்நிலைப் பள்ளி ஆகும். அன்ன சத்திரம் ஆயிரம், ஆலயங்கள் பல்லாயிரம் கட்டுவதைக் காட்டிலும் ஏழைக்கு எழுத்தறிவித்தலே கோடி புண்ணியங்களைக் கொண்டு வந்து சேர்க்கும் அல்லவா! எழுத்தறிவு கொடுத்துக் கொண்டிருக்கும் அறிவுத் திருக்கோவில் எம் பள்ளி.

தோற்றம் : எங்கள் பள்ளி அப்போதைய ஆங்கில அரசால் 1918 ம் ஆண்டு ஒன்று முதல் எட்டு வரை உள்ள நடுநிலைப் பள்ளியாகத் தோன்றி வேரூன்றி வளர ஆரம்பித்தது.

வளர்ச்சி : பின்னர் உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்ந்தது. பின் 1978 இல் மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டு, இன்று கம்பீரமாக நகரின் மையத்தில் உள்ளது.

சாதனைகள் : இந்த ஆண்டு எம் பள்ளி நூற்றாண்டு விழா காண இருக்கின்றது. பல அறிஞர்களை, விற்பனர்களை, சமூக சேவகர்களை, ஊருக்கு உழைக்கும் உத்தமர்களை, மருத்துவர்களை, பொறியாளர்களை, வழக்குரைஞர்களை, அறிஞர்களை, அரசியல்வாதிகளை உருவாக்கி நல்லறிவு புகட்டி, வரலாற்றுச் சிறப்பு மிக்க அறிவுக் கோயிலாகத் திகழ்கிறது.

முடிவுரை : பல்துறைகளிலும் முத்திரை பதிக்க பலருக்கும் வழிகாட்டிய அறிவுப் பெட்டகமாகவும், பலருடைய வாழ்வை உயரத்திற்குக் கொண்டு சென்ற ஏணியாகவும் இன்று வரை திகழ்கிறது. பல தலைமுறை கண்ட எம் பள்ளி, இன்னும் பல புதிய தலைமுறைகளை உருவாக்க வாழ்த்தி வணங்குகிறேன்.

⁂

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கவிதைப் பேழை

இயல் ஏழு

முத்தொள்ளாயிரம்

நுழையும் முன்:

- ஒரு நாட்டின் வளத்தைப் பாடுவதைப் புலவர்கள் கவிமரபாகக் கொண்டிருந்தனர். பிற்கால காப்பியங்களில் நாட்டுவளம் தவறாது இடம் பெற்றது. முத்தொள்ளாயிரம் என்னும் இந்நூல்.
- சேரன், சோழன், பாண்டியன் ஆகியோருடைய நாடுகளின் வளங்களை நயமாக வெளிப் படுத்துகிறது.

நூல் குறிப்பு:

சேரன், சோழன், பாண்டியன் என்னும் மூவகைப்பகுப்பில் ஒவ்வொருவரைப் பற்றியும் 300 பாடல்கள் வீதம், மொத்தம் 3 x 300 = 900 பாடல்கள் பாடப்பட்டதால் முத்தொள்ளாயிரம் எனப்பட்டது.

நூலின் உள்ளடக்கம்:

புகழ், திறை, நாடு, கொடை, கைக்கிளை, யானைமறம் எனப் பல தலைப்புகளில் மூவேந்தர்க்கும் பாடிய பாடல்கள் உள்ளடக்கமாய் உள்ளன.

நூலின் மரபு குறிப்பு:

- முத்தொள்ளாயிரம் தொல்காப்பியர் குறிப்பிடும் "விருந்து" என்னும் வனப்பு வகையைச் சார்ந்தது.
- 900 பாடல்களில் தற்பொழுது 130 பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன.
- வெண்பாவால் எழுதப்பட்ட நூல் இது.
- மன்னர்களின் பெயரைக் குறிப்பிடாமல் சேரன், சோழன், பாண்டியன் என்று பொதுவாகவே பாடுகிறது.
- இந்நூலின் 108 பாடல்கள் புறத்திரட்டு என்னும் நூலில் இருந்து கிடைத்துள்ளன.
- அவை முத்தொள்ளாயிரம் என்னும் பெயரில் பதிப்பிக்கப்பட்டுள்ளன.
- இந்நூலின் ஆசிரியர் யார் என அறிய முடியவில்லை.
- இந்நூலை இயற்றியவர் ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இந்நூல்.....

- சேர நாட்டை – அச்சம் இல்லாத நாடாகவும்
- சோழநாட்டை – ஏர்க்களச் சிறப்பும் போர்க்களச் சிறப்பும் உள்ள நாடாகவும்
- பாண்டிய நாட்டை – முத்துடைய நாடாகவும் சிறப்பித்துக் காட்டுகிறது.

சேர நாடு:

- சேரநாட்டின் வளத்தினையும், மக்களின் அச்சமற்ற வாழ்வினையும் இப்பாடல் ஒருசேர புகழ்கின்றது.
- சேறு நிறைந்த பொய்கைகளும், நீர்வளம் மிக்க வயல்களும் சேரநாட்டில் மிகுதி.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

- சேறுபட்ட, நீர்வளம் மிகுந்த வயல் பகுதிகளிலும், பொய்கைகளிலும் அரக்கு நிறம் கொண்ட செவ்வாம்பல் (செவ்வல்லி) மலர்கள் மெல்ல தன் வாயவிழ்ந்து விரிந்தன.
- அவற்றைக் கண்ட நீர்ப்பறவைகள் வெள்ளத்தில் தீப்பிடித்து விட்டது என எண்ணின.
- தன் குஞ்சுகளைத் தீயிலிருந்து காப்பாற்ற நினைத்துத் தம் கைகளான சிறகுகளைப் படபடவென அடித்து அவற்றை அணைத்துக்கொண்டன.
- இந்தப் பறவைகளின் ஆரவாரம் தவிர, மக்கள் துயர மிகுதியால் செய்யும் ஆரவாரத்தைச் சேரநாட்டில் காண இயலாது என்கிறார் புலவர்.
- இதற்குக் காரணம் கூறுவார் போல் "நச்சிலை வேல் கோக்கோதை" என்று மன்னனைக் குறிப்பிடுகிறார்.
- சேரன் ஏந்திய வேல் நஞ்சு பூசப்பட்டிருப்பது. எனவே பகைவர் அவன் மேல் பேரச்சம் கொண்டுள்ளனர் என்பது குறிப்பு.

சொல்லும் பொருளும்:

அள்ளல்	– சேறு	கைச்சிறகு	– சிறகுகளாகிய கைகள்
பழனம்	– நீர்மிக்க வயல்	பார்ப்பு	– குஞ்சு
வாயவிழ	– மொட்டவிழ்ந்து விரிதல்	ஒடுக்கும்	– பாதுகாக்கும்
வெரீஇ	– அஞ்சி [பயந்து]	கவ்வை	– ஒலி
புள்ளினம்	– பறவை இனம்		

சோழ நாடு:

- இப்பாடல் சோழநாட்டின் ஏர்க்களச் சிறப்பையும், போர்க்களச் சிறப்பையும் எடுத்துக் கூறுகிறது.
- சோழநாடு "ஏர்" க்கும் "போர்" க்கும் புகழ் பெற்றது.
- வயலில் விளைந்த நெல்லை அறுவடை செய்து காக்கும் உழவர்கள் நெற்போரின் மீது ஏறி நின்று கொண்டு அருகில் உள்ள வயல்களில் இருக்கும் உழவர்களைப் பார்த்து "நாவலோ" என்று கூவி அழைப்பர்.
- "நாவலோ" என்பதற்கு "இந்த நாள் வாழ்க, சிறக்க" என்பது பொருள். இவ்வாறு உழவர்கள் செய்யும் செயலானது,
- போர்க்களத்திலே போர்வீரர்கள் வலிமையான கொல்யானை மீது ஏறி நின்று கொண்டு, மற்ற வீரர்களை "நாவலோ" என்று அழைக்கும் ஒலியைப் போன்று விளங்கியதாக இப்பாடலில் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.
- போர் வீரர்கள் அவ்வாறு எழுப்பிய ஒலி வாழ்த்தொலி போல் அன்றி இயமனின் ஒலியைப் போல் விளங்கியது என்று ஆசிரியர் குறிப்பால் உணர்த்துவது மூலம் சோழநாட்டின் படைவீரர்களின் வலிமையை இப்பாடல் தெளிவுறுத்துகின்றது. இத்தகு வளமும் வீரமும் மிக்கது சோழ நாடு.

சொல்லும் பொருளும்:

நாவலோ	– 'நாள் வாழ்க' என்பது போன்ற வாழ்த்து		
ஓதை	– ஒலி	கூற்று	– எமன் [இயமன்]
இசைத்தால்	– ஆரவாரத்தோடு கூவுதல்	கிள்ளி	– சோழன்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பாண்டிய நாடு:

- "பாண்டியநாடு முத்துடைத்து"பாண்டிய நாட்டில் எங்கு நோக்கினும் எதை நோக்கினும் முத்துக்களாகவே காட்சியளிக்கிறது என்பதை இப்பாடல் விளக்குகிறது
- வெண்கொற்றக் குடையையுடைய தென்னவனாகிய பாண்டியனுடைய ஒளி பொருந்திய முத்துடைய நாட்டின்கண்,
- வெண்சங்குகள் மணலில் ஈனுகின்ற முதிராத முட்டைகளும் (இளஞ்சினை) புன்னை மரத்தில் தரையில் உதிர்ந்து கிடக்கும் குவிந்த புன்னை அரும்புகளும் (மொட்டுகளும்)முத்துக்கள் குவிந்து கிடப்பது போல் காணப்படுகின்றன.
- பந்தலைப் போன்ற பரந்து விரிந்துள்ள இளம்பாக்கு மரத்தின் பாளையிலிருந்து சிந்தும் மணிகளும் முத்துக்கள் போன்று தோன்றும் அழகான தன்மையுடையது பாண்டிய நாடு.
- இயற்கை வருணனைகள் பிற உயிரினங்கள் மூலம் பாண்டிய நாட்டின் வளத்தை ஆசிரியர் தெளிவுபடுத்துகிறார்.

சொல்லும் பொருளும்:

நந்தின்	– சங்கின்	கமுகு	– பாக்கு (மரம்)
இளைஞ்சினை	– முதிராத முட்டை	முத்தம்	– முத்து
புன்னை	– புன்னை மரம்	தென்னன்	– பாண்டியன்
பந்தர்	– பந்தல் அமைத்தது போல்	நகை முத்த	– ஒளிபொருந்திய முத்து

இலக்கணக் குறிப்பு:

அஞ்சி	– பெயரெச்சம்	குவிமொட்டு	– வினைத்தொகை
வெண்குடை	– பண்புத்தொகை	வெரீஇ	– சொல்லிசையளபெடை
இளங்கமுகு	– பண்புத்தொகை	பந்தர்	– ஈற்றுப் போலி
கொல்யானை	– வினைத்தொகை	மற்றே	– உவம உருபு

பகுபத உறுப்பிலக்கணம்:

கொண்ட – கொள்(ண்) + ட் + அ		சிந்தி – சிந்து + இ	
கொள்	– பகுதி, 'ள்'(ண்) ஆனது விகாரம்	சிந்து	– பகுதி,
ட்	– இறந்தகால இடைநிலை	இ	– வினையெச்ச விகுதி
அ	– பெயரெச்ச விகுதி		

பாடநூல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. இளங்கமுகு, செய்கோலம் - இலக்கணக் குறிப்புத் தருக.

அ) உருவகத்தொடர், வினைத்தொகை ஆ) பண்புத் தொகை, வினைத்தொகை

இ) வினைத்தொகை, பண்புத்தொகை ஈ) பண்புத்தொகை, உருவகத்தொடர்

விடை: ஆ) பண்புத்தொகை, வினைத்தொகை

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

2. சொல்லும் பொருளும் பொருந்தியுள்ளது எது?

அ) வருக்கை – இருக்கை ஆ) புள் – தாவரம்
இ) அள்ளல் – சேறு ஈ) மடிவு – தொடக்கம்

விடை : இ) அள்ளல் – சேறு

3. நச்சிலைவேல் கோக் கோதை நாடு, நல்யானைக் கோக்கிள்ளி நாடு இத்தொடர்களில் குறிப்பிடப்படுகின்ற நாடுகள் முறையே

அ) பாண்டிய நாடு, சேர நாடு ஆ) சோழ நாடு, சேர நாடு
இ) சேர நாடு, சோழ நாடு ஈ) சோழ நாடு, பாண்டிய நாடு

விடை : இ) சேர நாடு, சோழ நாடு

குறுவினா

1. அள்ளல் பழனத்து அரக்காம்பால் வாயவிழ இவ்வடியில் சேற்றையும் வயலையும் குறிக்கும் சொற்கள் யாவை?

- அள்ளல் – சேறு
- பழனம் – வயல்

சிறுவினா

1. சேர, சோழ, பாண்டி நாட்டு வளங்களை முத்தொள்ளாயிரம் வழி விளக்குக.

சேரநாடு:

சேறுபட்ட நீர்வளம் மிகுந்த வயல்பகுதிகளில் அரக்கு நிறம்கொண்ட செவ்வாம்பல் மலர்கள் மெல்ல தம் வாயவிழ்ந்து விரிந்தன. அவற்றைக் கண்ட நீர்ப்பறவைகள் வெள்ளத்தில் தீப்பிடித்தது என எண்ணி தம் தமது கைகளான சிறகுகளைப் படபடவென அடித்து, தம் குஞ்சுகளைத் தீயினின்று காப்பாற்றும் பொருட்டு அணைத்துக்கொண்டன. இப்பறவைகளின் இத்தகு ஆரவாரம் தவிர, மக்கள் துயரமிகுதியால் செய்யும் ஆரவாரத்தைச் சேரநாட்டில் காண இயலாது.

சோழநாடு:

சோழநாடு ஏர்க்களச்சிறப்பையும், போர்க்களச் சிறப்பையும் கொண்டிருந்தது. வயலில் விளைந்த நெல்லை அறுவடை செய்து காக்கும் உழவர்கள் நெற்போரின் மீது ஏறி நி;ன்று கொண்டு அருகில் இருக்கும் உழவர்களைப் பார்த்து "நாவலோ" என்று கூவி அழைப்பர் நாவலோ "இந்நாள் வாழ்க சிறக்க" என்று பொருள்) இவ்வாறு வயல் வளம் மிகுந்ததாகக் காணப்பட்டது சோழநாடாகும்.

பாண்டியநாடு:

வெண்கொற்றக்குடையை உடைய தென்னவனாகிய பாண்டியனுடைய ஒளி பொருந்திய நாட்டின்கண் எங்கு நோக்கினும் முத்துக்குவியலே காணப்பட்டது. வெண்சங்குகள் மணலில் ஈனுகின்ற இளஞ்சினையும், குவிந்துகிடக்கின்ற புன்னை மரத்தின் அரும்புகளும், பாக்கு மரங்களின் பாளைகளில் இருந்து சிந்திய மணிகளும் முத்துக்குவியல்களைப்போலவே காட்சியளித்தன என்று முத்தொள்ளாயிரம் மூன்று நாடுகளின் வளங்களையும் எடுத்துக் கூறுகிறது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. அச்சமில்லாத நாடாக முத்தொள்ளாயிரம் எந்நாட்டைக் கூறுகிறது?
அ) சோழநாடு ஆ) சேரநாடு இ) பாண்டிய நாடு ஈ) பல்லவ நாடு
விடை: ஆ) சேரநாடு

2. 'நாள்வாழ்க' என்னும் வாழ்த்துப்பொருளை உணர்த்தும் சொல் யாது?
அ) காவலோ ஆ) நாவலோ இ) பந்தரோ ஈ) நச்சிலையோ
விடை: ஆ) நாவலோ

3. "கொல் யானை மேலிருந்து" இத்தொடரில் கொல்யானை என்பதன் இலக்கணக்குறிப்பு யாது?
அ) பண்புத்தொகை ஆ) உரிச்சொற்றொடர்
இ) உருவகம் ஈ) வினைத்தொகை விடை: ஈ) வினைத்தொகை

4. பொருத்துக.

சொல்		பொருள்	விடை	சொல்		பொருள்
அ) நந்து	–	முத்து		அ) நந்து	–	சங்கு
ஆ) முத்தம்	–	குஞ்சு		ஆ) முத்தம்	–	முத்து
இ) பழனம்	–	சங்கு		இ) பழனம்	–	வயல்
ஈ) பார்ப்பு	–	வயல்		ஈ) பார்ப்பு	–	குஞ்சு

5. பொருத்திக்காட்டுக.
அ) கோதை – 1. சோழர்
ஆ) கிள்ளி – 2. பாண்டியர்
இ) தென்னன் – 3. சேரர்
அ) 3, 1, 2 ஆ) 1, 2, 3 இ) 3, 2, 1 ஈ) 2, 3, 1
விடை : அ) 3, 1, 2

6. கொல்யானை மேலிருந்து கூற்றிசைத்தால் போலுமே நல்யானைக் கோக்கிள்ளி நாடு அடிகளில் இடம் பெறும் அணி .....
அ) உவமை ஆ) உருவகம் இ) பிறிதுயெறுதல் ஈ) வேற்றுமை
விடை: அ) உவமை

7. முத்தொள்ளாயிரத்தின் பா .....
அ) வெண்பா ஆ) ஆசிரியப்பா இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா
விடை: அ) வெண்பா

8. புறத்திரட்டு என்னும் நூலிலிருந்து கிடைக்கப் பெற்றுள்ள முத்தொள்ளாயிரத்தின் செய்யுள்கள் .....
அ) 106 ஆ) 108 இ) 110 ஈ) 112
விடை: ஆ) 108

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

9. முத்தொள்ளாயிரத்தின் ஆசிரியர் .....

அ) நக்கீரர் ஆ) பரணர் இ) கபிலர் ஈ) அறிய முடியவில்லை

விடை: ஈ) அறிய முடியவில்லை

10. முத்தொள்ளாயிரம் ஆசிரியரின் காலம் .....

அ) முன்றாம் நூற்றாண்டு ஆ) நான்காம் நூற்றாண்டு
இ) ஐந்தாம் நூற்றாண்டு ஈ) ஆறாம் நூற்றாண்டு

விடை: இ) ஐந்தாம் நூற்றாண்டு

11. பொருத்திக்காட்டுக.

அ) சேர நாடு – 1. ஏர்க்களச் சிறப்பு
ஆ) சோழ நாடு – 2. அச்சமில்லாத நாடு
இ) பாண்டிய நாடு – 3. முத்துடை நாடு

அ) 2, 1, 3 ஆ) 1, 2, 3 இ) 3, 2, 1 ஈ) 2, 3, 1

விடை : அ) 2, 1, 3

குறுவினா

1. சோழ நாட்டின் சிறப்புகளாக முத்தொள்ளாயிரச் செய்யுளில் கூறப்படுவன யாவை?

ஏர்க்களச் சிறப்பு, போர்க்களச் சிறப்பு.

2. நீர்ப்பறவைகள் அஞ்சி தம் குஞ்சுகளைச் சிறகுகளுக்குள் ஒடுக்கி வைத்துக் கொண்டதற்காண காரணம் யாது?

சேறுபட்ட நீர்மிக்க வயல்களில் அரக்கு நிறத்தில் செவ்வாம்பல்கள் மெல்ல விரிந்ததைக் கண்டு தண்ணீரில் தீப்பிடித்துவிட்டதாக அஞ்சி தம் குஞ்சுகளைச் சிறகுகளுக்குள் நீர்ப்பறவைகள் ஒடுக்கி வைத்துக் கொண்டன.

3. 'நாவலோ' என்று கூவி அழைப்பவர் யார்?

நெல்லை அறுவடை செய்து காக்கும் உழவர்கள் நெற்போர் மீதேறி நின்று கொண்டு மற்ற உழவர்களை 'நாவலோ' என்று கூவி அழைப்பர்.

4. முத்தொள்ளாயிரத்தில் பாடப்பெறும் மன்னர்களைக் குறிப்பிடுக.

சேர, சோழ, பாண்டியர்.

5. அஞ்சி, வெண்குடை – இச்சொற்களுக்கான இலக்கணக் குறிப்பை எழுது.

அஞ்சி – பெயரெச்சம், வெண்குடை – பண்புத்தொகை.

கற்பவை கற்றபின்

பக்கம்: 190

1. நீங்கள் வசிக்கும் பகுதி, வேந்தருள் யார் ஆண்ட நாடு, என்பதை அறிந்து அவர்களைப் பற்றிய செய்தித்தொகுப்பேடு ஒன்றை உருவாக்குக.

நாங்கள் வசிக்கும் பகுதி நெல்லை மாவட்டத்தில் உள்ள தென்காசி என்னும் ஊர் ஆகும்.

தென்காசியை தலைநகராக்கி அங்கேயே முடிசூட்டிக் கொண்ட மன்னன் "சடையவர்மன் பராக்கிரம பாண்டியன்" ஆவார். சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் முதல் அவனின் அடுத்த

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

தலைமுறையில் வந்த அனைத்துப் பாண்டியரும் தென்காசியையே தலைநகராகக் கொண்டு தென்காசி பெரிய கோயிலில் உள்ள சிவந்த பாதவூருடைய ஆதீன மடத்தில் முடிசூட்டிக் கொண்டனர்.

தென்காசி பெரியகோயில் பிரம்மதேசம், சேரன்மாதேவி, அம்பாசமுத்திரம், களக்காடு ஆகிய ஊர்களில் இவர்களைப் பற்றிய கல்வெட்டுகள் மற்றும் செப்பேடுகள் காணப்படுகின்றன.

தென்காசிப் பகுதியை ஆண்ட பாண்டியர்களில் "கொல்லங்கொண்டான்" என்பவனே பாண்டியர் வரலாற்றில் அறியப்படும் கடைசி பாண்டிய மன்னனாவான். தென்காசியில் பாண்டிய மன்னர்களின் ஆளுகை 17ம் நூற்றாண்டின் இறுதி வரை நடைபெற்றது அறியப்படுகிறது.

தென்காசி கோவிலில் உள்ள இவனது மெய்க்கீர்த்தி "பூமிசைவளிதை நாவினில் பொலிய" எனத் தொடங்குகிறது. பொன்னி பெருமான், மானக்கவசன் போன்ற சிறப்புப் பெயர்களைப் பெற்றிருந்த இம்மன்னன் புலமை மிக்கவனாகவும் வடமொழி அறிந்தவனாகவும் விளங்கினான். திருக்குற்றாலத்தில் சேர மன்னன் ஒருவனுடன் போர்புரிந்து வெற்றி பெற்றான்.



ஆற்றிய அறப்பணிகள்:

- ஐந்து ஊர்களில் அக்கரகாரம் அமைத்து அந்தணர்களுக்குத் தானம் வழங்கினான்.
- திருக்குற்றாலம், திருப்புடைமருதூரில் உள்ள சிவாலயங்களுக்கு மண்டபங்கள் அமைத்தான்.
- நெல்லை சிவன் கோவிலின் நள்ளிரவு வழிபாட்டிற்காக நிவந்தங்கள் அளித்தான்.
- செங்கோல் ஆட்சி நடத்திய சடையவர்மன் விசுவநாதப் பேரேரி என்ற பெயருடன் ஒரு ஏரியை அமைத்தான்.
- இவ்வாறு எங்கள் ஊரை ஆண்ட பாண்டிய வேந்தனின் பெருமைகளை எழுதிக்கொண்டே போகலாம். எம் ஊரில் வசிப்பதைப் பெருமையாகக் கருதுகிறேன்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

2. நெல் விதைப்பு முதல் அரிசி புடைப்பது வரை, வயல்களக்காட்சியை அறிந்து தகுந்த படங்களுடன் காட்சிப்படுத்துக.



உழுதல்



விதைத்தல், நடுதல்



உரமிடுதல்



களையெடுத்தல்



தலை சாய்த்து நிற்கும் நெற்பயிர்கள்



வயல்வெளி



அறுவடை செய்தல்



போர் அடித்தல்



மூட்டைகளில் நெல் அளந்து கட்டுதல்



அரிசியாக்குதல்



அரிசி புடைத்தல்

⁂⁂⁂⁂⁂

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கவிதைப் பேழை

இயல் ஏழு

மதுரைக்காஞ்சி

- பதினெண்மேற்கணக்கு நூல்களில் மதுரைக்காஞ்சி முதன்மையானது.
- இந்நூலில் மதுரை மாநகர் மக்களின் வாழ்விடம், கோட்டை, கொத்தளம், திருவிழாக்கள், பல்வகைப் பள்ளிகள், நாற்பெருங்குழு, அந்தி வணிகம் ஆகிய காட்சிகள் கவித்துவமாய் விவரிக்கப்பட்டுள்ளது.

நூல் குறிப்பு (நூல் வெளி):

- பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று மதுரைக் காஞ்சி. காஞ்சி என்பதற்கு "நிலையாமை" என்று பொருள்.
- மதுரையின் சிறப்புகளையும், நிலையாமைத் தத்துவத்தையும் மையமாகக் கொண்டு இந்நூல் அமைந்துள்ளதால் மதுரைக்காஞ்சி எனப் பெயர் பெற்றது.
- இந்நூல் 782 அடிகளைக் கொண்டது. 354 அடிகள் மதுரையைப் பற்றிச் சிறப்பித்துக் கூறுகின்றன.
- இந்நூலைப் "பெருகுவலி மதுரைக் காஞ்சி" என்று வேறு பெயரிட்டும் அழைப்பர்.
- இந்நூலின் பாட்டுடைத்தலைவன் "தலையாலங்கானத்து செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்" ஆவார்.
- பத்துப்பாட்டுகளுள் மிகுதியான அடிகளை உடைய நூல் மதுரைக்காஞ்சியே ஆகும்.
- "முடிசார்ந்த மன்னரும் முடிவில்
  பிடி சாம்பல் ஆவார்"
  என்ற நிலையாமை தத்துவத்தைக் கூறி, மன்னனை வீடு பேற்றின் நிமித்தம் நெறிப்படுத்திய நூல் ஆகும்.

ஆசிரியர் குறிப்பு:

மதுரைக் காஞ்சியை இயற்றியவர் மாங்குடி மருதனார். திருநெல்வேலி மாவட்டம் "மாங்குடி" என்னும் ஊரில் பிறந்தவர். இவர் "மதுரைக் காஞ்சிப்புலவர்" என்றும். "காஞ்சிப்புலவனார்" என்றும் சிறப்பிக்கப்பட்டார். எட்டுத்தொகையிலும் பதின்மூன்று பாடல்களைப் பாடியுள்ளார்.

அவை

அகநானூறு - 1 (89 வது பாடல்)
நற்றிணை - (2) (120,123)"
ஆகியவற்றைப் பாடியுள்ளார்.

குறுந்தொகை - 3 (164,173,302)"
புறநானூறு - 6 (24, 26,313,335,372,396)

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பாடலின் பொருள்:

- மதுரை மாநகரிலே ஆழமான, தெளிந்த நீரையுடைய அகழி உள்ளது. பல கற்களைக் கொண்டு கட்டப்பட்ட மதில் வானளவு உயர்ந்துள்ளது.
- பழமையானதும், வலிமை மிக்கதும் தெய்வத்தன்மை பொருந்தியதுமாகிய வாயில் உள்ளது. வாயில் கதவுகளில் நெய் பூசியதால் கரிய நிறமும், வலிமையும் உடையதாய் மாறிவிட்டன.
- மேகங்கள் உலவும் மலைமுகடுகளைப் போல மாளிகைகள் ஓங்கி உயர்ந்து உள்ளன. இடைவிடாது பாய்ந்தோடும் வைகையைப் போல மக்கள் வாயில் வழி சென்று கொண்டே இருக்கின்றனர்.
- மண்டபம், கூடம், அடுக்களை என பல்வேறு அங்கங்களை உடையதாய், வான்வரை ஓங்கிய, தென்றல் காற்று இசைத்து நுழையும் பல சாளரங்களைக் கொண்ட நல் இல்லங்கள் உள்ளன.
- ஆறு போன்ற அகன்ற நீண்ட தெருக்களில் மலையெனக் குவிந்து கிடக்கும் பொருள்களை வாங்க வந்த மக்கள் பேசும் பல்வேறு மொழிகள் ஒலிக்கின்ற நகரம்,
- விழா பற்றிய முரசறைவோனின் முழக்கமானது. பெருங்காற்று புகுந்த கடலொலி போல் ஒலிக்கிறது.
- இசைக்கருவிகளை இயக்குவதால் உண்டாகும் இசை, நீர்நிலைகளைக் கைகளினால் குடைந்து விளையாடும் தன்மை போல எழுகின்றது.
- இசையைக் கேட்ட மக்கள் தெருக்களில் ஆரவாரத்தோடு ஆடுகின்றனர். பெரிய தெருக்களில் இருக்கும் நாளங்காடியும், அல்லங்காடியும் ஓவியங்கள் போலக் காட்சியளிக்கின்றன என்று மதுரைக் காஞ்சி, மதுரையின் பெருமையைக் கூறுகிறது.

சொல்லும் பொருளும் :

மணிநீர்க்கிடங்கு	–	தெளிந்த நீரையுடைய அகழி	புரிசை	–	மதில்
அணங்கு	–	தெய்வம்	நிவந்த	–	உயர்ந்த
நெடுநிலை	–	நெடியவாசல் (வாயில்)	சில்காற்று	–	தென்றல்
புழை	–	சாளரம்	மாகால்	–	பெருங்காற்று
முந்நீர்	–	கடல்	பணை	–	முரசு
கயம்	–	நீர்நிலை	ஓவு	–	ஓவியம்
நியமம்	–	அங்காடி			
இருபெரு நியமம்	–	நாளங்காடி அல்லங்காடி.			
கலிகொள் சும்மை	–	மகிழ்ச்சி ஆரவார ஓசை			

இலக்கணக் குறிப்புகள் :

ஓங்கிய	–	பெயரெச்சம்	நிலைஇய	–	சொல்லிசை அளபெடை
குழாஅத்து	–	செய்யுளிசை அளபெடை	வாயில்	–	இலக்கணப் போலி
மா கால்	–	உரிச்சொல் தொடர்	முழங்கிசை	–	வினைத்தொகை
இமிழிசை	–	வினைத்தொகை	நெடுநிலை	–	பண்புத்தொகை
முந்நீர்	–	பண்புத்தொகை	கிடந்தன்ன	–	உவம உருபு
மகிழ்ந்தோர்	–	வினையாலணையும் பெயர்			

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பகுபத உறுப்பிலக்கணம் :

ஆழ்ந்த - ஆழ் + த் (ந்) + த் + அ

ஆழ்	-	பகுதி,
த்	-	சந்தி,
ந்	-	ஆனது விகாரம்,
த்	-	இறந்த கால இடைநிலை
அ	-	பெயரெச்சவிகுதி

ஓங்கிய - ஓங்கு + இன் + ய் + அ

ஓங்கு	-	பகுதி,
இன்	-	இறந்த கால இடைநிலை,
ய்	-	உடன்படு மெய் சந்தி,
அ	-	பெயரெச்ச விகுதி

மகிழ்ந்தோர் - மகிழ் + த் (ந்) + த் + ஓர்

மகிழ்	-	பகுதி,
த்	-	சந்தி
ந்	-	ஆனது விகாரம்,
த்	-	இறந்த கால இடைநிலை
ஓர்	-	பலர்பால் வினைமுற்று விகுதி

எழுந்து - எழு + த் (ந்) + த் + உ

எழு	-	பகுதி,
த்	-	சந்தி
ந்	-	ஆனது விகாரம்
த்	-	இறந்தகால இடைநிலை
உ	-	வினையெச்ச விகுதி

மூழ்கி - மூழ்கு + இ

மூழ்கு	-	பகுதி,
இ	-	வினையெச்ச விகுதி.

பாடநூல் வினாக்கள்

குறுவினா

1. மதுரைக் காஞ்சி - பெயர்க்காரணத்தைக் குறிப்பிடுக.

- காஞ்சி என்றால் நிலையாமை என்று பொருள். ‘‘மதுரை’’ நகரைக் குறிக்கும்.
- மதுரை நகரின் சிறப்புகளைப் பாடுவதாலும், நிலையாமையைப் பற்றியக் கருத்துகளைக் கூறுவதாலும், இப்பெயர் பெற்றது.

சிறுவினா

1. ‘‘மாகால் எடுத்த முந்நீர் போல’’ - இடஞ்சுட்டி பொருள் விளக்குக.

இடம் :

மாங்குடி மருதனார் இயற்றிய மதுரைக் காஞ்சி என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது.

பொருள் :

மதுரையின் வளங்களையும், விழாக்களையும் பற்றிக் குறிப்பிடும் போது புலவர் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

விளக்கம்:

ஆறு போன்ற தெருக்களில் பல்வேறு பொருள்களை வாங்க வந்த பல்வேறு மொழி பேசும் மக்களின் ஒலியோடு விழாக்கள் பற்றிய அறிவிப்புகள் ஒலிக்கின்றன. ‘‘முரசறைவோரின் முழக்கம், பெருங்காற்று புகுந்த கடலொலி போல்’’ ஒலிக்கிறது. இதனையே ‘‘மாகால் எடுத்த முந்நீர் போல’’ என்றார் மாங்குடி மருதனார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. ஆழ்ந்த மணிநீர் கிடங்கின் - மணிநீர் கிடங்கு என்பது யாது?

அ) மணல் ஆ) கடல் இ) அகழி ஈ) ஆறு

விடை : இ) அகழி

2. மதுரைக்காஞ்சி நூலின் மொத்த அடிகள் எத்தனை?

அ) 732 ஆ) 752 இ) 782 ஈ) 792

விடை : இ) 782

3. மதுரைக்காஞ்சி நூல் மதுரை நகரின் சிறப்புகளை எத்தனை அடிகளில் பெருமைப்படுத்தி உள்ளது?

அ) 254 ஆ) 284 இ) 324 ஈ) 354

விடை : ஈ) 354

4. பொருத்துக:

அ) புழை - 1. நீர்நிலை
ஆ) பனை - 2. ஓவியம்
இ) கயம் - 3. முரசு
ஈ) ஓவு - 4. சாளரம்

விடை : அ) 4 ஆ) 3 இ) 1 ஈ) 2

5. குழாஅத்து - எவ்வகை அளபெடை?

அ) சொல்லிசை அளபெடை ஆ) இன்னிசை அளபெடை
இ) செய்யுளிசை அளபெடை ஈ) இயற்கை அளபெடை

விடை : இ) செய்யுளிசை அளபெடை

6. ஆறு கிடந்தன்ன அகல் நெடுந்தெரு உள்ள நகரம் எது?

அ) தஞ்சாவூர் ஆ) சென்னை இ) மதுரை ஈ) முசிறி

விடை: இ) மதுரை

7. மதுரைக்காஞ்சி பாடியவர் யார்?

அ) கபிலர் ஆ) பரணர் இ) ஓரம்போகியார் ஈ) மாங்குடி மருதனார்

விடை : ஈ) மாங்குடி மருதனார்

8. மாங்குடி மருதனார் எட்டுத் தொகையில் ..... பாடல்களைப் பாடியுள்ளார்.

அ) 11 ஆ) 12 இ) 13 ஈ) 14

விடை : இ) பதின்மூன்று

9. மதுரைக்காஞ்சி நூலின் பாட்டுடைத் தலைவர் .....

அ) தலையாலங்கானத்து செருவென்ற பாண்டியன்
ஆ) கிள்ளிவளவன்
இ) வெற்றிவேற்செழியன்
ஈ) நெடுஞ்செழியன்

விடை : அ) தலையாலங்கானத்து செருவென்ற பாண்டியன்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

10. காஞ்சி என்ற சொல்லின் பொருள் ..... ஆகும்.

அ) உண்ணாமை ஆ) அழியாமை
இ) இல்லாமை ஈ) நிலையாமை **விடை : ஈ) நிலையாமை**

11. மாகால் - இலக்கணக் குறிப்பு யாது?

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
இ) தொழிற்பெயர் ஈ) உரிச்சொல் தொடர்

விடை : ஈ) உரிச்சொல் தொடர்

குறுவினா

1. மாங்குடி மருதனார் - குறிப்பு வரைக.

மதுரைக்காஞ்சியைப் பாடியவர் மாங்குடி மருதனார். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மாங்குடி என்னும் ஊரில் பிறந்தவர். எட்டுத்தொகையில் பதின்மூன்று பாடல்களைப் பாடியுள்ளார்.

சிறுவினா

1. மதுரைக்காஞ்சி குறிப்பு வரைக.

- பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று.
- மதுரையின் சிறப்புகளைப் பாடுவதாலும் நிலையாமைத் தத்துவத்தைக் கூறுவதாலும் மதுரைக்காஞ்சி எனப் பெயர்.
- இந்நூல் 782 அடிகளை உடையது.
- இந்நூலை இயற்றியவர் மாங்குடி மருதனார் ஆவார்.
- இந்நூலின் பாட்டுடைத்தலைவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன்.

நெடுவினா

1. மதுரை மாநகரின் அழகை மாங்குடி மருதனாரின் வழி விளக்குக.

முன்னுரை:

மதுரையைச் சிறப்பித்துப் பாடியுள்ள நூல்களுள் பதினெண் மேற்கணக்கில், மதுரைக்காஞ்சி முதன்மையானது. இந்நூலில் மதுரை மாநகர் மக்களின் வாழ்விடம், கோட்டை கொத்தளம், அந்நகரில் நிகழும் திருவிழாக்கள், பலவகைப் பள்ளிகள், நாற்பெருங்குழு, அந்தி வணிகம் ஆகிய காட்சிகள் கவித்துவமாய் விரிந்துள்ளன.

மதுரையின் சிறப்புகள்:

மாநகரில் ஆழமான தெளிந்த நீரையுடைய அகழி உள்ளது. பல கற்களைக் கொண்டு கட்டப்பட்ட மதில் வானளவு உயர்ந்துள்ளது. பழைமையானதும் வலிமை மிக்கதும் தெய்வத்தன்மை பொருந்தியதுமாகிய வாயில் உள்ளது. அவ்வாயில் நெய் பூசியதால் கருமையடைந்த வலிமையான கதவுகளை உடையது. மேகங்கள் உலாவும் மலைபோல் மாளிகைகள் உயர்ந்து உள்ளன. இடைவிடாது ஓடுகின்ற வையை ஆற்றைப் போல மக்கள் எப்போதும் வாயில்கள் வழிச் செல்கின்றனர்.

மண்டபம், கூடம், அடுக்களை எனப் பல்வேறு பிரிவுகளைக் கொண்டு வான்வரை ஓங்கிய தென்றல் காற்று இசைக்கும் .பல சாளரங்களையுடைய நல்ல இல்லங்கள் உள்ளன. ஆறு போன்ற

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

அகலமான நீண்ட தெருக்களில் பொருள்களை வாங்க வந்த மக்கள் பேசும் பல்வேறு மொழிகள் ஒலிக்கின்றன. விழா பற்றிய முரசறைவோரின் முழக்கம் பெருங்காற்று புகுந்த கடலொலி போல் ஒலிக்கிறது. இசைக்கருவிகளை இயக்குவதால் உண்டாகும் இசை, நீர்நிலைகளைக் கையால் குடைந்து விளையாடும் தன்மை போல எழுகிறது. அதனைக் கேட்ட மக்கள் தெருக்களில் ஆரவாரத்தோடு ஆடுகின்றனர். பெரிய தெருக்களில் இருக்கும் நாளங்காடியும் அல்லங்காடியும் ஓவியங்கள் போலக் காட்சியளிக்கின்றன.

முடிவுரை :

காலை தொடங்கி மறுநாள் விடியல்வரையில் நகரத்தைச் சுற்றிவந்து கண்ணுற்றதை முறைப்படுத்திக் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

கற்பவை கற்றபின்

பக்கம்: 193

1. ஊரின் பெயர்க்காரணம் எழுதி வகுப்பறையில் கலந்துரையாடுக.

கலந்துரையாடுபவர்கள்: செல்வன், கிள்ளை, மது.

இன்று நாம் வகுப்பில் மதுரையைப் பற்றி பல அரிய செய்திகள் அறிந்து கொண்டோம். அது போல் எங்கள் ஊருக்கும் பெயர் ஏற்பட காரணங்கள் உண்டு. நாம் கலந்துரையாடி தெரிந்து கொள்வோமா!

செல்வன் : மது, கிள்ளை நான் முதலில் சொல்லட்டுமா.

மது : சொல் செல்வா! உன் ஊர் ஈரோடு தானே.

செல்வன் : ஆம், ஈரோடு என்று ஏன் பெயர் வந்தது தெரியுமா .....

துர்வாச முனிவரின் சாபத்துக்கு ஆளான திருமாலின் வாயில் காப்போனாகிய தைபர் என்பவரின் தலை ஓடு நான்காகப் பிளவுபட்டதாம். அதில் பெரிய ஓடு வீழ்ந்த இடம் பேரோடு என்றும், சிறிய ஓடு விழுந்த இடம் சித்தோடு என்றும், வெள்ளை ஓடு விழுந்த இடம் வெள்ளோடு என்றும், ஈர ஓடு விழுந்த இடம் ஈரோடு என்றும் பெயர் பெற்றதாம். சித்தோடு, பேரோடு, வெள்ளோடு ஆகிய ஊர்கள் ஈரோட்டிற்கு அருகிலே உள்ளன.

கிள்ளை : அப்படியாடா ஆச்சரியமாக இருக்கிறதே.....

சரி செல்வன் எங்கள் சொந்த ஊர் தூத்துக்குடி. அதன் பெயர்க்காரணம் என்ன தெரியுமா?

தூர்த்து + குடி. 'தூர்த்து' என்பதன் பொருள் 'கடலில் இருந்து உருமாறி வந்த நிலம்' என்பது ஆகும். 'குடி' என்பதற்கு 'குடியமர்தல்' என்று பொருள். கடலில் இருந்து உருமாறி மக்கள் வாழத் தகும் நகராக மாறியதால் 'தூத்துக்குடி' எனப் பெயர் பெற்றதாம்.

மது : எங்கள் ஊர் சென்னையில் உள்ள பூவிருந்தவல்லி ஆகும். அதற்கு ஏன் அப்பெயர் வந்தது தெரியுமா?

மல்லிகைப்பூக்கள் (செடிகள்) அதிக அளவில் பயிரிடப்பட்ட பகுதி இது. இவ்விடத்தை சமஸ்கிருதத்தில் 'புஷ்பகவல்லி' என்றும், தமிழில் 'பூவிருந்தவல்லி' என்றும் வழங்கினர். நாளடைவில், பூந்தமல்லியாக மாறிவிட்டது.

நாம் மூவரும் நம் ஊரின் பெயர்க்காரணத்தை அறிந்து வைத்திருக்கிறோம் மகிழ்ச்சியாக உள்ளது அல்லவா?

(மாணவர்களே உங்கள் ஊரின் பெயர்க்காரணத்தையும் அறிந்து கொள்ளுங்கள்)

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

2. தமிழ்த்தாயின் ஆணிவேர் துளிர்த்த இடம் மதுரை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட உலகின் தொன்மை நகரங்களில் ஒன்று மதுரை. அந்நகரத்தில் இயலும் இசையும் நாடகமும் பொங்கிப் பெருகின - இத்தொடர்களுக்கு வலிமை சேர்க்கும் வகையில் கருத்துகளைத் திரட்டி ஐந்து மணித்துளிகள் பேசுக.

மதுரையின் சிறப்புகள் (மேடைப் பேச்சு)

- இந்திய துணைக்கண்டத்தில் மிகவும் தொன்மையான வரலாற்றைக் கொண்ட நகரம் மதுரை ஆகும். தமிழ்த்தாயின் ஆணிவேர் துளிர்த்த இடம். 2500 ஆண்டுகளுக்கு மேலான பழம் பெருமை வாய்ந்தது. கி.மு 4 முதல் கி.பி 2ஆம் நூற்றாண்டு வரையிலான காலம் சங்ககாலம். இக்காலத்தில் தமிழ் அறிஞர்களைக் கொண்டு மூன்றாம் தமிழ்ச்சங்கம் அமைத்து தமிழை வளர்த்த பெருமையுடைய நகரம்.
- கௌடில்யர், மெகஸ்தனிஸ் ஆகியோரின் குறிப்புகளிலும் மதுரை பெருமை பெறுகிறது.
- மரபுச்சின்னமாக மதிக்கப்படும் மதுரை பல்வேறு காலக்கட்டங்களில் பல்வேறு ஆட்சியாளர்களால் ஆளப்பட்ட நகரமாகும்.
- சங்ககாலப் பாண்டியர், இடைக்காலச்சோழர், பிற்காலச் சோழர், பிற்காலப்பாண்டியர், மதுரை சுல்தான், விஜயநகரப்பேரரசு, மதுரை நாயக்கர்கள், கர்நாடக இராச்சியம், ஆங்கிலேயர்கள் போன்றோர் ஆண்டுள்ளனர்.
- பல வரலாற்று நினைவிடங்களைக் கொண்டிருந்த போதிலும் மீனாட்சியம்மன் கோவிலும். திருமலை நாயக்கர் அரண்மனையும் புகழ் பெற்றவை. சித்திரைத் திருவிழாவும், மீனாட்சி அம்மன் திருக்கல்யாணமும் இந்நகரின் புகழ்பெற்ற திருவிழாக்கள் ஆகும். சித்திரைத் திருவிழாவில் அழகர் வைகை ஆற்றில் இறங்குவது சிறப்பு நிகழ்வாகும்.
- பொங்கல் திருநாளில் நகரின் அருகில் உள்ள அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூர் ஆகிய இடங்களில் நடைபெறும் ஏறுதழுவுதல் நிகழ்வும் பெயர் பெற்றது ஆகும்.
- இந்நகரம் கூடல், மல்லிகை மாநகர், நான்மாடக் கூடல், திரு ஆலவாய் போன்ற பெயர்களாலும் அழைக்கப்படுகிறது.
- 7ம் நூற்றாண்டில் பரஞ்சோதி முனிவரால் இயற்றப்பட்ட திருவிளையாடற்புராணத்திலும் மதுரையின் சிறப்புப் பெயர்கள், பெருமைகள் பட்டியல் இடப்பட்டுள்ளன. சாணக்கியர் எழுதிய அர்த்த சாஸ்திரத்திலும் மதுரை பற்றிய குறிப்புகள் உள்ளன.
- நற்றிணை, திருமுருகாற்றுப்படை, மதுரைக்காஞ்சி, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, புறநானூறு, அகநானூறு சிறுபாணாற்றுப்படை, சிலப்பதிகாரம் போன்ற அனைத்து இலக்கியங்களிலும் மதுரையின் பெருமை பேசப்படுகிறது.
- சிலப்பதிகாரம் மூலம் மதுரையில் இயலும், இசையும் பொங்கிப் பெருகியது என்பதை உணரலாம். இவ்வாறு மதுரையின் பெருமை வரலாற்று சிறப்பு என பேசிக் கொண்டே போகலாம். அதற்கு முடிவே இராது.

நன்றி ! வணக்கம்.

⁂⁂⁂⁂⁂⁂

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

விரிவானம்

இயல் ஏழு

சந்தை

பாடநூல் வினாக்கள்

குறுவினா

1. உங்கள் ஊரில் உற்பத்தியாகும் பொருள்களையும் சந்தையில் காணும் பொருள்களையும் ஒப்பிட்டு எழுதுக.

உற்பத்தியாகும் பொருள் :

மனிதர்கள் நாடோடியாக, வேட்டையாடி கிடைத்த உணவை உண்டனர். பின்னாளில் நால்வகை நிலங்களில் உற்பத்தி பெருகியது. காய்கறி, கீரை, தானியம் ஆகியவற்றை உற்பத்தி செய்தனர்.

சந்தையில் காணும் பொருள்:

உழவர்கள் உற்பத்தி செய்த பொருள்களை விற்கவும், மாற்றுப்பொருளை வாங்கவும் முச்சந்தி, நாற்சந்தி என மக்கள் கூடும் இடங்களில் கடை விரித்துப் பொது வணிகமாக்கினர்.

நெடுவினா

1. எங்கள் ஊர் சந்தை என்னும் தலைப்பில் நாளிதழ் செய்தி ஒன்றை எழுதுக.

நாளிதழ் செய்தி

மானூர் சந்தையின் புகழ்:

ஜூன் 16 - நம் மக்களின் வணிக முறைகளில் ஒன்று சந்தை, தினசரி சந்தை, வாரச் சந்தை என இரண்டு உண்டு. எங்கள் ஊரில் வாரச் சந்தைதான் வாரத்தில் ஒரு நாள் [சனிக்கிழமை] மட்டும் கூடும். எங்கள் ஊர் சந்தையில் எம் கிராமத்திலும், பக்கத்து கிராமங்களிலும் விளையும் காய்கறி, கீரை, தானிய வகைகள் விற்பனைக்கு வரும். பக்கத்து மலைப்பகுதியில் இருந்து மிளகு, மல்லி, சீரகம் கொண்டு வந்து விற்பனை செய்வார்கள்.

காய்கறிகள், தானியவகைகள், மளிகைப் பொருட்கள், தின்பண்டங்கள் ஈயம், மண், இரும்பு பாத்திரங்கள் தோட்ட வேலை செய்வதற்கு உரிய களைக்கொத்தி, மண்வெட்டி, மேலும் துணி மணி வகைகள் என அனைத்தும் எம் ஊர் சந்தையில் வாங்கலாம்.

நூற்றுக்கணக்கான கிராம மக்களுக்கு நேர்மையான விலையில் அனைத்தும் கிடைக்கும். என் தாத்தா சிறு வயதில் சந்தைக்குச் செல்லும் பொழுது திருவிழாவிற்குப் போவது போல் மகிழ்ச்சியாய்ச் செல்வாராம். ஏனெனில் அக்காலத்தில் கழைக்கூத்து, பொம்மலாட்டம் கூட சந்தைவெளியில் உண்டாம்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

எங்கள் ஊர்சந்தையிலே ஆடு, மாடு வாங்குவதை நினைச்சாலே வேடிக்கையா இருக்கும். துண்டைப் போட்டு கைகளை மறைச்சு விலைபேசுவது ஒரு பக்கம், பல், வால், கொம்பைப் பார்த்து விலை பேசுவது என ஒவ்வொருவரும் ஒவ்வொரு உத்தியைக் கையாள்வர் சந்தை விற்கும் வாங்கும் வணிகத்தளம் மட்டுமல்ல, உறவுகளுக்கு உயிரூட்டும் இடமாகவும் இருக்கும்.

வாங்க! வாங்க! என கல்யாண வீடு போல வரவேற்று நலம் விசாரித்த பின்புதான் வியாபாரம் தொடங்கும்.

எம் ஊர் சந்தையில் வியாபாரிக்கும் வாடிக்கையாளருக்குமான உறவு என்பது வெறுமனே பொருளை விற்று வாங்கும் உறவாக மட்டும் இருப்பதல்ல. சந்தையில் பழகியவர்கள் சம்பந்தியான கதைகளும் உண்டு.

சந்தையின் சாதாரண விசாரிப்புகளிலும் நேசம் உண்டு. நேர்மை உண்டு.

நீங்களும் ஒருமுறை எங்கள் சந்தைக்கு வந்துதான் பாருங்களேன்.

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. மாட்டுத்தாவணி என்னும் சொல்லில் தாவணி என்பதன் பொருள் _____

அ) நுந்தை ஆ) சந்தை இ) கூட்டம் ஈ) தொழுவம்

விடை : ஆ) சந்தை

2. கூற்று 1: சந்தையில் வணிகம் மட்டும் அல்லாது வாங்குபவரின் மனநிறைவும் பேணப்பட்டது.
கூற்று 2 : பகலில் செயல்படும் அங்காடி அல்லங்காடி
கூற்று 3 : நாகர்கோவில் தோவாளை பூச்சந்தையாகும் - இவற்றுள் சரியான கூற்று எவை?

விடை : கூற்று 1, 3 சரியானவை

3. புகழ்பெற்ற போச்சம்பள்ளிச் சந்தை எம்மாவட்டத்தில் உள்ளது?

அ) கிருஷ்ணகிரி ஆ) தர்மபுரி
இ) கடலூர் ஈ) தஞ்சாவூர் விடை : அ) கிருஷ்ணகிரி

குறுவினா

1. நாளங்காடி, அல்லங்காடி - வேறுபடுத்துக.

- பகலில் செயல்படும் கடைவீதிகளை 'நாளங்காடி' என்றும்
- இரவில் செயல்படும் கடைவீதிகளை 'அல்லங்காடி' என்றும் கூறுவர்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

சிறுவினா

1. சந்தைக்கும் பல்பொருள் அங்காடிக்கும் உள்ள வேறுபாடுகளைப் பட்டியலிடுக.

சந்தை	பல்பொருள் அங்காடி
கிராமத்து மக்கள் தங்களுடைய நிலத்தில் விளையும் பொருள்களைத் தாங்களே விற்பனை செய்வர்.	பொருள்களை உற்பத்தி செய்கிறவன் ஒருவன். விற்பனையாளன் வேறு ஒருவன்.
இடைத்தரகருக்கு வேலை இல்லை. குளிரூட்டப்பட்ட அறை இல்லை. விற்கிறவனும், வாங்குகிறவனும் ஓர் உடன்பாட்டுக்கு வந்தால் அதுவே விலை.	இங்கு, பொருள் கொள்முதல் செய்து தர இடைத்தரகர் உண்டு. குளிரூட்டப்பட்ட அறை. விலையை விற்பவனே முடிவு செய்து விற்கிறான்.
சந்தையில் சத்தம் இருக்கும். விசாரிப்புகளுக்கு மத்தியில் ஓர் உறவுக்கம்பி இழையோடும். குழந்தைகளுக்குத் தக்காளி கேரட் கொடுத்து மகிழ்வர்	இங்கு மக்கள் பேசிக் கொள்வதும் இயந்திரங்களின் ஓசைகளும் பேரிரைச்சலை ஏற்படுத்துகின்றன. குழந்தைகள் எந்தப் பொருளையும் தொடக்கூடாது.

2. போச்சம்பள்ளிச் சந்தை - குறிப்பு வரைக.

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளிச் சந்தை 18 ஏக்கர் பரப்பில் எட்டாயிரம் கடைகளுடன் இன்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கூடுகிறது. பல ஊர்களைச் சேர்ந்த மக்கள், தக்காளி முதல் தங்கம் வரை வாங்குவதற்குக் கூடுகிறார்கள். விற்பவரும் வாங்குபவரும் உறவுகளாப் பேசி மகிழும் ஆரவாரம் அங்கே ஒலிக்கிறது. 125 ஆண்டுகள் வயதான அச்சந்தையில் நான்கு தலைமுறை நட்பு நிலவுகிறது. கலப்படமில்லாத பொருள்களை வருவாய் நோக்கின்றி அச்சந்தை இன்றும் விற்பனை செய்கிறது.

3. தமிழகத்தில் சந்தைக்குப் பெயர் பெற்ற ஊர்களைப் பட்டியலிடுக.

- மணப்பாறை - மாட்டுச்சந்தை
- அய்யலூர் - ஆட்டுச்சந்தை
- ஒட்டன்சத்திரம் - காய்கறிச்சந்தை
- நாகர்கோவில் தோவாளை - பூச்சந்தை
- ஈரோடு - ஜவுளிச்சந்தை
- கடலூர், காராமணி குப்பம் - கருவாட்டுச் சந்தை
- நாகப்பட்டினம் - மீன் சந்தை

கற்பவை கற்றபின்

பக்கம்: 199

1. சந்தை நிகழ்வுகளை நாடகமாக நடித்துக் காட்டுக.

நாடகம்

நேரம் : காலை

உறுப்பினர் : தாத்தா, கீர்த்தி, குமரன், தாத்தாவின் நண்பர்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

காட்சி - 1

தா.நண்பர் : வாங்க! வாங்க! என்ன பேரன் பேத்தியோடே வரீக!

தாத்தா : ஆமா ஆமா ..... ஊர்ல இருந்து வந்திருக்காக. அங்கெல்லாம் 'மால்' போய் பழகுனவங்க....வித்தியாசமா இருக்கட்டுமேனு கூட்டிட்டு வந்தேன்.

தா.நண்பர் : ஓ ..... அப்படியா ..... சரி சரி ....

நான் பொருள்கள் எல்லாம் வாங்கி விட்டேன். நீங்க சீக்கிரம் போங்க கொஞ்ச நேரத்துல கூட்டம் அலைமோதும்.

காட்சி - 2

(தாத்தா, கீர்த்தி, குமரன்)

குமரன் : என்ன தாத்தா கூட்டம் அலைமோதுமா என்ன?

தாத்தா : ஆமாம் குமரா! சுற்றி உள்ள அத்தன ஜனமும் இந்த சந்தைக்குத் தான் வருவாக.....

கீர்த்தி : அப்படியென்ன தாத்தா இந்த சந்தையில விசேஷம்.

தாத்தா : இந்த சந்தையிலே கிடைக்காத பொருளே கிடையாது. ..... கடுகு, சீரகத்துல இருந்து, மண்பானை, அலுமினியப்பானை, பூ, பழம், இரும்புப்பொருள், துணிமணின்னு என்னென்ன உண்டோ அனைத்தும் வாங்கலாம்.

குமரன் விலை எல்லாம் எப்படித் தாத்தா இருக்கும்?

தாத்தா கண்ணு ..... கிராமத்து சந்தையில, உற்பத்தியாளன் தான் விற்பனையாளன். பிற ஊருக்கு அனுப்புவது, இடைத் தரகர்கள், குளிரூட்டப்பட்ட அறை என்று எந்தக் கூடுதல் செலவும் கிடையாது. உற்பத்தியாளரே தருவதால் சரியான விலைக்குக் கிடைக்கும்.

கீர்த்தி : தாத்தா ..... அதோ அந்தப்பக்கம் கோழி, ஆடு, மாடும், இருக்கு

தாத்தா : ஆமாம்மா..... உழவர்கள் தங்கள் வீடுகளில் வளர்க்கின்ற கோழி, கோழிக்குஞ்சு, ஆடு, மாடுகளைக் கூட்டி வந்து விலை கூறி விற்பர். கால்நடைகளை வளர்த்து விற்பதும் சிலருக்கான தொழில் .....

இருவரும் : சந்தையைப் பற்றிக் கேட்கவே ஆசையா இருக்கு தாத்தா. இனி நாங்கள் ஊருக்கு வரும் போதெல்லாம், சந்தை கூடும் நாளில் எங்களை அழைத்து வாங்க தாத்தா! சரியா!.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

2. சந்தை/அங்காடியில் உள்ள பொருள்களுக்கான விலைப்பட்டியல் எழுதிய விளம்பரப்பதாகை ஒன்றை உருவாக்குக.

''முத்து மளிகை''

தரமே நிரந்தரம்

விலைப்பட்டியல்

பொருள்கள்	விலை (₹)
அரிசி 1 கிலோ	55
து.பருப்பு 1 கிலோ	75
உ.பருப்பு 1 கிலோ	80
க.பருப்பு 1 கிலோ	70
சோப்புத்தூள் (சலவைத்தூள்) 1 கிலோ	80
தே.எண்ணெய் 1 லி	200
ந.எண்ணெய் 1 லி	200
க.எண்ணெய் 1லி	180
நாட்டுச் சர்க்கரை 1கி	60
நாட்டுக் கோழி முட்டை 1	10
கடுகு 1 கிலோ	100
சீரகம் 1 கிலோ	100
மிளகு 1 கிலோ	400
வெந்தயம் 1 கிலோ	300
கம்பு 1 கிலோ	60
சோளம் 1 கிலோ	55
சர்க்கரை (சீனி)	45

"தரமான பொருட்கள் குறித்த நேரத்தில் சரியான விலையில் உங்கள் இல்லத்திற்கே கொண்டு வருகிறோம்.

உரிமை : முத்து மளிகை

3. சிறு வணிகர் ஒருவரிடம் நேர்காணல் செய்க.

எ.கா: சந்தைப் பொருள்கள் மீதமானால் என்ன செய்வீர்கள்?

இடம் : கடை வீதி

சிறுவணிகர் : நாகராஜன். கா.

நேர்காண்பவர் : அமிழ்தன்

அமிழ் : ஐயா! தங்கள் பெயர் என்ன?

வணிகர் : என் பெயர் நாகராஜன்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

அமிழ் : எத்தனை ஆண்டுகளாக இந்த இடத்தில் வணிகம் செய்கிறீர்கள்?

வணிகர் : பத்து ஆண்டுகள் முடிந்து போயிருச்சு.

அமிழ் : என்னென்ன பொருள்கள் வைத்து வணிகம் செய்கிறீர்கள்?

வணிகர் : தேங்காய்,கீரை வகைகள், கத்திரிக்காய், வெண்டைக்காய், தக்காளி போன்ற கறிகாய் வகைகள்.

அமிழ் : ஐயா! இவையெல்லாம் உங்கள் தோட்டத்தில் விளைந்ததா?

வணிகர் : இல்லை தம்பி! எனக்குத் தோட்டம் துரவெல்லாம் கிடையாது. பக்கத்து கிராமத்துக்குக் காலையிலேயே போயி, தோட்டக்காரங்ககிட்ட நேரடியா வாங்கிட்டு வருவேன்.....

அமிழ் : உங்களுக்குப் போதுமான வருமானம் வருதா ஐயா?

வணிகர் : எங்க தம்பி, போட்ட காச எடுத்தாலே போதும் .... சில நாள் அது கூட கிடைக்காது.

அமிழ் : ஏன் ஐயா! சந்தை, தினசரி சந்தை இப்படி எங்காவது போய் விற்கலாம் அல்லவா!

வணிகர் : அங்கெல்லாம் பெரிய, பெரிய வணிகருங்க இருப்பாங்க. கடை வாடகைக்குப் பிடிக்கணும் வரி குடுக்கணும் அதெல்லாம் கட்டுப்படியாகாது அப்பா.....

அமிழ் : ஐயா! இந்தக் காய்கறி, கீரை எல்லாம் மிஞ்சிப்போனா என்ன பண்ணுவீங்க?

வணிகர் : சாயுங்காலம் வரை பாத்துட்டு விலையைக் கொஞ்சம் குறைச்சுக் குடுப்பேன். இல்லன்னா தெரிஞ்ச ஹோட்டல் கடைகள். வேற மளிகைக் கடையில கொடுத்துருவேன் தம்பி .....

அமிழ் : சரி ஐயா! கேட்ட கேள்விக்கு எல்லாம் பொறுமையாய்ப் பதில் சொன்னீங்க. உங்க வணிகம் வளர வாழ்த்துகள் ஐயா

நன்றி!

4. ''கடன் அன்பை முறிக்கும்'' இது போன்ற சொற்றொடர்களைக் கடைகள், பல்பொருள் அங்காடிகள், சந்தைகளில் பார்த்து எழுதுக.

- கடன் அன்பை முறிக்கும்.
- கடன் கிடையாது.
- கடன் நட்புக்குப் பகை.
- கடன் படாதே கலங்கி நில்லாதே.
- கடன் கேட்காதீர்.
- உனக்குக் கடன் தந்தால் என் கடன் அடைக்க இயலாது.
- கடனாளி ஆகாதே. என்னையும் கடனாளி ஆக்காதே.

※※⁂⁂⁂※※

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கற்கண்டு

இயல் ஏழு

ஆகுபெயர்

பாடநூல் வினாக்கள்

சிறுவினா

1. தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விளக்குக.

அணி விளக்கம்:

இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தம் குறிப்பினை ஏற்றிக்கூறுவது தற்குறிப்பேற்ற அணி. (தன் + குறிப்பு + ஏற்றம் + அணி)

எ.கா:

அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ

வெள்ளம்தீப் பட்ட(து) எனவெரீஇப்பு ன்னினம்தம்

கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ

நச்சிலைவேல் கோக்கோதை நாடு.

அணிப் பொருத்தம்:

சேறுபட்ட, நீர்வளம் மிகுந்த வயல் பகுதிகளில், பொய்கைகளில் செவ்வாம்பல் மலர் விரிவது இயல்பான நிகழ்வு. இதைக் கண்ட நீர்ப்பறவைகள் வெள்ளத்தில் தீப்பிடித்து விட்டதாக எண்ணியதாக கவிஞர் தன் குறிப்பினை ஏற்றிக் கூறியதால் தற்குறிப்பேற்ற அணி ஆயிற்று.

2. பண்பாகு பெயர், தொழிலாகுபெயர் - விளக்குக.

பண்பாகு பெயர்:

'மஞ்சள் பூசினாள்'

'மஞ்சள்' என்னும் பண்பு, அவ்வண்ணத்தில் உள்ள கிழங்குக்கு ஆகி வந்துள்ளது.

தொழிலாகு பெயர்:

'வற்றல் தின்றான்'

'வற்றல்' என்னும் தொழிற்பெயர் வற்றிய உணவுப் பொருளுக்கு ஆகிவந்துள்ளது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. கார் அறுத்தான் - எவ்வகை ஆகுபெயர்?

அ) பொருளாகு பெயர் ஆ) சினையாகு பெயர்

இ) காலவாகு பெயர் ஈ) கருவியாகு பெயர்

விடை: இ) காலவாகு பெயர்

2. பொருத்தமான விடையைத் தேர்க.

அ) வகுப்பறை சிரித்தது - 1. எண்ணலளவை ஆகுபெயர்

ஆ) மஞ்சள் பூசினாள் - 2. காரியவாகுபெயர்

இ) பைங்கூழ் வளர்ந்தது - 3. பண்பாகுபெயர்

ஈ) ஒன்று பெற்றால் ஒளிமயம் - 4. இடவாகுபெயர்

i) 4 3 2 1 ii) 3 2 1 4 iii) 4 2 1 3 iv) 3 1 2 4

விடை: i) 4 3 2 1

சிறுவினா

1. ஆகுபெயர் என்றால் என்ன? அதன் வகைகள் எத்தனை?

- ஒன்றின் இயற்பெயர் அதனோடு தொடர்புடைய மற்றொன்றிற்குத் தொன்று தொட்டு ஆகி வருவது ஆகுபெயர் ஆகும்.
- தொல்காப்பியர் ஆகுபெயர்கள் ஏழு வகைப்படும் எனவும், நன்னூலார் பதினைந்து எனவும் வகுத்துள்ளனர்.

கற்பவை கற்றபின்

பக்கம்: 201

1) ஆகுபெயரைக் கண்டறிக.

அ) தமிழரசி வள்ளுவரை ஓவியமாக வரைந்தாள். **தொழிலாகு பெயர்**

தமிழரசி வள்ளுவரைப் படித்தாள். **கருத்தாவாகு பெயர்**

ஆ) மாமாவின் வருகைக்கு வீடே மகிழ்கிறது. **இடவாகு பெயர்**

நாடும் வீடும் நமதிரு கண்கள். **சினையாகு பெயர்**

இ) கலைச்செல்வி பச்சை நிற ஆடையை உடுத்தினாள். **தொழிலாகு பெயர்**

கலைச்செல்வி பச்சை உடுத்தினாள். **பொருளாகு பெயர் (முதலாகு பெயர்)**

ஈ) நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி. **எண்ணலளவையாகு பெயர்**

நாலடி நானூறும் இரண்டடித் திருக்குறளும் வாழ்வுக்கு உறுதி தரும். **காரியவாகுபெயர்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

உ) ஞாயிற்றை உலகம் சுற்றி வருகிறது. **தொழிலாகுபெயர்**

நீங்கள் கூறுவதை உலகம் ஏற்குமா. **இடவாகுபெயர்**

2. ஆகுபெயர் அமையுமாறு தொடர்களை மாற்றி எழுதுக.

அ) மதுரை மக்கள் இரவிலும் வணிகம் செய்கின்றனர்.

மதுரையில் இரவு வணிகம் உண்டு.

ஆ) இந்திய வீரர்கள் எளிதில் வென்றனர்.

இந்தியா எளிதாக வென்றது.

இ) நகைச்சுவை நிகழ்வைப் பார்த்து அரங்கத்தில் உள்ளவர்கள் சிரித்தனர்.

நகைச்சுவை நிகழ்வைப் பார்த்து அரங்கமே சிரித்தது.

ஈ) நீரின்றி இவ்வுலக மக்களால் இயங்க முடியாது.

நீரின்றி உலகு இயங்காது.

சிந்தனை வினா

1. தற்காலப் பேச்சு வழக்கிலும், எழுத்து வழக்கிலும் ஆகுபெயரை எப்படியெல்லாம் பயன்படுத்துகிறோம் என்பதற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

தற்காலத்தில் பேச்சு வழக்கிலும், எழுத்து வழக்கிலும் ஆகுபெயர் பயன்படுத்துகிறோம்.

சான்றுகள்:

- சிவசங்கரியைப் படித்தேன் - என்னும் பொழுது சிவசங்கரி எழுதிய கதையைப் படித்தேன் என்று பொருள்பட, சிவசங்கரி - என்பது அவர் எழுதிய நூலுக்கு ஆகி வந்தது.
- ஐந்து மீட்டர் கொடு - துணிக்கடைக்குச் செல்லும் பொழுது, "ஐந்து மீட்டர் என்பது - நாம் தேர்ந்தெடுத்த துணிக்கு ஆகி - நீட்டலளவை ஆகுபெயராய் பயன்படுத்துகிறோம்.
- மஞ்சள் பூசினேன் - என்று கூறும் பொழுது "மஞ்சள் வண்ணத்தில் உள்ள கிழங்கை அரைத்துப் பூசினேன்" என்று விளக்காமல், "மஞ்சள் பூசினேன்" என்கிறோம். இஃது மஞ்சள் வண்ண கிழங்கைக் குறிக்கும் பண்பாகு பெயராகும்.

2. பட்டப்பெயர்கள் ஆகுபெயர்கள் ஆகுமா? எடுத்துக்காட்டுகளுடன் விளக்கு.

பட்டப்பெயர்கள் ஆகு பெயராகும்.

சான்று:

- வாயாடி வந்தாள் - இதில் குறிப்பிட்ட பெண்ணின் பெயரைச் சொல்லிக் கூறாமல், அவள் ஓயாது பேசும் இயல்பை பெயராக்கி "வாயாடி" என்று பட்டப்பெயருடன் கூறுகிறோம். "பேசுதல்" (வாயாடுதல்) என்னும் காரியத்திற்கு ஆகி வருகிறதல்லவா.
- கலாரசிகன் வந்துவிட்டான் - இத்தொடரில் "கலா ரசிகன்" என்னும் பட்டப்பெயர் அவன் கலைகளை விரும்பிப் பார்க்கும் கேட்கும் செயல்களுக்கு ஆகி வருவதால், பட்டப்பெயர்களும் ஆகு பெயர் ஆகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

மொழியை ஆள்வோம்

பக்கம்: 204

படித்துச் சுவைக்க.

எல்லார்க்கும் பெய்யும் மழை

ஏந்திக்கொள்கிறார்கள் சிலர்
வரமாக
ஏற்றுக்கொள்கிறார்கள் சிலர்
வேறு வழியின்றி
ஒதுங்கிக்கொள்கிறார்கள் சிலர்
ஒத்துக்கொள்ளாதெனப்
பாறையில் விழுந்து
பயன்படாமலே போகின்றன
சில துளிகள்
சாக்கடையில் விழுந்து
சங்கமமாகின்றன சில
ஆனாலும்
எப்போதும்போல
இன்னமும்
எல்லோருக்குமாகப்
பெய்துகொண்டுதான் இருக்கிறது
மழை!

காலை

ஒவ்வொரு முறையும்
காவிரி ஆற்றைக்
கடந்து செல்கையில்
நீந்திக் களித்த நாட்கள்
நினைவுக்கு வந்தன!
குளித்து மகிழ்ந்த ஆற்றை
குழந்தையிடம் காட்டிய போது
அவள் கேட்டாள் ....
'எப்படி அம்மா....
மணலில் நீந்திக்
குளித்தாய்?''

மொழிபெயர்க்க.

Conversation between two friends meeting by chance at a mall.

Aruna : Hi! Vanmathi! It's great to see you after a long time.

Vanmathi : It's great seeing you. How long has it been? It must be more than 6 months. I'm doing good. How about you?

Aruna : Fine. I have come with my parents. They are inside the grocery shop. What about you?

Vanmathi : I came with my father. He has gone to buy tickets for a 3D movie.

Aruna : Which movie?

Vanmathi : Welcome to the jungle.

Aruna : Great! I am going to ask my parents to take me to that movie.

இரண்டு தோழிகள் வணிகவளாகத்தில் சந்திக்க வாய்ப்பு கிடைத்தபோது நடந்த உரையாடல்.

அருணா : வான்மதி, என்ன ஒரு ஆச்சர்யம் நீண்ட நாட்களுக்குப்பின் உன்னைப் பார்க்கிறேன், மகிழ்ச்சி.

வான்மதி : எனக்கும் மகிழ்ச்சியும், ஆச்சர்யமும் தான்! உன்னைப் பார்த்து எவ்வளவு காலம் ஆகிவிட்டது. ஆறு மாதங்களுக்கும் மேலாகிவிட்டது. நான் நன்றாக இருக்கிறேன் நீ எப்படி இருக்கிறாய்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

அருணா : நான் என் பெற்றோருடன் வந்தேன். அவர்கள் வீட்டிற்குத் தேவையான பொருட்கள் உள்ள பிரிவில் உள்ளார்கள். நீ..?

வான்மதி : நான் என் தந்தையுடன் வந்தேன் இவ்வளாகத்தில் நடைபெறும் முப்பரிமாண (3D) திரைப்படத்திற்கு அனுமதி சீட்டு வாங்க சென்றிருக்கிறார்.

அருணா : என்ன படம்?

வான்மதி : காட்டுக்குள் வரவேற்பு

அருணா : ஓ... நானும் என் பெற்றோரிடம் அந்தப் படத்திற்கு அழைத்துச் செல்லுங்கள் என்று கேட்க போகின்றேன்.

பொருத்தமான இடங்களில் அடைமொழியிட்டு, சொற்றொடரை விரிவாக்குக.

1. புத்தகம் படிக்கலாம் (நல்ல, ஆழ்ந்து, நாளும், தேர்ந்து, மகிழ்ந்து, உணர்ந்து)

அ) நல்ல புத்தகங்கள் படிக்கலாம்.

ஆ) நல்ல புத்தகத்தில் ஆழ்ந்த கருத்துகளைப் படிக்கலாம்.

இ) நாளும் நல்ல புத்தகம் படிக்கலாம்.

ஈ) நல்ல புத்தகங்களைத் தேர்ந்து எடுத்து படிக்கலாம்.

உ) நல்ல புத்தகங்களை நாளும் மகிழ்ந்து, உணர்ந்து படிக்கலாம்.

2. விளையாடுவது நன்று (ஓடியாடி, மாலையில், சேர்ந்து, திடலில், அனைவருடன்)

அ) மாலையில் அனைவருடன் சேர்ந்து விளையாடுவது நன்று.

ஆ) மாலையில் திடலில் ஓடியாடி விளையாடுவது நன்று.

பிழை நீக்குக.

பெருந்தலைவர் காமராசர் பள்ளிப்படிப்பை நிரைவு செய்யவிள்ளை எண்ராலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் புத்தகங்கள் படிக்கும் அலவுக்கு புலமைகள் பெற்றிருந்தது பலருக்குத் தெரியாது. ஆங்கிலச் செய்தி இதழ்களை நாள்தோறும் படித்தது. எப்போது அரையை விட்டு வெளியே போனாலும் மின்விசிரியை நிருத்த மறப்பதில்லை. வெளியூருக்குச் செல்லும்போது தம்முடைய துணிமனிகளைத் தாமே எடுத்துவைத்துக்கொள்வார்.

விடை:

பெருந்தலைவர் காமராசர் பள்ளிப்படிப்பை நிறைவு செய்யவில்லை என்றாலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் புத்தகங்கள் படிக்கும் அளவுக்கு புலமைகள் பெற்றிருந்தது பலருக்குத் தெரியாது. ஆங்கிலச்செய்தி இதழ்களை நாள்தோறும் படித்தது, எப்போது அறையைவிட்டு வெளியே போனாலும் மின்விசிறியை நிறுத்த மறப்பதில்லை. வெளியூருக்கு செல்லும்போது தம்முடைய துணிமணிகளைத் தாமே எடுத்து வைத்துக் கொள்வார்.

கீழ்க்காணும் பத்தியில் உள்ள ஆகுபெயர்களை அட்டவணைப்படுத்துக.

விமலா கூடத்தில் உள்ள தட்டிலிருந்த டிசம்பரைத் தலையில் சூடிக்கொண்டாள். மல்லிகையைப் படத்திற்குச் சூட்டினாள். அடுப்பிலிருந்து பாலை இறக்கினாள். பின்பு தோட்டத்திற்குச் சென்றாள். விமலாவைப் பார்த்தவுடன் தோட்டம் அமைதியானது! "தலைக்கு இருநூறு கொடுங்கம்மா" என்று தோட்டத்தில் வேலை செய்தவருள் ஒருவர் சொன்னார். வெள்ளை மனங்கொண்ட வேலையாட்களின் கூலியைக் குறைக்க விரும்பாமல் அதனை அவளும்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

ஏற்றுக்கொண்டாள். அவர்கள் சென்றதும், காலையில் சாப்பிடப் பொங்கல் வைத்தாள். வீட்டில் சமையல் செய்ய, எந்தெந்தப் பொருள்கள் குறைவாக உள்ளன என்பதைப்பற்றிச் சிந்தித்தாள். "சாப்பாட்டிற்கு ஐந்து கிலோ வாங்க வேண்டும். தாளிப்பதற்கு மூன்று லிட்டர் வாங்க வேண்டும். துணி உலர்த்துவதற்கு நான்கு மீட்டர் வாங்க வேண்டும்" எனத் திட்டமிட்டாள். அலைபேசி அழைத்தது. அரை நிமிடம் அலைபேசியில் வந்த வயலின் கேட்டு மகிழ்ந்தாள். பிறகு எடுத்துப் பேசினாள். கடைக்குப் போய்விட்டு வந்த பிறகு. பாதியில் விட்டிருந்த சிவசங்கரியைப் படித்து முடிக்கவேண்டும் என்று நினைத்தாள்.

டிசம்பரைத் தலையில் சூடிக் கொண்டாள்	டிசம்பர் என்னும் காலப்பெயர் பூவுக்கு ஆகி வந்ததால் **(காலவாகு பெயர்)**
பாலை இறக்கினாள்	பால் கொதித்த பாத்திரத்தை இறக்கினாள். கருவி பாலுக்கு ஆகி வந்தது. **(கருவியாகு பெயர்)**
தலைக்கு இருநூறு	ஒவ்வொருவருக்கும் என்பதைத் தலை என்னும் சினைப் பெயரால் உணர்த்துகிறது **(சினையாகு பெயர்)**
சாப்பாட்டிற்கு ஐந்து கிலோ வாங்க வேண்டும்	5 கிலோ அரிசியைக் குறிக்க.... எடுத்து அளந்து தருவது (நிறுத்து) **(எடுத்தலளவை ஆகுபெயர்)**
தாளிப்பதற்கு மூன்று லிட்டர் வாங்கவேண்டும்	முகந்து அளக்கும் எண்ணெய் **(முகத்தலளவையாகு பெயர்)**
துணி உலர்த்த நான்கு மீட்டர்	நீட்டி அளக்கும் துணி உலர்த்தும் கொடியைக் குறிக்கும் **(நீட்டலளவையாகு பெயர்)**
சிவசங்கரியை படித்து முடிக்க வேண்டும்.	சிவசங்கரி நூலைக் குறிக்கும்.....**(கருத்தாவாகு பெயர்)**

பயண அனுபவங்களை விவரிக்க.

'எனது பயணம்' என்னும் தலைப்பில் உங்களது அனுபவங்களை வருணித்து எழுதுக.

- இந்த ஆண்டு நான் பயணம் மேற்கொண்ட இடம் வயநாடு ஆகும். கேரளாவின் வற்றாத அழகு கொட்டிக்கிடக்கும் பகுதி இது. எங்கு திரும்பினும் பச்சைப் பசேல் தான். கடல் மட்டத்தில் இருந்து 700 முதல் 2100 மீட்டர் உயரத்தில் அமைந்த பகுதி இது. இயற்கை அன்னை ஆட்சி செய்யும் வனப்பு மிக்க பகுதி.
- வயநாடு மாவட்டத்தில் கல்பெற்றா, மானந்தவாடி, வைத்திரி ஆகிய இடங்கள் முக்கியமானவை.
- இவ்விடங்களில் விலங்குகளின் சரணாலயங்கள் உண்டு. துள்ளித் திரியும் மான் கூட்டம், கூட்டம் கூட்டமாய் செல்லும் யானைகள், எங்கோ கேட்கும் பறவைகள் கரையும் ஓசை என மனதுக்கு இன்பம் தரும் இடம் ஆகும்.
- கல்பெற்றாவில் இருந்து சிறிது தூரம் சென்றால் செம்ப்ரா மலை முகடு உள்ளது. இது வயநாட்டின் உயரமான மலை உச்சியாகும். மலை ஏற்றத்துக்கு சிறந்த இடமாகும். கல்பெற்றாவில் இருந்து 15 கல் தொலைவில் கரலாட் ஏரி உள்ளது. இங்கு படகு சவாரி செய்து

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கொண்டு ஏரியில் தூண்டில் போட்டு மீன் பிடித்து நாங்கள் குழந்தைகளாகி மகிழ்ந்தோம். வயநாட்டின் அழகுக்கு அழகு சேர்க்கும் அருவிகள் பல உண்டு. அவற்றுள் சிப்பாரா அருவி மிகப் புகழ் பெற்றது.

- 100 அடி முதல் 300 அடி உயரத்தில் இருந்து வரிசைத் தொடராகக் கொட்டிக் கொண்டிருக்கும் அருவிகள் கண்களையும், கருத்தையும் கொள்ளை கொள்கின்றன. அருவியின் தடாகத்தில் நீந்தி மகிழ்ந்து புத்துணர்வு பெற்றோம். இங்கு அபூர்வ மூலிகைகள், தங்குவதற்கு மரவீடுகள், இரவில் மிரளச் செய்யும் விலங்குகள் கூட்டம் என நம்மை இன்னொரு உலகுக்கு அழைத்துச் செல்லும். நீங்களும் ஒரு முறை சென்று வரலாமே.
- "இயற்கை ஆட்சி செய்யும் இவ்விடம் அனைவருக்கும் பிடிக்கும்".

நயம் பாராட்டுக.

வயலிடைப் புகுந்தாய் மணிக்கதிர் விளைத்தாய்
வளைந்துசெல் கால்களால் ஆறே!
அயலுள ஓடைத் தாமரை கொட்டி
ஆம்பலின் இதழ்களை விரித்தாய்
கயலிடைச் செங்கண்கருவரால் வாளை
கரைவளர் தென்னையில் பாயப்
பெயரிடைப் பட்ட வானெனத் தோன்றும்
பெருங்குளம் நிறைந்து விட்டாயே! – *வாணிதாசன்*

முன்னுரை:

தமிழில் எண்ணற்ற இலக்கியங்கள் உள்ளன. அவை கற்போரின் மனத்தைப் பெரிதும் கவர வல்லன. அந்த வகையில் வாணிதாசன் பாடல் ஒன்றிற்கு அமைந்துள்ள இலக்கிய நயங்களைக் காண்போம்.

திரண்ட கருத்து:

வளைந்து செல்லும் கால்வாய்கள் மூலம் ஆறே வயல்வெளியில் புகுந்தாய் மணிபோன்ற கதிர்களை விளையச் செய்தாய். அருகில் உள்ள ஓடைகள் குளங்களை நிறைத்தாய். தாமரை கொட்டி, ஆம்பல் மலர்களின் இதழ்களை விரியச்செய்தாய். சிவந்த கண்களையுடைய கருமையுடைய வரால், வாளை மீன்கள் கரையில் ஓங்கி வளர்ந்த தென்னையில் பாய்ந்து விளையாடுகின்ற நீர் நிறைந்த பெருங்குளங்கள் நிலமெங்கும் நிறையச் செய்து, நிலத்தில் ஒரு வானம் இருப்பதுபோல தோன்றச் செய்கிறாய்.

மையக்கருத்து:

ஆறு, கால்வாய்கள் நீர்நிலைகளை நிரப்பி, நிலத்தைச் செழிக்க செய்வதோடு நிலத்தில் நிறைந்திருக்கும் நீரிலே வானம் தெரிவதால் பெயரிடைப்பட்ட வானெனத் தோன்றும் என்று இயற்கை வளங்களை மையமாக வைத்துப் பாடியுள்ளார் வாணிதாசன்.

எதுகை:

செய்யுளில், அடியிலோ, சீரிலோ, இரண்டாவது எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது எதுகை ஆகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

சான்று:

வயலிடை
அயலுள
கயலிடை
பெயரிடை

மோனை:

செய்யுளில் அடியிலோ சீரிலோ முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனை ஆகும்.

சான்று:

வயலிடை – வளைந்து
அயலுள – ஆம்பல்
பெயரிடை – பெருங்குளம்

இயைபு

செய்யுளில் அடிதோறும் இறுதி எழுத்தோ, சொல்லோ இயைந்து வருவது இயைபுத்தொடை ஆகும்.

சான்று:

விளைத்தாய் – விரித்தாய்

அணிநயம்:

செய்யுளின் அழகுக்குச் சேர்ப்பது அணியே ஆகும். அணி இல்லாத பாடல் அழகில்லா மங்கை போலும். பெயரிடைப்பட்ட வானெனத் தோன்றும் என்னும் அடியில் உவமை அணி அமைந்து இச்செய்யுளின் அழகுக்கு அழகு சேர்த்துள்ளது.

சுவை நயம்:

இப்பாடலைப் படிக்கப் படிக்க, மனத்தில் மகிழ்வு உண்டாவதால் "உவகைச் சுவை" அமைந்துள்ளது.

முடிவுரை:

வாணிதாசன் இயற்கைப் புனைவுகளைப் பாடுவதில் வல்லவர். அவரது கவித்திறனுக்கு இப்பாடல் சான்றாக அமைவதோடு, அனைத்து நயங்களையும் பெற்று ஒளிர்கிறது.

மொழியோடு விளையாடு

பக்கம்: 206

1. புதிர் அவிழ்க்க.

நான்கெழுத்துக்காரன்
முதல் இரண்டும்
அம்மாவில்
"மா"வைத் தொலைத்து நிற்கும்;
அடுத்த எழுத்தைச் சேர்த்தால்,
வில்லின் துணைவன்;
கடை இரண்டும்
கணக்கில் 'இது' என்பர்.!
முழுதாய்ப் பார்த்தால்
மேகத்திடை தெரிவான்!
– அவன் யார்?

விடை: *அம்புலி*

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com


www.Padasalai.Net www.CBSEtips.in

2. பண்புத்தொகைகளை இட்டு நிறைவு செய்க.

[இன்னோசை, பேரொளி, சிற்றோடை, பேரின்பம், பைங்கிளி, பேரூர், செந்தாமரை]

மானாமதுரை ஒரு அழகான **பேரூர்.** நீண்டவயல்களும் **சிற்றோடைகளும்** நிறைந்த அவ்வூரின் நடுவே வானுயர்ந்த கோபுரத்துடன் கூடிய கோவில் குளத்தில் எங்கும் **செந்தாமரைப்** பூக்கள் மலர்ந்துள்ளன. கதிரவனின் **பேரொளி** வீசிட சோலைப் **பைங்கிளி**களின் **இன்னோசை** கேட்போரைப் **பேரின்பம்** அடையச் செய்கிறது.

வட்டத்திற்குள் உள்ள எழுத்துகளைக் கொண்டு சொற்களை உருவாக்குக.



கால்	காலை	கான்
புத்தகம்	புல்	புத்தி
அகல்	அவல்	கல்
அதிகம்	கறி	தறி
புதன்	வலை	அறிவன்
கலை	கத்தி	கவலை
காவல்	அலை	தில்லை

3. காட்சியைக் கண்டு கவினுறு எழுதுக.

மலை யெனவும் (குறிஞ்சி)
முல்லைவனம் எனவும்
மருத நிலமாம் வயல் எனவும்
நெய்தலாம் கடலும்
பாலையாம் வெயிலும் என உன்
நிலத்தைப் பிரித்தாய்
முல்லைச்சரங்கள் தொடுக்கும்
கரங்கள் ஆடல் கலைகளையும் நடத்தும்
முல்லையும் கொட்டியும் ஆம்பலும்
இசை முழங்கி பாடும்
நீர் நிறை கரைகளில்
வளர் மரங்களில்
பைங்கிளியும் மணிப்புறாவும் மனம்
மயக்கும் தம் இசையால்
சிறுபானை தொடங்கி உயர்
கோபுரம் வரை மின்னும் கலைவண்ணம்
இப்பாடல் உணர்த்தும் தமிழ்
கலாச்சாரத்தை மக்கள்
மறவாமல் இருந்தால் போதும்



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

செயல்திட்டம்

ஒரு வாரத்திற்குத் தேவையான உணவுப் பொருள்களின் வரவு செலவு பட்டியலை உருவாக்குக.

ஒரு வாரத்திற்குத் தேவையான உணவுப்பொருட்கள் இவ்வார வரவு = ₹ 2000/-

பொருள்கள்	கிலோ	₹
அரிசி	5 கிலோ	200.00
து.பருப்பு	½ கிலோ	45.00
உ.பருப்பு	½ கிலோ	50.00
சர்க்கரை	½ கிலோ	25.00
டீத்தூள்	100 கிராம்	55.00
மிளகு	50 கிராம்	40.00
சீரகம்	50 கிராம்	25.00
வெந்தயம்	50 கிராம்	20.00
பால்	4 லிட்டர்	160.00
எண்ணெய்	½ லிட்டர்	60.00
ரவை	½ கிலோ	25.00
சலவைத்தூள்	¼ கிலோ	40.00
காய்கறி வகைகள் தேங்காய்		200.00
பழங்கள்		300.00

மொத்த செலவு	- ₹ 1245.00
வரவு	- ₹ 2000.00
செலவு	- ₹ 1245.00
மீதத் தொகை	₹ 755.00

அகராதியில் காண்க.

சொல்	–	பொருள்
ஈகை	–	கொடை, பொன், கற்பகமரம், காடை, காற்று, மேகம், கொடுத்தல்.
குறும்பு	–	குறுநில மன்னர், பாலை நில ஊர், பகைவர், குறும்புத்தனம்.
கோன்	–	அரசன், தலைவன் இடையர்பட்டப் பெயர்.
புகல்	–	புகுகை, தஞ்சம், செல், விருப்பம், வெற்றி, புகழ், போக்கு.
மொய்ம்பு	–	தோள், வலிமை.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

நிற்க அதற்குத்தக...

சமூகத்திற்கு எனது பணிகள்

அ) குப்பைகளைக் குப்பைத் தொட்டியில் போட வேண்டும்.

ஆ) தண்ணீர் வீணாவதை எங்கு கண்டாலும் தடுப்பேன்.

இ) என்னால் முடிந்த உதவிகளைப் பிறருக்குச் செய்வேன்.

ஈ) மழைநீர் சேகரிப்பின் இன்றியமையாமையை வலியுறுத்துவேன்.

உ) பெண்கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்துவேன்.

ஊ) இயற்கையைப் பேணிப் பாதுகாக்க மரங்களை நடுவேன்.

எ) சாலை விதிகளைப் பின்பற்றுவேன். பிறரையும் பின்பற்ற செய்வேன்.

ஏ) நம் கலைகளையும் பண்பாட்டையும் பேணிக்காக்க என்னால் இயன்றதைச் செய்வேன்.

கலைச்சொல் அறிவோம்

இந்திய தேசிய இராணுவம்	- Indian National Army
பண்டமாற்றுமுறை	- Commodity Exchange
காய்கறி வடிசாறு	- Vegetable Soup
செவ்வியல் இலக்கியம்	- Classical Literature
கரும்புச் சாறு	- Sugarcane Juice

※※⁂⁂⁂※※

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

உரைநடை உலகம்

இயல் எட்டு

பெரியாரின் சிந்தனைகள்

பாடநூல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

கூற்று : பெரியார் உயிர் எழுத்துகளில் 'ஐ' என்பதனை 'அய்' எனவும், 'ஔ' என்பதனை 'அவ்' எனவும் சீரமைத்தார்.

காரணம் : சில எழுத்துகளைக் குறைப்பதன் வாயிலாகத் தமிழ் எழுத்துகளின் எண்ணிக்கையைக் குறைக்கலாம் என்று எண்ணினார்.

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி

இ) கூற்று, காரணம் இரண்டும் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி

விடை: ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி

குறுவினா

1. "பகுத்தறிவு" என்றால் என்ன?

எச்செயலையும் அறிவியல் கண்ணோட்டத்துடன் அணுகி ஏன்? எதற்கு? எப்படி? என்ற வினாக்களை எழுப்பி, அறிவின் வழியே சிந்தித்து முடிவெடுப்பதே பகுத்தறிவு ஆகும்.

சிறுவினா

1. சிக்கனம் குறித்த பெரியாரின் கருத்துக்களை இன்றைய நடைமுறையோடு தொடர்புபடுத்தி எழுதுக.

- பெரியார் அவர்கள், பொருளாதார தன்னிறைவு அடையாத நிலையில் அனைவரும் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது கட்டாயம் என்றார்.
- ஆனால் இன்றைய நடைமுறையில் பொருளாதாரத்தில் நிறைவு பெறவில்லை என்றாலும் சிறுகடன் பெற்றாவது அநேகர் ஆடம்பரமாகவே வாழ விரும்புகின்றனர்.
- விழாக்களும் சடங்குகளும் மூடப்பழக்கம் வளர்ப்பதோடு வீண் செலவும் ஏற்படுத்துகிறது. சடங்குகள், விழாக்களைத் தவிர்த்து சிக்கனமாய் வாழச் சொன்னார்.
- ஆனால் இன்று இதுவும் நடைமுறைப்படுத்துவது சாத்தியம் இல்லாமல் போய்விட்டது.
- எனவே பெரியார் கூறிய சிக்கனக் கொள்கைகளை, இன்றைய நடைமுறை நிகழ்வுகளில் பின்பற்ற முடியாத நிலையே அநேக நேரங்களில் உள்ளது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

நெடுவினா

1. மொழியிலும் இலக்கியத்திலும் பெரியார் மேற்கொண்ட சீரமைப்புகளை விளக்குக.

முன்னுரை:

தமிழக மக்களைப் பகுத்தறிவு பாதைக்கு அழைத்துச் சென்றவர் பெரியார். இந்தியாவின் பழமையான மொழி தமிழ். பழமையான இலக்கியமும் தமிழிலே உள்ளன. இலக்கியத்திலும், மொழியிலும் பெரியார் செய்த சீரமைப்புகள் பற்றி அறிந்து கொள்வோம்.

மொழி, இலக்கியம் பற்றிய பெரியாரின் கருத்து:

மொழியோ, நூலோ, இலக்கியமோ எதுவானாலும், மனிதனுக்கு மானம், பகுத்தறிவு, வளர்ச்சி, நற்பண்பு ஆகிய தன்மைகளை வளர்ப்பதாக இருக்க வேண்டும் என்ற கருத்துடையவராய் இருந்தார் தந்தை பெரியார்.

இலக்கிய சீர்திருத்தம்:

அறிவியல் வளர்ச்சிக்கேற்ற நூல்கள் படைக்கப்பட வேண்டும். மதம் கடவுள் ஆகியவற்றின் தொடர்பற்ற, யாவருக்கும் பொதுவான இயற்கை அறிவைத் தரும் இலக்கியமே அதிகளவில் வேண்டும். திருக்குறளில் அறிவியல் கருத்துக்களும், தத்துவக் கருத்துகளும் அனைவருக்கும் பொதுவான வகையில் இடம் பெற்றிருப்பதால், அதை மதிப்புமிக்க நூலாகக் கருதியதோடு, திருக்குறளைப் போன்ற இலக்கியம் உருவாக வேண்டும் என்ற சீர்திருத்தத்தை உருவாக்க முனைந்தார்.

இலக்கியமானது அரசியல், சமூகம், பொருளாதாரம், சுயமரியாதை உள்ளிட்ட அனைத்துக் கருத்துகளையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என விரும்பினார்.

மொழியில் சீர்திருத்தம்:

ஒரு மொழியின் பெருமையும், மேன்மையும், அவை எளிதில் கற்றுக் கொள்ளக் கூடியனவாக இருப்பதைப் பொறுத்தே அமைகின்றன. எனவே கால வளர்ச்சிக்கு ஏற்ப தமிழ் எழுத்துக்களைச் சீரமைக்க தயங்கக் கூடாது என்று கருதினார் பெரியார்.

மொழி என்பது உலகின் போட்டி, போராட்டத்திற்கு ஒரு போர்க்கருவியாகும். அக்கருவிகள் காலத்திற்கேற்ப மாற்றப்பட வேண்டும் என்றார். அதற்கேற்ப, உயிர் எழுத்துக்களில் 'ஐ' என்பதை 'அய்' எனவும் 'ஔ' என்பதை 'அவ்' எனவும் சீரமைத்தார். மேலும் மெய்யெழுத்துகளில் சில எழுத்துக்களைக் குறைப்பதன் வாயிலாகத் தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கையைக் குறைக்கலாம் என்றார்.

கால வளர்ச்சிக்கு மொழி சீரமைப்புகள் தேவை என்று கருதினார். அவரது சீரமைப்புக் கருத்தின் சில கூறுகளை 1978ம் ஆண்டு தமிழக அரசு நடைமுறைப்படுத்தியது.

முடிவுரை:

மொழி, இலக்கியம் பற்றிய பெரியாரின் சிந்தனைகள், அறிவுலகின் திறவுகோலாய்த் திகழ்ந்தது எனில் மிகையாகாது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. தெற்காசியாவின் சாக்ரடீசு என்று புகழப்பட்டவர் யார்?
அ) அறிஞர் அண்ணா ஆ) காமராசார்
இ) ராஜாஜி ஈ) தந்தை பெரியார்
விடை: ஈ) தந்தை பெரியார்

2. மன உறுதி படைத்த மக்களை உருவாக்க ..... இன்றியமையாதது.
அ) மக்கட் செல்வம் ஆ) உறவு இ) அன்பு ஈ) பகுத்தறிவு
விடை: ஈ) பகுத்தறிவு

3. மொழி என்பது போராட்டத்திற்குரிய ஒரு ..... ஆகும்.
அ) போர்க்கருவி ஆ) வாயில் இ) துணை ஈ) இணை
விடை: அ) போர்க்கருவி

4. ஈ.வே.ரா வுக்கு பெரியார் என்னும் பட்டம் வழங்கப்பட்ட நாள் எது?
அ) 1938 நவம்பர் 14 ஆ) 1938 நவம்பர் 13
இ) 1939 நவம்பர் 16 ஈ) 1938 நவம்பர் 12
விடை: ஆ) 1938 நவம்பர் 13

5. தெற்கு ஆசியாவின் சாக்ரடீசு என்று ஈ.வெ.ரா வுக்கு பட்டம் வழங்கிய அமைப்பு எது?
அ) யுனெஸ்கோ நிறுவனம் ஆ) காமன்வெல்த்
இ) தெற்காசிய கூட்டமைப்பு ஈ) வெளிநாடுவாழ் இந்தியர் கூட்டமைப்பு
விடை: அ) யுனெஸ்கோ நிறுவனம்.

6. தெற்கு ஆசியாவின் சாக்ரடீஸ் என்று பட்டம் வழங்கப்பட்ட நாள் ..... ஆகும்.
அ) 26.05.1970 ஆ) 26.07.1970 இ) 24.06.1970 ஈ) 27.06.1970
விடை: ஈ) 27.06.1970

7. சுயமரியாதை இயக்கம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு எது?
அ) 1921 ஆ) 1922 இ) 1925 ஈ) 1926
விடை: இ) 1925

8. தந்தை பெரியாரின் சொந்த ஊர் .....
அ) ஈரோடு ஆ) பொள்ளாச்சி இ) நாமக்கல் ஈ) சேலம்
விடை : அ) ஈரோடு

9. பெரியார் என்றவுடன் நினைவுக்கு வருவது .....
அ) அமைதி ஆ) பகுத்தறிவு இ) கோபம் ஈ) முதுமை
விடை : ஆ) பகுத்தறிவு

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

10. பெரியார் பின்பற்றிய கொள்கை .....

அ) தலையிடாக் கொள்கை ஆ) வரிகொடாக் கொள்கை

இ) கடவுள் மறுப்புக் கொள்கை ஈ) கடவுள் சார்புக் கொள்கை

விடை : இ) கடவுள் மறுப்புக் கொள்கை

11. பொருளாதார தன்னிறைவு அடையாத நிலையில் அனைவரும் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது அவசியம் என்று கூறியவர் .....

அ) பெரியார் ஆ) அண்ணா இ) காந்தி ஈ) அம்பேத்கார்

விடை : அ) பெரியார்

12. 1938 இல் சென்னையில் நடந்த பெண்கள் மாநாட்டில் ஈ.வெ.ராவுக்கு வழங்கப்பட்ட பட்டம் .....

அ) பெண்ணினப் போர்முரசு ஆ) பெரியார்

இ) புத்துலகத் தெலை நோக்காளர் ஈ) சுயமரியாதைச் சுடர்

விடை : ஆ) பெரியார்

குறுவினா

1. பள்ளிகளில் கற்றுத் தரக் கூடாதனவாகப் பெரியார் கூறுவன யாவை?

- அறிவியலுக்குப் புறம்பான செய்திகள்
- மூடப்பழக்கங்கள்

2. சாதி என்ற கட்டமைப்புக் குறித்துப் பெரியார் கூறுவன யாவை?

- சாதி உணர்வு ஆதிக்க உணர்வை வளர்க்கிறது.
- மற்றவர்களின் உரிமைகளைப் பறிக்கிறது.
- மனிதர்களை இழிவுபடுத்துகிறது.
- அந்தச் சாதி என்ற கட்டமைப்பை உடைத்தெறிய வேண்டும்.

3. தேர்வுமுறை குறித்த பெரியாரின் சிந்தனைகளை எழுதுக.

மனப்பாடத்திற்கு முதன்மை அளிக்கும் தேர்வு முறையையும், மதிப்பெண்களுக்கு முதன்மை அளிக்கும் முறையையும் எதிர்ப்பதாக பெரியாரின் சிந்தனை அமைந்தது.

4. தமிழ்மொழி குறித்த பெரியாரின் சிந்தனைகளை எடுத்தியம்புக.

- இந்தியாவிலேயே பழமையான மொழி தமிழ்மொழியாகும்.
- இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கேற்ற நூல்கள் தமிழில் படைக்கப்பட வேண்டும்.

5. திருக்குறளைப் பெரியார் ஏன் மதிப்புமிக்க நூலாகக் கருதினார்?

திருக்குறளில் அறிவியல் கருத்துகளும் தத்துவக் கருத்துகளும், அனைவருக்கும் பொதுவான வகையில் இடம் பெற்றிருப்பதால் அதை மதிப்புமிக்க நூலாகப் பெரியார் கருதினார்.

6. பெரியார் நடத்திய இதழ்கள் யாவை?

குடியரசு, விடுதலை, உண்மை, ரிவோல்ட் (ஆங்கில இதழ்)

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

சிறுவினா

1. தந்தை பெரியாரின் சிறப்புப் பெயர்களைக் கூறுக.

- பகுத்தறிவு பகலவன்
- தெற்காசிய சாக்ரடீசு
- வைக்கம் வீரர்
- ஈரோட்டுச் சிங்கம்
- சுயமரியாதைச் சுடர்
- பெண்ணினப் போர் முரசு
- புத்துலகத் தொலைநோக்காளர்

2. கல்வி குறித்து பெரியாரின் சிந்தனைகள் யாவை?

- சமூக வளர்ச்சிக்குக் கல்வியே மிகச் சிறந்த கருவி. கற்பிக்கப்படும் கல்வியானது,
- மக்களிடம் பகுத்தறிவு, சுயமரியாதை, நல்லொழுக்கம், சுய சிந்தனை ஆற்றல், தன்னம்பிக்கை ஆகியவற்றை வளர்ப்பதாக இருக்க வேண்டும் என்பதே ஆகும்.

3. தந்தை பெரியார் எவற்றையெல்லாம் எதிர்த்தார்?

- இந்தித்திணிப்பு
- குலக்கல்வி திட்டம்
- சாதி அமைப்பு
- தேவதாசி முறை
- கள்ளுண்ணல்
- குழந்தைத் திருமணம்
- மணக்கொடை

ஆகியவற்றை எதிர்த்தார்.

4. பெரியார் விதைத்த விதைகள் யாவை?

- கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் இட ஒதுக்கீடு
- பெண்களுக்கான தனி இட ஒதுக்கீடு
- குடும்ப நலத்திட்டம்
- கலப்புத் திருமணம்
- சீர்திருத்த திருமணச் சட்டம் ஏற்பு

ஆகியவையாகும்.

5. பெண்கள் நலம் பற்றிய பெரியாரின் சிந்தனைகள் யாவை?

- நாட்டு விடுதலையை விட பெண் விடுதலைதான் முதன்மையானது.
- கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் ஆண்களுக்கு நிகரான உரிமை பெண்களுக்கும் அளிக்கப்பட வேண்டும்.
- வேலைவாய்ப்பில் ஐம்பது விழுக்காடு இட ஒதுக்கீடு பெண்களுக்குத் தரப்பட வேண்டும்.
- பொருளாதாரத்தில் பெண்கள் பிறரைச் சார்ந்து வாழ வேண்டிய நிலையில் இருக்கக் கூடாது.
- நன்கு கல்வி கற்று, சுய உழைப்பில் பொருளீட்ட வேண்டும்.
- தெளிந்த அறிவுடனும் தன்னம்பிக்கையுடனும் திகழ வேண்டும்.
- கைம்பெண்களுக்கு மறுமணம் செய்ய வழிவகை காண வேண்டும்.
- குடும்பச் சொத்தில் ஆண்களுக்குச் சமமான உரிமையைப் பெண்களுக்கு வழங்க வேண்டும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கற்பவை கற்றபின்

பக்கம்: 214

1. "இன்று பெரியார் இருந்திருந்தால்" என்னும் தலைப்பில் மேடைப் பேச்சுக்கான உரை ஒன்றை எழுதுக.

அவையில் கூடியிருக்கும் அனைவருக்கும், முதற்கண் என் அன்பான வணக்கத்தைச் சமர்ப்பிக்கின்றேன்.

இன்று உங்கள் முன் இந்த மேடையில் நான் பேச எடுத்துக்கொண்ட தலைப்பு என்ன தெரியுமா? "இன்று பெரியார் இருந்திருந்தால்" என்பதே ஆகும்.

பகுத்தறிவுப் பகலவன், சுயமரியாதைச் சுடர், தெற்காசியாவின் சாக்ரடீசு, வைக்கம் வீரர், பெண்ணினப் போர் முரசு, ஈரோட்டுச்சிங்கம், புத்துலகத் தொலை நோக்காளர் என்றெல்லாம் புகழப்பட்டவர் தந்தை பெரியார்.

அடிமை இருளில் மூழ்கிக் கிடந்த தமிழ் சமுதாயத்திற்கு மட்டுமல்ல பாரத தேசத்திற்கே, புதிய வெளிச்சம் பாய்ச்சியவர் எனில் மிகையாகாது. புதிய விடியலுக்கு தன் கொள்கையால் பூபாளம் இசைத்தவர்.

சமூகம், மொழி, கல்வி, பண்பாடு, பொருளாதாரம் என அனைத்துத் துறைகளிலும் புதிய சிந்தனை ஏற்படுத்திய பெரியார், இன்று இருந்தால், இன்றைய சமூக பண்பாட்டுச் சீர்கேடுகள், இன்றும் கல்வியில் உள்ள வேறுபாடுகள், பொருளாதார சீர்கேடுகள், நாகரிகமற்ற அரசியல் செயல்பாடுகள், சாதியினால் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வீண் சண்டைகள், குழப்பங்கள், ஆணவக் கொலைகள், பெண்களுக்கு எதிராக நடைபெறும் குற்றச்செயல்கள் அனைத்தும் அந்தப் பகுத்தறிவு பகலவனை ஒளி குன்றச் செய்திருக்கும்.

கல்வியில், வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு. பெண்களுக்கான இடஒதுக்கீடு பெண்களுக்கான சொத்துரிமை, குடும்பநலத்திட்டம், கலப்புத் திருமணம், சீர்திருத்த திருமண சட்ட ஏற்பு என அவர் விதைத்த விதைகள் சில வேரூன்றி இருக்கின்றன. சில முளைக்காமலே போய்விட்டன. இந்த நிலையில் இன்று பெரியார் இருந்திருந்தால்,

"மீண்டும் ஒரு புரட்சி, மீண்டும் ஒரு மதுவிலக்கு, மீண்டும் ஒரு மொழிப் புரட்சி" எனப் புதிய புரட்சிகளால் புதிய விடியலை ஏற்படுத்தியிருப்பார்.

ஆனால், இன்று அவர் இல்லை, அவர் கொள்கைகளை உணர்ந்த நாம், அவர் காட்டிய வழியில் புதிய உலகம் செய்வோம். வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்க முயல்வோம்.

சமுதாயம் மூடப்பழக்க வழக்கங்களில் இருந்து மீண்டெழ அரும்பாடுபட்ட அவரது பிள்ளைகளாகிய நாம் அச்செயலை புத்துணர்ச்சியுடன் செயல்படுத்துவோம். நன்றி! வணக்கம்!

2. பெரியாரை நேர்காணல் செய்வதாகக் கருதி வினாப்பட்டியலை உருவாக்குக!

நேர்காணலுக்கான வினாக்கள்

- அய்யா! பகுத்தறிவு என்பதற்கு விளக்கம் தாருங்கள் அய்யா?
- மனிதர்களுக்காக மதங்களா? மதங்களுக்காக மனிதர்களா? தெளிவு படுத்துங்களேன்.
- சாதியினால் மனித வாழ்விற்குப் பயன் உண்டா?
- சாதியும் மதமும் மனித சமுதாயத்தை ஒற்றுமை படுத்துகிறதா? பிரித்து வைக்கிறதா?
- கல்வியில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்களாகத் தாங்கள் கருதுபவை யாவை?
- எத்தகைய நூல்கள் நம் மொழியில் படைக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?
- உங்களுக்கு மிகவும் பிடித்தமான நூல் எது?

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

- பெண்களை முன்னேற்ற உதவுவதற்கான வழிமுறைகள் யாவை?
- நீங்கள் சிக்கனத்திற்குச் சான்றாய் இருப்பவர் சிக்கனத்தின் அவசியம் பற்றிச் சில வார்த்தைகள் கூறுங்களேன்
- சமுதாயம் மூட பழக்கத்தில் இருந்து மீண்டெழ இன்றைய இளைஞர்கள் என்ன செய்ய வேண்டும்?
- இன்றைய அரசியல் தலைவர்கள் நாட்டை ஆள்பவர்களுக்கு உங்கள் அறிவுரைகள் யாவை?
- இன்றைய பத்திரிகைகள் இதழ்கள் ஊடகங்கள் பற்றி உங்கள் கருத்து யாது?

மாணவர்களே இதைப் போன்று இன்றைய சூழலில் நீங்கள் பெரியாரைச் சந்தித்தால் என்ன கேட்க விரும்புகிறீர்களோ அவற்றை வினாக்களாக்கி இத்துடன் இணைத்துக் கொள்ளுங்கள்

3. "இன்றைய சமுதாயம் பெரியாரின் பாதையில் நடக்கிறதா? நடக்கவில்லையா? எனும் தலைப்பில் கலந்துரையாடல் நடத்துக.

கலந்துரையாடல்

கலந்துரையாடுபவர்கள்: முகிலன், கமலா, ஆசிரியர், அகிலன்.

ஆசிரியர் : மாணவர்களே இன்று பெரியாரின் சிந்தனைகள் பற்றிய உரைநடையைப் பயின்றோம் அல்லவா?

முகிலன் : ஆம் ஐயா! இந்த உரைநடை மூலம் பெரியார் கூறிய கருத்துகள் அவர் காட்டிய பாதையை அறிந்து கொண்டோம்.

ஆசிரியர் : ஆம். அவர் காட்டிய பாதையில் இன்றைய சமூகம் நடக்கிறதா இல்லையா?

கமலா : இல்லை ஐயா.

ஆசிரியர் : ஏன் கமலா அப்படி சொல்கிறாய்.

கமலா : ஐயா பெரியார் உயர்ந்தோர் தாழ்ந்தோர் வேறுபாடு பார்க்கக்கூடாது என்றார். ஆனால் இன்றும் எங்கள் கிராமத்தில் சாதியின் அடிப்படையில் தான் எல்லாம் நடைபெறுகிறது இதிலிருந்தே தெரியவில்லையா? பெரியார் வழியில் நடக்கவில்லை என்று.

முகிலன் : சரியாகச் சொன்னாய் கமலா எங்கள் சிற்றூரில் கூட சாதியைக் காரணம் காட்டி மக்கள் இழிவுபடுத்தப்படுகிறார்கள்.

கமலா : அதுமட்டுமில்லை முகிலா! மணக்கொடை, வரதட்சணை கூடாது என்றார். ஆனால் எங்கள் உறவினர்களில் ஒரு பெண்ணுக்கு வரதட்சணை தரமுடியாமல் திருமணம் தள்ளிக்கொண்டே போகிறது. பின் எப்படி சமூகம் பெரியார் வழி நடக்கிறது என்று சொல்ல முடியும்.

அகிலன் : இரண்டு பேரும் பேசிக்கிட்டு இருக்கீங்க நான் கொஞ்சம் பேசலாமா?

கமலா : சொல்லு அகிலன்....

அகிலன் : "நீங்க கலப்புத் திருமணம் செய்யலாம், சாதிமறுப்புத் திருமணம் செய்யலாம்" என்றார். ஆனால் அப்படி யாராவது செய்தால் கொல்லப்படுகிறார்கள் என்ன செய்வது....

முகிலன் : இதுமட்டுமல்ல வேறுபாடற்ற கல்வி வேண்டும் என்றார். இன்றும் பணம் படைத்தவர்கள் நல்ல பள்ளியில் நல்ல தரமான வேறுபட்ட கல்வி கற்க முடிகிறது. சாதாரண ஏழை ஜனங்களுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை தானே....

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

அகிலன் : இப்படியே பேசிக்கொண்டே போகலாம் கமலா. நாம் பெரியாரின் கருத்துகளை நடைமுறைக்குக் கொண்டுவர முயல்வோம்.

முகிலன் : ஆம் அகிலன்! நன்கு படித்துத் தொலைநோக்குடைய அவருடைய சிந்தனைகள் அவர் கற்றுத் தந்த தன்மதிப்பு, சமத்துவம் ஆகியவற்றை திறவுகோலாகக் கொண்டு புதிய சமுதாயத்தைப் படைப்போம்.

கமலா : நாம் நினைத்தால் முடியாதது இல்லை. முயல்வோம் வெல்வோம்....

ஆசிரியர் : மிக்க மகிழ்ச்சி மாணவர்களே! நான் இன்று கற்றுக்கொடுத்தது வீணாகப் போவதில்லை....

※※⁂⁂⁂※※

கவிதைப் பேழை

இயல் எட்டு

ஒளியின் அழைப்பு

நுழையும் முன்:

புவிஈர்ப்பு விசையை எதிர்த்து விண்ணோக்கி விரைவது தாவரத்தின் தனித்துவம். வேர் வளர்க்கும் கதிரவன் ஒளியும் காற்றும் நீரும் பசுமரத்தின் வேருக்கு நெக்குவிடும் பாறையும் என எல்லாம் இணைந்தே இயற்கையைப் போற்றி வளர்க்கின்றன. போட்டியின்றி வாழ்க்கையில்லை; வலிகளின்றி வெற்றியில்லை. ஒன்றையொன்று அடுத்தும் படுத்தும் மென்மேலும் முன்னேறுவது இயற்கைக்கு மட்டுமன்று, வாழ்க்கைக்கும்தான்!

நூல்குறிப்பு (நூல் வெளி):

- புதிய படைப்புச் சூழலில் மரபுக் கவிதையில் யாப்பு பிடியில் இருந்து விடுபட்ட கவிதைகள் புதுக்கவிதைகள் எனப்பட்டன. பாரதியாரின் வசனகவிதையைத் தொடர்ந்து புதுக்கவிதை படைக்கும் முயற்சியில் ந. பிச்சமூர்த்தி ஈடுபட்டார். எனவே அவர் புதுக்கவிதையின் தந்தை என்று போற்றப்படுகிறார்.
- புதுக்கவிதையை இலகு கவிதை, கட்டற்ற கவிதை, விலங்குகள் இலா கவிதை, கட்டுக்குள் அடங்காக் கவிதை என்று பல்வேறு பெயர்களில் குறிப்பிடுகின்றனர்.

ஆசிரியர் குறிப்பு:

- ந. பிச்சமூர்த்தி அவர்கள் 1900ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் நாள் தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் பிறந்தார்.
- நடேச தீட்சிதர் காமாட்சி அம்மாள் இவர்தம் பெற்றோர் ஆவார். இவருக்கு வேங்கட மகாலிங்கம் என்று பெற்றோர் பெயரிட்டனர். எனினும் பிச்சை என்றே அழைத்தனர். அதுவே பின்னாளில் பிச்சமூர்த்தி ஆயிற்று.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

- ந. பிச்சமூர்த்தி தொடக்கக் காலத்தில் வழக்கறிஞராகவும் பின்னர் இந்து சமய அறநிலைய பாதுகாப்புத் துறை அலுவலராகவும் பணியாற்றினார். ஹனுமான், நவ இந்தியா ஆகிய இதழ்களில் துணை ஆசிரியராக இருந்தார்.
- மேலும் சுதேசமித்திரன், சுதந்திரச்சங்கு, தினமணி, மணிக்கொடி ஆகிய பத்திரிகைகளிலும் எழுதியுள்ளார். இவர் புதுக் கவிதை, சிறுகதை, ஓரங்க நாடகம், கட்டுரைகள், ஆகிய இலக்கிய வகைமைகளைப் படைத்தவர்.
- இவருடைய முதல் சிறுகதை `ஸயன்ஸுக்கு பலி` என்பதாகும். மேலும் வேப்பமரம், வானம்பாடி போன்ற புகழ்பெற்ற பல சிறுகதைகளை எழுதியுள்ளார். பிச்சை, ரேவதி ஆகிய புனைபெயர்களில் எழுதியுள்ளார். 1932 இல் கலைமகள் இதழ் வழங்கிய பரிசை பெற்றுள்ளார்.
- இவரது கவிதைகள் பற்றி வல்லிக்கண்ணன் அவர்கள் "இயற்கையையும் வாழ்க்கை அனுபவங்களையும் இணைத்து அறிவுத் தெளிவுடன் நல்வாழ்வுக்கான தத்துவ உண்மைகளைக் காணும் முயற்சியே பிச்சமூர்த்தியின் கவிதை" என்று புகழாரம் சூட்டியுள்ளார்.
- "ஒளியின் அழைப்பு" என்னும் நம் பாடப் பகுதியில் அமைந்துள்ள கவிதை மணிக்கொடி இதழில் 1934இல் அக்டோபர் 28 வெளிவந்தது ஆகும்.

வாழ்க்கைப் போர்

கமுகு மரம்(பாக்குமரம்) ஒன்று பெருமரங்களின் (விருட்சம்) இருள் போன்ற நிழல் நிறைந்த இடத்தில் முளைத்தது. தன் உயிர் அமுதமாகிய வெளிச்சம் இருந்தால் தானே தான் வளர முடியும் அப்பெருமரத்தின் நிழல் என்னும் இருளை கமுகுமரம் துளைக்க ஆரம்பித்தது. பெருமரத்தின் நிழலை வெறுத்தது. விருட்சங்களுக்கு மேலாக தன் உச்சிக் கிளையை உயர்த்த முயற்சித்தது. ஒளியாகிய உயிர்ப்பைத் (அமுதை) தேடியது. மீண்டும் மீண்டும் உயர முயற்சித்தது உயர்ந்தது உயரே.

கதிரவனின் ஒளிக்கதிர்களாகிய விரல்களின் அழைப்பைக் கண்டதும் பெருமரத்தின் இருட்டில் இருந்து கொண்டே தன் கிளைகளை வளைத்து நீட்டியது.

அமுதமாகிய தன் உணவாகிய ஒளியை வேண்டி கமுகு பெருமரங்களுடன் போட்டியிடுகிறது. அதுவே வாழ்க்கைப் போர். வாழ்க்கை உறுதி பெற வேண்டுமென்றால் போட்டியிட்டு, போரிட்டே ஆக வேண்டும்.

பெரு மரங்களை முட்டி மோதி மேலே செல்லும் துணிச்சலே இன்பம். முயற்சி உள்ளனவே வாழ்வில் மலர்ச்சி பெறும்.

கமுகு மரம் கடுமையாக மோதித் துணிச்சலான முயற்சிகளில் ஈடுபட்டது. நம்பிக்கை, தன்முனைப்போடு கூடிய போட்டியில் கமுகு வென்றது. பெருமரத்தை விஞ்சி வளர்ச்சி நடை போடுகிறது.

கமுகினைப் போலவே நாமும் அடர்ந்த துன்பங்கள், தடைகள், இடையூறுகள் வந்தாலும் தளராது முயல்வோம். கமுகு தலைநிமிர்ந்தது போல நாமும் நிமிர்வோம் உயர்வோம்.

இலக்கணக் குறிப்பு:

1. பிறவி இருள், ஒளியமுது, வாழ்க்கைப்போர் – உருவகங்கள்
2. பெருமரம் – பண்புத்தொகை
3. நம்பி – வினையெச்சம்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பகுபத உறுப்பிலக்கணம்

போகிறது – போ + கிறு + அ + து

போ	–	பகுதி
கிறு	–	நிகழ்கால இடைநிலை விகுதி
அ	–	சாரியை
து	–	படர்க்கை ஒன்றன்பால் விகுதி

வளைத்து – வளை + த் + த் + உ

வளை	–	பகுதி
த்	–	சந்தி
த்	–	இறந்தகால இடைநிலை
உ	–	வினையெச்ச விகுதி

வேண்டி – வேண்டு + இ

வேண்டு	–	பகுதி
இ	–	வினையெச்ச விகுதி

நீட்டி – நீட்டு + இ

நீட்டு	–	பகுதி
இ	–	வினையெச்ச விகுதி

மலர்ச்சி – மலர் + ச் + சி

மலர்	–	பகுதி
ச்	–	சந்தி
சி	–	தொழிற்பெயர் விகுதி

பாடநூல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. "முண்டி மோதும் துணிவே இன்பம்" – இவ்வடியில் இன்பமாக உருவகிக்கப்படுவது _____.

அ) மகிழ்ச்சி ஆ) வியப்பு இ) துணிவு ஈ) மருட்சி

விடை: இ) துணிவு

குறுவினா

1. **கமுகு மரம் எதைத் தேடியது?**

பெருமரங்களுக்கு இடையே தோன்றிய கமுகு மரமானது, தான் வளர்ந்து வளம் பெறுவதற்கு, விண்ணிலிருந்து வரும் கதிரவன் ஒளியாகிய உயிர்ப்பைத் (ஒளியமுதை) தேடியது.

நெடுவினா

1. **வாழ்க்கைப் போரில் வெற்றி பெறுவதற்கான வழிகளைக் கமுகுமரம் வாயிலாக ஆசிரியர் எவ்வாறு உணர்த்துகிறார்?**

முன்னுரை:

போட்டி இன்றி வாழ்க்கை இல்லை. வலிகளின்றி வெற்றி இல்லை. ஒன்றையொன்று அடுத்தும், படுத்தும் மென்மேலும் முன்னேறுவது இயற்கைக்கு மட்டுமன்று வாழ்க்கைக்கும் தான் என்பதை ந. பிச்சமூர்த்தி அவர்கள் கமுகுமரம் வாயிலாக உணர்த்துகிறார்.

கமுகு பிறந்த இடம்:

அடர்ந்த இருள் போன்ற நிழல் பரப்புகின்ற பெருமரங்களின் இடையே கமுகு பிறந்தது. பெருமரங்களின் நிழல் என்னும் இருள் அதன் வளர்ச்சிக்குத் தேவையான ஒளியமுதைத் தடுத்தது. பெருமரங்களின் நிழலை வெறுத்த கமுகு தான் வளரத் தேவையான ஒளியமுதைப் பெற்று உயிர்ப்புப் பெற போராட துவங்கியது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கழுகின் போராட்டம்:

கழுகு மரம் கடுமையாகப் பெருமரங்களுடன் முட்டிமோதும் முயற்சியைத் தொடங்கியது. விண்ணிலிருந்து வரும் தன் உயிர்ப்பாகிய ஒளியமுதைத் தேடியது. மீண்டும், மீண்டும் உயர முயற்சித்தது. கதிரவனின் ஒளிக்கதிர்களாகிய விரல்களின் அழைப்பைக் கண்டது. பெருமரங்களின் இருட்டில் இருந்து கொண்டே தன் கிளையை வளைத்து ஒளியை நோக்கி நீட்டத் தொடங்கியது; வளர்ந்தது. பெரு மரங்களை முட்டி மோதும் துணிச்சலையும், முயற்சியையும் பெற்றதால் கழுகு வளைந்து, நெளிந்து, நீண்டு வளர்ந்தது. மலர்ச்சி பெற்றது.

வாழ்க்கைப் போர்:

வாழ்க்கையிலும் இருள் போன்ற நிழல் சூழ்ந்த நிலைகள் ஏற்படலாம். ஒளியமுதை நம்பி, வேண்டி, கழுகு துணிச்சலான முயற்சியில் ஈடுபட்டது போல, நாமும் வாழ்க்கைப் போரில் நம்பிக்கை தன்முனைப்பு, விடாமுயற்சி, உடையவர்களாய் இருந்தால் வாழ்வு மலர்ச்சி பெறும்.

முடிவுரை:

"பெருமரத்துடன் சிறுகழுகு போட்டியிடுகின்றது, அதுவே வாழ்க்கைப் போர். முண்டி போதும் துணிவே இன்பம் உயிரின் முயற்சியே வாழ்வின் மலர்ச்சி". இயற்கையின் போராட்டங்களையும், வாழ்வின் அனுபவங்களையும் இணைத்து அறிவுத் தெளிவுடன் வாழ்க்கைப் போரைச் சந்திப்போம்; முயல்வோம்; வெற்றி பெறுவோம்.

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. பொருத்துக.

சொல்	பொருள்
அ) விண்	1) பாக்குமரம்
ஆ) ரவி	2) சக்கரக்கால்
இ) கழுகு	3) சூரியன்
ஈ) ஆரம்	4) வானம்

விடை:

சொல்	பொருள்
அ) விண்	1) வானம்
ஆ) ரவி	2) சூரியன்
இ) கழுகு	3) பாக்குமரம்
ஈ) ஆரம்	4) சக்கரக்கால்

2. புதுக்கவிதையின் தந்தை எனப் போற்றப்படுபவர் யார்?

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) மீரா ஈ) ந.பிச்சமூர்த்தி

விடை: ஈ) ந.பிச்சமூர்த்தி

3. ந.பிச்சமூர்த்தி எழுதிய முதல் சிறுகதை எது?

அ) சயன்ஸுக்கு பழி ஆ) சயன்ஸுக்கு பலி

இ) அறிவியல் உலகம் ஈ) அறிவியல் விருந்து

விடை: ஆ) சயன்ஸுக்கு பலி

4. பிச்சை, ரேவதி என்ற புனைபெயர்களில் படைப்புகளை எழுதியவர் யார்?

அ) கண்ணதாசன் ஆ) மீரா இ) தாராபாரதி ஈ) ந.பிச்சமூர்த்தி

விடை: ஈ) ந.பிச்சமூர்த்தி

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

5. கலைமகள் இதழ் வழங்கிய பரிசை ந.பிச்சமூர்த்தி பெற்ற ஆண்டு .....

அ) 1932 ஆ) 1933 இ) 1934 ஈ) 1935

விடை: அ) 1932

6. யாப்புப்பிடியில் இருந்து விடுபட்டவையே ..... ஆகும்.

அ) மரபுக் கவிதை ஆ) சங்கப் பாடல் இ) காப்பியம் ஈ) புதுக்கவிதை

விடை: ஈ) புதுக்கவிதை

7. ஒளியமுது என்பதன் இலக்கணக் குறிப்பு யாது?

அ) உவமைத் தொகை ஆ) வினைத் தொகை

இ) உருவகம் ஈ) எண்ணும்மை

விடை: இ) உருவகம்

8. உயிரின் முயற்சியே வாழ்வின் ..... ஆகும்.

அ) தளர்வு ஆ) தடுமாற்றம் இ) மனமாற்றம் ஈ) மலர்ச்சி

விடை: ஈ) மலர்ச்சி

9. "புதுக்கவிதைகள் தோற்றமும் வளர்ச்சியும்" என்னும் நூலை எழுதியவர் .....

அ) நெல்லைக்கண்ணன் ஆ)வல்லிக்கண்ணன்

இ) ஈரோடு தமிழன்பன் ஈ) ந. பிச்சமூர்த்தி

விடை : ஆ) வல்லிக்கண்ணன்

10. பாரதியாரின் வசன கவிதையைத் தொடர்ந்து புதுக்கவிதை படைக்கும் முயற்சியில் ஈடுபட்டவர் _____.

அ) ந. பிச்சமூர்த்தி ஆ) மீரா இ) வல்லிக்கண்ணன் ஈ) மு. மேத்தா

விடை : அ) ந.பிச்சமூர்த்தி

குறுவினா

1. ந.பிச்சமூர்த்தி கவிதைகள் குறித்து வல்லிக்கண்ணன் கூறுவன யாவை?

இயற்கையையும் வாழ்க்கை அனுபவங்களையும் இணைத்து, அறிவுத் தெளிவுடன் நல்வாழ்க்கைக்கான மெய்யியல் உண்மைகளைக் காணும் முயற்சிகளே பிச்சமூர்த்தியின் கவிதைகள் என்று வல்லிக்கண்ணன் குறிப்பிட்டுள்ளார்.

2. ந.பிச்சமூர்த்தி படைத்த இலக்கிய வகைமைகளைக் குறிப்பிடுக.

- புதுக்கவிதை
- ஓரங்கநாடகங்கள்
- சிறுகதை
- கட்டுரைகள்

3. ந.பிச்சமூர்த்தி துணையாசிரியராகப் பணியாற்றிய இதழ்கள் யாவை?

- ஹனுமான்
- நவ இந்தியா

4. புதுக்கவிதைக்குரிய வேறு பெயர்கள் யாவை?

- இலகு கவிதை
- கட்டற்ற கவிதை
- விலங்குகள் இல்லாக் கவிதை
- கட்டுக்குள் அடங்காக் கவிதை

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

சிறுவினா

1. ந. பிச்சமூர்த்தி குறிப்பு வரைக.

- புதுக்கவிதையின் தந்தை எனப் போற்றப்பட்டவர்.
- வழக்குரைஞராகவும், இந்து சமய அறநிலையப் பாதுகாப்புத்துறை அலுவலராகவும் பணியாற்றினார்.
- புதுக்கவிதை, ஓரங்க நாடகம், கட்டுரை ஆகிய இலக்கிய வகைமைகளைப் படைத்தவர்.
- பிச்சை, ரேவதி ஆகிய புனைபெயர்களில் எழுதினார்.

கற்பவை கற்றபின்

பக்கம்: 216

1. முயற்சி, நம்பிக்கை, வெற்றி ஆகியவற்றை உணர்த்தும் அறிஞரின் பொன்மொழிகளைத் தொகுக்க.

உங்கள் பாதையை நீங்களே தேர்ந்தெடுங்கள் ஏனெனில் வேறு எவராலும் உங்கள் கால்களைக் கொண்டு நடக்க முடியாது...!	எட்டி விடும் தூரத்தில் வெற்றியும் இல்லை! அதை விட்டுவிடும் எண்ணத்தில் நானும் இல்லை!	வாழ நினைப்பவனுக்கு வானம் கூட வாயிற் படிதான்!

1. "நாம் நம்மால் முடியாது
என்று நினைக்கும் செயல்களை
யாரோ ஒருவர்
எங்கோ ஓர் இடத்தில்
அதை செய்து கொண்டுதான்
இருக்கிறார் என்பதை மறவாதே"
– அப்துல் கலாம்

2. எனது வெற்றிகளின் மூலம்
என்னை மதிப்பிடாதீர்கள்,
எத்தனை முறை நான் கீழே
விழுந்து மீண்டும் எழுந்தேன்
என்பதன் மூலம் மதிப்பிடுங்கள்
– நெல்சன் மண்டேலா

3. கண்ணெதிரே காணும்
ஒவ்வொருவரையும் நம்புவது
அபாயகரமானது. அதைக் காட்டிலும்
ஒருவரையும் நம்பாதிருப்பது மிகவும்
அபாயகரமானது
– ஆபிரகாம் லிங்கன்

4. முடியாது என்பது நம்
அகராதியில் கிடையாது
– நெப்போலியன்

5. நம்பிக்கையோடு உன்
முதலடியை எடுத்துவை
முழுப் படிக்கட்டையும்
நீ பார்க்க வேண்டிய அவசியமில்லை,
முதலில் படியில் ஏறு
– மார்டின் லூதர்கிங்

6. ஒரேயடியாக உச்சிக்கு ஏறிவிட
வேண்டும் என்ற முயற்சிதான்
உலகில் பல பெருந்துயருக்கும்
காரணமாயிருக்கிறது.
– சாமுவேல் பட்லர்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

7. எவராவது தான் தன்னுடைய
வாழ்நாளில் ஒரு பிழையும் செய்ததில்லை
என்று நினைத்தால் அவர்கள் தாம்
தம் வாழ்வில் புதிய முயற்சிகளைச்
செய்து பார்த்ததில்லை என்று பொருள்
– ஐன்ஸ்டைன்

2. "தன்னம்பிக்கையின் மறுபெயர்" நான் என்னும் தலைப்பில் ஒரு கவிதை படைத்து வகுப்பறையில் படித்துக் காட்டுக.

தன்னம்பிக்கையின் மறுபெயர் நான்

என் மறுபெயர்
என்ன தெரியுமா?...
தன்னம்பிக்கை...
எனக்குள் ஒருவன் இருக்கிறான்
அவன்தான் தன்னம்பிக்கை...
முயன்றவரை மட்டுமல்ல
முடியும் வரை முயல்வேன்
துவண்டு போக மாட்டேன்
துணிவுடன் செல்வேன்...
வேகமாய் செல்லமாட்டேன் விவேகத்துடன்
செல்வேன்
பொறாமைகளை போட்டிகளை எதிர்கொள்ள
பொறுமையுடன் பொறுப்புடன் ஓடுவேன்
ஏனெனில்
என் பெயர் தன்னம்பிக்கை...
தோல்வியில் சிரித்துப் பார்த்தேன்...
கற்றதை உணர்ந்து பார்த்தேன்...
ஆசையைத் துறந்து பார்த்தேன்...
அச்சத்தை மறந்து பார்த்தேன்...
வியர்வை சொட்ட உழைக்கப் பார்த்தேன்...
வெற்றிக்கனியைச் சுவைத்துப் பார்க்கிறேன்.
என் பெயர் தன்னம்பிக்கை...

××⁂⁂⁂××

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கவிதைப் பேழை

இயல் எட்டு

தாவோ தே ஜிங் (லா வோட்சு)

நுழையும் முன்:

- இருப்பதும் இல்லாதிருப்பதும் ஆகிய இரண்டு நிலைகளுக்குள் உள்ளடங்கியதே வாழ்க்கை.
- ஒன்றைப் பிடித்த பிடியை விட்டு பிறிதொன்றை எட்டிப்பிடிக்கும் முன்னே ஏற்படும் வெற்றிட அனுபவங்களே வாழ்க்கையின் உருவத்தை வரைந்து வைத்து விடுகின்றன
- உண்டு, இல்லை என்ற சிந்தனைகளுக்கிடையே உண்டு என்பதை மட்டும் பயனுள்ளதாகக் கருதுவதைச் சீனக் கவிஞர் லாவோட்சு மறுக்கிறார்.
- எந்த ஒன்றும் உருவாக வேண்டுமென்றால், உண்டும் வேண்டும் இல்லையும் வேண்டும் என்ற கருத்தை நம் பாடல் பகுதியில் உள்ள கவிதை உணர்த்துகின்றது.

நூல்குறிப்பு (நூல் வெளி):

தாவோ தே ஜிங் விளக்கம்

- தாவோ தே ஜிங் என்பது சீன செவ்வியல் மெய்யியல் நூலாகும். லாவோட்சு என்ற அறிஞரால் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது.
- இந்நூல் சீனாவின் "தாவோயியம்" என்னும் சமயத்துக்கு அடிப்படை நூலாகும். மிகுதியாக மொழி பெயர்க்கப்பட்ட நூல்களில் இதுவும் ஒன்று.

தாவோ தே ஜிங் என்பதன் பொருள்:

- தாவோ – வழி; தே – ஊக்கம், நேர்மை; ஜிங் – நூல்.
- தாவோ தே ஜிங் என்றால் "ஊக்கமும் நேர்மையும் வழியாகக் கொண்ட நூல்" ஆகும். இந்நூலில் போர், ஆயுதங்கள், அதிகாரங்கள் ஆகியவற்றுக்கு எதிரான கருத்துக்கள் அதிகம் உள்ளன.
- நேர்மையாக இருக்க வழிகாட்டுதல் வாழ்வின் நிலைகளை அப்படியே ஏற்றுக் கொள்ளுதல் ஆகியவற்றை வலியுறுத்தும் நூலாகும்.

ஆசிரியர் குறிப்பு:

- 'லாவோட்சு' சீனாவில் கிமு இரண்டாம் நூற்றாண்டிற்கு முன் வாழ்ந்தவர்.
- சீனஞானி கன்பூசியஸ் இவரது சமகாலத்தவர் ஆவார்.
- அக்காலகட்டமானது சீனச் சிந்தனையின் பொற்காலமாக இருந்தது.
- லாவோட்சு "தாவோவியம்" என்ற சிந்தனைப் பிரிவைச் சார்ந்தவர்.
- ஒழுக்கத்தை மையமாக வைத்துச் சிந்தித்தவர் கன்பூசியஸ்.
- இன்றைய வாழ்வை மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்னும் சிந்தனையை முன்வைத்தவர் லாவோட்சு.
- "தாவோவியம்" என்னும் தத்துவம் வாழ்வை மகிழ்ச்சியாக வாழ்வதையே வலியுறுத்துகிறது.
- "லாவோட்சு" என்பதற்கு (old mastet) பழமையான அறிஞர் என்று பொருள்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பாடலின் பொருள்:

- பல ஆரங்களைக் கொண்டது சக்கரம். எனினும் அவற்றிடையே உள்ள வெற்றிடத்தை மையமாகக் கொண்டே அச்சக்கரம் சுழல்கிறது. மண்ணினால் அழகிய வேலைப்பாடுகள் கொண்டதாய் இருப்பது பானை. ஆயினும் பானையினுள் இருக்கும் வெற்றிடமே நமக்குப் பயன்படுகிறது.
- வீட்டில் உள்ள சன்னலும் கதவும் கூட சுவரின் வெற்றிடம்தான். அதுவே காற்றையும், வெளிச்சத்தையும் தரப் பயன்படுகிறது.
- நான்கு சுவர்களுக்கும் இடையே உள்ள வெற்றிடம்தான், அறையாக நமக்குப் பயன்படுகிறது.
- நம் பார்வையில் படுகின்ற உருப்பொருள்கள் உண்மைதான் எனினும் உருப்பொருளின் உள் உள்ள வெற்றிடமே நமக்குப் பயன் உடையதாகிறது.
- வெற்றிடமும் பயன்தரும். இல்லை யென்றிருப்பதும் உள்ளதாய் மாறும். வெற்றிடமே பயன் உடையதாகும் எனில் வாழ்வில் வெற்றி பெற இருத்தலையும் பயன்படுத்துவோம் இருத்தலின்மையையும் பயன்படுத்துவோம்.
- வாழ்வில் நாம் பயன்படுத்தாத பகுதிகள் பல உண்டு. அவற்றை வெற்றிடம் என்று ஒதுக்கி விடுகிறோம். நாம் பயன்படுத்தாத நம் வாழ்வின் வெற்றிடமான பகுதிகளும், சுவை மிகுந்தவை பொருள் பொதிந்தவை. எனவே வாழ்வின் அனைத்துப் பகுதிகளையும் சுவைத்து நம் வாழ்வை பொருளுடையதாக்குவோம்.

இலக்கணக் குறிப்பு:

பாண்டம் பாண்டமாக	–	அடுக்குத்தொடர்
வாயிலும் சன்னலும்	–	எண்ணும்மை
முப்பதும்	–	முற்றும்மை

பகுபத உறுப்பிலக்கணம்:

இணைகின்றன – இணை + கின்று + அன் + அ

இணை	–	பகுதி
கின்று	–	நிகழ்கால இடைநிலை
அன்	–	சாரியை
அ	–	பலவின்பால் வினைமுற்று விகுதி

விடுகிறோம் – விடு + கிறு + ஓம்.

விடு	–	பகுதி
கிறு	–	நிகழ்கால இடைநிலை
ஓம்	–	தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி

பாடநூல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. **விடைக்கேற்ற வினாவைத் தேர்க.**

பானையின் வெற்றிடமே நமக்குப் பயன்படுகிறது.

அ) பானையின் எப்பகுதி நமக்குப் பயன்படுகிறது?

ஆ) பானை எப்படி நமக்குப் பயன்படுகிறது?

இ) பானை எதனால் நமக்குப் பயன்படுகிறது?

ஈ) பானை எங்கு நமக்குப் பயன்படுகிறது?

விடை: அ) பானையின் எப்பகுதி நமக்குப் பயன்படுகிறது?

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

குறுவினா

1. தாவோ தே ஜிங் 'இன்னொரு பக்கம்' என்று எதைக் குறிப்பிடுகின்றார்?

- இருப்பதும் இல்லாதிருப்பதும் ஆகிய இரண்டு நிலைகளை உடையது மானுட வாழ்க்கை. இருக்கின்றதான உருப்பொருளையே பயன் உடையதாய்க் கருதுகிறோம்.
- புலப்படாத இன்னொரு பக்கமாகிய இருத்தலின்மையை நாம் உணராமலே பயன்படுத்திக் கொண்டு தான் இருக்கிறோம்.
- **சான்று** : உருப்பொருளாகிய மண்ணால் செய்யப்பட்ட பாண்டம் இருத்தல், அதனுள் இருக்கும் இன்மையாகிய வெற்றிடத்தையே நீர் முதலியவற்றை நிரப்பிக் கொள்ள பயன்படுத்துகிறோம். எனவே இருத்தல் மட்டுமல்ல "இருத்தலின்மையும்" வாழ்வின் இன்னொரு பக்கம் என்று தாவோ தே ஜிங் கூறுகிறார்.

சிறுவினா

1. பிறமொழி இலக்கியங்களைத் தழுவி எழுதப்பட்ட தமிழ் இலக்கியங்களை குறிப்பிடுக.

- வான்மீகி வடமொழியில் எழுதிய இராமகாதையைத் தழுவி கம்பர் "கம்பராமாயணம்" எழுதினார்.
- வியாசர் வடமொழியில் எழுதிய மகாபாரதத்தைத் தழுவி, 'வில்லிபாரதம்', 'பாஞ்சாலி சபதம்' எழுதப்பட்டது.
- ஷத்ரிய சூடாமணி, ஸ்ரீபுராணம், சத்ய சிந்தாமணி ஆகிய வடமொழி நூல்களைத் தழுவி "சீவகசிந்தாமணி" எழுதப்பட்டது.
- Pilgrims progress நூலைத் தழுவி "இரட்சண்ய யாத்திரிகம் எழுதப்பட்டது.
- The secret way - என்னும் நூலைத் தழுவி" மனோன்மணியம்" எழுதப்பட்டது.
- புட்பந்தர் எழுதிய யசோதர சரிதம் என்னும் நூலைத் தழுவி "யசோதர காவியம்" எழுதப்பட்டது.

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. லாவோட்சு வாழ்ந்த காலம் எது?

அ) கி.மு. முதலாம் நூற்றாண்டு ஆ) கி.மு. இரண்டாம் நூற்றாண்டு
இ) கி.பி. முதலாம் நூற்றாண்டு ஈ) கி.பி. இரண்டாம் நூற்றாண்டு

விடை: ஆ) கி.மு. இரண்டாம் நூற்றாண்டு

2. லாவோட்சின் சமகாலத்தில் வாழ்ந்த சீன ஞானி யார்?

அ) யுவான்சுவாங் ஆ) பாகியான் இ) தாவோதே ஜிங் ஈ) கன்பூசியஸ்

விடை: ஈ) கன்பூசியஸ்

3. லாவோட்சின் சிந்தனை ..... எனப்படும்.

அ) லாவோட்சின் பக்கம் ஆ) தாகாவியம்
இ) தாவோவியம் ஈ) லாவோட்சும் சினமும்

விடை: இ) தாவோவியம்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

4. இன்றைய வாழ்வை மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்றவர் யார்?

அ) கன்பூசியஸ் ஆ) யுவான்சுவாங் இ) லாவோட்சு ஈ) தாவோட்சு

விடை: இ) லாவோட்சு

5. ..... மையமாக வைத்துக் கன்பூசியஸ் சிந்தித்தார்.

அ) ஒழுக்கத்தை ஆ) அன்பை இ) பகுத்தறிவை ஈ) உறவை

விடை : அ) ஒழுக்கத்தை

6. தாவோ தே ஜிங் என்னும் கவிதையை மொழிபெயர்த்தவர் .....

அ) சி.மணி ஆ) கவிமணி இ) ந.பிச்சமூர்த்தி ஈ) வல்லிக்கண்ணன்

விடை : அ) சி.மணி

குறுவினா

1. லாவோட்சு – குறிப்பு வரைக.

- லாவோட்சு, சீனாவில் கி.மு. 2ஆம் நூற்றாண்டிற்கு முன் வாழ்ந்தவர்.
- சீன மெய்யியலாளர் கன்பூசியஸ் இவரது சமகாலத்தவர்.
- 'தாவோவியம்' என்ற சிந்தனைப் பிரிவைச் சார்ந்தவர்.

2. சுவரின் வெற்றிடமாக விளங்குவன யாவை?

வீட்டிலுள்ள சாளரமும் கதவும் கூடச் சுவரின் வெற்றிடமாகத் திகழ்கின்றன.

3. வாழ்க்கையின் இருநிலைகள் எனப்படுவது யாது?

- இருப்பதும்
- இல்லாதிருப்பதும்

4. சீனச் சிந்தனையின் பொற்காலம் எனப்படுவது எது?

லாவோட்சு, கன்பூசியஸ் வாழ்ந்த காலம்.

சிறுவினா

1. நம் வாழ்க்கையை எவ்வாறு பொருளுடையதாக்க வேண்டும்?

வாழ்க்கை மிகவும் விரிவானது. அதன் சில பகுதிகளை மட்டுமே நாம் பயன்படுத்துகிறோம். உணர்கிறோம். நாம் பயன்படுத்தாத அந்தப் பகுதிகளும் சுவை மிகுந்தவை. பொருள் பொதிந்தவை. வாழ்க்கையின் அனைத்துப் பக்கங்களையும் சுவைத்து, நம் வாழ்க்கையைப் பொருளுடையதாக்குவோம்.

2. இன்மையால்தான் நாம் பயனடைகிறோம் என்ற கவிஞரின் கருத்தை எடுத்தியம்புக.

- இல்லை என்பது வடிவத்தை வரையறை செய்கிறது.
- குடம் செய்ய மண் என்பது உண்டு. இந்த உண்டும் இல்லையும் சேர்வதால்தான் குடத்தில் நீரை நிரப்ப முடியும். வெற்றிடம் இல்லாத குடத்தில் நீரை நிரப்ப முடியாது.
- ஆரங்களை விட நடுவிலுள்ள வெற்றிடம் சக்கரம் சுழல உதவுகிறது.
- குடத்து ஓட்டினைவிட உள்ளே இருக்கும் வெற்றிடமே பயன்படுகிறது.
- சுவர்களைவிட வெற்றிடமாக இருக்கும் இடமே பயன்படுகிறது.
- ஆகவே, 'இன்மை' என்று எதையும் புறக்கணிக்க வேண்டாம் என்று கவிஞர் கூறுகிறார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கற்பவை கற்றபின்

பக்கம்: 218

1. நீங்கள் அறிந்த அயல்நாட்டு தத்துவ அறிஞர்களின் பெயர்களை எழுதுக.

- சாக்ரடீஸ்
- பிளேட்டோ
- அரிஸ்டாட்டில்
- கன்பூசியஸ்
- கார்ல்மார்க்ஸ்
- லாவோட்சு
- டார்வின்

2. ஜென் தத்துவக்கதை ஒன்றைப் படித்து அதுகுறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.

கலந்துரையாடல்

படித்த கதை : 'இந்தாப்பா உன் சந்தோஷம்'

கலந்துரையாடுபவர்கள்: ஆசிரியர், மாலா, கமலா, குமார்.

ஆசிரியர் : கதையைக் கேட்டீர்களா மாணவர்களே ...

மாலா : கேட்டோம் ஐயா!

கமலா : ஐயா! சந்தோஷம் எதில் என்பதை இக்கதை விளக்கமாக கூறியுள்ளது.

ஆசிரியர் : என்ன புரிந்துகொண்டீர்கள்...

குமார் : கோடீஸ்வரனுக்கு பணம் இருந்தும் மகிழ்ச்சியில்லை. எப்போதும் தன் பொன்னையும் பொருளையும் எண்ணிக் கொண்டிருக்கிறான்...

ஆசிரியர் : நிம்மதிக்கு என்ன செய்தான்.

கமலா : நாடு நாடாக ஊர் ஊராக சுற்றினான். பணத்தின் நினைவு வரும்போதெல்லாம் பதறி அடித்து திரும்பிப் போகின்றான்.

மாலா : பின் பொருள், பொன், பணம், எல்லாவற்றையும் மூட்டை கட்டி துறவியிடம் கொடுத்து சந்தோசம் கேட்கிறான்.

குமார் : துறவி மூட்டையுடன் ஓடுகிறார். சந்து பொந்தெல்லாம் ஓடிய துறவி மீண்டும் மரத்தடிக்கு வருகிறார்.

கமலா : மூட்டையை அவசர அவசரமாக கோடீஸ்வரன் பறித்துக் கொள்கிறான்.

ஆசிரியர் : மாணவர்களே செல்வம் படைத்தவனுக்கு அதனைக் கைவிட மனம் வருவதில்லை. அதனால் நிம்மதியும் அமைதியும் பெற முடியவில்லை. பொன், பொருள் இருப்பினும் அதில் பற்றற்ற மனதுடன் இருப்பதே மகிழ்ச்சி தரும்.

3. மண் பாண்டம் செய்வோரைச் சந்தித்து அதன் உருவாக்கம் குறித்து அறிக.

- மண்பாண்டம் செய்யும் தொழில் பழமையான தொழில்களில் ஒன்று.
- மண்பாண்டம்செய்பவர் குயவர் என்று அழைக்கப்பட்டனர்.
- நீர் தூய்மையாகப்பட்ட மண் சேர்த்துக் குழைக்கபட்ட களிமண்ணோடு வேறு சில கனிமங்களையும் சேர்ப்பது உண்டு. களிமண் கனமானது, அடர்த்தியானது, தூய்மையானது. இதனை நன்கு குழைத்து மேடையில் சக்கரத்தலை என்ற பகுதியில் வைக்கப்படும்.
- பானை செய்பவர் தேவைப்படும் வேகத்தில் சுழல் மேடையை சுழற்றுவார்.
- சுழற்றும் வேகத்தில் கீழ்நோக்கியும் உள்நோக்கியும் அழுத்தி ஒரே அளவிலான தடிமனில் பரவவிட்டு என்ன வடிவில் வேண்டுமோ! அவ்வடிவில் வடிவமைத்து, ஈரம் உலர்ந்தவுடன் குறிப்பிட்ட வெப்பநிலையில் சூளையில் சூடாக்கி மண்பாண்டங்கள் உருவாக்கப்படுகின்றன.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கவிதைப் பேழை

இயல் எட்டு

யசோதர காவியம்

நுழையும் முன்:

- படித்து இன்புற மட்டுமின்றி வாழ்வியல் நெறிகளை அறிய உதவுவதும் இலக்கியங்களே.
- திருக்குறள் தொடங்கி அறம் சார்ந்த தனித்துவ இலக்கியங்கள் பல உண்டு.
- அவ்விலக்கியங்கள் காட்டும் வாழ்க்கைப் பாதையில் பயணித்தால் வாழ்வை வளமாக்கலாம்.

நூல்குறிப்பு (நூல் வெளி)

- நீலகேசி
- சூளாமணி
- யசோதர காவியம்
- உதயண குமாரகாவியம்
- நாககுமார காவியம்

இவை ஐந்தும் ஐஞ்சிறு காப்பியங்கள் எனப்படும். ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்றே யசோதர காவியம் ஆகும்.

வடமொழியில் 'புட்பதந்தர்' எழுதிய 'யசோதர சரிதம்' என்னும் நூலைத் தழுவி யசோதர காவியம் எழுந்தது.

இந்நூலின் கண்

"உயிர்க்கொலை தீது
சிற்றின்பத்தின் சிறுமை
பேரின்பத்தின் பெருமை"

என்னும் கருத்துக்கள் யசோதர காவியத்தில் வலியுறுத்தப்படுகின்றன. யசோதர காவியத்தில் பின்னோக்கு உத்தி கையாளப்பட்டுள்ளது.

- இந்நூலின் ஆசிரியர் பெயரை அறிய முடியவில்லை.
- இது சமண முனிவர் ஒருவரால் இயற்றப்பட்டது என்பர்.
- யசோதர காவியம் 'யசோதரன்' என்னும் அவந்தி நாட்டு மன்னனின் வரலாற்றைக் கூறுகிறது.
- இந்நூல் ஐந்து சருக்கங்களைக் கொண்டது.
- இந்நூலில் 320 பாடல்கள் உள்ளன.

பாடலின் பொருள்:

காக்க வேண்டிய நன்னெறிகள்

- நாம் ஒரு செயலைச் செய்வதென்றால் அச்செயல் பயன்தரத்தக்க நற்செயலாக இருத்தல் வேண்டும்.
- நம்மிடம் உள்ள தீய பண்புகளை நீக்கிட வேண்டுமாயின் முதலில் சினத்தை நீக்க வேண்டும்.
- ஆராய வேண்டுமானால் மெய்யறிவு நூல்களை ஆராய வேண்டும்.
- இடைவிடாது போற்றிக் காக்க வேண்டுமானால், தாம் கொண்ட நன்னெறியினைக் காக்க வேண்டும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

இலக்கணக் குறிப்பு:

ஆக்குக, போக்குக, நோக்குக, காக்க – வியங்கோள் வினைமுற்றுகள்

பகுபத உறுப்பிலக்கணம்:

போக்குக – போக்கு + க

போக்கு – பகுதி

க – வியங்கோள் வினைமுற்று விகுதி

பாடநூல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. "ஞானம்" என்பதன் பொருள் யாது?

அ) தானம் ஆ) தெளிவு இ) சினம் ஈ) அறிவு

விடை: ஈ) அறிவு

குறுவினா

1. யசோதர காவியத்தின் பாட்டுடைத் தலைவன் யார்?

யசோதர காவியத்தின் பாட்டுடைத் தலைவன், அவந்தி நாட்டு மன்னனாகிய "யசோதரன்" ஆவார்.

சிறுவினா

1. நாம் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்க்கை நெறிகளாக யசோதர காவியம் குறிப்பிடுவன யாவை?

- நாம் செய்கின்ற செயல்கள் பிறருக்குப் பயன்தரத்தக்கச் செயலாக இருத்தல் வேண்டும்.
- "ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக".
  நம்மிடம் உள்ள தீய நெறிகளை, பண்புகளை நீக்க விரும்பினால் முதலில் சினத்தை நீக்க வேண்டும்.
- "போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக".
  மெய்யறிவு நூல்களை ஆராய்ந்து ஞானம் பெற வேண்டும்.
- "நோக்குவது ஏதெனில் ஞானம் நோக்குக".
  நாம் மேற்கொண்ட நற்செயல்களாகிய விரதத்தைக் காக்க வேண்டும்.
- "காக்குவது ஏதெனில் விரதம்"
  என்று நாம் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிகளை யசோதர காவியம் கூறுகிறது.

2. யசோதர காவியம் வெளிப்படுத்தும் வாழ்க்கை நெறிகளைத் திருக்குறளுடன் ஒப்பிடுக.

அறத்தை ஆக்குக:

பின்னாளில் செய்யலாம் என்று எண்ணாது அறஞ் செய்க என்று (36வது) குறள் கூறுகிறது.

"அன்றறிவாம் எண்ணாது அறஞ்செய்து மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை

வெகுளி போக்குக:

யாரிடத்தும் கோபம் கொள்ளாமல் சினத்தை மறந்துவிட வேண்டும் என்று (குறள் 303) கூறுகிறது.

"மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும்".

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

ஞானம் நோக்குக:

குற்றமில்லாத அறிவைக் கண்டவர்க்கு அறியாமை நீங்கி இன்பம் கிட்டும் என்று (குறள் 352) கூறுகிறது.

"இருள் நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு".

விரதம் காக்க:

விரதம் என்றால் நன்னெறி. தீய செயல்கள் தீயைப் போல் தீமைதரும், எனவே கொடிதான தீமையை விட்டு விலகி நன்னெறி பற்றுக என்று (202) குறள் கூறுகிறது.

"தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்".

இவையே யசோதர காவியமும் திருக்குறளும் குறிப்பிடும் வாழ்க்கை நெறிகள் ஆகும்.

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. யசோதர காவியத்தின் பாட்டுடைத் தலைவன் யார்?

அ) உதயகுமாரன் ஆ) யசோதரன் இ) சீவகன் ஈ) சனகன்

விடை: ஆ) யசோதரன்

2. யசோதரன் எந்நாட்டு மன்னன்?

அ) மாளவம் ஆ) மகதம் இ) கலிங்கம் ஈ) அவந்தி

விடை: ஈ) அவந்தி

3. யசோதர காவியத்தின் சருக்கங்கள் எத்தனை?

அ) ஐந்து ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஆறு

விடை: அ) ஐந்து

4. 'ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்கு' என்று குறிப்பிடும் இலக்கியம் .....

அ) கலித்தொகை ஆ) யரோதர காவியம் இ) நன்னூல் ஈ) புறநானூறு

விடை : ஆ) யசோதர காவியம்

5. யசோதர காவியம் ..... மொழியிலிருந்து தமிழில் தழுவி எழுதப் பெற்றதாகும்.

அ) வட ஆ) கன்னட இ) சிந்தி ஈ) தெலுங்கு

விடை : அ) வட

6. யசோதர காவியம் ..... நூல்களில் ஒன்று.

அ) எட்டுத்தொகை ஆ) பத்துப்பாட்டு
இ) ஐம்பெருங்காப்பியம் ஈ) ஐஞ்சிறுகாப்பியம்

விடை: ஈ) ஐஞ்சிறுகாப்பியம்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

7, பொருத்துக.

	சொல்	பொருள்
அ)	அறம்	1) சினம்
ஆ)	வெகுளி	2) நன்நெறி
இ)	ஞானம்	3) நற்செயல்
ஈ)	விரதம்	4) அறிவு

விடை:

	சொல்	பொருள்
அ)	அறம்	1) நற்செயல்
ஆ)	வெகுளி	2) சினம்
இ)	ஞானம்	3) அறிவு
ஈ)	விரதம்	4) நன்நெறி

குறுவினா

1. யசோதர காவியம் – குறிப்பு வரைக.

- ஐஞ்சிறு காப்பிங்களுள் ஒன்று.
- இந்நூலின் ஆசிரியர் பெயரை அறிய முடியவில்லை.
- இந்நூல் 'யசோதரன்' என்னும் அவந்தி நாட்டு மன்னனின் வரலாற்றைக் கூறுகிறது.
- 5 சுருக்கங்களைக் கொண்டது.

2. ஐஞ்சிறு காப்பியங்கள் யாவை?

- நீலகேசி
- சூளாமணி
- யசோதர காவியம்
- உதயண குமார காவியம்
- நாககுமார காவியம்

கற்பவை கற்றபின்

பக்கம்: 219

1. தொடர்களை ஒப்பிட்டுக் கருத்துகளை வகுப்பறையில் கலந்துரையாடுக.

அறம் செய விரும்பு : ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக.
ஆறுவது சினம் : போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக.

ஆசிரியர் : நாம் இப்போது கற்ற ஆக்குவது ஏதெனில்... என்னும் அடிக்கு இணையான தொடர் ஏதாவது நினைவு வருகிறதா குழந்தைகளே...

கலா : ஐயா எனக்கு ஒரு தொடர் ஞாபகம் வருகிறது சொல்லட்டுமா ஐயா.

ஆசிரியர் : சொல்லு கலா...

கலா : ஔவையார் கூறிய "அறம் செய விரும்பு" ஐயா...

ஆசிரியர் : மிகவும் சரியாகச் சொன்னாய் கலா.

மாலா : அய்யா கலா கூறியதும் நீங்கள் நடத்தியதும் ஒரே கருத்தா ஐயா...

ஆசிரியர் : ஆமாம். மாலா ஔவையார் "நீ எச்செயலைச் செய்ய விரும்பினாலும் அது அறம் செய்வதாக இருத்தல் வேண்டும் என்று விரும்பு" என்கிறார்...

கலா : இரண்டாவது தொடர் ஐயா...

ஆசிரியர் : ஆறுவது சினம் – வெகுளி போக்குக. ஔவையார் மனதை சிறிது நேரம் அமைதியாக கட்டுப்படுத்தினால் தானாகவே சினம் ஆறி விடும் என்று உணர்த்துகிறார்.

யசோதர காவியம் "சினத்தை முழுவதுமாக கைவிட வேண்டும்" என்பதை வலியுறுத்தும் விதமாக "போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக" என்று கூறுகிறது.

※※⁂⁂⁂※※

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

விரிவானம்

இயல் எட்டு

மகனுக்கு எழுதிய கடிதம்

பாடநூல் வினாக்கள்

நெடுவினா

1. மொழியின் விரல் பிடித்து நடக்க பழகிக் கொண்டிருக்கும் தன் மகனுக்கு நா. முத்துக்குமார் எழுதியுள்ள கடிதச் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

முன்னுரை:

கடித செய்தி என்பது உயிர்ப்புள்ள மொழி. செய்தியை அளிப்பவருக்கும், பெறுபவருக்குமான உறவுப் பாலத்தை உறுதியாக்குகிறது. தாயுமானவனாகத் திகழ்ந்த முத்துக்குமார் அவர்கள் தம் மகனுக்கு எழுதிய கடிதத்தில் அமைந்துள்ள செய்திகளை அறிவோம்.

குழந்தைப் பருவமும் – உலக வாழ்வும்:

என் செல்லப் பூங்குட்டியே! நீ குழந்தையாய் இருந்தாய்; அழுதாய்; சிரித்தாய்; குப்புறக்கவிழ்ந்து தலைநிமிர்ந்து, சாகசம் கொண்டாடினாய். தரையெல்லாம் உனதாக்கித் தவழ்ந்தாய்; எழுந்தாய்; விழுந்தாய்; நடந்தாய்; ஓடினாய்.

இந்த உலக வாழ்வும் இப்படித்தான். சிரிக்க வேண்டும், சிணுங்க வேண்டும், குப்புறக்கவிழ்ந்தும், தலைநிமிர்ந்தும் சாகசம் செய்தல் வேண்டும். தவழ வேண்டும், எழவேண்டும், விழவேண்டும், மீண்டும் எழ வேண்டும், இந்த நாடகத்தை நீ வெவ்வேறு வடிவங்களில் உலக வாழ்வில் நடிக்கத்தான் வேண்டும்.

அனுபவமே கல்வி:

கல்வியில் தேர்ச்சி கொள்ள வேண்டும், அதே நேரம் அனுபவங்களிடம் இருந்து அதிகம் கற்றுக் கொள். தீயைப் படித்துத் தெரிந்து கொள்வதை விட தீண்டிக் காயம் பெறு. அந்த அனுபவக் கல்வியே இவ்வுலகில் வெற்றியுடன் வாழ பயன்படும் சூத்திரம் ஆகும்.

அன்பாக இரு:

எங்கும், எதிலும் எப்போதும் அன்பாய் இரு. அன்பை விட உயர்ந்தது இவ்வுலகில் வேறு எதுவுமே இல்லை. உன் பேரன்பால் இந்தப் பிரபஞ்சத்தை நனைத்துக் கொண்டே இரு. உறவுகளை விட மேன்மையானது நட்பு மட்டுமே, உன் அன்பால் நல்ல நண்பர்களைச் சேர்த்துக் கொள். உன் வாழ்வு அன்பாலும், நட்பாலும் நேராகும்.

உனக்கான காற்றை நீயே உருவாக்கு:

என் மகனே மாநகரத்தில் நீ வாழ்க்கை முழுக்கக் கோடைகாலங்களையும், வெவ்வேறு வடிவங்களில் கொடிய தேள்களையும் சந்திக்க வேண்டியிருக்கும். எப்போதும் உன் தகப்பன் உன் அருகில் அமர்ந்து விசிறி கொண்டிருக்க முடியாது. உனக்கான காற்றை நீயே உருவாக்கு.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

புத்தகங்களை நேசி:

புத்தகங்களை நேசிக்கத் தவறாதே. ஒரு புத்தகத்தைத் தொடுகிறபோது நீ ஓர் அனுபவத்தைத் தொடுவாய். உன் பாட்டனும் தகப்பனும் புத்தகங்களின் காட்டில் தொலைந்தவர்கள் உன் உதிரத்தில் காகித நதி ஓடிக்கொண்டே இருக்கட்டும்.

முடிவுரை:

இக்கருத்துக்கள் அனைத்தும் முத்துக்குமாரின் மகனுக்கு மட்டுமல்ல. இதனைப் படிக்கின்ற ஒவ்வொரு மாணவனுக்கும், ஒவ்வொரு குழந்தைக்கும், வளர்வதற்கும், உயர்வதற்கும், ஏற்ற கருத்துக்கள் ஆகும் என்பதை எவராலும் மறுக்க இயலாது.

கற்பவை கற்றபின்

பக்கம்: 222

1. **முத்துக்குமார் தன் மகனுக்கு எழுதிய கடிதத்தைப் போல நீங்கள் யாருக்குக் கடிதம் எழுத விரும்புகிறீர்களோ அப்படியொரு ஒரு கடிதம் எழுது.**

தங்கைக்கு....

அன்புள்ள தங்கைக்கு அண்ணா எழுதுவது,

நலமா? பதின்பருவத்தில் இருக்கும் உனக்கு இக்கடிதம் மூலம் சில கருத்துகளை தெரிவிக்கவும், சிலவற்றை உன்னுடன் பகிர்ந்து கொள்ளவும் விரும்புகிறேன்.

நாம் சிறு வயதில் இருக்கும் போது பல கஷ்டங்களை அனுபவித்தது உண்டு. துன்பங்களிலும், வறுமையிலும், துவண்டு போகாத நம் தந்தை கண்ணெனத் தகும் கல்வியை எனக்குத் தடையின்றி தந்தார். நீயும் இன்று படித்துக் கொண்டிருக்கிறாய். நானும் பணியில் சேர்ந்து விட்டேன். நான் உழைக்கிறேன் ஓய்வெடுங்களென்றால் நம் தந்தை அதற்கு உடன்படுவதில்லை.

நம் பெற்றோரின் உழைப்பின் பயனாகிய நல்வாழ்வை நாம் அறுவடை செய்து கொண்டிருக்கிறோம். அன்புத் தங்கையே நீ பத்திரமாகவும், பக்குவமாகவும் இருக்க வேண்டிய தருணம் இது. கல்வியிலும் நம் குடும்ப நிலையிலும் மட்டுமே உன் கவனம் இருத்தல் வேண்டும்.

கவனச் சிதறல்கள் ஏற்படா வண்ணம் நல்ல புத்தகங்களை வாசி, பெற்றோரை நேசி, இறைவனை மறவாது வழிபடு. நற்பண்புகளை வளர்த்துக்கொள். பெண்ணிற்கு எதற்குப் பணி? என்று வீட்டிலே இருந்து விடாதே. அடுத்த ஆண்டு உன் பட்டப்படிப்பு முடிந்து விடும் அல்லவா! உனக்கு பிடித்தமான பணியைச் செய்ய உன்னை ஆயத்தப்படுத்திக் கொள். பொருளாதார சுதந்திரமும், சமூக பாதுகாப்பு வழங்குவதும் கல்வியும், பணியுமே. நாளை உன் பிறந்த நாள் அல்லவா? அன்புத் தங்கையே வாழ்வில் அனைத்து நலங்களும் பெற்று வளமுடன் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

அன்புடன் அண்ணன்

இரகு. இரா

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

2. வகுப்பில் நீங்கள் தேர்ந்தெடுத்த நண்பனின் சிறந்த பண்பைப் பாராட்டியும், அவர் மாற்றிக் கொள்ள வேண்டிய பண்பையும் பெயரைக் குறிப்பிடாமல் கடிதமாக எழுதிப் படித்துக் காட்டுக.

அன்புள்ள நண்பா,

உன் நற்பண்பை பாராட்டும் வகையிலும் நீ உன்னில் இருந்து நீக்க வேண்டிய, மாற்றிக் கொள்ள வேண்டிய பண்புகளைக் குறித்தும் நீ உணர்ந்து கொள்ளும்படியும், உணர்த்தும் படியும் இம்மடலை வரைந்து வாசிக்கிறேன்.

நண்பா உன்னை எண்ணி பார்க்கும் போதெல்லாம் என்னுள் மகிழ்வும், பெருமிதமும் ஊற்றெடுக்கும். ஆம் நீ அனைவருக்கும் உதவி செய்யும் நற்பண்பினைப் பெற்றிருக்கிறாய் அல்லவா! அதை நினைத்துத்தான் பெருமிதம் பொங்கும்.

பிறருக்குத் தாமாகவே ஓடிச் சென்று உதவும் பண்பு, எல்லோரிடத்திலும் இருப்பதில்லை. ஆனால் நீ இந்த பண்பை இயல்பிலே பெற்றிருப்பதால் நல்ல நண்பர்கள் உனக்குக் கிடைத்து இருப்பதோடு, பலருடைய பாராட்டையும், நன்மதிப்பையும் பெற்றுள்ளாய் பாராட்டுக்கள்.

அதேவேளையில், நீ திருத்திக் கொள்ளும் பொருட்டு உன்னிடம் உள்ள ஒரு சிறு குறையைச் சுட்டிக் காட்டுவது நல்ல நண்பனாகிய என் கடமை எனக் கருதுகின்றேன்.

மகிழ்ச்சியாக உணவருந்திக் கொண்டிருக்கும் போது சிக்கிக் கொண்டு எரிச்சல் தரும் மிளகாய் போல் உன்னிடம் முன்கோபமாகிய குணம் உள்ளது. நாம் எத்தனை நன்மைகள் செய்தாலும் நம்மிடம் உள்ள சினம் என்னும் குணம் எல்லா நற்பண்புகளையும் அழித்து விடும்.

உலகத்தாருக்கும் நாம் செய்த நன்மைகளை, நம் சினமானது மறைத்து விடும். நற்பண்பு வெளியில் தெரியாமல் நம் எதிர்மறை குணம் மட்டுமே பேசு பொருளாக மாறி விடும் எனவே அன்பு நண்பா "சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லியை" நீ மாற்றிக் கொண்டால் உன்னத மனிதனாய் பேரும், புகழும் பெறுவாய்.

வாழ்த்துகள்.

அன்புடன் ஆருயிர் நண்பன்,

.....

※※⁂⁂⁂※※

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

இயல் எட்டு

கற்கண்டு

யாப்பிலக்கணம்

பாடநூல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது – இக்குறளின் ஈற்றுச் சீரின் வாய்பாடு யாது?

அ) நாள் ஆ) மலர் இ) காசு ஈ) பிறப்பு

விடை : ஈ) பிறப்பு

குறுவினா

1. அசை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

அசை இரு வகைப்படும். அவை நேரசை, நிரையசை ஆகும்.

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. மரபுக் கவிதை இயற்றும் முறைகளைக் கூறும் இலக்கணம் எது?

அ) சொல் ஆ) பொருள் இ) யாப்பு ஈ) அணி

விடை: இ) யாப்பு

2. சீர் எத்தனை வகைப்படும்?

அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து

விடை: இ) நான்கு

3. காய்ச்சீர்களை ..... என்று அழைக்கிறோம்.

அ) கலித்தளை ஆ) இயற்சீர்கள்

இ) வெண்சீர்கள் ஈ) ஒன்றிய வஞ்சித்தளை

விடை: இ) வெண்சீர்கள்

4. தளையின் வகைகள் எத்தனை?

அ) எட்டு ஆ) ஏழு இ) ஆறு ஈ) ஐந்து

விடை: ஆ) ஏழு

5. இரண்டும், இரண்டிற்கும் மேற்பட்ட சீர்கள் தொடர்ந்து வருவது ..... ஆகும்.

அ) சீர் ஆ) அடி இ) தளை ஈ) தொடை

விடை: ஆ) அடி

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

6. அடியின் வகைகள் எத்தனை?

அ) மூன்று ஆ) நான்கு இ) ஐந்து ஈ) ஆறு

விடை: இ) ஐந்து

7. தொடை என்பதன் பொருள் யாது?

அ) எடுத்தல் ஆ) தொடுத்தல் இ) முடித்தல் ஈ) எழுதுதல்

விடை: ஆ) தொடுத்தல்

8. தொடையின் வகைகள் எத்தனை?

அ) எட்டு ஆ) பத்து இ) ஏழு ஈ) ஐந்து

விடை: அ) எட்டு

9. பொருத்திக் காட்டுக:

i)	நேர்	–	1.	பிறப்பு	அ) 3, 4, 2, 1 ஆ) 4, 3, 2, 1
ii)	நிரை	–	2.	காசு	இ) 2, 1, 4, 3 ஈ) 4, 2, 3, 1
iii)	நேர்பு	–	3.	மலர்	
iv)	நிரைபு	–	4.	நாள்	

விடை : ஆ) 4, 3, 2, 1

10. பொருத்திக் காட்டுக:

i)	மா முன் நேர்	–	1.	நிரையொன்றாசிரியத்தளை
ii)	விள முன் நிரை	–	2.	நேரொன்றாசிரியத்தளை
iii)	மா முன் நிரை	–	3.	வெண்சீர் வெண்டளை
iv)	காய் முன் நேர்	–	4.	இயற்சீர் வெண்டளை

அ) 2, 1, 4, 3 ஆ) 4, 3, 2, 1 இ) 2, 3, 1, 4 ஈ) 3, 4, 2, 1

விடை : ஆ) 2, 1, 4, 3

11. காய் முன் நிரை வருவது .....

அ) கலித்தளை ஆ) இயற்சீர் வெண்டளை

இ) வெண்சீர் வெண்டளை ஈ)ஒன்றிய வஞ்சித்தளை

விடை : அ) கலித்தளை

12. ஆறுசீர் அல்லது அதற்கு மேற்பட்ட சீர்களைக் கொண்டது .....

அ) அளவடி ஆ) நெடிலடி இ) கழிநெடிலடி ஈ) சிந்தடி

விடை : அ) கழிநெடிலடி

13. வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கொஞ்சும் –
இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள தொடைநயம் _____.

அ) எதுகை ஆ) இயைபு இ) மோனை ஈ) அந்தாதி

விடை : ஆ) இயைபு

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

14. ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல் – இவ்வடிகளில் இடம்பெற்ற தொடை நயங்கள் .....

அ) எதுகை, மேனை ஆ) அளபெடை, இரட்டை
இ) இயைபு, முரண் ஈ) அந்தாதி, செந்தொடை

விடை : அ) எதுகை, மோனை

15. திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று – இவ்வடிகளில் இடம்பெற்ற தொடை நயம் .....

அ) எதுகை ஆ) மோனை இ) இயைபு ஈ) அந்தாதி

விடை : அ) எதுகை

குறுவினா

1. யாப்பின் உறுப்புகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

- யாப்பின் உறுப்புகள் ஆறு ஆகும்.
- அவை: எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகியனவாகும்.

2. யாப்பிலக்கண அடிப்படையில் எழுத்துகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

- மூன்று வகைப்படும்
- குறில், நெடில், ஒற்று என்பனவாகும்.

3. அசை என்றால் என்ன? எத்தனை வகைப்படும்?

- எழுத்துகளால் ஆனது 'அசை' எனப்படும்.
- ஒரெழுத்தோ, இரண்டெழுத்தோ நிற்பது 'அசை' ஆகும்.
- இது நேரசை, நிரையசை என இருவகைப்படும்.

4. சீர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

- சீர்கள் நான்கு வகைப்படும்.
- அவை: ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர்.

5. ஈரசைச் சீர்களுக்குரிய வேறுபெயர்கள் யாவை?

- இயற்சீர்
- ஆசிரிய உரிச்சீர்

சிறுவினா

1. அடிகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

- அடிகள் ஐந்து வகைப்படும்.
- அவையாவன: இரண்டு சீர்களை உடையது குறளடி
- மூன்று சீர்களை உடையது சிந்தடி
- நான்கு சீர்களை உடையது அளவடி
- ஐந்து சீர்களை உடையது நெடிலடி
- ஆறும் அதற்கு மேற்பட்ட சீர்களை உடையது கழிநெடிலடி முதலியனவாகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

2. தொடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

தொடை எட்டு வகைப்படும். அவையாவன:

- மோனை
- எதுகை
- இயைபு
- முரண்
- இரட்டை
- அளபெடை
- அந்தாதி
- செந்தொடை

கற்பவை கற்றபின்

பக்கம்: 225

1. உமக்குப் பிடித்த திருக்குறளை அலகிட்டு அதன் வாய்பாடு காண்க.

குறள்

பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின்
அறம்நாணத் தக்க துடைத்து.

எண்	சீர்	அசை	வாய்பாடு
1.	பிறர்/நா/ணத்	நிரை நேர் நேர்	புளிமாங்காய்
2.	தக்/கது	நேர் நிரை	கூவிளம்
3,	தான்/நா/ணா	நேர் நேர் நேர்	தேமாங்காய்
4,	னா/யின்	நேர் நேர்	தேமா
5,	அறம்/நா/ணத்	நிரை நேர் நேர்	புளிமாங்காய்
6,	தக்/க	நேர் நேர்	தேமா
7,	துடைத்/து	நிரைபு	பிறப்பு

குறிப்பு: ★ நெடில் எழுத்து வந்தால் தனியாகவும், குறிலுடன் மெய்யெழுத்து வந்தால் தனியாகவம், இரு குறில் எழுத்துடன் மெய்யெழுத்து வந்தால் தனியாகவும் பிரிக்க வேண்டும். அல்லது இரு குறில் எழுத்தையும் தனியாகப் பிரிக்க வேண்டும். ஆய்த எழுத்தையும் மெய்யெழுத்தாகவே கணக்கிட வேண்டும். ( ) அடைப்புக் குறியிட்ட எழுத்தை அலகிடலில் சேர்க்கக் கூடாது.

★ மெய்யெழுத்தை நீக்கி ஓர் எழுத்து மட்டும் இருந்தால் நேரசை என்றும் மெய்யெழுத்தை நீக்கி இரண்டு எழுத்து இருந்தால் நிரையசை என்றும் கணக்கிட வேண்டும்.

விடஃ - இரு எழுத்து - நிரை

கணீ - ஒரு எழுத்து - நேர்

2. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்

எண்	சீர்	அசை	வாய்பாடு
1.	ஒழுக்/கம்	நிரை நேர்	புளிமா
2.	விழுப்/பம்	நிரை நேர்	புளிமா
3,	தர/லான்	நிரை நேர்	புளிமா

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

4,	ஒழுக்/கம்	நிரை நேர்	புளிமா
5,	உயி/ரினும்	நிரை நிரை	கருவிளம்
6,	ஓம்/பப்	நேர் நேர்	தேமா
7,	படும்	நிரை	மலர்

இக்குறட்பாவானது மலர் என்ற வாய்பாட்டில் முடிந்துள்ளது.

2. பின்வரும் பாடல்களில் பயின்றுவரும் தொடைநயங்களை எடுத்து எழுதுக.

கொண்டல்கோபுரம் அண்டையில்கூடும்
கொடிகள் வானம் படிதர மூடும்
கண்ட பேரண்டம் தண்டலை நாடும்
கனக மூன்றில் அனம் விளையாடும்.

விண்டபூமது வண்டலிட்டு ஓடும்
வெயில் வெய்யோன் பொன்னெயில் வழி தேடும்
அண்டர் நாயகர் செண்டலங் காரர்
அழகர் முக்கூடல் ஊர் எங்கள் ஊரே

இப்பாடலில் பயின்று வரும் தொடை நயங்கள்

- மோனை நயம்
- எதுகை நயம்
- இயைபுத் தொடை நயம்

செய்யுளில் அடியிலோ சீரிலோ முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனை எனப்படும்.

சான்று:

- கொண்டல் – கொடிகள்
- கண்ட – கனக
- அண்டர் – அழகர்

செய்யுளில் அடியிலோ சீரிலோ இரண்டாவது எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது எதுகையாகும்.

சான்று:

- கொண்டல் – கண்ட
- விண்ட – அண்டர்

செய்யுளின் அடிகள் தோறும் இறுதி எழுத்தோ, சொல்லோ இயைந்து வரத் தொடுப்பது இயைபுத் தொடை ஆகும்.

சான்று:

- அண்டையில் கூடும்
- படி தர மூடும்
- தண்டலை நாடும்
- அனம் விளை யாடும்

இவ்வாறு இயைந்து வருவதால் இயைபு ஆகும். இப்பாடலில் மோனை, எதுகை, இயைபுத் தொடை ஆகிய நயங்கள் உள்ளன.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

வினாக்கள்:

1. உங்கள் வீட்டில் உள்ளவர்களின் பெயர்களை நேர்நிரை அசைகளாகப் பிரித்துப் பார்க்க.

- மேகலா – மே/கலா – நேர் நிரை
- குமரன் – கும/ரன் – நிரை நேர்
- பிரியா – பிரி/யா – நிரை நேர்
- அமிழ்தினி – அமிழ்/தினி – நிரை நிரை

2. மூவசைச் சீரில் அமைந்த பெயர்கள் நான்கைக் குறிப்பிடுக.

- இரா / சரா / சன்
- மதி / மா / றன்
- மணி / மா / றன்
- மணி / கண் / டன்

3. "தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும்"
இக்குறட்பாவில் பயின்று வரும் மோனை, எதுகைகளைக் கண்டறிக.

- தம் பொருள் – தம் தம்} முதல் எழுத்து ஒன்றி மோனை பயின்று வருகிறது. **(அடிமோனை)**
- தம் பொருள் – தம் தம் இரண்டாவது எழுத்து ஒன்றி எதுகையும் பயின்று வருகிறது.**(அடிஎதுகை)**

4. தளையின் வகைகளை எழுதுக.

தளையின் வகைகள் ஏழு ஆகும். அவை:

- நேரொன்றாசிரியத் தளை
- நிரையொன்றாசிரியத் தளை
- இயற்சீர் வெண்டளை
- வெண்சீர் வெண்டளை
- கலித்தளை
- ஒன்றிய வஞ்சித்தளை
- ஒன்றாத வஞ்சித்தளை ஆகியவையாகும்.

மொழியை ஆள்வோம் பக்கம்: 227

மொழி பெயர்க்க.

Once Buddha and his disciples were thirsty. They reached a lake. But it was muddy because somebody just finished washing their clothes. Buddha asked his disciples to take a little rest there by the tree. After half an hour the disciples noticed that the water was very clear. Buddha said to them," You let the water and the mud be settled down on its own. Your mind is also like that. When it is disturbed, just let it be. Give a little time. It will settle down on its own. We can judge and take best decisions of our life when we stay calm."

ஒருமுறை புத்தரும், அவருடைய சீடர்களும் மிகுந்த தாகத்துடன் இருந்தனர். ஓர் ஏரியை அடைந்தனர். யாரோ ஒருவர் தன் துணிகளைத் துவைத்திருந்தபடியால், ஏரி நீர் கலங்கி, சேருடன் காணப்பட்டது. புத்தர் தன் சீடர்களை நோக்கி சற்று நேரம் இம்மரத்தடியில் அமைதியாக இளைப்பாறுவோம் என்றார். அரைமணி நேரம் கழித்து அவருடைய சீடர்கள் ஏரியை உற்றுப் பார்த்தனர். அழுக்குகள் ஒதுங்கிவிட்டன. சேறும் நீரின் அடி ஆழத்திற்குச் சென்று படிந்து விட்டது. தண்ணீர் மிகவும் தெளிவாகி விட்டது. உங்கள் மனமும் இதைப்போலத்தான், ஏரியை அழுக்கும், சேறும் கலக்கியது போல உங்கள் மனத்தைக் கலக்கும் செயல்கள் நடைபெற்றால் சற்று நேரம் அமைதியாக இருங்கள். அவை கரைந்து, மறைந்து, அழிந்து போய்விடும். அதுவரை அமைதியாக இருந்துவிட்டு பின் உங்கள் முடிவுகளைச் சிந்தித்து எடுங்கள். அதுவே சிறந்த நேர்மையான வாழ்வுக்கு வழியாகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

சொற்றொடர்களை அடைப்புக்குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.

1. **மறுநாள் வீட்டுக்கு வருவதாக முரளி கூறினார் (நேர் கூற்றாக மாற்றுக).**

   "நான் நாளை வீட்டுக்கு வருவேன்" என்று முரளி கூறினார்.

2. **தென்னாட்டுப் பெர்னாட்ஷா என்று அறிஞர் அண்ணாவை புகழ்கிறோம் என்று ஆசிரியர் கூறினார் (அயற் கூற்றாக மாற்றுக).**

   தென்னாட்டு பெர்னாட்ஷா என்று அண்ணா புகழப்படுவதாக ஆசிரியர் கூறினார்.

3. **மார்னிங் நாஷ்டாவுக்கு இரண்டு தோசைகள் ஹோட்டலில் சாப்பிட்டான் (பிறமொழிச் சொற்களைத் தமிழாக்குக)**

   காலை சிற்றுண்டிக்கு இரண்டு தோசைகளை உணவு விடுதியில் (உணவகத்தில்) உண்டான் (சாப்பிட்டான்).

4. **அலறும் மயிலும், கூவும் ஆந்தையும், அகவும் சேவலும் போன்ற இயற்கையின் ஒலிகளை நாம் நேசிக்க வேண்டும் (ஒலி மரபுப் பிழைகளை திருத்துக).**

   அகவும் மயிலும், அலறும் ஆந்தையும், கூவும் சேவலும், போன்ற இயற்கையின் ஒலிகளை நாம் நேசிக்க வேண்டும்.

5. **கோழிக் குட்டிகளைப் பிடிக்க பூனைக் குஞ்சுகள் ஓடின (பெயர் மரபுப் பிழைகளைத் திருத்துக).**

   கோழிக்குஞ்சுகளைப் பிடிக்க பூனைக்குட்டிகள் ஓடின.

அஞ்சல் அட்டையில் எழுதுக.

வார இதழ் ஒன்றில் படித்த கவிதையைப் பாராட்டி அந்த ஆசிரியருக்கு அஞ்சல் அட்டையில் கடிதம் எழுதுக.

ஐயா 6.10.2018 ஆம் நாளன்று தங்கள் தென்றல் இதழில் தன்னம்பிக்கையைப் பற்றிய கவிதை `எட்டிவிடும்` என்னும் தலைப்பில்` இடம்பெற்று இருந்தது. அக்கவிதை படிப்பவர்க்கு ஊக்கத்தையும், புது முயற்சியையும் ஊட்டுவதாக அமைந்திருந்தது. வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணத்தை இளைய சமுதாயத்தின் இதயத்தில் விதைப்பதாய் அமைந்திருந்தது. இதுபோன்ற கவிதைகளுக்கு முன்னுரிமை தருக.

நன்றி!



நயம் பாராட்டுதல்.

திங்கள்முடி சூடுமலை
தென்றல் விளை யாடுமலை
தங்குமுகில் சூழுமலை
தமிழ்முனிவன் வாழுமலை
அங்கயற்கண் அம்மை திரு
அருள்சுரந்து பொழிவதெனப்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பொங்கருவி தூங்குமலை
பொதியமலை என்மலையே -குமரகுருபரர்

முன்னுரை:

தமிழ் இலக்கியங்கள் உள்ளத்து இன்பத்தைப் பெருக்கும் ஆற்றல் படைத்தன அவை இயற்கையைப் போற்றுவதில் காலத்தைக் கடந்து முன் நிற்கின்றன. அந்த வகையில் பொதிய மலையைப் போற்றும் வண்ணம் அமைந்துள்ள குமரகுருபரரின் பாடலில் காணப்படும் இலக்கிய நயங்களை காண்போம்.

திரண்ட கருத்து:

நிலவைத் தன் மணிமுடியாகச் சூடிய மலை. எப்போதும் தென்றல் தவழ்ந்து விளையாடும் மலை. அகலாது தன்னகத்தே தங்குகின்ற முகில் கூட்டங்கள் சூழ்ந்த மலை. தமிழ் முனிவன் அகத்தியன் வாழ்ந்த மலை.

அங்கயற்கண்ணியாம் மீனாட்சி கண் திறந்து அருள் சுரந்து பொழிவதைப் போல் பொங்குகின்ற அருவிகள் விழுகின்ற மலை. பொதிய மலையாம் என் மலையே.

மையக்கருத்து:

பொதிகை மலையின் இயற்கைப் பேரழகு, தமிழ் வளர்த்த மலை, அருவி சூழ்ந்த மலை மேகங்கள் தவழும் மலை எனப் பொதிகையின் அழகைக் குமரகுருபரர் மையமாக வைத்து இப்பாடலை இயற்றியுள்ளார்.

மோனை நயம்:

செய்யுளில் அடியிலோ, சீரிலோ முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனை நயம் எனப்படும்.

சான்று:

தூங்கு முகில் – தமிழ் முனி
அங்கயற்கண்ணி – அருள் சுரந்து

எதுகை நயம்:

செய்யுளில் அடியிலோ சீரிலோ இரண்டாவது எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது எதுகை ஆகும்.

சான்று:

திங்கள் – தங்கு
அங்கயற் – பொங்கருவி

அணி நயம்:

பொதிகை மலையில் விழும் அருவி "அங்கயற்கண் அம்மை திரு அருள் சுரந்து பொழிவதென" என்னும் அடியில் உவமையணி அமைந்துள்ளது.

சந்தநயம்:

அறுசீர்ச் கழி நெடிலடி ஆசிரிய விருத்தம் பெற்று செப்பலோசையுடன் இனிமையாக அமைந்துள்ளது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

இயைபுத் தொடை:

செய்யுளில் அடிதோறும் இறுதி எழுத்தோ, சொல்லோ இயைந்து வரத் தொடுப்பது இயைபுத் தொடை.

சான்று:

சூடு **மலை**, யாடு மலை, வாழு **மலை**

முடிவுரை:

குமரகுருபரரின் இப்பாடல் இன்பம் தரும் இன்சுவையுடன் அமைந்து பொதிகை மலையின் புகழைப் பறைசாற்றுகிறது. இது போன்ற பாடல்களைப் படித்து இன்புறுவாமாக.

மொழியோடு விளையாடு

பக்கம்: 229

1. பொருத்தமான வாய்பாடுகளை வட்டமிடுக.

பகலவன்	–	காசு/ **கருவிளம்** /கூவிளங்கனி
மலர்ச்சி	–	கூவிளம்/ **புளிமா** /கருவிளம்
தாவோவியம்	–	**தேமாங்கனி** /தேமா/பிறப்பு
வெற்றிடம்	–	நாள்/ **கூவிளம்** /புளிமா
பூங்குட்டி	–	கருவிளங்கனி/மலர்/ **தேமாங்காய்**

2. அகராதியில் காண்க.

வயம்	–	வலிமை, வெற்றி, வேட்கை, பறவை, வசம், குதிரை, ஆடு, முயல்.
ஓதம்	–	ஈரம், வெள்ளம், கடல் அலை, ஒலி, பெருமை, வாதநோய்.
பொலிதல்	–	செழித்தல், பெருகுதல், மிகுதல், நீடுவாழ்தல், நிகழ்தல்.
துலக்கம்	–	விளக்கம், ஒளி, பளபளப்பு, மெருகு, தெளிவு.
நடலை	–	வஞ்சனை, துன்பம், பொய்மை, பாசாங்கு, அசைவு.

3. வினைத்தொகையை பொருத்தி எழுதுக.

(வளர்தமிழ், விளைநிலம், குளிர்காற்று, விரிவானம், உயர்மதில், நீள்வீதி, கரை விளக்கு, மூடுபனி, வளர்பிறை, தளிர் பூ)

- **வளர்பிறை** நிலவுடன் **விரிவானம்** அழகாகக் காட்சியளிக்கிறது.
- **தளிர்பூங்**கொடிகளும், **விளைநிலங்**களும், மனதைக் கொள்ளையடிக்கின்றன.
- **நீள்வீதி**கள் அனைத்தும் **மூடுபனி**யில் மூழ்கிக் கிடக்கின்றன.
- மெல்ல வீசும் **குளிர்காற்றும் வளர்தமிழ்** புகழ்பாடுகிறது.
- தொலைவில் **கலங்கரை** விளக்கின் ஒளி **உயர்மதில்** சுவரை ஒளிரச் செய்கிறது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பொருத்துக:

நேர்/நேர்/நிரை	–	கருவிளங்காய்
நிரை/நிரை/நேர்	–	கூவிளம்
நேர்/நிரை	–	தேமாங்காய்
நிரை/நிரை	–	தேமாங்கனி
நேர்/நேர்/நேர்	–	கருவிளம்

விடை

நேர்/நேர்/நிரை	–	தேமாங்கனி
நிரை/நிரை/நேர்	–	கருவிளங்காய்
நேர்/நிரை	–	கூவிளம்
நிரை/நிரை	–	கருவிளம்
நேர்/நேர்/நேர்	–	தேமாங்காய்

4. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

உலகையே புரட்டிப் போடும்
உன்னத வலிமை
எழுதுகோலுக்கு உண்டு

செங்கோலின் வலிமையால்
உயர்ந்ததை விட
எழுதுகோலின் வலிமையால்

உயர்ந்த நாடுகள் பல உண்டு
எழுத்தையும் போற்றுவோம்...
எழுதுகோலையும் போற்றுவோம்...



கலைச்சொல் அறிவோம்

எழுத்துச் சீர்திருத்தம் – (Reforming the letters)
பெரியாரால் தமிழ்மொழியில் ஏற்படுத்தப்பட்டது.

எழுத்துரு – (font)
அச்சில் எழுத்துக்களின் வடிவமைப்பு அளவைக் குறிப்பது.

மெய்யியல் – (philosophy)
வாழ்வியல் உண்மைகளைத் தத்துவ இலக்கியமாக, கருத்துகளாக கூறுவது.

அசை – (syllable)
சொல்லைப் பிரித்தல் (சீர் பிரித்தல்).

இயைபுத்தொடை – (Rhyme)
செய்யுளில் அடிதோறும் இறுதிச் சொல் அல்லது எழுத்து ஒன்றி வருவது.

நிற்க அதற்குத்தக...

ஒரு நல்ல தோழியாக/தோழராக நண்பர்களுக்குச் செய்யவேண்டியது.

அ) எழுதுபொருள்களை நண்பர்களுக்குக் கொடுத்து உதவுவது.
ஆ) விடுப்பு எடுத்த நண்பர்களுக்கு ஏடுகள் கொடுத்து உதவுதல், வகுப்பில் நடந்தவற்றைப் பகிர்தல்.
இ) நல்ல பண்புகளைப் பாராட்டி ஊக்குவித்தல்.
ஈ) குறைகளை நயமுடன், புண்படா வகையில் சுட்டிக்காட்டுதல்.
உ) இடர்வரும் வேளையில் இனிமையான, இதமான சொற்களால் தேற்றுதல்.

※※⁂⁂⁂※※

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

உரைநடை உலகம்

இயல் ஒன்பது

விரிவாகும் ஆளுமை

பாடநூல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. இமயத்துக் கோடு உயர்ந்தன்ன – இவ்வடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் யாது?

அ) கொம்பு ஆ) மலையுச்சி இ) சங்கு ஈ) மேடு

விடை: ஆ) மலையுச்சி

2. தமிழ்ப் புலவரைப் போலவே உரோமச் சிந்தனையாளர் கொண்ட கொள்கை .....

அ) நிலையற்ற வாழ்க்கை ஆ) பிறருக்காக வாழ்தல்

இ) இம்மை மறுமை ஈ) ஒன்றே உலகம்

விடை: ஈ) ஒன்றே உலகம்

குறுவினா

1. தமிழ்ச் சான்றோர்க்கும் உரோமையரின் சான்றோருக்கும் உள்ள வேறுபாடு யாது?

உரோம நாட்டவர் : உரோமையரின் சான்றோர் எழுதும்போது நாம் நம்மவர் என்ற செருக்குடன் உரோமரை கருதியே எழுதுகின்றனர்.

தமிழ்ச் சான்றோர் : எல்லா உலகிற்கும் எல்லா மாந்தர்க்கும் பயன்படும் வகையில் உலகமெல்லாம் தழுவுவதற்குரிய கொள்கையை தம் நூல்களில் யாத்துள்ளனர் என்பதே இரு சான்றோர்க்கும் உள்ள வேறுபாடு ஆகும்.

சிறுவினா

1. உலக இலக்கியத்தில் காண இயலாத அரிய கருத்துகளாக ஆல்பர்ட் சுவைட்சர் குறிப்பிடுவன யாவை?

ஒழுக்கவியலை நன்கறிந்து எழுதிய உலகமேதை ஆல்பர்ட் சுவைட்சர், திருக்குறளைப் பற்றிக் கூறும் போது "இத்தகைய உயர்ந்த கொள்கைகளைக் கொண்ட செய்யுள்களை உலக இலக்கியத்தில் காண்பது அரிது என்பார்."

அவர் குறிப்பிட்ட அரிய கருத்துகள்:

- மக்கள் அனைவரும் உடன் பிறந்தவர்கள்.
- பிறப்போ சாதியோ சமயமோ மக்களை உயர்த்தவோ, தாழ்த்தவோ, முடியாது. இத்தகைய கொள்கைகள் வள்ளுவர் காலத்திற்கு முன்பே தமிழ் மக்களால் போற்றப்பட்டுள்ளன என்று வியக்கிறார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

2. கோர்டன் ஆல்போர்ட் கூறும் மூன்று இலக்கணங்களைக் குறிப்பிடுக.

கோர்டன் ஆல்போர்ட் ஓர் உளநூல் வல்லுநர். அவர் கூறும் மூன்று இலக்கணங்களாவன.

- மனிதன் தன் ஈடுபாடுகளை விரிவாக வளர்ப்பவனாக இருத்தல் வேண்டும். பிறருடைய நலத்திற்கும் இன்பத்திற்கும் பாடுபடக்கூடிய வகையில் தன் ஆளுமையை விரிவடையச் செய்து செழுமைப்படுத்த வேண்டும்.
- பிறரால் எவ்வாறு கணிக்கப்படுகிறோம் என்பதை அறிந்து கொள்ளும் ஆற்றல் படைத்தவனாக இருக்க வேண்டும்.
- ஒருவன் அவனது வாழ்க்கைக்குச் சுய ஓர்மையைத் தரும் வாழ்க்கைத் தத்துவத்தைக் கண்டுபிடித்து நடத்தல் வேண்டும்.

நெடுவினா

1. தமிழ் இலக்கியங்கள் காட்டும் சான்றாண்மைக் கருத்துகளைத் தனிநாயக அடிகள் வழி நிறுவுக.

முன்னுரை:

உலக நாடுகளையும் மக்களையும் உட்படுத்தி அன்பு பாராட்டுவது நம் சான்றாண்மைத்தன்மை. இச்சான்றாண்மைப் பண்பு பண்டைத் தமிழ்ப் புலவர்களால் பாராட்டி பாடப்பட்டுள்ளது. நம் தமிழ் இலக்கியங்கள் காட்டும் சான்றாண்மைப் பண்புகளை அறியலாம்.

யாதும் ஊரே யாவரும் நம்மவரே:

கணியன் பூங்குன்றனார் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் சான்றாண்மைக் கொள்கையை இக்காலத்துக்கும் பொருந்தும் வகையில் கூறியுள்ளார்.

'யாதானும் நாடாமால் ஊராமல் என்னொருவர்' என்று திருக்குறளும் நம் காலத்திற்கும் பொருந்தி வரும் அறிவுரையைக் கூறியுள்ளது. ஊர், நாடு, கேளிர் என்னும் இச்சொற்கள் பரந்த மனப்பான்மை மனித நலக் கோட்பாடு என்னும் சான்றாண்மையை வலியுறுத்துகிறது

இலட்சியங்களைக் கடைப்பிடித்தல்:

இலட்சியங்களைக் கடைப்பிடிக்கும் சமுதாயம் உயரும். குறிக்கோள் இல்லாத சமுதாயம் வீழ்ச்சி அடையும். குறிக்கோள் இல்லாத மனிதன் வெறும் சதைப்பிண்டம் என்பதை, "பூட்கையில் லோன் யாக்கை" போல என்று புலவர் ஒருவர் புறநானூற்றில் கூறுகிறார். குறிக்கோள் வேண்டும் என்பதை வள்ளுவம் "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்று குறிப்பிடுகிறார்.

பிறர் நலவியலும் ஒற்றுமை உணர்ச்சியும்:

பிறர் நலத்துக்காகப் பணி செய்வதில் தான் ஒருவனுடைய வாழ்க்கை பண்புடைய வாழ்க்கை ஆகிறது. "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் கொள்கையைப் பின்பற்றினர் தமிழர். இச்செய்தி தமிழ்ச் சான்றோர் தன்னலம் தேடுவதில் இருந்து விடுவித்துப் பிறர் நலம் பேணுவதில் தான் சிறந்தனர் என்பதை உணர்த்துகின்றது. மக்கள் அனைவரும் தன் இனத்தவர் எல்லா உயிர்க்கும் அன்பு காட்டுதல் வேண்டும் என்ற உயரிய சான்றாண்மைப் பண்பை பெற்றிருந்ததையும் இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன.

ஒற்றுமை உணர்வு:

பாணர்களும் பாடினிகளும் தமிழ்ப் புலவர்களையும் அரசர்களையும் மக்களையும் நாட்டையும் வேறுபாடு இன்றி பாடியதால் தமிழகம் என்ற ஒற்றுமை உணர்வை உருவாக்கினர். பிறர்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

நலக்கொள்கையையும் பிறர் மீதான அன்பு பாராட்டலை ஒருவருக்கு ஒருவர் உதவுதல் ஆகிய அவர் தம் அன்பையும் ஒற்றுமை உணர்வையும் பறைசாற்றுகின்றன.

நன்மை செய்தல்:

தமிழ்ச் சான்றோர்களின் இன்றியமையாப் பண்பு, நன்மையை நன்மைக்காக செய்வதுதான் பிறர் போற்றுவார்கள் என்றோ, வேறு நலன்களைப் பெறலாம் என்றோ தமிழர் நன்மைகளைச் செய்யவில்லை என்பதற்குக் கடையெழு வள்ளல்களுள் ஒருவரான "ஆய்" சான்றாவான்.

"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆமெனும்
அறவினை வணிகன் ஆய்அலன்", என்று புறநானூறு பாராட்டுகிறது.

பிறர்க்காக நன்மை செய்து வாழ்வதே உயர்ந்த பண்பும் பண்பாடும் ஆகும் "உண்டாலம்ம இவ்வுலகம்" என்ற புறப்பாட்டு இப்பண்பையே எடுத்துக்காட்டுகிறது.

முடிவுரை:

இவ்வாறு நம் இலக்கியங்கள் நம் தமிழ்ச் சான்றோர்களின் பண்புகளையும் மக்கட் தன்மையை வளர்க்க முனைந்ததையும் உலகமெல்லாம் தழுவுவதற்கும் உரிய பண்புகளை வளர்த்தனர் என்று தனி நாயக அடிகள் தம் கட்டுரை வாயிலாக நிறுவுகிறார்.

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று பாடியவர் யார்?

அ) கபிலர் ஆ) வள்ளுவர் இ) கணியன் பூங்குன்றனார் ஈ) ஔவையார்

விடை: இ) கணியன் பூங்குன்றனார்

2. நான் மனிதன்; மனிதனைச் சார்ந்த எதுவும் எனக்குப் புறமன்று – என்ற கூற்றை கூறியவர்

அ) ஹாக்கின்ஸ் ஆ) ரஷல்லி இ) வேட்ஸ்வொர்த் ஈ) தெறென்ஸ்

விடை: ஈ) தெறென்ஸ்

3. புலவர் தெறென்ஸ் எம்மொழிப் புலவர்?

அ) ஆங்கிலம் ஆ) பிரெஞ்சு இ) இலத்தீன் ஈ) அரபு

விடை: இ) இலத்தீன்

4. முதிர்ந்த ஆளுமைக்கான இலக்கணம் கூறியவர் யார்?

அ) ஹாக்கின்ஸ் ஆ) கோர்டன் ஆல்போர்ட்

இ) தெறென்ஸ் ஈ) ஷெல்லி

விடை: ஆ) கோர்டன் ஆல்போர்ட்

5. "பூட்கையில்லோன் யாக்கை போல" இத்தொடரில் 'பூட்கை' என்பதன் பொருள் யாது?

அ) எல்லை ஆ) வாழ்க்கை இ) நட்பு ஈ) குறிக்கோள்

விடை: ஈ) குறிக்கோள்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

6. குறிக்கோள் இல்லாதவன் வெறும் சதைப் பிண்டம் என்று கூறிய புலவர் யார்?
அ) கூடலூர் கிழார் ஆ) ஆலந்தூர் கிழார்
இ) ஆலந்தூர் மோகனரங்கன் ஈ) கபிலர் விடை: ஆ) ஆலந்தூர் கிழார்

7. ஒழுக்கவியலை நன்கறிந்து எழுதிய உலகமேதை யார்?
அ) ஆல்பர்ட் சுவைட்சர் ஆ)கோர்டன் ஆல்போர்ட்
இ) தெறென்ஸ் ஈ) ஹாக்கின்ஸ் விடை: அ) ஆல்பர்ட் சுவைட்சர்

8. கங்கையையும், இமயத்தில் பெய்யும் மழையையும் உவமைகளாக எடுத்துக் கூறும் நூல் எது?
அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) கலித்தொகை ஈ) பரிபாடல்
விடை: ஆ) புறநானூறு

9. "Sapens" என்பதன் பொருள் யாது?
அ) அறிவற்றவன் ஆ) புத்தியில்லாதவன் இ) முட்டாள் ஈ) அறிவுடையோன்
விடை: ஈ) அறிவுடையோன்

10. தனிநாயக அடிகள் தொடங்கி நடத்திய இதழ் எது?
அ) தென்றல் ஆ) குயில் இ) தமிழ்ப்பண்பாடு ஈ) தமிழ்க்கலச்சாரம்
விடை: இ) தமிழ்ப்பண்பாடு

11. உலகத்தமிழாய்வு மன்றம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் உருவாகக் காரணமாக இருந்தவர் யார்?
அ) அமுதன் அடிகள் ஆ) குன்றக்குடிகள் அடிகள்
இ) தனிநாயக அடிகள் ஈ) ஞானியாரடிகள்
விடை: தனிநாயக அடிகள்

12. 'விரிவாகும் ஆளுமை' – என்னும் உரைநடைப் பகுதி தனிநாயகம் அடிகளால் எங்கு நிகழ்த்தப்பட்ட உரை?
அ) யாழ் பல்கலைக்கழகம் ஆ) சிக்காகோ
இ) கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் ஈ) தில்லி பல்கலைக்கழகம்
விடை: அ) யாழ் பல்கலைக்கழகம் (இலங்கை)

13. மார்க்ஸ் அரேலியஸ் என்பவர் _____.
அ) தத்துவஞானி ஆ) பேரரசர் இ) விஞ்ஞானி ஈ) கவிஞர்
விடை: ஆ) பேரரசர்

14. செனக்கா என்பவர் _____.
அ) தத்துவஞானி ஆ) பேரரசர் இ) விஞ்ஞானி ஈ) கவிஞர்
விடை: அ) தத்துவஞானி

15. நாம், நம்மவர் என்ற செருக்கோடு எழுதுபவர்கள் _____.
அ) உரோமர் ஆ) தமிழர் இ) கிரேக்கர் ஈ) இந்தியர்
விடை: அ) உரோமர்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

16. 'உள்ளற்க உள்ளம் சிறுகுவ' என்று கூறும் நூல் _____.

அ) நாலடியார் ஆ) திருக்குறள் இ) பழமொழி நானூறு ஈ) புறநானூறு

விடை: ஆ) திருக்குறள்

குறுவினா

1. பண்டைக்கால தரும சாத்திர நூல்கள் பிறரைக் கவனத்தில் கொள்ளாமைக்கான காரணம் யாது?

விந்திய மலைத்தொடருக்கும் இமய மலைக்கும் இடையே உள்ள நிலப்பரப்பே கருமபூமி, வீடுபேறு அடைவதற்கு அப்பூமியிலே பிறந்திருக்க வேண்டும் என்னும் கருத்தால் பண்டைக்கால தருமசாத்திர நூல்கள் பிறரைக் கவனத்தில் கொள்ளவில்லை.

2. ஸ்டாயிக் விதிகளின் நம்பிக்கை யாது?

- மக்கள் அனைவரும் உடன் பிறந்தவர்கள்.
- பிறப்போ, சாதியோ, சமயமோ அவர்களைத் தாழ்த்தவோ, உயர்த்தவோ முடியாது.

3. பிறர் நலக்கொள்கையைப் பரப்புவதற்குக் காரணமாயிருந்தவர்கள் யாவர்?

- தமிழ்நாட்டுப் பாணர்
- புலவர்

4. புலவர்கள் நீண்ட வாழ்க்கைக்கும் பன்மைக்கும் உவமையாகக் கூறும் இடங்கள் யாவை?

குமரி ஆறு, காவிரி ஆறு போன்ற மணல் நிறைந்த இடங்களை நீண்ட வாழ்க்கைக்கும் பன்மைக்கும் உவமையாகப் புலவர்கள் கூறுகிறார்கள்,

5. திருக்குறளில் பூட்கைமகன் அல்லது குறிக்கோள் மாந்தனின் இயல்புகளாகக் கூறப்படுவன யாவை?

- பிறர்பால் அன்புடைமை எனும் கருத்து மற்றும்
- இல்லற வாழ்க்கையின் நோக்கம் ஈகை, விருந்தோம்பல் போன்ற பண்புகளில் ஆளுமையை வளர்த்தல் ஆகும்.

6. செனக்கா என்னும் தத்துவ ஞானியின் கருத்தினை எடுத்தியம்புக.

- எல்லாருடைய நாடுகளும் நமக்குத் தாய் நாடு
- நம் நாடு எல்லா மக்களுக்கும் தாய்நாடு என்று கருதுவதே செனக்கா என்னும் தத்துவ ஞானியின் கருத்தாகும்.

7. தான் உலகிற்கு உரியவன் என்பதை மார்க்ஸ் அரேலியஸ் எங்ஙனம் கூறுகிறார்?

- நான் பகுத்தறிவும் கூட்டுறவும் உடையவன்.
- நான் அன்டோநீனஸ் ஆதலால் உரோமுக்கு உரியவன்.
- நான் மனிதன் என்பதால் உலகிற்கு உரியவன் என்று மார்க்ஸ் அரேலியஸ் கூறியுள்ளார்.

8. குறிக்கோளை அடைவதற்கு திருவள்ளுவர் கூறும் இரண்டு அறிவுரைகளை எழுதுக.

- உள்ளற்க உள்ளம் சிறுகுவ (798).
- உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் (596).

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

சிறுவினா

1. சீன நாட்டின் தத்துவ ஞானிகளைக் குறிப்பிடு.

- சீனநாட்டில் கி.மு. 604ம் ஆண்டில் பிறந்த லாவோட்சும்
- கி.மு. 551–479 காலத்தில் வாழ்ந்த கன்பூசியசும் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

2. முதிர்ந்த ஆளுமைக்குரிய மூன்று இலக்கணங்கள் யாவை?

- தன் ஈடுபாடுகளை விரிவாக வளர்ப்பவனாக இருத்தல் வேண்டும்.
- பிறருடைய நலத்திற்கும், இன்பத்திற்கும் பாடுபடக் கூடிய வகையில் ஆளுமையில் விரிவு பெற்றிருக்க வேண்டும்.
- தன் வாழ்க்கைக்குச் சுய ஓர்மையைத் தரும் வாழ்க்கைத் தத்துவத்தைக் கடைப்பிடித்து நடத்தல் வேண்டும்.

3. திருக்குறளைப் பற்றி ஆல்பர்ட் சுவைட்சர் கூறுவது யாது?

"உயர்ந்த கொள்கைகளைக் கொண்ட செய்யுட்களை உலக இலக்கியத்திலே காண்பது அரிது" என்று கூறுகிறார்.

4. 'பண்புடைமைக்குப்' பரிப்பொருமாள் கூறும் இலக்கணம் யாது?

பண்புடைமையாவது: யாவர் மாட்டும் அவரோடு, அன்பினராய்க் கலந்து ஒழுகுதலும், அவரவர் வருத்தத்திற்குப் பரிதலும், பகுத்து உண்டலும் பழி நாணலும் முதலான நற்குணங்களை உடைமையே பண்புடைமை ஆகும் என்று கூறுகிறார்.

5. திருக்குறளுக்கும், ஸ்டாயிக்வாதிகளுக்கும் உள்ள பொதுவான தன்மை யாது?

மக்கள் அனைவரையும் ஒரே குலத்தவர் என்று கருதுவதோடு, உயிர்கள் அனைத்தையும், மக்களோடு சேர்த்து ஒரே குலத்தவை என்று, கருதும் பண்பு திருக்குறளுக்கும், ஸ்டாயிக்வாதிகளுக்கும் உள்ள பொதுவான தன்மையாகும்.

கற்பவை கற்றபின்

பக்கம்: 236

1. உங்களுக்குப் பிடித்த தமிழ் ஆளுமைகள் குறித்துக் கலந்துரையாடிக் குறிப்புகளை எழுதுக.

- பூமிப்பந்து எங்கும் புகழ் பெற்றுத்திகழும் தமிழ் ஆளுமை காமராசர் ஆவார்.
- ஆளுமை என்பது என்னவென்றால் ஒருவரைத் தனித்துவமானவராக ஆக்கும் எண்ணங்கள், உணர்வுகள், நடத்தைகள், ஆகியவை உள்ளிருந்து உருவாகி வாழ்க்கைக்காலம் முழுவதும் அவை சீராக அமைவதே ஆளுமை ஆகும்.
- இவ் உரைநடையில் கற்றது போல் பிறர்நலம் பேணுதல், தியாகமும் நேர்மையும் ஆளுமை என்றால் காமராசர் சிறந்த ஆளுமை பண்பு உடையவரே.
- தனது கஷ்டங்களைப் பொருட்படுத்தாது, சதாகாலமும் நாட்டின் நலனில் ஈடுபட்ட உள்ளத்தைப் பெற்றவர். தர்ம சிந்தனையும், நீதியும் உடையவர்.
- மக்களுக்குத் தொண்டு செய்ய நீண்டகாலம் வாழவேண்டும் என்று வாழ்த்தப்பட்டவர்.
- காமராசர் மக்களின் பிரச்சனைகளைப் புரிந்து கொண்டு தீர்ப்பதில் வல்லவர், நாட்டம் உடையவர் என்று இந்தியாவிலேயே பெருமையாகப் பேசப்பட்டவர்.
- மூவேந்தர் ஆட்சிக்காலத்தில் கூட நிகழாத அற்புதத்தைத் தமிழகத்தில் நடத்தியவர் என்று பெரியாரே புகழ்ந்துள்ளார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

- கல்விப் புரட்சியும், சமூக நீதிக்கான புரட்சியும் நடத்திக் காட்டியவர்.
- இவரது பொதுவாழ்க்கை நேர்மை, எளிமை, தூய்மை என்னும் தாரக மந்திரத்தை அடிப்படையாகக் கொண்டது. கறைபடியாத கரங்களை உடையவராகத் திகழ்ந்தார்.
- தோழர்களே நம் நாடு உருப்பட வேண்டுமானால் குறைந்தது இன்னும் பத்து ஆண்டுகளுக்காவது காமராசரைப் படித்துக் கொள்ளுங்கள்; விட்டுவிடாதீர்கள். அவரது ஆட்சி மூலம் சுகமடையுங்கள். "காமராசரைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறினால் தமிழர்களுக்கு வாழ்வளிக்க வேறு ஆளு சிக்காது" என்று 82 வயதான தந்தை பெரியாரால் பாராட்டபட்டார். எனில் காமராசரை விட சிறந்த ஆளுமை உண்டோ!

2. உலகத் தமிழ் மாநாட்டு மலர், பொங்கல் மலர், தீபாவளி மலர், போன்றவற்றில் வெளிவந்துள்ள உலகப் பொதுவியல் சிந்தனைகள் குறித்து 5 மணித்துளிகள் பேசுக.

அனைவருக்கும் வணக்கம்.

பொங்கல் மலர் ஒன்றில் புதிய சிந்தனைகள் நிறைந்த கருத்தடங்கிய கட்டுரைகள் இடம் பெற்றிருந்தன.

இளமை நிலையற்றது, வாழ்வு நிலையற்றது. இளமை என்பது அழகு இல்லை அது ஒரு பருவம், அப்பருவத்தில் நன்மை செய்பவர்களாய் நாம் வாழவேண்டும் என்பதை இக்கட்டுரை வலியுறுத்தியது.

"தீதும் நன்றும் பிறர் தர வாரா
"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

என்று உலகுக்கு உணர்த்தியவன் தமிழன். பண்டைய தமிழன் சிறந்த உலகப்பொதுமை சிந்தனை உடையவனாக இருந்தான்.

நரையும் மூப்பும் வரும் என்பதை முன்னரே உணர்ந்து காமம், வெகுளி, மயக்கம் என்று கிடைக்காமல் நன்மை செய்யுங்கள் நன்மையே உங்களை நன்னெறிக்கு இட்டுச்செல்லும். அனைத்து உயிர்களையும் தம் உயிர் போல் எண்ணுங்கள்.

"நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்" நாகரிகம் எனப்படா.

அனைத்து உயிர்களிடத்தும் உயிர்நேயம் உடையவனே நாகரிகம் உடையவன்.

குளிர்ச்சியான சோலையில் காய்த்திருக்கும் காய்கள் கனிந்தவுடன் உதிர்ந்து விடுவது போல், வாழ்வும் உதிர்ந்துவிடும் தன்மையது. எனவே வாழும்போதே, "மற்று அறிவோம் நல்வினை" என்பதை உணர்வோமாக.

அறிவுடையோர் இவ்வுண்மையை உணர்ந்து கொள்க! இந்த உண்மையை உணராதவரை அறிவில்லாதவர் என்று திருமூலர் குறிப்பிடுகிறார்.

"தோறார் விழியிலா மாந்தர்" என்கிறார்.

இளமை கழிந்து போகுமுன் அருமையான அறச்செயல்களைச் செய்து விட வேண்டும். முதுமையில் எண்ணினாலும், அருஞ்செயலை செய்வதற்குரிய ஆற்றல் இல்லாது போய்விடும், எண்ணும் உலகளாவிய பொதுவியல் சிந்தனையைக் கூறும் இக்கட்டுரை, என் மனதை மாற்றியது. இச்சொற்பொழிவைக் கேட்ட நீவிரும் அறம் செய்ய முயல்க.

நன்றி வணக்கம்!

※※⁂⁂⁂※※

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கவிதைப் பேழை

இயல் ஒன்பது

அக்கறை

நுழையும் முன்:

- பாரதியின் வசனகவிதைகளின் தொடர்ச்சியாக வந்ததே புதுக்கவிதை.
- புதுக்கவிதைகள் மனிதநேயத்தை வலியுறுத்துவதாக இருக்கின்றன.
- பரபரப்பான இந்த நூற்றாண்டுகளின் வாழ்வின் நெருக்கடியில் மனிதம் சிக்கி விடக்கூடாது என்பதைப் புதுக்கவிதைகளின் வாயிலாகக் கவிஞர் பலர் பல பரிமாணங்களில் வெளிப்படுத்தியுள்ளனர். கல்யாண்ஜி கவிதைகளிலும் மனிதம் பரவலாக வலியுறுத்தப்படுகிறது.

ஆசிரியர் குறிப்பு:

- கல்யாண்ஜி என்ற புனைபெயரில் கவிதைகளும், வண்ணதாசன் என்ற புனைபெயரில் சிறுகதைகளும் எழுதும் இவரது இயற்பெயர் சி. கல்யாணசுந்தரம் என்பதாகும். இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் பிறந்தார். இவரது தந்தை இலக்கியவாதி தி. க. சிவசங்கரன் ஆவார்.
- கவிதையில் மட்டுமல்ல சிறுகதை எழுதுவதிலும் பேரும்புகழும் பெற்ற வண்ணதாசன் 1962 முதல் முதலில் 'தீபம்' இதழில் எழுதத் துவங்கியவர் இன்று வரை எழுதி வருகிறார்.

இவர் எழுதிய கவிதை நூல்கள்:

- புலரி
- முன்பின்
- ஆதி ஆகியவையாகும்.
- அந்நியமற்ற நதி
- மணல் உள்ள ஆறு

கட்டுரைத் தொகுப்பு:

அகமும் புறமும்.

கடிதத் தொகுப்பு:

சில இறகுகள் சில பறவைகள்.

சிறுகதை நூல்கள்:

- கலைக்க முடியாத ஒப்பனைகள்
- உயரப்பறத்தல்
- தோட்டத்துக்கு வெளியிலும் சில பூக்கள்
- ஒளியிலே தெரிவது
- ஒரு சிறு இசை போன்றவை குறிப்பிடத்தக்க சிறுகதைத் தொகுப்புகள் ஆகும்.

பெற்ற விருதுகள்:

- ஒரு சிறு இசை நூலுக்காக 2016 ஆம் ஆண்டு சாகித்ய அகாடமி விருது.
- 2016 ல் விஷ்ணுபுரம் விருது.
- 2016 ஆம் ஆண்டு சுஜாதா விருது ஆகியவை ஆகும்.
- 2018 ல் கனடா நாட்டின் தமிழ் இலக்கியத் தோட்டம் என்னும் அமைப்பு வழங்கிய "வாழ்நாள் சாதனையாளர் விருது".

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

நசுங்கும் மனிதநேயம்

- மிதிவண்டி கூடையிலே தக்காளிப் பழங்களை ஏற்றி வருகின்ற வியாபாரி, சமநிலை தவறி கீழே விழுகின்றார்.
- கூடையில் இருந்த தக்காளிப் பழங்கள், பழுத்தும், பழுக்காதவைகளுமாக இருக்கின்றன. முக்கால் சிவப்பில் இருக்கும் தக்காளிப் பழங்கள் சாலையில், தரையில் நடைபாதைகளில் என அனைத்துத் திசைகளிலும் உருண்டன.
- வியாபாரியும் விழுகின்றார், கூடையும் விழுந்து சரிந்து, பழங்களும் சிதறின.
- பரபரப்பான சாலையில் உதவி செய்ய எவரும் இல்லை. அவரவர் தலைக்கு மேல் வேலை இருப்பதாய், ஒரு நொடிப்பொழுதும் வீணாகி விடக்கூடாது எனக் கடந்தும் நடந்தும் செல்கின்றனர்.
- காலடியிலும், கடந்து செல்லும் வண்டிகளிலும் சிக்கிய பழங்கள் ஒவ்வொன்றாக நசுங்குகின்றன. இக்காட்சியைக் கண்டு, பழங்களை விடவும் மிகவும் நசுங்கி போனது, சக மனிதர்கள் மீது கொண்டிருக்கின்ற அக்கறையும், மனித நேயமும் என்று வருந்துகிறார் கவிஞர்.

இலக்கணக் குறிப்பு:

உருண்டது	– ஒன்றன்பால் வினைமுற்று	**போனது**	– ஒன்றன்பால் வினைமுற்று
சரிந்தது	– வினையெச்சம்	**அனைவரும்**	– முற்றும்மை
கடந்தும் நடந்தும்	– எண்ணும்மை		

பகுபத உறுப்பிலக்கணம்:

சரிந்து – சரி + த்(ந்) + த் + உ

சரி	–	பகுதி
த்(ந்)	–	சந்தி ந் ஆனது விகாரம்
த்	–	இறந்தகால இடைநிலை
உ	–	வினையெச்ச விகுதி

போனது – போ + இ(ன்) + அ + து

போ	–	பகுதி
இ(ன்)	–	இறந்தகால இடைநிலை
அ	–	சாரியை
து	–	வினையெச்ச விகுதி

பாடநூல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. வண்ணதாசனுக்குச் சாகித்திய அகாதெமி பரிசு பெற்றுத் தந்த நூல்

அ) ஒரு சிறு இசை ஆ) முன்பின் இ) அந்நியமற்ற நதி ஈ) உயரப் பறத்தல்

விடை: அ) ஒரு சிறு இசை

சிறுவினா

1. "பழங்களை விடவும் நசுங்கிப் போனது" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

இடம்:

இக்கூற்று (இவ் அடி) கல்யாண்ஜி எழுதியுள்ள "அக்கறை" என்னும் கவிதையில் இடம் பெற்றுள்ளது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

விளக்கம்:

மிதிவண்டி ஓட்டி வந்த தக்காளி வியாபாரி மிதிவண்டியில் இருந்து சாய்ந்து விழ. கூடையில் இருந்த தக்காளிப் பழங்கள் சிதறி விழுந்தன. தலைக்கு மேல் வேலை இருப்பதாய், அனைவரும் கடந்தும், நடந்தும் சென்றனர். எல்லாம் நசுங்கி வீணானது. பழங்களை விடவும் சக மனிதர்கள் மீது உள்ள நேயமும், அக்கறையும் நசுங்கிப் போனது.

2. மணல் விளையாட்டு என்னும் தலைப்பில் சிறு கவிதை படைக்க.

மணல் விளையாட்டு	
மணலில் தான் எத்தனை விளையாட்டு விளையாடுவோம்..!. மணல் வீடு கட்டி மகிழ்வுடன் உறவுகளை வளர்த்து விளையாடினோம்..!. ஈர மணலில் கோபுரம் கட்டினோம் கருப்பட்டி செய்து கவிழ்த்து வைத்துப் பேசினோம்..!. மணலுக்குள் குச்சியை ஒளித்து வைத்து கிச்சிகிச்சு தாம்பலம்	விளையாடி மணலில் தொலைந்ததை பொறுமையாய்க் கண்டெடுத்தோம்..!. மணலில் ஓடினோம் ஆடினோம் பாடினோம் இன்றோ..!. மடியிலே மடிக்கணினியோடு பல விளையாட்டை ஆடுகிறார் மண்ணில் கால் வைக்க விடுவதில்லை...பெற்றோர்....!.

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. பிளேட்டோ, அரிஸ்டாடில் ஆகியோர் எந்த நாட்டு தத்துவஞானிகள்?

அ) எகிப்து ஆ) கிரேக்கம் இ) இத்தாலி ஈ) இஸ்ரேல்

விடை: ஆ) கிரேக்கம்

2. கவிஞர் கல்யாண்ஜியின் இயற்பெயர் யாது?

அ) கல்யாணராமன் ஆ) கல்யாணசுந்தரம்

இ) கலியுகராமன் ஈ) கலியபெருமாள்

விடை: ஆ) கல்யாணசுந்தரம்

3. கல்யாண்ஜியின் புனைபெயர் யாது?

அ) வாணிதாசன் ஆ) வண்ணதாசன் இ) தமிழ்தாசன் ஈ) பிச்சை

விடை: ஆ) வண்ணதாசன்

4. கல்யாண்ஜி சாகித்ய அகாதெமி பரிசு பெற்ற ஆண்டு எது?

அ) 2014 ஆ) 2015 இ) 2016 ஈ) 2017

விடை: இ) 2016

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

5. சாகித்ய அகாதெமி விருது பெற்ற கல்யாண்ஜியின் நூல் எது?

அ) புலரி ஆ) ஆதி இ) உயரப்பறத்தல் ஈ) ஒரு சிறு இசை

விடை: ஈ) ஒரு சிறு இசை

6. பொருத்திக்காட்டுக:

அ) ஒளியிலே – கடிதத்தொகுப்பு

ஆ) சில சிறகுகள் சில பறவைகள் – கட்டுரைத் தொகுப்ப

இ) அந்நியமற்ற நதி – சிறுகதைத் தொகுப்பு

ஈ) அகமும் புறமும் – கவிதைத் தொகுப்பு

அ) 3, 1, 4, 2 ஆ) 1, 2, 4, 3 இ) 3, 4, 1, 2 ஈ) 4, 3, 2, 1

விடை : அ) 3, 1, 4, 2

குறுவினா

1. வண்ணதாசன் என்னும் புனை பெயரில் எழுதுபவர் யார்? அப்பெயரில் எவ்விலக்கியத்தில் பங்களித்து வருகிறார்?

- கல்யாண்ஜி
- கதை இலக்கியத்தில் 'வண்ணதாசன்' என்னும் பெயரில் தன் பங்களிப்பைச் செய்து வருகிறார்.

சிறுவினா

1. கல்யாண்ஜியின் கவிதை நூல்களை எழுதுக.

- புலரி
- முன்பின்
- ஆதி ஆகியவையாகும்.
- மணல் உள்ள ஆறு
- அந்நியமற்ற நதி

2. கல்யாண்ஜியின் சிறுகதை நூல்களை எழுதுக.

- கலைக்க முடியாத ஒப்பனைகள்.
- தோட்டத்துக்கு வெளியிலும் சில பூக்கள்.
- உயரப் பறத்தல்.
- ஒளியிலே தெரிவது போன்றவையாகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கற்பவை கற்றபின்

பக்கம்: 238

1. நிலா, மழை, காற்று, தண்ணீர் போன்றவை குறித்து புதுக்கவிதைகளைத் திரட்டி இலக்கிய மன்றத்தில் படித்துக் காட்டுக.

எ.கா **ஹைக்கூ**

இந்தக் காட்டில் எந்த மூங்கில் புல்லாங்குழல்? – அமுதோன்	பிம்பங்களற்ற தனிமையில் ஒன்றிலொன்று முகம் பார்த்தன சலூன் கண்ணாடிகள் – நா. முத்துக்குமார்	வெட்டுக்கிளியின் சப்தத்தில் மலையின் மௌனம் ஒரு கணம் அசைந்து திரும்புகிறது. – ஜப்பானியக் கவிஞர் பாஷோ

நிலா	மழை
கடலில் குளித்து கார்முகிலில் தலை முடித்து வான்வெளியில் நீந்தி வரும் நிலவே.. உன்னை நோக்கும் போதெல்லாம் வியப்பே.. உடல் பருத்தும் ஒளிகுன்றாய் உடல் இளைத்தும் ஒளிகுன்றாய் முழுமதியாய் ஓய்வின்றி ஒளிர்வாய் ஒளிவீசாது ஒருநாள் ஓய்வும் கொள்கிறாய்..	மரம் எனும் தேவதை கவரி வீசினாள் கருமேகங்கள் ஒன்றானது ஒன்றான மகிழ்ச்சியில் இடித்தும் மின்னியும் இசை, நடனம் நாட்டியம் பயின்றதாலே ஆனந்தக் கண்ணீர் சிந்தியது மழை என..
காற்று	**தண்ணீர்**
எனக்கு சுவாசம் தரும் காற்றே நீ இன்றி நிலவுலகில் ஏதுமில்லை.. தெற்கிலிருந்து நீ வந்தால் தென்றல் ஆகிறாய் வடக்கிலிருந்து நீ வந்தால் வாடை ஆகிறாய் கிழக்கிலிருந்து நீ வந்தால் கொண்டல் ஆகிறாய் மேற்கிலிருந்து நீ வந்தால் மேல்(ல்) காற்று ஆகிறாய் எங்ஙனம் நீ வந்தாலும் எப் பெயரில் வந்தாலும் எங்களின் ஜீவன் நீயேயாவாய்!	நீரே! உலகில் முக்கால் பாகம் உன்னால் நிறைந்திருந்தாலும் ஏன் பற்றாக்குறை.. வாய்க்கால் குளம் குட்டை நதி கடல் எனப் பல முகங்கள் உனக்கு. ஆனாலும் மொண்டு எடுப்பதற்கு இயலா நிலையில் பல ஊர்கள் பல மக்கள் உனக்காகக்,, காத்திருப்ப தேனோ!

※※⁂⁂⁂※※

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கவிதைப் பேழை

இயல் ஒன்பது

குறுந்தொகை

நுழையும் முன்:

- "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என மனிதம் பேசி, மனித மாண்புகளையும் காட்டும் காலக் கண்ணாடி சங்க இலக்கியம்.
- அவற்றுள் ஒன்றான குறுந்தொகை ஓர் அக இலக்கிய நூலாகும். "நல்ல குறுந்தொகை" என இந்நூல் சிறப்பிக்கப்படுகிறது.
- குறுந்தொகைப் பாடல்கள் பலவும் இயற்கை காட்சிகள் மூலம் நாட்டுவளத்தைப் படம் பிடித்துக் காட்டுவனவாகும்.
- அத்தகைய ஒரு பாடலைத் தலைவனைப் பிரிந்த தலைவியின் துயரத்தைத் துடைக்க, ஆறுதல் கூற தோழி பயன்படுத்துகிறாள்.

நூல்குறிப்பு (நூல் வெளி):

- குறுமை + தொகை = குறுந்தொகை.
- நான்கடி சிறுமையும் எட்டடி பெருமையும் உடைய குறுகிய பாக்களால் ஆன தொகுதியாகும்.
- இந்நூலில் கடவுள் வாழ்த்து நீங்கலாக, 401 பாடல்கள் உள்ளன. 401 பாடல்களை 205 புலவர்கள் பாடியுள்ளனர். இந்நூலைத் தொகுத்தவர் பூரிக்கோ ஆவார்.
- களவு, கற்பு என்னும் அக ஒழுக்கங்களை விளக்கும் நூலாகும். தொல்காப்பிய உரையாசிரியர்கள் பலரால் சான்று காட்டப்பட்ட பெருமையுடைய நூல் ஆகும்.
- இந்நூல் தொகுக்கப்பட்ட காலம் கி.பி 2ஆம் நூற்றாண்டு. இந்நூலுக்குக் கடவுள் வாழ்த்து பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.
- குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் அன்பின் ஐந்திணைகளில் நிகழும் அக ஒழுக்கத்தை இந்நூல் கூறுகிறது.
- திணை – ஒழுக்கம், துறை – திணையின் உட்பிரிவு
- குறுந்தொகையை 1915ம் ஆண்டு சௌரிப் பெருமாள் அரங்கனார் பதிப்பித்துள்ளார்.
- பாடப்பகுதி: நம் பாடப்பகுதியாக அமைந்த பாடல் 37 வது பாடல் ஆகும்.

ஆசிரியர் குறிப்பு:

- பாலைபாடிய பெருங்கடுங்கோ சேரமரபைச் சேர்ந்த மன்னர். கலித்தொகையில் பாலைத்திணையை பாடியதால் "பாலை பாடிய பெருங்கடுங்கோ" என அழைக்கப்பட்டார்.
- இவர் இப்போது "வயநாடு" என்று அழைக்கப்படும் கேரள பகுதியான "பாயல் நாட்டில்" பிறந்தவர்.
- இவர் பாலைத்திணை பாடுவதில் வல்லவர். நுண்மாண் நுழைபுலம் மிக்க இப்பெருங்கடுங்கோ, பெருஞ்செல்வமும், கொடை உள்ளமும் சிறக்க பெற்றவராம்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பாடலில் அமைந்த திணை

பாலை

துறை : தலைவன் விரைந்து வந்து விடுவான் எனத் தோழி தலைவியை ஆற்றியது.

கூற்று : தோழி தலைவியிடம் கூறியது.

வருந்தாதே

தோழி தலைவியிடம், தலைவியே வருந்தாதே!

- தலைவன் உன்னிடம் மிகுந்த அன்பும், விருப்பமும் உடையவன். விரைவில் மீண்டும் வந்து உன்னோடு அன்புடன் இருப்பான்.
- அவன் பொருளீட்டுவதற்காக, உன்னை விட்டுப் பிரிந்து சென்ற வழி எது? தெரியுமா?
- பெண் யானையின் பசியைப் போக்கும் பொருட்டு, பெரிய தும்பிக்கையை உடைய ஆண் யானையானது. மெல்லிய கிளைகளை உடைய 'யா' மரத்தின் பட்டை உரித்து உணவாகக் கொடுத்து தன் அன்பை வெளிப்படுத்தும் காட்சிகள் நிறைந்த பாலைவழியாகும்.
- அந்தக் காட்சியை தலைவனும் காண்பான். அக்காட்சி தலைவனுக்கு உன்னை நினைவுபடுத்தும். எனவே அவன் விரைந்து உன்னை நாடி வருவான். வருந்தாது ஆற்றியிருப்பாயாக என்று கூறினாள். இவ்வாறு தோழி தலைவியை ஆற்றுப்படுத்துகிறாள்.

இறைச்சிப் பொருள்

இறைச்சி என்பது நிலத்தின் கருப்பொருளை மையமாக வைத்து, வெளிப்படையாகப் பொருளைக் கூறாது. குறிப்பால் உணர்த்துவது ஆகும்.

இப்பாடலில்,

"மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பினை தோழி அவர் சென்ற ஆறே"

- என்னும் அடியில் பாலை நிலக் கருப்பொருளாகிய 'யா' மரத்தை மையமாக வைத்து ஆண் யானை, பெண் யானைக்கு உணவு கொடுக்கும் காட்சியைக் காண்பான் தலைவன் என்று கூறுவது மூலம்,
- அந்த ஆண் – பெண் யானையின் காட்சி உன் தலைவனுக்கு உன்னை நினைவூட்டும் என்பதைக் குறிப்பால் உணர்த்துவதால் இப்பாடலில் இறைச்சிப் பொருள் அமைந்துள்ளது.

சொல்லும் – பொருளும்:

நசை	–	விருப்பம்	**மென்சினை**	–	மெல்லிய கிளை
களைஇய	–	நீக்க	**யா**	–	ஒரு வகை மரம் (பாலை நிலத்தில் வளரும்)
நல்கல்	–	வழங்குதல்			
பிடி	–	பெண் யானை	**பொளிக்கும்**	–	உரிக்கும்
வேழம்	–	ஆண் யானை	**ஆறே**	–	வழியே

இலக்கணக் குறிப்பு:

களைஇய – சொல்லிசை யளபெடை

பெருங்கை – பண்புத்தொகை

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

மென்சினை – பண்புத்தொகை
பிடிபசி – ஆறாம் வேற்றுமைத் தொகை
பொளிக்கும் – செய்யும் எனும் வாய்பாட்டு வினைமுற்று
அன்பின – பலவின்பால் அஃறிணை வினைமுற்று
நல்கலும் நல்குவர் – எச்சஉம்மை

பகுபத உறுப்பிலக்கணம்:

உடையர் – உடை + ய் + அர்

உடை	–	பகுதி
ய்	–	உடம்படுமெய் சந்தி
அர்	–	பலர்பால் வினைமுற்று விகுதி

பொளிக்கும் – பொளி + க் + க் + உம்

பொளி	–	பகுதி
க்	–	சந்தி
க்	–	எதிர்காலம் காட்டும் இடைநிலை
உம்		வினைமுற்று விகுதி

நல்குவர் – நல்கு + வ் + அர்

நல்கு	–	பகுதி
வ்	–	எதிர்கால இடைநிலை
அர்	–	பலர்பால் வினைமுற்று விகுதி

சென்ற – செல்(ன்) + ற் + அ

செல்	–	பகுதி ல் – ஆனது விகாரம்
ய்	–	இறந்தகால இடைநிலை
அர்	–	பெயரெச்ச விகுதி

பாலை நிலத்தின் கருப்பொருள்கள்:

பாலைத் திணையின் முதற்பொருள்

நிலம் : வெப்பம் மிகுந்த சுரமும் சுரம் சார்ந்த பகுதியாகும்
பொழுது : சிறுபொழுது: நண்பகல்
பெரும்பொழுது : வேனில், பின்பணி.

கருப்பொருள்கள்:

தெய்வம் – துர்க்கை
மக்கள் – மீளி, விடலை, எயிற்றியர், எயினர்
பறவை – கழுகு, பருந்து, புறா
ஊர் – குறும்பு
விலங்கு – வலுவிழந்த புலி, செந்நாய், கடந்து செல்லும் யானைகள்
நீர் – நீர் வற்றிய சுனை, நீர் வற்றிய கிணறு
பூ – மரா, குரா, பாதிரி
மரம் – இருப்பை, ஓமை, பாலை(யா)
பறை – போர்ப்பறை
பண் – பாலைப்பண் (பஞ்சுரம்)
யாழ் – பாலையாழ்
உணவு – வழிப்பறி செய்து கிடைக்கப் பெறும் பொருள்
தொழில் – சூறையாடல், வழிப்பறி செய்தல்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பாடநூல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. யா மரம் என்பது எந்த நிலத்தில் வளரும்?

அ) குறிஞ்சி ஆ) மருதம் இ) பாலை ஈ) நெய்தல்

விடை: இ) பாலை

குறுவினா

1. பிடிபசி களைஇய பெருங்கை வேழம் – இவ்வடியில் உள்ள இலக்கணக் குறிப்புகளை கண்டறிக.

1. பிடிபசி – ஆறாம் வேற்றுமைத்தொகை
2. களைஇய – சொல்லிசை அளபெடை
3. பெருங்கை – பண்புத்தொகை
4. பெருங்கை வேழம் – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

2. குறுந்தொகை – பெயர் காரணம் எழுதுக.

குறுமை + தொகை – குறுந்தொகை நான்கு முதல் எட்டு அடிகளால் குறுகிய பாக்களால் ஆன தொகுக்கப்பட்ட நூல் ஆதலால் குறுந்தொகை எனப் பெயர் பெற்றது.

சிறுவினா

1. 'யா' மரத்தின் பட்டையை உரித்தது எது? எதற்காக? விளக்குக.

- யா மரம் என்பது பாலை நிலத்தில் உள்ள ஒருவகை மரம் அதன் பட்டை ஈரத் தன்மையுடையது பாலை நிலத்தின் வழியாகக் கடந்து செல்லும் யானைகள்.
- அப்போது ஆண் யானை பெண் யானையின் பசியையும் களைப்பையும் போக்கும் பொருட்டு அம்மரப்பட்டைகளை தன் தும்பிக்கையில் உரித்து பெண் யானைக்கு கொடுக்கும் காட்சியை குறுந்தொகை,
- "பிடி பசி களைஇய பெருங்கை வேழம் மென்சினை யாஅம் பொளிக்கும்" என்று விளக்குகிறது.

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. 'நசை பெரிது' – எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடல் யார் யாரிடம் கூறியது?

அ) தோழியிடம் தலைவி கூறியது ஆ) தலைவியிடம் தோழி கூறியது

இ) தலைவன் தலைவியிடம் கூறியது ஈ) தலைவி தலைவனிடம் கூறியது

விடை: அ) தோழியிடம் தலைவி கூறியது

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

2. பொருத்துக.

சொல்	பொருள்
அ) பிடி	1) பால நிலத்து மரம்
ஆ) வேழம்	2) வழங்குதல்
இ) யா	3) ஆண்யானை
ஈ) நல்கல்	4) பெண்யானை

அ) 4, 3, 1, 2 ஆ) 4, 3, 2, 1
இ) 2, 3, 4, 1 ஈ) 4, 2, 1, 3

விடை: அ) 4, 3, 2, 1

3. குறுந்தொகைப் பாடலின் அடி வரையறை யாது?

அ) 4 – 8 ஆ) 3 – 9 இ) 9 – 12 ஈ) 13 – 39

விடை: அ) 4 – 8

4. 'குறுந்தொகை' நூலைப் பதிப்பித்தவர் யார்?

அ) பூரிக்கோ ஆ) சௌரிப்பெருமாள் அரங்கனார்
இ) பிள்ளைப்பெருமாள் ஈ) உ.வே.சாமிநாதர்

விடை: ஆ) சௌரிப்பெருமாள் அரங்கனார்

5. குறுந்தொகை நூல் பதிப்பிக்கப்பட்ட ஆண்டு எது?

அ) 1914 ஆ) 1915 இ) 1925 ஈ) 1920

விடை: ஆ) 1915

6. கலித்தொகையில் "பாலைத்திணை" பாடியவர் யார்?

அ) கபிலர் ஆ) ஓதலாந்தையார் இ) பெருங்கடுங்கோ ஈ) அம்மூவனார்

விடை: இ) பெருங்கடுங்கோ

7. "நசை பெரிது" என்னும் குறுந்தொகைப் பாடலை பாடியவர் யார்?

அ) கபிலர் ஆ) ஓதலாந்தையார் இ) பெருங்கடுங்கோ ஈ) அம்மூவனார்

விடை: இ) பெருங்கடுங்கோ

8. பாலை பாடிய பெருங்கடுங்கோ _____ மரபைச் சார்ந்தவர்?

அ) சோழ ஆ) பாண்டிய இ) சேர ஈ) பல்லவ

விடை: இ) சேர

9. 'நசை பெரிது' பாடலில் அமைந்துள்ள இலக்கிய உத்தி எது?

அ) உள்ளுறை உவமை ஆ) இறைச்சி
இ) உவமை ஈ) உருவகம்

விடை: ஆ) இறைச்சி

10. 'களைஇய' என்னும் சொல்லின் இலக்கணக் குறிப்பு யாது?

அ) இன்னிசை அளபெடை ஆ) வினையெச்சம்
இ) சொல்லிசை அளபெடை ஈ) இசைநிறை அளபெடை

விடை: இ) சொல்லிசை அளபெடை

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

குறுவினா

1. குறுந்தொகை – குறிப்பு வரைக.

- எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று குறுந்தொகை.
- இது தமிழர் வாழ்வின் அகப்பொருள் நிகழ்வுகளைக் கவிதையாக்கிக் கூறுகிறது.
- கடவுள் வாழ்த்து நீங்கலாக 401 பாடல்களைக் கொண்டது.
- 4 அடி சிற்றெல்லையும் 8 அடி பேரெல்லையும் கொண்டவை.
- 1915 ஆம் ஆண்டு சௌரிப்பெருமாள் அரங்கனார் முதன் முதலில் இந்நூலைப் பதிப்பித்தார்.

2. பெருங்கடுங்கோ – குறிப்பு வரைக.

- குறுந்தொகையின் 37ஆவது பாடலைப் பாடியவர் பெருங்கடுங்கோ.
- இவர் சேர மரபைச் சேர்ந்த மன்னர் ஆவார்.
- கலித்தொகையில் பாலைத்திணையைப் பாடியதால் 'பாலை பாடிய பெருங்கடுங்கோ' என அழைக்கப் பெற்றார்.

கற்பவை கற்றபின் பக்கம்: 240

1. நீங்கள் கண்ட / உதவி செய்து மனம் நெகிழ்ந்த நிகழ்வை வகுப்பறையில் பதிவு செய்க.

ஒருநாள், நான் காய்கறி வாங்குவதற்காகச் சந்தைக்குச் சென்றேன். காலை நேரமாக இருந்தாலும், வெயில் சுறுசுறுவென்று எரிந்துகொண்டிருந்தது. வெப்பம் அதிகமாக இருந்தது. இந்த வெயிலில் அம்மா அனுப்பி விட்டாளே என்று எண்ணிக்கொண்டே சென்றேன்.

என் முன்னே 60 வயது மதிக்கத்தக்க ஒருவர் தடியின்றி நடந்து கொண்டிருந்தார், நான் அவரைக் கடந்து செல்ல முயன்றபோது, சோர்வுற்று கீழே விழுந்து விட்டார், தண்ணீர் தெளித்து, தேநீர் வாங்கிக் கொடுத்து என ஒவ்வொருவரும் ஒவ்வொரு உதவி செய்தனர்.

சற்று அவர் தெளிந்து எழுந்து உட்கார்ந்தார். நான் அருகில் சென்று ஐயா! ஏன் விழுந்து விட்டீர்கள்? என்ன காரணம்? என்றேன்,

தம்பி நான் சாப்பிட்டு மூன்று நாட்கள் ஆகிவிட்டன. என்னால் பசி மயக்கத்தில் ஓரடி கூட நடக்க முடியாது போல் உள்ளது என்ன செய்வேன் என்றார் என் கையில் அம்மா காய்கறி வாங்கி வரச் சொல்லி கொடுத்த 50 ரூபாய் இருந்தது. அருகில் ஒரு சிற்றுண்டிச் சாலை 20 ரூபாய்க்கு 4 இட்லியை வாங்கி கொடுத்துவிட்டு, மீதி உள்ள பணத்தில் காய்கறி வாங்கிச் சென்றேன். அம்மாவிடம் பயந்து கொண்டே கூறினேன். இப்பதாண்டா நீ என் பிள்ளை! என்று கூறி என்னை உச்சி முகர்ந்தாள்.

நான் மகிழ்ந்தேன்; நெகிழ்ந்தேன்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

விரிவானம்

இயல் ஒன்பது

தாய்மைக்கு வறட்சி இல்லை

பாடநூல் வினாக்கள்

நெடுவினா

1. 'தாய்மைக்கு வறட்சி இல்லை', என்னும் சிறுகதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை விளக்குக.

முன்னுரை:

எது வறண்டு போனாலும் உலகில் தாய்மை வறண்டு போவது இல்லை. தாய்மை வழியே மனிதம் காக்கப்படுவதை சு. சமுத்திரம் அவர்கள் இக்கதையில் படைத்திருக்கும் ஏழைத் தாயின் வழி புலப்படுத்துகிறார்.

1. அன்பும் கண்டிப்பும் உடைய மனைவி:

தூங்கிக் கொண்டிருக்கும் போது பேரிரைச்சலுடன் வந்த ஜீப் தன் மீதும் தன் கணவன் மீதும் மோதாமல் இருக்க தன் கணவனை உருட்டி விட்டு தானும் அங்கப்பிரதட்சணம் செய்வது போல் உருண்டு காப்பாற்றிய போது ஏழைத்தாய் அன்புடைய மனைவியாகிறாள்.

செல்வந்தன் தன் கைக்குக் கிடைத்த உணவு வகையறாக்களை அள்ளிப்போட்டு அவள் கணவனைத் தன் குடும்பத்தை நோக்கி நடக்கும்படி முதுகைத் தள்ளுகிறான். கையில் உணவுடன் வந்த கணவனைத் தன் கண்களால் இப்படி ஒரு பிழைப்பா என்று தன் தலையில் கைகளால் அடித்தபடியே அவனைத் தண்டிக்கிறார். இவ்வாறு கண்டிப்பும் அன்பும் கலந்து அந்த ஏழைத்தாய் வறுமையிலும் தன்மானம் உள்ளவளாகக் காணப்படுகிறாள்.

2. குழந்தைகளுக்குப் பரிமாறுதல்:

குழந்தைகள் அம்மா வாதாடுவதைக் கோபமாய்ப் பார்த்தன. அதனைக் கண்ட தாய் அவர்கள் பசியில் இருப்பதைப் புரிந்துகொள்கிறாள். பசிமுள் அவள் வயிற்றைக் குத்தியது. சப்பாத்தியையும் வெஜிடபிள் பிரியாணியையும் கண்ட குழந்தைகள் காணாததைக் கண்டது போல் சுவைத்தார்கள் அவள் அனுதாபத்துடன் குழந்தைகளைப் பார்த்து,

இப்போ இப்படிச் சாப்டுகிறீர்கள் ராத்திரி என்ன செய்வீர்கள்? என்று உள்ளத்துள் வருந்துவதால் அன்புத்தாய் ஆகிறாள்.

3. மனிதநேயம் புரிந்தாள்:

அவள் சாப்பிட ஆரம்பித்தபோது உலர்ந்த தொண்டைக்குள் உணவு இறங்க மறுக்கிறது. உணவைக் கொடுத்தவர் தண்ணீரையும் கொடுத்து "உன்னைப் போல கஷ்டப்பட்ட ஒரு தாய்க்குத் தான் மகனாய் பிறந்தேன் உன்னை என் தாயாய் எண்ணி கொடுக்கிறேன்" என்ற போது அவர் உள்ளத்தில் உள்ள மனிதநேயத்தைப் புரிந்து கொள்கிறாள்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

4. நாய்க்குட்டிகளை விரட்டுதல்:

சாப்பிடும் நேரத்தில் தொந்தரவு செய்த நாய்க்குட்டிகளைக் குரலிட்டபடியே கையைத் தூக்கி துரத்தினாள். ஒரு காலைத் தூக்கியபடியே ஓடின. நாய்க்குட்டி ஒலி எழுப்பியது.

5. சுவைத்து உண்டாள்:

தட்டை குழந்தையைப் போல மடியில் வைத்துக்கொண்டு உணவை வாய்க்குள் போட்டாள். இவ்வளவு ருசியாய் அவள் சாப்பிட்டதாய் நினைவில்லை. உண்டு உண்டு அந்த சுவையில் சொக்கி லயித்துக்கொண்டிருந்தாள். நாயின் ஒலி அவளைச் சுண்டி இழுத்தது. பாசத்தில் பரிதவித்து ஓடுகிறாள்.

6. நாய் குட்டிகளுக்கும் தாயாகிறாள்:

எச்சில் கையைத் தரையில் ஊன்றி எழுந்தாள். நாய்க்குட்டியை வாரி எடுத்தாள். அதன் முதுகைத் தடவினாள். மடியிலிட்டு தாலாட்டினாள். தட்டை தன் பக்கமாய் இழுத்தாள். உணவு சிறுசிறு கவளமாக உருட்டி நாய்க்குட்டிக்கு ஊட்டினாள். தட்டில் இருந்த உணவு குறையக்குறைய அவளது தாய்மை கூடிக்கொண்டே இருந்தது

முடிவுரை:

வறுமையிலும் அன்பு குறையாத மனிதநேயம் மாண்பு குறையாத மறையாத ஏழைத்தாயின் கதாபாத்திரத்தை நம் கண்முன் படைத்துக்காட்டி தாய்மைக்கு என்றும் வறட்சியில்லை என்பதைச் சு.சமுத்திரம் விளக்கி உணர்த்தியுள்ளார்.

கற்பவை கற்றபின்

பக்கம்: 245

1. "பிறருக்கு உதவி செய்வதற்கு மொழி தேவையில்லை" என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு வகுப்பறை மேடையில் நடித்துக் காட்டுக.

மாணவர்களே,

உங்கள் வகுப்பறை மேடையில் (mime show) மௌன நாடகமாக பின்வருவதை நடித்துக்காட்டுங்கள்.

நீங்கள் சாலையில் நடந்து சென்று கொண்டிருக்கிறீர்கள். அப்போது மிதிவண்டியில் வரும் ஒருவருக்கு திடீர் மயக்கம் ஏற்பட்டு, சாலையில் விழுகிறார் உடனடியாக நீங்கள் அவருக்கு முதலுதவி செய்து, அருகில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று மருத்துவ உதவி செய்து, வீட்டு முகவரியை விசாரித்து பத்திரமாய் அழைத்து செல்வது என மேற்கூறிய காட்சியை நடித்து காட்டுங்கள்.

மனிதநேயம், அன்பு, இரக்கம், உதவி இவற்றை வெளிப்படுத்த மொழி தேவையில்லை என்பதை உணர்த்துங்கள்.

2. கதையைத் தொடர்ந்து எழுதித் தலைப்பிடுக.

சுண்டெலியின் அறிவு

சுண்டெலிகளுக்குப் பூனையால் மிகவும் துன்பமான நேரம். ஒவ்வொரு நாளும் இரண்டு மூன்று சுண்டெலிகளைப் பிடித்துத் தின்றது பூனை. சுண்டெலிகள் ஒன்று சேர்ந்து என்ன செய்வது என்று ஆலோசித்தன. மேலும் மேலும் ஆலோசித்தன. ஆனால் ஒரு முடிவும் கிடைக்கவில்லை.

பிறகு ஒரு சின்ன சுண்டெலி சொன்னது, பூனைக்கு என்ன செய்ய வேண்டும் என்று நான் சொல்கிறேன். நான் செய்கிறேன் என்றது. சரி முயற்சி செய்து பார் என்று மற்ற சுண்டெலிகள் கூறின.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

அன்று பூனை தனக்குத் தேவையான சுண்டெலிகளைப் பிடித்துத் தின்று ஓய்வாக படுத்திருந்தது. சுண்டெலி அருகில் சென்றது. பூனை ஐயா! தங்களுக்கு என் வணக்கம். எங்கள் பூனைகளின் சார்பாக உங்களைச் சந்திக்க வந்துள்ளேன். அப்படியா என்ன... விஷயம் சொல்லு என்றது பூனை.

ஐயா! உங்கள் பசியைப் போக்க நீங்கள் அலைந்து திரிந்து எங்களைத் தேடி வந்து சாப்பிட வேண்டாம் ஐயா!

நாங்களே தேடி வந்து உங்களுக்குத் தேவையானபோது உணவாகி விடலாம் என்று முடிவு செய்துள்ளோம். ஐயா! ஒ அப்படியா ரொம்ப மகிழ்ச்சி. சரி எனக்கு எப்போது பசி என்று நீங்கள் எப்படி தெரிந்து கொள்வீர்கள்?

அதற்கு ஒரு யோசனை இருக்குதய்யா... ம்ம்.. சொல்லு உங்கள் நான்கு கால்களில் ஒரு காலில் மணி ஒன்றை கட்டி விடுகிறேன் ஐயா.

நீங்கள் பசிக்கும் போது... உங்கள் காலை தரையில் உதையுங்கள் மணியோசை கேட்டவுடன் நாங்கள் ஓடோடி வருகிறோம் ஐயா... என்றது.

பூனை யோசித்தது... சரி... நானும் வளை தேடி ஓடி வரவேண்டியிருக்காது சாப்பிட்டோமா... படுத்தோமான்னு நிம்மதியா இருப்பேன்... என்றது.

பூனையைத் தன் அறிவாற்றலால் வென்ற சுண்டெலி, பூனையின் காலில் மணியைக் கட்டிவிட்டு ஓடி வந்து விட்டது.

பயந்து போய் நின்ற தன் சக சுண்டெலிகளிடம் நான் மணியைக் கட்டிவிட்டேன். இனி மகிழ்ச்சியாக அவரவர் வளைகளிலும். பொந்துகளிலும் சுதந்திரமாக வாழலாம் என்றது.

※※⁂⁂⁂※※

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கற்கண்டு

இயல் ஒன்பது

அணியிலக்கணம்

பாடநூல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. கேடில்விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்றை யவை - இக்குறளில் பயின்று வந்துள்ள அணி?

அ) சொல் பின்வருநிலையணி ஆ) பொருள் பின்வருநிலையணி

இ) சொற்பொருள் பின்வருநிலையணி ஈ) வஞ்சப் புகழ்ச்சியணி

விடை: ஆ) பொருள் பின்வருநிலையணி

குறுவினா

1. நினைத்தேன் கவித்தேன் படைத்தேன் சுவைத்தேன் – இத்தொடரில் அமைந்துள்ள உருவகத்தைக் கண்டறிக.

கவித்தேன், சுவைத்தேன் – உருவகம்

சிறுவினா

1. உருவக அணியை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

ஒரு பொருளின் தன்மையைச் சிறப்பிக்க அதற்கு உவமையாகும் வேறொரு பொருள் மேல் உவமையின் தன்மையை ஏற்றிக் கூறுவது உருவகம் ஆகும். உவமை உவமேயம் என்னும் இரண்டும் ஒன்றே என தோன்றக் கூறுவது உருவக அணி ஆகும்.

சான்று:

"இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈன்றதோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்"

இப்பாடலில்

இன்சொல்	–	நிலம்
வன்சொல்	–	களை
வாய்மை	–	எரு
அன்பு	–	நீர்
அறம்	–	கதிர்

என உருவகிக்கப்பட்டுள்ளது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கூடுதல் வினாக்கள்

பலவுள் தெரிக

1. செய்யுளின் கருத்தை அழகுபடுத்துவது எது?

அ) யாப்பு ஆ) பொருள் இ) சொல் ஈ) அணி

விடை: ஈ) அணி

2. உவமை, உவமேயம் இரண்டும் ஒன்றே என்று தோன்றக்கூறும் அணி எது?

அ) உவமை ஆ) உருவகம் இ) பிறிதுமொழிதல் ஈ) சிலேடை

விடை: ஆ) உருவகம்

3. புகழ்வது போல பழிப்பதும், பழிப்பது போல் புகழ்வதும் ..... ஆகும்.

அ) தற்குறிப்பேற்ற அணி ஆ) சொற்பொருள் பின்வருநிலையணி

இ) வஞ்சப் புகழ்ச்சியணி ஈ) சிலேடை அணி

விடை: இ) வஞ்சப் புகழ்ச்சியணி

4. பின்வருநிலையின் வகை .....

அ) 3 ஆ) 4 இ) 5 ஈ) 6

விடை: அ) 3

5. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு – இக்குறட்பாவில் இடம் பெறும் அணி .....

அ) சொல் பின்வருநிலையணி ஆ) பொருள் பின்வருநிலையணி

இ) சொற்பொருள் பின்வருநிலையணி ஈ) சிலேடை அணி

விடை: இ) சொற்பொருள் பின்வருநிலையணி

6. தேவ ரனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுகலான் – இக்குறட்பாவில் வரும் அணி .....

அ) உருவகம் ஆ) உவமை இ) வஞ்சப்புகழ்ச்சி ஈ) தற்குறிப்பேற்றம்

விடை: இ) வஞ்சப்புகழ்ச்சி

குறுவினா

1. அணி என்றால் என்ன?

செய்யுளின் கருத்தை அழகுபடுத்துவது அணி எனப்படும். சொல்லாலும், பொருளாலும் அழகுபட எடுத்துரைப்பது அணி ஆகும்.

2. பின்வருநிலை அணி என்றால் என்ன?

ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல்லோ பொருளோ மீண்டும் பல இடத்தும் வருவதால் 'பின்வருநிலை' அணியாகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

3. பின்வருநிலை அணி எத்தனை வகைப்படும்?

மூன்று வகைப்படும்.

- சொல் பின்வருநிலையணி
- பொருள் பின்வருநிலையணி
- சொற்பொருள் பின்வருநிலையணி

4. "துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை" – இக்குறட்பாவில் அமைந்துள்ள அணியைச் சுட்டி விளக்குக.

இக்குறட்பாவில் அமைந்துள்ள அணி சொற்பின்வருநிலையணி ஆகும்.

விளக்கம்:

முன்வந்த சொல்லே பின்னும் பலவிடத்தும் வந்து. வேறு பொருள் உணர்த்துவது சொற்பின்வருநிலையணி ஆகும்.

'துப்பு' – என்ற சொல் பல இடத்தில் வந்துள்ளது. ஆனால், நல்ல, நன்மை, உணவு – என பல பொருளில் வருகிறதால், இக்குறட்பா சொற்பின்வரு நிலைக்கு சிறந்த சான்றாக அமைகிறது.

கற்பவை கற்றபின் பக்கம்: 247

1. கீழ்காணும் குறட்பாக்களில் அமைந்த அணி வகைகளைக் கண்டறிக.

அ) ஊழி பெயரினும் தாம் பெயரார் சான்றாண்மைக்கு ஆழி எனப்படு வார்

அணி : ஏகதேச உருவக அணி

அணி விளக்கம் : தொடர்புடைய இருபொருட்களுள், ஒன்றை மட்டும் உருவகம் செய்து மற்றொன்றை உருவகம் செய்யாமல் விட்டுவிடுவது ஏகதேச உருவக அணி ஆகும்.

பொருத்தம் : சான்றாண்மையது பெருமை தோன்ற அதனைக் கடலாக்கியும் சான்றாண்மையைத் தாங்கிக் கொண்டு நிற்பவரை கடற்கரையாக்கி உருவகப்படுத்தாமையால் ஏகதேச உருவக அணி ஆயிற்று.

ஆ) பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின் அறம்நாணத் தக்கது உடைத்து

அணி : சொற்பொருள் பின்வருநிலையணி

அணி விளக்கம் : வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து தந்த பொருளையே தருமாயின் அது "சொற்பொருள் பின்வருநிலையணி" ஆகும்

பொருத்தம் : நாண்` என்னும் சொல் `வெட்கம்` என்னும் பொருளில் மீண்டும் மீண்டும் வந்துள்ளமையால் சொற்பொருள்பின்வருநிலையணியாயிற்று.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

இ) தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்

அணி : சொற்பொருள் பின்வருநிலையணி

அணி விளக்கம் : வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து தந்த பொருளையே தருமாயின் அது "சொற்பொருள் பின்வருநிலையணி" ஆகும்.

பொருத்தம் : `தீய` என்னும் சொல் `தீமை` என்னும் பொருளில் மீண்டும் மீண்டும் வந்துள்ளமையால் சொற்பொருள்பின்வருநிலையணியாயிற்று.

2. உவமையணி அமைந்த பாடல் அடிகளை எழுதுக.

குறள்:

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்ப காய் கவர்ந்தற்று.

பாடல்:

கன்று குரல் கேட்ட பசு போல மாற்றார்
கதறுவதைக்கேட்டவுடன் அன்பு செய்தால்
வென்று வரும் மனித குலம்

3. கீழ்க்காணும் புதுக்கவிதையில் அமைந்த அணியினை எழுதுக.

விருட்சங்கள்

மண்ணரசி மடக்காமலேயே
பிடித்துக் கொண்டிருக்கும்
பச்சைக் குடைகள்

– முற்றுருவகம்.

மொழியை ஆள்வோம் பக்கம்: 249

மொழி பெயர்க்க.

A deer, a turtle, a crow and a rat were friends. One day the deer was caught in a hunter's trap. Friends made a plan to save him. According to the plan, the deer lay motionless as if it were dead. The crow sat on the deer and started poking. The turtle crossed the hunter's path to distract him. The hunter left the deer, assuming it dead, and went after the turtle. Meanwhile, the rat chew open the net to free the deer. The crow picked up the turtle and quickly took it away from the hunter. From this Panchatantra story, we learn that the teamwork can achieve great results.

ஒரு மான், ஒரு கடல் ஆமை, ஒரு காகம், ஓர் எலி ஆகியவை நட்பு கொண்டிருந்தன. ஒருநாள் வேடன் வலைவிரித்து மானைப் பிடித்து விட்டான். நண்பர்கள் மானைக் காப்பாற்ற திட்டம் தீட்டின. மானை, நீ இறந்ததுபோல் அசைவின்றி படுத்துக் கொள் என்றன. காகம், இறந்து போன மாதிரி படுத்திருந்த மான் மீது அமர்ந்து கொத்த தொடங்கியது. கடல் ஆமை வேடனின் வழிமறித்தது; அவனை அலைக்கழித்தது. வேடன் வலையில் அகப்பட்ட மான் இறந்து விட்டது என

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

எண்ணி சென்று அதனை விட்டு விடுகிறான். கடல் ஆமை இன்னும் வேடனை அலைக்கழித்தபடியே இருக்கிறது. அதற்குள் எலி வலையைக் கடித்து மானைக் காப்பாற்றத் தொடங்கியது. மானை விடுத்த வேடன் கடலாமையைப் பிடிக்க எண்ணியபோது காகம் ஆமையை கொத்திக் கொண்டு பாதுகாப்பான இடத்திற்கு விரைந்து சென்று சிறிய கடலாமையை வேடனிடம் இருந்து காத்தது. இந்தப் பஞ்சதந்திரக் கதை குழுவாக இணைந்து ஒன்றுபட்டு செயல்பட்டால் பல சாதனைகளைப் புரியலாம் என்பதை உணர்த்துகிறது.

பொருத்தமான நிறுத்தற்குறியிடுக.

ஆசிரியர் மாணவர்களிடம் மாணவர்களே கடவுளரையும் தலைவர்களையும் குழந்தையாகக் கருதி எழுதப்பட்ட சிற்றிலக்கிய வகை பற்றித் தெரியுமா தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் பிள்ளைத் தமிழும் ஒன்று என்று கூறினார்.

பிள்ளைத் தமிழ் நூல்கள் முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் முதலியன.

அடடா என்று சிலிப்பூட்டும் பட்டறிவைப் படிப்பவர்க்கு அளிக்கும் வகையில் குமரகுருபாரின் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் மிகச் சிறந்ததாகத் திகழ்கிறது.

விடை :

ஆசிரியர் மாணவர்களிடம், "மாணவர்களே! கடவுளையும் தலைவர்களையும் குழந்தையாகக் கருதி, எழுதப்பட்ட சிற்றிலக்கிய வகை பற்றித் தெரியுமா? தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் பிள்ளைத் தமிழும் ஒன்று" என்று கூறினார்.

பிள்ளைத்தமிழ் நூல்கள்: முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், அமுதாம்பிகைப் பிள்ளைத்தமிழ் முதலியன.

"அடடா! என்று சிலிர்ப்பூட்டும் பட்டறிவைப் படிப்பவர்க்கு அளிக்கும் வகையில், குமரகுருபரரின் 'மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்' மிகச்சிறந்ததாகத் திகழ்கிறது.

சொற்றொடர் உருவாக்குக.

1. **செந்தமிழும் சுவையும் போல**

தவைவன் தலைவியாக நீவிர் இருவரும் செந்தமிழும் சுவையும் போல இணைந்தே மகிழ்வுடன் இனிதாய் வாழுங்கள்.

2. **பசுமரத்தாணிபோல**

குழந்தைப் பருவத்தில் நான் மனனம் செய்த பாரதியார் பாடல்கள் அனைத்தும் பசுமரத்தாணி போல பதிந்து விட்டது.

3. **உள்ளங்கை நெல்லிக்கனி போல**

என் தமிழாசிரியர் நடத்திய அணியிலக்கணம் உள்ளங்கை நெல்லிக்கனி போல தெளிவாகப் புரிந்தது.

4. **அத்தி பூத்தாற்போல**

என் மாமாவின் வருகை அத்தி பூத்தாற்போல் என்றாவது நிகழ்வதால் மனம் மகிழ்ச்சியில் துள்ளும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

5. மழைமுகம் காணாப் பயிர் போல

தன் குடும்பத்தை விட்டு விடுதிக்குச் சென்ற கமலா, மழைமுகம் காணாப் பயிர் போல சோர்வுற்று வாடிக் காணப்பட்டாள்.

வடிவம் மாற்றுக.

பாடலில் காணும் இலக்கிய வடிவங்களையும் அவற்றுக்குப் புகழ் பெற்றோரையும் கண்டறிந்து எழுதுக.

வெண்பாவிற் புகழேந்தி; பரணிக்குஓர்
சயங்கொண்டான்; விருத்தம் என்னும்
ஒண்பாவிற்கு உயர்கம்பன்; கோவைஉலா
அந்தாதிக்கு ஒட்டக் கூத்தன்;
கண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள்;
வசைபாடக் காள மேகம்;
பண்பாய பகர்சந்தம் படிக்காசு
அலாதொருவர் பகர ஒணாதே.
– பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்.

இலக்கிய வடிவம்	புகழ் பெற்றோர்
வெண்பா	புகழேந்தி
பரணி	சயங்கொண்டான்
விருத்தம்	கம்பன்
கோவை, உலா, அந்தாதி	ஒட்டக்கூத்தர்
கலம்பகம்	இளஞ்சூரியர், முதுசூரியர் என்னும் இரட்டையர்கள்
வசைக்கவி	காளமேகம்
சந்தம்	படிக்காசுப்புலவர்

நூல் மதிப்புரை:

நீங்கள் விரும்பிப் படித்த நூல் ஒன்றுக்கு மதிப்புரை எழுதுக

மதிப்புரை:

சமீபத்தில் நான் விரும்பிப் படித்த நூல் கவிதாசன் அவர்கள் எழுதிய "சிகரங்களைத் தொடுவோம்"என்னும் நூல் ஆகும்.

இந்நூல் மாணவர்களுக்கு, இளைஞர்களுக்கு மட்டுமல்ல, உழைத்து களைத்து சோர்ந்து போய் என்ன சமுதாயம் இது! என்று சலிப்புறும் மனங்களுக்கும் ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கின்ற நூலாகத் திகழ்கிறது எனில் மிகையாகாது. "மனிதனின் மனம் ஆற்றலின் அட்சயபாத்திரம்"

"இனிய சொற்கள் இதயங்களின் கதவுகளைத் திறக்கும் திறவுகோல்"

"சாமானியனும் சாதனையாளனாகலாம்"

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

"காலையில் எழுந்ததும் உங்கள் திறமையைக் காட்ட புதிதாய் ஒருநாள் பிறந்தது என்று எண்ணுங்கள்" என்பன போன்ற சிந்தனைத் துளிகள் நிறைந்துள்ள இந்நூலைப் படிப்போர் நிச்சயமாய்ச் சிகரங்களைத் தொடுவர்.

படிக்கும் ஒவ்வொருவருக்கும் இந்நூல் தூண்டுகோலாகவும் உந்துசக்தியாகவும் இருக்கும். படியுங்கள். உங்கள் வாழ்வில் உயருங்கள். சிகரங்களைத் தொட்டுச் சிறப்படையுங்கள்.

நயம் பாராட்டு.

"எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர்அவர் உள்ளம்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடம் என நான் தெரிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திட என்
சிந்தை மிக விழைந்த தாலே" – வள்ளலார்

முன்னுரை:

வள்ளலார் எனப் போற்றப்படும் இராமலிங்க அடிகள் சமத்துவமும், சமதர்மமும் வளரவும், சமயம் என்பது பிறர்நலன் போற்றுவதாக அமையவும் குரல் கொடுத்தவர் ஆவார். இறைவனை எண்ணி இவர் பாடிய பாடல்கள் சிறப்புடன் விலங்குகின்றன. அந்த வகையில் இவரது பாடல் ஒன்றிற்கு அமைந்துள்ள இலக்கிய நயங்களைக் காண்போம்.

திரண்ட கருத்து:

எந்த ஒரு வேறுபாட்டையும் வெளிப்படுத்தாது எல்லா உயிர்களையும் தம் உயிர் போல எண்ணி, தன் உள்ளத்துள்ளே ஒத்த அன்புடையவராய் இருப்பவரை இறைவன் உவந்து ஏற்கிறார் அத்தகைய உள்ளம் உடையவர்களே சித்துருவாய்த் திகழும் எம்பெருமான் நடம்புரியும் இடம் ஆகும். எல்லா வல்ல இறைவன் அடிக்கு ஏவல் புரியும் சிந்தைமிக இருந்ததால் எவ்வுயிரிடத்தும் அன்புடன் வாழ விழைந்தேன்.

மையக்கருத்து:

அனைத்து உயிர்களிடத்தும் அன்பு பாராட்டி உயிர்களுக்கு ஏவல் செய்வதே இறைவனுக்குச் செய்யும் தொண்டு. அவர் உள்ளத்துள்ளே இறைவன் உள்ளான் என்ற கருத்தை மையமாக வைத்து வள்ளலார் இப்பாடலைப் புனைந்துள்ளார்.

மோனை நயம்:

செய்யுளில் அடியிலோ சீரிலோ முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனை ஆகும்.

சான்று: எத்துணையும் எவ்வுயிரும் உடையவராய் உவக்கின்றார் என மோனை நயம் அமைந்துள்ளது.

எதுகை நயம்:

செய்யுளில் அடியிலோ சீரிலோ இரண்டாவது எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது எதுகை ஆகும்.

சான்று: எத்துணையும், ஒத்துரிமை, சித்துரு, வித்தகர் என எதுகை நயம் மிக்குள்ளது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

சந்த நயம்:

"சந்தம் தமிழுக்குச் சொந்தம்" என்பதை உணர்த்தும் வகையில் அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் பெற்று அகவல் ஓசையுடன் மையம் பொருந்த அமைந்துள்ளது.

அணி நயம்:

"எவ்வுயிரும் தம்முயிர் போல" என்பதில் உவமையணி இடம்பெற்றுள்ளது

முடிவுரை:

பக்தி உணர்வு சொட்ட பாடப்பட்டுள்ள இப்பாடல் பக்திச்சுவையும் இலக்கியச் சுவையையும் ஒருங்கே பெற்றுள்ளது.

மொழியோடு விளையாடு

பக்கம்: 251

1. எழுத்துகளை முறைப்படுத்தி சொற்களைக் கண்டுபிடி.

- புன்பமொப்லமைழி – பன்மொழிப்புலமை.
- யனிநேம்தம – மனிதநேயம்.
- கச்வப்ஞ்புசிழ்ச – வஞ்சப்புகழ்ச்சி.
- தைக்விதுகபு – புதுக்கவிதை.
- டுசிப்காட்ஞ்ப – காஞ்சிப்பட்டு.

2. அகராதி காண்க.

- குரிசில் – பெருமையில் சிறந்தேன், உபகாரி, தலைவன்.
- தலையளி – முகமலர்ந்து கூறுதல், அன்பு, அருள்.
- நயம் – நன்மை, விருப்பம், போற்றுகை, மிகுதி, பயன், நுண்மை, அருள்.
- உய்த்தல் – செலுத்துதல், நடத்துதல், நுகர்தல், அனுப்புதல், அறிவித்தல், நீக்குதல்.
- இருசு – நேர்மை, வண்டியச்சு, மூங்கில்.

3. தொகைக் சொற்களைக் கொண்டு பத்தியைச் சுருக்குக.

சேர, சோழ, பாண்டிய அரசர்களிடம் யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, தரைப்படை ஆகியவை இருந்தன. அவர்கள் மா, பலா, வாழை ஆகிய கனிகளுடன் விருந்தோம்பல் செய்தனர். கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய திசைகளில் அவர்களின் ஆட்சிப்புகழ் பரவியிருந்தது. தமிழகத்தின் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நிலங்களில் உள்ள புலவர்கள் இவ்வரசர்களை இம்மையிலும் மறுமையிலும் வாழ்கவென்று வாழ்த்தினர்.

விடை:

மூவேந்தர்களிடம், நாற்படைகளும் இருந்தன. முக்கனிகளுடன் விருந்தோம்பல் செய்தனர். நாற்றிசைகளிலும் அவர்களின் ஆட்சி புகழ் பரவியிருந்தது. தமிழகத்தின் ஐவகை நிலங்களிலும் உள்ள புலவர்கள் இவ்வரசர்களை இருமையிலும் வாழ்கவென்று வாழ்த்தினர்.

4. வினைப்பகுதிகளை எச்சங்களாகவும் முற்றாகவும் மாற்றுக.

பூங்கொடி நேற்று பள்ளிக்குச் **சென்றாள்**(செல்). தன் தோழிகளைக் **கண்டு**(காண்)மகிழ்ச்சியுடன் **உரையாடினாள்**(உரை). பின்னர் வங்கிக்குப் **போய்**(போ) தான் கூடுதலாகச் **செலுத்திய**(செலுத்து) தொகையை திரும்பப் **பெற்று**(பெறு)க் **கொண்டு** (கொள்)வந்தாள். வரும் வழியில் வீட்டுக்கு **வேண்டிய** (வேண்டு) பொருள்களை வாங்கி, அங்கு **நின்ற**(நில்) பேருந்தில் **ஏறி**(ஏறு) வீடு **திரும்பினாள்**(திரும்பு).

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

5. பொருத்தமான தமிழ் எண்களைக் கொண்டு நிரப்புக.

தமிழிலுள்ள மொத்த எழுத்துகள் **உசஎ.**

இவை முதலெழுத்து, சார்பெழுத்து என்று **உ** பிரிவாகப் பிரிக்கப்படும். **கஉ** உயிரெழுத்துகள் **கஅ** மெய்யெழுத்துகள் ஆகிய **ங0** எழுத்துகளும் முதலெழுத்துகள் எனப்படும். இவற்றைச் சார்ந்து பிறப்பவை சார்பெழுத்துகள் எனப்படுகின்றன. சார்பெழுத்துகள் **க0** வகைப்படும்.

6. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

உயிர்களிடத்து அன்பு வேண்டும் உயிர்ப் பசி போக்குபவன் ஆண்டவனுக்கே தொண்டாற்றும் அடியவனாகிறான் உயிர் நேயமேஉண்மை நாகரிகம் உயிர் நேயம் உள்ளவரே நாகரிகர் ஆவார்.... அந்நேயமற்றோர் நரகரே	

நிற்க அதற்குத்தக...

7. நான் தலைமைப் பொறுப்பிற்கு வந்தால்..

- அனைவரிடமும் பாகுபாடின்றி நடந்து கொள்வேன்
- இயன்றவரை பிறருக்கு உதவுவேன்.
- பெரியோர்களின் அறிவுரையைக் கேட்டு நடப்பேன்
- அனைவரையும் ஈடுபாட்டுடன் பணிபுரியச் செய்வேன்.
- என் கீழ் பணிபுரிவோரின் சுக துக்கங்களில் பங்கு கொள்வேன்.
- அன்பு கலந்த கண்டிப்புடன் கடமையாற்றுவேன்.

கலைச் சொல்லாக்கம்

மனிதம் – (Humane) மனிதப் பண்புகளாகிய நற்பண்புகளைக் குறிப்பது.

ஆளுமை – (Personality) புறத்தோற்றத்தை மட்டும் குறிப்பது அல்ல நற்பண்புகள் ஆளுமைத் தன்மை, தலைமைப் பண்புகளையும் குறிப்பது.

பண்பாட்டுக் கழகம் – (Cultural academy) பண்பாடு, நாகரிகத்தைப் பறைசாற்றும் அமைப்பு

வசனகவிதை – (free verse) இலக்கணத்துக்குள் கட்டுப்படாது. பேசுவது போல் கருத்தைக் கூறுவது.

உவமையணி – (Simitee) ஒரேதன்மையை உரைப்பது.

உருவக அணி – (Metabhor) உவமை. உவமேயம் ஒன்றே என்று தோன்றக் கூறுவது.

××⁂⁂⁂××

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பொதுக் கட்டுரைகள்

1. காலத்தை வெல்லும் கணினி

முன்னுரை:

கடந்த காலத் தகவல்களைத் தன்னுள் தக்க வைத்தும் நிகழ்காலத் தகவல்களை அவ்வப்போது கொடுத்தும் வருங்காலத்திற்கு வேண்டியவற்றை உருவாக்கியும் கணினி செயல்படுவதால் கண்ணினும் மேலாகப் போற்றப்படுகிறது.

கணினியின் தோற்றம்:

கணினியின் முன்னோடி எனப்படுவது அபேக்ஸ் எனப்படும் சீனர்களின் அறிவியல் சாதனமாகும். மின்னணுக் கணினியை டாக்டர் ஆலன் எம். டூரிங் 1824 ஆம் ஆண்டு கண்டுபிடித்தார். ஹார்வர்டு பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர் ஹோவண்ட் தற்போதைய கணினியை வடிவமைத்தார். சூப்பர் கணினியை 1976 - ஆம் ஆண்டு அமெரிக்கரான வான்டேஸஸ் உருவமைத்தார்.

இணையதள வசதி:

இணையதளத்தின் மூலம் உலகின் மறுகோடியில் உள்ளவரிடமும் சில நொடிகளில் தொடர்பு கொள்ள முடிகிறது. மின் அஞ்சல் அனுப்பவும் நேரில் உரையாடுவதைப் போன்று உரையாடவும் பயன்படுகிறது.

பயன்படும் துறைகள்:

வானூர்தி, ஏவுகணை, இராக்கெட், கப்பல்கள், வேளாண் கருவிகள், வானிலை அறிவுப்பு, வணிகம் போன்று பல்வேறு துறைகளில் பயன்படுகிறது.

முடிவுரை:

கணினி வாழ்க்கையின் உயிர்நாடியாகி விட்டதால் கணினியை ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்தி வாழ்க்கையில் உயர்வோம். கணினி சார்ந்த வேலைவாய்ப்புகள் இன்று பல்கிப் பெருகி உள்ளதால் கணினி வழிக்கல்வியை நன்கு கற்போம்.

2. சுற்றுச்சூழல் நிலை

முன்னுரை:

தூய நீர், காற்று, நிலம், ஒலி மாசடைவதால் நாள்தோறும் புதுப்புது நோய்களுக்கும், பேரிடர்களுக்கும் ஆளாகின்றோம். இதனைத் தவிர்க்க சுற்றுச் சூழலைப் பாதுகாத்திட வேண்டும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

காற்று, நீர், நிலம் மாசுபடுதல்:

தொழிற்சாலைகள் கக்கும் கரும்புகை காற்றுடன் கலப்பதால் காற்று வெளி மாசடைகிறது. இந்திய நாட்டில் பாயும் ஆறுகளில் 70% கழிவுகள் சேர்ந்த கலப்பட நீராக உள்ளது. எரிபொருளுக்காக காடுகள் அழிக்கப்படுவதால் மழை குன்றி மண்வளம் குறைந்து நிலங்கள் பாலை வனங்களாக மாறுகின்றன. தொழிற்சாலைகள் வெளியிடும் இரசாயனக் கழிவுகளால் நீர் மாசுபடுவது கண்கூடாகத் தெரிகிறது.

மாசுக்கட்டுப்பாடு:

கழிவுகளைக் குறைத்தல், திரும்பப் பயன்படுத்துதல், பிறிதொன்றாக மாற்றல் முறையில் மாசுக்கட்டுப்பாடு செய்தல் வேண்டும்.

மாணவர் பங்கு :

மாணவர்களாகிய நாம் இயற்கையோடு இயைந்த இனிய வாழ்வுக்கு நம்மை ஆயத்தம் செய்து கொள்வோம். பள்ளியில், வீடுகளில், சாலை ஓரங்களில் மரங்கள் நடுவோம். சிறு சிறு தடுப்பணைகள் கட்டி மழை நீரைச் சேமிப்போம்,

முடிவுரை:

"பசுமை எங்கோ வளமை அங்கே" என்பதைப் போல சூழலைப் பாதுகாத்து சுகமாக வாழ்வோம்.

3. பெண் கல்வி

முன்னுரை:

தமிழ்ச் சமுகாயத்தில் நன்மதிப்புப் பெற்றிருந்த பெண்களைப் பிற்காலத்தில் வீட்டிற்குள் முடக்கி வைத்தனர். நாட்டு விடுதலைக்குப் போராடிய பெண்களில் பலர் சமூக விடுதலைக்குப் போராடினர்.

பெண்ணுரிமை:

பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகப் படைக்க வேண்டும் என்று விரும்பியவர் பலர். ஆணுக்குப் பெண் இளைப்பில்லை என்று சிந்தித்தார் பெரியார். பெண்கள் தம் கணவனுக்கு மட்டும் உழைக்கும் அடிமையாக இராமல், மனித சமுதாயத்திற்குத் தொண்டாற்றும் புகழ்பெற்ற பெண்மணிகளாக மாற வேண்டும்.

பெண்கல்வி:

பெண்கள் முன்னேற்றத்திற்கு பெருந்தடை வீட்டில் அவர்களை முடக்கி வைத்ததே என்று பெரியார் போன்றோர் கருதினர். நமது சமுதாயத்தில் பெண்கள் சார்ந்த தலைகீழான ஒரு புரட்சி ஏற்பட்டாலொழிய பெரிய மாறுதல்களைக் கொண்டு வரவியலாது. ஆண்கள் பெண்களைப் படிக்க வைக்க வேண்டும். அவர்களுக்கு உலகப் படிப்பும் ஆராய்ச்சிப் படிப்பும் தாராளமாய்க் கொடுக்க வேண்டும். பெண்கள் கல்வி பெறுவது அவர்கள் உரிமை மட்டுமன்று; சமூக மாற்றத்திற்கு மிக இன்றியமையாததாகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

சமுதாயத்தில் பெண்கள் நிலை:

பகுத்தறிவற்ற சீவன்களாய்ப் பெண்களை வைத்திருக்கும் கொடுமை ஒழிக்கப்பட வேண்டும். அரசியல், நீதித்துறை, காவல்துறை, இராணுவம் போன்ற பல துறைகளில் பெண்கள் மிளிர்ந்தாலும் பல நிலைகளில் ஆண்களைச் சார்ந்தே இருக்க வேண்டி உள்ளது. "பெண்கள் சமூகத்தின் கண்கள்" என்று கூறும் நிலை உருவாக வேண்டும்.

சொத்துரிமை:

பெண்களுக்குச் சொத்துரிமை கொடுத்து விட்டால், அவர்களுக்கு இருக்கும் எல்லா வகையான அடிமைத்தனங்களும் ஒழிந்து போகும். பெண்ணடிமை என்பதற்குள்ள காரணங்கள் பலவற்றில் சொத்துரிமை இல்லாதது என்பதே முதன்மையான காரணம். பெண்களுக்குச் சொத்துரிமை தற்போது கிடைத்து உள்ளதால் ஓரளவு பெண்கள் நிலை உயர்ந்துள்ளது.

மணக்கொடை:

தமிழகத்தில் பெற்றோர் பலர் தம் மகனின் கல்விக்காகச் செலவழித்த பணம், தங்கள் கடமையைச் சேர்ந்தது எனக் கருதாது, அதை ஏதோ ஒரு தொழிலில் போட்ட முதலீடாகக் கருதிக் கொண்டு அந்த முதலீட்டை வட்டியுடன் சேர்த்தே, அவனுக்கு வரப்போகின்ற மனைவி மூலம் மணக்கொடையாய்ப் பெற்றுவிட வேண்டுமென்று துடிக்கின்றனர்.

சமுதாயத்தில் முறையான ஒழுக்கமும் அன்பும் தியாக உணர்ச்சியும் ஏற்பட்டால் தான் இம்மாதிரியான தீமைகளை ஒழிக்க இயலும்.

பெண்கல்வியால் ஏற்படும் மாற்றங்கள்:

கணவனை இழந்த பெண்கள் மறுமணம் செய்து கொள்ளும் நிலை இன்று உருவாகி உள்ளது. பெண்களும் ஆண்களைப் போல் அரசுப் பணிகளில் இன்று அமர்ந்துள்ளனர். பெண்களுக்கு இன்று சொத்துரிமை கிடைத்துள்ளது. கற்பென்பது ஆண், பெண் இருபாலர்க்கும் பொதுவானது என்ற கருத்து பரவி உள்ளது.

முடிவுரை:

பெண் கல்வியினால் இன்று சமுதாயத்தில் ஒரு தலைகீழ் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அரசாங்கத்தின் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றும் நிலை ஏற்பட்டுள்ளது. இன்னும் பெண்களின் நிலை மேம்படும் என உறுதி ஏற்போம்.

4. சேமிப்பு

ஆகாறு அளவிட்டதாயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை –திருக்குறள்

துன்பத்தைத் துரத்தி, இன்பத்தைத் துய்த்து அறத்தைப் போற்றி வையத்துள் வாழ்வாங்கு வாழ பொருள் அவசியம். பொருளின் தேவை உணர்ந்து அதை நாம் சேமிக்கும் பழக்கத்தையும் பெறுதல் வேண்டும். அத்தகைய சேமிப்பின் சிறப்பை இக்கட்டுரை வாயிலாகக் காண்போம்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

சேமிப்பு:

அன்றாடத் தேவை, அவசரத் தேவை, எதிர்காலத் தேவை - இந்தத் தேவைகளை நிறைவு செய்ய சேமிப்பே வகை செய்கின்றது. பாடுபட்டுப் பொருள் தேடுகின்ற காலத்திலே சேமிப்பு மிகவும் தேவையாகிறது.

சிக்கனத்தைப் பற்றிய பழமொழிகள்:

- அஞ்சலக மாதாந்திர சேமிப்பு
- ஆயுள் காப்பீட்டுச் சேமிப்பு
- வங்கிகளில் சேமிப்புத் திட்டம்.

முதலியவை சேமிப்பு வழிகளாக இருக்கின்றன. இப்பொழுது மக்கள் பங்குச் சந்தை சார்ந்த (மியூச்சுவல்) பண்ட் மற்றும் லாபகரமான பங்குகளை வாங்கியும் சேமிக்கின்றனர்.

சேமிப்புன் பயன்கள்:

வரவுக்கு ஏற்ப செலவு செய்து வரவில் ஒரு பகுதியைச் சேமித்தோமானால் எதிர்பாராத வகையில் ஏற்படும் செலவுகளைச் சமாளிக்கலாம். வருங்காலத்தில் மேற்படிப்பிற்கும் திருமணம் போன்ற சுபகாரியங்களுக்கும் சேமிப்பு அவசியமாக அமைகிறது.

முடிவுரை:

மாணாக்கர்கள் தம் இளமைப் பருவத்திலேயே சேமிக்கும் பழக்கத்தை வளர்த்தால் தாமும் வளம் பெற்று நாட்டையும் வளம்பெறச் செய்யலாம்.

"சிக்கனம் வீட்டைக் காக்கும்"
"சேமிப்பு நாட்டைக் காக்கும்".

5. நூலகம்

முன்னுரை:

"ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்
நூலகம் இல்லா ஊருக்கு அறிவு பாழ்"

என்பதனைப் போல அறிவை வளர்க்கும் இடமான நூலகம் ஊர்தோறும் தெருதோறும் பள்ளிதோறும் இருக்க வேண்டும்.

"நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு" என்று ஔவையார் கூறுவதைப் போல் நாம் எவ்வளவு படிக்கிறோமோ அந்த அளவிற்கு நமது அறிவு வளரும்.

பள்ளி நூலகம்:

மொழிக்கல்வியின் ஒரு கருவூலமே பள்ளி நூலகம்தான். கற்பனைக் கதைகள், புராணக் கதைகள், சிறுகதைகள், அறிவியல் உண்மைகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள் என பள்ளி நூலகத்தில் உள்ள பலதரப்பட்ட புத்தகங்களை எடுத்து மாணவர்கள் பயனுள்ள வகையில் வாசிக்க வேண்டும். வாசிக்கும் பழக்கம் மூலமே பல தலைவர்கள் தங்களது அறிவை

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

மேம்படுத்தியுள்ளனர். தேவைக்கேற்ப புதிய புதிய புத்தங்களை நூலகத்தில் வாங்கி படிக்கப் பழக்க வேண்டும்.

பொது நூலகம்:

தமிழக அரசுதான் இந்தியாவிலேயே முதன்முறையாக 1948 - ஆம் ஆண்டு சென்னைப் பொது நூலகச் சட்டத்தை இயற்றி நூலகப் பணிகளின் சீரான செயல்பாட்டிற்கு வித்திட்டது. "ஊர்தோறும் நூலகம்" என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு தமிழக பொது நூலகத்துறை செயல்படுகிறது.

பயன்கள்:

பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களும் அதிக விலையுள்ள நூல்களைச் செலவின்றி படிக்க உதவுவது நூலகமே. இன்று போட்டித் தேர்வுகளுக்கும் பேச்சு, கட்டுரை, கவிதை, வினாடி - வினா போட்டிகளுக்கு தயாரிப்பதற்கும் நூலகமே சிறந்த கருவியாகும். ஒரு புத்தகம் நூறு நண்பர்களுக்குச் சமம். மனிதனின் கண்டுபிடிப்புகளில் மிகச்சிறந்தது புத்தகம் தான். ஒருவன் புத்தகங்களைப் படித்து புதிய விசயங்கள் தெரிந்து கொள்ளாமல் இருப்பதை விட பிறவாமல் இருப்பதே நல்லது என்கிறார் சர்ச்சில்.

வாசிப்போம் நேசிப்போம்:

அறிவை விரிவு செய்! அகண்டமாக்கு என்பது பாரதிதாசனின் வெறும் பாடல் வரிகளல்ல. மாணவர்களுக்கான வேதவாக்கு கைபேசி, இணையம், முகநூல், கட்செவி அஞ்சல் போன்றவற்றில் தங்களின் நேரத்தை பலர் அதிகளவில் வீணாக்குவதால் வாசிக்கும் பழக்கம் மிகவும் குறைந்துள்ளது. செய்திகளைப் பரிமாறிக் கொள்ளும் சாதாரண தளம் தான் சமூக வலைதளங்கள். அறிவை வளர்ப்பதற்கு நூலகங்களே தகுந்த இடமாகும்.

முடிவுரை:

"அமைதியோடு மதி வளர்க்கும் இடம். பண்பாடு போதிக்கும் பயனுள்ள இடம். விலை மதிப்பில்லாத நூல்கள் வசிப்பிடம், புரட்ட புரட்ட புத்தியை வழங்குமிடம். அரசுப் பணி ஆட்சிப்பணி கிடைக்குமிடம். கடன் கேட்காத நல்ல நண்பன் வாழுமிடம்" என்பதற்கேற்ப நூலகம் செல்வோம். வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்.

⁂⁂⁂⁂⁂⁂

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

தொகுத்தறி மதிப்பீட்டுத் தேர்வு

தமிழ் முதல் தாள்

(செய்யுள், உரைநடை)

வகுப்பு: 9

நேரம் : 2.30 மணி மதிப்பெண்கள்: 60

I. பலவுள் தெரிக. 5 × ½ = 2½

1. ஓரறிவு, மூவறிவு, ஐந்தறிவு - இவ்வரிசைக்கான எடுத்துக்காட்டு எவை?
   அ) நத்தை, எறும்பு, தும்பி ஆ) நத்தை, மரம், பறவை
   இ) மரம், எறும்பு, பறவை ஈ) எறும்பு, தும்பி, நண்டு

2. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு.
   அ) சிறுபஞ்ச மூலம் - 1. காப்பிய இலக்கியம்
   ஆ) குடும்ப விளக்கு - 2. சங்க இலக்கியம்
   இ) சீவக சிந்தாமணி - 3. அற இலக்கியம்
   ஈ) குறுந்தொகை - 4. தற்கால இலக்கியம்
   i) அ-3 ஆ-4 இ-1 ஈ-2 ii) அ-2 ஆ-3 இ-1 ஈ-4
   iii) அ-3 ஆ-1 இ-4 ஈ-2 iv) அ-4 ஆ-1 இ-2 ஈ-3

3. பல்லவர் காலச் சிற்பங்களுக்குச் சிறந்த சான்று .....
   அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார் பட்டி
   இ) திரிபுவனவீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு

4. "சீவக சிந்தாமணி" - நூலுக்குரிய வேறு பெயர் யாது?
   அ) பொதுமறை ஆ) மண நூல்
   இ) குடிமக்கள் காப்பியம் ஈ) தமிழ்மொழியின் உபநிடதம்

5. 'யா' மரம் எந்த நிலத்தில் வளரும்?
   அ) பாலை ஆ) நெய்தல் இ) குறிஞ்சி ஈ) மருதம்

II கோடிட்ட இடங்களை நிரப்புக. 5 × ½ = 2½

6. சனி நீராடு என்பது ..... புலவரின் வாக்கு.
7. இந்திய விண்வெளி ஆய்வுத் திட்டத்தின் தந்தை என்று அழைக்கப்படுபவர் .....
8. காஞ்சி என்றால் ..... என்பது பொருள்.
9. அவந்தி நாட்டு மன்னனின் வரலாற்றைக் கூறும் நூல் .....
10. நான்கடிச் சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையும் கொண்ட எட்டுத்தொகை நூல் .....

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

III பொருத்துக. 4 × ½ = 2

11. மூவலூர் இராமாமிர்தம் - நாட்டின் முதல் பெண் ஆசிரியர்
12. முத்துலெட்சுமி அம்மையார் - சமூகத் தன்னார்வலர்
13. சாவித்திரிபாய் பூலே - தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர்
14. பண்டித ரமாபாய் - தேவதாசி ஒழிப்புச்சட்டம்

IV எவையேனும் எட்டு வினாக்களுக்கு விடையளி. 8 × 1½ = 12

15. கண்ணி என்பதன் விளக்கம் யாது?
16. "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" - குறிப்புத் தருக.
17. கண்ணன் புகுந்த பந்தல் எவ்வாறு இருந்தது?
18. கமுகு மரம் எதைத் தேடியது?
19. "குறுந்தொகை" - பெயர்க்காரணம் கூறுக.
20. "கூவல்" என்று அழைக்கப்படுவது எது?
21. இணைய வழியில் இயங்கும் மின்னணு இயந்திரங்களில் எவையேனும் ஐந்தினை எழுதுக.
22. "செப்புத் திருமேனிகள்" பற்றிக் குறிப்பு வரைக.
23. உங்கள் ஊரில் உற்பத்தியாகும் பொருள்களையும் சந்தையில் காணும் பொருள்களையும் ஒப்பிட்டு எழுதுக.
24. பகுத்தறிவு என்றால் என்ன?

V எவையேனும் ஐந்தனுக்கு ஆறு வரிகளில் விடையளி. 5 x 3 = 15

25. பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை?
26. என் சமகாலத் தோழர்களே கவிதையில் கவிஞர் விடுக்கும் வேண்டுகோள் யாது?
27. விதைக்காமலே முளைக்கும் விதைகள் - இத்தொடரின் வழிச் சிறுபஞ்சமூலம் தெரிவிக்கும் கருத்துகளை விளக்குக.
28. நாயக்கர் காலச் சிற்பங்களின் நுட்பங்கள் யாவை?
29. சிக்கனம் குறித்த பெரியாரின் கருத்துகளை விவரி.
30. "அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை"- அதற்கு நாம் செய்ய வேண்டியவை யாவை?
31. வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையாள நீட்சியை விளக்குக.

VI பாடலின் பொருளுணர்ந்து வினாக்களுக்கு விடையளி. 1 × 2 = 2

32. காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழே! எந்தக்
காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!
அகமாய்ப் புறமாய் இலக்கியங்கள் - அவை
அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள்
நிகரில்லாக் காப்பியப் பூவனங்கள் - உன்
நெஞ்சம் நடத்தட்டும் ஊர்வலங்கள்!

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

வினாக்கள் :

அ) இவ்வடிகள் அமைந்த பாடலை எழுதியவர் யார்?

ஆ) அகமாகவும் புறமாகவும் அமைந்தவை எவை?

இ) நீங்கள் அறிந்த காப்பியம் ஒன்றன் பெயரை எழுதுக.

ஈ) தமிழ் எப்போது பிறந்ததாகக் கவிஞர் கூறுகிறார்?

VII பதினைந்து வரிகளில் விரிவான விடையளி. 2 × 4 = 8

33. பெரிய புராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்புகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஏமாங்கத நாட்டு வளம் குறித்த வருணனைகளை நும் ஊரின் வளங்களோடு ஒப்பிடுக.

34. திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

(அல்லது)

தமிழ்நாட்டுச் சிற்பங்கள் கலைநயம் மிக்கனவாகவும் வரலாற்றுப் பதிவுகளாகவும் இருப்பதை சிற்பக்கலை வாயிலாய் நிறுவுக.

VIII பதினைந்து வரிகளில் விரிவான விடையளி. 2 + 2 + 2 = 6

35. "அள்ளற்" என்று தொடங்கும் முத்தொள்ளாயிரம் பாடலை எழுதுக.

36. "பூவாது" என்று தொடங்கும் சிறுபஞ்சமூலப் பாடலை அடிமாறாமல் எழுதுக.

37. "சுழன்றும்" என்று தொடங்கும் குறளை எழுதுக.

※※⁂⁂⁂※※

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

தொகுத்தறி மதிப்பீட்டுத் தேர்வு

தமிழ் இரண்டாம் தாள்

(துணைப்பாடம், இலக்கணம், மொழித்திறன்)

வகுப்பு: 9

நேரம் : 2.30 மணி **மதிப்பெண்கள்: 60**

I பலவுள் தெரிக. 10 × ½ = 5

1. பெயர்ப் பயனிலைக்கு ஏற்ற தொடர் எது?
   அ) எழுதினான் அமலன் ஆ) அமலன் எழுதினான்
   இ) அமலனுக்கு எழுதினான் ஈ) எழுதியது அமலனா?

2. சரியான கூற்றினைத் தேர்வு செய்க.
   அ) 'ஆ' - என்பது எதிர்மறை இடைநிலை
   ஆ) வீட்டிற்கோர் புத்தகசாலை என்பது - அண்ணாவின் மேடைப் பேச்சு
   இ) வில்லுப்பாட்டு: ஓர் இலக்கிய வடிவம்.
   i) அ, இ - சரி, அ - தவறு ii) அ, இ - சரி, ஆ - தவறு
   iii) மூன்றும் சரி iv) மூன்றும் தவறு

3. "கழல் பணிந்தான்" - இத்தொடரில் அமைந்துள்ள ஆகுபெயர் .....
   அ) சொல்லாகு பெயர் ஆ) தானியாகு பெயர்
   இ) இடவாகு பெயர் ஈ) காரியவாகு பெயர்

4. "மாட்சி" என்பது .....
   அ) தொழிற்பெயர் ஆ) வினையாலணையும் பெயர்
   இ) பண்புப் பெயர் ஈ) உரிச்சொல்

5. கேடில்விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
   மாடல்ல மற்றை யவை
   - இக்குறளில் பயின்று வந்துள்ள அணி?
   அ) சொல்பின்வரு நிலையணி ஆ) பொருள் பின்வருநிலையணி
   இ) சொற்பொருள் பின்வருநிலையணி ஈ) வஞ்சப்புகழ்ச்சியணி

6. பாதிரி ஒத்த பூ, செய் கோலம் - இலக்கணக் குறிப்புத் தருக.
   அ) உருவகத்தொடர், வினைத்தொகை ஆ) உவமைத்தொடர், வினைத்தொகை
   இ) வினைத்தொகை, பண்புத்தொகை ஈ) வினைத்தொகை உருவகம்

7. மரவேர் என்பது ..... புணர்ச்சி.
   அ) இயல்பு ஆ) திரிதல் இ) தோன்றல் ஈ) கெடுதல்

8. "திருவளர் செல்வன்" - இங்கு வல்லினம் மிகாமைக்குக் காரணம் .....
   அ) விளித்தொடரில் மிகாது ஆ) வினைத்தொகையில் மிகாது
   இ) எழுவாய்த்தொடரில் மிகாது ஈ) பெயரெச்சத்தில் மிகாது

9. கலையரசன் நல்ல நண்பன் - இத்தொடரில் "நல்ல" என்பது .....
   அ) வினையடை ஆ) பெயரடை
   இ) முதல் வினை ஈ) துணை வினை

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

10. "காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது" இக்குறளின் ஈற்றுச்சீரின் வாய்பாடு யாது?
அ) நாள் ஆ) மலர் இ) காசு ஈ) பிறப்பு

II சுருக்கமாக விடை தருக. 10 × ½ = 5

11. சுட்டெழுத்துக்குப் பின் வல்லினம் மிகும் என்பதற்கு சான்று தருக.
12. *உரிய வேற்றுமை உருபை இணைத்து எழுதுக:* நான் திருச்சி சென்றேன். (ஐ, கு, ஆல்)
13. *செயப்பாட்டு வினைத்தொடராக்குக:* வேலன் பொம்மை செய்தான்.
14. *பழமொழியைச் சொற்றொடரில் அமைத்திடுக:*
கிணற்றுத் தண்ணீரை வெள்ளம் கொண்டு போகாது.
15. *பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க:*
டெய்லி நான் பயன்படுத்தும் எலக்ட்ரானிக் கருவிகளுள் முதன்மையானது செல்போன்.
16. *சொல்லுக்குள் சொல் தேடுக:* அ) கடையெழு வள்ளல்கள் ஆ) எடுப்பார் கைப்பிள்ளை
17. *பிழை நீக்கி எழுதுக:*
சூறாவளியின் போது மேல்மாடியில் தங்காமல் தரைத்தளத்திலேயே தங்கியதால் தப்பித்தான்.
18. *சொற்களைத் தொடர்களாக மாற்றுக:*
இயங்கு - தன்வினை, பிறவினைத் தொடர்களாக மாற்றுக.
19. *சொற்றொடரை விரிவாக்குக:*
விளையாடுவது நன்று. (ஓடியாடி, மாலையில், சேர்ந்து, திடலில், அனைவருடன்)
20. *மரபுப்பிழை நீக்கி எழுதுக:* கோழிக்குட்டிகளைப் பிடிக்க பூனைக்குஞ்சுகள் ஓடின.

III சுருக்கமாக ஓரிரு வரிகளில் (ஐந்தனுக்கு மட்டும்) விடை தருக. 5 × 2 = 10

21. அசை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
22. பண்பாகுபெயரை விளக்குக.
23. உருவக அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
24. "செய்யாதே" - பகுபத உறுப்பிலக்கணம் தருக.
25. தற்காலத் தமிழ்ப் பயன்பாட்டில் காணப்படுகின்ற உரிச்சொற்களை எழுதுக.
26. "மணியழகு" - பிரித்துப் புணர்ச்சி விதி தருக.
27. பின்வருவனவற்றில் வல்லினம் மிகலாமா?
அ) தை பூசம் ஆ) கிளி பேச்சு இ) கூடகொடு ஈ) தமிழ்தேன்

IV எவையேனும் இரண்டனுக்கு விடையளி. 2 x 3 = 6

28. ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்(கு)
ஆழி எனப்படு வார் - அலகிட்டு வாய்பாடு தருக.
29. வினைப்பகுதிகளை எச்சங்களாகவும் முற்றாகவும் மாற்றுக:
கமலா நேற்றுப் பள்ளிக்குச் ..... (செல்) தன் தோழிகளைக் ..... (காண்) மகிழ்ச்சியுடன் ..... (உரை). பின்னர் வங்கிக்குப் ..... (போ) தான் கூடுதலாகச் ..... (செலுத்து) தொகையைத் தரும் ..... (பெறு) ..... (கொள்) வந்தாள்.
30. தமிழெண்களில் எழுது.
அ) உன் வகுப்பு மாணவர் எண்ணிக்கை .....
ஆ) தமிழில் உயிரெழுத்துகள் .....
இ) திருக்குறளில் உள்ள அதிகாரங்கள் .....

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

ஈ) வாக்களிக்கும் உரிமை வயது .....

உ) தமிழ்மொழியில் உள்ள மொத்த எழுத்துகள் .....

ஊ) தமிழிலக்கணம் ..... வகைப்படும்.

V எவையேனும் இரண்டனுக்கு விடையளி. 2 x 4 = 8

31. நூலகம், நூல்கள் குறித்த அண்ணாவின் கருத்துகள் யாவை?
32. பண்பாட்டுக் கூறுகளைப் பேணிப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டிய செயல்கள் யாவை?
33. நா.முத்துக்குமார் தன் மகனுக்கு எழுதியுள்ள கடிதச் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

VI நயம் பாராட்டுக. 4 × 3 = 12

34. வயலிடைப் புகுந்தாய் மணிக்கதிர் விளைத்தாய்
வளைந்துசெல் கால்களால் ஆறே!
அயலுள ஓடைத் தாமரை கொட்டி
ஆம்பலின் இதழ்களை விரித்தாய்
கயலிடைச் செங்கண் கருவரால் வாளை
கரைவளர் தென்னையில் பாயப்
பெயரிடைப் பட்ட வானெனத் தோன்றும்
பெருங்குளம் நிறைந்து விட்டாயே!

35. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



36. மொழி பெயர்த்திடுக.
அ) An Early Morning walk is a a blessing for the whole day.
ஆ) The art of people is a true mirror to their minds.
இ) The biggest problem is the lack of love and charity.
37. கவிதை எழுதுக: பள்ளி (அல்லது) நட்பு

VII ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி. 1 x 7 = 7

38. உங்கள் பள்ளி இலக்கிய மன்றத்தின் சார்பில் நடைபெற இருக்கும் உலகத் தாய்மொழி நாள் விழாவிற்கான நிகழ்ச்சி நிரலை வடிவமைக்க.

(அல்லது)

"எனது பயணம்" என்ற தலைப்பில் உனது பயண அனுபவங்களை வருணித்து எழுதுக.

VIII. ஏதேனும் ஒன்றனுக்கு குறிப்புகளைக் கொண்டு விடையளி. 1 x 7 = 7

39. நீரின்றி அமையாது உலகு - நீரின் இன்றியமையாமை - நீர் நிலைகள் - நீர்ப்பற்றாக்குறை - நீரைச்சேமித்தல் - நிலத்தடி நீர்மட்டம்.

(அல்லது)

முன்னுரை - ஆழிப்பேரலை - சுனாமியின் விளைவு - பாதுகாப்பு - சிறப்புப் பயிற்சி - முடிவுரை.

※※⁂⁂⁂※※

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com